உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கீதாரத்தினமும் சகல சாஸ்திரஸாரமுமாகிய

ஸ்ரீ சிவ கீதை

மூலஸ்லோகமும்

மருவூர் - பிரம்மஸ்ரீ
கணேசசாஸ்திரியா ரவர்கள்
இயற்றிவரும் தமிழ் வியாக்கியானமும்,

இவை
மதுரைத் தமிழ்ச் சங்கத்து வித்துவான்
சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்
பூவை - **கலியாணசுந்தர யதீத்தர ரவர்கள்**
பார்வையிட்டுத்தர,

சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவர்
பாததூளியாகிய
கா - ஜம்புலிங்கமுதலியாரால்

சென்னை
பிரஸிடென்ஸி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டன.

பொருளடக்கம்

எண்	அத்தியாயம்	பக்கம்
	உபோற்காதம்	3
1	முதல் அத்தியாயம் - ஸ்ரீ சிவபக்தியின் பெருமை	17
2	இரண்டாவது அத்தியாயம் - வைராக்யோபதேசம்	46
3	மூன்றாவது அத்தியாயம் - விரஜா தீக்ஷா நிரூபணம்	72
4	நான்காவது அத்தியாயம் - சிவ ப்ராதுர்பவம்	87
5	ஐந்தாவது அத்தியாயம் - தி³வ்யாஸ்த்ர ப்ராப்தி	104
6	ஆறாவது அத்தியாயம் - விபூதி யோகம்	116
7	ஏழாவது அத்தியாயம் - விச்வரூப தர்சனம்	144
8	எட்டாவது அத்தியாயம் - பிண்டோத்பத்தி கதனம்	165
9	ஒன்பதாவது அத்தியாயம் - தேஹ ஸ்வரூப நிர்ணயம்	192
10	பத்தாவது அத்தியாயம் - ஜீவ ஸ்வரூப நிரூபணம்	211
11	பதினோராவது அத்தியாயம் - ஜீவ கத்யாதி நிரூபணம்	233
12	பன்னீரண்டாவது அத்தியாயம் - உபாஸனா ஞானபல யோகம்	249
13	பதின்மூன்றாவது அத்தியாயம் - முக்தி லக்ஷணம்	266
14	பதினான்காவது அத்தியாயம் - பஞ்ச கோசோபர்ணனம்	281
15	பதினைந்தாவது அத்தியாயம் - பக்தி யோகம்	296
16	பதினாறாவது அத்தியாயம் - மோக்ஷ யோகம்	317

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

உபோற்காதம்

உண்மை யறிவானந்த வடிவனும் கருணையே திருமேனியாகக் கொண்டவனுமாகிய விறைவனது திருவருளாலேயே சகல வான்ம கோடிகளும் அறம் பொருளாதி நான்கு பயன்களையும் பெறவேண்டு மென்பது சகலவேதங்களுக்கும் ஒத்ததுணிபு. இத்தகைய திருவருளைப் பெறும் வழியையும், இங்ஙனம் அருள்புரிவோனான இறைவனது ஆணையையும், அவனது திருவுருவ விலக்கணங் களையும், திருவருளின் மஹிமையையும் வேதங்கள் நன்கு விளக்குவனவாயினும், அவ்வேதங்களின் பொருள் எல்லோரும் சுலபமாய் நன்கறி தற்கே லாதெனக் கருதி இதிகாச புராணங்களை யியற்ற வாஞுஞாபனம் செய்தனர்.

சூத ஸம்ஹிதை.

இதிஹாஸபுராணாப்யாம் வேதார்த்தோஹிப்ரகாஶ்யதே

இதிகாச புராணங்களால் வேதப்பொருளே விளங்குகின்றன.

யஶ்சதுர்வேதவித்விப்ர: புராணம்வேத்திநார்த்தத:,
தந்த்ருஷ்ட்வா யமாப்நோதி வேதோமாம்ப்ரதரிஷ்யதி.

நான்கு வேதங்களையும் அறிந்த எவ்வந்தணன் புராணங்களை நன்கறிய வில்லையோ அவனைக்கண்டு வேதமானது இவன் அற்பவாராய்ச்சி யுள்ளவனாதலால் நம்மை உபத்திரவப் படுத்துவான் என்று நடுங்கு கின்றது. என்று கூறியபடி வேதங்களைப் பொருட்படுத்துவதற்குப் பற்பல விடங்களில் பல ஐயநிகழு மாதலால் புராண முகத்தா லறிவதே நலம். அப்புராணங்களும் ப்ராம்மம், பாத்துமம், வைஷ்ணவம், சைவம், பாகவதம், பவுஷியம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கிநேயம், பிரும்பகைவர்க்கம், லயிங்கம், வாராஹம், ஸ்காந்தம், வாமனம், கௌர்மம், மாத்சியம், காருடம், பிரும்மாண்டம் எனப்பதினெட்டு மகா புராணங்களாம். இனி யிம்மா புராணங்களூ ளொன்றன சாரத்தும் புராணத்தின் கண் சகல வேதங்களின் சாரமாயுள்ளதுவும், ஸ்ரீமகா பாரதத்தின் கண் விளங்கும் பகவற் கீதைக்கு முகனூவா யுள்ளதுவு மான சிவகீதை யெனுமரிய பெரிய ஞான நூலின் மஹிமை யாவராலுங் கொண்டாடத் தக்கதொன்றாம். இவ்வரிய கீதையின்கண் பக்தி யோகம், விபூதியோகம், தேஹச் சொரூப நிரூபணம், சீவசொரூபநிரூபணம், வைராக்கிய நிரூபணம், உபாசனயோகம், மோக்ஷயோகம் இவைகளை நன்கு விளக்கியும் இடை யிடையே யின்னுமரிய பெரிய தத்துவங்களையும் நன்கு விளக்கிபு முள்ளது. மாயாவயததராகிய மாந்தர் பாச நீங்கிச் சுகிக்க வேண்டுமாயினிந் நூலின் ஆராய்ச்சியின்றி யமையாததேயாம். இந்நால் வடபொழிபிலன்றித்

தென்மொழியில் வழங்காமையின் இத் தேயத்தினர் பலரும் எடுத்தாளுதற்கு ஏதுவில்லாமற் போய் இதுகாறும் வடமொழியில் வல்லவரே கொண்டாடி வருகின்றனர். தென்மொழியில் வல்லவரும் படித்துச் சந்தோஷிக்கத் தமிழில் மொழி பெயர்க்க முன்வந்தோம். இங்ஙன மிவ் வரிய கீதை யெங்கணும் பரவுதற்குள்ள நன்மையைக் கண்டு சந்தோணியாது சிலர் பூர்வபட்சம் செய்ய முயலுகின்றார். அவர்களின் பூர்வபட்சத்தில் யாரும் மயங்காத வண்ணம் அவற்றிற்குச் சமாதானங் கூறி உண்மையினைச் சித்தாந்தஞ் செய்கின்றாம்.

பூர்வபட்சம்.

(1) சிவகீதை பிரமாணமாயின் அதாலது இராமன் சிவபெருமானிடம் தத்து வோபதேசம் பெற்ற துண்மையாயின் ஏன் அதை உலகெங்கும் பிரசித்திபெற்ற வால்மீகி ராமாயணத்தில் கூறி யிருக்கவில்லை?

(2) பகவற்கீதையாதிகளுக்குச் சங்கரபகவற்பாதராதி பெரியோர்களால் பாஷ்ய மியற்றபபட் டிருப்பதுபோல இக் கீதைக்கும் பாஷிய மேன் ஏற்படவில்க?

(3) பகவற்கீதையிலுள்ள சுலோகங்களைப் பன்னூல்களில் மேற்கோலாய்க் காட்டி யிருக்கிறது போலச் சிவகீதைச் சுலோகங்களை முன்னோர் ஏன் மேற் கோளாய்க் காட்டவில்லை?

(4) சிவகீதையைக் குருமூலமாய் உலகத்தில் கிரகிக்காத காரணமென்ன?

(5) பகவற்கீதையானது எம்மதத்தவராலும் அங்கீகரிக்கப்பட்டு வருவதுபோலச் சிவகீதை யங்கீகரிக்கப்படாது, சைவர் மாத்திரம் அங்கீகரிக்கச் சிவபரத்துவங் கூறுவதென்னை?

சித்தாந்தம்.

(1) உலகத்திற் பிராமாணிய விசாரம் செய்வதாகில் சகலப் பிரமாணங்களுள் ளும் வேதமே முதற் பிரயாணமாம். மற்றைய பிரமாணங்களோவெனின் வேதங்களுடன் முறணாதவழிப்பிராமாணியமுடையதாகும். இனி மற்றைய பிரமாணங்கள் யாதெனின் ஆகமங்கள் ஸ்மிருதிகள் இதிகாசங்கள் புராணங்கள் முதலியனவாம். இச் சிவகீதையெப் பிரமாணத்திற் சேர்ந்ததெனின் பாத்தும மென்ற மஹாபுராணத்தின் சாரமாதலால் புராணப் பிரமாணமேயாம். இனி ராமாயணம் எப் பிரமாணயெனின் வேதமுமல்ல, இதிகாசமுமல்ல, புராணமுமல்ல, ஆகாமுமல்ல, ஸ்மிருதியுயல்ல, சூத்திரங்களுமல்ல, கவீசர்களுக்கெல்லாம் ஆதி கவியாயும், பிரமதேவனது கருணைக்குப் பாத்திரராயும் தேவருஷிகளுள் சிறந்தவருமான ஸ்ரீமத் நாராத மாமுனிவருக்குச் சீடரயும், முனிவர் சிரோமணியாயுமுள்ள வால்மீகி மாமுனிவரா லியற்றப்பட்ட மஹா காவியமான ஆதிகாவியமேயாம். இனிகாவியம் சிறந்த பிரமாணமா, புராண சிறந்த பிரமாணமா வெனின், ஸ்ரீமத் இராமாயணமானது

சகலவுலககதாராலும் கொண்டாடப்படுவதாயினும் புராணத்திற்குப் பிற் பிரயாண மேயாம். புராணத்தைப் பிரமாணமா அப்பிரமாணமாவென்று விசாரிக்க வேண்டுமா னால் முதற் பிரமாணமான வேதத்தோடு முறணாதி ருக்கின்றதா என்று மட்டும் அறியவேண்டும். பிற் பிரமானயான காவியத்தோடு கூட முறணாதிருக்கின்றதா வென்று விசாரிப்பாரில்லை. ஆதலால் சிவகீகைப்ரமாணமல்ல இராமாயாணத்தி லிராததால் என்று கூறுவது ஆராய்ச்சியில்லா வசத்தால் நிகழ்ந்ததே யென்க. அன்றியும் காவியத்திற்குச் சரித்திரமே முக்கியமென்பதல்ல. மற்று யாதெனின் சிருங்காரம் முதலியாஸங்களேயாம் இதை நன்கறியவேண்டியதாயின்

சாகித்திய தருப்பணம்.

வாக்யம்ரஸாத்மகம்காவ்யம் தோஷாஸ்தஸ்யா பகர்ஷகா:

இரஸத்தையே சீவனாயுடைய வாக்கியம் காவியமாகும். தோஷங்கள் அவைகளுக்குக் குறைவையுண்டாக்குவனவாம். என்பதாதி நூல்களிலுள்ள வாக்கிய ங்களைக் கண்டு தெளிக.

கவிஞர்கள் இரஸத்திற்கு மாத்திரம் குற்றம் நிகழாது கவனிக்க வேண்டியதே யன்றி முக்கியமாய்ச் சரித்திரங்களையும் கவனிக்க வேண்டு மென்பதில்லை. கவிஞர் காப்பியத்தில் புராணாதிகளில் கூறிய சரித்திரங்களைப் பிரமாணமாய் வைத்துக்கொண்டாலும், புராணத்தில் கூறிய சரித்திரங்களில் கிலபாகங்களை விட்டு மற்றவைகளை எடுத்துக் கொள்வது முண்டு. அல்லது புதிதாய்ச் சிலகதைகளைக் கல்பனை செய்து புராணத்திலுள்ள சரித்திரங்களையும் அவைகளுடன் சேர்த்துக் காப்பியமாயியற்றுவதுமுண்டு, நடந்த வுண்மையையே கூறவேண்டு மென்ப தவசியமில்லை.

இரஸத்தில் தோஷ. நிகழாது மாத்திரம் காவியமியற்றவேண்டு மென்பதே முன்னோர். காண்ட துணிபாதலின், வால்மீகி மாமுனிவர் சிவகீதாதி நடந்த சில உண்மைச் சரித்திரங்களை விட்டும், நடக்காத புதிதான சில பாகங்களை வருணிக்க வேண்டியதினிமித்தம் சேர்த்தும் ஆதிகாவியமான இராமாயணத்தை யியற்றினார். இனி ராமாயணம் இரஸத்தையே முக்கியமாய்க் கொண்டது என்பதற்கு, யாது பிரமாணம் எனின், இராமாயணாதி கருணரஸப் பிரதானமானது என்றும் கூறிய

ஸாஹித்ய தருப்பணம்.

ததாராமாயணாதீநாம் பலிதாது:கஹேதுதா.

என்பதாதி வாக்கியங்களையு மறிக. அன்றியும் இராமாயணத்தின்கண் சிற்சில பாகங்களில் படிப்பவர்களையும் கேட்பவர்களையும் மனது களிக்கச் செய்ய வேண்டியதி னிமித்தம் வேறு சில கருத்துகளையும் கொண்டு உண்மையல்லா சில விஷயங்களையும் கூறியிருக்கின்றது. இங்ஙனம் கூறியதால் இராமாயணம்

குற்றமுடை யதோவெனின் அல்லவென்பதற் கையமேயில்லை. காப்பியங்களுக்கு அங்ஙனம் கூறுதலியல்பாதலினென்க. உதாரணமாக. இராமாயணத்தின் சுந்தர காண்டத்தில் அனுமார் சீதாபிராட்டியாரிடம் சந்தித்த சமயத்தில்

மத்த:ப்ரத்யவர:கஶ்சிந் நாஸ்திஸுக்ரீவஸந்நிதௌ,
அஹந்தாவதிஹப்ராப்த: கிம்புநஸ்தேமஹாபலா:
நஹிப்ரக்ருஷ்டாம்பரேஷ்யந்தே ப்ரேஷ்யந்தேஹீதரேஜநா:

சுக்கிரீவனிடம் என்னிலும் பலக் குறை வுடையவர் எவருமில்லை யானோ வெனினிங்குவந்தவன் அம்மகாபராக்கிரமசாலிகளைப்பற்றிக் கேட்பானேன். பராக்கிர மசாலிகள் தூதுக்கு அனுப்பப்பட மாட்டார்களன்றோ, பலஹீனர்களன்றோ அனுப்பப் படுகின்றார்கள். என்று கூறியதைச் சற்று ஆராய்வோமாக. இங்குக்கபிகுலதிலகரா னவரும் குழந்தைப் பருவத்திலேயே கனியென்று கருதிச் சூரியமண்டலத்தைப் பிடிக்கச் சென்றவரும், கருங்கடலைக் கால்வாயைப் போலத் தாண்டினவருமான ஒப்பற்றவா யுடையவரென்று உலகமெல்லாமறிந்துள்ள ஆஞ்சநேயர் தன்னிலும் பலக்குறைவுடையவர் சுக்கிரீவன் சந்நிதியிலில்லையென்று கூறினது உண்மையா மா. உண்மையில் அனுமாரிலும் பலத்தினிற் சிறந்தவர்களா சுக்கிரீவனிட முள்ளவர் க ளெல்லாம். இதை யூகித்தால் வேறு காரணம்பற்றி உண்மையல்லாத இவ் விஷய மானது கூறப்பட்டதென்பது அறியப்படுகின்றதல்லவா. இதனால் குற்றமுடைய தென்று கூறலாமா. காப்பியங்களில் உண்மையல்லாத சில விஷயங்களையும் கூறுவது குற்றமல்ல என்பது பற்றியன்றோ இங்ஙனம் கூறியது. இங்ஙனமே கவிகுலதிலகரான காளிதாசகவியும் தாம் இயற்றிய சாகுந்தளம் என்னும் கிரந்தத் தின் கண் மகாபாரதாதிகளில் காணாதது முண்மையாய் நடக்காததுமான துருவாச மாமுனிவரின் சாபக்கதையும் சேர்த்தமைக்கப் பட்டுள்ளது. அதுபோல இராமாயணம் ஆதிகாப்பியமே யாதலின் அதில் புராணங்களிற் கூறிய சில கதாபாகங்களை விட்டும் மற்றும் சிலபாகங்களை இரஸத்தினிமித்தம் சேர்த்து மமைக்கப்பட்டுள்ளன. அன்றியும் ஸ்ரீமத்திராமாயணம் தருமங்களை விளக்கவந்த நூலேயன்றி ஞானத்தைப் பற்றி முக்கியமாய் வந்ததல்ல. இனி யிராமாயணத்தில் எத்தருமத்தை விளக்கி புளது எனின் இங்ஙனம் சுருக்கிக் கூறுவாம். அன்னையின் வசனத்தையும் பிதாவின் வசனத்தையு மீறக்கூடாது என்ற தருமரகசியத்தைத் தயரதன் கைகேசி முதலியவர் களின் வசனத்துக்குள்ளடங்கிய ஸ்ரீ இராமனது நடத்தையாலும் தம்பிகளிடம் தமையன் வைக்கவேண்டிய பிரியத்தை இலக்குவனிடம் ஸ்ரீ இராமனது நடத்தை யாலும் அங்ஙனமே தமையனிடம் இளையவன் நடக்கவேண்டிய தருமநிலையை இலக்குவன் இராமமூர்த்தியிடம் நடந்ததன்மையாலும் பெண்டீர் கணவனிடம் இருக்கவேண்டிய தருமநிலையை சீதாபிராட்டியாரின் சரித்திரத்தாலும் அரசன் மந்திரி இவர்களுக்குரிய தருமத்தை இராமன் சுக்கிரீவன் இவர்களது நடவடிக்கைக ளாலும் தூதர்களின் நிலைமையை அனுமாரது செய்கைகளாலும் சாதுக்களின் தருமத்தை விபீஷணன் செய்கைகளாலும் இவை முதலிய அநேக தருமங்களை விளக்கும் நூலாகும். அற்றேல் இராமாயணத்தின்கண் ஞான நிலையைக் கூறியே யிலதோவெனின் அற்றன்று. பெரும்பான்மையாய்க் கருத்தினாலும் தருமங்களையே விளக்குவனவாதலின் அங்ஙனம் கூறியதறிக. இங்ஙனம விசேஷபாய்க் கருமதரும ங்களை விளக்குவதான இராமாயணத்தின்கண் அரியபெரிய தத்துவஞான நூலாகிய

சிவகீதையைக் கூறுவது தகுதியல்லவென்றுகொண்டே ஸ்ரீவான்மீகிமா முனிவரும் கூறாதொழிந்தார் என்க. இதனால் சிவகீதை யப்பிரமாணமல்ல. சிறந்த பிரமாணமே யாம்.

(2) சங்கரமுனிவராதி பெரியோர்கள் பாடிய மெழுதாதது பற்றிப் பிரமாண மல்ல வென்றது முற்றும் தவறே. அதாவது பகவற்கீதைக்கு, வெளிநோக்காய்ப் பார்க்கும் போது இன்னகொள்கையைக்கருதியது பொருள் என்று புலப்படாதது பற்றிப் பாடிய மியற்றப்பட்டது, இச்சிவகீதையோ வெனின் சிவமொன்றைத்தவிர மற்றுயாதையும் கூறாததென்று பெயர் மாத்திரையிலே புலப்படுகின்றது பற்றியவர் கள் பாடிய மெழுதினார்களில்லை. பொருள் நன்றாய்ப் புலப்படாத நூற்களுக்கு உரையெழுதவேண்டிய தவசியமன்றிப் பொருள் நன்றாய்ப் புலப்படுவனவான நூற் களுக்குக்கூட உரையெழுதவேண்டியதுண்டா. உரையாலாயபயன் மூலவசனங்க ளின் பொருள் நன்குபுலப்படுவதேயன்றோ. உரையின்றியே பொருள் புலப்படுமா னால் உரைவேண்டிய தில்லையன்றோ. அன்றியும் வெளிநோக்காய் நோக்குங்கால் பலமதங்களுக் கிணங்கப் பொருள்படுவ தான நூலுக்குப் பலமதச்சார்பாய்ப் பொருள் படுத்தலாகும், ஆனது பற்றியன்றோ பகவற்கீதைக்கு அநேக பாடியங்கள் ஏற்பட்டன. இச்சிவகீதையோ வெனின் சிவதத்துவமொன்றையே கூறும் நூலென்று சுலபமாய் எல்லோர்களாலும் அறியப்படுகின்றமையால் பாடிய மேற்படவில்லை இதனால் அப்பிரமாணமென்று கூறுவதை யறிஞர் ஒவ்வுவாரா. இனிச்சூதசங்கிதையின்கண் விளங்கும் பிரும்மகீதைக்குச் சங்கரமுனிவராதி பெரியோர்கள் உரையெழுத வில்லையே. ஆதலால் பிரும்மகீதை நவீன மென்றும் அது அப்பிரமாணம் என்றும் கூறுவாருண்டா.

இனி வேத பாடியமியற்றிய மாதவாசாரியர் அல்லது வித்தியாரண்ணிய சுவாமிகள் வேதங்களிலுள்ள சிற்சில வாக்கியங்களைப் பாடியத்தில் காட்டாது இயற்றி யிருக்கின்றாரே, பாடியத்தில் அவர் காட்டாத வேதவாக்கியங்களை (அப்பிரமாணம்) அல்லது பிரமாணமல்லவென்று கூறினால் அதை யாராய்ச்சியில் லாதவர்கள் ஒப்புவாரேயன்றி மற்றவர்கள் ஒப்புவாரா. அன்றியும் உபநிடதங்களுள் சிற்சில உபநிடதங்களுக்கே முன்னோரால் பாடிய மியற்றப்பட்டுளது பெரும் பான்மையாய் மற்ற வுபநிடதங்களுக்குப் பாடிய மியற்றப்படவில்லை. அதனால் அவைகளைப் பிரமாணமல்லவென்று கூறலாமா இதுபோலவே சிவகீதையெனும் அரிய தத்துவ நூலுக்கும் சங்கரமாமுனிவராதியர் பாடிய யெழுதாததுபற்றிப் பிரமாண மல்லவென்று கூறுதல் ஆராய்ச்சி யிராத்தாலென்க.

(3) முன்னோர்கள் பகவற்கீதையிலுள்ள சுலோகங்களை மேற்கோள்களாய்க் காட்டியது போல, சிவகீதைச் சுலோகங்களைக் காட்டாததால் பிரமாணமல்ல வென்றது யுக்தமல்ல. முன்னோர்கள் மேற்கோள்கள் காட்டிய இடங்களில் விசேடமாய் உபநிடத வாக்கியத்தையும் அதற்குப்பின்னர் (இதிஸ்மிருதே:) என்று கீதாவசனத்தையும் காட்டுவது வழக்கம். அங்ஙனம் காட்டப்படும் கீதா வாக்கிய மானது உபநிடத வாக்கியங்களுள் விளங்கும் சொற்களுக் கந்தியங்களான சொற்களையே உடையதா யிருக்கும். பொருளால் அந்நியமாகாவிடினும் சொற்களால் பேதமிருப்பது பற்றி உபநிடத வாக்கியங்களுக்குப் பின்னர்

கீதாவாக்கியங்களை மேற்கோளாய்க் காட்டப்பட்டுள்ளன. சிவகீதையோ வெனின் உபரிடதங்களுள் வாக்கியங்கள் எச்சொற்களா லமைந்தனவோ அச்சொற்களாலேயே அமைந்துள்ள வாக்கியங்களை யுடையது, இனியங்ஙனம் எவ்வாக்கியமுளது எனின்

சிவகீதை 2 - வது அத்தியாயம்.

ஸூர்யோஸளஸர்வலோகஸ்ய சக்ஷுஷ்டேநவ்யவஸ்தித:
ததாபிச்சாக்ஷுஷைர்தோ ஷைர்நஅதாசித்விலிப்யதே

கடவல்லியோபநிடதம்.

ஸூர்யோயதாஸர்வலோகஸ்ய சக்ஷுர்நலிப்யதேசாக்ஷு ஷைர்பாஹ்யதோஷை:

ஷை 2 - வது அத்தியாயம்.

மாயாந்துப்ரக்ருதிம்வித்யாந்மாயிநம்துமஹேஸ்வரம்

சுவேதாச்சுவத ரோபநிடதம்.

மாயாந்துப்ரக்ருதிம் வித்யாந்மாயினந்துமஹேஸ்வரம்

சிவகீதை

அஹமேவபுராதந: ஆஸமப்ரதமமேவாஹம்வர்தாமிசஸூரே ஶ்வரா: - பவிஷ யாமிசலோகேஸ்மிந் மத்தோநாந்யோஸ்திகஶ்சந - நித்யாநித்யோஹம்மநஸோ பிரும்ஹணாம்பிரும்மணஸ்பதி: - தக்ஷிணாம்சோதம்சோஹம் பஞ்சராம்ச:ப்ரத்ஏவச - அதஶ்சோர்த்தவம்சவிதிஶோதிஶ ஶ்சாஹம்ஸூரேஸ்வரா:

அதர்வசிரோபநிடதம்.

அஹமேக: ப்ரதமாமாஸம்வர்தாமிபவிஷயாமிசநாந்ய: கஶ்சிந்மத்தோவயதி ரிக்த: - ஸோஹம்நித்யோநித்யோஹம் பிரம்ஹாஹம்பிராஞ்ச: பிரத்யஞ்சோஹம் தக்ஷணாஞ்சோதம்சோஹம் அதஶ்சோர்த்வமச திஶஶ்சவிதிஶஶ்சாஹம்

சிவ கீதை.

ஏஷஹிதேவ:ப்ரதிஶோநுஸர்வா: பூர்வோத்ஹிஜாதோஸ்ம்யஹமேவகர்பே

யசுர்வேதோபநிடதம்.

ஏஷஹிதேவ:பிரதிஸோநுஸர்வா: பூர்வோஹிஜா தஸ்ஸஉகர்பேஅந்த:

சிவ கீதை.

விஸ்வதஶ்சக்ஷுருதவிஶ்வதோமுகோவிஶ்வதோஹஸ்தஉத விஶ்வதஸ்பாத் - ஸம்பாஹுப்யாம்நமதி ஸம்பதத்ரைர்தயாவா ப்ருதிவீஜநயந்தேவஏக:

யசுர்வேதம்.

விஸ்வதஶ்சக்ஷுருதவிஶ்வதோமுகோ விஶ்வதோஹஸ்த உதவிஶ்வத: ஸ்பாத் - ஸம்பாஹுப்யாம்நமதி ஸம்பதத்ரைர்த் யாவாப்ருதிவீஜநயந்தேவஏக:

சிவகீதை.

யதோவாசோநிவர்தந்தே அப்ராப்யமநஸாஸஹ
ஆநந்தம்ப்ரம்ஹணோவித்வாந்நபிபேதிகூதச்சந

ஈதே தைத்திரீயோபநிடதத்திலும் காண்க.

சிவகீதை.

மய்யேவஸகலம்ஜாதம்மயிஸர்வம்பிரதிஷ்டிதம
மயிஸர்வம்லயம்யாதி தத்ப்ரம்ஹாஸ்ம்யஹயவ்யயம்

அணோரணீயாநஹமேவதத்வன் மஹாநஹமவிஸ்வமஹம் விசுத்த: - புராதநோஹம்புருஷோஹ்மீஸோ ஹிரண்மயோ கம்ஸுகரூபமஸ்மி

அபாணிபாதோஹமசிந்தயஶக்தி: பஶ்யாம்யசக்ஷுஸ்ஸ்ருணோம்யகர்ண: - அஹம்விஜாநாமிவிவிக்தரூப: நசாஸ்திவேத்தாமமசிதஸ்தாஹம்

வேதைநேகைரஹமேவ வேத்யோவேதாந்தக்ருத்வேதவிதே வசாஹம் - நபுண்யபாபேமமநாஸ்திநாஸோந ஜந்மதேஹேந்திரியபுத்திரஸ்தி

நபூமிராபோநசஹ்நிரஸ்தி நசாநிலோமேஸ்திநபோநதச
ஏவம்விதித்வாபரமாத்மரூபம் குஹாசயம்நிஷ்களமத்வீதீயம்

ஸமஸ்தஸாக்ஷிம்ஸதஸத்விஹிநம் ப்ரயாதிஶுத்தம்பரமாத்மரூபம்

இவ் வாக்கியங்களையே கைவல்லியோபநிடதத்திலுங் காண்க,

ஏஷஸர்வேஷுபூதேஷு கூடோஆதமாநப்ரகாஶதே
த்ருஶ்யதேத்வக்ரய்யா புத்யாஸூக்ஷ்மயாஸூக்ஷ்மதர்ஶிபி:

இச் சிவகீதா வாக்கியம் கடவல்லி யுபநிடதத்திலு மறிக.

இங்ஙனம் உதாரணமாக மாத்திரம் எழுதினோமன்றி முற்றும் எழுதினால் விரிவாகுமென்று விடுக்கின்றனம். இங்ஙனம் சிவகீதையிலுள்ள வாக்கியங்க ளெல்லாம் விசேடமாக உபநிடதவாக்கியங்களாகவே விளங்குவனபற்றி உபநிடத வாக்கியங்களை மேற்கோள்களாய்க்காட்டுவது முன்னோர்களது வழக்கமாதலின், அங்ஙனம் உபநிடதவாக்கியங்களையும் மேற்கோள்களாய்க் காட்டி அதனுடன் இச் சிவகீதாவாக்கியங்களையும் மேற்கோள்களாய்க் காட்டினால் ஓர் வாக்கியத்தையே இருமுறை காட்டியதுபோ லாகுமென்று கருதி மேற்கோளாய்ச் சிவகீதா வாக்கியங்களைக் காட்டாது விடுத்தனம். அற்றேல் பகவற்கீதையிலும் உபநிடதங்க ளுள் விளங்கும் வாக்கியங்களில் எச் சொற்கள் அமைந்துளவோ அச்சொற்க ளாலேயே யன மயப்பெற்றவைகளும் முன் உதகர்க்கப்பட்ட வாக்கியங்கள் போன்ற வைகளுமான வாக்கியங்கள் விளங்குகின்றனவே. அத்தகைய வாக்கியங்களை மேற்கோள்களாய் விளக்கி யிருக்கின்றார்களே, அதுபோலச் சிவகீதையிலுள்ள வாக்கியங்களையும் முன்னோர்கள் ஏன் எடுத்தாளவில்லை யெனின் கூறுவாம். பகவற்கீதையில் கருமயோகம் பக்தியோகம் இவ்விரண்டையும் பற்றி விசேஷமா ய்க் கூறியிருத்தலால் அத்தகைய வாக்கியங்களை மேற்கோள்களாய் முன்னோர்க ளாண்டார்கள். அவ் வாக்கியங்களோ வெனின் உபநிடத வாக்கியங்களுக் கந்திய வாக்கியங்களாதலால்மேற்கோளாய் விளக்கினார்கள். இச்சிவகீதையிலேயோ வெனின் கருமபக்தி யோகங்களை அவ்வாறு விளக்காது ஞானமொன்றையே விசேஷித்து விளக்கவந்த வாக்கியங்களாதலால் உபநிடதங்களுடன் அவ்வாக்கியங் களையு மேற்கோளாய்விளக்கினால் இரட்டிப்பாமென்று எடுத்தாளவில்லை. இது போலப் பிரும்மகீதையின் கண்ணும் முற்றும் உபநிடதவாக்கியங்கள் விளங்குகின் றன. அதுபற்றியே அவ் வசநங்களையும் மேற்கோள்களாயாளவில்லை. ஆயினும் பிரும்மகீதை யெப்படிப் பிரமாணமென்றே யறிவாளரா லறியப்பட்டதோ அப்படியே சிவகீதையும் சிவபெருமானால் உபதேசிக்கப்பட்டது பற்றி மகா மஹிமையுடைத் தாம்,

(4) பகவற்கீதையாதிகளை உபதேசம் பெறுவது போல, குரூபதேசமாய்ச் சி.வகீதையைக் கிரகக்காததால் அப்பிரமாணம் என்றதும் மிக்க ஆபாஸமேயாம்.. சிவகீதையைக்குருமூலமாய்க் கிரகிக்கக் கூடாதென்று எந்த நூலாவது கூறுகின்ற துண்டா? சிவகீதையின் மஹிமையையறிந்த பெரியோர்களிருக்குமிடம் இஃதும் குருபரம்பரையாகவே உபதேசம பெறப்படும் நூலேயாம்.சிவகீதையின் மஹிமையை யறியாதவர்கள் குருபரம்பரை முறையாகவே கிரஹிக்காதது பற்றி அப்பிரமாணமா மா? இனிக் குருபரம்பரையாகச் சிவ கீதை வழங்கவில்லையென்று கூறியதை யிங்கு ஆராய்வாம். கற்றறிந்த பெரியோர்களிடம் சிவகீதை குருபரம்பரையாக வழங்காதது பற்றி யப்பிரமாணமா, அல்லது அறியாத ஏனையோர்களிடம்

குருபரம்பரையாய் வழங்காதது பற்றி யப்பிரமாணமா. முதலில் கூறியபடியெனின் அஃதாராய்ச்சியில் கூற்றாம். சிவகீதையின் மஹிமையறிந்த பெரியோர்கள் குரு பரம்பரையாகவே அந்நூலை வழங்கச்செய்கின்றார்களே யன்றி மற்றப்படியல்ல. இரண்டாவது எனின் அஃதும் குற்றமே. அறியாத மாந்தர்களிடம் குருபரம்பரையாக வழங்கவில்லையாதலால் சிவகீதை யப்பிரமாணம் என்று கூறினால் அறிஞர் ஒப்புவரா. அங்ஙனம் வழங்காததற்கு ஆராய்ச்சியில்லாமை காரணமேயன்றி மற்றது காரணமா. இனி யிரத்தினத்தின்குணத்தை யறியாதவளிடம ஓர் சிறந்த இரத்தினம் கிடைத்தால் அது நல்ல இரத்தினம் என்று தெரிந்து கொள்ளாது ஏதோ தெருவில் கிடக்கும் கல் என்று நினைத்து அதை யெறிந்து போவான். அதனால் இரத்தினத்திற் குக் குறைகூறலாமா. அஃதே யறிந்தவனுக்குக் கிடைக்குமானால் அதன் மதிப்புக்குத் தக்கபடி உபயோகப் படுத்துவான். அதுபோலவே கீதா இரத்தினமான சிவகீதையும் பெரியோர்களிடம் பக்தி சிரத்தை குறையாது வழங்கிவருகின்றது. அறியாதவர்களி டம் அலக்ஷியப்படுத்தப் பெறின் அதுபற்றி அந்நூல குற்றமாகாது. இனிச் சிவகீதை யென்றொரு நூல் இருக்கின்றதாகப்பிரசித்தியிராததுபற்றி அப்பிரமாணம் என்பதும் தகுதியல்ல. இராமாயணம் பாகவதம் பாரதம் ஸ்காந்தம் இந்நான்கு நூற்கள் தவிர மற்ற புராணேதிகாசங்களுக்குப் பிரசித்தை யில்லையே அதுபற்றி அம்மற்ற நூல்களை யப் பிரமாணமெனல் குற்றமேயன்றோ? அதுபோலவே சிவகீதை யப்பிர மாணமல்லவென்க. இச்சிவகீதை குருபரம்பரையாகவே கிரகிக்கப்படும் நூலென்ப தை இக்கீதைக் குரையாசிரியர்களான, நாகோஜிபட்டர், பட்டோஜி தீக்ஷிதர், பண்டித கணநாதர் இவர்கள் எழுதிய உரையில் என்ற சுலோகத்தின் பொருள் கூறியுள்ளவி டம் கண்டு தெளிக. இனிப் பகவற்கீதையைப் படிப்பவர்கள் எல்லோரும் குருபரம் பரையாகவே கிரகித்தவர்களா. இனியேதோ சிலபெரியோர்களன்றோ குருமூலமாக வே கிரகிக்கவேண்டியது பகவற்கீதையென் றறிந்து அங்ஙனம் நடத்துகின்றார்கள். அவர்களோ இக்காலத்துப் பிரஸித்திபெற்றவர்களில்லை. மற்றவர்களுக்கே இக்கால த்தில் பிரஸித்தியாதலால் பிரஸித்தமாய்ப் பகவற்கீதையும் குருபரம்பரையாகவே யிக்காலத்தில் வழங்கவில்லை யாதலால் அதையும் பிரமாணமல்லவென்று கொள்கின்றார்களா சிவகீதை விஷயத்திலும் இங்ஙனமே யென்க.

(5) இனிப் பகவற்கீதையானது எம்மதத்தவராலும் அங்கீகரிக்கப்பட்டது, அதில் விஷ்ணுவைச் சிறப்பித்துச் சிவனைக் குறைவாயாவது அல்லது சிவனைச் சிறப்பித்து விஷ்ணுவைக் குறைவாயாவது கூறவில்லை. சமமாத்திரமாய் ஞான நிலையைக் கூறுவதே அந்நூலுக்கியல்பு. இச்சிவகீதையோ வெனின் அங்ஙனம் கூறாது சிவனையே சிறப்பிக்கும் ஆதலால் இதை யங்கீகரிக்கவில்லை யென்பதும், ஆபாஸமே. ஏனெனில் பகவற்கீதையிலும் சிவபெருமானது திருவருளாலேயே மோக்ஷம் கிடைப்பதன்றி மற்றெதனாலும் கூடாதென்றும் அத்தகைய விறைவனே இருதய கமலத்தின்கண் வசிப்போ னென்றும் அவனே தன்னாலும் உபாஸிக்கப்படும் பொருளென்றும் நன்குரைத்திருக்கின்ற தென்பதை

பகவற்கீதை.

ஈஶ்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேர்ஜுநதிஷ்டதி

ப்ராமயந்ஸர்வபூதாநி யந்த்ராரூடாநிமாயயா

ஓ அருச்சுனா மாயையாகிற யந்திரத்திலேறி யிருக்கின்ற சகலப்பிராணி களையும் பிரமிக்கச்செய்து கொண்டு எல்லாப்பிராணிகளினிருதயத்தில் ஈச்சுரனிருக் கின்றான்.

தமேவஸரணங்கச்ச ஸர்வபாவேநபாரத
தத்ப்ரஸாதாத்பராம்ஸாந்திம்ஸ்தாநம்ப்ராப்ஸ்யஸிஸாஸ்வதம்

அவனையே சகலமான தன்மையாலும் சரணமடைவாயாக அவனது அருளால் சிறப்புற்ற சாந்தியையும் சாச்வதமான பதவியையும் பெறுவாய்.

உத்தம:புருஷஸத்வந்ய: பரமாத்மேத்யூதாஹ்ருத:
யோலோகத்ரயமாவிஸ்ய பிபர்த்யவ்யாஈஸ்வர:

யாதொரு ஈச்சுரன் மூவுலகையும் அடைந்து பரிக்கின்றானோ அவனே பரமான்மாவென்று கூறப்பட்டவன் அவனே (உத்தமபுருஷன்) பரமபுருஷன் அவன் அநநியனே.

தமேவசாத்யம் புருஷம் ப்ரபத்யே

அவ்வாதி புருஷனையே யான் (சரணம்) வணங்குகின்றேன்.

எனபதாதி வாக்கியங்களைக் கண்டறிக. இம்மட்டோ. இக்கீதையையுடைய ஸ்ரீ மகா பாரதத்தின் மற்றும் பருவம் தோறும் விளங்கும் சிவோத்கருஷத்தை.

ஆரண்யபருவம் தீர்த்தயாத்திரைப் பிரகரணம்.

ததோகச்சேத்ஸுபர்ணாக்ஷம் திரிஷுலோகேஷுவிஸ்ருதம்
யத்ரவிஷ்ணு:பிரஸாதார்த்தம் ருத்ரமாராதயத்புரா

பூர்வம் விஷ்ணுவானவர் கருணையினிமித்தம் சிவபெருமானை யெங்கு பூசித்தாரோ. மூன்றுலகிலும் பிரசித்தமான சுபர்ணாக்ஷமென்ற வவ்விடத்திற்குப் போகவேண்டும்,

துரோணபர்வம்.

வாஸுதேவஸ்துதம்திருஷ்ட்வா ஜகாமஸிரஸாக்ஷிதிம்
பார்த்தேநஸஹதர்மாத்மா க்ருஹ்ணந்ப்ரம்ஹஸநாதநம்
லோகாதிம்விஸ்வகர்மாணம் அஜமீஸாநமவ்யயம்

தருமான்மாவாகிய வாசுதேவர் உலகத்திற்காதியும் எல்லாமுண்டாக்கிய வரும் பிறப்பிறப்பற்றவருமாகிய அப் பரமேச்சுரனைப் பிரும்மமென் றறிந்து அருச்சுனனோடுகூடப் பூமியில் விழுந்து சிரஸால் வணங்கினார்.

சாந்திபர்வம்

யம்விஷ்ணுரிந்த்ரோருத்ரஸ்ச ப்ரம்ஹாலோகபிதாமஹ:
ஸ்துவந்திவிவிதைஸ்தோ த்ரைர்தேவதேவம்மஹேஶ்வரம்
தமர் சயந்தியேஶஸ்வத் துர்காண்யதிதரந்திதே

தேவ தேவனான எந்த மகேச்சுரனை விஷ்ணு, இந்திரன், பிரமன் இவர்கள் பற்பல துதிகளால் தோத்திரம் செய்கின்றனரோ அவ்விறைவனை யெவர்கள் அடிக்கடி பூசிக்சின்றனர்களோ அவர்களே துக்கங்களைத் தாண்டுகின்றார்கள்.

அநுசாஸநிகபர்வம்.

ஸஏஷபகவாநீஶஸ் ஸர்வதத்வாதிரவ்யய:
ஸர்வதத்வவிதாநஜ்ஞ: ப்ரதாநபுருஷேஶ்வர:
ஸோஸ்ரஜத்தக்ஷிணாதங்காத் ப்ரஹ்மாணம்லோகஸம்பவம்
வாமபார்ஶ்வாத்ததாவிஷ்ணும் லோகரக்ஷார்த்தமீஶ்வர:

இந்தப் பகவானாகிய ஈசனே எல்லாத் தத்துவங்களுக்கு மாதியும் அந்தமற்றவ னும் எல்லாத்தத்துவங்களையும் உண்டு பண்ணவறிந்தவனும் பாச பசுக்களுக் கதிபனாயுமுள்ளவன். அவனே யுலகங்களைப் படைப்போனான பிரும்மதேவனை வலது பக்கத்தினின்றும் உலகங்களுக்குக் காப்போனான விஷ்ணுவை இடது பக்கத்தினின்றும் உண்டாக்கினார்.

சாந்திபருவம்.

விஷ்ணுர்பிரம்ஹாஶஶீஸூர்யஶ் ஶக்ரோதேவாஶ்சஸாங்யா
ஸ்ருஜ்யதேக்ரஸ்யதேசைவ தமோபூதமிதம்யதா
அப்ரஜ்ஞாதம்ஜகத்ஸர்வம் ததாஹ்யேகோமஹேஸ்வர:

விஷ்ணு, பிரமன், சந்திரன், சூரியன், இந்திரன் மற்ற தேவர்களும் உண்டாக்கப் படுகின்றார்கள் ஈதெல்லாம் எப்பொழுதுதமோ மாத்திரமாய் இருக்கின்றனவோ அப்பொழுது அழிக்கப்படுகின்றார்கள். அப்பொழுது உலகெல்லாம் அறியப்படாது அக்காலத்தில் மகேச்சுர னொருவனேயுளன்.

என்பதாதி வாக்கியங்களால் பாரதமும் அதனுள்ளிட்ட பகவற்கீதை முழுதும் சிவபெருமானது மஹிமையை விரிக்கும் நூலென்று நன்கறியப்படுவதா யிருக்க

அப்பாரதத்து ளடங்கிய நூல் சிவனைச் சிறப்பிக்கவில்லை யென்றது முற்றும் குற்றமேயென்க.

இனிப் பகவான் என்றசொல் ஸ்ரீ கண்ணபிரானைக் குறிக்குமன்றிச் சிவனைக் குறிக்காதா தலின் அக்கீதையில் சிவபரத்துவ மெங்ஙனங் கூறுமெனின்?

லிங்க புராணம்.

உத்பத்திம்சவிநாஶம்ச பூதாநாமாகதிம்கதிம்
வேத்திவித்யாமவித்யாம்ச ஸவாச்யோபகவாநிதி

என்பதாதி வசனங்களால் அறுவகை ஞானத்தை யுடையவன் எவனோ அவனே பகவான் என்றதால் பகவான் என்று வழங்கும் சொல்லுக்குப் பொருளாய் உள்ளவனெவனோ அவன் பரன் என்று விளங்குவதால் அப்பரனும் ஸ்ரீ கண்ணபிரா னேயன்றி மற்றெவருமில்லை யென்பாரேல், பகவான் என்ற சொல் கண்ணபிரானிட மே பிரயோகிக்கப்பட்ட பதமென்பது கூடாது. பகவான் எனும் சொல் சிவபெருமான் விஷ்ணு பிரமன் தேவர் ருஷிகள் முனிவர்கள் இவர்களெல்லா ரிடமும் பிரயோகிக்கப்பட்டுளது.

உருத்திரோபநிடதம்.

ஓம் நமோ பகவதேருத்ராய:

மகாநாராயணோபநிடதம்.

ஓம் நமோபகவதேநாராயணாய:

சுகரகசியோபநிடதம்.

தேவர்ஷயோப்ரம்ஹாணம் ஸம்பூஜ்யப்ரணிபத்யபப்ரச்சுர்பக
வந்நஸ்மாகம்ரஹஸ்யோபநிஷதம்ப்ரூஹீதி

ஜாபாலோபநிடதம்.

அத ஜநகோஹவைதேஹோயாஜ்ஞுவல்கய
முபஸமேத்யோவாசபகவந் ஸந்யாஸமநுப்ரூஹீதி

மைத்திராயாணியுபநிடதம்.

அத பகவாந்ச்சாங்காயந்யஸ்ஸூப்ரீத:

மைத்திரேயோபநிடதம்.

அத பகவாந்மைத்ரேய:கைலாஸம்ஜகாம

தேஜோபிந்தூபநிடதம்.

நிதாகோநாமவைமுநி:பப்ரச்சருபும்பகவந்தம்

திரிகிப்பிராம்மணோபநிடதம்.

த்ரிஶிகிப்ராம்மண ஆதித்யலோகம் ஜகாமதங்கத்வோவாசபகவந்.

என்பதாதி யுபநிடதங்களில் கூறியபடி பகவான் என்ற சொல் மும்மூர்த்திக ளிடமும் தேவர் முனிவர் இருடிகள் இவர்களிடமும் வழங்கும் சொல்லாயிற்று. பகவான் என்பது சொன்மாத்திரத்தில் பரத்துவத்தை சித்தாந்தப்படுத்திக் கொண்டால் என்று நிகண்டில் கூறியபடி புத்தனுக்கும் பரத்துவமொவ்வும் படியாகும். அதை வைதிகர்களொவ்வார்கள். ஆதலால் பகவானென்னுஞ்சொல்லுக்கு இடத்திற்குத் தக்கபொருள் படுத்துவதே யுசிதமாதலால் கண்ணனிடமே பொருள் என்பது குற்றமே யென்க.

இன்னும் வைநபாசுபத தீட்சைவாயிலாக வாய்ந்த சிவஞானாக்னியினாலே ஆன்மாவைப்பற்றிய பாசத்தைப் போக்கிச் சிவத்துவம் விளக்கப்பெற்ற மெய்யுணர் வோர்க்கும் பகவான் என்னும் பெயர் பொருந்தும். ஆகலின் பகவத் சப்தம் ஈசுவரனு க்கு வாஸ்தவமும், மற்றைத் தேவருக்கு உபசாரமுமாம். சிவசத்திக்குப் பகவதிப் பெயர் வழங்கி வருமாறுங் காணலாம். இதனால் கிருஷ்ணபகவா னென்பது பிரகஸ் பதிபகவான், வியாழபகவான், சனிபகவான் முதலியவற்றோடினமாம்.

ஆயின், கண்ணன் உலகெலாமாயினேனென்றதூஉம், விசுவ ரூபத்தைக் காட்டியதூஉம்; தான் பதியென்றுணர்த்திய தகாதோ வெனின் கண்ணனைப்போலவே வாமதேவரிஷியும் “யானேயெல்லா மாயினேன்" என்று கூறினமையாலும், இந்திரனானவன் "நான் பிராணனாயிருக்கிறேன்" நான் அறிவுமயமான ஆத்மா வாயிருக்கிறேன்" என்று கூறிய வுண்மை எஜூர்வேதம் சித்வல்லியிற் கேட்கப் படுகையாலும், ஏனைக் கீதாசாரியர்களு மிப்படியேகூறுகின்றமை யாலும் கண்ணனிடத்துமாத்திரமே அது சிறக்குமெனல் கூடாது இனிக் கண்ணனுடைய விசுவரூபமோவெனின், அனுமான் விசுவ ரூபங்காட்டினன். வீரபாகுதேவர் விசுவரூபங்காட்டினர் ஆனதால் கண்ணன் விசுவரூபத்திற் கென்ன சிறப்பு.

அன்றியும், கண்ணன் இராமாவதாரத்தில் சிவபெருமானிடத்துக் கேட்ட கீதையின் கருத்தினையே கிருஷ்ணாவதாரத்தில் சிவோகம்பாவனையிலிருந்து அருச்சுனனுக்குப் போதித்தாரென்பது உண்மை என்னை கிருஷ்ணமூர்த்திக்கு

அந்தரியாமியா யிருப்பவன் சிவபெருமானே யாகலின், எங்கனமெனின் விளக்கு வாம். பாசுபதாஸ்திரம் வேண்டிக் கிருஷ்ணனும், அர்ச்சுனனும் ஸ்ரீகைலாசத்திற்குப் போகையில் மார்க்கத்தில் கிருஷ்ணனை அருச்சுனன் பூசித்தான். அவ்வாறு பூசித்தது கிருஷ்ணனையா? கிருஷ்ணனது அந்தரியாமியாகிய சிவனையா? என்று யோசிக் கின், கிருஷ்ணனிடஞ் செய்த பூசையைச் சிவபெருமானேற்றுப் பலப்பிரதாதாவா யனுக்ரகஞ் செய்த வைபவம் பாரதத்திற் படிக்கப்பட்டமையால், கிருஷ்ணனது அந்தரியாமியையே அர்ச்சுனன் பூசித்தானென்பது சித்தித்தது. கிருஷ்ணன் சர்வாந்தரி யாமியா யிருந்தால் அந்தக் கிருஷ்ணனையே பூசிக்காமல் அவனிடத்தில் சிவனைப் பூசிக்கவேண்டிய ஆவசியகமில்லை. அருச்சுனனுக்குக் கிருஷ்ணனே ஈசுவரனென் கிற ஞானமுண்டா யிருக்கும் பட்சத்தில் அந்தக் கிருஷ்ணனையே நாளும் பூசியா மல் அவன் சாங்காறும் சிவ பூசை செய்யவேண்டிய நிமித்தமில்லை. கிருஷ்ணன் நேரிலிருந்தும் அவனை அபூஜ்யனாகத்தள்ளி அவனிடத்தில் சிவனைப் பூசித்தமை யால், அருச்சுனன் தான் பூஜ்யனாகத் துணிந்த சிவனையே அந்தரியாமியென்று கொண்டா னென்பது வியக்தமாகியது. அவன் கொண்டவாறு அப்போதங்குக் கண்ணனிடம் பூசித்தபோதுகளை அக்கண்ணனோடு கைலையிற்சென்று சிவனிடங் கண்டு தெளிந்தமையால் ஈசுவரன் தனக் கன்னியமானவ னென்று கண்ணனுப தேசித்த சத்தியத்தை அருச்சுனன் அநுபவத்தாற் கண்டானென்பது சித்தித்தது. இதனால் பகவற்கீதையும் சிவபரத்துவம் விளக்கும் நூலே, கிருஷ்ண மூர்த்தியும் சிவனடியாரேயாம்,

இதுகாறு மெடுத்துக்காட்டிய வசனங்களால் சிவபெருமானே வேதாதிகளால் பிரதிபாதிக்கப்படும் உண்மைத்தெய்வமெனவும், சிவ கீதை வேதத்துடன் மாறுபடாது சிவோத்கர்ஷம் தாபிக்கவெழுந்த வொரு சத் கிரந்தமெனவும், இக் கிரந்தவழி நடப்போர்க்குச் சிவ ஞானம் சித்திக்குமெனவும், இஞ் ஞானத்தால் சிவசாயுச்சிய முத்தி யுண்டாமென்பதும் சத்தியமென வச்சிரலேபமாகத் தாபிக்கப்பட்டது,

சுபம்! சுபம்!!

உபோற்காதம் ஸம்பூர்ணம்.

உ
சிவமயம்,
திருச்சிற்றம்பலம்.

ஶ்ரீ சிவ கீதை.

மூலமும் உரையும்.

முதலாவது அத்தியாயம்.

ஶ்ரீ சிவபக்தியின் பெருமை

ஸூதர் வாக்கியம்.

அதா²த: ஸம்ப்ரவக்ஷ்யாமி சு⁵த்³த⁴ கைவல்ய முக்தித³ம்
அநுக்ரஹான் மஹேச⁵ஸ்ய ப⁴வது³: க²ஸ்ய பே⁴ஷஜம். (1)

வியாக்யானம்: - **சுத்த கைவல்யமுக்திதம்** - சுத்தகைவல்லிய முக்தியையளிப்பதும், **பவதுக்கஸ்ய** - சம்சார துக்கத்திற்கு, **பேஷஜம்** - மருந்தானதுமான (சிவகீதையெனும் இரத்தினத்தை) **மஹேசஸ்ய** - மகேச்சுரனாகிய (சிவபெருமானது), **அநுக்ரஹத்** - அருளால், **ஸம்ப்ரவக்ஷ்யாமி** - நன்குரைக்கின்றேன்.

பொழிப்புரை: - சுத்தகைவல்லியமுத்தியை யளிப்பதூஉம், சம்சார துக்கத்திற்கு மருந்தானதூஉமான, சிவகீதையெனும் இரத்தினத்தைச் சிவபெருமானது அநுக்கிரகத்தினா லுரைக்கின்றேன்.

நுட்பம்: - சூதவிருஷி சம்வாத உருவமாகவே வியாஸபா முனிவர் புராணங்களை யியற்றியுள்ளார் ஆதலின், பாத்தும புராணத்துள் விளங்கும் சிவகீதையெனும் இந்நூலை யியற்றுவதிலும் சூதவிருஷி சம்வாத உருவமாகவே துடங்கிக்கொண்டனர். சுலோகத்தில் “அதா" என்று ஆரம்பித்திருக்கும் சொல்லானது, சொன்மாத்திரையில் சிவகீதையெனு மிவ் வரிய பெரிய நூலை யாரம்பித்தற்குரிய மங்களத்தைக் கூறுவதாகும். இங்கு "அதா" சப்தத்திற்கு மங்களப்பொருட்படுந் தன்மையை,

பிரமாணம்: -
ஓங்காரஸ்சாதஸப்தஸ்சத்வாவேதௌபிரம்ஹணஃபுரா
கண்டம்பித்வாவிநிர்யாதௌ தஸ்மாந்மாங்களிகாவுபௌ.

ஒங் கார - என்ற இவ் விருசொற்களும் முன்பிரம்மனது கண்டத்தைப் போதித்து வெளிவந்தனவாதலின், இவ் விரண்டும் மங்களார்த்தத்தை யுடையவைகளாம் என்னும் வியாசபகவான் வசனத்தாற் காண்க.

சுத்தகைவல்யம் ஐந்தாவது முத்தியாகும். இப் பரமுத்தியானது சிவபெருமானால் பேரருளுடன் கூறப்பட்ட சிவகீதையெனு மிவ் வரிய நூலாலேயே பெறப்படுவதாம். இங்கு ஐவகை முத்தியென்றது மற்ற வெமமதத்தினும் கூறப்பட வில்லை. இம் முக்தியைச் சொரூபமுத்தியெனவும் கூறுவதுண்டு. முத்கியினில் ஐந்துவகையும் இந் நூலிலேயே பதின்மூன்றாவ தத்தியாயத்தில் விரிவாக வுரைக் கப்படும். இச் சிவகீதையெனும் இரத்தினத்தைப் பிறப்பெனும் பிணிக்கு மருந்தென்றும் கூறினார். பிணி நீங்கிச் சுகிக்க மருந் துட்கொள்ள வேண்டிய தவசியம் போலச் சம்ஸார நீங்கிச் சுகிக்க விந்நா லுபதேசம் அவசியமாம். இங்கு மூலத்தில் சிவகீதாரத்தினமென்று கூறாவிடினும், வடமொழியில் ஒன்றன்பாலா யுள்ள பெயருரிச் சொற்களால், இப் பெயர்ச்சொல்லை வருவித்துக் கொள்வதற்குரிய குறியிருத்தலால், இந் நாலுக் குரையியற்றிய வடமொழி யாசிரியர்களின் கூற்றிற்கிணங்க இச் சொல்லை வருவித்துப் பொருள் கூறப்பட்டது. அற்றேல் பிறப்பெனும் பிணிக்கு மருந்தென்று கூறியபடி.யால், மருந்துட்கொள்ளும் முறை வைத்தியருக்கே தெரியுமல்லாது மற்றையர் கூறுவது எவ்வித மொவ்வுமெனின், இவ் வாசங்கை நீங்கவே, சிவபெருமானது அருளால் கூறுகின்றே னென்று கூறலாயிற்று. இனிச் சிவனே சம்சார வைத்தியனென்பதை,

யசுர்வேத சதருத்திரியம்.

அத்யவோசததிவக்த்தா பிரதமோதைவ்யோபிஷக்

மாறா மொழியோனும் முதற்றேவனுமான வைத்தியனே கூறினான் என்பதினாலறிக.

ஸ்லோகம்.

ந கர்மணா மநுஷ்டா²நைர் ந தா³னை ஸ்தபஸாபி வா
கைவல்யம் லப⁴தே மர்தய: கிந்து ஞானேன கேவலம். (2)

வியாக்யானம்: - மர்த்ய: - மனிதன், **கைவல்யம்** - கைவல்ய முத்தியை, **கர்மணாம்** - கருமங்களினுடைய, **அநுஷ்டாநை:** - அநுஷ்டாநங்களால், **நலபதே** - அடைகிறதில்லை, **தானை:** - தானங்களாலும், **ந** - அல்ல, **தபஸாஅபிவா** - தவத்தினாலேயும், **ந** - அல்ல, **கிம்து** - மற்றெதனாலோவெனின், **கேவலம்** - தனித்த, **ஞாநேந** - ஞானத்தினாலேயே.

பொழிப்புரை: - மனிதன் கருமங்களி னனுஷ்டானங்களாலும் ஈதல்களாலும் தவத்தினாலும் கைவல்யமென்னும் முத்தியை யடைகின்றானல்ல. பின் னெதனா லெனின் ஞானத்தினாலேயாம்.

நுட்பம்: - கருமங்களின் அநுஷ்டானங்களால் என்றதனால், சோதிஷ்டோமாதி வேள்விகளைச் செய்தலால் என்பது பெறப்பட்டது, இக் கருமங்களின் அநுஷ்டானங்களால் முக்தி கைகூடாதென்பதை,

நாராயணீயா யாஜ்தீக் யுபநிடதம்.

பிரமாணம் - *நகர்மணாநப்ரஜயாதநேந*

கருமங்களாலும் சந்தானங்களாலும் பொருளாலும் அல்ல என்பதினாலறிக.

அற்றேல் கருமங்களைப்புரிதல் வேண்டுமென்று கூறும் மறைமொழிகள் அவலபோவெனின், அற்றன்று, எல்லாக் கருமங்களையும் சிவபெருமான் பொருட் டென்றே பயனை விரும்பாது புரிந்தால் அவ் விறைவனது பிரஸாதம் சித்திக்கும். அவ் வருளால் சித்த மலந்துலையப் பின்னர் ஞானம் சித்திக்கும். ஆதலின் கருமங்களை நசு வரங்களான அவைகளின் பயன்களை விரும்பிப் புரிந்தால் ஞான ஹேதுவாகாதென்றேயறிக. ஈதல்களாலுமவ்விதமேயென்க. இலௌகீகப்பயன்களை விரும்பிச் செய்யும் தவத்தாலு மங்கனமேயாம். ஞானத்தாலேயே கைவல்யமெனு முக்தி கூடும். இத்தகைய ஞானம் சிவஞானமேயாம்.

சுவேதாச்சுவதரோபநிடதம்

விஸ்வஸ்யைகம்பரிவேஷ்டிதாரம் ஈஶந்தம்ஞாத்வா அம்ருதாபவந்தி.

விசுவத்தை வியாபித்தவனும் ஏகனுமான அவ்வீசனை யறிந்து அமிருதரா கின்றனர் என்பதனானும்,

அதர்வசிகோபநிடதம்,

ஶிவஏகோத்யேயா ஶிவம்கரஸ்ஸர்வமந்யத்பரித்யஜ்ய

சுபத்தை யளிப்பவன் சிவ னொருவனே. மற்றெல்லாவற்றையும் நீக்க விடுத்துத் தியானிக்கத்தகுந்தவன் என்பதனானும்,

திருமந்திரத் திருமுறை.

சிவமான ஞானந் தெளியவொண் சித்தி
சிவமான ஞானந் தெளியவொண் முத்தி
சிவமான ஞானஞ் சிவபரத்தே யேகச்
சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே. - என்பதனானும்,

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

ஞானத்தால் வீடெனறே நான்மறைகள் புராண
நல்லவாக மஞ்சொல்ல வல்லவா மென்னு.
மூனத்தா ரென்கடவ ரஞ்ஞா னத்தா
லுறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தா
னானத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போ
லஞ்ஞானம் விடப்பந்த மறுமுத்தி யாகு
மீனத்தார் ஞானங்க ளல்லா ஞான
மிறைவனடி ஞானமே ஞான மென்பார் - என்பதனானுமறிக.

ஶ்லோகம்.

ராமாய த³ண்ட³காரண்யே பார்வதீ பதினா புரா
யா ப்ரோக்தா ஶிவகீ³தாக்²யா கு³ஹ்யாத் கு³ஹ்யதமா ஹி (3)

வியாக்யானம்: - புரா - முன்னம், **தண்டகாரண்யே** - தண்டகாரணியமென்ற வனத்தின்கண், **பார்வதிபதிநா** - பார்வதிநாதனான (சிவபெருமானால்), **ராமாய** - இராமன் பொருட்டு, **சிவகீதாக்யா** - சிவ கீதையென்று பெயர்பெற்ற, **யா** - எந்த (பிரும்மவித்தையானது,) **ப்ரோக்தா** - கூறப்பட்டதோ, **ஸா** - அப் பிரும்மவித்தை, **குஹ்யாத்** - இரகசியத்திலும், **குஹயதமாஹி** - மிக்க இரகசியமன்றோ.

பொழிப்புரை: - முன்னம தண்டகாருணியமெனும வனத்தின்கண் சிவபெரு மானால் இராமன்பொருட்டுச் சிவகீதை யென்று பெயர் பெற்ற எந்தப் பிருமமவித்தையானது கூறப்பட்டதோ அஃது இரகசியத்திலும் இரகசியமன்றோ.

நுட்பம்: - முன் சிவஞானத்தாலேயே முக்தி கைகூடுமென்று கூறியபடி அச் சிவஞானம் சிவகீதையெனு மிவ் வரிய பெரிய நூலாலேயே நன்கு பெறக்கூடியது. ஆதலால் இவ் வரிய நூலின் மகிமையை நன் கறிவதற்கென இதன் தோற்றத்தின் தேசகாவங்களைக் குறிக்கின்றார்.

தண்டகாரணிய மென்றதினாலே மிக்கப் பரிசுத்தமான விடத்திலேயே இக் கீதை உபதேசிக்கத் தக்கதெனக் குறிக்கப்பட்டது. இராமனின் பொருட் டென்றதனால் இராமன் சிவபக்தியில் சிறந்தவராதலால் சிவபக்தி யுடையவருக்கே யிதை யுபதேசிக்க வேண்டும் என்பதும் பெறப்பட்டது,

வால்மீகி ராமாயணத்தில் **அத்ரபூர்வம்** என்னும் வாக்கியம் இராமன் சிவப்பிரஸாத மெய்திய நலமும், **நைவபச்யாமி** என்னும் வாக்கியம் இராமன் அசுவமேதத்தால் சிவாராதனம் புரிந்தவாய்மையும், **ஸ்ரீமதோ நீலகண்டஸ்ய** என்னும் வாக்கியம் இராமன் சிவனாரது திருவாணையைக் கடவாததன்மையும், **க்ருதாபிஷேக:** என்னும் வாக்கியம் இராமன் சிவனாரது அனுக்ரகத்தையும் சீதை

பார்வதியாரது அனுக்கிரகத்தையும், லட்சுமணன் நந்தியப் பெருமானது அனுக்ரகத்தையு மடைந்தார்க ளென்பதையும், **மஹாதேவப்ரஸாதாச்ச** என்னும் வாக்கியம் தசரதனும் தாசரதியும் சிவானுக்கிரகமெய்தினாரென்பதையும் தெரிவித்தலினால் இராமன சிறந்த சிவபக்த சிரோமணி யென்பதிற்றட்டில்லை. இவ்விராமனின் மூலமூர்த்தியாகிய விண்டுவும் சிவபத்தியுடையாரே.

கூர்ம புராணம்.

பிரமாணம்: -

ஈஶாநஸ்ஸர்வவித்யாநாம் ஸஏவாதிகுருர்புதா:
தஸ்யஶிஷ்யோமகாவிஷ்ணு: ஸர்வஞ்ஞாநமஹோததி:

எல்லா வித்தைகளுக்கும் அதிபனான அவனே ஆதிகுரு ஓ தேவர்களே! எல்லா வித்தைகளுக்கும் நிதியான மஹா விஷ்ணு அவருக்குச் சிஷ்யர் என்பதனானும்,

சிவபுராணம்.

க்ருஷ்ணத்வைபாயநஸ் ஸாக்ஷாத்விஷ்ணுரேவஸநாதந:
கோஹ்யந்யஸ்தத்வதோருத்ரம் வேத்திதம்பரமேஶ்வரம்

வியாஸபகவான் முன்னவராகிய விஷ்ணுவே. மற்ற எவன் எல்லாம் வல்லவனான உருத்திரரை யுள்ள படியறிவான் என்பதனானும்,

யசுர்வேதம்.

விஷ்ணுரித்தாபரமஸ்யவித்வாந்

இவனது தத்துவத்தை விஷ்ணுவே யறிவார் எனும் வசனத்தாலும் காண்க.

முன்னம் என்றதனால் இராமாவதார காலத்தி லென்றும், அதனால் கிருஷ்ணாவதார காலத்தில் அருச்சுனனுக் குபதேசித்த கீதைக்கு முதனூல் சிவகீதை யென்பது விசதமாகின்றது. சிவகீதை யெனும் பிரும்மவித்தை யென்பது, யாது காரணம்பற்றிக் கூறப்பட்டது எனின் சிவப்பிருமச் சொற்கள் ஒரு பொருளுடைய சொற்களாதலால் என்க.

சுவேதாச்சுவதரோபநிடதம்.

த்வே அக்ஷரேப்ரம்பரேத்வநந் தேவித்யாவித்யேநிஹிதே யத்ரகூடே,
க்ஷரம்த்வவித்யாஹ்யம்ருதந்து வித்யாவித்யாவித்யே ஈஶதேயஸ்துஸோந்யா:.

பிரும்மமாயும் பரமாயும் அனந்தமாயும் உள்ள அக்ஷானிடத்தில் வித்தையும் அவித்தையுமாகிய இரண்டும் இரகசியமாய் வைக்கப்பட்டன. அவித்தை க்ஷரம் வித்தையோவெனின் (அக்ஷர மல்லது அமிருதம். இவ்வித்தியா வித்தைகளை யெவன் ஆள்வோனோ அவன் அந்தியனாம்.

சுவேதாச்சுவதரோபநிடதம்.

தத: பரம்ப்ரஹம்மபரம்ப்ரஹந்தம் - ஈஸந்தம்ஞாத்வா அம்ருதாபவதி.

பின்னர் பிரும்மமாயும் பரமாயும் யாண்டும் பரந்தவனும் ஆகிய அவ்வீசனை யறிந்து முக்தராகின்றார்கள் என்பதனானும்,

யசுர் நாராயணியயாஜ்ஞிக் யுபநிடதம்.

ருதம்ஸத்யம்பரம்ப்ரம்ஹ புருஷம்க்ருஷ்ணபிங்களம்
ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விஸ்வரூபாயவைநம:

ருதனாயும் சத்தியனாயும் பரம் பிரும்மமாயும் புருஷனாயும் கரு நிறமும் பொன்னிறமும் பெற்றவனாயும் மேனோக்கிய ரேதனாயும் விரூபாக்ஷனாயும் உள்ள விசுவரூபனுக்கு நமஸ்காரம் என்பதனானும்,

அதர்வசிரோபநிடதம்.

அத கஸ்மாதுச்யதேபரம்ப்ரம்ஹ யஸ்மாதுச்சார்யமாண
ஏவப்ரஹதிப்ரம்ஹயதிதஸ்மா துச்யதேபரப்ப்ரம்ஹ.

எதனால் பரப்பிரம்மமென்று கூறப்படுகின்றது. உச்சாரண மாத்திரத்தில் எங்கும் பரந்த பிரும்மத்தினிடம் அடையச் செய்கின்றபடியால், பரம்பிரும்மமென்று கூறப்பட்டது. என்பதனானும்,

அதர்வசிகோபநிடதம்.

ருத்ரஸ்ஸபகவாந்யஸ்சப்ரம்ஹ

எவன் பிரும்மமோ அப்பகவன் உருத்திரனே.

ஸர்வாணிப்ரம்ஹயதீதிப்ரம்ஹ

எல்லாவற்றையும் பரவச்செய்தலுடன் கூடியவனாதலின் பிரும்மம் என்பதனாலும்.

ஸ்ரீகண்டபாஷியம்

ஸகலநிகமஸாரஹாமாஸ்யநிதாநஸ்ய, பவஶிவஶர்வ பஶுபதி பரமேஶ்வர மஹாதேவருத்ர ஶம்புபிரபிருதி பர்யாயவாசக ஶப்த ஸாரபிரகாஶித பரமமஹிம விலாஸஸ்ய, ஸ்வஶேஷபூத நிகிலசேதந ஸமுபாஸநாது குணஸமுதிக நிஜபிர ஸாதஸமர்பித புருஷார்த்த ஸார்த்தஸ்ய, பரப்ரம்ஹண:

சகலவேத சாரசமரசத் தன்மையிருப்பிடமாக இருப்பவனும், பவ சிவ சர்வ பசுபதி பரமேச்சர மகாதேவ ருத்திர சம்பு என்பதாதி பர்யாயச் சொற்சாரத்தால் விளங்கிய அரியமகிமை விளக்கத்தையுடையொனும், தக்குள்ளடங்கிய சகல சேதனர்களது உபாசனைக்கு இணங்கத் தோன்றிய தனது திருவருளால் கொடுக்கப்பட்ட புருஷார்த்தத்தை உடையோனுமாகிய பரப்பிரும்மத்தினது - என்பதனானும் காண்க.

இரகஸ்யத்திலும் ரகசியமென்றது.

பகவத்கீதை

ஈஶ்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேர்ஜுநதிஷ்டதி
ப்ராமயந்ஸர்வபூதாநி யந்த்ராருடாநிமாயயா.

தமேவஶ ரணங்கச்ச ஸர்வபாவேநபாரத
தத்ப்ராஸாதாத்பராம்ஶாந்திம்ஸ்தாநம்ப்ராப்ஸ்யஸிஶாஶ்வதம்.

ஓ அருச்சுனா, மாயையாகிய யந்திரத்தையடைந்த எல்லாப் பிராணிகளையும் பிரமிக்கச் செய்து கொண்டு எல்லாப் பிராணிகளின் இருதயத்தில் எந்த ஈச்சுரன் இருக்கின்றானோ அவனையே எல்லாத் தன்மையாலும் சரணமடைவாயாக. ஓ பாரத, அவனருளாலேயே மேலாகிய சாந்தியையும் அழிவற்ற பதத்தையும் அடைவாய்.

என்பதாதி அரிய சிவமஹிமைகளைக் கூறும் வாக்யங்களடங்கிய பகவத்கீதையே இரகசியமென்னப்படும். இதனினும் இரகசியமாயுள்ளது பக்தியோகம், விரசாதீக்கை, சிவப்பிராதுர்ப்பாவம், விபூதி விஸ்தாரயோகம், விசுவரூபதர்சனயோகம், உபாஸனைவிதி, பிரஸாதம் அல்லது திருவருட்சிறப்பு, மோக்ஷயோகம், பஞ்சகோச உபாசனை முக்தியோகம் என்ற அரிய தத்துவ ரகசியங்கள் சிவகீதையெனும் இவ்வரிய நூலிலேயே கூறப்படுகின்றனவாதலின் இது இரகசியத்திலும் இரகசியமென்பது நன்கொவ்வும் என்க. இவ்வரிய நூலைத் தக்கபரிபாகிகளுக்கே உபதேசிக்க வேண்டுமென்றும் அறிக.

யஸ்யா: ச்^{5}ரவண மாத்ரேண ந்ரூணாம் முக்திர் த்^{4}ருவா ப^{4}வேத்
புரா ஸனத்குமாராய ஸ்கந்தே^{3}னாபி^{4}ஹிதா ஹி ஸா. (04)

வியாக்யானம்: - யஸ்யா: - எந்தக் கீதையினது, **ஸ்மரணமாத்ரேண்** - நினைத்த மாத்திரத்தில், **ந்ருணாம்** - மனிதருக்கு, **த்ருவா** - நித்தியமான, **ஸா** - முற்கூறிய கைவல்யமென்ற, **முக்தி: ஹி** - முக்தி ஸித்திக்கின்றதன்றோ, **ஸா** - அந்தக் கீதையானது (சிவகீதையானது), **ஸ்கந்தேன** - கந்தபகவானால், **புரா** - முன்னம், **ஸநக்குமாராய** - சநக்குமாரரின் பொருட்டு, **அபிஹிதா** - கூறப்பட்டது.

பொழிப்புரை: - எந்தக் கீதையை நினைத்தமாத்திரத்தில் மனிதருக்கு சத்யமான முற்கூறிய கைவல்யமெனும் முக்தி சித்திக்கின்றதோ, அச்சிவகீதையே கந்தபகவானால் முன்னம் சநத்குமாரருக்கு உபதேசிக்கப்பட்டது.

நுட்பம்: - இங்கு நினைத்தமாத்திரத்தி லென்றதனால் இக்கீதையின் மஹிமை விளக்கப்பட்டது. இக் கீதையிற் சிவபெருமானது அருள் மிக்கப் பாலிக்கப்பெற் றிருக்கின்றபையின் இது ஞானத்தையளித்துக் கைவல்யமெனும் முக்திக் காளாக்குகின்றதென்பதையறிக. சிவ பெருமானது திருவருளாலேயே முக்தியே துவானஞானம் நிகழும்.

சுவேதாச்சுவதரோபநிடதம்

பிரமாணம் -

யோதேவாநாம்பிரதமம்புரஸ்தாத்விஸ்வாதிகோரத்ரோமஹர்ஷி: -
ஹிரண்யகர்பம்பஸ்யதஜாயமாநம் ஸநோபுத்யாசுபயா ஸம்யுநக்து

எல்லாவற்றிற்கு மேலோனும் மகருஷியாயு முள்ள எந்த உருத்திரன் தேவருள் முதலோனும் எதிரில் தோன்றுகின்றவனுமான இரண்யகர்ப்பனைப் பார்த்தானோ, அத்தேவன் நமக்குச் சுபமான ஞானத்தை யளிக்கட்டும்.

மாண்டுக்கியோபநிடதகாரிகை.

நிவர்தேஸ்ஸர்வது:காநா மீஶாந:பிரபுரவ்யய:

எல்லாத் துக்கங்களையும் துலைக்க அவ்வியயனான ஈசானனே சக்தியுடை யவன்.

சிகரிணீமாலை.

ஸுகம்தத்பூமாக்யம்நிரதிஶயமப்ராக்ருதமபிபிரஸாதாயத்தம்
தேகலுபவமஹாரோகபிஷஜ: - உபாயோத்ரஜ்ஞாநம்கலு
ஶிவவிஶுத்தாத்மவிஷயம்பிரஸாதே ஸத்யேவதிரிபுரஹாதே தச்சபவதி.

அலௌகிகமும் அழிவற்றதும் அகண்டமுமான அச் சுகமானது பிறப்பெனும் பெரும்பிணியைத் தீர்க்கும் வைத்தியரான தங்களது அருளுக்கு வசமன்றோ. இதற் குபாயம் சுத்தான்மஞானமன்றோ. ஓ திரிபுரஹரனான சிவனே அத்தகைய ஞானமும் தங்களது திருவருள் தோன்றியகாலத்தே சித்திப்பதாம்.

கந்தபகவானால் சனற்குமாரருக் கென்ற தனால், குருசிஷ்யபரம்பரையாகவே இந்நூல் வெளியிட வேண்டு மென்பதாயிற்று.

திருமந்திரத் திருமுறை.

வரும்வழி போமவழி மாயா வழியைக்
கருவழிக் கண்டவர் காணா வழியைப்
பெரும்வழி யாநந்திப் பேசும் வழியைக்
குருவழி யேசென்று கூடலு மாமே.-- என்பதனானுமறிக..

ஶ்லோகம்.

ஸனத்குமார: ப்ரோவாச வ்யாஸாய முனி ஸத்தமா:
மஹ்யம் க்ருபாதிரேகேண ப்ரத^{3}தௌ^{3} பா^{3}த^{3}ராயண: **(5)**

வியாக்யானம்: - மூநிஸத்தமா: - ஓ முனிவரர்களே, **ஸநத்குமார:** - சனத்குமாரர், **வ்யாசாய** - வ்யாஸருக்கு, **ப்ரோவாச** - உபதேசித்தார், **பாதராயண:** - வ்யாஸர், **க்ருபாதிரேகேண** - கருணையின் மிகுதியால், **மஹ்யம்** - என்பொருட்டு, **ப்ரததௌ** - அளித்தனர்.

பொழிப்புரை: - ஒ முனிவர்களே சனத்குமாரர் வியாஸருக் குபதேசித்தனர். வியாஸர் கருணையின் மிகுதியினால் என்பொருட் டளித்தனர்.

நுட்பம்: - இதனால் எவற்றையும் குருவழியே யறியவேண்டு மென்று கூறியதாயிற்று.

திருமந்திரம்.

குருவென் பவனே வேதாகமங் கூறும்
பரவின்ப னாகிச் சிவயோகம் பாவித்
தொருசிந்தை யின்றி யுயர்பாச நீக்கி
வருநல் குரவன்பால் வைக்கலு மாமே.

கடவல்லியோபநிடதம்.

பிரமாணம்: - (ப்ராப்பவராந்திபோதத:) பெரியோர்களை யடைந்து அறியுங்கள்.

(அநந்யப்ரோக்தேகதிராத்ரநரஸ்தி) - மற்றவர் உபதேசிக்காவிடில் கதி யிங்கில்லை என்பதாதி வாக்கியங்களாற் காண்க.

ஸ்லோகம்.

உக்தம் ச தேன கஸ்மைசித் ந தா³தவ்ய மித³ம் த்வயா
ஸூத புத்ராsந்யதா² தே³வா: க்ஷுப்⁴யம் ச ச⁵பந்தி ச (6)

வியாக்யானம்: - தேந - அவரால் அவ்வியாஸபகவானால், **உக்தம்ச** - கூறப்பட்டதாவது, **ஸூதபுத்ர** - ஓ சூதபுத்திரனே, **த்வயா** - உன்னால், **இதம்** - இக்கீதையானது, **கஸ்மைசித்** - எவருக்காவது (பரிபாகமற்ற எவனுக்காவது), **தாதவ்யம்** - கொடுக்கக்கூடியது, **ந** - அல்ல, **அந்யதா** - அல்லாவிடில், **தேவா:** - தேவர்கள், **க்ஷப்யந்தி** - கலக்கமுறுவார்கள், **சபந்தி** - சபிப்பார்கள்.

பொழிப்புரை: - அவ் வியாஸபகவானால் கூறப்பட்டதாவது, ஓ சூதபுதல்வனே உன்னால் இக்கீதையானது பரிபாகமற்ற எவனுக்காவது உபதேசிக்கக்கூடியதல்ல. அங்ஙனமல்லாது உபதேசித்தால் தேவர்கள் கலக்கமுறுவார்கள் அன்றியும் சபிப்பார்கள்.

நுட்பம்:- இக் கீதையானது அபக்குவர்க்கு உபதேசிக்கப்படாது. அபக்குவராவா,

திருமந்திரம்.

மன்னுமல மைந்து மாற்றும் வகையோரான்
றுன்னிய காமாதி தோயுந்தொழி னீங்கான்
பின்னிய பொய்யன் பிறப்பிறப் பஞ்சாதா
னன்னிய னாவ னசற்சீட னாமே. - என்றதனாற்காண்க.

இனிப் பரிபாக மற்றவருக்கு இக்கீதையை யுபதேசித்தால் தேவர்கள் சபிப்பதேன் எனின் அதன் காரணத்தைப் பின் கூறுகின்றார்.

ஸ்லோகம்.

அத² ப்ருஷ்டோ மயா விப்ரா: ப⁴க³வான் பா³த³ராயண:
ப⁴க³வன் தே³வதா: ஸர்வா: கிம் க்ஷப்⁴யந்தி ச⁵ப்ந்தி ச (7)

வியாக்யானம்: - விப்ரா: - விப்பிரர்களே, **அத** - பிறகு, **பகவான்** - பகவானான, **பாதராயண:** - வியாஸர், **மயா** - என்னால், **ப்ருஷ்ட:** - கேட்கப்பட்டார், **பகவன்** - ஒபகவனே, **ஸர்வா: தேவதா:** - எல்லாத் தேவர்களும், **கிம்** - ஏன், க்ஷுப்யந்தி - கோபம் கொள்கின்றனர், **ஶபயந்திச** - ஏன் சபிக்கின்றனர்.

பொழிப்புரை: - ஓ விப்பிரர்களே பிறகு பகவானான வியாஸர் என்னால் கேட்கப்பட்டார் அதாவது எல்லாத் தேவர்களும் ஏன் கோபிக்கின்றார்கள் ஏன் சபிக்கின்றார்கள்.

ஶ்லோகம்.

தாஸா மத்ராஸ்தி கா ஹானி: யயா குப்யந்தி தே^{3}வதா:
பாராச^{5}ர்யோத2 மாமாஹ யத்ப்ருஷ்டம் ச்^{5}ருணு வத்ஸ! தத் (8)

வியாக்யானம்: - தேவதா: - தவர்கள், **யயா** - எதனால் (எந்தக் கீதை யுபதேசத்தால்,) **குப்யந்தி** - கோபிக்கின்றனரோ, **அத்ர** - இக்கீதை யுபதேசத்தில், **தாஸாம்** - அத்தேவர்களுக்கு, **ஹாநி:** - கெடுதி, **காஅஸ்தி** - யாதுளது, **அத** - பிறகு, **பாராசர்யா** - வியாஸர், **மாம்** - என்னை, (நோக்கி) **ஆஹ** - கூறினார், **வத்ஸல** - ஓ வச்சலனே, **யத்** - யாதொன்று, **ப்ருஷ்டம்** - (உன்னால்) கேட்கப்பட்டதோ, **தத்** - அதை, **ச்ருணு** - கேட்பாயாக.

பொழிப்புரை: - தேவர்கள் யாதொரு கீதை யுபதேசத்தால் கோபிக்கின்றனரோ, அக்கீதை யுபதேசத்தில் அவர்களுக்குக் கெடுதி யாதுளது. அதற்கு வியாஸர் எனக்குரைத்ததாவது, ஓ வச்சலனே யாதொன்று உன்னால் வினவப்பட்டதோ அதைக் கேட்பாயாக

ஶ்லோகம்.

நித்யாக்^{3}னி ஹோத்ரிணோ விப்ரா: ஸந்தி யே க்^{3}ருஹமேதி^{4}ன:
த ஏவ ஸர்வ ப^{2}லதா^{3}: ஸுராணாம் காமதே^{4}னவ: (9)

வியாக்யானம்: - க்ருஹமேதின: - கிருஹஸ்தாச்ரமிகளான, **யே விப்ரா:** - எந்த அந்தணர்கள், **நித்யாக்நிஹோத்ரிண:** - நியதமாய் அக்நிஹோத்திரம் செய்கின்றவர்களாய், **ஸந்தி** - இருக்கின்றனரோதே, **ஏவ** - அவர்களே, **ஸுராணாம்** - தேவர்களுக்கு, **ஸர்வபலதா:** - எல்லாப் பலன்களையும் கொடுக்கும், **காமதேநவ:** - காமதேனுக்களாம்.

பொழிப்புரை: - கிருஹஸ்தாச்ரமிகளான, எந்த வந்தணர்கள் நியதமாய் அக்நிஹோத்திரம் செய்கின்றவர்களா யிருக்கின்றனரோ, அவர்கவே தேவர்களுக்கு எல்லாப் பயன்களையும் கொடுக்கும் காம தேனுக்களாம்.

நுட்பம்: - இங்குக் கருமிகள் செய்யும் வேள்விகள் தேவர்களுக்கு நல்லுணவாதவின் எல்லாப் பயன்களையும் கொடுக்கும் காமதேனுக்கள் என்று சிறப்பித்துக் கூறப்பட்டதறிக.

ஶ்லோகம்.

ப^{4}க்ஷயம் போ^{4}ஜயஞ்ச பேயஞ்ச யத்^{3}யதி^{3}ஷ்டம் ஸுபர்வணாம்
அக்^{3}நௌ ஹுதேன ஹவிஷா தத் ஸர்வம் லப்^{4}யதே தி3வி (10)

பக்கம் 32

வியாக்யானம்: - பக்ஷயம் - புசிக்கப்படுவதும், (கலத்திலிடாது புசிக்கப்படுவதும், போஜ்யம்ச - கலத்திலிட்டுப் புசிக்கப்படுவதும், **பேயம்ச** - அருந்தப்படுவதுமான, **யத் யத்** - யாது யாது, **ஸுபர்வணாம்** - தேவர்களுக்கு, **இஷ்டம்** - விரும்பப்படுகின்றதோ, **தத்** - ஸர்வம் - அஃதெல்லாம், **அக்நௌ** - நெருப்பில், **ஹுதோ** - ஒமம்செய்யப்பட்ட, **ஹவிஷா** - அவிர்ப்பாகத்தால், **திவி** - தேவலோகத்தில், **லப்யதே** - அடையப்படுகின்றது.

பொழிப்புரை: - கலத்திலிடாது புசிக்கப்படுவதும் கலத்திலிட்டுப் புசிக்கப் படுவதும் அருந்தப் படுவதுமாகிய யாது யாது தேவர்களால் விரும்பப்படுகின்றதோ அவையெல்லாம் நெருப்பில் ஒமம் செய்யப்பட்ட அவிர்ப்பாகத்தால் தேவலோக த்தில் அடையப்படுகின்றது.

ஶ்லோகம்.

நான்யத^{3}ஸ்தி ஸுரேசா^{5}னா மிஷ்டஸித்^{3}தி^{4}ப்ரதம் தி^{3}வி
தோ^{3}க்^{3}த்^{4}ரீ தே^{4}னுர் யதா^{2} நீதா து^{3}:க^{2}தா^{3} க்^{3}ருஹமேதி^{4}னாம் (11)

வியாக்யானம்: - ஸுரேசா^{5}னாம் - தேவர்களுக்கு, **தி^{3}வி** - சொர்க்கத்தில், **இஷ்டஸித்^{3}தி^{4}ப்ரதம்** - விருப்பப்பட்டதைச் சாதித்துக் கொடுப்பது, **அந்யத் நாஸ்தி** - மற்றதில்லை, **யதா^{2}** - எங்ஙனம், **தோ^{3}க்^{3}த்^{4}ரீ** - நற்கரவையுள்ள, **தே^{4}னு** - பசுவானது, **நீதா** - (மற்றவர்களால்) கைப்பற்றப்பட்டதாயின், **க்^{3}ருஹமேதி^{4}னாம்** - கிருஹஸ்தர்க ளுக்கு, **து^{3}:க^{2}தா^{3}** - துக்கத்தைக் கொடுப்பதோ.

பொழிப்புரை - தேவர்களுக்குச் சொர்க்கத்தில் விரும்பப்பட்டதைச் சாதித்துக் கொடுப்பது மற்றேதுமில்லை. எங்ஙனம் நற்கரவையுள்ள பசு மற்றவரால் கவரப்படின் கிரகஹ்தர்களுக்குத் துக்கத்தின் பொருட்டாகின்றதோ.

ஶ்லோகம்.

தைதை²வ ஞாவவான் விப்ரோ தே³வானாம் து³:க²தோ³ ப⁴வேத்
த்ரித³ஶாஸ்தேன விக்⁴னந்தி ப்ரவிஷ்டா விஷடபம் ந்ருணாம் (12)

வியாக்யானம்: - தைதை²வ - அங்ஙனமே, **ஞாவவான்** - ஞானவானான, விப்ர: - அந்தணன், **தேவாநாம்** - தேவர்களுக்கு, **து³:க²த³:** - துக்கத்தைக் கொடுக்கின்றவன், **ப⁴வேத் -** ஆவான், **தேன** - ஆதலால், **த்ரித³ஶா** - தேவர்கள், **ந்ருணாம்** - மனிதர்களது, **விஷயம்** - (மங்கை புதல்வராதி) விஷயத்தை, **ப்ரவிஷ்டா** - பிரவேசித் தவர்களாய் நின்று, **விக்⁴னந்தி** - இடையூறு செய்கின்றார்கள்.

பொழிப்புரை: - அங்ஙனமே ஞானவானாகிய வந்தணன் தேவர்களுக்குத் துக்கவேதுவாகின்றான். ஆதலால் தேவர்கள் மனிதர்களது மங்கை புதல்வராதி விஷயங்களில் பிரவேசித்தவர்களாய் நின்று இடையூறு செய்கின்றார்கள்.

நுட்பம்: - இங்கு, கருமங்களைப் புரிவோர்க்கே தேவரிடம் பத்தியுதிக்கும்; வைராக்கியத்தைப் பெற்று விஷயாதிகளை வெறுத்துத்தள்ளி யுபாஸனை செய்வோருக்குச் சிவனிடம் பத்தி யுதிக்குமே யன்றி மற்றேது மிராதாதலின் இத்தகைய வைராக்கியமுடையோன் தேவப்பிரீதி யேதுவான கருமங்களைச் செய்யாதது பற்றித் தேவர்களுக்குத் துக்க ஏதுவாகின்றான் என்று கூறப்பட்டது. கிருகஸ்தனுக்குச் சுகவேதுவான பசுவை எவனாவது கைப்பற்றி விடுவானாகில், அதனால் அவர்களுக்குத் துன்ப முண்டாவது போலவே தேவர்களுக்குஞ் சுகவேதுவான கருமத்தைப் பெரிதாய் நினைக்காது ஞானத்தையே பெரிதென்று நினைத்துத் தேவப் பிரீதியைச் செய்யாதவன் துன்பவேதுவாவான் என்பது காண்க.

ஶ்லோகம்.

ததோ ந ஜாயதே ப⁴க்தி: ஶிவே கஸ்யாபி தே³ஹின:
தஸ்மாதவித³ஷாம் நைவ ஜாயதே ஶூலபாணின: (13)

வியாக்யானம்: - தத: - ஆதலால், **கஸ்ய அபி தே³ஹின:** - (ஞான மார்க்கஞ் சென்ற எம் மனிதனுக்கும்), **ஶிவே** - சிவனிடம், **பக்தி:** - பத்தியானது, **நஜாயதே** - உண்டாகின்றதில்லை, **தஸ்மாத்** - ஆனதுபற்றியே, **அவிதுவாம்** - அறிவில்லாதவர் க்கும், **ஶூலபாணின:** - சூலபாணி விஷயமான (பத்தியானது), **நஏவஜாயதே** - உண்டாகின்றதே யில்லை.

பொழிப்புரை: - ஆதலால் ஞானமார்க்கஞ் சென்ற எம்மனிதனுக்கும் சிவனிடம் பக்தியானது உண்டாகின்றதில்லை. ஆனதுபற்றியே அறிவில்லா தவர்க்கும் சூலபாணி விஷயமான பக்தியானது உண்டாகிறதில்லை.

நுட்பம்: - இங்கு ஞான மார்க்கஞ் சென்ற எம் மனிதனுக்கும் என்றதனால் உறுதியான பக்தியில்லாமல் நற்பரிபாக மிராமல் ஞான மார்க்கஞ் சென்ற எம் மனிதற்குமென் றறிக. இனி ஞானமார்க்கஞ் செல்லுவதற்குச் சரியான பரிபாக மெதனால் வருமெனின் அதைக் கோடிஜந்மார்ஜிதை: புண்யை: சிவேபக்தி என்ற சுலோகத்தில் கூறுவதைப் பின்னர் கண்டு தெளிக.

ஶ்லோகம்.

யதா^{2} கத^{2}ஞ்சிஜ் ஜாதாsபி மத்^{4}யே விச்சி^{2}த்^{3}யதே ந்ருணாம்
ஜாதம் வாsபி ஶிவக்ஞானம் ந விஶ்வாஸம் ப^{4}ஜத்யலம் (14)

வியாக்யானம்: - ந்ருணாம் - மனிதருக்கு, **யதா^{2} கத^{2}ஞ்சித்** - எவ்விதமாவது (எப்புண்ணியத்தாலாவது), **ஜாதா அபி** - (பத்தி) உண்டாயினும், **மத்யே** - இடையில், **விச்சித்யதே** - சேதிக்கப் படுகின்றது (துலைகின்றது), **ஶிவக்ஞானம்** - சிவஞ்ஞாநமானது, **ஜாதம், வா, அபி** - உண்டாயினும், **அலம்** - போதுமான, விச்வாசம் - நம்பிக்கையை (க்கொடுக்குந் தன்மையை), நபஜதி - அடைவதில்லை.

பொழிப்புரை: - மனிதருக்கு எப்புண்ணியத்தாலாவது பக்தியுண்டானாலும் இடையில் (தேவர்களால்) துலைந்து விடுகின்றது; சிவஞானம் உண்டாயினும் அது போதுமானதா யேற்படுவதில்லை.

நுட்பம்: - பக்தியுண்டாயினும் இடையே (தேவர்களால்) துலைந்து விடுகின்ற சென்றதனால், பக்தியின் காரியமாகிய சிவதத்துவாராய்ச்சிக்கு முந்தியே துலைந்து விடுகின்த தென்பதறிக. இங்குச் சிவ ஞானம் உண்டாயினும் என்றதனால் உறுதியான பக்தியினால் உண்டாகு முண்மையான சிவஞான மல்லாமல், போலியா யுண்டாகுஞ் சிவஞானம் என்றறிக.

ருஷிகள் கேள்வி.

யத்^{3}யேவம் தே^{3}வதா விக்^{4}ன மாசரந்தி தநூ ப்^{4}ருதாம்
பௌரூஷம் தத்ர கஸ்யாஸ்தி யதா^{2} முக்திர் ப^{4}விஷ்யதி (15)

வியாக்யானம்: - **ஏவம்** - இங்ஙனம், **தேவதா**: - தேவர்கள், **தநூப்^{4}ருதாம்** - மனிதருக்கு, **விக்^{4}னம்** - இடையூறை, ஆசரந்தி, யதி, - செய்வார்களாயின், **யேந** - எந்தப் புருஷயத்தினத்தால், **முக்தி**: - முக்தியானது, **ப^{4}விஷ்யதி** - நிகழுமோ, **பௌருஷம்** - அத்தகைய பௌருஷயத்தமானது, **தத்ர** - இங்கு, **கஸ்ய** - யாருக்கு, **அஸ்தி** - உளது.

பொழிப்புரை: - இங்ஙனம் தேவர்கள் மனிதருக் கிடையூறுசெய்வார்களாயின் எந்தப் பிரயத்தினத்தினால் முக்திகிட்டுமோ அத்தகைய புருஷயத்தினமானது ஈங்கு எவனுக்குளது.

ஶ்லோகம்.

ஸத்யம் ஸூதாத்மஜ! ப்[3]ரூஹி தத்ரோபாயோsஸ்தி வா ந வா

ஸூத உவாச

கோடி ஜன்மார்ஜிதை: புண்யை: ஶிவே ப[4]க்தி: ப்ரஜாயதே (16)

வியாக்யானம்: - ஸூதாத்மஜ - சூதபுத்திரரே, **தத்ர** - இவ்விஷயத்தில், **உபாயோஸ்தி** - உபாயம் உளதா, **ந, வா** - இல்லையா, **ஸத்யம்** - உண்மையை, **ப்[3]ரூஹி** - கூறும் (என்றவுடன் சூதர்), **கோடி ஜந்மார்ஜிதை:** - அநேகப் பிறப்புகளில் சம்பாதிக்கப்பட்ட, **புண்யை:** - புண்ணியங்கனால், **ஶிவே** - சிவனிடம், **பக்தி:** - பத்தியானது, **ப்ரஜாயதே** - உண்டாகின்றது, (என்றனர்).

பொழிப்புரை: - ஓ சூத புத்திரரே இவ்விஷயத்தில் உபாயமுள்ளதா அல்லது இல்லையோ உண்மையைக் கூறு (மென்றவுடன் சூதர்) அநேகப் பிறப்புகளில் சம்பாதிக்கப்பட்ட புண்ணியங்களால் சிவனிடம் பக்தியுதிக்கின்றது.

இங்கு கோடி என்றதனால் அனேகம் என்றும், சிவ என்றதனால் துரீயம் என்று மறிக.

ஔவைக்குறள்.

பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சிக்கில்
நல்லறிவு சற்றே நகும். என்ற கருத்து மிது.

ஶ்லோகம்.

இஷ்டா பூர்தாதினி கர்மாணி தேனssசரதி மானவ:
ஶிவார்பண தி[3]யா காமான் பரித்யஜ்ய யதா[2]விதி[4] (17)

வியாகயானம்: - மானவ: - மனிதன், **தேன** - அச்சிவப்பிரஸாதத்தால், **இஷ்டா பூர்தாதி கர்மாணி** - வேள்வி சிவாலயம் கிணறு, அன்னசத்திரம், குளம், இவைகளாதியை நிருமித்தல் முதிலிய கருமங்களை, **காமான்** - பயனின் விருப்பத்தை, **பரித்யஜ்ய** - விடுத்து, **சிவார்ப்பணதியா** - சிவன் பொருட்டென்ற எண்ண எண்ணத்தோடு, **யதா[2]விதி[4]** - விதிப்படி, **ஆசரதி** - செய்கிறான்.

பொழிப்புரை: - மனிதன் அச் சிவப்பிரசாதத்தாலேயே வேள்வி, சிவாலயம், கிணறு, அன்னசத்திரம், குளம். இவைகளை நிருமித்தல் முதலிய கருமங்களின் பயனை, விரும்பாது சிவன் பொருட்டென்ற வெண்ணத்தோடு விதிப்படி செய்கின்றன்.

ஶ்லோகம்.

அனுக்³ரஹாத் தேன ஶம்போ⁴: ஜாயதே ஸுத்³ருடோ⁴ நர:
ததோ பீ⁴தா: பாலாயந்தே விக்⁴னம் ஹித்வா ஸுரேஶ்வரா: (18)

வியாக்யானம்: - தேந - அதனால், **ஶம்போ⁴:** - சம்புவினது, **அனுக்³ரஹாத்** - அநுக்கிரவறத்தினால், **நர** - மனிதன், **ஸுத்ருட:** - சலியாச்சித்தமுடையவனாக, **ஜாயதே** - ஆகின்றான், **தத:** - ஆதலால், **ஸுரேஶ்வரா:** - தேவர்கள், **விக்நம்** - இடையுறை, **ஹித்வா** - விடுத்து, **பீ⁴தா:** - பயந்தவர்களாய், **பலாயந்தே** - ஓட்டம் பிடிக்கின்றார்கள்.

பொழிப்புரை: - அதனால் சிவாநுக்கிரஹத்தால் மனிதன் சலியாத சித்த முடையவ னாகின்றான். ஆதலால் தேவர்கள் விக்னம் செய்தலை விடுத்துப் பயம் கொண்டு ஓட்டம் பிடிக்கின்றார்கள்.

கருத்து: - கருமங்களைச் சிவன் பொருட்டு என்றே பயனை விரும்பாது செய்ய வேண்டு மென்பதாயிற்று.

ஶ்லோகம்.

ஜாயதே தேன ஶுஶ்ருஷா சரிதே சந்த்³ர மௌளின:
ஶ்ருண்வதோ ஜாயதே ஞானம் ஞானாதே³வ விமுச்யதே (19)

வியாக்யானம்: - தேன - ஆதலால், **சந்த்³ர மௌளின:** - சிவபெருமானது, **சரிதே** - சரித்திரத்தில், **ஶுஶ்ரூஷா** - கேட்கவிச்சை, **ஜாயதே** - உண்டாகின்றது, **ச்ருண்வதோ** - கேட்போனுக்கு, **ஞானம்** - ஞானமானது, **ஜாயதே** - உண்டாகின்றது, **ஞானாத், ஏவ,** - ஞானத்தினாலேயே, **விமுச்யதே** - முக்தியை யடைகின்றான்.

பொழிப்புரை: - ஆதலால் சிவபெருமானது சரித்திரத்தைக் கேட்க விச்சையுதிக்கின்றது ச்ரவணம் செய்தால் ஞானமுதிக்கின்றது; ஞானத்தினாலேயே முக்தி யடைகின்றான்.

நுட்பம்:- ஈண்டு ஆதலால் என்றதனால் தேவர்கள் இடையூறு செய்யாததனால் என்று அறிக. அதனால் தடையற்றுச் சிவபக்தி விருத்தியாக, அவனது மஹிமையை யறிய விரும்பிச் சிவமஹிமா விசாரம் செய்யவே ஞானம்

நிகழ்கின்றது ஞானத்தினாலேயே முக்தி யென்பது மூன்றாவது சுலோகத்தி னுரையில் விவரிக்கப்பட்டுளது. இனி ஞானமென்பது யாதெனின்? கூறுவாம்.

சூதஸம்ஹிதை யஞ்ஞவைபவகண்டம்.

பிரமாணம்: -

ஜ்ஞாநாநாம்ஸம்புவிஜ்ஞாநம் வரிஷ்டந்நேதரத்பவேத் வேதவாக்யஸமுத்பந் நம் ஶிவஜ்ஞாநம் நிரூபணே ஸம்யஜ்ஞாநம்மயாக்யாதம்

என்றதனால் சிவஞானமென்றே யறிக.

ஶ்லோகம்.

ப^{3}ஹுனாsத்ர கிமுக்தேன யஸ்ய ப^{4}க்தி: ஶிவே த்^{3}ருடா^{4}
மஹா பாபோபபாபௌக^{4} கோடிக்^{3}ரஸ்தோsபி முச்யதே (20)

வியாக்யானம்: - அத்ர - ஈண்டு, **பஹுநா, உக்தேந** - மிக்க உரைப்பதனால், **கிம்** - யாது உளது, **யஸ்ய** - எவனூர்கு, **சிவே** - சிவனிடம், **த்ருடா** - உறுதியான, **பக்தி**: - பக்தியானது உளதோ, (அவன்) **மஹாபாபோ பபாபௌக^{4} கோடிக் ரஸ்தோsபி** - பிரும்மஹத்தியாதி மகாபாதகங்களினதும் உபபாபங்களினதுமான கூட்டங்களில் பொருந்தினவனாயினும், **முச்யதே** - முத்தனாகின்றான்.

பொழிப்புரை: - ஈண்டு மிக்க வுரைப்பதனால் யாதுளது எவனுக்குச் சிவனிடம் உறுதியான பக்தியுளதோ, அவன் எத்தகைய பாவங்களினின்றும் நீங்கி முத்தியடைகின்றான்.

திருமந்திரம்.

சிவசிவ வென்றிடத் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்றிடச் சிவகதி தானே. என்றதனாற் காண்க.

ஶ்லோகம்.

ரித்^{3}த^{4}ம் கிஞ்சித் ஸமாதா^{3}ய கூஷுல்லகம் ஜலமேவ வா
யோ த்^{3}த்தே நியமேநாஸௌ தஸ்மை த்^{3}த்தே ஜக^{3}த் த்ரயம் (21)

வியாக்யானம்: - ரித்³த⁴ம் கிஞ்சித் - சிறப்புற்ற எதையாவது, **க்ஷுல்லகம்** - அற்பமானதையாவது, **ஜலம் ஏவ வா** - ஜலத்தையே யாவது, **ஸமாதாய** - எடுத்து, **ய:** - எவன், **நியமோ** - நியதமாய், **தத்தே** - (சிவன்பொருட்டு) கொடுக்கின்றானோ, **அஸௌ** - இச்சிவ பெருமான், **தஸ்மை** - அவன் பொருட்டு, **ஜகத்ரயம்** - மூவுலகத்தையும், **தத்தே** - அளிக்கின்றார்.

பொழிப்புரை: - சிறப்புற்றதா யெதையாவது யல்லது அற்ப மானதையாவது அல்லது ஜலத்தையாவது எடுத்து எவன் நியதமாய்ச் சிவபெருமானிடம் சமர்ப்பிக் கின்றானோ. அவனுக்கு அவ்விறைவன் மூவுலகையும் அளித்தருளுகின்றார்.

திருமந்திரம்.

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ண லாரதுகண் டருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிக ளெம்மிறை யீசனை
நண்ணறி யாம னழுவுகின் றாரே.

ஶ்லோகம்.

தத்ராப்யச⁵க்தோ நியமான் நமஸ்காரம் ப்ரத³க்ஷிணம்
ய: கரோதி மஹேஶஸ்ய தஸ்மை துஷ்டோ ப⁴வேச்சி²வ: (22)

வியாக்யானம்: - தத்ர அபி - அதிர்கூட, **அரக்த** - சக்தியற்றவனாகிய, **ய:** - எவன், **நியமாத்** - நியமமாக, **மஹேஶஸ்ய** - மகேச்சுரனுக்கு, **நமஸ்காரம்** - கீழ் விழுந்து வணங்குதலையும், **ப்ரதக்ஷிணம்** - சுற்றிவரு தலையும், **கரோதி** - செய்கின்றானோ, **தஸ்மை** - அவனிடம், **சிவ:** - சிவ பெருமான், **துஷ்ட:** - திருப்தியுடையவராக, **பவேத்** - ஆவார்.

பொழிப்புரை: - அதனில் கூட சத்தியிராது எவன் சிவபெருமானுக்கு நியமமாய்ப் பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்கின்றானோ அவனிடம் அவ்விறைவன் திருப்தியுள்ளவராகின்றார்.

ஶ்லோகம்.

ப்ரத³க்ஷிணாஸ்வஶக்தோऽபி ய: ஸ்வாந்தே சிந்தயேச்சி²வம்
க³ச்ச²ன் ஸமுபவிஷ்டோ வா தஸ்யாபீ⁴ஷ்டம் ப்ரயச்ச²தி (23)

வியாக்யானம்: - ப்ரத³க்ஷிணாஸு - ப்ரதக்ஷிணங்களில், **அபி** - கூட, **அசக்த:** - சக்தியற்றவனான, **ய:** - வன், **க³ச்ச²ன்** - நடந்து கொண்டே யாவது, **ஸமுபவிஷ்டோ வா** - உட்கார்ந்துகொண்டேயாவது, சிவம் - சிவனை, **ஸ்வாந்தே**

- மனதினில், **சிந்தயேத்** - சிந்திப்பானோ, **தஸ்ய** - அவனுக்குச் (சிவன்), **அபீ⁴ஷ்டம்** - விரும்பிய பொருளை, **ப்ரயச்ச²தி** - அளித்தருளுகின்றார்.

பொழிப்புரை: - ப்ரதக்ஷிணங்களிற் கூடச் சத்தியற்ற எவன் நடந்துகொண்டே யாவது உட்கார்ந்துகொண்டேயாவது சிவனை மனதினில் சிந்திப்பானேயாகில் சிவ பெருமான் அவனுக்குக் கோரும் பொருளைக் கொடுத்தருளுகின்றார்.

திருக்கருவையந்தாதி.

இருக்கினு நிற்கும் போது மிரவுகண் டுயிலும் போதும்
பொருக்கென நடக்கும்போதும் பொருந்தியூண்டுய்க்கும்போதும்
முருக்கிதழ் கனிவா யாரை முயங்கிநெஞ் சழியும் போதும்
திருக்களா வுடைய நம்பா சிந்தையுன் பால தாமே.

என்றதானுங் காண்க.

ஶ்லோகம்.

சந்த³னம் பி³ல்வகாஷ்ட²ஸ்ய புஷ்பாணி வனஜான்யபி
ப²லானி தாத்³ருசான்யேவ யஸ்ய ப்ரீதிகராணி வை **(24)**

வியாக்யானம்: - யஸ்ய - எவருக்கு, **பில்வகாஷ்டஸ்ய சந்தனம்** - வில்வக்கட்டையின் சந்தனமும், **வநஜாநி** - கானகத்திற் றோன்றிய, **புஷ்பாணி** - புஷ்பங்களும், **அபி** - மலர்களும், **வநஜாநி** - காட்டிலுள்ள, **பலாநி ஏவ** - பழங்களுமே, **ப்ரீதிக ராணிவை** - திருப்தியை யுண்டு பண்ணுவனவோ.

பொழிப்புரை: - எவனுக்கு வில்வக்கட்டையின் சந்தனமும் கானகத்திற் றோன்றிய மலர்களும் கானகப் பழங்களுமே திருப்தியை யுண்டு பண்ணுவனவோ. இங்குக் கானகத்திற்றோன்றிய பழங்களென்றது விளா, நெல்லி, நாவல், இலந்தை முதலிய சிவநிவேதனத்திற்குரிய கனிகள் என்றறிக.

ஶ்லோகம்.

துஷ்கரம் தஸ்ய ஸேவாயாம் கிமஸ்தி பு⁴வன த்ரயே
வன்யேஷு யாத்³ருஶீ ப்ரீதி: வர்ததே பரமேஶிது: **(25)**

வியாக்யானம்: - தஸ்ய - அச் சிவபெருமானது, **ஸேவாயாம்** - பூசையில், **துஷ்கரம்** - செய்யக்கூடாதது, **புவனத்ரயே** - மூவுலகிலும், **கிம் அஸ்தி** - யாது உளது, **பரமேஶிது:** - சிவபெருமானுக்கு, **வன்யேஷு** - கானகத்திலுள்ள பூஜோபகர ணங்களில், **யாத்³ருசீ** - எங்ஙனம், **ப்ரீதி:** - பிரியமானது, **வர்த்தே** - உளதோ.

பொழிப்புரை: - அச் சிவபெருமானது பூஜாவிஷயத்தில் சாத்தியமல்லாதது, மூவுலகிலும் யாதுளது; சிவபெருமானுக்குக் கானகத்திலுள்ள பூஜோபகரணங்களில் எங்கனம் பிரீதியுளதோ.

ஶ்லோகம்.

உத்தமேஷ்வபி நாஸ்த்யேவ க்³ராமஜேஷ்வபி தாத்³ருஶீ
தம் த்யக்த்வா தாத்³ருஶம் தே³வம் ய: ஸேவேதாऽன்ய தே³வதாம்

(26)

வியாக்யானம்: - க்³ராமஜேஷு - கிராமங்களிற் றோன்றிய, **உத்தமேஷு அபி** - சிறந்தவைகளான (பூ கனி முதலியவைகளிலும்), **தாத்ருஶீ** - அங்ஙனம் (பிரீதியான து), **நாஸ்தியேவ** - இல்லவேயில்லை, **தாத்ருஶம்** - அங்ஙனம் அற்ப சமர்ப்பணத்தி னாலேயே அபாரமானப் பிரீதியுடையோனாகிய, **தம் தேவம்** - அத்தேவனை, **த்யக்த் வா** - விடுத்து, **ய:** - எவன், **அன்யதே³வதாம்** - இதர தேவதையை, **ஸேவேத** - சேவிப்பவனோ.

பொழிப்புரை: - கிராமங்களிற் றோன்றிய சிறந்த பூ கனிகளிலும் அவ்வளவு பிரீதி யில்லவே யில்லை. அங்ஙனம் அபாரகருணாநிதியான அத்தேவனை விடுத்து எவன் இதரதேவதையை உபாசிக்கின்றானே.

ஶ்லோகம்.

ஸ ஹி பா⁴கீ³ரதீ²ம் த்யக்த்வா ஸேவதே ம்ருக³ த்ருஷ்ணிகாம்
கிந்து யஸ்யாஸ்தி து³ரிதம் கோடிஜந்மஸு ஸஞ்சிதம் **(27)**

வியாக்யானம்: - ஸ: - அவன், **பாகீரதீம்** - கங்காநதியை, **த்யக்த்வா** - விடுத்து, **ம்ருக³ திருஷ்ணிகாம்** - கானனீரை, **காங்க்ஷதெஹி** - விரும்புகின்றானன்றோ, **கிம் து** - மற்றோவெனின், **யஸ்ய** - எவனுக்கு, **கோடி - ஜந்மஸு ஸஞ்சிதம்** - அநேகப் பிறப்புகளிற்சம்பாதிக்கப்பட்ட, **துரிதம்** - பாவமானது, **அஸ்தி** - உளதோ.

பொழிப்புரை: - அவன் கங்காநதியை விடுத்துக் கானனீரை விரும்புகின்றவ னன்றோ மற்றோவெனின் எவனுக்கு அநேகப்பிறப்புகளில் சம்பாதிக்கப்பட்ட பாவமுளதோ.

நுட்பம்: - அற்ப பூஜையாலேயே மிக்க கருணை கூரும் சிவபெருமானை விடுத்து வேறு தெய்வத்தை யுபாஸித்தல் கங்காநதியை விடுத்துக் கானனீரை விரும்புதலுக் கொப்பாகும்.

இத்தகையரையே, உமாபதிசிவம்.

நெற்குத்துண்ணா துமிகுத்திக் கைவருந்திக் கறவை நிற்க, மலடுகறந் துளந்தளர்ந்து குளிர் பூஞ்சோலை வழியிருக்கக் குழியில்வி ழுந் தளறு பாய்ந்து, விலைதருமென் கரும்பிருக்க விரும்பைமென்று விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்து நொந்தார்.- எனத் திருவாய்மலர்ந் தருளினர்.

ஶ்லோகம்.

தஸ்ய ப்ரகாஶதே நாய மர்த்தோ[2] மோஹாந்த[4] சேதஸ:
ந கால நியமோ யத்ர ந தே[3]ஶஸ்ய ஸ்த[2]லஸ்ய ச (28)

ஶ்லோகம்.

யத்ராஸ்ய சித்தம் ரமதே தத்ர த்[4]யானேன கேவலம்
ஸ்வாத்மத்வேன ஶிவஸ்யாஸௌ ஶிவ ஸாயுஜ்ய மாப்னுயாத் (29)

வியாக்யானம்: - தஸ்ய மோஹாந்த[4] சேதஸ: - அந்த அஞ்ஞான விருளால் மூடப்பட்ட மனதுடையவனுக்கு, **அயம்** - இந்த, **அர்த்த:** - தத்துவமானது, **ந ப்ரகாஶதே** - விளங்குகிறதில்லை. யத்ர எவ்விறைவனது விஷயமாக, **காலநியம்** - காலநியமும் (இக்காலமே யிவருக்குரியது) என்பதும், **ந** - இல்லையோ, **தேசஸ்ய** - தேசத்தினுடையதும், **ஸ்தலஸ்ய ச** - இருக்கும் ஸ்தாநத்தினுடையதுமான, நியமமும், **ந** - இல்லையோ, **அஸ்ய** - இவனது, **சித்தம்** - மனமானது, **யத்ர** - எவ்விடத்தில் எக்காலத்தில், **ரமதே** - உருசிக்கின்றதோ, **தத்ர** - அத்தேச காலங்களில், **சிவஸ்ய** - சிவனை, **ஸ்வாத்மத்வேன** - தானாக கேவலம், **த்யானேன** - தியானத்தினாலேயே, **அஸௌ** - இங்ஙனம் தியானிக்கும் மனிதன், **சிவஸாயுஜ்யம்** - சிவஸாயுஜ்ஜிய முத்தியை, **ஆப்நுயாத்** - அடைவான்.

பொழிப்புரை: - அஞ்ஞான இருளால் மூடப்பட்ட மனதுடையவனுக்கு இத்தத்துவமானது விளங்குகின்றதில்லை எவ்விறைவனது விஷயமாய்க் காலதேச விருப்பிடங்களின் நியமமில்லையோ இவனது மனமானது எத்தேச காலங்களில் உருசிக்கின்றதோ அத்தேச காலங்களில் சிவனைத் தானாகவே தியானிப்பதினாலே யே இங்ஙனம் தியானிப்பவன் சிவஸாயுச்சியத்தை யடைகின்றான்.

நுட்பம்: - ஈண்டுச் சிவனைத் தானாக வென்றதனால் சிவோகம் பாவனை விதிக்கப்பட்டதறிக அற்றேல் சருவஞ்ஞனான சிவபெருமானைத் தானாகப் பாவித்த லொவ்வுமோ வெனின் சிவோகம் பாவனை யளவிலடங்கா மஹிமையுடையதாத லின் குற்றமின்றென்க.

சிவோகம் பாவனையாவது கருடோகம் பாவனை போலும், கருடோகம் பாவனை யாவது மாந்திரிகன் ஆதிதைவிக கருடனை நாடோறும் பயின்று வந்த பயிற்சி விசேடத்தால் அம்மந்திர ரூபமே தானாக அநந்நியபாவனை செய்து தன்னறிவு அதன் வயத்த தாம்படி உறைத்து நிற்றல். அவ்வாறு நின்று அம் மந்திரக்கண் கொண்டு பார்ப்பவே அஃது அவ்விட வேகத்தைமாற்றுதல் ஒரு தலையாகலின் அப்பாவனை ஈண்டைக் குவமையாயிற்று. (இது திராவிடமகா பாஷ்யத்திற் கண்டது.)

தரிசநோபநிடதம்.

ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விஸ்வரூபம்மஹேஸ்வரம்
ஸோஹமித்யாதரேணைவ த்யாயேத்யோகீஸ்வரேஸ்வரம்

மேனோக்கிய ரேதசுவுடையவனும் நெற்றிக்கண்ணனும் விச்வரூபனும் யோகீச் சுரர்களால் சேவிக்கப் படுகிறவனும் ஆகிய சிவபெருமானை அவனே யான் என்று ஆதரவுடன் தியானிக்கவேண்டும்.

உருத்திர இருதய உபநிடதம்.

அதிஷ்டாநம்ஸமஸ்தஸ்ய ஜகதஸ்ஸத்யசித்கநம்
அஹமஸ்மீதிநிஸ்சித்ய வீதஸோகோபவேந்முநி:

எல்லா ஜகத்திற்கும் ஆதாரமாயும் மெய்ஞ்ஞான வடிவனும் ஆகிய இறைவன் யானே யாகிறேன் என்று மௌனியாய்த் தியானிப்பவன் சோகத்தைத் தாண்டுகின் றான்.

அமிருத பிந்தூபநிடதம்

ததேவம்நிஷ்களம்ப்ரஹ்ம நிர்விகல்பம்நிரஞ்ஜநம்
தத்ப்ரஹமாஹமிதிக்ஞாத்வா ப்ரஹ்மஸம்பத்யதேத்ருவம்
நிஷ்களமும், நிருவிகல்பமும், நிரஞ்சனமுமானபிரமம் அஃதே. அப்பிரமமாஞ் சிவனை யான் என்று அறிந்து சிவனை யடைகின்றான்.

தேஜோபிந்தூபநிடதம்.

ஸர்வவ்யாபாரமுத்ஸ்ருஜ்ய அஹம்ப்ரஹ்மேதிபாவய
அஹம்ப்ரஹ்மாஸ்மிமந்த்ரோயம் ஜ்ஞாநாநந்தம்ப்ரயச்சதி

எல்லா வியாபாரத்தையும் விடுத்து யானே சிவனென்று பாவனை செய்க, யானே சிவனெனும் இம்மந்திரம் ஞானாநந்தத்தை யளித்தருளும்.

திரிசிகிப்பிராம்மணோபநிடதம்.

அஹமேவபரம்ப்ரஹ்ம ப்ரஹ்மாஹமிதிஸம்ஸ்திதி:
ஸமாதிஸ்ஸதுவிஜ்ஞேய:

யானே பரனான சிவன் சிவனே யான் என்ற பாவனையே ஸமாதி யென்றறியத் தக்கது.

தக்ஷிணாமூர்த்தி யுபநிடதம்.

ஸோஹமிதியாவதாஸ்திதிஸ்ஸா நிஷ்டாபவதி

அவனே யான் என்றிருக்கும் வரையில் நிஷ்டையாகும்.

கந்தோபநிடதம்.

த்யஜேதஜ்ஞா நநிர்மால்யம் ஸோஹம்பாவேநபூஜயேத்.

அஞ்ஞானத்தைத் தொலைக்கவேண்டும் (சோஹம் பாவனை) அவனே யானென்ற பாவனையால் பூஜிக்க வேண்டும்.

சாண்டில்லியோபநிடதம்.

உபாஸ்தேஸோஹமிதிஸப்ரஹ்மவித்பவதி

அவனே யானென்று உபாஸிப்பவன் சிவஞானியாகின்றான்.

பைங்களோபநிடதம்.

அஹம்ப்ரஹ்மாஸ்மீத்ய நுஸந்தாநம்குர்யாத்

யானே சிவனாகின்றேனென்று அநு சந்தானம் செய்ய வேண்டும்.

மஹோபநிடதம்.

ப்ரஹ்மைவாஹமிதிஜ்ஞாத்வாவீதஸோகோபவேந்முநி:

சிவனே யானென்றறிந்த முனிவன் துக்கத்தைத் தாண்டுகின்றான்.

அந்நபூர்ணோபநிடதம்.

தத்வித்யா விஷயம்ப்ரஹ்ம ஸத்யஜ்ஞாநஸுகாத்வயம்
ஏகம்ப்ரஹ்மாஹமஸ்மீதி க்ருதக்ருத்யோபவேந்முநி:

வித்தைக்கு விஷயமானவனும் உண்மையறிவானந்தனும் அத்துவயனும் ஏகனுமான (பிரமமே) சிவனே யானென்று கிருதகிருத்தியனாகின்றான்.

துரீயாதீதாவ தூதோபநிடதம்.

அஹம்ப்ரஹ்மேதிவிஜ்ஞாநாத் கல்பகோடிபதார்ஜிதம்
ஸஞ்சிதம் விலயம் யாதி

யானே சிவன் என்ற தியானத்தால் அநேக கற்பங்களிற் சம்பாதிக்கப்பட்டுள்ள கருமங்கள் துலைகின்றன என்பதாதியுபநிடதங்களாலும்,

ஸர்வஞானோத்தரவாகமம்.

யஶ்ஶிவஸ்ஸோஹமேவேதி அத்வயம்பாவயேத்ஸதா

யாதொரு சிவன் யானே யென்று ஐக்கியப்பாவனை செய்க.

தேவிகாலோத்தரம்

அஹமேவபரம்ப்ரஹ்ம ஜகந்நாதோமஹேஶ்வர:
இதிஸ்யாந்நிஶ்சிதோமுக்த:

ஜகந்நாதனும்பரப்பிரும்மமுமான மஹேச்சுரன் யானே என்று நிச்சயிப்பவன் முக்தனாகின்றான்.

இங்ஙனமே சதுர்வேத தாத்பர்ய ஸங்கிரகமூலமாம் ச்ருதி ஸூக்திரத்திந மாலையில், ஸ்ரீ மகா விஷ்ணுவைப் பரமென்று வேதம் பிரதி பாதித்ததற்குக் காரணம் கூறியவிடம்.

சதுர்வேததாற்பர்ய ஸங்கிரக ச்ருதிசூக்திரத்நமாலை.

ப்ரஹ்மோச்யதேபரமஸள பரமஞ்சதத்வம் ஜ்யோதி: பரஞ்சபரமேஶ்வர பத்ம நாப: - த்வத்பாவநைகபஜநாத்தவ தநந்யபாவாந்மந்தரீயதாகருட பாவநயாகருக்மாந்.

ஓ பரமேசுவரனே, கருடமந்திர உபாஸகன் கருடபாவனையால் எங்ஙனம் கருடத்தன்மை பெறுகின்றானோ அதுபோல உம்மிலும் அந்நியன் என்ற பாவனை

யை விட்டு உம்மோடு ஐக்கியபாவனையை ஏகாக்கிரமாய்ச் செய்ததனால் இப்பதும நாபனான திருமால் பரப் ப்ரும்மமென்றும் பரமதத்துவ மென்றும் பரஞ்சோதி யென்றும் கூறப்படுகின்றார் என்று சிவோகம்பாவனை மஹிமையாலேயே மஹா விஷ்ணுவை வேதமானது பரம் என்றும் சோதியென்றும் வழங்குகின்றது என்பதாதிப் பிரமாணங்களாலும்,

திருவாசகம்.

சிவனென யானும் தேறினன் காண்க.

எனும் திராவிட வேதத்தானும்,

திருமந்திரம்.

கருட னுருவங் கருது மளவிற்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோற்
குருவி னுருவங் குறித்தவப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே.

எனும் திருமந்திர மாலையானும்,

சிவஞானசித்தியார்.

கண்டவிவை யல்லேனா னென்றகன்று காணாக்
கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டினொடு முளத்தவன்றா னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்று வன்வே றன்றி
விண்டகலு மலங்களெல்லாங் சருடதியா னத்தின்
விடமொழியு மதபோல விலதைட மடையும்
பண்டைமறை கருமதநா னை னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே.

எனுந் திராவிடோபநிடதத்தானும் காண்க.

ஸ்லோகம்.

அதி ஸ்வல்பதராயு ஶ்ரீர் பூ[4]தேஶாம்ஶாதி[5]போ꞉பி ய꞉
ஸ து ராஜாஹமஸ்மீதி வாதி[3]னம் ஹந்தி ஸான்வயம் (30)

வியாக்யானம்: - பூதேஶாம்ஶாதிபோபி - மனிதனுக்கு அதிபனாயுள்ளவனும், **அதிஸ்வல்ப்பதராயஶ்ரீ**: - மிக்க வற்பமானவாயுளையும் செல்வத்தையு முடையோனுமாய், **ய:** - யாதொருவனுளனோ, **ஸ:து** - அவனோவெனின், **அஹம்** - யான், **ராஜா அஸ்மீ இதி** - அரசனாகின்றேனென்று, **வாதினம்** - சொல்லுகின்ற வனை, **ஸான்வயம்** - அவனுடைய வினத்தோடு கூட, **ஹந்தி** - கொல்லுகின்றான்.

பொழிப்புரை: - மனிதருக்கே யதிபனாயும் மிக்க வற்பவாயுளையும் செல்வத்தையும் உடையோனா யெவனுளனோ? அவன் யானே அரசன் என்று கூறுவோனை அவனினத்தோடு கூடவதைக்கின்றான்..

ஶ்லோகம்.

கர்த்தாபி ஸர்வலோகானாம் அக்ஷயைஶ் வர்யவானபி
ஶிவ: ஶிவோ஽ஹமஸ்மீதி வாதி³னம் யம் ச கஞ்சன (31)

ஶ்லோகம்.

ஆத்மனா ஸஹ தாதா³த்ம்ய பா⁴கி³னம் குருதே ப்⁴ருஶம்
த⁴ர்மார்த்த² காம மோக்ஷாணாம் பாரம் யாஸ்த² யேன வை (32)

வியாக்யானம்: - ஸர்வலோகானாம் - எல்லா வுலகங்களுக்கும், **கர்த்தா அபி** - படைப்போனாயினும், **அக்ஷயைஶ் வர்யவானபி** - குன்றாத வைசுவர்யத்தை யுடையவனாயினும், **சிவ:** - சிவபெருமான், **சிவோஹம் அஸ்மி இதி** - சிவனேயாகின்றே னென்று, **வாதினம்** - கூறுவோனான, **யம்சகஞ்சன** - எவனையும், **ஆத்மனா ஸஹ** - தன்னோடுகூட, **ப்ருஶம்** - நன்றாய், **தாதா³த்மய பாகி³னம்** - தாதான்மியத்தை யடைவோனாக, **குருதே** - செய்கின்றான், **யேன வை** - எதனாலேயே, **த⁴ர்மார்த்த² காம மோக்ஷாணாம்** - அறம்பொருளின்ப வீடுகளின், **பாரம்** - கரையை, **யாஸ்யத²** - அடைவீர்களோ.

பொழிப்புரை: - எல்லா வுலகங்களையும் படைப்போ னாயினும் சிவபெருமான் சிவோஹம் என்று கூறுவோனான, எம்மனிதனையும் தன்னோடு நன்கைக்கியப் படுத்திக் கொள்ளுகின்றார் அறம் பொருளின்ப வீடுகளின் கரையை எதனாலேயே யடைவீர்களோ.

இங்கு தாதான்மியம் என்றதனால் மூக்யென் றறிக. இம் முக்தியே பரமுக்தி யென்றும் கூறப்படுவதாம்.

ஶ்லோகம்.

முனய ஸ்தத் ப்ரவக்ஷ்யாமி வ்ரதம் பாஶுபதாபி⁴த⁴ம் (33)

வியாக்யானம்: - முனய: - ஒ முனிவர்களே, **பாஶுபதாபி⁴த⁴ம்** - பாசுபதம் என்று பெயர் பெற்ற, **தத்** - அந்த, **வ்ரதம்** - விரதத்தை, ப்ரவக்ஷ்யாமி - உரைக்கின்றேன்.

பொழிப்புரை: - ஓ முனிவர்களே, பாசுபதமென்று வழங்கு மவ்விரதத்தை யுரைக்கின்றேன்.

பிரமாணம்: - இனிப் பாசுபத விரதமானது யாதெனின்,

வ்ரதமேதத்பாஶுபதம் அக்நிரிதிபஸ்ம வாயுரிதிபஸ்ம ஜலமிதிபஸ்ம ஸ்தலமிதிபஸ்ம வ்யோமேதிபஸ்ம ஸர்வம்வா இதம் பஸ்ம மநஇத்யேதாநி சக்ஷூம்ஷிபஸ்மாநி - அக்நிரித்யாதிநா பஸ்மக்ருஹீத்வா, விம்ருஜ்யாங்கா நிஸம் ஸ்ப்ருஶேத் தஸ்மாத் வ்ரதமேதத்பாஶுபதம் பஶுபாஶவிமோக்ஷாய

என்று கூறிய அதருவசிரோபநிடதாதி வாக்கியங்களாலும்,

சூதஸம்கிதை.

புநஸ்ஸாக்ஷாச்சிவஜ்ஞாந ஸித்யர்த்தம்முநிபுங்கவா:
அக்நிஹோத்ரஸமுத்பந்தம் பஸ்மாதாயாதரேணச

என்பதாதி வாக்கியங்களாலும் பிரதி பாதிக்கப்பட்டுள தறிக.

நுட்பம்: - பாசுபதம், பிரதம், சிநோமிரதம், அத்தியாசிரமம், சாம்பவம், ஐசுவரம் என்பன பாசுபத விரதத்திற்குப் பெயராகச் சூதசங்கிதையிலேயே கூறப்பட்டிருக் கின்றன. இதனால் பசுமம், ஐசுவரியம், ஐசுவரம் என்பனவும் (பாதாதி கேசாந்தம் அக்கினி முதலிய மந்திரங்கொண்டு தரிக்கப்படும்) விபூதி விரதமாகிய பாசுபதவிரத த்துக்குப் பெயராமென்க. இந்த விபூதி விரதானுஷ்டான வாயிலாக உமாசமேதராகிய சிவபெருமான் தியானிக்கப்படுங்கால் இந்த யோகம் பாசுபத யோகமெனப்படுமென்க.

ஶ்லோகம்.

க்ருத்வா து விரஜாம் தீ³க்ஷாம் பூ⁴தி ருத்³ராக்ஷ தா⁴ரிண: (33)

ஜபந்தோ வேத³ ஸாராக்²யம் ஶிவ நாம ஸஹஸ்ரகம்
ஸன்த்யஜ்ய தேன மர்த்யத்வம் ஶைவீம் தனு மவாப்ஸ்யத² (34)

வியாக்யானம்: - விரஜாம்தீக்ஷாம் - விரசாதீக்கையை, **க்ருத்வா** - செய்து, **பூதிருத்ராக்ஷதாரிண:** - விபூதி ருத்திராக்கங்களைத் தரித்தவர்களாய், **வேதஸாராக் யம்** - வேதஸாரமென்று பெயர் பெற்ற, **ஶம்போ: நாமஸஹஸ்ரகம்** - சிவஸஹஸ்ர நாமத்தை, **ஜபந்தோ** - ஜபித்தவர்களாய்க் கொண்டு இருங்கள்), **தேன** - அதனால்,

மர்த்யத்வம் - மனிதத் தன்மையை, **ஸன்த்யஜ்ய** - துலைத்து, **ஸைவீம் தனும்** - தெய்வத்தன்மை பெற்ற தேகத்தை, **அவாப்ஸ்யத**^{2} - அடைவீர்கள்.

பொழிப்புரை: - விரசாதீக்கையைச் செய்து விபூதி ருத்திராக்கங்களை யணிந்தவர்களாய் வேதஸாரமென்ற சிவஸஹஸ்ர நாமத்தைச் செபம் செய்து கொண்டிருங்கள். அதனால் மனிதத் தன்மையைத் துலைத்துச் சிவனருள் பாலிக்க யோக்கியமான தேகத்தைப் பெறுவீர்கள்.

நுட்பம்: - இங்கு மனிதத்தன்மையைத் துலைத்து என்றதனால் மனதின் அழுக்கைத் துலைத்து என்றும் தெய்வத் தன்மை பெற்ற என்றதனால் சிவனருள் பாலிக்க யோக்கியமான என்றும் கொள்க.

ஶ்லோகம்.

தத: ப்ரஸன்னோ ப^{4}க^{3}வான் ஶங்கரோ லோக ஶங்கர:
ப^{4}வதாம் த்^{3}ருஶ்யதாமேத்ய கைவல்யம் வ: ப்ரதா^{3}ஸ்யதி (35)

வியாக்யானம்: - தத: - பின்னர், **லோகஶங்கர**: - உலகெல்லாவற்றிற்கும் சுகமளிப்போனான, **ப^{4}க^{3}வான்** - பகவனான, **ஶங்கர:** - சிவபெருமான், **பவதாம்** - உங்களுக்கு, **த்ருச்யதாம்** - காணப்படுந் தன்மையை, **ஏத்ய** - பெற்று, (பிரஸந்நராய்த் தோன்றி) **கைவல்யம்** - முக்தியை, **வ:** - உங்களுக்கு, **ப்ரதாஸ்யதி** - அளித்தருளுவார்.

பொழிப்புரை: - பின்னர் உலகமனைத்தினுக்கும் சுகமளிப்போனான பகவானாகிய சிவபெருமான் உங்கள் முன்னிலையில் பிரஸந்நராயாவிர்ப்பவித்துக் கைவல்ய மெனும் முக்தியை யுங்களுக் களித்தருளுவார்.,

ஶ்லோகம்.

ராமாய த^{3}ண்ட^{3}காரண்யே யத் ப்ராதா^{3}த் கும்ப^{4}பஸம்ப^{4}வ:
தத்ஸர்வம் வ: ப்ரவக்ஷ்யாமி ஶ்ருணுத்^{4}வம் ப^{4}க்தி யோகி^{3}ன: (36)

வியாக்யானம்: - த^{3}ண்ட^{3}காரண்யே - தண்டகாரண்யத்தில், **கும்பஸம்பவ**: - குடபவமுனிவராகிய வகத்தியர், **ராமாய** - ராமன்பொருட்டு, **யத்** - யாதொன்றை, **ப்ராதாத்** - உபதேசம் புரிந்தாரோ, **தத்ஸர்வம்** - அதெல்லாவற்றையும், **வ:** - உங்களுக்கு, **ப்ரவக்ஷ்யாமி** - கூறுகின்றேன், **ப^{4}க்தி யோகி^{3}ன:** - பக்தியுடையவர் களாய், **ஶ்ருணுத்^{4}வம்** - கேளுங்கள்.

பொழிப்புரை: - தண்டகாரண்யத்தில் அகத்தியமா முனிவர் ராமன் பொருட்டு எதை யுபதேசித்தனரோ, அஃதெல்லாவற்றையு முங்களுக் குரைக்கின்றேன் நீங்கள் பக்தி யுடையோர்களா யிருந்து கேளுங்கள்.

பக்தியோகத்தியாய முற்றிற்று.

உ
சிவாப்யாம் நம:

இரண்டாவது

வைராக்கியயோக அத்தியாயம்

ருஷிகள் வினா.

கிமர்த்த^{2} மாக^{3}தோsக^{3}ஸ்த்யோ ராமசந்த்^{3}ரஸ்ய ஸன்னித^{4}ம்
கத^{2}ம் வா விரஜாம் தீ^{3}க்ஷாம் காரயாமாஸ ராக^{4}வம் (1)

வியாக்யானம்: - அகஸ்த்ய - அகத்தியமா முனிவர், **கிமர்த்தம்** - எதற்காக, **ராமசந்த்ரஸ்ய** - இராமனது, **ஸந்நிதிம்** - எதிரில், **ஆகத:** - வந்தார், **விரஜாம் தீக்ஷாம்** - **விரஜாதீக்ஷையை**, **ராகவம்** - ராமனுக்கு, **கதம்வா** - எங்ஙனம், **காரய மாஸ** - செய்து வைத்தார்.

பொழிப்புரை: - ருஷிகள் கேட்கின்றனர். அகத்தியமா முனிவர் எதற்காக ராமனிடம் வந்தார். விரசாதீக்கையை ராமனுக் கெவ்விதம் செய்து வைத்தார்.

ஶ்லோகம்.

தத: கிமாப்தவாந்ராம: பலந்தத்வக்துமர்ஹஸி
ராவணேன யதா^{3} ஸீதா பஹ்ருதா ஜனகாத்மஜா (2)

ஶ்லோகம்.

ததா^{3} வியோக^{3} து^{3}:கே^{2}ன விவபன்னாஸ ராக^{4}வ:
நிர்நித்^{3}ரோ நிரஹங்காரோ நிராஹாரோ தி^{3}வானிஶம் (3)

வியாக்யானம: - தத: -.அ.தனால், **ராம:** - ராமன், **கிம் பலம்** - என்ன பயனை, **ஆப்தவாந்** - அடைந்தான், **தத்** - அதை, **வக்தும்** - சொல்லுவதற்கு, **அர்ஹஸி** - யோக்கியமாகின்றீர்கள், **ஜகாத்மஜா** - ஜநகன் பெண்ணாகிய, **ஸீதா** - ஸீதையான வள், **ராவணேந** - ராவணனால், **யதா**^{3} - எப்பொழுது, **ஹ்ருதா** - அபகரிக்கப்பட்டா ளோ.

ததா^{3} - அப்போது, **வியோக^{3} து^{3}:கே^{2}ன** - பிரிவாற்றாமையா லுண்டாய துக்கத் தால், **ராகவ:** - இராமர், **திவானிஶம்** - இரவும் பகலும். **நிர்நித்ர:** - நித்திரை யற்றவராயும், **நிரஹங்கார:** - அகங்கார மற்றவராயும், **நிராஹார:** - ஆகார மற்றவராயும், **விலபந்** - புலம்பிக்கொண்டும், **ஆஸ** - இருந்தார்.

பொழிப்புரை: - அதனால் ராமன் என்ன பயனை யடைந்தான் அதைத் தாங்கள் சொல்லுவீர்களாக. ஜனகன் பெண்ணாகிய ஸீதை யானவள் ராவணனால் எப்பொழுது அபகரிக்கப்பட்டாளோ.

அப்போது பிரிவாற்றாமையா லுண்டாய துக்கத்தால் ராமன் இரவும் பகலும் நித்திரையற்றும் அகங்காரமற்றும் ஆகாரமற்றவனாகவு மிருந்து புலம்பிக்கொண் டிருந்தார்.

இராமாயணம்.

சாயுந் தம்பி திருத்திய தண்டளிர்
தீயு மங்கவை தீர்கெனுஞ் செவ்விருந்
தாயு மாவி புழுங்க வழுங்குமால்
வாயு நெஞ்சும் புலர மயங்குவான்.

பிரிந்த வேதுகொல் பேரபி மானங்கொல்
தெரிந்த தில்லை திருமலர்க் கண்ணியைப்
பொருந்த வாயிரங் கற்பங்கள் போக்குவான்
இருந்து கண்டிலன் கங்குலி னீறரோ.

ஸ்லோகம்.

மோக்து மைச்ச2த் தத: ப்ராணான் ஸானுஜோ ரகு4நந்த3ன:
லோபாமுத்3ராபதிர் ஞாத்வா தஸ்ய ஸன்னிதி4 மாக3மத் (4)

வியாக்யானம்: - தத: - பிறகு, **ஸாநுஜ:** - சகோதரனுடன்கூடிய, **ரகுநந்தந:** - ராமன், **ப்ராணாந்** - பிராணங்களை, **மோக்தும்** - துறப்பதற்கு, **ஐச்சத்** - விரும்பினான், **லோபாமுத்ராபதி:** - அகத்தியமா முனிவர், **ஞாத்வா** - அறிந்து, **தஸ்ய** - அவ்விராமனது, **ஸந்நிதிம்** - சந்நிதியை (எதிரில்), **ஆகமத்** - அடைந்தார்.

பொழிப்புரை: - பிறகு சகோதரனுடன் கூடிய ராமன் உயிர் துறக்க விரும்பினான். அகஸ்தியமாமுனிவ ரிதையறிந்து ராமனுக்கெதிரில் தோன்றினார்.

ஸ்லோகம்.

அத2 தம் போ3த4யாமாஸ ஸம்ஸாராஸாரதாம் முனி:
கிம் விஷீத3ஸி ராஜேந்த்3ர! காந்தா கஸ்ய விசார்யதாம் (5)

வியாக்யானம்: - அத - பின்னர், **முநி:** - முனிவர், **ராமம்** - ராமனை (ராமனுக்கு), **ஸம்ஸாரா ஸாரதாம்** - ஸம்ஸாரம் துச்சமென்பதை, **போதயாமாஸ**

- போதித்தார், **ராஜேந்த்ர** - ஓ அரசருள் சிறந்தவனான ராமா, **கிம்** - ஏன், **விஷீதஸி** - துக்கிக்கின்றனை, **காந்தா** - காதலி யென்கின்றனையே அவள், **கஸ்ய** - யாருக்கு, **விசார்யதாம்** - விசாரித்தறியத் தக்கது (என்றனர்) அகஸ்தியர்.

பொழிப்புரை: - பிறகு, முனிவர் ராமனுக்குச் சம்ஸாரம் துச்சம் என்பதைப் போதனை செய்தார். அகத்தியர் கூறியதாவது அரசருள் சிறந்தவனான ஓ ராமனே மனைவி யென்கின்றனையே அவள் யாருக்கென்று விசாரித்தறியத் தக்கது.

நுட்பம்: - இங்கு விசாரித்தறியத் தக்கது என்றதனால் ஞானி நிலையின் வழி விசார உருவமாய்ப் போதிக்கின்றார் என்பதறியக் கிடக்கிறது, ஈண்டு அனுபவம் இருவகையாம். அஞ்ஞானியின் அனுபவம் ஒன்று; மற்றொன்று ஞானியின் அனுபவம், பாசத்தால் கட்டுண்டவன் அஞ்ஞானி, பாசநீங்கிச் சிவஞானம் பெற்றவன் ஞானியாம். பாசபந்தமுள்ள வரையில் சீவத்துவமுளது, பாசமானது அஞ்ஞானம் ஆவிருதி மலம் மாயை ஸுப்தி மஹாமோஹம். அவித்தியை என்பதாதிச் சொற்களால் வழங்கப்படுவதாம். இம்மாயையின் வசப்பட்டு அல்லற்படுவோர்களே சீவர்களாம் பசுக்களென்றும் வழங்குவதுண்டு. இதற்குக்காரணம்,

ஜாபாலியுபநிடதம்.

பிரமாணம்: - *கதம்ஜீவா:பஶவ இதி கதந்தத்பதிரிதிஸதமுவாச யதாத்ருணாஶி நோ விவேகஹீநா: பரப்ரேஷ்யா: க்ருஷ்யாதிகர்மஸுநியுக்தா: ஸகலது:கேஸஹா ஸ்ஸ்வஸ்வாமிபத்யமாநா: கவாதய:பஶவ: யதாதஸ்வாதாமிநஇவ ஸர்வஜ்ஞஈஶ: பஶுபதி:*

சீவர்களைப் பசுக்களென்றும் ஈச்சுரனை பசுபதியென்றும் ஏன் கூறப்படுகின் றது என்று வினவப்பதில் கூறியதாவது. எங்ஙனம் புற்களைப் புசிப்பனவும் விவேக மற்றனவும் பிறனால் ஏவப்படுகின்றனவும் சகிப்பனவும் தனது எஜமானனால் கட்டப்படுவனவுமாய்ப்பசுக்களுளவோ அவ்விதமே பசுக்களான சீவர்களாம் அவைக ளின் எஜமானன் போல ஸர்வஞ்ஞனும் இறைவனுமாகிய பசுபதியாம். என்பதாதி மறைமொழிகளைக் கண்டறிக. இங்ஙனம் ஸம்ஸார பந்தத்தில் கிடந்துழலும் சீவர்க ளின் நிலையே (அனுபவமே) அஞ்ஞானி நிலையாம்.

ஞானிநிலையாவது ஈதெல்லாம் மாயா விகாரம் துச்சமென்றொ துக்கித் தள்ளிப் பேரின்பமான சிவானந்தத்தைப் பெறுதற்குறிய வுபதேசாதியை யோர் ஆசிரியரிட மிருந்து பெற்றுச் சிவபெருமானது உபாஸனையால் நிகழுவதான அவனது அருளால் ஞானத்தைப் பெற்றுச் சுகிக்கும் பெரியோர்களின் அனுபவம் அல்லது நிலையேயாம். இங்குச் சீதையை விட்டுப் பிரிந்து துக்கித்துக் கொண்டிரு க்கும் ராமனுக்கு ஞானி நிலையை யுபதேசித்துத் துக்கத்தை விலக்குவதற்காக, முனிவர் ஓ ராமனே நீ இங்ஙனம் துக்கித்தல் யுக்தமன்று. மனைவியை யிழந்தேன் என்கின்றனையே மனைவியாவது யார் எவனுக்கு அதைச் சற்று யோசித்துப்பார், அங்ஙன மாராய்ந்து பார்க்குங்கால் மனைவியென்பதும் கணவனென்பதும் சித்தியாது

ஞானிக்குச் சகலமும் சிவமென்று தோன்றுமே யொழிய வேறு தோற்றாது ஆதலின் சகலத்தையும் ஸீதாதேவியாய்ப் பார்க்காமல் சற்று யோஜனை செய்துபார் என்பதாதி ஞானியின் நிலையா மனுபவத்தைக் கூறினார்.

ஶ்லோகம்.

ஜட^3: கின்னு விஜானாதி தே^{3}ஹோऽயம் பாஞ்ச பௌ^{4}திக:
நிர்லேப: பரிபூர்ணஶ்ச ஸச்சிதா^{3}னந்த^3 விக்^{3}ரஹ: **(6)**

வியாக்யானம்: - பாஞ்ச பௌ^{4}திக: - ஐம்பூதங்களின் னின்றுண்டாய, **அயம் தேஹ** - இச் சடலம் (தேகம்), **ஜட:** - சடமென்று, **நவிஜாநாதிகிம்** - (நீ) யறியவில்லையா என்ன, **நிர்லேப:** - அஸங்கனும். **பரிபூர்ண:** - வியாபகனும், **ஸச்சிதா^{3}னந்த^3 விக்^{3}ரஹ** - உண்மையறிவானந்த வடிவனுமாகிய,

பொழிப்புரை: - பஞ்சபூதங்களினின்றுந் தோன்றிய இச்சரீரம் சடமென்பதை நீ யறியாயாவென்ன, அசங்கனும் வியாபகனும் சச்சிதானந்தனுமாகிய,

ஶ்லோகம்.

ஆத்மா ந ஜாயதே நைவ ம்ரியதே ந ச து^{3}:க^{2}பா^{4}க் **(7)**

வியாக்யானம்: - ஆத்மா - ஆன்மா, **நஸஞ்ஜாயதே ஏவ** - உண்டாவதே யில்லை, **நம்ரியதே** - (மறுபடியும் இறப்பதுமில்லை) **து:க^{2}பா^{4}க்சந** - துக்கமுடையதுமில்லை.

பொழிப்புரை: - ஆன்மா பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை துக்கியுமல்ல.

நுட்பம்: - ஈண்டுக் கூறப்பட்ட ஆன்மாசீவான்பாவேயாம். இனி சீவான்மாவுக் கிங்கு கூறப்பட்ட அசங்க பரிபூரண ஸச்சிதாநந்த உருவமும் துக்கமற்றிருத்த லென்பதும் எங்ஙனமொவ்வும் எனின் ஒவ்வாதென்பதே யுண்மையென்க. ஆயினும் இங்கு பாசபந்தம் பெற்று அல்லற்படுஞ் சீவர்களின் பசுத்துவ நிலையான அஞ்ஞானி நிலையை நோக்கிக் கூறப்பட்டதல்ல. பாச நீங்கிய முத்தான்மாக்களின் நிலையாகிய ஞானிநிலையை நோக்கியே கூறப்பட்டது. இங்கிஃதறியற்பாலது சீவன், சிவன், பாச மல்லது மாயை இவைகள் மூன்றும் அனாதியேயாம்.

பிரமாணம் சூதஸம்கிதை.

ஆத்மாந:பஶவஸ்ஸர்வே ப்ரோக்தா அஜ்ஞாநிநஸ்ததா
விஶ்வஸ்யஜகத:கர்த்தா பஶோரந்ய:பரஶ்ஶிவ:
அஜ்ஞாநமாத்மநாமேஷா மநாத்யேவஸ்வபாவத:

ஆன்மாக்க ளெல்லோரும் அன்ஞானிக ளாதலால் பசுக்க ளென்னப்படுவார்கள். எல்லாச் சகத்திற்கும் கர்த்தா பசுக்களுக் கந்நியனான பரசிவனேயாம். இவர்களுக்குள்ள வஞ்ஞான மனாதியேயாம்.

திருமந்திரம்.

பதிபசு பாச மெனப்பகர் மூன்றில்
பதியி னைப்போல் பாயாச மனாதி
பதியினைச் சென்றணு காப்பா பாசம்
பதியணுகிற் பசுபாச நிலாவே.

என்பனவற்றா லறிக. இங்ஙன மனாதியான சீவனது அனாதி சிவத்துவத்தை பனாதியாய்த் தடைப்படுத்திக் கொண்டிருக்கு மாணவமான அஞ்ஞானமானது நீங்கினால் தடைப்பட்டிருந்தசிவத்துவம் அபிவியத்தமாம். இவ்வாறு அபிவியத்த மான சிவத்துவத்தையுடைய சீவர்களே முக்தர்களாம்.

திருமந்திரம்.

அனாதி சிவரூப மாகிய வான்மாத்
தனாதி மலத்தாற் றடைப்பட்டு நின்றது
தனாதி மலமும் தடையற்ற போதே
யனாதி சிவ ரூபமாகிய வாறே.

என்றபடி இத்தகைய முத்தான்மாவினிலை துக்க மற்ற நிலை நிலையாதலின் ஈண்டு அதைக் கூறிய தறிக.

ஶ்லோகம்.

ஸூர்யோ஽ஸௌ ஸர்வலோகஸ்ய சக்ஷுரூஷ்ட்வேன வ்யவஸ்தி²த: (7)

ததா²பி சாக்ஷுஷைர்தோ³ஷை ந கதா³சித்³ விலிப்யதே
ஸர்வ பூ⁴தாந்தராத்மாபி தத்³வத்³ து³:க்கை²ர் ந லிப்யதே (8)

வியாக்யானம்: - அஸௌ ஸூர்ய: - இச்சூரியனானவன், **ஸர்வ லோகஸ்ய** - எல்லா வுலகிற்கும், **சக்ஷுஷ்ட்வேநவ் யவஸ்தித:** - கண்ணின் தன்மையுடையோனாகத் தீர்மானிக்கப் பட்டவன் (ஆகின்றான்), **ததாபி** - அங்ஙனமாயினும், **சாக்ஷுஷை: தோஷை:** - கண் சம்பந்தமான குற்றங்களால், **கதாசித்** - ஒருக்காலும், **நவிலிப்யதே** - சம்பந்திப்பதில்லை, **ஸர்வபூதாந்தராத்மாபி** - எல்லாப் பூதங்களி

னுள் நிற்கின்றவனான வான்மாவாயினும், **தத்³வத்³** - அதுபோலவே, **து³க்கை:** - துக்கங்களோடு, நலிப்யதே - சம்பந்திப்பதில்லை.

இச்சூரியன் எல்லா வலகிலுக்குங் கண்ணாயினும் கண்களின் குற்றங்களா லெங்கனம் சம்பாதிப்பதில்லையோ, அங்ஙனமே எல்லாப் பூதங்களினுள் ஆன்மா நிற்கும் பொருளாயினும் துக்கங்களோடு பொருந்துவதில்லை.

இனி முற்சுலோகத்தில் கூறிப்போந்த ஞானி, நிலையாவது; சீவத்துவம் நீங்கிச் சிவத்துவ மபிவ்யக்த மானவர்களின் நிலையேயாம். அதாவது சிவாநந்தானு பவ நிலையேயென்க. இதையே,

பிரமாணம் - தைத்திரீயோபநிடதம்.

ப்ரஹ்மவித்ப்ரஹ்மைவபவதி ஸத்யம்ஜ்ஞா நமநந்தம்ப்ரஹ்ம

பிரும்மத்தை (சிவத்தை) யறிந்தவன் பிரும்ம (சிவ) மாகின்றான். சத்தியமாயும் ஞானமாயும் அனந்தமர்யு முள்ளது பிரும்மம்.

திருமந்திரம்.

சிவமா யவமான மும்மலந் தீரப்
பவமான முப்பாழைப் பற்றறப் பற்றத்
தவமான சத்திய ஞானானந்தத்தே
துவமார் துரியஞ் சொருபம தாமே.

என்பதாதி மறைமொழிகளா லிந்நிலையே பிரதி பாதிக்கப்பட்டுளது. இத்தகைய நிலைமையிலிலேயே தடைப்பட்டிருந்த சச்சிதாநந்தம் தோற்ற முற்றுச் சிவமாவது. சிவத்திற்குத் துக்கமென்பதே யணுகாவாதலின், சிவத்துவம் பெற்ற ஞானிக்கும் துக்கமணுகாது என்பதாம்.

கடவல்லியுபநிடதம்.

ஸூர்யோயதாஸர்வலோகஸ்ய சக்ஷுர்நலிப்யதேசாக்ஷு ஷைர்பாஹ்யதோஷை:

ஸருவ பூதங்களுக்கு மந்தரான்மாவாயினும் ஸருவபூதங்களின் குற்றங்களோடு சம்பந்திப்பதில்லை யென்பதற்கு மட்டும் இங் குதாரணம் கூறப் பட்டதறிக.

அவதாரிகை.

இங்ஙனம் ராமனைப் பார்த்து அகத்தியமா முனிவர் ஓ ராமனே சீதையெனும் காந்தையை விட்டுப் பிரிந்து விட்டேன் நான் மிகவும் துக்கியென்கின்றனையே சீதையின் தேகத்தின் பிரிவாற்றாமையால் துக்கத்தை யனுபவிக்கின்றனையா? அல்லது சீதையின் ஆன்மாவின் பிரிவாற்றாமையா? என்று இருவித வினாவைக் கேட்பது போல மனதில் கருதிப் பின்னர் சீதையின் ஆன்மாவை விட்டுப் பிரிந்தது பற்றித் துக்கத்தை யனுபவிக்கின்றே னென்பது குற்றமென்பதைச் சென்ற சுலோகத்தால் நிரூபித்து இனிச் சீதையின் தேகத்தைவிட்டுப் பிரிந்தது பற்றி துக்கியென்பதும் யுக்தமல்லவென்று நிரூபிக்கின்றார்.

ஶ்லோகம்.

தே³ஹோऽபி மலபிண்டோ³யம் முக்த ஜீவோ ஜடா³த்மக:
த³ஹ்யதே வஹ்னினா காஷ்டை²: ஶிவாத்³யைர் ப⁴க்ஷ்யதேऽபி வா

(9)

வியாக்யானம்: - மலபிண்டம் - மலபிண்டமாயும், **ஜடா³த்மக**: - சடவுருவா யுள்ளதும் (ஆகிய) **அயம் தோஹோபி** - இத்தேகமும், **முக்தஜீவ:** - உயிரை யிழந்து விட்டதானால், *வஹ்நிநா* - நெருப்பால், **காஷ்டை**: - கட்டைகளோடு கூட, **தஹ்யதே** - எரிக்கப்படுகின்றது, **அதவா** - அல்லது, **ஶிவாத்யை:** - நரி முதலியவைகளால், **பக்ஷ்யதே** - புசிக்கப்படுகின்றது.

பொழிப்புரை: - மலபிண்டமாயும் சடமாயுமுள்ள இத்தேகமானது சீவனை யிழந்து விடுமாயின் தீயால் கட்டைகளோடு கூட தகிக்கப்படுகின்றது. அல்லது நரி முதலியவைகளால் புசிக்கப்படுகின்றது.

திருவிளையாடல்.

நாய்நம் தெனநரி நமதெனப் பிதா
தாய்தம தெனநமன் றனதெனட் பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோ
லாய்நம தெனப் படும்யாக்கை யாரதே. என்றதனாற் காண்க.

ஶ்லோகம்.

ததா²பி நைவ ஜானாதி விரஹே தஸ்ய கா வ்யதா²

வியாக்யானம்: - ததாபி - அங்ஙனமாயினும், **நஜாநந்த்யேவ** - அறிகின்றார் களில்லை, **தஸ்ய** - அத்தகைய சரீரத்தினது, **விரஹே** - பிரிவில், **காவ்யதா** - எத்துக்கமுளது.

பொழிப்புரை: - மலபிண்டமாயும் சடமாயும் நெருப்பிற்காவது நரி முதலிய வைகளுக்காவது இரையாகிய தேகத்தை, அருகிலிருக்கப்பெறாது இழந்துவிட்டே னென்று கூறித் துக்கிக்கின்றனையே யிஃதுயுக்தமல்ல வென்று இங்குக் கூறியதா யறியற்பாலது.

அவதாரிகை,

இங்ஙனம் ராமனைக் குறித்துக் கூறி யினி யஞ்ஞானிகளது அனுபவ மயக்கத் தைப் பொதுவாகக் கூறுகின்றார்.

ஶ்லோகம்.

ஸுவர்ணகௌள^{3}ரீ தூ^{3}ர்வாயா த^{3}ளவச் ச்^{2}யாமளாபி வா
பீனோத்துங்க^3 ஸ்தனா போ^{4}க பு^{4}க்^{3}ன ஸூக்ஷ்மாவலக்^{3}னகா (10)

வியாக்யானம்: - ஸுவர்ணகௌள^{3}ரீ - பசும்பொன்னிற முடையாள், தூர்வாயா: **த^{3}ளவத்**, (அல்லது) அருகம்புல்லின் தளப்போல, **ச்^{2}யாமளா** - சாமள வர்ணமுடைய வளும், **பீநோத்துங்க ஸ்தநா போக புக்நஸூக்ஷ்மாவலக்நகா** - பருத்து முயர்ந்து முள்ளத் தன தடத்தால் வாட்டமுற்ற சிற்றிடையாளும்.

பொழிப்புரை: - பசும்பொன்னிறமுடையாளும் அல்லது அருகம் புல்லின் தளம் போல சாமள வர்ணமுடையவளும் பருத்து முயர்ந்து முள்ளத் தனதடத்தால் வாட்டமுற்ற சிற்றிடையாளும்

ஶ்லோகம்.

ப்^{3}ருஹறன் நிதம்ப^3 ஜக^{4}னா ரக்த பாத^3 ஸரோருஹா (11)

ராகாசந்த^{3}ரமுகீ^{2} பி^{3}ம்ப^3 ப்ரதிபி^{3}ம்^{3}ப ரத^{3}ச்ச^{2}தா^{3}
நீலேந்தீ^{3}வர நீகாஶ நயன த்^{3}வய ஶோபி^{4}தா (12)

வியாக்யானம்: - ப்ருஹந்நிதம்பஜகநா - பருத்த பின்னிடையாளும், **ரக்தபா தஸரோருஹா** - சிவந்த பாதார விந்தத்தையுடையாளும், **ராகாசந்த்ரமுகீ** - பூர்ண சந்திரன் போன்ற முகத்தினளும், **பிம்பப்ரதி பிம்பரதச்சதா** - கொவ்வைக்கனிக்கு

நிகரான உதட்டை யுடையாளும், **நீலேந்தீவர நீகாசநயநத்வய சோபிதா** - நீலோத்பலத்திற்கு நிகரான கண்களால் விளங்குவாளும்.

பொழிப்புரை: - பருத்த பின்னிடையாளும் சிவந்த பாதாரவிந்தத்தை யுடையாளும் பூர்ண சந்திரன் போன்ற முகத்தினளும் கொவ்வைக்கனிக்கு நிகரான உதட்டை யுடையாளும் நீலோத்பலத்திற்கு நிகரான கண்களால் விளங்குவாளும்.

ஸ்லோகம்.

மத்தகோகில ஸம்லாபா மத்த த்[3]விரத[3] கா[3]மினீ
கடாக்ஷை ரனுக்[3]ருஹ்ணாதி மாம் பஞ்சேஷு ஸ்ரோத்தமை: (13)

வியாக்யானம்: - மத்தகோகில ஸம்லாபா - மதித்த குயிலினது போன்ற குரலுடையாளும், **மத்த த்[3]விரத காமினீ** - மதங்கொண்ட யானையினது போன்ற நடையாளும், ஆகிய இம்மங்கை, **மாம்** - என்னை, **பஞ்சேஷசரோத்தமை:** - சிறந்த, மன்மதபாணங்களான, **கடாக்ஷை**: - பார்வைகளால், **அனுக்[3]ருஹ்ணாதி -** அனுக்கிரகிக்கின்றாள்.

பொழிப்புரை: - மதித்த குயிலினதுபோன்ற குரலுடையாளும். மதங்கொண்ட யானையினதுபோன்ற நடையாளும் ஆகிய இம்மங்கை என்னைச் சிறந்த மன்மதபாணங்களான பார்வைகளால் அநுக்கிரகிக் கின்றாள்.

ஸ்லோகம்.

இதி யோ மன்யதே மூர்க்க[2]: ஸ ச பஞ்சேஷு ஶாஸித:
தஸ்யாsவிவேகம் வக்ஷ்யாமி ஶ்ருணுஷ்வாவஹிதோ ந்ருப (14)

வியாக்யானம்: - இதி - என்று, **பஞ்சேஷுஶாஸித**: - மன்மதனாலேவப்பட்டு, **ஸத்ய:** - உடனே, **மூட:** - மூடனான, **ய:** - யாதொருவன், **மன்யதே** - எண்ணுகிறானோ, **தஸ்ய** - அவனது, **அவிவேகம்** - அஞ்ஞானத்தை, **வக்ஷ்யாமி** - கூறுகின்றேன், **ந்ருப** - ஓ அரசனே, **அவஹித**: - சாவதானமாய், **ஶ்ருணுஷ்வ** - கேட்பாயாக.

பொழிப்புரை: - என்று மன்மதனாலேவப்பட்டு உடனே மூடனான யாதொருவன் எண்ணுகிறானோ அவனது அஞ்ஞானத்தைக் கூறுகின்றேன் ஓ அரசனே சாவதானமாய்க் கேட்பாயாக.

அவதாரிகை.

தேகம் சடமாதலின் அதைக் கண்டு மயக்கங் கொள்வதும் யுக்தமல்ல என்று கூறி யிங்கு ஆன்மாவைக்குறித்து மயங்குவதும் உசிதமல்ல வென்பதை ஏதுவுடன் நிரூபிக்கின்றார்.

ஶ்லோகம்.

ந ச ஸ்த்ரீ ந புமாநேஷ ந வைசாயம் நபும்ஸக:
அமூர்த்த: புருஷ: பூர்ணோ: த்ரஷ்டாsதே³ஹீ ஸ ஜீவன: (15)

வியாக்யானம்: - **ஏஷ**: - இவன் (இவ்வான்மா) **ஸ்த்ரீசந** - பெண்ணுமல்ல, **ஏஷ:** - இவன், **புமாந்ந** - புருஷனுமல்ல, **அயம்** - இவன், **நபும்ஸக: சநஎவ** - நபும்ஸகனுமல்ல, **அமூர்த்த:** - மூர்த்தியற்றவனும், **புருஷ:** - சரீரத்திலுள்ளவன், **பூர்ண:** - நிறைந்தவன், **த்ரஷ்டா** - காண்போன், **தேஹீ** - தேஹதாதான்மிய முடையவன், **ஸ:** - அவன், **ஜீவன:** - சீவிக்கச்செய்வோன்.

பொழிப்புரை: - இவ்வான்மா ஆணுமல்ல பெண்ணுமல்ல அலியுமல்ல காணக்கூடிய வுருவற்றவன் சரீரத்திலுள்ளவன் நிறைந்தவன் காண்போன் தேகதாதான்மிய முடையவன் அவன் சீவிக்கச் செய்வோன்.

கருத்து: - இங்கு இவ்வான்மா ஆணுமல்ல பெண்ணுமல்ல அலியுமல்ல என்றதனால் ஆண், பெண், அலி யென்பது அங்கங்களை நோக்கி வந்தது ஆதலின் அவை தேகதருமமேயன்றி யான்ம தருமமல்லவென்றறிக.

சுவேதாசுவதரோபநிடதம்.

பிரமாணம்: -

நசஸ்த்ரீநபுமாநேஷநைவசாயம்நபும்ஸக:
யத்யச்சரீரமாதத்தேதேந தேநஸயுஜ்யதே

இவன் ஆணுமல்ல பெண்ணுமல்ல அலியுமல்ல எவ்வெத்தேக மெடுப்பானோ அவ்வத்தேகத்தோடு கூடுவான் என்று கூறியது காண்க. இனி அமூர்த்தன் நேரில் காணக்கூடிய வுருவமுடையவன் அல்ல என்றதனால் உயிர் கூறப்படும் சேதன வுருவம் சூநியமல்ல வென்பதுமறிக. புருஷ:- தேகத்திலுள்ளவன் என்றதனால் தேகாதியைப் பிரவர்த்திக்கச் செய்கின்றவன், தேகம் சடமாதலின் தானே பிரவர்த் தியாது சேதனனாகிய வான்மாவாலேயே பிரவர்த்திக்க வேண்டும் என்பதறிக.

பௌஷ்கராகமம்.

ப்ரவர்தமாநோதேஹா திஶ்சேதநாதிஷ்டிதஸ்ஸதா
ஸ்வத:ப்ரல்ருத்திஶூந்ய த்வாஜ்ஜகத்தத்வேகடாதிவத்
யஸ்துப்ரவர்தகஸ்ஸோய மாத்மேதிபரிபட்யதே

சேதனனால் அதிஷ்டிக்கப்பெற்றே எப்பொழுதும் தேகாதி பிரவர்த்திக்கின்றது. ஜகத்தத்துவத்தில் குடாதி போல தானே பிரவிர்த்தி யற்றதாதலால் என்க இதனைப் பிரவர்த்திக்கச் செய்வோன் எவனோ அவனே யான்மா எனப்படும்.

என்பதாதி வாக்கியங் காண்க. இனி பூர்ணன் என்றதனால் வியாபகன் என்பதறிக. அற்றேல்

வரலாக்ரஶதபாகஸ்ய ஶததாகல்பிதஸ்யச
பாகோஜீவஸ்ஸவிஜ்ஞேயஸ்ஸ சாநந்த்யாயகல்பதே

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறதுவாயிரமாயினால்
ஆவாயின் கூறு நூறாயிரத்தொன்றே.

என்ற உபநிடதம் திருமந்திரம் முதலிய முன்னூற்களில் சீவன் அணுவிலும் சிறிய பரிமாணமுடையோன் என்றது அவலமோவெனின் அல்லவென்க. சீவன் உண்மையில் வியாபகனே யாயினும் பாசத்தாற் கட்டுண்டு தேகத்தினிற் சிறைப் பட்டு அணுவாயினான்.

காமிகம்.

நித்யஜஞாநமயோஹயேஷ: வ்ருத்திஜ்ஞாநஞ்சஶாஶ்வதம்
வ்யாபகோபிஶரீரேஸ்மிந் வர்ததேவ்யாபக:ப்ரபு:

இவன் நித்தியஞானமயன் வ்ருத்திஞானமும் சாச்வதமே இவன் வியாபகனாயினும் இச்சரீரத்தினில் அவ்வியாபகனா யிருக்கின்றான்.

என்று கூறிய பிரமாணங்களைக் கண்டுதெளிக. இனிக் காண்போன் என்ற தனால் இஃதறிக. அதாவது காண்பன விந்திரியங்களாயினும் அவ்விந்திரியங்களும் தானே காண்பனவல்ல மற்று இவ்வான்மாவாலேயே காண்பனவாம்.

கடவல்லியுபநிடதம்.

யேநரூபம்ரஸம்கம்தம் ஶப்தாம்ஸபர்ஶாம்ஶ்சமைதுநாந்
பதேநைவ்விஜாநாதி

எதனால் உருவத்தையும் ரஸம் கந்தம் சப்தம் ஸ்பர்ஶம் சேர்க்கை இவைகளையும் எவனால் அறிகின்றானோ.

காமிகம்.

அஹ்மேவசபஶ்யாமி நஸயாமிசநாந்யதா
நஹ்யேததிந்த்ரியாத்மத்வே கதஞ்சிதுப்பத்யதே

யானே காண்கின்றேன் ரஸநிக்கின்றேன் மற்றது அல்ல இஃது இந்திரியம் ஆன்மாவெனின் எவ்வாற்றானு மியையாது.

என்பதாதி பிரமாணங்களா லறிக. அற்றேல் மனமே யிந்திரியங்களை யறியச்செய்கின்றது ஆன்மாவல்ல வென்பதே யொவ்வுமெனின் அல்ல. மனமும் சடமாதலின் அதனையும் ஏவுவோன் மற்றொருவன் இருக்கவேண்டும் அவனே சீவன். மனம் சுபாவமாய் அறிகின்றதல்ல. ஆன்ம சம்பந்தத்தாலேயே யறியவேண்டியதாம் இதனை

சிவஞானபோதம்.

ஆத்மாந்த:கரணாதந்யோ ப்யந்விதோமந்த்ரியூபவத்

ஆன்மா மனதிற்கு அந்நியனாயினும் மந்திரியும் அரசனும் போலக் கூடியுள்ளன.

இயற்கையில் ஆளமாளாத மந்திரி அரசன் ஆணைகொண்டு ஆள்வதுபோல் இங்கு ஆன்மாவால் மனமறிவதறிக. அற்றேல் ஆன்மா வாலேயே மனம் அறிகின்றது என்பது என்னை? ஆன்மாவே நேரில் மனதை அவாவாமல் அறியக் கூடாதோவெனின் அல்ல. எங்ஙனம் எனின் சூரியனால் நேரில் தகிக்கமாளாத துரும்பை அச்சூரியவொளியின் சம்பந்தத்தால் சூரியகாந்தம் தகிப்பதுபோலென்க. இங்ஙனம் நேரில் அறியாது தனது அறிவால் மனாதியை யறியச்செய்வது பற்றி ஆன்மா காண்போன் என்றது.

காமிகம்,

சிந்மாத்ரஸ்சேதயத்யந்யாந் ஸ்வயஞ்சே தயதேத்தா

சிந்மாத்திரன் இதரங்களை அதாவது மனாதிகளை அறியச்செய்கிறவன் அவனே அங்ஙனம் அறியச் செய்யப்படுகிறான்.

சிவஞானபோதம்.

விதந்த்யக்ஷாணிபும்ஸார்தாந்

என்பதாதி வாக்கியங்களா லறிக, இவனே தேகாபிமானி யென்பது எல்லோருக்கு மனுபவசித்தமாதலின் அதை யிங்கு விரிக்கவில்லை. இங்ஙனம் சீவனது உருவமாதலால், மங்கையை விட்டுப் பிரிந்து அனுபவிக்கின்றதாய்க் கூறும் துக்கத்திற்கு ஏதுவானது சீதையின் ஆன்மாவை விட்டுப் பிரிந்தது என்பது யுக்தமல்ல என்று கூறினார்.

அவதாரிகை.

இனித் தேகத்தைப்பற்றி நினைத்துத் துக்கிக்கின்றேன் என்பதும் யுக்தமல்ல என்பதை யுக்தியுடன் நிரூபிக்கின்றார்.

ஶ்லோகம்.

யா தன்வங்கீ^{3} ம்ருது^{3}ர் பா^{3}லா மலபிண்டா^{3}த்மிகா ஜடா^{3}
ஸா ந பஶ்யதி யத்கிஞ்சித் ந ஶ்ருணோதி ந ஜிக்^{4}ரதி (16)

வியாக்யானம்: - தன்வங்கீ^{3} - மெல்லியள் (என்றும்), **ம்ருது^{3}:** - அழகியவள் (என்றும்), **பா^{3}லா** - சிறுமி (என்றும்), **யா** - எவள் (கூறப்படுகின்றாளோ), **மலபிண்டா^{3}த்மிகா** - மலபாண்ட வுருவமானவளும், **ஜடா** - சடமானவளும் (ஆகிய சரீரவுருவமான) **ஸா** - அவள், **ந பஶ்யதி** - பார்க்கின்ற தில்லை, **யத்கிஞ்சித்** - ஒன்றையும், **ந ஶ்ருணோதி** - கேட்பதுமில்லை, **ந ஜிக்^{4}ரதி** - முகருவதில்லை.

பொழிப்புரை: - மெல்லியள் என்றும் அழகியவள் என்றும் சிறு'மியென்றும் எம்மங்கை கூறப்படுகின்றாளோ, மலபிண்டமாயும் சடமாயுமுள்ள தேகவுருவான அவள் பார்ப்பதுமில்லை கேட்பதுமில்லை முகருவதுமில்லை.

பார்த்தல் கேட்டல் முகருதல் முதலிய தருமங்கள் ஆன்மாவுக்கே யுளவாதலால் மலாகாரமாயும் ஜடமாயுமுள்ள தேகம் பார்ப்பது முதலிய தொழிலைச் செய்கின்றதென்று கூறுவதும் அதைக் கண்டு மயங்குவதும் தக்கதல்ல என்று கூறப்பட்டதாயறிக.

ஶ்லோகம்.

சர்ம மாத்ரம் தனுஸ்தஸ்யா பு^{3}த்^{3}வா த்யக்ஷஸ்வ ராக^{4}வ
யா ப்ராணாத^{3}தி^{4}கா ஸைவ ஹந்த தே ஸ்யாத்^{3} க்^{4}ருணாஸ்பத^{3}ம் (17)

வியாக்யானம்: - **ராக^{4}வ** - ஓராகவனே, **தஸ்யா:** - அவளுடைய, **தனும்** - தேகத்தை, **சர்ம மாத்ரம்** - தோல்மாத்திரமென்று, **புத்வா** - அறிந்து, **த்யக்ஷஸ்வ** - (விரும்பாது) தள்ளிவிடுவாயாக, **யா** - எம்மங்கை, **ப்ராணாத்** - பிராணனிலும்,

அதிகா - மேற்பட்டவளோ, **ஹந்த** - அந்தோ, **ஸா ஏவ** - அவளே, **தே** - உனக்கு, **க்ருணாஸ்பத³ம்** - துக்கஏதுவாம்.

பொழிப்புரை: - ஓ ராகவனே அம்மங்கையின் தேகத்தைத் தோல் மாத்திரமா யறிந்து விரும்பாது தள்ளிவிடுவாயாக. எம்மங்கை பிராணனிலும் மதிகமோ, அந்தோ! அவளே யுனக்குத் துக்க ஏதுவாம்.

ஶ்லோகம்.

ஜாயந்தே யதி³ பூ⁴தேப்⁴யோ தே³ஹின: பாஞ்ச பௌ⁴திகா:
ஆத்மா யதே³கலஸ்தேஷு பரிபூர்ண: ஸனாதன: (18)

வியாக்யானம்: - **தேஹா:** - தேகங்கள், **பூதேப்ய:** - பூதங்களினின்றே, **யதி ஜாயந்தே** - உண்டாகின்றனவன்றோ, **தத்** - ஆதலின், **பாஞ்சபௌதிகா:** - பஞ்சபூதத்தினது விகாரங்களேயாம், **ஆத்மா** - த்மாவானவன், **யதேகல:** - யாதொரு சாக்ஷியாயும், **தேஷு** - அத்தேகங்களில், **பரிபூர்ண:** - பூரணனாயும், **ஸனாதன:** - ஸநாதனனாயு முள்ளவன்.

பொழிப்புரை: - தேகங்கள் பூதங்களிலேயே யுண்டாகின்றனவன்றோ. ஆதலால் பஞ்சபூதங்களின் விகாரங்களேயாம். ஆன்மா தேகசாக்ஷியும் பரிபூர்ணனும் ஸநாதனனுமாம்.

இங்கு ஆன்மாதேகத் துண்ணின்று மனதையே யறியச் செய்கின்றான் ஆதலால் சாக்ஷியென்று கூறப்பட்டது. பரிபூர்ணனென்பது முன்னம் விளக்கப்பட்டது. ஸநாதனன் என்றதனால் அனாதி யென்றறிக.

ஶ்லோகம்.

கா காந்தா தஸ்ய க: காந்த: ஸர்வ ஏவ ஸஹோத³ரா:
நிர்மிதாயாம் க்³ருஹாவல்யாம் தத³வச்சி²ன்னதாம் க³தம் (19)

நப⁴ஸ்தஸ்யாம் து த³க்³தா⁴யாம் ந காஞ்சித் க்ஷதிம்ருச்²சதி
தத்³வதா³த்மாபி தே³ஹேஷு பரிபூரண: ஸனாதன: (20)

வியாக்யானம்: - தத்ர - இஃதிங்கனமிருக்க, **கா** - எவள், **காந்தா** - மங்கை, **க:** - எவன், **காந்த:** - கணவன், **ஸர்வே** - எல்லோரும், **ஸஹோதரா:எவ** - உடன்பிறந்தவர்களே, **க்ருஹாவள்யாம்** - வீடுகள், **நிர்மிதாயாம்** - கட்டப்பட்டன வாயின், **ததவச்சின்னதாம்** - அதனுள் தடுக்கப்பட்ட (அடங்கின) தன்மையை, **கதம்** - அடைந்ததான, **நப:** - ஆகாயமானது, **தஸ்யாம்** - அவ்வீடுகள், **தக்தாயாம்** - தஹிக்கப்பட்டனவாயின், **காம்சித்க்ஷதிம்** - ஒருகெடுதியையும், **நருச்சதி** -

அடைவதில்லையே, **தத்வத்** - அதுபோல, **பரிபூர்ண:** - பரிபூர்ணனும், **ஸனாதன:** - எப்பவுமுள்ளவனுமான, **ஆத்மாபி** - ஆன்மாவும், **தேகேஷு** - தேகங்களில்.

பொழிப்புரை: - இஃதிங்கனமிருக்க, எவள் மனைவி, எவன் கணவன், எல்லோர்களும் ஸகோதரர்களே. வீடுகள் கட்டப்படுமாயின் அவைக்குளடங்கிய வாகாயமானது அவ்வீடுகள் தஹிக்கப்பட்டபின் ஒர்கெடுதியையும் எங்ஙனம் அடையாதோ, பரிபூர்ணனும் ஸநாதனனுமான வான்மாவும் தேகங்களில் அங்ஙனமேயாம்.

நுட்பம்: - இஃதிங்ஙனமிருக்க வென்றதனால், ஆன்மா தேகேந்திரியமனமாதி களுக் கந்நியனாயிருக்க வென்றறிக. மனைவி, கணவன் முதலிய சொற்களால் கூறப்படுவது தேகமே ஆன்மாவன் றென்பதாம். முற்கூறிய வேதுக்களால் இவ்விரண்டில் ஒன்று மியையவில்லை யாதலின் மனைவியாவது எவள் என்பதாதி கூறப்பட்டதறிக. இனிச் சரீரமழிந்தால் சீவன் அழிவதில்லை, சரீரம் தோன்றினால் சீவன் தோன்றவேண்டுமென்ற நியமுமில்லை ஆன்மா (வருவப்பொருளாத) லனாதியும் விபுவமாதலால், இதற்கு உதாரணமாக வீட்டுள் ஆகாயமும்போலென்று கூறப்பட்டது. இதனால் தோன்றுவதும் அழிவதும் தேகத்திற்கே யன்றி யான்மாவுக் கல்லவென்பது அறியவேண்டியது.

ஶ்லோகம்.

ஹன்யமானேஷு தேஷ்வேவ ஸ்வயம் நைவ விஹன்யதே
ஹந்தா சேன் மன்யதே ஹந்தும் ஹதஶ்சேன் மன்யதே ஹதம் (21)

தாவுபௌ[4] ந விஜானீதோ நாயம் ஹந்தி ந ஹன்யதே
அஸ்மான் ந்ருபாதிது[3]:கே[2]ன கிம் கே[2]த்[3]ஸ்யாஸ்தி காரணம் (22)

வியாக்யானம்: - ஏவம் - இவ்விதம், **தேஷு** - தேகங்கள், **ஹன்யமானேஷு** - கொல்லப்படுவனவா யிருக்க, **ஸ்வயம்** - தான் (ஆன்மா) **நவிஹந்யதே ஏவ** - கொல்லப்படுவதே யில்லை, **ஹந்தாசேத்** - வதம் செய்வோனோ வெனின், **ஹந்தும்** - (மற்றொருவனைக்) கொல்லவேண்டுமென்று, **மன்யதே** - நினைக்கிறான், **ஹத:சேத்** - வதமடைவோனோ வெனின், **ஹதம்** - (ஆன்மாவை) வதமடைந்தவன் என்று, **மன்யதே** - எண்ணுகின்றான். **தா உபௌ** - அவவிருவர்களும், **ந விஜானீத:** - அறிகின்றவர்களல்ல, **அயம்** - இவன், **ந ஹந்தி** - கொல்லுவதுமில்லை, **ந ஹன்யதே** - கொல்லப்படுகின்றது மில்லை, **அஸ்மாத்** - இக்காரணத்தால், **ந்ருப** - ஓ அரசனே, **அதிதுக்கேந** - மிக்கத் துக்கத்தால், **கேதஸ்ய** - தவித்தலுக்கு, **கிம் காரணம்** - என்னகாரணம், **அஸ்தி** - உளது.

பொழிப்புரை: - இங்ஙனம் தேகங்களே வதமடைவது தான் வதமடைவதில்லை வதம் செயவோன் தான் மற்றொருவனைக் கொல்ல வேண்டு

மென்று நினைக்கிறான் வதமடைவோன் தான் வதமடைகின்றதாக நினைக்கிறான் இவ்விருவர்களும் அறிகின்றவர்க ளல்ல. இவன் கொல்லுவதில்லை. கொல்லப்படு வதுமில்லை. இக்காரணத்தால், ஓ அரசனே அதிக துக்கத்தால் தவித்தலுக்கு ஏது யாதுளது.

நுட்பம்: - இங்கு அருவப்பொருளான வான்மாவை வதைக்க வியலாது உருவப்பொருளான தேகங்களுக்கே வதைமுதலியன என்பது உண்மையா யிருக்க ஆன்மா வதைசெய்வோ னாகவும் ஆன்மாவே வதைக்கப்படுவோன் என்றும் நினைத்தல் அறிவின்மையால் நிகழ்ந்ததென விளக்கியதறிக. இதனால் தேகாதிக் கந்நியமாய் ஆன்மாவே றொன்றில்லை யென்று கூறும், சார்வாகாதியர்களின் கொள்கை மறுக்கப்பட்டது.

ஶ்லோகம்.

ஸ்வஸ்வரூபம் விதி³த்வைவ து³:க²ம் த்யக்த்வா ஸுகீ² பவ (23)

வியாக்யானம்: - ஸ்வஸ்வரூபம் - தன் ஸ்வரூபத்தை, **விதித்வா** - அறிந்து, **இதம்** - இந்த, **து:கம்** - துக்கத்தை, **த்யக்த்வா** - விடுத்து, **ஸுகி** - ஸுகமுடைய வனாய், **பவ** -. ஆகுக.

பொழிப்புரை: - தன் ஸ்வரூபத்தை யறிந்து இத்துக்கத்தை விடுத்துச் சுகம் பெறுவாயாக.

நுட்பம்: - ஈண்டு தேகாதிகளுக் கந்நியமா யிருத்தலே தனக்குளது என்று அறிதலே தனதுருவத்தை யறிதல் ஆதலால் அஃதிங்கு விதிக்கப்பட்டது.

பைங்களோபநிடதம்.

பிரமாணம்: - *தஸ்மாத்ஸதாவிசாரயேஜ்ஜ கஜ்ஜீவபராத்மந:*

ஆதலால் எப்பொழுதும் சடம் சித் பரன்களை விசாரிக்க வேண்டும்.

தரிசனோபநிடதம்.

ஆத்மஸ்வரூபவிஜ்ஞாநா தஜ்ஞாநஸ்யபரிக்ஷய:

ஆன்ம உருவத்தின் ஞானத்தால் அஞ்ஞானத்தின் துலைவு.

திருமந்திரம்.

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னையறி யாமற் றானே கெடுகின்றான்
தன்னை யறியு மறிவை யறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானே.

தன்னை யறிந்தக்கால் பாசங்களையும் பரனையும் அறியலாகும். ஆதலால் இங்ஙனம் கூறப்பட்டது.

இராமர்கேள்வி.

முனே! ஹே^{3}ஹஸ்ய நோ து^{3}:க்க^{2}ம் நைவ சேத் பரமாத்மன: (24)

ஸீதா வியோக^{3} து^{3}:க்கா^{2}க்^{3}னிர் மாம் ப^{4}ஸ்மீ குருதே கத^{2}ம்
ஸதா^{3}னுபூ^{4}யதே யோऽர்த்த^{2}: ஸ நாஸ்தீதி த்வயேரித: (25)

வியாக்யானம்: - முனே - ஒ முனிவரே, **துக்கம் -** துக்கமானது, **தேஹஸ்ய** - தேகத்திற்கு, **ந** - அல்ல, **பரம்** - மற்றோவெனின், **ஆத்மனச** - ஆன்மாவுக்கும், **நைவசேத்** - இல்லாவிடில், **ஸீதாவியோக துக்காக்நி:** - ஸீதையின் பிரிவினாலுண்டாகிய துக்கமெனும் அக்கிநியானது, **மாம்** - என்னை, **கதம்** - ஏன், **பஸ்மீகுருதே** - தகிக்கின்றது, **ஸதா** - எப்பொழுதும், **ய:அர்த்த:** - யாதொருவிஷயமானது, **அனுபூயதே** - அனுபவிக்கப்படுகின்றதோ, **ஸ** - அவ்விஷயமானது, **நாஸ்தீதி** - இல்லையென்று, **த்வயா** - தங்களால், **ஈரித:** - கூறப்பட்டது.

பொழிப்புரை: - ஓ முனிவரே துக்கமானது தேகத்திற்கல்ல. மற்றோவெனின் ஆன்மாவுக்கு மல்லவெனின் சீதையைவிட்டுப் பிரிந்த துக்கமெனும் அக்கிநியானது என்னைக் கொளுத்துகின்றதேன் எப்பொழுதும் யாதொரு விஷயமானது அனுபவிக் கப்பட்டு வருகின்றதோ அஃது இல்லையென்று தங்களால் கூறப்பட்டதே.

நுட்பம்: - இங்கு இராமன் முனிவரைப் பார்த்து எப்பொழுதும் அனுபவிக்கப் படும் துக்கத்தைத் தாங்கள் தேகத்திற்கு மல்ல ஆன்மாவிற்குமல்ல என்று அனுபவ விரோதமாய் உரைக்கின்றீர்களே. அதை நான் அங்கீகரிப்ப தெவ்விதமென்று ஆசங்கை கொண்டான் என்பதறிக.

ஶ்லோகம்.

ஜாயதாம் தத்ர விஶ்வாஸ: கத^{2}ம் வா முனிபுங்க^{3}வ!
அன்யோऽஸ்தி நாஸ்தி கோ போ^{4}க்தா யேன ஜந்து: ப்ரதப்யதே
ஸுக^{2}ஸ்ய வாऽபி து^{3}:க்க^{2}ஸ்ய தத் ப்^{3}ரூஹி முனிஸத்தம் (26)

வியாக்யானம்: - தத்ர - அவ்விஷயத்தில், **மே** - எனக்கு, **விச்வாஸ:** - நம்பிக்கையானது, **கத^{2}ம் ஜாயதாம்** - எங்ஙனம் உண்டாகும், **முனிபுங்க^{3}வ** - ஓ முனிவர்கோனே, **யேன** - யாதொரு துக்கத்தால், **ஜந்து:** - சீவன், **ப்ரதப்யதே** - தபிக்கின்றானோ, (அத்தகைய துக்கத்தை) **போக்தா** - அனுபவிக்கின்றவன், **அஸ்தி** - இருக்(கவேண்டியதே)கின்றான், **நாஸ்தி** - இல்லை (யெனின்) **அன்ய:** - வேறு, **க:** - எவன், **ஸுகஸ்ய, துக்கஸ்ய, வா, அபி** - சுகத்திற்குந் துக்கத்திற்கும் ஏதுவாவான், **முனிஸத்தம** - ஓ முனிவரரே, **தத்ப்ரூஹி** - அதனையுரைக்க வேண்டும்.

பொழிப்புரை: - இவ்விஷயத்தில் எனக்கு எவ்விதம் நம்பிக்கை யுண்டாகும். ஒ முனிவர்கோனே எதனால் சீவன் தவிக்கின்றானோ அத்துக்கத்தை யனுபவிக் கின்றவன் ஒருவனிருக்கவேண்டும். அல்லவெனின்; வேறு எவன் சுகதுக்கத்திற் கேதுவாம். ஓ முனிவரரே அதனையுரைக்கவேண்டும்.

இங்கு இராமன் முனிவரை நோக்கித் துக்கியென்ற வனுபவத்திற்கேது யாதென்று வினாவினாரென்று அறிக.

அகஸ்தியர்விடை.

து^{3}ர்ஞேயா ஶாம்ப^{4}வீ மாயா யயா ஸம்மோஹ்யதே ஜக^{3}த் (27)

வியாக்யானம்: - **து^{3}ர்ஞேயா** - அறியவரியதான, **ஶாம்ப^{4}வீ** - சம்பு ஸம்பந்தமான, **மாயா** - மாயை (யேஏது), **யயா** - எந்தமாயையால், **ஜகத்** - உலகம் (சீவர்கள்), **ஸம்மோஹ்யதே** - பிரமிப்பதோ.

பொழிப்புரை: - அறியவரியதும் சம்பு ஸம்பந்தமுமாகிய மாயை (யேஏது வாம்) எந்தமாயையால் சீவர்கள் பிரமிக்கின்றனரோ.

இங்குச் சம்புசம்பந்தமான என்றதனால் சம்புவுக் கடங்கிய என்பது அறிக.

ஶ்லோகம்.

மாயாம் து ப்ரக்ருதிம் வித்^{3}யான் மாயினம் து மஹேஶ்வரம்
தஸ்யாவயவ பூ^{4}தேன வ்யாப்தம் ஸர்வமித^{3}ம் ஜக^{3}த் (27)

வியாக்யானம்: - **மாயாம் து** - மாயையையோவெனின், **ப்ரகிருதிம்** - ப்ரகிருதி (முதற்காரணம்) என்று, **வித்யாத்** - அறிக, **மாயினம் து** - மாயையை வசப்படுத்தியோனை, **மஹேஶ்வரம்** - மஹேச்சுரெனென்றறிக. **அஸ்ய** - இவனது, அவயவபூதோ - அவயவமா யிருப்பவனால், **இதம்ஜகத் ஸர்வம் -** இச்செகமெலாம், **வ்யாப்தம்** - வியாபிக்கப்பட்டுளது.

நுட்பம்: - முற் சுலோகத்தில் மாயை சம்பு சம்பந்தமானது என்று கூறப்பட்டது. இதற்கு மேற்கோளாக சுவேதாச்சுவதரம் கூறிய (மாயாம்து) என்ற சுருதியே இங்கு சுலோகமாய்க் கூறப்பட்டது.

ஶ்லோகம்.

ஸத்ய ஞானாத்மகோ஽னந்தோ விபு^{4}ராத்மா மஹேஶ்வர:
தஸ்யைவாம்சோ^{5} ஜீவலோகே ஹ்ருத^{3}யே ப்ராணினாம் ஸ்தி^{2}த: (28)

வியாக்யானம்: - **ஸத்ய ஞானாத்மக:** - சத்தியஞானவடிவனும், **அனந்த:** - தேசகாலவரையற்றவனும், **விபு:** - வியாபகனுமாயுள்ள, **ஆத்மா** - ஆன்மாவனவர், **மஹேச்வர:** - மகேச்வரனாவார், **தஸ்ய ஏவ அம்ச:** - அவருடைய அம்சமே, **ஜீவலோக** - சீவலோகத்தில், **ப்ராணிநாம்** - பிராணிகளது, **ஹ்ருதயே** - இருதயத்தினில், **ஸ்தித:** - உள்ளவன்.

பொழிப்புரை: - ஸத்தியஞானவடிவனும் தேசகாலவரையற்றவனும் - விபவு (மான) ஆன்மாவே மஹேச்வரனாவான். அவனுடைய அம்சமே ஜீவலோகத்தில் பிராணிகளுடைய இருதயத்திலுள்ளவன்.

நுட்பம்: - முந்திய சுலோகத்தில் சம்புவுக்கடங்கியதே மாயையென்று கூறிய பாசத்தினைத் துலைக்க வேண்டுமாயின் அதையடக்கியாளுவோனான சிவபெருமானது சொரூபம் விளங்கவேண்டுமாதலின் அவனிலக்கணத்தைச் சத்திய ஞானானந்த வென்பதாதியால் கூறிப் பின்னர் ஆன்மாவினிலக்கணத்தையும், அவனம்சமே யென்பதாதியால் கூறினார். பரமான்மா வியாபகச்சித்தாதல்போல ஆன்மா ஏகதேசச்சிக்காய் விளங்கலின் சாதி யொருமைப்பற்றி அம்சமெனவும், பரமான்மா ஆன்மாவிடத்து அத்துவிதமுற்றிருத்தலின் பிராணிகள் இருதயத்திலுள்ள வனென்றும் கூறினார்.

பிரமாணம்: -

தாயுமானவர்.

அப்பொருளு மான்மாவு மாரணநூல் சொன்னபடி
தப்பிலாச் சித்தொன்றாஞ் சாதியினா லெப்படியுந்
தேரிற்றுவிதஞ் சிவாகமமே சொல்லுநிட்டை
யாரு மிடத்தத்து விதமாம்.

ஶ்லோகம்.

விஸ்பு^{2}லிங்கா^{3} யதா^{2} வஹ்னேர் ஜாயந்தே காஷ்ட^{2}யோக^{3}த:
அனாதி^{3} கர்ம ஸம்ப^{3}த்தா^{4}: தத்^{3}வத^{3}ம்ஶா மஹேஶிது: (29)

வியாக்யானம்: - **யதா** - எங்ஙனம், **காஷ்டயோகத:** - கட்டையின் ஸம்பந்தத்தால், **வஹ்நே:** - நெருப்பினின்றும், **விஸ்புலிங்கா:** - தணற்பொறிகள், **ஜாயந்தே** - உண்டாகின்றனவோ, **தத்வத்** - அது போலவே, **அநாதிகர்மஸம்பத்தா:**- அனாதியான கருமங்களோடு பொருந்தியவர்களும், **மஹேஶித:** - மகேச்வரனது, **அம்சா:** - -அம்சங்களுவார்கள் (சீவர்கள்).

பொழிப்புரை: - எங்ஙனம் கட்டையின் ஸம்பந்தத்தால் நெருப்பினின்று தணற்பொறிகள் உண்டாகின்றனவோ அங்ஙனமே அனாதி கருமங்களிற் பொருந்திய வர்களும் மகேசவரனது அம்சங்களாயு முள்ளவர்கள் சீவர்கள்.

நுட்பம்: - ஈண்டும் அம்சமென்றது இரண்டுஞ் சித்தென்னுந் தருமநோக்கி ஔபசாரிகமாய்க் கூறப்பட்டது.

பிருகதாருண்ணியம்.

யதாக்நேர்விஸ்புலிங்காவ்யுச்சரந்தி ஏவமேவாஸ்மாதாத்மந:

ஸ்லோகம்.

அனாதி³ வாஸனாயுக்தா: க்ஷேத்ரஜ்ஞா இதி தே ஸ்ம்ருதா:
மனோ பு³த்³தி⁴ ரஹங்கார ஸ்சித்தம்சேதி சதுஷ்டயம் (30)

வியாக்யானம்: - **அனாதிவாஸநாயுக்தா:** - அநாதிவாஸமையுடையவர் களான, **தே** - அச்சீவர்கள், **க்ஷேத்ரஜ்ஞா இதி** - க்ஷேத்திரஞ்ஞர்கள் என்று, **ஸ்ம்ருதா:** - கூறப்பட்டவர்கள், **மன:** - மனம், **புத்தி:** - புத்தி, **அஹங்கார:** - அகங்காரம், **சித்தஞ் சேதி** - சித்தம் என்று இங்ஙனம், **சதுஷ்டயம்** - நான்குளது.

பொழிப்புரை: - அனாதி வாசனை யுடையவர்களான அச்சீவர்கள் க்ஷேத்திர ஞ்ஞர்கள் என்று கூறப்படுவார்கள், மனம் புத்தி சித்த மகங்காரமென நான்குளது.

நுட்பம்: - இங்கு அனாதி வாஸநையுடைய வர்களென்றதனால் வாஸநையால் வந்த பலத்தைப் புசிப்பவர்கள் என்பது அறிக. இனிச், சீவசொரூபத் தையறியச், சாதனமான அந்தக்கரணத்தின் உருவத்தைக் கூறுகின்றனர், மனம் புத்தியென்பதாதியால்.

ஸ்லோகம்.

அந்த:கரணமித்யாஹு தத்ர தே ப்ரதிபி³ம்பி³தா:
ஜீவத்வம் ப்ராப்னுயு: கர்ம ப²ல போ⁴க்தார ஏவ தே (31)

வியாக்யானம்:- அந்தக்கரணம் - (முற்கூறிய நான்கும்) அந்தக்கரணம், **இதி ஆஹு**: - என்று கூறுகின்றார்கள்; **தத்ர** - அங்கு, **ப்ரதி பிம்பிதா:** - ப்ரதிபிம்பித்தவர்களான, *தே* - அவர்கள், **ஜீவத்துவம்** - சீவத்து வத்தை, **ப்ராப்னுயு:** - அடைவார்கள், **தே ஏவ** - அவர்களே, **கர்மபல போக்தார:** - கருமபலத்தைப் புசிப்பவர்களாம்.

பொழிப்புரை: - முற்குறிக் கப்பட்ட நான்கும் அந்தக்கரண மென்று கூறப்படும் (அதனில் பிரதிபிம்பித்தவர்கள்) சீவத்து வத்தைப்பெறுவோர்கள். அவர்களே கரும்பலத்தைப் புசிப்பவர்கள்.

நுட்பம்: - இங்கு பிரதிபிம்பித்தவர்கள் என்றதனால் எங்ஙனம் பிரதிபிம்பத் திற்கு ஏதுவான நீர்முதலிய பொருள்கள் நீங்கினால் பிரதிபிம்பம் துலைகின்றதோ அங்ஙனமே சீவத்து வத்திற்கு ஏதுவான பாசம் நீங்கினால் கீவத்துவம் துலைகின்றது என்பதை யிதவாலறிக.

ஶ்லோகம்.

ததோ வைஷயிகம் தேஷாம் ஸுக²ம் வா து³:க்க²மேவ வா
த ஏவ பு⁴ஞ்ஜதே போ⁴கா³யதனேsஸ்மிஞ் ச²ரீரகே. (32)

வியாக்யானம்: - **தத**: - ஆதலால், **தஏவ** - அவர்களே, **தேஷாம்** - அவர்களது, **வைஷயிகம்** - விஷயஸம்பந்தமான, **ஸுகம் வா** - ஸுகத்தையாவது, **துக்கம் ஏவவா** - துக்கத்தையாவது, **போகாயதனே** - புசிப்பதற்கிடமாகிய, **அஸ்மிந் சரீரகே** - இச்சரீரத்தின்கண், **புஞ்ஜதே** - புசிக்கின்றார்கள்.

பொழிப்புரை: - ஆதலால அவர்களே அவர்களது விஷயஸம்பந்தமான சுகத்தையும் அல்லது துக்கத்தையும் புசிக்கவிடமான இச்சரீரத்தின்கண் ணனுபவிக் கின்றார்கள்.

ஶ்லோகம்.

ஸ்தா²வரம் ஜங்க³மஞ்சேதி த்³விவித⁴ம் வபு ருச்யதே
ஸ்தா²வரா ஸ்தத்ர தே³ஹா: ஸ்யு: ஸூக்ஷ்மா கு³ல்ம லதாத³ய: (33)

வியாக்யானம்: - **வபு**: - சரீரம், **ஸ்தாவரம்** - ஸ்தாவரம், **ஜங்கமஞ்ச** - ஜங்கமும், **இதி** - என்று, **த்விவிதம்** - இருவிதமாய், **உச்யதே** - கூறப்படுவதாம், **தத்ர** - ஆண்டு, **ஸ்தாவரா:** - ஸ்தாவரங்கள், **வ்ருக்ஷா:** - விருக்ஷங்கள், **ஸூக்ஷ்மா:** - சூக்குமங்களான, **குல்மலதாதய:** - செடி கொடி முதலியவைகளே, **ஸ்யு:** - ஆவன.

பொழிப்புரை: - சரீரமானது தாவரம் ஜங்கமம் என்றிருவகை'யாம் ஆண்டுத்தாவரங்கள் விருக்ஷங்கள் சூக்குமங்களான செடி கொடி முதலியன.

ஶ்லோகம்.

அண்ட²ஜா: ஸ்வேத³ஜா ஸ்தத்³வ து³த்²பி⁴ஜ்ஜா இதி ஜங்க³மா:
யோனிமன்யே ப்ரபத்³யந்தே ஶரீரத்வாய தே³ஹின: (34)

ஸ்தா²ணுமன்யே஽னுமீயந்தே யதா²கர்ம யதா²ஶ்ருதம்
ஸுக்²யஹம் து³: க்²யஹம் சேதி ஜீவ ஏவா஽பி⁴மன்யதே. (35)

வியாக்யானம்: - **ஜங்க³மா:** - ஜங்கமங்கள், **அண்ட²ஜா:** - முட்டையிலிருந் துந்தோன்றுவதான பக்ஷிபாம்புமுதலியன, **ஸ்வேத³ஜா:** - வியர்வையிலிருந்துண் டாவன, **தத்³வத்** - அங்ஙனமே, **கர்ப்பஜா:** - கரு ப்பையினின்றுண்டாவன, **இதி** - என (வழங்கப்படும்) **அந்யேதேஹின:** - இதர தேகிகள் (தேவர்கள்), **ஶரீரத்வாய** - சரீரத்துவத்தின் பொருட்டு, **யோனிம்** - கர்ப்பகோசத்தை, ப்ரபத்3யந்தே - அடைகின் றார்கள்.

அந்யே - இதரர்கள் (நரகிகள்), **யதாகர்மம், யதாச்ருதம்** - கர்மத்திற்கும் மறைக்குமிணங்க, **ஸ்தாணும்** - ஸ்தாவரசரீரத்தை, **அனுஸம்யந்தி** - அடைகின்றனர், **அஹம், ஸுகி**, - யான் சுகி, **அஹம், துக்கி, ச,** - யான் துக்கியென்று, **ஜீவ ஏவ** - சீவனே, **அபிமந்யதே** - அபிமானிக்கின்றான்.

பொழிப்புரை: - ஜங்கமங்கள், அண்டஜங்கள் ஸ்வேதஜங்கள் கருப்பஜங்கள் என் வழங்கப்படும் (தேவர்) இதர தேஹிகள் சரீரத்தைப் பெறுவதற்கெனக் கருப்பையை யடைகின்றனர் மற்றவர்கள் (அதாவது நரகிலிருந்து வருவோர்) கருமங்களுக்கும் சாத்திரங்களுக்கு மிணங்க (ஸ்தாவரம்) புல்பூண்டு செடி கொடி மரங்களாய் இருக்குந் தன்மையை யடைகின்றனர். யான் சுகி யான் துக்கியென்று சீவனேயாபிமானிக்கின்றவன்.

ஶ்லோகம்.

நிர்லேபோ஽பி பரம் ஜ்யோதிர் மோஹித: ஶம்பு⁴ மாயயா (36)

வியாக்கியானம்: - **நிர்லேப:** - நிர்லேபனும், **பரம்ஜ்யோதி: அபி** - பரஞ்சோதி யாவோனுமாயினும், **சம்புமாயயா** - சம்புமாயையால், **மோஹித:** - மயங்குவோனா கின்றான்.

நுட்பம்: - முந்திய சுலோகத்தில் சீவனே சுகியென்றும் துக்கியென்றும் அபிமானிக்கின்றான் என்று கூறப்பட்டது, பிறகு மாயை துலைந்தால் எவன்

பரஞ்சோதியும் சுகதுக்க மற்றவனுமாகின்றானோ அவனே சுகிதுக்கியென்ற வனுபவ த்தையுடையோன் என்பது எங்ஙனமொவ்வுமெனின் அதற்கேதுவை ஆன்மாவின் கன்மத்திற்குக் தக்கபடி சம்புவாற் காரியப்படுத்துகிற மாயையால் மோகத்தைப் பெற்று என்று கூறினார்.

ஸ்லோகம்.

காம: க்ரோத^{4} ஸ்த்தா^{2} லோபோ^{4} மதோ^{3} மாத்ஸர்ய மேவ ச
மோஹஸ்சேத்யரி ஷட்வர்க^{3} மஹங்கார க^{3}தம் விது^{3}: (37)

வியாக்யானம்: - **காம:** - காமம், **க்ரோத:** - க்ரோதம், **ததாலோப:** - அங்ஙனமே லோபமும், **மத:** - மதமும், **மாத்ஸாய: ஏவச** - மாச்சரியமும், **மோஹ:ச** - மோஹமும், **இதி அரிஷட்வர்க்கம்** - ஆகிய இவ்வறுவகைச் சத்துருக்களும், **அகங்காரகதம்** - அகங்காரத்தினிலடங்கியது என்று, **விது:** - அறிகின்றார்கள்.

பொழிப்புரை: - காமம் குரோதம் லோபம் மதம் மாச்சரியம் மோஹம் எனுமிவ்வாறு பகைகளும் ஆங்காரத்தினிலடங்கு மெனப்படும்.

ஸ்லோகம்.

ஸ ஏவ ப^{3}த்^{4}யதே ஜீவ: ஸ்வப்ன ஜாக்^{3}ர த^{3}வஸ்த^{2}யோ:
ஸுஷுப்தௌ தத^{3}பா^{4}வாஶ்ச ஜீவ: ஶங்கரதாம் க^{3}த: (38)

ஸ ஏவ மாயயா ஸ்ப்ருஷ்: காரணம் ஸுக^{2} து^{3}:க்க^{2}யோ: (39)

வியாக்யானம்: - **ஸ:** - ஜீவ:, **ஏவ** - அச்சீவனே, **ஸ்வப்நஜாக்ரதவஸ்தயோ:** - சொப்பனம் சாக்கிரமிவ்விரு அவத்தைகளிலும், **பத்யதே** - கட்டுப்படுகிறான், **ஜீவ:** - சீவன், **ஸுஷுப்தௌ -** சுஷுப்தியில், **ததபாவாச்ச** - அஃதிராததால், **சங்கரதாம்** - சுகத்தையனுபவிக்குந்தன்மையை, **கத:** - அடைந்தவனாகின்றான், **ஸ:ஏவ** - அவனே, **மாயயா** - மாயையால், **ஸ்ப்ருஷ்ட:** - சம்பந்திக்கப் பெற்றவனாய்க்கொண்டு, **ஸுகதுக்கயோ:** - சுகதுக்கங்களுக்கு, **காரணம்** - ஏதுவாகின்றான்.

பொழிப்புரை: - அச்சீவனே ஜாக்கிரம் ஸ்வப்நம் என்ற வவஸ்தைகளில் கிடந்துழலுகின்றான். சுழுப்தியில் அந்தக்கரணம் ஒடுங்கி யிருக்கின்றமையால் சீவன் சிவனாகின்றான் அதாவது சுகமடைகின்றான். பின்னரும் அவனே மாயா கருமத்தால சுகதுக்கம்பெற்று அல்லல்படுகின்றான்.

நுட்பம்: - இங்கு மூலத்தில், சுஷுப்தி காலத்தினில் சங்கரத்துவத்தை யடைகின்றான் என்று கூறியுளதாயினும் சங்கரத்துவம் என்றதற்குச் சுகத்தை

யனுபவிக்குந் தன்மையென்றே பொருள் கொள்ள வேண்டியதே யுசிதம். என்னை? தத்துவ காரியங்கள் பெரும்பாலு மில்லையாகலின் என்க.

கைவல்லியோபநிடதம்.

பிரமாணம் - *ஸுஷுப்திகாலேசகலேவிலீநே தமோபிபூகஸ்ஸுகரூபமேதி.*

சுஷப்திகாலத்தினில் எல்லா மொடுங்கவே தமசினால் ஆகரமிக்கப்பட்டுச் சுகரூபனாகின்றான்.

ஶ்லோகம்.

ஶுக்தௌ ரஜதவத்3 விஶ்வம் மாயயா கல்ப்யதே சி4வே
ததோ விவேக ஞானேன ந கோ ப்யத்ராஸ்தி து3:க்க2பா4க். (40)

வியாக்யானம்: - **ஶுக்தௌ** - இப்பியில், **ரஜகவத் -** வெள்ளிபோல விஶ்வம் - எல்லாம், **சி4வே** - சிவனிடம், **மாயயாதிருச்யதே** - மாயையால்காணப்படுகிறது, **தத:** - ஆதலால், **விவேக ஞானேன ந** - விசாரித்தவறிவால், **அத்ர** - இங்கு, **க அபி** - ஒருவனும், **துக்கபாக்** - துக்கத்தைப்பெறுவோனாக, **நாஸ்தி** - இல்லை.

பொழிப்புரை: - இப்பியில் வெள்ளிபோல எல்லாப் பிரபஞ்சமும் சிவனிடம் மாயையால் காணப்படுகின்றது. ஆதலால் ஈண்டு விசாரித்தறியுங்கால், துக்கமடைவோனெவனுமில்லை.

நுட்பம்: - இப்பியில் வெள்ளி போலென்றதனால், இப்பியை யறியாதகாலத்து வெள்ளி தோன்றுவதும் இப்பி தோன்றிய காலத்து வெள்ளி தோன்றாததும் எங்ஙனமோ அதுபோல, சிவஞான மிராத காலத்து உலகுதோன்றும், சிவஞான காலத்தில் உலகு தோன்றாது என்பதறிக, சிவனிடம் என்றதனால் சிவனே ஸர்வாதாரன் என்பதும் மாயையால் என்றதனால், மாயையே யுலகாய்ப் பரிணமிக்கின்ற தென்பதுமறிக.

ததோ விரம து3:க்கா2த் த்வம் கிம் முதா4 பரிதப்யஸே (40)

இராமர் வினா

முனே! ஸர்வமித3ம் ஸத்யம் யன் மத3க்3ரே த்வயேதி3தம்.

வியாக்யானம்: - **தத:** - ஆதலால், **த்வம்** - நீ, **துக்காத்** - துக்கத்தினின்றும், **விரம** - ஒழிவடைவாயாக, **கிம்** - ஏன், **முதா** - வியர்த்தமாக, **பரிதப்யஸே** - பரிதவிக்கிறனை, இராமன் கூறியதாவது, **முனே** - ஓ முனிவரே, **மத3க்3ரே** -

எனக்கெதிரில், **த்வயா** - உங்களால், **யத்** - யாதொன்று, **ஈரிதம்** - கூறப்பட்டதோ, **இதம் ஸர்வம்** - இதெல்லாம், **ஸத்யம்** - உண்மை.

பொழிப்புரை: - ஆதலால் நீ துக்கத்தினின்று ஒழிவடைவாயாக என் வியர்த்தமாய்த் தவிக்கின்றனை. இராமன் ஓ முனிவரே என்னிடம் தங்களால் கூறப்பட்டதெல்லாம் உண்மையே.

ஶ்லோகம்.

ததா^{2}பி ந ஜஹாத் யேதத் ப்ராரப்^{3}தாத்^{3}ருஷ்ட முல்ப^{3}ணம்
மத்தம் குர்யாத்^{3} யதா^{2} மத்^{3}யம் நஷ்டா வித்^{3}யமபி த்^{3}விஜம். (41)

வியாக்யானம்: - **ததாஅபி** - அங்ஙனமாயினும், **ஏதத்**- இத்துக்கமானது, **நஜஹாதி** - விடவில்லை, **உல்பணம்** - கடுமையான, **ப்ராரப்தாத்ருஷ்டம்** - பிராரப்தகருமமானது, **யதா** - எங்கனம், **மத்யம்** - மத்யமானது, **நஷ்டாவித்யம்** - அவித்தை துலையப்பெற்றவனாகிய, **த்விஜம்அபி** - அந்தணனையும், **மத்தம் குர்யாத்** - மதிக்கச்செய்கின்றதோ. (அவ்வாறு என்றறிக.)

பொழிப்புரை: - அங்ஙனமாயினும் இந்தத் துக்கமானது விடவில்லை. கடுமையான ப்ராரப்தகருமமானது அஞ்ஞானம் நீங்கிய வந்தணனையும் எவ்வாறு கள்ளானது மதிக்கச்செய்யுமோ அவ்வாறென்க.

நுட்பம்: - இங்குப் பிராப்தமானது என்றதனால் - அனுபவிக்கத் தொடங்கிய வினை, யதாவது ஸஞ்சிதம், ப்ராரப்தம், ஆகாமியம் என்பதான முவ்வகைக் கருமத்தினுள் ஏற்கனவே சம்பாதித்துப் பரிபாகமில்லாமல் அப்பரிபாகத்தை எதிர் பார்த்துக்கொண்டு அந்தக்கரணத்தில் பொருந்தி வாஸநாமயமாய் நிற்கும் கருமமே சஞ்சிதமாம் இச்சஞ்சி தகருமங்களுள் பரிபாகப்பட்டு அனுபவிக்க எழுந்த கருமமே பிராரப்தம். அனுபவிக்கவந்த இச்சென்மத்தில் இனிச் செய்யுங்கருமமே ஆகாமிய மாம். இதனுள் பிராரப்தத்தைத்தடுக்க மாளாது. அது ஞானத்தினாற்றுலையாது. இதற்குதாரணம் ஞானியாயினும் கட்குடித்தால் அவனுக்கு எங்ஙனம் மதத்தை யுண்டாக்குமோ அங்ஙனமே பிராரப்தமும் வருத்துபாதாம் ஞானத்தினாற்று லையாதென்றறிக. இதையேபின் னிரூபிக்கின்றனர்.

ஶ்லோகம்.

தத்^{3}வத் ப்ராரப்^{3}த^{4} போ^{4}கோ^{3}ऽபி ந ஜஹாதி விவேகினம்
தத: கிம் ப^{3}ஹுனோக்தேன ப்ராரப்^{3}த^{4}ம் ஸ ஶிவ: ஸ்ம்ருத: (42)

வியாக்யானம்: - **தத்^{3}வத்** - அதுபோல, **ப்ராரப்^{3}த4 போக:** - பிராப்தகரும மானது, **விவேகிநம் அபி** - விவேகியைக்கூட, **நஜஹாதி** - விட்டுவிடாது, **தத:** -

ஆதலின், **ப³ஹுநோக்தேன** - மிக்கக்கூறுவதால், **கிம்** - யாதுளது, **ப்ராரப்தம்** - பிராரப்தமானது, **ஸ: ஶிவ:** - அச்சிவனென்றே, **ஸ்ம்ருத:** - தீர்மானிக்கப்பட்டது.

பொழிப்புரை: - அதுபோல ப்பிராரப்தகருமமானது விவேகியைக்கூடவிடாது. ஆதலின் மிக்கக்கூறுவதால் யாதுபயன் பிராரப்தமானது சிவன் என்று எண்ணப் பட்டது. இங்குச் சிவன் என்று கூறியது ஔபசாரிகவபேதம் என்பதறிக. சிவபெருமா னைத் தடுப்பது எவராலும் மாளாததுபோல பிராரப்தத்தையும் தடுக்கமாளாது ஆதலால் அங்ஙனம் கூறப்பட்டது. சிவபெருமான் என்ற சொல்லுக்கு முற்கூறிய ஒப்புமை ஸம்பந்தத்தால் கௌணவிருத்தியிலக்கணையால் வலியுடையது என்று ஆகுபெயர்கொள்க.

ஶ்லோகம்.

பா³த⁴தே மாம் தி³வாராத்ர மஹங்காரோsபி தாத்³ருச⁵:
அத்யந்த பீடி³தோ ஜீவ: ஸ்தூ²ல தே³ஹம் விமுஞ்சதி (43)

வியாக்யானம்: - **தாத்ருச:** - அங்ஙனமான, **அஹங்காரோபி** - அஹங்கார மும், **மாம்** - என்னை, **திவாராத்ரம்** - இரவும் பகலும், **பாததே** - தொந்தரவு செய்கின்றது, **அத்யந்தபீடித:** - மிக்கத்தொந்தரவு பெறுவானாகில், **ஜீவ:** - சீவன், **ஸ்தூலதேகம்** - தூலதேகத்தினை, **விமுஞ்சதி** - விடுகின்றான்.

பொழிப்புரை: - அங்ஙனமான அகங்காரமும் என்னை இரவும் பகலும் தொந்தரவு செய்கின்றது, மிக்கத்தொந்தரவடைவானாகில் சீவன் தூலதேகத்தை விடுகின்றான்.

ஶ்லோகம்.

தஸ்மாஜ் ஜீவாப்தயே மஹய முபாய: க்ரியதாம் த்³விஜ (44)

வியாக்யானம்: - **தஸ்மாத்** - ஆதலால், **ஜீவாப்தயே** - ஜீவிப்பதன் நிமித்தம், **மஹ்யம்** - எனக்கு, **உபாய:** - உபாயமானது, **த்வயா** - உங்களால், **க்ரியதாம்** - கற்பிக்கத்தக்கது.

பொழிப்புரை: - ஆகையால் (நான்) சீவிப்பதின் பொருட்டு எனக்கொரு உபாய மானது உம்மால் சொல்லத்தக்கது.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்.

அகஸ்தியர்விடை.

ந க்^{3}ருஹணாதி வச: பத்^{2}யம் காம க்ரோதா^{4}தி^{5} பீடி^{3}த:
ஹிதம் ந ரோசதே தஸ்ய முமூர்ஷோரிவ பே^{4}ஷஜம். (1)

வியாக்யானம்: - **காமக்ரோதாதிபீடித:** - காமக்குரோதாதிகளால் பீடிக்கப் பட்டவன், **பத்யம்வச:** - இதமானசொலலை, **ந க்^{3}ருஹ்ணாதி** - கேட்கின்றதில்லை, **தஸ்ய** - அவனுக்கு, **முமூர்ஷோ:** - உயிர்துறப்போருக்கு, **பேஷஜம்இவ** - மருந்துபோல, **ஹிதம்** - இதமானது, **நரோசதே** - ருசிப்பதில்லை.

பொழிப்புரை: - காமக்குரோதம் முதலியவைகளால் பீடையடைந்தவன் இதமான சொல்லைக் கேட்கிறதில்லை. ஆயுள் முடிந்தவனுக்கு ஔஷதம் யுக்தமாய்த்தோன்றாததுபோல் அவனுக்கும் இதம் ருசிக்காது.

நுட்பம்: - சென்ற அத்தியாயத்தினிறுதியில், துக்கமடையாம லிருப்பதற்கு யாதாவது கூறவேண்டுமென்ற இராமரது வசனத்திற்கு இச்சுலோகத்தினால் பதிலுரைக்கின்றார். ஓ ராம! நீ துக்கமடையாதிருக்க வேண்டுமாயின் துக்க ஏதுக்களான காமக்குரோதாதிகளாய அறுபகையும் துலைக்கவேண்டுமாதலால் அங்ஙனம் துலைப்பதற்குறிய தத்துவத்தை யுபதேசித்தேன், அது உனக்கு சிதமாய்ப் புலப்படவில்லை யென்பதைப்பொதுவாய்க்கூறி அதற்கு ஓர் உதாரணமும் இச்சுலோ கத்திலேயே கூறப்பட்டது.

ஶ்லோகம்.

மத்^{4}யே ஸமுத்^{3}ரம் யா நீதா ஸீதா தை^{3}த்யேன மாயினா
ஆயாஸ்யதி நரஶ்ரேஷ்ட^{2}: ஸா கத^{2}ம் தவ ஸன்னிதி^{4}ம். (2)

வியாக்யானம்: - **நரஶ்ரேஷ்ட^{2}:** - ஒ நரச்ரேஷ்டனே, **மாயினா** - மாயாவியான, **தைத்யோன** - அரக்கனால், **மத்யேஸமுத்ரம்** - சமுத்திர நடுவில், **யாஸீதா** - யாதொரு ஸீதையானவள், **நீதா** - கொண்டு போகப்பட்டாளோ, **ஸா** - அச்சீதை, **தவ, ஸந்நிதிம்**, - உன்னருகில், **கதம்** - எப்படி, **ஆயாஸ்யதி** - வருவாள்.

பொழிப்புரை: - ஓ நரச்ரேஷ்டனே மாயாவியான அரக்கனால் சமுத்திர நடுவில் எந்தச்சீதை கொண்டு போகப்பட்டனளோ அச்சீதை உன் சந்நிதிக்கெவ்வி தம்வருவாள்.

நுட்பம்: - சீதை இராமனால் கிரகிக்கப்படுவளென்பது அகஸ்தியரறிந்தும் இராவணனுடைய பராக்கிரமத்தைக் குறிப்பாலுணர்த்துகின்றார்.

ஶ்லோகம்.

ப^{3}த்^{4}யந்தே தே^{3}வதாஸ் ஸர்வா: த்^{3}வாரி மர்க்கட யூத^{2}வத்
கிஞ்ச சாமர தா^{4}ரிண்யோ யஸ்ய ஸந்தி ஸூராங்க^{3}னா: (3)

வியாக்யானம்: - யஸ்ய - எவனது, **த்வாரி -** வாசற்படியில், **ஸர்வா:, தேவதா:** - எல்லாத்தேவர்களும், **மற்கடயூதவத்** - குரங்குக் கூட்டம்போல, **பத்தியந்தே** - கட்டப்படுகின்றார்களோ, **கிஞ்ச** - மேலும், **யஸ்ய** - எவனுக்கு, **ஸராங்கனா:** - தேவஸ்திரீகள், **சாமரக்ராஹிண்ய:** - சாமரம்பிடித்தவர்களாய், **ஸந்தி** - இருக்கின்றனரோ.

பொழிப்புரை: - எந்த ராவணனது வாசலில் எல்லா தேவர்களும் குரங்குக் கூட்டம்போல கட்டுப்பட்டுநிற்கின்றார்களோ அன்றியும் எந்த அரக்கனுக்குத் தேவ மங்கையர்களெல்லோரும் சாமரம் வீசுகின்றனரோ.

முந்திய சுலோகத்தில், சீதை எப்படி உன்னிடம் வரக்கூடும், என்று கூறினார், அங்ஙனம் அவள் வரமாளாது என்பதற்கு ஏதுக்களை இச்சுலோகம் தொடங்கி நான்கு சுலோகங்களால் கூறுகின்றார். அவ்வேதுக்களோவெனின், மிக்க பாரக்கிரமமுள்ள அவ்வரக்கனால் கொண்டுபோகப்பட்ட சீதையைக்கொண்டு வரவேண்டுமானால் அவ்வரக்கனை வென்றால் தான் முடியும் அவனையோவெல்லமாளாது என்று கூறத்தொடங்கினார்.

ஶ்லோகம்.

பு^{4}ங்க்தே த்ரிலோகீ மகி^{2}லாம் ய: ஶம்பு^{4}வரத^{3}ர்பித:
நிஷ்கண்டகம் தஸ்ய ஜய: கத^{2}ம் தவ ப^{4}விஷ்யதி (4)

வியாக்யானம்: - ய: - எவன், **ஶம்புவாதர்ப்பித:** - சிவபெருமானது வரன்களால் கர்வமடைந்தவனாய்க்கொண்டு, **த்ரிலோகீம் அகி^{2}லாம்** - முவ்வுல கனைத்தையும், **நிஷ்கண்டகம்** - தடையற்று, **பு^{4}ங்க்தே** - புசிக்கின்றானோ, **தஸ்ய** - அவனுடைய, **ஜய** - ஜயானது, **தவ** - உனக்கு, **கத^{2}ம்** - எங்ஙனம், **ப^{4}விஷ்யதி** - ஏற்படும்.

பொழிப்புரை: - எவன் சிவபெருமானது வரத்தினால் கர்வமடைந்தவனாய் முவ்வுலகனைத்தும் இடையூறற்றுப் புசிக்கின்றானோ அவனை நீ எவ்விதம் செயிக் கக்கூடும்.

ஶ்லோகம்.

இந்தி^{3}ரஜின் நாம புத்ரோ யஸ்தஸ்யாஸ்தீஶ வரோத்^{3}யத:
தஸ்யாக்^{3}ரே ஸங்க^{3}ரே தே^{3}வா ப^{3}ஹுவாரம் பலாயிதா: (5)

வியாக்யானம்: - **ய:** - எவன், **ஈசவரோத்தத:** - ஈஸ்வான் கொடுத்த வரங்கள ளால் மதங்கொண்டவனும், **இந்திரஜித்** - இந்திரஜித், **நாம** - என்று பிரசித்தி பெற்றவனுமாய் உளனோ அவன், **தஸ்ய** - அந்த ராவணனுக்கு புத்ரன், **தஸ்ய** - அவ்விந்திரஜித்தின், **அக்ரே** - முன், **ஸங்கரே** - உயுத்தத்தில், **தேவா:** - தேவாகள், **பஹுவாரம்** - அநேக முறை, **பலாயிதா:** - பயந்து ஓடினவர்கள்.

பொழிப்புரை: - எவன் சிவபெருமானது வரங்களால் மதித்தவனுமாய் இந்திரசித்தென்று பிரசித்தி பெற்றவனுமா, யிருக்கின்றானோ. அவன் ராவணனுக்குப் புதல்வன், அவனெதிரில் உயுத்தத்தில் நிற்கமாளாது தேவர்களும் பன்முறை பயந்தோடினார்கள்.

ஶ்லோகம்.

கும்ப^{4}கர்ணாஹ்வயோ ப்^{4}ராதா யஸ்யாஸ்தி ஸுரஸுத^{3}ன:
அன்யோ தி^{3}வ்யாஸ்த்ர ஸ்ம்பன்னஶ் சிரஞ்சீவீ விபீ^{4}ஷண: (6)

வியாக்யானம்: - **ஸரஸுத^{3}ன:** - தேவருக்கந்தகனான, **கும்ப^{4}கர்ணாஹ்வய:** - கும்பகருணனென்பவன், **யஸ்ய** - எவனுக்கு, **ப்^{4}ராதா** - சகோதரனோ எவனுக்கு, **அன்ய:** - மற்றொரு சகோதரன், **திவ்யாஸ்திர ஸம்யுக்த:** - திவ்வியாஸ்திரங் களையுடையோனும், **சிரஞ்சீவி** - வெகுகாலம் சீவித்திருப்பவனுமாகிய, **விபீஷண:** - விபீஷணனென்பவனோ.

பொழிப்புரை: - தேவருக்கந்தகனாய்க் கும்பகர்ணனென்று பெயருள்ளவன் எவனுக்குச் சகோதரனோ, எவனுக்கு மற்றொரு சகோதரன் திவ்வியாஸ்திரங்களை யுடையோனும் வெகுகாலம் சீவிப்போனுமான விபீஷண னென்பவனோ.

ஶ்லோகம்.

து^{3}ர்க^{3}ம் யஸ்யாஸ்தி லங்காக்^{2}யம் து^{3}ர்ஜயம் தே^{3}வ தா^{3}னவை:
சதுரங்க^{3} ப^{3}லம் யஸ்ய வர்ததே கோடிஸங்க்^{2}யயா. (7)

வியாக்யானம்: - **யஸ்ய** - எவனுக்கு, **துர்க்கம்** - எவராலும் போகமாளா ததான, **லங்காகாக்^{2}யம்** - இலங்கையென்ற நகரம், **அஸ்தி** - உளதோ, **யஸ்ய** - எவனுக்கு, **தேவதானவை:** - தேவாசுரர்களால், **துர்ஜ்ஜயம்** - ஜயிக்கமாளாததான,

சதுரங்கம்பலம் - நால்வகைச்சேனையும், **கோடிஸங்க்யயா** - கோடிக்கணக்காய், **வர்த்ததே** - இருக்கின்றதோ.

பொழிப்புரை: - எவனுக்கு எவராலும் போகக்கூடாததான லங்கையென்ற நகரம் உளதோ, எவனுக்குத் தேவாசுரர்களால் செயிக்கக்கூடாததும் கோடிக்கணக் காயுமுள்ள நால்வகைச் சைன்னியம் உளதோ.

ஶ்லோகம்.

ஏகாகினா த்வயா ஜேய: ஸ கத2ம் ரகு நந்த3ன!
ஆகாங்க்ஷதே கரே த4ர்த்தும் பா3லஶ் சந்த்3ரமஸம் யதா2

ததா2 த்வம் காம மோஹேன ஜயம் தஸ்யாऽபி4வாஞ்ச2ஸி (8)

வியாக்யானம்: - **ரகுநந்தன:** - ஓ ரகுவம்சத்திலுண்டான ராமனே, **ஸ:** - அவ்விராவணன், **ஏகாகினா** - ஒருவனான, **த்வயா** - உன்னால், **கதம்** - எப்படி, **ஜேய:** - செயிக்கப்படுவான், **பால:** - குழந்தை, **யதா** - எப்படி, **சந்த்3ரமஸம்** - சந்திரனை, **கரே த4ர்த்தும் -** கையில் வைத்துக்கொள்ள, **ஆகாங்க்ஷதே** - விரும்புகின்றதோ, **நதா** - அதுபோல, **த்வம்** - நீ, **காம மோஹேன** - காமமயக்கத்தால், **தஸ்ய** - அவனது, **ஜயம்** - ஜெயத்தை, **அபிவாஞ்ச2ஸி** - விரும்புகின்றாய்.

பொழிப்புரை: - ஓ ரகுநந்தனா அவ்விராவணன் ஒருவனாகிய உன்னால் எப்படி செயிக்கப்படுவான், குழந்தை சந்திரனைப் பிடித்துக் கையில் வைத்துக் கொள்ள எவ்விதம் விரும்புகின்றதோ அவ்விதமே நீ காமமயக்கத்தால் அவ்விராவ ணனை செயிக்க விரும்புகின்றாய்.

இராமர்வினா.

க்ஷத்ரியோऽஹம் முனிஶ்ரேஷ்ட2! பா4ர்யா மே ரக்ஷஸா ஹ்ருதா
யதி3 தன் ந நிஹந்ம்யாஶு ஜீவனே மேऽஸ்தி கிம் ப2லம். (9)

வியாக்யானம்: - **முனிஶ்ரேஷ்ட2** - ஒ முனிவர்கோனே, அஹம் - நான், **க்ஷத்திரிய:** - க்ஷத்திரியன், **மேபார்யா** - எனது மனைவி, ரக்ஷஸா - அரக்கனால், ஹ்ருதா - அபகரிக்கப் பட்டாள், **தம்** - அவ்வரக்கனை, **ஆசு** - சீக்கிரமாய், **ந நிஹந்மியதி** - கொல்லாவிடில், **மே** - எனக்கு, **ஜீவனே** - விப்பதில், **கிம் பலம் அஸ்தி** - என்ன பயனுள்ளது.

பொழிப்புரை: - ஒ முனிவரரே, யான் க்ஷத்திரியன் எனது மனைவி அரக்கனால் அபகரிக்கப்பட்டனள் அவ்வரக்கனைச் சீக்கிரமாய்க் கொல்லாவிடில் சீவிப்பதில் எனக்கு யாது பயன்.

ஶ்லோகம்.

அதஸ்தே தத்வபோ³தேன ந மே கிஞ்சித் ப்ரயோஜனம் (10)

வியாக்யானம்: - **அத:** - ஆதலால், **தே** - தங்களது, **தத்வபோ³தேன** - தத்துவஞான உபதேசத்தால், **மே** - எனக்கு, **ந கிஞ்சித் பிரயோஜனம்** - கொஞ்சமும் பிரயோஜனமில்லை.

பொழிப்புரை: - ஆதலால் தங்களது தத்துவோபதேசத்தால் எனக்கு ஒரு பயனுமில்லை.

ஶ்லோகம்.

காம க்ரோதா⁴த³ய ஸ்ஸர்வே த³ஹ்யதே தைஸ் தனுர் மம
அஹங்காரோ஽பி மே நித்யம் ஜீவனம் ஹந்து முத்³யத: (11)

வியாக்யானம்: - **காமக்ரோதாதய: ஸர்வே** - காமம் குரோதம் முதலியவை களெல்லாம் என்னிடமுள, **தை:** - அவைகளால், **மமதநு:** - எனதுதேகம், **தஹ்யதே** - கொளுத்தப்படுகின்றது, **அஹங்காரோபி** - அகங்காரமும், **மே** - எனது, **ஜீவம்** - ஜீவனை, **ஹந்தும்** - கொல்லுவதற்கு, **நித்தியம்** - எப்பொழுதும், **உத்யத:** - தயாராயிருக்கின்றது.

பொழிப்புரை: - காமம் குரோதம் முதலியவைகளெல்லாம் என்னிடமிருக் கின்றன. அவைகளால் எனது தேகம் கொளுத்தப்படுகின்றது. அகங்காரமும் எனது சீவனைக்கொல்லுவதற்கு எப்பொழுதும் தயாராகவேயிருக்கின்றது.

ஶ்லோகம்.

ஹ்ருதாயாம் நிஜகாந்தாயம் ஶ்த்ருணா஽வமதஸ்ய வா
யஸ்ய தத் வபு³பு⁴த்ஸா ஸ்யாத் ஸ லோகே புருஷா஽த⁴ம:

வியாக்யானம்: - **நிஜகாந்தாயாம்** - தனது மனைவி, **ஹ்ருதாயாம்** - அபஹிரி க்கப்பட்டிருக்கும்போது, **ஶ்த்ருணா஽வமதஸ்ய வா** - அல்லது சத்துருவால் அவமா னம் செய்யப்பட்டவனான, **யஸ்ய** - எவனுக்கு, **தத் வபு³பு⁴த்ஸா** - தத்துவஞா நேச்சையானது, **ஸ்யாது** - உண்டாகின்றதோ, **ஸ:** - அவன், **லோகே** - உலகத்தில், **புருஷாதம:** - புருஷருக்குள அதமனேயாவான்.

பொழிப்புரை: - தனது மனைவி அபகரிக்கப்பட்டிருக்கும் பொழுது அல்லது சந்துருவா லவமான மனடந்தவனாயிருக்கும் பொழுதாவது எவனுக்குத் தத்துவோப

தேசம் பெற அல்லது தத்துவாராயச்சி செய்யவேண்டுமென்ற விருப்பமுண்டா கின்றதே உலகத்தில் அவன் புருஷருக்குள அதமனேயாவான்.

ஶ்லோகம்.

தஸ்மாத் தஸ்ய வதோ[4]பாயம் லங்க[4]யித்வா஽ம்பு[3]தி[4]ம் ரணே
ப்[3]ரூஹி மே முனி ஶார்தூ[3]ல! த்வத்தோ நான்யோ஽ஸ்தி மே கு[3]ரு:

(13)

வியாக்யானம்: - **ரணே** - ஓ முனிவரே, **தஸ்மாத்** - ஆதலால், **அம்புதிம் லங்கயித்வா** - கடலைத் தாண்டி, **தஸ்ய வதோபாயம்** - அவனைக்கொல்லுமுபா யத்தை, **ப்[3]ரூஹி** - கூறுங்கள். **முனி ஶார்த்தூ[3]ல:** - ஒ முனிச்ரேஷ்டரே, **மே** - எனக்கு, **த்வத்த:** - உங்களிலும், **அந்ய: -** அந்நியரான, **கு[3]ரு:** - ஆசிரியர், **நாஸ்தி** - இல்லை.

பொழிப்புரை: - ஓ முநிவரே, ஆதலால் கடலைத்தாண்டி உயுத்தத்தில் அவனைக்கொல்லுவதில் எனக்கு உபாயத்தைக் கூறுங்கள் முனிவருட் சிறந்தவரே தங்களைத் தவிர எனக்கு வேறு குருவில்லை.

அகஸ்தியர்விடை.

அக[3]ஸ்த்ய உவாச

ஏவம் சேச்ச[2]ரணம் யாஹி பார்வதீபதி மவ்யயம்
ஸ சேத் ப்ரஸன்னோ ப[4]க[3]வான் வாஞ்சி[2]தார்த்த[2]ம் ப்ரதா[3]ஸ்யதி.

(14)

வியாக்யானம்: - **ஏவம்சேத்** - இங்ஙனமாயின், **அவ்யயம்** - அவ்யயரான, **பார்வதீபதிம்** - சிவபெருமானை, **சரணம்பாஹி** - சரணமடைவாயாக, **ஸ: பகவானு** - அப்பகவான், **ப்ரஸந்ந: சேத்** - பிரஸந்நராயின், **வாஞ்சி[2]தார்த்த[3]ம்** - விரும்பிய பொருளை, **ப்ரதாஸ்யதி** - கொடுப்பார்.

பொழிப்புரை: - இங்ஙனமாயின் அவ்வியயரான பரசிவத்தைச் சரணமடைவாயாக. அந்த பகவான் பிரஸந்நரானால் விரும்பிய பொருளைக் கொடுப்பார்.

ஶ்லோகம்.

தே[3]வைரஜேய: ஶ்க்ராத்[3]யைர் ஹரிணா ப்[3]ரும்மணாபி வா
ஸ தே வத்[4]ய: கத[2]ம் வா஽ஸ்து ஶங்கரானுக்[3]ரஹம் வினா **(15)**

வியாக்யானம்: - சக்ராத்யை: - இந்திராதிகளான, **தேவை:** - தேவர்களாலும், **ப்ரும்மணா** - பிரும்மனாலும், **ஹரிணாபிவா** - விஷ்ணுவாலும், **அஜேய:** - ஜெயிக்க மாளாதவனான, **ஸ:** - அவ்விராவணன், **சங்கரானுக்கிரஹம்விநா** - சிவபெருமானது திருவருளின்றி, **கதம்** - எங்ஙனம், **தே வத்ய: அஸ்து** - உன்னால் கொல்லப் படுவோனாவான்.

பொழிப்புரை: - இந்திராதிகளான தேவர்களாலும் பிரம்மனாலும் விஷ்ணுவினாலும் செயிக்கக்கூடாதவனான அவ்விராவணன் சங்கரனது அருளின்றி எங்ஙனம் உன்னால் கொல்லப்படுவோன் ஆவான்.

ஶ்லோகம்.

அதஸ்த்வாம் தீ3க்ஷயிஷ்யாமி விரஜாக3ம மாஶ்ரித:
தேன மார்க்கே3ண மர்த்யத்வம் ஹித்வா தேஜோமயோ ப4வ! (16)

வியாக்யானம்: - **அத:** - ஆகையால், **விரஜாகமம் ஆச்ரித்த:** - விரசாகமத்தை யாச்ரயித்தவனாய், **த்வாதீஷயிஷ்யாமி** - உனக்குத் தீக்ஷைசெய்துவைக்கின்றேன், **தேன மார்க்கேண** - அவ்வழியால், **மர்த்தியத்துவம்** - மனிதத் தன்மையை, **ஹித்வா** - விடுத்து, **தேஜோமய:** - தேஜோமயனாக, **பவ** - ஆய்விடு.

பொழிப்புரை: - அவ்விறைவனது அருளவேண்டுமாதலால் விரசாக்கிரமத்தைக்கொண்டு உனக்குத் தீக்ஷை செய்து வைக்கின்றேன் அம்முறையால் மனிதத் தன்மையைவிட்டு திவ்வியதேகமுடையோனாவாய்.

ஶ்லோகம்.

நுட்பம்: - சிவபெருமான் திருவருளினையடைய வேண்டுமாயின் தீட்சை யத்தியாவரிய மாகலின் இராமனைத் தீட்சை செய்து கொள்ளும்படி அகத்தியர் கூறினர்.

யேன ஹத்வா ரணே ஶத்ரூன் ஸர்வான் காமானவாப்ஸ்யலி

ஸூத உவாச:

அத2 ப்ரணம்ய ராமஸ்தம் தண்ட3வன் முனிஸத்தமம்
உவாச து3:க்க2 நிர்முக்த: ப்ரஹ்ருஷ்டேனாऽந்தராத்மனா (18)

வியாக்யானம்: - **யேன** - அவனது அருளால், **ஶத்ரூன்** - பகைவர்களை, **ரணே** - யுத்தத்தில், **ஹத்வா** - கொன்று, **ஸர்வான் காமான்** - எல்லாவிருப்பத்தையும், **அவாப்ஸ்யஸி** - பயன்படுத்திக்கொள்வாராக, **அத** - பிறகு, **ராம:** - இராமன்,

தம் - அம்முனிவரை, **தண்டவத்பிரணம்ய** - ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, **துக்கநிர்முக்த:** - துக்கத்தினின்று விடுபட்டு, **ப்ரஹ்ருஷ்டோ அந்தராத்மனா** - களித்தமனதுடையோனாய், **உவாச** - சொன்னான்.

பொழிப்புரை: - அவனதருளால் பகைவர்களை யுத்தத்தில் கொன்று விருப்ப மிமல்லாவற்மையும் பெற்றிடுவாயாக பிறகு இராமன் துக்க நீங்கிவனாப் அம்முனி வரரை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, களிந்த மனதையுடையோனாய்ச் சொல்லியதாவது.

இராமர்வினா.

க்ருதார்தோ²sஹம் முனே! ஜாதோ வாஞ்சி²தார்த்தோ² மமாக³த: பீதாம்பு³தி⁴: ப்ரஸன்னஸ்தவம் யதி³ மே கிமு து³ர்லப⁴ம்

அதஸ்த்வம் விரஜாம் தீக்ஷாம் ப்³ரூஹி மே முனிஸத்தம (19)

வியாக்யானம்: - **முனே** - ஒ முனிவரே, **அஹம்** - யான், **க்ருதார்த்த:ஜாத:** - க்ருதார்த்தனானேன், **மம** - எனக்கு, **வாஞ்சிதார்த்த:** - விரும்பியபொருள், **ஆகத:** - கிடைத்துவிட்டது, **பீதாம்புதி:** - கடலுண்டவரான, **த்வம்** - தாங்கள், **ப்ரஸந்நோயதி** - பிரஸந்தரானால், **மே** - எனக்கு, **துர்லபம்கிமு** - கிடைக்காததுயாதுளது, **முநிஸத்தம** - ஒ முனிவரரே, **அத:** - ஆதலால், **த்வம்** - தாங்கள், **மே** - எனக்கு, **விரஜாம்தீக்ஷாம்** - விரசாதீக்கையை, **ப்ரூஹி** - கூறுங்கள்.

பொழிப்புரை: - ஒ முனிவரே, யான் கிருதார்த்தனானேன். விரும்பியபொருள் கிடைத்தது. கடலுண்டவரான தாங்கள் எனக்குப்பிரசன்னரானால் கிடைக்காதது யாதுளது. ஓ முனிவரரே ஆதலால் விரசாதீக்ஷையைக் கூறுங்கள்,

அகஸ்தியர்விடை

ஶுக்ல பக்ஷே சதுர்த³ஶ்யா மஷ்டம்யாம் வா விஶேஷத: ஏகாத³ஶ்யாம் ஸோமவாரே ஆர்த்³ராயாம் வா ஸமாரபே⁴த். (20)

வியாக்யானம்: - அகஸ்தியர் கூறியதாவது. **ஶுக்ல பக்ஷே** - வளர் பிறையில், **சதுர்த்தஶ்யாம்** - சதுர்த்தசியில், **அஷடம்யாம்வா** - அல்லது அஷ்டமி யிலாவது, **விஶேஷத:** - விசேஷமாய், **ஏகாதச்யாம்** - ஏகாதசியிலாவது, **ஸோமவரே** - திங்கட்கிழமையில், **ஆர்த்ராயாம் வா** - அங்ஙனமே திருவாதிரை நக்ஷத்திரத்தில், **ஸமாரபேத்** - ஆரம்பிக்கவேண்டும்.

பொழிப்புரை: - இங்கு முனிவர் விரசாதீக்ஷையின் காலத்தைக் கூறுகின்றார். வளர்பிறையில் சதுர்த்தசியில் அல்லது அஷ்டமியிலாவது ஏகாதசியிலாவது திங்கட்கிழமையில் அங்ஙனம் திருவாதிரை நட்சத்திரத்தி லாரம்பிக்கவேண்டும்.

ஶ்லோகம்.

யம் வாம மாஹுர்யம் ருத்[3]ரம் ஶாஶ்வதம் பரமேஶ்வரம்
பராத்பரதரம் சாஹு: பராத்பரதரம் ஶிவம். (21)

வியாக்யானம்: - **பராத்பரம்** - பரத்திற்கும் பரனாள, **யம்** - எந்த (இறைவனை) **சிவம்** - சிவபெருமானை, **வாமம்** - அழகில் சிறந்தவனென்றும், **ருத்ரம்** - பவப்பிணியைப் போக்கடிப்பவனென்றும், **ஶாஶ்வதம்** - எக்காலத்து முள்ளவனெ ன்றும், **பரமேஶ்வரம்** - பரம இறைவனென்றும், **பராத்பரம்** - பிரும்ம விஷ்ணு ருத்திரர்களுக்கும் மேலானவனென்றும், **ஆஹ:** - கூறுகின்றார்களோ.

பொழிப்புரை: - முன்னர் காலத்தைக்கூறி, இங்குத் தேவதை தியானக் கிரமத்தைக் கூறுகின்றார். மேலானவருக்கும் மேற்பட்டவரான எந்த சிவபெருமானை அழகிற் சிறந்தவனென்றும் பிறப்பின் துக்கத்தைத் துலையச் செய்வோனென்றும், எக்காலத்து முள்ளவனென்றும், பரமேச்சுரன் மும்மூர்த்திகளுக் கும் இறைவனென்றும் (மாயையிலும்) அவ்வியத்தத்திலும் பரனென்றும் கூறுகின்றா ர்களோ.

ஶ்லோகம்.

ப்[3]ரஹமணோ ஜனகம்விஷ்ணோர் வாயோர்வஹ்னே
ஸ்ஸதா[3]ஶி வம்
(22)
த்[4]யாத்வாக்[3]னினாssவஸத்[2]யாக்[3]னிம் விசோ[5]த்[4]ய ச ப்ருத[2]க்
ப்ருத[2]க். (23)

வியாக்யானம்: - **ப்ரும்ஹண:** - பிரம்மனுக்கும், **விஷ்ணோ:** - விஷ்ணுவுக் கும், **வஹ்நே:** - அக்கினுக்கும், **ஜனகம்** - உத்பத்திஹேதுவான, **ஸதாசிவம்** - ஸதாசிவனை, **த்யாத்வா** - தியானித்து, **அக்[3]னினா** - அக்னியால், **ஆவஸத்[2]தியாக்[3]னிம்** - ஆவஸத்யமென்றவக்கிநியை, **ப்ருதக் பிருதக்** - தனித்தனி யாய், **விசோத்ய, ச** - நன்றாய்ச்சோதித்து.

பொழிப்புரை: - பிரம்ம விஷ்ணு அக்நி வாயுக்களை யுண்டாக்கியோனான ஸதாசிவனைத் தியானித்து, அக்நியால் ஆவசத்யமென்ற அக்நியைத் தனித்துத் தனியே சோதித்து.

அக்நியாலாவசத்யாக்நியை என்றதினால், ஞானவைராக்கிய ஐசுவரிய உருவமான கார்ஹபத்தியா ஹவநீயதக்ஷினாக்கிநியென்ற திரேதாக்கியால், ஆவசத்திய அக்நியை என்றதினால் அவஸத என்பதற்குத் தேகமென்று பொருள் கொள்க. அங்கு அக்நிபோல பிரகாசிக்கின்றவனாதலால் சீவனையே அக்நியாகக் கூறப்பட்டது. சீவனை இருபத்துநான்கு தத்துவங்களினின்றும் வேறு என விசாரித்து அறிந்து, இருபத்துநான்கு தத்துவங்களுக்கும் புறம்பேயுள்ளவன் சீவன் உருவது தத்துவமாவான் அவனிலும் புறம்பான உசுவது தத்துவத்தையுங் கடந்தவரே சிவபெருமானாவார்.

ஶ்லோகம்.

பஞ்ச பூ⁴தானி ஸம்யம்ய த்⁴யாத்வா கு³ணவிதி⁴ம் க்ரமாத்
மாத்ரா: பஞ்ச சதஸ்ரஶ்ச த்ரி மாத்ரா: த்³விஸ் தத: பரம். (24)

ஏகமாத்ர மமாத்ரம் ஹி த்³வாத³ஶாந்தே வ்யவஸ்தி²தம்
ஸ்தி²த்யாம் ஸ்தா²ப்யாsம்ருதோ பூ⁴த்வா வ்ரதம் பாஶுபதம் சரேத். (25)

வியாக்யானம்: - **பஞ்ச பூ⁴தானி** - ஐம்பூதங்களை, **ஸம்யம்ய** - நன்கறிந்து, **குணவிதிக்ரமாத்** - குணங்களின் விதியின் முறையின்படி, **த்யாத்வா** - சிந்தித்து, பஞ்ச, **மாத்ரா:** - ஐந்து மாத்திரைகளையும், **சதஸ்ர:** - நான்கு மாத்திரைகளையும், **த்ரிமாத்ரா:** - மும்மாத்திரைகளையும், **தத: பரம்** - அதன் பின்னர், **ஏகமாத்ரம்** - ஓர் மாத்திரையையும், **அமாத்ரம்** - மாத்திரையற்றதையும், **த்வாதசாந்தவ்யவஸ்திதம்** - த்வாதசாந்தத்திலுள்ளவனையும், **ஸ்தித்யா** - உற்பத்தி (யாதிக்கிரமத்தி) னால், **ஸ்தாப்ய** - சிந்தித்து (தீர்மானம் செய்து) **அம்ருத:, பூத்வா** - அம்ருதனாய் நின்று, **பாசுபதம், வ்ரதம்** - பாசுபதவ்ருதத்தை (விரசாதீக்ஷையை), **சரேத்** - செய்யவேண்டும்.

பொழிப்புரை: - ஐம்பூதங்களை அறிந்து, குணங்களது விதியின் முறைமையின்படி சிந்தித்து, ஐந்து மாத்திரைகளையும் நான்கு மாத்திரைகளையும், மும்மாத்திரைகளையும், இருமாத்திரைகளையும், பிறகு ஒரு மாத்திரையும், மாத்திரையற்றதையும் துவாதசாந்ததத்திலுள்ளவனையும் உற்பத்தியாதிக் கிரமத்தினால் சிந்தித்து, அமிருதனாய் இருந்து விரசாதீக்கை உருவமான பாசுபத விரதத்தைச் செய்வானாக.

நுட்பம்: - ஐம்பூதங்களை = பிருதிவியப்பு தேயு வாயு ஆகாயங்களை அறிந்து, குணங்களின் முறைமையின்படி = சத்தபரிசரூபரசகந்தமெனும் குணங்களின் முறையின்படி, ஆகாயம் சத்தகுணமுடையது. வாயுவுக்குப் பரிசம் தேயுவுக்கு உருவம் அப்புவுக்கு இரஸம் பிருதிவுக்குக் கந்தம் என்றபடி சிந்தித்து, பிறகு ஐம்மாத்திரைகள் = பிரிதிவிக்குச் சத்தபரிச உருவரஸகந்தம் என்ற ஐந்துகுணங்களுளவாய் அங்ஙனமே ஜலத்திற்குக் கந்த நீங்கலாக மற்ற நான்கு குணங்களுள்ளதாகவும் தேயுவுக்குக் கந்தரசங்கள் நீங்கலாக மற்ற முக்குணங்களுளதாயும்,

வாயுவுக்குச் சத்தப்பரிசங்களுள்ளதாகவும், ஆகாயத்திற்குச் சத்தமொன்றே யுளதாகவும் அறிந்து, மாத்திரையற்றதையும் = மாத்திரையற்றது மஹத்து அகங்காரமென்ற இருதத்துவங்களேயாம். இவைகளையும் அறிந்து, துவாதசாந்தத் திலுள்ளவனென்றால் = பரசிவம் என்று பொருள் கொள்க. எப்படியெனில் பூதங்கள் ஐந்து மாத்திரைகள் ஐந்து, மாத்திரையற்ற மஹத்தகங்காரங்கள் இரண்டு. ஆக இப்பன்னிரண்டுமே துவாதச என்று கூறப்படும், இவைகளுக்கு அந்தத்தில் அப்பாலுள்ளவன், சிவபெருமான் என்று பொருள் கொள்க, அல்லது துவாதசாந்தம் = யோகிகளால் தரிசிக்கப்படும் ஓர் இடம் அதாவது சிரசில் உள்ளது அந்த இடத்தில் இருப்பவனான சிவபெருமான் என்று பொருள் கொள்க. உற்பத்திக் கிரமமாவது சிவபெருமானால் ஆகாயம் வாயு அக்நி ஜலம் மண் என்ற முறையே உற்பத்தி கிரமமாம். இவ்விதம் சிந்தித்து, அமிருதனாய் நின்று அக்நியெனது வாக்கிலுள்ளவன் வாக்கு இருதயத்தில், இருதயம் என்னிடத்தில், யான் அமிருதத்தில், அமிருதம் பிரும்ஹத்தினிடத்தில் = என்று மறைகூறியவாறு எல்லாவற்றையும் பரசிவத்தினிடம் ஒடுக்கியதனால் அமிருதனாய் நின்று பாசுபத விரதத்தைச் செய்தல் வேண்டுமெனப்பட்டது.

ஶ்லோகம்.

இத^{3}ம் வ்ரதம் பாஶுபதம் கரிஷ்யாமி ஸமாஸத:
ப்ராதரேவம் து ஸங்கல்பய நிதா^{4}யாக்^{3}னிம் ஸ்வஶாக^{2}யா. (26)

உபோஷித: ஶுசி: ஸ்நாத: ஶுக்லாம்ப^{3}ரத^{4}ர: ஸ்வயம்
ஶுக்ல யஜ்ஞோபவீதஶ்ச ஶுக்ல மால்யானுலேன: (27)

ஜுஹுயாத்^{3} விரஜாமந்த்ரை: ப்ராணாபானாதி^{3}பி^{4} ஸ்தத:
அனுவாகாந்த மேகாக்^{3}ர: ஸமிதா^{3}ஜ்ய சரூன் ப்ருத^{2}க் (28)

ஆத்மன்யக்^{3}னிம் ஸமாரோப்ய யாதே அக்^{3}னேதி மந்த்ரத:
ப^{4}ஸ்மாதா^{3}யாக்^{3}னி ரித்யாத்^{3}யைர்: விம்ருஜ்யாங்கா^{3}னி
ஸம்ஸ்ப்ருஶேத். (29)

வியாக்யானம்: - **இதம்** - (முன்கூறிய) இந்த, **பாஶுபதம் வ்ருதம்** - பாசுபதமெனும் விருதத்தை, **ஸமாஸத: -** சுருக்கமாய், **கரிஷ்யாமி** - செய்கிறேன், **உபோஷித:** - முதனாள் உபவாஸமிருந்து அதாவது பட்டினியிருந்து, **ப்ராதரேவது** - காலையிலேயே (எழுந்து), **சுசி** - சுசியாய் அதாவது தந்தசுத்திமுதலியன செய்து கொண்டு, **ஸ்நாத:** - தீர்த்தமாடினவனாய்க்கொண்டு, **சுக்லாம்பரதர:** - வெளுப்பு வஸ்திரம் தரித்து, **சுக்லயஜோபவீதீ, ச** - வெளுத்தபூணூலையுடையோனாய், **சுக்லமால்யானுலேபந: -** வெள்ளைமாலைப்பூச் சணித்து, **ஸங்கலப்பம் நியாய** - சங்கற்பஞ்செய்து, **ஸ்வசாகயா** - தனது சாகைக்குள்ள மந்திரத்தால், **அக்நிம்** -

அக்கிநியை, **நிதாய** - ஸ்தாபித்து (வைத்து) **ப்ராணாபாநாதிபி:** - பிராணாபாநாதிகளான, **விரஜாமந்த்ரை:** - விரஜா மந்திரங்களால், **அநுவாகாந்தம்** - அவ்வனுவாகம்முடிய, **ஏகாக்ர:** - ஒருவழி (ஒற்றுமை) ப்பட்ட (மனதுடையோ) னாய், உச்சரித்துக் கொண்டு ஸமிதாஜ்யசரூந் - சமித்து, நெய், அவிசு இவைகளை, **ப்ருதக்** - தனித்தனியாய், **ஜூஹுயாத்** - ஓமம் செய்தல் வேண்டும், (பின்னர்), **யாதே அக்நே இதிமந்த்ரத:** - யாதே அக்மே என்ற மந்திரங்களால், **அக்நிம்** - அக்நியை, **ஆத்மநி** - தன்னிடம், **ஸமாரோப்ய** - பாவித்து, **அக்நி: இத்யாத்யை:** - அக்நி என்பதாதிகளான மந்திரங்களால், **பஸ்ம, ஆகாய** - விபூதியையெடுத்து (அணிந்துபின்), **விம்ருஜ்ய** - நீரினில் கலந்து, **அங்கானி** - அங்கங்களில், **ஸம்ஸ்ப்ருஶேத்** - நன்றாயணிய வேண்டும்.

பொழிப்புரை: - முன் கூறிய பாசுபதவிரதத்தைச் சுருக்கமாய்ச் செய்கின்றேன் முதல்நா ளுபவாசமிருந்து ஆகாரமெடாது விடியற் காலத்திலெழுந்து சுத்திசெய்து தீர்த்தமாடிச் சுசியாய் வெளுப்பு வஸ்திரங்களைத்தரித்துப் புதியபூணூலை தரித்து வெள்ளைமாலைப்பூச்சணிந்து சங்கல்பம் செய்துகொண்டு தனக்குறியசாகைக்குள்ள மந்திரத்தால் அக்நியை தாபித்துப் பிராணா பானாதி விரசாமந்திரங்களை அவ்வநு வாகம் முடிய ஒற்றுமைப்பட்டமனதுடன் உச்சரித்துக் கொண்டு சமித்து நெய் அவிஸ் இவைகளைத் தனித்தனியே ஓமம் செய்தல் வேண்டும். பிறகு என்று தொடங்கிய மந்திரங்களால் தன்னிடம் அக்நியை ஆரோபித்து, என்பது முதலாகிய ஆனுமந்திரங்களால் விபூதியையெடுத்து ஜலத்துடன் கலக்காமல் முதலில் உடம்பில் பூசிப் பிறகு நீரிலிட்டு முப்பட்டையாயனிதல் வேண்டும்.

ஶ்லோகம்.

ப⁴ஸ்மச்ச²ன்னோ த்³விஜோ வித்³வான் மஹாபாதக ஸம்ப⁴வை:
பாபைர் விமுச்யதே நித்யம் முச்யதே ச ந ஸம்ஶய: (30)

வியாக்யானம்: - **ப⁴ஸ்மச்சன்ன:** - விபூதியணிந்து, **த்விஜ:** - உபநயநச்சடங்கு பெற்ற, **வித்வாந்** - ஆராய்ச்சியுடையோன், **மஹாபாதக ஶம்ப⁴வை:** - மஹாபாதக ங்களால் உண்டாய, **பாபை:** - பாவங்களினின்றும், **நித்யம்** - எப்பொழுதும், **முச்யதே** - விடுபட்டவனாகின்றான், **முச்யதேச** - முக்தியையுமடைகின்றான், **ஸம்ஶய: ந** - ஸந்தேகமில்லை.

பொழிப்புரை: - விபூதியால் தேகமுழுதும் மறையப்பெற்று உபநயனாதி சடங்குகளைப் பெற்றுச் சிவபெருமானை வழிபடுவோன் பிரும்மவதை முதலிய பாவங்களினின்றும் எப்பொழுதும் விடுபட்டவனாகின்றான். பிறப்பிறப்புகள் ஒழியப் பெற்ற முத்தியையுமடைகின்றான். சந்தேகமில்லை.

ஶ்லோகம்.

வீர்யமக்[3]னேர் யதோ ப[4]ஸ்ம வீர்யவான் ப[4]ஸ்ம ஸம்யுத:
ப[4]ஸ்ம ஸ்நானரதோ விப்ரோ ப[4]ஸ்மஶாயீ ஜிதேந்த்ரிய:
ஸர்வபாப விநிர்முக்த: ஶிவ ஸாயுஜ்ய மாப்னுயாத் (31)

வியாக்யானம்: - **யத:** - யாதொருகாரணத்தினால், பஸ்ம - விபூதியானது, **அக்நே:** - அக்கிநியின், **வீர்யம்** - வீர்யமோ, (அதனால்), **பஸ்மஸம்யுத:** - விபூதியணிவோன், **வீர்யவான்** - மஹிமையுடையோனாக, **ஹவேத்** - ஆவான், **ப[4]ஸ்ம ஸ்நானரத:** - விபூதிபூசுவதையே விரும்புவோனும், **பஸ்மசாயீ** - விபூதி சம்பந்தமான படுக்கை யுடையோனுமாகிய, **ஜிதேந்திரிய:** - புலன்களை யடைக்கு வோனுமாகிய, **விப்ர:** - அந்தணன், **ஸர்வபாபவிநிர்முக்த:** - எல்லாப் பாவங்களினி ன்றும் நீங்கி, **ஶிவஸாயுஜ்யம்** - சிவபெருமானோடு ஸாயுச்சியமுக்தியை, **ஆப்னுயாத்** - அடைவான்.

பொழிப்புரை: - எக்காரணத்தால் விரசாக்நியிலிருந்துண்டாய விபூதி அக்நியின் வீர்யமோ? அதனால் விபூதியணிவோன் வீர்யவானாவான். தேகமுழுதும் விபூதியைப் பூசுவதையே முக்கியமாய்க் கொண்டவனும், விபூதியிட்டுப் படுப்போ னும் இந்திரியங்களையதன் வழி செல்லவிடாது அடக்கியோனுமான அந்தணன் எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டுச் சிவனோடு ஐக்கியமடைகின்றான்.

ஶ்லோகம்.

ஏவம் குரு மஹாபா[4]க! ஶிவநாம ஸஹஸ்ரகம்
இத[3]ம் து ஸம் ப்ரதா[3]ஸ்யாமி தேன ஸர்வார்த்த[2] மாப்ஸ்யஸி
இத்யுக்த்வா ப்ரத்[3]தெள[3] தஸ்மை ஶிவநாம ஸகஸ்ரகம் (32)

வியாக்யானம்: - **மஹாபாக** - ஓ மஹாமஹிமையோனான இராமா, **ஏவம்** - இங்ஙனம், **குரு** - செய், (அதாவது) **இதம்** - இந்த, **சம்போ:** - சம்புவினது, **நாம ஸஹஸ்ரகம்** - ஸஹஸ்ரநாமத்தை, **ஸம்ப்ரதாஸ்யாமி** - உபதேசிக்கின்றேன், **தேந** - அதனால், **ஸர்வார்த்தம்** - எல்லாப் பொருளையும், **ஆப்ஸ்ய** - அடைவாய், **இத்யுக்த்வா** - என்று சொல்லி, **தஸ்மை** - அவ்விராமனுக்கு, **சிவநாமஸஹஸ்ரகம் -** சிவஸஹஸ்ரநாமத்தை, **ப்ரத்தெள** - உபதேசித்தனர்.

பொழிப்புரை: - ஓ மஹாபாக்கியவானான இராம! இவ்விதம் சிவஸஹஸ்ர நாமம் அதாவது சிவனாயிரப்பெயரை உச்சரிப்பாயாக. இதையுனக்குக் கொடுத்தருள் கின்றேன் அதனால் விரும்பிய பொருளை யெல்லாம் யடைவாயாக என்று கூறி ராமனுக்குச் சிவஸ்ஹஸ்ரநாமத்தை யுபதேசித்தனர்.

ஸ்லோகம்.

வேத³ஸாராபி⁴த⁴ம் நித்யம் ஶிவ ப்ரத்யக்ஷ காரகம்
உக்தம் ச தேன ராம த்வம் ஜப நித்யம் தி³வாநிஶம். (33)

வியாக்யானம்: - **தேன** - அம்முனிவரால், **உக்தம்ச** - கூறப்பட்டதாவது, **ராம** - ஓ ராமா, **த்வம்** - நீ, **வேதஸாராபிதம்** - வேதஸார மென்று வழங்குவதும், **சிவப்ரத்யக்ஷகாரகம்** - சிவபெருமானைப் பிரத்தியக்ஷயாகச் செய்வதுமாகிய (சிவ ஸஹஸ்ரநாமத்தை), **நித்யம்** - பிரதி தினமும், **திவாநிஶம்** - பகலுமிரவும், **ஜப** - ஜெபித்துக்கொண்டிரு.

பொழிப்புரை: - அம்முநிவரால் கூறப்பட்டதாவது ஒ ராமா நீ வேதஸார மென்று வழங்குவதும் சிவபெருமானைப் பிரத்தியக்ஷமாகச் செய்வதுமாகிய ஸஹஸ்ரநாமத்தைப் பிரதிதினமும் பகலுமிரவும் ஜபித்துக்கொண்டிரு.

ஸ்லோகம்.

தத: ப்ரஸன்னோ ப⁴க³வான் மஹாபாஶுபதாஸ்த்ரகம்
துப்⁴யம் தா³ஸ்யதி தேன த்வம் ஶ்த்ரூன் ஹத்வாssப்ஸ்யஸி ப்ரியாம் (34)

தஸ்யைவாsஸ்த்ரஸ்ய மாஹாத்ம்யாத் ஸமுத்³ரம் ஶோஷயிஷ்யஸி
ஸம்ஹாரகாலே ஜக³தா மஸ்த்ரம் தத் பார்வதீ பதே: (35)

வியாக்யானம்: - **தத:** - பின்னர், **பகவான்** - இறைவன், **ப்ரஸந்ந:** - பிரஸந்நராய், **துப்⁴யம்** - உன்பொருட்டு, **மஹாபாசுபதாஸ்த்ரகம்** - மகாபாசுபதாஸ்திரத்தை, **தாஸ்யதி** - கொடுப்பார், **தேன** - அதனால், **த்வம்** - நீ, **ஶத்ரும்** - சத்துருவை, **ஹத்வா** - கொன்று, **ப்ரியாம்** - பத்தினியை, **ஆப்ஸ்யஸி** - அடைவாய், **தஸ்யைவாஸ்த்ரஸ்ய** - அதேயஸ்திரத்தின், **மாஹாத்ம்யாத்** - மகிமையால், **ஸமுத்ரம்** - கடலை, **ஶோஷயிஷ்யஸி** - வற்றச்செய்வாய், **ஜகதாம் ஸம்ஹாரகாலே** - உலகங்களின் ஸம்ஹாரகாலத்தில், (பிரளயகாலத்தில்) **பார்வதீபதே:** - பார்வதீ பதிக்கு, **தத்அஸ்த்ரம்** - அந்த அஸ்திரமே (யுளது.)

பொழிப்புரை: - பின்னர் இறைவன் பிரஸந்நராய் உன்பொருட்டு மஹா பாசுபதாஸ்திரத்தைக் கொடுப்பார். அதனால் நீ சத்துருவைக் கொன்று ஸீதையை யடைவாய் அதே யஸ்திரத்தின் மகிமையால் கடலை வற்றச்செய்வாய் யுகாந்தத் தில் பார்வதீபதிக்கு அந்த அஸ்திரமேயுளது.

ஶ்லோகம்.

தத^{3}லாபே^{4} தா^{3}னவானாம் ஜயஸ் தவ ஸுது^{3}ர்லப^{4}:
தஸ்மால்லப்^{3}து^{4}ம் ததே^{3}வாஸ்தம் ஶரணம் யாஹி ஶங்கரம் (36)

வியாக்யானம்: - **ததலாபே** - அது கிடைக்காவிடில், **தவ** - உனக்கு, தானவானாம்- அசூரர்களது, **ஜய:** - ஜயமானது, **ஸுதுர்லப:** - கிடைக்காது, **தஸ்மாத்** - ஆதலால், **தத் அஸ்த்ரம்**, **ஏவ** - அந்த அஸ்திரத்தையே, **லப்தும்** - அடைவதற்கு, **ஶங்கரம்** - சங்கரனை, **ஶரணம்யாஹி** - சரணம் அடைவாயாக

பொழிப்புரை: - அது கிடைக்காவிடில் உனக்கு அரக்கர்களது ஜயம் கிடைக்காது ஆதலின் அந்த அஸ்திரத்தையே அடைவதற்குச் சங்கரனைச் சரணமடைவாயாக.

மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்

சிவ ப்ராதுர்பவம்

ஶ்லோகம்.

ஏவமுக்த்வா முனிஶ்ரேஷ்டே^{2} க^{3}தே தஸ்மின் நிஜாஶ்ரமம்
அத^{2} ராமகி^{3}ரௌராம: புண்யே கோ^{3}தா^{3}வரீ தடே (1)

வியாக்யானம்: - **ஏவம்** - இவ்விதம், **உக்த்வா** - கூறி, **தஸிமினு, முநிஶ்ரேஷ்டே^{2}** - அம் முனிவரர், **நிஜாஶ்ரமம்** - தனது ஆச்ரமத்தை, **க^{3}தே** - அடையவே, **அத** - பிறகு, **ராம:** - இராமன், **ராமகிரௌ** - இராமகிரி யென்ற மலையில், **புண்யே** - தூய்மைபொருந்திய, **கோதாவரீதடே** - கோதாவரிக் கரையில்,

பொழிப்புரை: - இங்ஙனம் கூறி யம்முனிவர்கோனாகிய வகத்தியர் தன தாச்ரமத்திற்குச் சென்ற பின்னர் இராமன் இராமகிரியென்னும் பெயரியவரையினில் புண்ணியமாய கோதாவரிக்கரையில்,

ஶ்லோகம்.

ஶிவலிங்க^{3}ம் ப்ரதிஷ்டா^{2}ப்ய க்ருத்வா தீ^{3}க்ஷாம் யதா^{2} விதி^{4}
பூ^{4}தி பூ^{4}ஷித ஸர்வாங்கோ^{3} ருத்^{3}ராக்ஷாப^{4}ணைர் யுத: (2)

வியாக்யானம்: - **ஶிவலிங்கம்** - சிவலிங்கத்தை, **ப்ரதிஷ்டாப்ய** - தாபனம் செய்து, **யதாவிதி** - விதிவழுவாது, **தீக்ஷாம்** - தீக்கையை, **க்ருத்வா** - செய்து பூதி பூஷிதஸர்வாங்க: - விபூதியால் அலங்கரிக்கப் பெற்ற சகலாவயவங்களை யுடையோனும், **ருத்திராக்ஷாபரணை:** - உருத்திராக்காபரணங்களோடு, **யுத:** - கூடியவனும்.

பொழிப்புரை: - சிவலிங்கத்தைத் தாயித்து விதிவழுவாமல் தீக்கை செய்து தேகமெங்கும் விபூதியணிந்து ருத்திராக்கங்களையும் தரித்து,

ஈண்டு இஃதறிக. இராமாவதார காலத்தில் மாத்திரமேயன்றி மூலதேவராகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவும் சிவபூஜை செய்து சிறப்புற்றவரென்பதை,

ருக்குவேதம்.

தவஸ்ரியேமருதோமாஜயந்த ருக்வேயத்தேஜநிம
சாருசித்ரம் பதம்யத்விஷ்ணோ ருபமந்யதாயி

என்ற பிரமாணத்தாலும் இதனுண்மைப் பொருளை விளக்கவந்த

பராசரபுராணம்.

ரௌத்ரலிம்கம்மஹாவிஷ்ணுப்ரக்த்யா சுத்தம்சிலா
மயம்சாரசித்ரம்ஸமப்யர்ச லப்தவான்பரமம்பதம்

என்ற சுலோகத்தாலு முணர்கள்

ஶ்லோகம்.

அபி^{4}ஷிச்ய ஜலை: புண்யை: கௌ^{3}தமீ ஸிந்து ஸம்ப^{4}வை:
அர்ச்யயித்வா வன்யபுஷ்பை: தத்^{3}வத்^{3} வன்ய ப^{2}லைரபி. (3)

வியாக்யானம்: - **புண்யை:** - புண்ணியங்க ளாயுள்ள, **கௌதமீஸிந்து ஸம்பவை**! - கௌதமீ நதியிலுள்ள, **ஜலை:** - தீர்த்தங்களால், **அபிஷிச்ய** - அபிஷேகம் செய்து, **வன்யபுஷ்பை:** - வனத்திலுள்ள மலர்களாலும், **தத்வத், வந்யலை: அபி** - அங்ஙனமே வனத்திலுள்ள கனிகளாலும், **அர்ச்சயித்வா** - ஆராதித்து.

பொழிப்புரை: - புண்ணியமாய கௌதமீ நதி தீர்த்தங்களால் அபிஷேகஞ் செய்து வனத்திலுள்ள மலர்களாலும் கனிகளாலுமர்ச்சனை செய்து.

ஶ்லோகம்.

ப^{4}ஸ்மச்ச^{2}ன்னோ ப^{4}ஸ்மஶாயீ வ்யாக்^{4}ர சர்மாஸனே ஸ்தி^{2}த:
நாம்னாம் ஸஹஸ்ரம் ப்ரஜபன் நக்தம் தி^{3}வ மனன்நயதீ^{4}: (4)

வியாக்யானம்: -- **ப^{4}ஸ்மச்ச^{2}ன்ன:** - விபூதியை நன்கணிந்து, **ப^{4}ஸ்மாயீ** - விபூதியிட்டுச்சயனித்தவனாய்கொண்டு, **வ்யாக்^{4}ர சர்மாஸனே** - புலித்தோலாசன த்தில், **ஸ்தி^{2}த:** - இருந்தவனாய்க்கொண்டு, **அநந்யதீ:** - மற்றதைச் சிந்தியாதவனாய், **நாம் நாம், ஸஹஸ்ரம்** - (நாமங்களுடைய ஆயிரத்தை) ஸஹஸ்ரநாமத்தை, **நக்தம்திவம்** - இரவும் பகலும் **ப்ரஜபன் -** ஜபம் செய்தவனாய்க் கொண்டு.

பொழிப்புரை: - விபூதியை உடம்பு முழுதும் பூசி விபூதிசயனம் செய்து புலித்தோலாஸநத்தி விருந்து மற்றெதையும் சிந்தியாமல் இரவும்பகலும் ஸஹஸ் ரநாமத்தை ஜபஞ்செய்து.

ஶ்லோகம்.

மாஸமேகம் ப²லாஹாரோ மாஸம் பர்ணாஶன: ஸ்தி²த:
மாஸ்மேகம் ஜலாஹாரோ மாஸம் ச பவனாஶன: (5)

வியாக்யானம்: - **ஏகம்**- ஒரு, **மாஸம்** - மாதம், **பலாஹார:** - கனியைப் புசிப்போனாகவும், **மாஸம்** - மாதம், **பர்ணாஶன: ஸ்தி²த:** - இலை சரகுகளைப் புசித்திருப்போனாகவும், **ஏகம், மாஸம்** - ஒரு மாதம், **ஜலாஹர:** - நீரைப்புசிப் போனும், **மாசம், ச,** - ஒரு மாதம், **பவனாசன:** -காற்றைப் புசிப்போனும்.

பொழிப்புரை: - ஒரு மாதம் கனியைப் புசிப்போனும் ஒருமாதம் இலைகளைப் புசிப்போனும் ஒருமாதம் நீரைப்பூசிப்போனும் ஒரு மாதம் காற்றைப்புசிப்போனும்.

ஶ்லோகம்.

ஶாந்தோ தா³ந்த: ப்ரஸன்னாத்மா த்⁴யாயன்னேவம் மஹேஶ்வரம்
ஹ்ருத் பங்கஜே ஸமாஸீன முமாதே³ஹார்த்³த⁴ தா⁴ரிணம் (6)

சதுர்பு⁴ஜம் த்ரிணயனம் வித்³யுத் பிங்க³ ஜடாத⁴ரம்

வியாக்யானம்: - **சாந்த:** - மனதை யடக்கியவனும், **தாந்த:** - புலன்களையட க்கியோனும், **ப்ரஸந்நாத்மா** - சுத்த சித்தமுடையோனும் (ஆகிய ராமன்) **ஹ்ருத் பங்கஜே** - இருதய கமலத்தில், **ஸமாஸீனம்** - வீற்றிருப்போனும், **உமாமஹோர்த்ததாரிணம்** - உமைபாதி சரீரமாய்ப் பெற்றவனும், **சதுர்புஜம்** - நான்கு கரத்தோனும், **த்ரிணயனம்** - முக்கண்ணனும், **வித்யுத்பிங்கஜடாதரம்** - மின்னல் மஞ்சள் நிறம்பெற்ற சடைதரித்தோனும்.

ஶ்லோகம்.

கோடி ஸூர்ய ப்ரதீகாஶம் சந்த்³ரகோடிஸ ஸுசீதளம் (7)

ஸர்வாப⁴ரண ஸம்யுக்தம் நாக³ யக்ஞோபவீதினம்
வ்யாக்⁴ர சர்மாம்ப³ரத⁴ரம் வரதா³ப⁴ய தா⁴ரிணம் (8)

வ்யாக்⁴ர சர்மோத்தரீயம் ச ஸுராஸுர நமஸ்க்ருதம்
பஞ்ச வக்த்ரம் சந்த்³ரமளலிம் த்ரிஶூல ட³மரூ த⁴ரம் (9)

வியாக்யானம்: - **கோடி ஸூர்ய ப்ரதீகாஶம்** - கோடி ஸூரியன்களுக்கு நிகரும், **கோடி சந்த்^{3}ரஸ ஸுசீதளம்** - கோடிசந்திரன்கள் போலவாநந்தகரனும், **ஸர்வாப^{4}ரண ஸம்யுக்தம்** - சகலாபரணங்களுடையோனும், **நாக^3 யஞோபவீதினம்** - அரவத்தைப் பூணுலாய்க் கொண்டவனும், **வ்யாக்ரசர்மாம்பரதரம்** - புலித்தோலாடையோனும், **வரதா^{3}ப^{4}யதாரிணம்** - வேண்டும் பயன்களைக் கொடுப்பதும் பயநீங்கச்செய்தலுமாய் முத்திரை தரிப்பவனும், **வ்யாக்^{4}ர சர்மோத் தரீயம், ச** - புலித்தோலை மேலாடையாய்க் கொண்டவனும், **ஸுராஸுர நமஸ்க்ருதம்** - தேவராலும் அசுரராலும் வணங்கப்பெற்றவனும், **பஞ்சவக்த்ரம்** - ஐந்துமுகத்தோனும், **சந்த்ரமௌளிம்** - சந்திரனை சிரத்தினால் தரித்தவனும், **த்ரிஶூல ட^{3}மரூ த^{4}ரம்** - முச்சூல வடுக்கைகளைத்தரித்தவனும்.

ஶ்லோகம்.

நித்யம் ச ஶாஶ்வதம் ஶுத்^{3}த^{4}ம் த்^{4}ருவ மக்ஷர மவ்யம்
ஏவம் நித்யம் ப்ரஜபதோ க^{3}தம் மாஸ சதுஷ்டயம் (10)

வியாக்யானம்: - **நித்யம்** - நித்தனும், **ஶாஶ்வதம்** - எல்லாவவஸ்தைவிலும் விளங்குவோனும், **ஶுத்^{3}த^{4}ம்** - மாயையைக் கடந்தோனும், **த்^{4}ருவம்** - மாற்றமுறாத வனும், **அக்ஷரம்** - அக்கரனும், **அவ்யம்** - நாசமற்றவனும் (ஆகிய), **மஹேச்வரம்** - மகேச்சுரனை, **த்யாயந்** - தியானம் செய்துக்கொண்டு (இருந்தாள்), **ஏவம்** - இங்ஙனம், **நித்யம்** - பிரதிதினமும், **ப்ரஜபத:** - ஜபம் செய்துகொண்டுவர, **மாலச துஷ்டயம்** - நான்கு மாதம், **கதம்** - சென்றது.

பொழிப்புரை: - ஈண்டு சென்ற ஐந்தாவது சுலோகம் முதல் பத்தாவது சுலோகம் வரையில் ஒரே அன்வயம் ஆதலின் பொழிப்புரை யிங்குக் கூறப்பட்டது.

உட்கரண புறக்கரணங்களை யடக்கித் தெளிவான மனதுடையோனான இராமன் இருதயகமலத்தின்கண் விளங்குவோனும் உமையோர் பாகனும் நான்கு கைகளை யுடையோனும் முக்கண்ணனும் மின்னல் வர்ணமுள்ள சடையைத் தரித்தோனும் கோடி சூர்யஸமனும் கோடி சந்திரன் போல வாநந்தகரனும் சகலா பரணங்களுடையோனும் அரவப்பூணூலுடையோனும் புலித்தோலாடையோனும் வரம் அபயம் ளையளித்தருளும் முத்திரை தரித்தவனும் புலித்தோலை மேலாடை யாய் இவைகக்கொண்டவனும், தேவாஸூரர்களால் வணங்கப் பெற்றோனும் ஐந்து முகத்தோனும் சந்திரகலை தரித்தவனும் முச்சூலவுடுக்கைகளைக் கைகளிலேந்தி யோனும் காலவரையில் அடங்காதவனும் எல்லாவவஸ்தைகளிலும் விளங்குவோ னும் மாயையைக்கடந்தவனும் மாற்றமுறாதவனும் அக்கரனும் நாசமற்றவனுமான சிவபெருமானை, இவ்வாறு பிரதி தினமும் ஜபஞ்செய்துகொண்டுவர நான்குமாதங் கழிந்தது.

நுட்பம்: - ஈண்டு (மாஸமேகம்) என்ற சுலோகத்தால் சிவோபாஸனயின் நியமும்சாந்த: என்ற சுலோகத்தால் சிவோபாஸனயின் ஸநதனத்தையும் கூறிப்

பின்னர் ஹ்ருத்பங்கஜே என்று தொடங்கி இருதய கமலத்தில் உபாஸிப்பதாகிய தகரவித்யோபாஸரையும் அவ்வாறு இறைவனது சொரூபத்தை உமாதேஹார்த் ததாரிணம் என்று தொடங்கி த்ரிசூலடமரூ என்பதிறாய்விளக்கி அவனதுமகிமையை நித்யஞ்ச சாசுவதம் என் றசுலோகத்தால் விளக்கியதும் காண்க. இதன் விரிவு பின் உபாஸநாயோகாத்தியத்தில் நன்கு விரித்துரைக்கப்படும் ஆண்டுக் காண்க.

ஶ்லோகம்

அத[2] ஜாதோ மஹாநாத[3]: ப்ரளயாம்பு[3]தி[4] பீ[4]ஷண:
ஸமுத்[3]ர ம[2]தனோத்பூ[4]த மந்த[3]ராவனிப்[4]ருத் த்[4]வனி: **(11)**

ருத்[3]ர பா[3]ணாக்[3]னி[3] ஸந்தீ[3]ப்த ப்[4]ருஶம் திரிபுர விப்[4]ரம:
தமாகர்ண்யாத[2] ஸம்ப்[4]ராந்த யாவத் பர்யேதி புஷ்கரம் **(12)**

வியாக்யானம்: - **அத** - பின்னர், **பிரளயாம்புதிபீஷண:** - பிரளயகாலக் கடல் போலப் பயங்காமாயும், **சமுத்ரமதனோத் பூதமந்தராவனி பிருத்வனி: -** கடலைக் கடையுங்கால் மந்தரகிரியினின்றுண்டான தொனிபோன்றதும், **ருத்[3]ர பா[3]ணாக்[3]னி ஸந்தீ[3]ப்த ப்[4]ருமத் திரிபுர விப்ரம:** - உருத்திர பாணாங்கியால் கொளுத்தப்பெற்று நழுவுகின்றதாய் திரிபுரங்களின் விப்ரமமுடையதுமாகிய, **மஹாநு** - ஓர் பெரிய, **நாத:** - ஒலி, **ஜாத:** - உண்டாச்சுது **அத** - பின்னர், **தம்** - அந்நாதத்தை, **ஆகர்ண்ய -** கேட்டு, **சம்ப்ராந்த:** - கலங்கினவனாய், (இராமன்), **யாவத்** - எது வரையில், **புஷ்கரம்** - தடாகத்தை, **பர்யேதி** - அடைவானோ.

பொழிப்புரை: - பின்னர் பிரளயகாலத்து மேகம் போலப் பயங்கரமாயதும் கடலைக் கடைந்தபோதுண்டாய மந்தரகிரியின் ஒலிபோன்றதும் உருத்திரரது பாணாங்கியால் கொளுத்தப்பெற்ற திரிபுரங்களின் விப்பிரமத்தையுடையது மாய்ஒர் பேரொலி தோன்றியது அதைச்செவியுற்றுக் கலக்கமுற்ற இராமன் தடாகத்திற்கு வருவதற்குள்.

ஶ்லோகம்.

தாவதே[3]வ மஹாதேஜோ ராமஸ்யாஸீத் புரோ த்[3]விஜா:
தேஜஸா தேன ஸம்ப்[4]ராந்தோ நாபஶ்யத் ஸ தி[3]ஶோ த[3]ஶ **(13)**

வ்யாக்யானம்: - **த்[3]விஜா:** அந்தணர்களே, **ராமஸ்ய** - ராமனுக்கு, **புர:** - எதிரில், **தாவத்ஏவ** - அல்வளவிலேயே, **மஹாதேஜ:** - ஓர் பேரொளி, **ஆஸீத்** - உண்டாச்சுது, **தேன தேஜஸா** - அவ்வொளியால், (அச்சோதியால்) ஸம்ப்ராந்த: - கலக்கமுற்றவனாய், **ஸ:** - அவ்விராமன், **தசதிச:** - பத்துத்திக்குகளையும், **ந அபஶ்யது** - காணவில்லை.

பொழிப்புரை:- இராமனுக் கெதிரில் ஓர் பெருஞ்சோதி தோன்றியது அச்சோதியால் கலக்கமுற்றவனாய் இராமன் பத்துத்திக்குகளையும் அறியாது பிரமித்தான்.

ஶ்லோகம்.

அந்தீ[4] க்ருதேக்ஷண ஸ்தூர்ணம் மோஹம் யாதோ ந்ருபாத்மஜ:
விசிந்த்ய தர்கயாமாஸ தை[3]த்யமாயாம் த்[3]விஜேஶ்வரா: (14)

வியாக்யானம்: - **தூர்ணம்** - 'உடனே, **அந்தீக்ருதேக்ஷண:** - ஒன்றையும் பார்க்கமாளாத கண்களை யுடையவனாய், **மோஹம்யாத:** - மூர்ச்சையடைந்து, **ந்ருபாத்மஜ:** - ராமன், **விசிந்த்ய** - (பின்னர் தெளிந்து) சிந்தித்து, **த்விஜேஸ்வரா:** - ஓ அந்தண சிரேஷ்டர்களே, தைத்யமாயாம் அரக்கமாயையென்று, **தர்க்கயாமாஸ** - நினைக்கலாயினான்.

பொழிப்புரை: - அரசகுமாரனான ராமன் ஒன்றையும் காணமாளாது கண் ஒளியிழந்து அறிவு கலங்கிநின்று பின்னர் தெளிந்து சிந்தித்து இ∴தோர் அரக்க மாயை யென்று நினைத்தனன். ஓ அந்தணர்களே.

ஶ்லோகம்.

அதோத்[2]தா[2]ய மஹாவீர: ஸஜ்யம் க்ருத்வா த[4]னு: ஸ்வகம்
அவித்[4]யன் நிஶிதைர் பா[3]ணைர் தி[3]வ்யாஸ்த்ரை ரபி[4]மந்த்ரிதை: (15)

வியாக்யானம்: - **அத** - பின்னர், **உத்தாய** - எழுந்து, **மஹாவீர: -** மஹாவீரனாகிய (ராமன்), **ஸ்வகம் த[4]னு:** - தனது தனுவை, **ஸஜ்யம்க்ருத்வா** - நாணேற்றி, **திவ்யாஸ்த்ரை:** - திவ்வியாஸ்திரங்களால், **அபிமந்த்ரிதை:** - அபிமந்திரிக்கப்பட்ட, **நிசிதை:** - கூர்மையாகிய, **பாணை:** - பாணங்களால், **அவித்யத்**- அடித்தான்.

பொழிப்புரை: - பின்னர் எழுந்து மஹாவீரனாகிய ராமன் தனது வில்லை நாணேற்றித் திவ்வியாஸ்திரங்களால் அபிமந்திரிக்கப்பட்டகூர்மையாகிய பாணங்களால் அடித்தனன்.

ஶ்லோகம்.

ஆக்3னேயம் வாருணம் ஸௌம்பம் மோஹனம் ஸௌர பார்வதே
விஷ்ணுசக்ரம் மஹாசக்ரம் காலசக்ரம் ச வைஷ்ணவம் (16)

ரௌத்ர்ம் பாஶுபதம் ப்³ராஹ்மம் கௌபே³ரம் குலிஶானிலம்
பா⁴ர்க³வாதி³ ப³ஹூன் யஸ்த்ராண்யம் ப்ராயுங்த ராக⁴வ (17)

வியாக்யானம்: - **அயம்** - இந்த, **ராகவ** - இராமன், **ஆக்னேயம்** - அக்நியாஸ்திரம், **வாருணம்** - வருணாஸ்திரம், **சௌம்யம்** - சந்திராஸ்திரம், **மோஹனம் -** மோஹனாஸ்திரம், **சௌரம்** - சூரியாஸ்திரம், **பர்வதம்** - பருவதாஸ்திரம், **விஷ்ணுசக்ரம்** - விஷ்ணு சக்கரம், **மஹாசக்ரம்** - மஹாசக்கரம், **காலசக்கரம்** - காலசக்கரம், **வைஷ்ணவம்** - வைஷ்ணவாஸ்திரம், **ரௌத்ரம்** - ருத்திராஸ்திரம், **பாசுபதம்** - ஈசாஸ்திரம், **ப்ராம்மம்** - பிரும்மாஸ்திரம், **கௌபேரம்** குபேராஸ்திரம், **குலிசாநிலம்** - வஜ்ஜிரவாயுவஸ்திரம், **பார்கவாதி பஹூனி** - பராக்கவம் முதலிய பல. முதலிய பல. அஸ்த்ராணி அஸ்திரங்களை, **ப்ராயுங்த** - பிரயோகித்தான்.

பொழிப்புரை: - இந்த இராமன் அக்கினியஸ்திரம் வருணஸ்திரம் சந்திரா ஸ்திரம் மோஹனாஸ்திரம் சூரியாஸ்திரம் பருவதாஸ்திரம் வைஷ்ணவாஸ்திரம் ருத்திராஸ்திரம் பாசுபதாஸ்திரம் பிரமாஸ்திரம் குபேராஸ்திரம் வஜ்ஜிரவாயு வஸ்திரம் பார்க்கவம் முதலிய பல அஸ்திரங்களைப் பிரயோகித்தான்.

ஶ்லோகம்.

தஸ்மிம் ஸ்தேஜஸி ஶஸ்த்ராணி சாsஸ்த்ராண்யஸ்ய மஹீபதே:
விலீனானி மஹா⁴ரஸ்ய கரகா இவ நீரதெ⁴ள (18)

தத க்ஷணேன ஜஜ்வால த²னுஸ்தஸ்ய கராச்சியுதம்
தூணீரம் சாsங்கு³லித்ராணம் கோ³தி⁴காபி மஹீபதே: (19)

வியாக்யானம்: - **தஸ்மின்** - அந்த, **தேஜஸி** - தேஜசில் (சோதியில்,) **அஸ்ய** - இந்த, **மஹீபதே**- அரசனுடைய, **ஸஸ்த்ராணி** - ஆயுதங்களும், **அஸ்த்ராணிச** - அஸ்திரங்களும், **நீரதௌ** - சமுத்திரத்தில், **மஹாப்ரஸ்ய** - மாமேகத்தினது, **கரகா: இவ** - திவலைகள் போல, **விலீனானி** - ஒடுங்கிவிட்டன, **தத** - பின்னர், **க்ஷணேன** - ஓர்கணத்தில், **தஸ்ய** - அந்த, **மஹீபதே:** - அரசனுடைய, **தனு:** - வில்லும், **தூணிரம் -** அம்புறாத்தூணியும், **அங்குளித்ராணம்** - விரல்மூடியும், **கோ³தி⁴கா அபி** உடும்புத்தோலும், **கராத** - கையிலிருந்து, **ச்யுதம்** - நழுவியதாய்க் கொண்டு, **ஜஜ்வால** - சொலித்தது.

பொழிப்புரை: - அந்தச் சோதியில் இந்த அரசனுடைய ஆயுதங்களும் அஸ்திரங்களும் சமுத்திரத்தில் மகாமேகத்தினது திவலைகள் போல ஒடுங்கி விட்டன. பின்னர் ஓர் கணத்தில் அந்த அரசனது வில்லும் அம்பறாத் தூணியும் விரல் கவசமும் உடும்புத்தோலும் கையினின்றும் நழுவியதாய்ச் சொலித்தது.

ஶ்லோகம்.

தத்[3] த்[3]ருஷ்ட்வா லக்ஷ்மணோ பீ[4]த: பபாத பு[4]வி மூர்ச்சி[2]த:
அதா[2]கிஞ்சித்கரோ ராமோ ஜானுப்[4]யா மவனிம் க[3]த: (20)

மீலிதாக்ஷோ ப[4]யாவிஷ்ட: ஶங்கரம் ஶரணம் க[3]த:
ஸ்வரேணாப்யுச்சரன் னுச்சை ஶ்ஶம்போ[4]ர் நாம ஸஹஸ்ரகம் (21)

ஶிவம் ச த[3]ண்ட[3]வத்[3] பூ[4]மௌ ப்ரணநாம புன: புன:

வியாக்யானம்: - **தத்** - அதனை, **த்ருஷ்ட்வா** - பார்த்து, **லக்ஷ்மண** - லக்குமன், **பீத:** - பயந்தவனாய், **மூர்ச்சித:** - மூர்ச்சித்தவ னாய், **புவி** - பூமியில், **பபாத** - விழுந்தான், **அத** - பிறகு, **ராம:** - ராமன், **அகிஞ்சித்கர:** - ஒன்றும் செய்ய முடியாதவனாய், **ஜானுப்யாம்** - முழங்கால்களால், **அவனீம்கத** - பூமியையடைந்து, **பயாவிஷ்ட** - பயங்கொண்டவனாய், **மீலிதாக்ஷ:** - மூடிய கண்களையுடையவனாய்க் கொண்டு, **சங்கரம்** - சங்கரனை, **சரணம்கத:** - சரணமடைந்தனன், **சம்போ** - சிவனது, **நாமஸஹஸ்ரகம்** - ஆயிரம் நாமத்தை, **உச்சை:** உரக்கவும், **ஸ்வரேண** - சத்தத்தோடு, **உச்சரன்** - உச்சரித்துக்கொண்டு, **சிவம்** - சிவனை, **பூமௌ** - பூமியில் விழுந்து, **தண்டவத்** - தடிபோல (ஸாஷ்டாங்கமாய்,) **புன: புன:** - மீண்டும், மீண்டும், **ப்ரணநாம** - நமஸ்கரித்தான்.

பொழிப்புரை: - அதனைப்பார்த்து இலட்சுமணன் பயந்தவனாய்ப் பூமியில் மூர்ச்சையாக விழுந்தான். பிறகு இராமன் ஒன்றுஞ் செய்ய முடியாதவனாய் முழங் கால்களால் பூமியை அடைந்து பயங்கொண்டவனாய் மூடியகண்களோடு சங்கரனைச் சரணமடைந்தனன். சிவபிரானது ஆயிரந் திருநாமங்களை உரத்த சத்தத் தோடு உச்சரித்துக் கொண்டு சிவபிரானைப் பூமியில் விழுந்து தடிபோலச் சாஷ்டாங் கமாய் மீண்டும் மீண்டும் நமஸ்கரித்தான்.

ஶ்லோகம்.

புனஶ்ச பூர்வ வச்சாஸீச் ச[2]ப்தோ[3] தி[3]ங் மண்ட[3]லம் ஸ்வனன்
சசால வஸுதா[4] கோ[4]ரம் பர்வதாஶ்ச சகம்பிரே (22)

அத[2] க்ஷணேன ஸீதாம்ஶு ஸீதலம் தேஜ ஆத[3]த[4]த்
உன்மீலிதாக்ஷோ ராமஸ்து யாவத்[3]யாவத் ப்ரபஶ்யதி (23)

வியாக்யானம்: - **புன: ச** - மீண்டும், **பூர்வவத்** - முன்போலவே, **ஶப்த:** - தொனியானது, **திங்மண்டலம்** - திசைகளை, **ஸ்வனன்** - ஒலிக்கச் செய்கின்றதாய், **ஆஸீத்** - உண்டாச்சுது, **வஸுதா** - பூமி, **கோரம்** - பயங்கரமாய், **சசால** - சலித்தது, **பர்வதா: ச** - மலைகளும், **சகம்பிரே** - அசைந்தன, **அத** - பின்னர், **க்ஷணேன** - க்ஷணத்தினில், **ஸீதாம்ஸுதலம்** - சந்திரனைப்போலக் குளிர்ந்ததாகிய, **தேஜ:** - சோதியை, **ஆதத்** - கண்டான், **ராம:** - ராமன், **உன்மீலிதாக்ஷ:** - கண்களைத் திறந்து கொண்டவனாய், **யாவத்யாவத்** - எவ்வளவில், **ப்ரபச்யதி** - பார்க்கலாயினனோ.

பொழிப்புரை: - மீண்டும் முன் போல வேதொனிகளானவை திசைகளை ஒலிக்கச் செய்கின்றதாய் உண்டாச்சுது பூமி பயங்கரமாய் சலித்தது மலைகளும் அசைந்தன. பின்னர் கணத்தில் சந்திரனைப் போலக் குளிர்ந்ததாகிய சோதியைக் கண்டான். இராமன் கண்களைத் திறந் கொண்டவனாய் எவ்வளவில் பார்க்கலாயி னனோ.

ஶ்லோகம்

தாவத்^{3} த^{3}த^{3}ர்ஶ வ்ருஷப^{4}ம் ஸர்வாலங்கார ஸம்யுதம்
பியூஷ மத^{2}னோத்^{3}பூ^{4}த நவநீதஸ்ய பிண்ட^{3}வத் **(24)**

ப்ரோத ஸ்வர்ணம் மரகதச் சா^{2}ய ஶ்ருங்க^{3} த்^{3}வயான்சிதம்
நீல ரத்னேக்ஷணம் ஹ்ரஸ்வ கண்ட^{2} கம்ப^{3}ள பூ^{4}ஷிதம் **(25)**

ரத்ன பல்யாண ஸம்யக்தம் நிப^{3}த்^{3}த^{4}ம் ஶ்வேத சாமரை:
க^{4}ண்டிகா க^{4}ர்க^{4}ரை: ஶப்தை^{3}: பூரயந்தம் தி^{3}ஶோ த^{3}ஶ **(26)**

வியாக்யானம்: - **தாவத்^{3}** - அவ்வளவில், **பீயூஷ மத^{2}னோத்^{3}பூ^{4}த நவனீதஸ்ய** - அமுதமதனத்தினாலுண்டாகிய நவநீதத்தினுடைய, **பிண்ட^{3}வத்** - திரள் போன்றதும், **ப்ரோத ஸ்வர்ணம்** - பொன்னால் அலங்கரிக்கப் பட்டதும், **மரகதச் சா^{2}ய ஶ்ருங்க^{3} த்^{3}வயான்சிதம்** - மரகதம் போன்ற இரண்டு கொம்புகளை யுடையதும், **நீல ரத்னேக்ஷணம்** - நீலமணிபோலக் கண்களையுடையதும், **ஹ்ரஸவ கண்ட^{2} கம்ப^{3}ள பூ^{4}ஷிதம்** - குறுகிய கழுத்துக்கம்பளம் போன்ற தசையால் அலங்காரம் பெற்றதும், **ரத்ன பல்யாண ஸம்யுக்தம்** - ரத்னகம்பளத் தோடு கூடியதும், **ஸ்வேத சாமரை:** - வெண்சாமரங்களால், **நிப^{3}த்^{3}த^{4}ம்** - அலங்கரிக்கப்பட்டுளதும், **க^{4}ண்டிகா க^{4}ர்க^{4}ரை: ஶப்தை^{3}:** மணிகளின் ஓசையால், **தஶதஶ:** - பத்துத்திசைகளையும், **பூரயந்தம்** - நிரம்பச்செய்கின்றதும், ஸர்வாலங்கார ஸம்யுக்தம் சகலவலங்காரங்களோடு கூடியதுமாகிய, **வ்ருஷபம்** - இடபத்தை, **ததர்ச** - கண்டான்.

பொழிப்புரை: - அவ்வளவில் அமுதமதனத்தினா லுண்டாகிய நவநீதத் தினுடைய திரவ்போன்றதும் பொன்னால் அலங்கரிக்கப் பட்டதும் மரகதம் போன்ற

இரண்டு கொம்புகளையுடையதும் நீல மணிபோன்ற கண்களையுடையதும் குறுகிய கழுத்துக் கம்பளம் போன்ற தசையால் அலங்காரம் பெற்றதும் ரத்தின கம்பளத் தோடு கூடியதும் வெண்சாமரங்களால் அலங்கரிக்கப்பட்டது மணிகளின் ஓசையால் பத்துத் திசைகளையும் நிரம்பச் செய்கின்றதும் அலங்காரங்களோடு கூடியதுமாகிய இடபத்தைக் கண்டான்.

ஶ்லோகம்

தத்ராஸீனம் மஹாதே3வம் ஶுத்3த ஸ்ப2டிக விக்3ரஹம்
கோடி ஸூர்ய ப்ரதீகாஶம் சந்த்3ரகோடி ஶுஸீதளம் **(27)**

வ்யாக்4ர சர்மாம்ப3ரத4ரம் நாக3 யஜ்ஞோபவீதினம்
ஸர்வாலங்கார ஸம்யுக்தம் வித்3யுத் பிங்க3 ஜடாத4ரம் **(28)**

நீலகண்ட2ம் வ்யாக்4ர சர்மோத்தரீயம் சந்த்3ர ஶேக2ரம்
நானாவிதா4யுதோ4த்3பா4ஸி த3ஶபா3ஹும் த்ரிலோசனம் **(29)**

யுவானம் புருஷ ஶ்ரேஷ்ட2ம் ஸச்சிதா3னந்த3 விக்3ரஹம் **(30)**

வியாக்யானம்: - **தாரத்** - அவ்விருஷபத்தின் மீது, **ஆஸீனம்** - வீற்றிருக்கின்றவனும், **ஶுத்3த ஸ்ப2டிக விக்3ரஹம்** - சுத்தஸ்படிகம், போன்ற தேகமுடையவனும், **கோடி ஸூர்ய ப்ரதீகாஶம்** - கோடி சூரியன் போல் சொலிக் கின்றவனும், **கோடிஸீதாம் ஶுஸீதளம்** - கோடிசந்திரன் போலக் குளிர்ச்சி பொருந்தியவனும், **வ்யாக்4ர சர்மாம்ப3ரத4ரம்** - புலித்தோலாடை தரிக்கின்றவனும், **நாகயஜ்ஞோபவீதினம்** - அரவப்பூணூ லோனும், **ஸர்வாலங்காரஸம்யுக்தம் -** சகலங்கார முடையோனும், **வித்3யுத் பிங்க3 ஜடாத4ரம்** - மின்னல்போலப் பொன்னிற மாகிய ஜடைதரித்திருக்கின்றவனும், **நீலகண்ட2ம்** - கறைக்கண்டனும், **வ்யாக்ரசர்மோத்தரீயம்** - புலித்தோலை மேலாடையாகக் கொண்டவனும், **சந்த்ர சேகரம்** - சந்திரனைச் சிரஸில் தரிக்கின்றவனும், **நானாவிதா4யுதோ4த்பாஸி த3ஸபா3ஹும்** - பற்பலவிதமாகிய வாயுதங்களால் விளங்கும் பத்துக்கைகளை யுடையவனும், **த்ரிலோசனம்** - முக்கண்ணனும், **யுவானம்** - யௌவனமுடையோ னும், **புருஷச்ரேடம் -** புருஷசிரேஷ்டனும், **ஸச்சிதானந்தவிக்ரஹம்** - சச்சிதானந்த வடிவனுமாகிய, **மஹாதேவம்** - மஹாதேவனையும், கண்டான்.

பொழிப்புரை: - அந்த இடபத்தின் மீது வீற்றிருக்கின்றவனும் சுத்தஸ்படிகம் போன்ற தேகமுடையவனும் கோடி சூரியன் போல் சொலிக்கின்றவனும் கோடி சந்திரன் போன்ற குளிர்ச்சிபொருந்தியவனும் புலித்தோலாடை தரிக்கின்றவனும் அரவம் பூணூலுடையோனும் சகல அலங்காரமுடையவனும் மின்னல்போன்ற பொன்னிறமாகிய சடைதரிக்கின்றவனும் நீலமாகிய கண்டமுடையவனும்

புலித்தோலை மேலாடையாகக் கொண்டவனும் சந்திரனைச் சிரசில் தரிக்கின்ற வனும் பலவிதமான ஆயுதங்களால் விளங்கும் பத்துத் திருக்கைகளை யுடையவனும் மூன்று திருக்கண்களையுடையவனும் யவ்வனமுடையவனும் புருஷசிரேஷ்டனும் சச்சிதானந்த வடிவனுமாகிய மஹாதேவனையுங் கண்டான்.

ஶ்லோகம்.

தத்ரைவ ச ஸுகா2ஸீனாம் பூர்ணசந்த்3ர நிபா4ன்னாம்
நீலேந்தீ3வர தா3மாபா4 முத்3யன் மரகத ப்ரபா4ம் (31)

முக்தாப4ரண ஸம்யக்தாம் ராத்ரிம் தாராஞ்சிதா மிவ
விந்த்4ய க்ஷதித4ரோத்துங்க3 குசபா4ர ப4ராலஸாம் (32)

ஸத3ஸத் ஸம்ஶயாவிஷ்ட மத்4ய தே3ஶாந்தராம் வராம்
தி3வ்யாபர3ண ஸம்யுக்தாம் தி3வ்ய க3ந்தா4னு லேபனாம் (33)

தி3வ்ய மால்யாம்ப3ர த4ராம் நீலேந்தீ3வர லோசனாம்
அலகோத்3பாஸி வத3னாம் தாம்பூ3ல க்3ராஸ ஶோபி4தாம் (34)

ஶிவாலிங்க3ன ஸஞ்ஜாத புலகோத்3பா4ஸி விக்3ரஹாம்
ஸச்சிதா3னந்த3 ரூபாட்4யாம் ஜக3ன்மாதர மம்பி3காம் (35)

ஸௌந்த3ர்ய ஸார ஸம்தோ3ஹாம் த3த3ர்ஶ ரகு4நந்த3ன:

வியாக்யானம்: - தத்ரஏவ - அவ்விடத்திலேயே, ஸுவானீனாம் - ஸுகமாக வீற்றிருக்கின்றவளும், **பூர்ணசந்த்3ர நிபா4னனாம்** - பூர்ண சந்திரன் போன்ற முகமுடையவளும், **நீலேந்தீ3வர தா3மாபா4ம்** - நீலோற்பலக் காந்தியுடையவளும், **முக்தாப4ரண ஸம்யுக்தம்** - முத்தாபரணமணிந்தவளும், **தாராம்சிதாம்** - நக்ஷத்திரங்களோடு கூடிய, **ராத்ரிம் இவ** - ராத்திரியைப் போன்றவளும், **விந்த்4ய க்ஷிதித4ரோத்துங்க3 குசபா4ர ப4ராலஸாம்** - விந்தயகிரிபோல் உந்நதமாகிய குசபராங்களால் சிரமங்கொண்டவளும், **ஸத3ஸத் ஸம்ஶயாவிஷ்ட மத்4ய தே3ஶாந் தராம்** - உளதோ இல்லையோவெனும் ஐயத்திற்கிடமாகிய இனாடப்பக்கத்தை யுடையவளும், **வராம்** - உத்தமியும், **திவ்யாபரணஸம்யுக்தாம்** - திவ்யமலர் வஸ்திரங்களைத் தரித்தவளும், **நீலேந்தீ3வர லோசனாம்** - நீலோற்பலம் போன்ற கண்களை யுடையவளும், **அலகோத்பாஸிவதனாம்** - மின்னெற்றியில் படிந்த (சூர்ணகுந்தளமெனும்) கேசங்களால் விளங்கும் முகமுடையவளும், **தாம்பூலக்ராஸ சோபிதாம்** - தாம்பூலக்கவளத்தால் விளங்குகின்றவளும், **ஶிவாலிங்க3ன ஸஞ்ஜாத புலகோத்3பா4ஸி விக்3ரஹாம்** - சிவனது ஆலிங்கனத்தாலுண்டாகிய

புளகத்தால் (சந்தோஷ மயிர்ச்சிலிப்பால்) விளங்கும் தேகமுடையவளும், **சச்சிதானந்தரூபாப்யாம்** - சச்சிதாநந்த வுருவமுடையவளும், **ஸௌந்தர்யஸாரஸந் தோஹாம்** - சௌந்தரியசாரத்திரஹயுள்ளவளும், **ஜகன்மாதரம்** - லோகமாதாவும் ஆகிய, **அம்பிகாம்** - அம்பிகையை, **ரகுநந்தன** - ராகவன், **தத்ஸம்** - கண்டான்.

பொழிப்புரை: - அவ்விடத்திலேயே சுகமாய் வீற்றிருக்கின்றவளும் பூரண சந்திரன் போன்ற முகமுடையவளும் நீலோற்பலகாந்தி யுடையவளும் பிரகாசிக்கும் மரகதகாந்தியுடையவளும் முத்தாபரணமணிந்தவளும் நட்சத்திரங்களோடு கூடிய இராத்திரி போன்றவளும் விந்தியகிரிபோலும் உன்னதமாகிய குரபாரங்களால் சிரமங் கொண்டவளும் உளதோ இல்லையோவெனும் ஐயத்திற்கிடமாகிய இடைப்பக்கத்தை யுடையவளும் உத்தமியும் திவ்வியாபரணங்களை யணிந்தவளும் திவ்வியசந்தனம் பூசியவளும் திவ்வியமலர் வஸ்திரங்களைத் தரித்தவளும் நீலோற்பலம் போன்ற கண்களையுடையவளும் முன்னெற்றியிற்படிந்த சூர்ணகுந்தள மென்னும் கேசங்க ளால் விளங்கும் முகமுடையவளும் தாம்பூலக் கவளத்தால் விளங்குகின்றவளும் சிவபிரானது ஆலிங்கனத்தாலுண்டாகிய புளகத்தால் பிரகாசிக்கும் தேகமுடைய வளும சரசிதானந்தவுரு வுடையவளும் சௌந்தரிய சாரத்திரளை யுடையவளும் லோக மாதாவுமாகிய அம்பிகையை இராகவன் கண்டான்.

ஶ்லோகம்

ஸ்வஸ்வ வாஹன ஸம்ப^{3}த்^{3}தான் நானாயுத^{4} லஸத் கரான் (36)

ப்^{3}ருஹத்^{3} ரத^{2}ந்தராதீனி ஸாமானி பரிகா^{3}யத:
ஸ்வஸ்வ காந்தா ஸமாயுக்தான் தி^{3}க்பாலான் பரித: ஸ்தி^{2}தான் (37)

அக்^{3}ரக^{3}ம் க^{3}ருடா^{3}ரூட^{4}ம் ஶங்க^{2} சக்ர க^{3}தா^{3} த^{4}ரம்
காலாம்பு^{3}த^{3} ப்ரதீகாஶம் வித்^{3}யுத் காந்த்யா ச்ரியாயுதம் (38)

ஜபந்த மேகமனஸா ருத்^{3}ராத்^{4}யாயம் ஜனார்த^{3}னம்

வியாக்யானம்: - **ஸ்வஸ்வ வாஹன ஸம்ப^{3}த்^{3}தான்** - தம்தம் வாகனத்தின் மீதேறியவர்களும், **நானாயுத$_{4}$ லஸத் கரான்** - பற்பலவாயுதங்களால் விளங்கும் கைகளையுடையவர்களும், **ப்^{3}ருஹத்^{3} ரத^{2}ந்தராதீனி** - பிருஹத்ரதந்தரம் முதலியன வாகிய, **ஸாமானி** - ஸாமங்களை, **பரிகா^{3}யத:** - கானம் செய்கின்றவர்களும், **ஸ்வஸ்வ காந்தா ஸமாயுக்தான்** - தத்தம் மங்கையோடு கூடியவர்களும், **பரித: ஸ்தி^{2}தான்** - நான்கு பக்கங்களிலும் நிற்கின்றவர்களாகிய, **திக்பாலான்** - திசைத்தலைவர்களையும், **அக்ரகம்** - முந்திவருகின்றவரும், **க^{3}ருடா^{3}ரூட^{4}ம்** - கருடன் மீதேறியவரும், **ஶங்க^{2} சக்ர க^{3}தா^{3} த^{4}ரம்** - சங்க சக்கர கதைகளைத் தரிக்கின்றவரும், **காலாம்பு^{3}த^{3} ப்ரதீகாஶம்** - நீலோற்பலம்போல் விளங்கு

கின்றவரும், **வித்யுத்காந்த்யா** - மின்னல்போன்ற காந்தியுடையவளாகிய, **ஶ்ரியா** - லக்ஷமியோடு, **யுதம்** - கூடியவரும், **ருத்ராத்யாயம் -** ருத்திராத்தியாயத்தை, **ஏகமனஸா** - ஒருமனத்தோடு, **ஜபந்தம்** ஜபிக்கின்றவருமாகிய, **ஜனார்த3னம்** - விஷ்ணுவைக் (கண்டான்.)

பொழிப்புரை: - தத்தம் வாஹனத்தின் மீதேறியவர்களும் பற்பல ஆயுதங் களால் விளங்கும் கைகளையுடையவர்களும் பிருஹத்ரதந்தரம் முதலியனவாகிய ஸாமங்களை கானம் செய்கின்றவர்களும் தத்தம் மங்கையோடு கூடியவர்களும் நான்கு பக்கங்களிலும் நிற்கின்றவர்களுமாகிய திசைத்தலைவர்களையும் முந்தி வருகின்றவரும் கருடன் மீதேறியவரும் சங்கசக்கரக் கதைகளைத் தரிக்கின்றவரும் நீலோற்பலம்போல விளங்குகின்றவரும் மின்னல் போன்ற காந்தியுடையவளாகிய இலக்குமியோடு கூடியவரும் உருத்திராதியாயத்தை ஒரேமனதோடு ஜபிக்கின்ற வருமாகிய விஷ்ணுவைக் கண்டான்.

ஶ்லோகம்.

பஶ்சாச் சதுர்முக2ம் தே3வம் ப்4ரஹ்மாணம் ஹம்ஸ வாஹனம் (39)

சதுர்வக்த்ரை ஶ்துர்வேத3 ரௌத்3ர ஸுக்தைர் மஹேஶ்வரம்
ஸ்துவந்தம் பா4ரதீயுக்தம் தீ3ர்கக4 கூர்ச்சம் ஜடாத4ரம் (40)

அத3ர்வஶிரஸா தே3வம் ஸ்துவந்தம் முனி மண்ட3லம்
க3ங்கா3தி தடினீ யுக்த மம்பு3தி4ம் நீல விக்3ரஹம் (41)

ஶ்வேதாஶ்வதர மந்த்ரேண ஸ்துவந்தம் கி3ரிஜாபதிம்

வியாக்யானம்: - **பஶ்சாத்** - பின்னால், **ஹம்ஸ வாஹனம்** - அன்ன வாஹநத்தின் மீது வீற்றிருக்கின்றவனும், **சதுர்வக்த்ரை:** - நான்கு முகங்களாலும், **சதுர்வேதருத்ரஸூக்தை** - நான்கு வேதங்களிலுள்ள ருத்திரசூக்தங்களால், **மஹேஶ்வரம்** - மகேஸ்வரனை, **ஸ்துவந்தம்** - ஸ்துதி செய்கின்றவனும், **பாரதீ யுக்தம்** - ஸரஸ்வதியோடு கூடியவனும், **சதுர்வக்த்ரம்** - நான் முகனும் ஆகிய, **ப்ரம்மாணம் தே3வம்** - பிரும்மதேவனையும், **அத3ர்வஶிரஸா** - அதருசிர உபநிடதத்தால், **தே3வம்** - இறைவனை, **ஸ்துவந்தம்** - தோத்திரம் செய்கின்றதும், **தீ3ர்க்க4 கூர்ச்சம்** - நீண்ட தாடியுடையதுமாகிய, **முனிமண்டலம்** - முநிக்கூட்டத் தையும், **கிரிஜாபதிம்** - உமாபதியாகிய இறைவனை, **ஶ்வேதாஶிவதரமந்த்ரேண** - ச்வேதாச்வதர உபநிடதத்தால், **ஸ்துவந்தம்** - தோத்திரம் செய்கின்றவனும், **கங்காதிதடி நீயுக்தம்** - கங்கை முதலிய நதிகளோடு கூடியவனும், **நீலவிக்ரஹம்** - கருத்தமேனியனுமாகிய, **அம்புதிம்** - சமுத்திரனையும் கண்டான்.

பொழிப்புரை: - பின்னால் அன்னவாஹனத்தின் மீது வீற்றிருக்கின்றவனும் நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களிலுள்ள உருத்திர ஸூக்தங்களால் மஹேஶ்வரனை ஸ்துதி செய்கின்றவனும் ஸரஸ்வதியோடு கூடியவனும் நான் முகனும் ஆகிய பிரமதேவனையும் அதருவசிரசு உபநிடதத்தால் இறைவனை தோத்திரஞ் செய்கின்றவரும் நீண்ட தாடிகளை யுடையவருமாகிய முனிக்கூட்டத்தையும் உமாபதியாகிய இறைவனை சுவேதாஶ்வர உபநிடத்தால் ஸ்தோத்திரம் செய்கின்றவனும் கங்கை முதலிய நதிகளோடு கூடியவனும் கறுத்த மேனியனுமாகிய ஸமுத்திரராஜனையுங் கண்டான்.

ஶ்லோகம்.

அனந்தாதி^{3} மஹா நாகா^{3}ன் கைலாஸ கி^{3}ரி ஸன்னிபா^{4}ன் (42)

கைவல்யோபநிஷத் பாடா^{2}ன் மணிரத்ன விபூ^{4}ஷிதான்
ஸுவர்ண வேத்ர ஹஸ்தாட்^{4}யம் நந்தி^{3}னம் புரத: ஸ்தி^{2}தம் (43)

வியாக்யானம்: - **மணிரத்த விபூ^{4}ஷிதான்** - மணிச்ரேஷ்டங்களால் அலங்கரிக்கப்பட்டவர்களும், **கைவவ்யோபநிஷத்பாடான்** - கைவல்யோபநிடதத்தைப் பாராயணம் செய்கின்றவர்களும், **கைலாஸ கி^{3}ரி ஸன்னிபா^{4}ன்** - கைலாஸகிரி போன்றவர்களுமாகிய, **அனந்தாதி மஹாநாகான்** - அநந்தன் முதலிய மஹாநாகர்களையும், **புரத:** - முன்னால், **ஸ்திதம்** - நிற்கின்றவரும், **ஸுவர்ணவேத்ர ஹஸ்தாட்யம்** - பொற்பிரம்பு கையிற்பிடித்தவருமாகிய, **நந்திநம்** - நந்தியையும் கண்டான்.

பொழிப்புரை: - மேன்மையான ரத்தினங்களால் அலங்கரிக்கப் பட்டவர்களும் கைவல்யோபநிடதத்தைப் பாராயணஞ் செய்கின்றவர்களும் கைலையங்கிரி போன்ற வர்களுமாகிய அனந்தன் முதலிய மகா நாகர்களையும் முன்னால் நிற்கின்றவரும் பொற்பிரம்பு கையிற் பிடித்தவருமாகிய நந்திதேவரையுங் கண்டான்

ஶ்லோகம்

த^{3}க்ஷிணே மூஷகாரூட^{4}ம் க^{3}ணேஶம் பர்வதோபமம்
மயூர வாஹனாரூட^{4} முத்தரே ஷண்முக^{2}ம் ததா^{2} (44)

மஹாகாலம் ச சண்டே^{3}ஶம் பார்ஶ்வயோர் பீ^{4}ஷணாக்ருதிம்
காலாக்^{3}னி ருத்^{3}ரம் தூ^{3}ரஸ்த^{2}ம் ஜ்வலத்^{3} தா^{3}வாக்^{3}னி ஸன்னிப^{4}ம் (45)

த்ரிபாத^{3}ம் குடிலாகாரம் நடத்^{3} ப்^{4}ருங்கி^{3} ரிடிம் புன:
நானாவிகார வத^{3}னான் கோடிஶ: ப்ரமதா^{2}தி^{4}பான் (46)

வியாக்யானம்: - **தக்ஷிணே** - தென்பக்கத்தில், **மூஷிகாரூடம்** - மூஞ்சூறின் மீதேறியவரும், **பர்வதோபமம்** - மலைபோன்றவரும் ஆகிய, **க^{3}ணேஶம்** - கணம் பதியையும், **உத்தரே** - வடபக்கத்தில், **மயூரவாஹனாரூடம்** - மயில்வாஹனத்தில் வீற்றிருக்கின்றவரும் ஆகிய, **ஷண்முகம்** - ஆறுமுகனாகிய முருகக்கடவுளையும், **பார்ஶ்வயோ:** - பாரிசங்களில், **பீஷணாக்ருதிம்** - பயங்கரமாகிய உருவமுடையவர் ஆகிய, **மஹாகாலம்** - மஹாகாளரையும், **சண்டேசம்** - சண்டேசனையும், **தூரஸ்தம்** - சற்றுத் தூரத்திலுள்ளவனும், **ஜ்வலத்தாவாக்னிஸன்னிபம்** - சொலிக்கும் காட்டுத்தீபோன்றவரும் ஆகிய, **காலாக்^{3}னி ருத்^{3}ரம்** - காலாக்கிநி ருத்திரரையும், **புரத:** - எதிரில், **த்ரிபாத^{3}ம்** - மூன்று கால்களையுடையவரும், **குடிலாகாரம்** - கோணலாகிய தேகமுடையவரும், **நடத்ப்ருங்கிரிடிம்** - நடனம் செய்யும் பிருங்கிரிடியையும், **நானாவிகார வத^{3}னான்** - பற்பலவிகாரமுடைய முகத்தினர்களாகிய, **கோடிஶ:** - கோடிக்கணக்காயுள்ள, **ப்ரமதா^{2}தி^{4}பான்** - பிரமதகணாதிபர்களையும் கண்டான்.

பொழிப்புரை: - தென்பக்கத்திவ் மூஷிகத்தின் மீதாரோகணித்தவரும் மலைபோன்றவருமாகிய கணபதியையும் வடபக்கத்தில் மயில் வாகனத்தின் மீது வீற்றிருக்கின்றவராகிய அறுமுகக்கடவுளையும் பக்கங்களில் பயங்கரமாகிய உருவமுடையவராகிய மகாகாளரையும் சண்டேசரையும் சற்றுத் தூரத்திலுள்ள வரும் சொலிக்கும் காட்டுத் தீபோன்றவருமாகிய காலாக்கினி ருத்திரரையும் மூன்று கால்களையுடையவரும் கோணலாகிய தேகமுடையவரும் நடனஞ்செய்யும் பிருங்கிரிடியையும் பற்பலவிகாரமுடைய முகத்தினர்களாகிய கோடிக்கணக்காயுள்ள பிரமத கணாதிபர்களையுங் கண்டான்.

ஶ்லோகம்.

நானாவாஹன ஸம்யுக்தம் பரிதோ மாத்ருமண்ட^{3}லம்
பஞ்சாக்ஷரீ ஜபாஸக்தான் ஸித்^{3}த^{4} வித்^{3}யாத^{4}ராதி^{3}கான் **(47)**

தி^{3}வ்ய ருத்^{3}ரக கீ^{3}தானி கா^{3}யத் கின்னர வ்ருந்த^{3}கம்
தத்ர த்ரையம்ப^{3}கம் மந்த்ரம் ஜபத்^{3} த்^{3}விஜ கத^{3}ம்ப^{3}கம் **(48)**

வியாக்யானம்: - **நானாவாஹன ஸம்யுக்தம்** - பற்பலவாஹனங்களிலே றியவர்களும், **பரித:** - சூழ்ந்துநிற்கும், **மாத்ருமண்ட^{3}லம்** - மாதிரு (அன்னை அதாவது ஸப்தமாதிருக் கூட்டத்தையும்) **பஞ்சாக்ஷரீ ஜபாஸக்தான்** - பஞ்சாக்ஷரஜபத்தில் விருப்புற்றவர்களாகிய, **ஸித்^{3}த^{4} வித்^{3}யாத^{4}ராதி^{3}கான்** - சித்தர் வித்தியாதரர் முதலியவர்களையும், **தி^{3}வ்ய ருத்^{3}ரக கீ^{3}தானி** - திவ்வியருத்திர சரித கீதங்களை, **கா^{3}யத் கின்னர வ்ருந்த^{3}கம்** - பாடுகின்ற கின்னரக்கூட்டத்தையும், **தத்ர** - அங்கு, **த்ரையம்ப^{3}கம்** - திரியம்பகம் என்று தொடங்கிய, **மந்த்ரம்** - மந்திரத்தை, **ஜபத்^{3} த்^{3}விஜ கத^{3}ம்ப^{3}கம்** - ஜபிக்கும் அந்தணக் கூட்டத்தையும் கண்டான்.

பொழிப்புரை: - பற்பல வாகனங்களி லாரோகணித்தவர்களும் சூழ்ந்துநிற்கும் மாதிருக்கூட்டத்தையும் பஞ்சாட்சரஜபத்தில் விரும்புற்றவர்களாகிய சித்தர் வித்தியாதரர் முதலியவர்களையும் திவ்விய ருத்திர சரித கீதங்களை பாடுகின்ற கின்னரக் கூட்டத்தையும் அங்கு திரியம்ப்க மென்று தொடங்கிய மந்திரத்தை ஜபிக்கும் அந்தணர்கூட்டத்தையுங் கண்டான்.

ஶ்லோகம்.

கா3யந்தம் வீணயா கீ3தம் ந்ருத்யந்தம் நாரத3ம் தி3வி
ந்ருத்யதோ நாட்ய ந்ருத்தேன ரம்பா4தீ3 னப்ஸரோ க3ணான் (49)

வியாக்யானம்: - **திவி** - ஆகாயத்தில், **வீணயா** - வீணையினால், **கீதம்** - பாட்டை, **காயந்தம்** - பாடுகின்றவரும், **ந்ருத்யந்தம்** - நடனம் செய்வோருமாகிய, **நாரதம்** - நாரதரையும், **நாட்ய ந்ருத்தேன** - நாட்டியந்ருத்தத்தோடு, **ந்ருத்யதோ** - நடனமாடுவதாகிய, **ரம்பா4தீ3ந்** - அரம்பை முதலியவர்களான, **அப்ஸரோகணாந்** - அப்ஸரஸ்திரீகளின் கூட்டங்களையும் கண்டான்.

பொழிப்புரை: - ஆகாயத்தில் வீணையினால் பாட்டைப்பாடுகின்றவரும் நடனம் செய்வோருமாகிய நாரதரையும் நாட்டிய சாஸ்திரத்தின்படி நடனம் செய்வோர்களாகிய அரம்பை முதலிய அப்ஸர ஸ்திரீகளையும் கண்டான்.

ஶ்லோகம்.

கா3யத்சித்ர ரதா2தீனாம் க3ந்த4ர்வாணாம் கத3ம்ப3கம்
கம்ப4ளாஶ்வதரௌ ஶம்பு4 கர்ண குண்ட3லதாம் க3தௌ (50)

வியாக்யானம்: - **கா3யச்சித்ர ரதா2தீனாம்** - பாடுகின்றவர்களான சித்ரரதன் முதலியவர்களாகிய, **கந்தர்வாணாம்** - கந்தர்வர்களது, **கதம்பகம்** - கூட்டத்தையும், **சம்புகர்ணகுண்டலதாம்** - இறைவனுக்குக் காதணியாயிருக்குந் தன்மையை, **கதௌ** - அடைந்தவர்களாகிய, **கம்பலாச்வதரௌ** - கம்பல அச்வதரர்களையும் கண்டான்.

பொழிப்புரை: - பாடும் சித்திரரதர் முதலிய கந்தர்வக்கூட்டத்தையும் சிவபெருமானுக்குக் காதணியாயுள்ள கம்பலாச்வதரர்களையும் கண்டான்..

ஶ்லோகம்.

கா3யந்தௌ பன்னகௌ3 கீ3தம் கபாலம் கம்ப3ளம் ததா2
ஏவம் தே3வ ஸபா4ம் த்3ருஷ்ட்வா க்ருதார்த்தோ2 ரகு4நந்த3ன: (51)

வியாக்யானம்: - **கீ³தம்** - கீதத்தை, **கா³யந்தௌ -** பாடுகின்றவர்களாகிய, **பன்னகௌ³** - பந்நகர்களாகிய, **கபாலம்** - கபாலனையும், **கம்பலம்** - கம்பலன் இவர்களையும் கண்டான், **ஏவம்** - இவ்விதம், **தேவஸபாம்** - தேவஸபையை, **த்³ருஷ்ட்வா** - கண்டு, **ரகு⁴நந்த³ன:** - ராகவன், **க்ருதார்த்த:** - திருதார்த்தனாயினன் (தன்னியனாயினன்.

பொழிப்புரை: - கீதத்தைப் பாடுகின்றவர்களாகிய பந்நகர்களாகிய கபால கம்பலர்களையும் கண்டான். இவ்வாறு தேவஸபையைக் கண்டு ராமன் கிருதார்த்த னானான்.

ஶ்லோகம்.

ஹர்ஷக³த்³ க³த³யா வாசா ஸ்துவன் தே³வம் மஹேஶ்வரம்
தி³வ்ய நாம ஸஹஸ்ரேண ப்ரணநாம புன: புன: (52)

வியாக்யானம்: - **ஹர்ஷக³த்³ க³த³யா** - சந்தோஷத்தால் தழுதழுத்த, **வாசா** - வாக்கியத்தால், **தே³வம்** - இறைவனாகிய, **மஹேஶ்வரம்** - சிவபெருமானை, **ஸ்துவன்** - ஸ்தோத்திரம் செய்கின்றவனாய்க் கொண்டு, **தி³வ்ய நாம ஸஹஸ்ரேண** - திவ்வியமாகிய நாமங்களின் ஆயிரத்தால், **புன: புன:** - மீண்டும், **ப்ரணநாம** - நமஸ்கரித்தான்.

பொழிப்புரை: - ஸந்தோஷத்தால் தழுதழுத்த வாக்கியத்தால் இறைவனாகிய சிவனை ஸ்தோத்திரம் செய்துகொண்டு திவ்யநாம ஸஹஸ்ரத்தால் பன்முறை நமஸ்கரித்தான்.

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்.

தி3வ்யாஸ்த்ர ப்ராப்தி

ஸ்ரீஸூத உவாச - ஸ்ரீஸூதர் கூறியது.

அத2 ப்ராது3 ரபூ4த் தத்ர ஹிரண்மய ரதோ2 மஹான்
அனேக தி3வ்ய ரத்னாம்ஶு கிம்மீரித தி3க3ந்தர: (1)

வியாக்யானம்: - **அத** - பிறகு, **தத்ர** - அங்கு, **அனேக தி3வ்ய ரத்னாம்ஶு கிம்மீரித தி3க3ந்தர:** - எண்ணிறந்த திவ்யரத்தங்களின் காந்தியால் சித்திரவர்ணத் தோடு கூடிய திசைவெளிகளை யுடையதும், **மஹான்** - யெரிதுமாகிய, **ஹிரண்மய ரத:** - ஸ்வர்ணமயமானரதம், **ப்ராது3 ரபூ4த்** - ஆவிர்ப்பவித்தது (தோன்றியது.)

பொழிப்புரை: - பிறகு அங்கு எண்ணிறந்த திவ்யத்ரநங்களின் காந்தியால் சித்திரவர்ணமாக்கப்பட்ட திசைவெளிகளையுடையதும் பெரிதுமாகிய பொன்மயமாகிய ரதம்தோன்றியது.

நவ்யோsபாந்திக பங்காட்4ய மஹாசக்ர சதுஷ்டய:
முக்தா தோரண ஸம்யுக்த: ஶ்வேத ச்ச2த்ர ஶதாவ்ருத: (2)

ஶுத்3த4 ஹேம க2லீனாட்4ய துரங்க3 க3ண ஸம்யுத:
முக்தா விதான விலஸ தூ3ர்த்4வ தி3வ்ய வ்ருஷ த்4வஜ: (3)

மத்த வாரணிகா யுக்த: பஞ்ச தத்வோப ஶோபி4த
பாரிஜாத தருத்3பூ4த புஷ்பமாலாsபி4ரஞ்ஜித: (4)

ம்ருக3நாபி4 ஸமுத்3பூ4த கஸ்தூரீ மத3பங்கில
கர்பூராக3ரு தூ4போத்த2 க3ந்தா4க்ருஷ்ட மது4வ்ரத: (5)

ஸம்வர்த்த க4ன கோ4ஷாட்4ய நானா வா3த்ய ஸமந்வித :
வீணா வேணு ஸமாஸக்த கிந்நரீகணஸங்குலம் (6)

வியாக்யானம்: - **நத்யுபாந்திகபங்காட்ய மஹாசக்ர சதுஷ்ட:** தமீநதிக்கரையிலுள்ள சேற்றினால் பூசப்பட்டுள்ள பெரிய நாலுசக்கரங்களை யுடையதும், **முக்தாதோரணஸம்யுக்த:** - முத்துத்தோரணங்களுடையதும், **ச்வேதச்சத்ரசதாவ்ருத:** - எண்ணிறந்த வெண்குடைகளால் சூழப்பட்டதும்,

சுத்தஹேமகுரை: - சுத்தமாகிய பொற்குளம்புகளோடு, **ஆட்ய துரங்ககணஸம்யுத:** - கூடிய குதிரைவரிசைகளையுடையதும், **முக்தாவிதாநவிலஸதூர்த்து வதிவ்யவ்ருஷத்வஜா** - முத்துகளால் நிர்மிக்கப்பட்ட மேல்விதாநத்தில் விளங்கும் வருஷபத்துவஜத்தையுடையதும், **மத்தவாரணிகா யுக்த:** - மதித்த, யானைகளையுடையதும், பஞ்சதத்வோபசோபித: - ஐந்து தத்துவாதிஷ்டான தேவர்களோடு கூடி விளங்குவதும், பாரிஜாததரூத்பூத **புஷ்பமாலாபிரஞ்ஜித:** - பாரிஜாத விருக்ஷத்திலுண்டாகிய புஷ்பமாலைகளால் அலங்கரிக்கப்பட்டதும், **ம்ருக நாபிஸமுத்பூதகஸ்தூரீமதபங்கில: -** கஸ்தூரிமானிடம் உண்டாகிய கஸ்தூரீமத பங்கம்படியப் பெற்றதும், **ஸம்வர்த்தகனகோஷாட்ய:** - பிரளயகால மேகங்களினுடையது போன்ற ஒலி முழக்கத்தையுடையதும், **நாநா வாத்³ய பஸமந்வித -** எண்ணிறந்த வாத்திய விசேஷங்களோடு கூடியதும், **வீணா வேணுஸ்வராஸக்தகிந்நரீகணஸம்குல** - வீணை புல்லாங்குழல் மிருதங்கம் இவைகளின் நாதத்தில் விருப்புற்ற கிந்தரஸ்திரீ கூட்டத்தோடு கூடியதுமாயிருந்தது.

பொழிப்புரை - அது கௌதமீந்திக்கரையிலுள்ள சேற்றினால் பூசப்பட்ட நாலுபெருஞ் சக்கரங்களையுடையதும் முத்துத் தோரணங்களையுடையதும் வெண்குடைகளால் சூழப்பட்டுள்ளதும் சுத்தமாகிய பொற்குளம்புகளையுடைய குதிரை வரிசைகளையுடையதும் முத்துக்களால் நிர்மிக்கப்பட்ட மேல்விதானத்தில் விளங் கும் வ்ருஷபத்துவஜமுடையதும் மதித்த யானைகளையுடையதும் ஐந்து தத்துவாதிஷ்டான தேவர்களோடுகூடி விளங்குவதும், பாரிஜாதபுஷ்பமாலைகளா லலங்கரிக்கப்பட்டதும் அற்புதமாகிய கஸ்தூரீ மதபங்கம் படியப்பெற்றதும், பிரளயகாலமேகங்களினது போன்ற ஒலிமுழக்க ததையுடையதும், எண்ணிறந்த வாத்திய விசேஷங்களோடு கூடியதும் வீணை புள்ளாங்குழல் மிருதங்கம் - இவைக ளின் நாதத்தில் விருப்புற்ற கிந்நரஸ்திரிக்கூட்டத்தோடு கூடியதுமாயிருந்தது.

ஶ்லோகம்.

ஏவம் த்³ருத்ஷ்ட்வா ரத² ஶ்ரேஷ்டம் வருஷா து³த்தீர்ய ஶங்கர:
அம்ப³யா ஸஹிதஸ் தத்ர படதல்பேsவிஶித் ததா³ (7)

ஸுர நீரஜ நேத்ரீணாம் ஶ்வேத சாமர சாலனை:
தி³வ்ய வாஹன பாதைஶ்ஶ ப்ரஹ்ருஷ்டோ நீல லோஹித: (8)

வியாக்யானம்: - ஏவம் - இவ்விதம், **ரதச்ரேஷ்டம்** - ரதச்ரேஷ்டத்தை, **க்ருத்வா** - (தோன்ற) ச் செய்து, **சங்கர:** - சங்கரன், வ்ருஷபத்தின் மீதிருந்து, **உத்தீர்ய** இறங்கி, **அம்ப³யா ஸஹித** - அம்பிகையோடு கூடியவராய், **தத்ர** - அந்தரதத்திலுள்ள, **படதல்பே** - வஸ்திராஸநத்தில், **அவிசத்** - உட்கார்ந்து கொண்டனர், ஸுரநீரஜநேத்ராணா - தேவமங்கையர்களது, **ச்வேதசாமரசாலனை** - வெண்சாமாச் சலனங்களாலும், **திவ்யவ்ய ஜநவாதைஸ்ச** - சிறந்த விசிறியின்

காற்றினாலும், நீலலோஹித: - சிவபெருமான், **ப்ரஹ்ருஷ்ட** - மிகவும் ஸந்தோஷித்தனர்.

பொழிப்புரை: - இவ்வாறு சதசரேஷ்டத்தைத் தோன்றச் செய்து சங்கரன் விருஷபத்திலிருந்திறங்கி அம்பிகையோடு கூடியவராய் ரதத்தையடைந்து அதிலுள்ள வஸ்தியாஸனத்தில் உட்கார்ந்து கொண்டனர். தேவமங்கையாகளது வெண்சாமங்களாலும் சிறந்த விசிறியின் காற்றினாலும் சிவபெருமான மிகவும் திருப்தி யடைந்தனர்.

ஶ்லோகம்

க்வணத் கங்கண நித்^{4}வானை: மஞ்ஜு மஞ்ஜீர நிஸ்வனை:
வீணா வேணு ஸ்வநைர் கீ^{3}தை பூர்ணமாஸ ஜக^{3}த் த்ரயம் (9)

ஶுகவாக்ய கலாராவை: ஶ்வேத பாராவத ஸ்வனை:

வியாக்யானம்: - **க்வணத் கங்கண நித்^{4}வானை:** - ஒலிக்கின்ற கடக நாதங்களாலும், **மஞ்ஜு மஞ்ஜீர சிஞ்ஜிதை** - இனிய தண்டை ஒலிகளாலும், **வீணா வேணு ஸ்வநை** - வீணை புள்ளாங்குழல்களின் நாதங்களாலும், **கீ^{3}தை** - பாட்டுகளாலும், **ஶுகவாக்ய கலாராவை:** கிளி வாக்யங்களின் இனிய குரலாலும், **ஶ்வேத பாராவத ஸ்வனை: -** வெண் மாடப்புறாக்களின் சப்தங்களாலும், **ஜகத்ரயம்** - மூவுலகமும், **பூர்ணம்** - நிரம்பியது, **ஆஸீத்** - ஆச்சுது.

பொழிப்புரை: - ஒலிக்கும் கடகநாதங்களாலும் இனிய தண்டை ஒலிகளாலும் வீணாவேணுக்களின் நாதங்களாலும் கீதங்களாலும் கிளிகளின் இனிய குரல்க ளாலும் வெண்மாடப்புறாக்களின் சப்தங்களாலும் மூவுலகமும் நிரம்பிய தாச்சுது.

ஶ்லோகம்.

உன்னித்^{3}ர பூ^{4}ஷா ப^{2}ணினாம் த^{3}ர்ஶ்னாதே^{3}வ ப^{3}ர்ஹிண:
நன்ருதுர் த^{3}ர்ஶயந்தஸ் ஸ்வாம் ஶந்த்^{3}ரகான் கோடி ஸங்க்^{2}யயா
(10)

வியாக்யானம்: - **உன்னித்^{3}ர பூஷா ப^{2}ணினாம்** - உல்லாஸமாயுள்ள ஆபரணஸர்ப்பங்களை, **த^{3}ர்ஶ்னாத்ஏவ** - கண்டதனாலேயே, பர்ஹிண: - மயில்கள், **ஸ்வாந** - தங்களது, **கோடிஸங்க்யா** - கோடிக்கணக்காயுள்ள, **சந்தரகாந** - புள்ளிகளை, **தர்சயநத:** - காண்பிக்கின்றனவாய், **நநருது** - நர்த்தனம் செய்தன.

பொழிப்புரை: - உல்லாஸமாயுள்ள ஆபரண ஸர்ப்பங்களைக் கண்டத னாலேயே மயில்கள் தங்களது கோடிக்கணக்கான புள்ளிகளைக் காண்பிக் கின்றனவாய்க் கூத்தாடின.

ஶ்லோகம்.

ப்ரணமந்தம் ததோ ராம முத்தா²ப்ய வ்ருஷப⁴ த்⁴வஜ:
ஆநினாய ரத²ம் தி³வ்யம் ப்ரஹ்ருஷ்டேனாऽந்தராத்மனா (11)

வியாக்யானம்: - **தத** - அதற்குப்பிறகு, **வ்ருஷபத்வஜ:** - சிவ பெருமான், **ப்ரணமந்தம் -** நமஸ்கரிக்கின்றவனாகிய, **ராமம்** - ராமனை, **உத்தா²ப்ய** - எழுந்திரு க்கச்செய்து, **ப்ரஹ்ருஷ்டேனா** - மிக்கத் திருப்தியடைந்த, **அந்தராத்மனா** - சித்தத்தோடு கூட, **திவ்யம்** - திவ்யமாகிய, **ரத²ம்** - அந்தரதத்திற்கு அவனை, **ஆநினாய** - வர வழைத்தான்.

பொழிப்புரை: - அதற்குப்பிறகு சிவபெருமான் நமஸ்கரித்துக் கொண்டிருக்கி ன்றவனாகிய ராமனை எழுந்திருக்கச்செய்து மிக்கத் திருப்தியடைந்த மனதோடு அவனைத் தமது அற்புதமாகிய ரதத்திற்கு வரவழைத்தனர்.

ஶ்லோகம்.

கமண்ட³லுஜலை: ஸ்வச்சை²: ஸ்வய மாசம்ய யத்னத:
ஸமாசாம்யாऽத² புரத: ஸ்வாங்கே ராம முபாநயத் (12)

வியாக்யானம்: - **ஸ்வச்சை²:** - நிர்மலமாகிய, **கமண்ட³லுஜலை:** - கடத்திலுள்ள தீர்த்தங்களால், **ஸ்வயம்** - தான், **ஆசம்ய** - ஆசமனம் செய்து, **யத்நத:** - விதிப்படி, **புரத:** - எதிரில், **ஸமாசாம்ய** - ராமனையும் ஆசமனம்செய்யச்செய்து, **அத** - பின்னர், **ராமம்** - ராமனை, **ஸ்வாங்கே** - தனது மடிமீது, **உபாநயத்** - வரவழைத்து இருக்கச்செய்தனர்.

பொழிப்புரை: - சுத்தமாகிய கடத்திலுள்ள ஜலத்தால் ஆசமனஞ்செய்து பின்னர் எதிரில் விதிப்படி ஆசமனஞ்செய்வித்து ராமனை தமது மடிமீது வைத்துக் கொண்டனர்..

ஶ்லோகம்.

அத² தி³வ்யம் த⁴னுஸ் தஸ்மை த³தௌ³ தூணீர மக்ஷயம்
மஹா பாஶுபதம் நாம தி³வ்ய மஸ்த்ரம் த³தௌ³ தத: (13)

உக்தஶ்ச தேன ராமோऽபி ஸாத³ரம் சந்த்³ர மௌலினா (14)

வியாக்யானம்: - **அத²** - பின்னர், **தஸ்மை** - அந்தராமன்பொருட்டு, **தி³வ்யம்த⁴னு: -** திவ்யதநுஸை (வில்லை) யும், **அக்ஷயம்** - குறைவற்ற, **தூணீரம்**

- அம்புமுத்தூணியையும், **ததௌ** - கொடுத்தார், **தத:** - அதன் பின்னர், **மஹா பாஶு பதம் நாம** - மஹாபாசுபதம் எனும் பெயரிய திவ்யம், **அஸ்த்ரம்** - திவ்வியாஸ்திரத்தையும், **த^{3}தௌ^{3}** - கொடுத்தார், **தேன சந்த்^{3}ர மௌலினா** - அந்த சந்த்ர சூடனாகிய (இறைவனால்), ராம - இராமன், ஸாதரம் - மிக்கஆதரவோடும், **உக்தஶ்ச** - கூறவும் பட்டான்.

பொழிப்புரை: - பின்னர் அந்தராமன் பொருட்டுத் திவ்வியவில்லையும் குறைவற்ற அம்புறாத்தூணியையும் கொடுத்தார். அதன் பின்னர் மஹாபாசுபதம் எனும் திவ்வியாஸ்திரத்தையும் அளித்தார். அன்றியும் அந்த சந்திர சூடனாகிய இறைவனால் ராமன் மிக்க ஆதரவுடன் கூறவும்பட்டான்.

ஶ்லோகம்.

ஜக^{3}ன் நாஶகரம் ரௌத்^{3}ர முக்^{3}ர மஸ்த்ர மித^{3}ம் ந்ருப
அதோ நேத^{3}ம் ப்ரயோக்தவ்யம் ஸாமான்ய ஸமராதி^{3}கே (15)

அன்யன் நாஸ்தி ப்ரதீகா^{4}த மேதஸ்ய பு^{4}வனத்ரயே
தஸ்மாத் ப்ராணாத்யயே ராம! ப்ரயோக்தவ்ய முபஸ்தி^{2}தே (16)

அன்யதை^{2}தத் ப்ரயுக்தம் ச ஜக^{3}த் ஸம்க்ஷயக்ருத்^{3} ப^{4}வேத்

வியாக்யானம்: - **ந்ருப** - ஓ அரசனே, **இத^{3}ம்** - இந்த, **அஸ்த்ரம்** - அஸ்திரமானது, **உக்^{3}ரம்** - தீக்ஷணமாயும், **ரௌத்^{3}ரம்** - பயங்கரமாயும், **ஜக^{3}ன் நாஶகரம்** - உலகையழிப்பதாயுமுள்ளது, **அத** - ஆதலால், **இதம்** - இது, **ஸாமான்னியராதிகே** - ஸாமான்னிய யுத்தமுலியவற்றில், **ப்ரயோக்தவ்யம்ந** - பிரயோகிக்கக்கூடியதல்ல, **ஏதஸ்ய** - இவ்வஸ்திரத்திற்கு, **புவனத்ரயே** - முவ்வுலகிலும், **ப்ரதீகாதம்** - தடுக்கக்கூடியது, **அந்யத்** - வேறொன்று, **நாஸ்தி** - இல்லை, **தஸ்மாத்** - ஆதலால், **ராம** - ஓ ராமா, **ப்ராணாத்யயே** - பிராணாபத்து, **உபஸ்தி^{2}தே** - வந்தபொழுது, **ப்ரயோக்தவ்யம்** - பிரயோகிக்கவேண்டியது, **அந்யதா** - மற்றபொழுது, **ப்ரயுக்தம்சேத்** - பிரயோகிக்கப்படுமாயின், **ஜகத்ஸம்க்ஷயக்ருத** - உலகையழிக்கின்றது, **பவேத** - ஆகும்.

பொழிப்புரை: - ஓ அரசனே இந்த அஸ்திரமானது தீக்ஷணமாயும் பயங்கரமாயும் உலகையழிப்பதாயுமுள்ளது. ஆதலால் இது ஸாமான்னியயுத்தம் முதலியதில் பிரயோகிக்கக்கூடியதல்ல. இவ்வஸ்திரத்திற்கு முவ்வுலகிலும் தடுக்கக்கூடியது வேறு ஒன்று இல்லை. ஒ ராமா ப்ராணாபத்து வந்தபோது இது பிரயோகிக்கக் கூடியது. மற்றஸமயத்தில் பிரயோகித்தால் உலகையழிக்கிறதாகும்.

ஶ்லோகம்.

அதா[2]ஹூய ஸுரஶ்ரேஷ்டான் லோகபாலான் மஹேஶ்வர (17)

உவாச பரம பீரத: ஸ்வ மஸ்ஸ்த்ரம் ப்ரயச்ச[2]த
ராக[4]வோsயம் ச தைரஸ்த்ரீ ராவணம் நிஹனிஷ்யதி (18)

தஸ்மை தே[3]வை ரவத்[4]யத்வ மிதி த[3]த்தோ வரோ மயா
தஸ்மாத்[3] வானரதாமேத்ய ப[4]வந்தோ யுத்[3]த[4] து[3]ர்மதா[3]: (19)

ஸாஹாய்ய மஸ்ய குர்வந்து தேன ஸுஸ்தா[2] ப[4]விஷ்யத[2]

வியாக்யானம்: - அத - பின்னர், **மஹேஶ்வர** - மகேச்வரன், **லோகபாலான்** - உலகபாலர்களாகிய, **ஸுரஶ்ரேஷ்டான் -** தேவ ச்ரேஷ்டர்களை, **ஆஹூய** - கூப்பிட்டு, **பரமப்ரீத** - மிக்கப்பிரிதியடைந்தவராய், **உவாச** - கூறலானார் (தேவர்காள்,) **ஸ்வம்ஸ்வம்** - தங்கள் தங்களது, **அஸ்த்ரம்** - அஸ்திரத்தை, **ப்ரயச்சத** - கொடுங்கள், **தை: அஸ்த்ரை:ச -** அந்த அஸ்திரங்களாலும், **அயம்** - இந்த, **ராகவ** - இராகவன், **ராவணம்** - ராவணனை, **நிஹநிஷ்யதி** - கொல்லுவான் வதம் செய்வான், **தஸ்மை** - அந்த ராவணனுக்கு, **மயா** - என்னால், **தேவை** : - தேவர்களால், அவத்யத்துவம் - வதமடையாதிருத்தல், **இதி** - என்னும், **வரம்** - வரம், **தத்த** - அளிக்கப்பட்டுளது, **தஸ்மாத்** - ஆதலால், **வாநரதாம்** - வாநரத்தன்மையை, **ஏத்ய** - அடைந்து, **யுத்[3]த[4] து[3]ர்மதா** - யுத்தத்தில் ஆவலுள்ளவர்களாய், பவந்த - நீங்கள், **அஸ்ய** - இவனுக்கு (இந்தராமனுக்கு), **ஸாஹாய்யம்** - உதவியை குர்வந்து - செய்வீர்களாக.

பொழிப்புரை: - பின்னர் மகேச்வரன் உலக பாலகர்களாகிய தேவச்ரேஷ்டர் களைக் கூப்பிட்டு மிக்கப் பிரீதியுடையவராய்க் கூறலானார். ஓ தேவர்காள் நீங்கள் தத்தம் அஸ்திரத்தைக் கொடுங்கள் அந்த அஸ்திரங்களால் இந்த ராகவன் ராவணனை வதஞ்செய்வான். அந்த ராவணனுக்கு என்னால் தேவர்களால் வதமடை யாதிருத்தலாகிய வரம் கொடுக்கப்பட்டுளது. ஆதலால் வானரத் தன்மையைப் பெற்று யுத்தத்தில் ஆவலுள்ளவர்களாய் நீங்கள் இவனுக்குச் சகாயம் செய்வீர்களாக (என்றனர்)

ஶ்லோகம்.

ததா[3]ஜ்ஞாம் ஶிரஸாssக்[3]ருஹ்ய ஸர்வே ப்ராஞ்ஜலய ஸ்ததா[2] (20)

ப்ரணம்ய சரணம் ஶம்போ[4]: ஸ்வம் ஸ்வ மஸ்த்ரம் த[3]து[3]ர் முதா[3]

வியாக்யானம்: - ததா3 - அப்போது, **ததா3ஜ்ஞாம்** - அவ்விறைவனது ஆணையை, **சிரஸா** - தலையால், **க்3ருஹ்ய** - பெற்று, **ப்ராஞ்ஜலய** - அஞ்சலி செய்தவர்களால், **ஸுரா:** - தேவர்கள், **ஶம்போ** - சிவனது, **சரணம்** - கால்களை, **ப்ரணம்ய** - நமஸ்கரித்து, **முதா3** - சந்தோஷத்தோடு கூடியவர்களாய், **ஸ்வமஸ்வம்** - தத்தம், **அஸ்த்ரம்** - அஸ்திரத்தை, **த3து3** - கொடுத்தனர்.

பொழிப்புரை: - அப்போது அவ்விறைவனது ஆணையை தலையால்பெற்று அஞ்சலி செய்தவர்களாய்த் தேவர்கள் சிவனது கால்களை நமஸ்கரித்து ஸந்தோஷத்தோடு கூடியவர்களாய்த் தத்தம் அஸ்திரத்தைக் கொடுத்தனர்.

ஶ்லோகம்.

நாராயணாஸ்த்ரம் தை3த்யாரி ரைந்த்3ர மஸ்த்ரம் புரந்த3ர: (21)

ப்3ரஹ்மாபி ப்3ரஹ்மத3ண்டா3ஸ்த்ர மாக்3னேயாஸ்த்ரம் த4னஞ்ஜய:
யாம்யம் யமோபி மோஹாஸ்த்ரம் ரக்ஷோராஜஸ் ததா2 த3தௌ3(22)

வருணோ வாருணம் ப்ராதா3த்3 வாயவ்யாஸ்த்ரம் ப்ரப4ஞ்ஜன:
கௌபே3ரம் ச குபே3ரோபி ரௌத்3ர மீஶான ஏவ ச (23)

வியாக்யானம்: - ததா - அப்போது, **தைத்யாரி** - விஷ்ணுவானவர், **நாராயணா ஸ்த்ரம்** - நாராயணாஸ்த்ரத்தையும், **புரந்தர:** - ருத்திரர், **ரௌத்ரம் அஸ்த்ரம்** - ருத்திராஸ்திரத்தையும், **ப்ரும்ஹாபி** - பிரமனும், **ப்ரும்ஹதண்டா ஸ்த்ரம்** - பிரும்மதண்டாஸ்திரத்தையும், **தனஞ்ஜய** - அக்நி, **ஆக்நேயாஸ்த்ரம்** - ஆக்நேயாஸ்திரத்தையும், **யம் அபி** - யமனும், **யாம்யம்** - யமாஸ்திரத்தையும், **ரக்ஷோராஜ** - நிருதி, **மோஹாஸ்த்ரம்** - மோஹாஸ்திரத்தையும், **ததௌ** - கொடுத்தான், **வருண** - வருணன், **வாருணம்** - வருணாஸ்திரத்தையும், **ப்ரபஞ்ஜந** - வாயு, **வாயவ்யாஸ்த்ரம்** - வாயு வஸ்திரத்தையும், **குபேர அபி** - குபேரன், **கௌ பேரம்** - குபேராஸ்திரத்தையும், **ஈசாந** - ஈசாநன், **ரௌத்ரம்** - ரௌத்திராஸ்திரத்தையும், **பராதாத்** - கொடுத்தான்.

பொழிப்புரை: - அப்போது விஷ்லு நாராயணாஸ்திரத்தையும் ருத்திரன் ரௌத்திராஸ்திரத்தையும் பிரமன் பிரும்மதண்டாஸ்திரத்தையும் அக்நி ஆக்நேயாஸ்திரத்தையும் யமன் யமாஸ்திரத்திரத்தையும் நிருதி மோஹாஸ்திரத்தையும் கொடுத்தான். வருணன் வருணாஸ்திரத்தையும் வாயு வாயு வஸ்திரத்தையும் குபேரன் குபேராஸ்திரத்தையும் ஈசானன் ஈசானாஸ்திரத்தையும் கொடுத்தான்.

ஶ்லோகம்.

ஸௌரமஸ்த்ரம் த3தௌ3 ஸூர: ஸௌம்யம் ஸோமஶ்ச பாவகம்
விஶ்வேதே3வா த3து3ஸ் தஸ்மை வஸவோ வாஸவாபி4த4ம் (24)

வியாக்யானம்: - ஸூர: - சூரியன், **ஸௌரம் அஸ்த்ரம்** - ஸூர்மாஸ்திரத்தையும், **ஸோம:** - சந்திரன், **ஸௌம்யம்** - ஸோமாஸ்திரத்தையும், **த3தௌ3** - கொடுத்தான், **விஶ்வேதேவா** - விஶ்வே தேவர், **பாவகம்** - பாவகாஸ்திரத்தையும், **வஸவ** - வஸுக்கள், **வாஸவாபிதம்** - வாஸவமெனும் அஸ்திரத்தையும், **தஸ்மை** - அவ்விராமன்பொருட்டு, **தது** - கொடுத்தனர்.

பொழிப்புரை: - சூரியன் சூரியாஸ்திரத்தையும் சந்திரன் சந்திதிராஸ்திரத்தையும் கொடுத்தான். விஶ்வதேவர் பாவகாஸ்திரத்தையும் வஸுக்கள் வாஸவமெனும் அஸ்திரத்தையும் அந்த ராமன் பொருட்டுக் கொடுத்தனர்.

ஶ்லோகம்.

அத2 துஷ்ட: ப்ரணம்யேஶம் ராமோ த3ஶரதா2த்மஜ:
ப்ராஞ்ஜலி: ப்ரயதோ பூ4த்வா ப4க்தியுக்தோ வ்யஜிஞ்ஞிபத் (25)

வியாக்யானம்: - **அத** - பிறகு, **தசரதாதமஜ** - தசரதன்தநயனாகிய **ராம** - ராமன், **துஷ்ட** - களிப்பெய்தியவனாய், **ஈசம்** - ஈச்வரனை, **ப்ரணம்ய** - நமஸ்கரித்து, **ப்ராஞ்ஜலி** - அஞ்ஜலி செய்தவனாய், **ப்ரயத பூத்வா** - வணக்கமுற்றவனாய், **பக்தியுக்த** - பக்தியுடையோனாய், **வ்யஜிஞ்ஜீபத்** - விண்ணப்பம் செய்துகொண்டான்.

பொழிப்புரை: - பிறகு தசரதன் தநயனாகிய ராமன் களிப்பெய்தியவனாய் ஈச்வரனை நமஸ்கரித்து அஞ்ஜலி செய்தவனாய் வணக்கமுடையோனாய் பக்தியுடையோனாய் விண்ணப்பம் செய்துகொண்டான்.

ஶ்லோகம்.

ப4க3வன்! மானுஷேணைவ நோல்லங்க்4யோ லவணாம்பு3தி4:
தத்ர லங்காபி4த4ம் து3ர்க3ம் து3ர்ஜயம் தே3வதா3னவை: (26)

அனேக கோடயஸ் தத்ர ராக்ஷஸா ப3லவத்தரா:
ஸர்வே ஸ்வாத்4யாய நிரதா: ஶிவப4க்தா ஜிதேந்த்3ரியா: (27)

அனேக கர்ம ஸம்யுக்தா பு3த்3தி4மந்தோsக்3னிஹோத்ரிண:
கத2மேகாகினா ஜேயா மயா ப்4ராத்ரா ச ஸம்யுகே3 (28)

வியாக்யானம்: - **ப⁴க³வன்** - ஒ பகவனே, **மானுஷேணை** - மனிதனால், **லவணாம்புதி** - உவர்க்கடலானது, **உல்லங்க்⁴ய எவ** - தாண்டக்கூடியதேயல்ல, **தத்ர** - அங்கு, **தே³வதா³னவை -** தேவாஸுராகளால், **துர்ஜ்ஜயம்** - ஜயிக்கக்கூடாததாகிய, **லங்காபி⁴த⁴ம்** - லங்கை யெனும், **து³ர்க்கꞯம்** - கோட்டை (யுளது). **தத்ர** - அங்கு, **ப³லவத்தரா** - மிக்கப்பலவான்களாகிய, **ராக்ஷஸர்** - அரக்கர்கள், அனேக கோடிய - அநேக கோடிக்கணக்கா(யிருக்கின்றனர்) ஸர்வே - அவர்களெல்லோரும், **ஸ்வாத்⁴யாய நிரதா:** - வேதாத்தியயன சீலர்களும், **ஶிவப⁴க்தா** - சிவபக்தர்களும், **ஜிதேந்த்³ரியர்** - இந்திரியங்களையடக்கயவர்களும், **அனேக மாயாஸம்யுக்தா** - பலமாயையுடையோர்களும், **பு³த்³தி4மந்த** - புத்திமான்களும், **அக்நிஹோதரிண** - அக்நிஹோத்திரமுடையவர்களு மாயிருக்கின்றனர், **ஏகாகினா** - ஏகாகியாகிய, **மயா** - என்னாலும், **ப்⁴ராத்ரா ச** - ஸகோதரனாலும், **ஸம்யுகே** - யுத்தத்தில், **கதம்** - எப்படி, **ஜேயா** - ஜயிக்கக்கூடிய வரானார்.

பொழிப்புரை: - ஓ பகவனே மனிதனால் உவர்க்கடலானது தாண்டக்கூடிய தேயல்ல. அங்குத் தேவாஸுரர்களால் ஐயிக்கக்கூடிய தல்லாதலங்கையெனும் கோட்டையுளது மிக்கப்பலவான்களாகிய அரக்கர் கோடிக்கணக்கா யிருக்கின்றனர். அவர்களெல்லோரும் வேதாத்தியயன சீலர்களும் சிவபக்தர்களும் இந்திரியங்களை யடக்கியவர்களும் பலமாயையுள்ளோர்களும் புத்திமான்களும் அக்கிநி ஹோத்திர முடையவர்களுமாயிருக்கின்றனர். எகாகியாகிய என்னாலும் என் சகோதரனாலும் யுத்தத்தில் எப்படி ஜயிக்கக்கூடியவர்களாவார்.

ஶ்லோகம்.

ராவணஸ்ய வதே⁴ ராம! ரக்ஷஸாமபி மாரணே
விசாரோ ந த்வயா கார்ய ஸ்தஸ்ய காலோsய மாக³த: (29)

அத⁴ர்மே து ப்ரவ்ருத்தாஸ்தே தே³வ ப்³ராஹ்மண பீட³னே
தஸ்மா தா³யு: க்ஷயம் யாதி தேஷாம் ஶ்ரீரபி ஸுவ்ரத (30)

வியாக்யானம்: - **ராம** - ஒ ராமனே, **த்வயா** - உன்னால், **ராவணஸ்ய** - ராவணனது, **வதே⁴** - வதத்திலும், **ரக்ஷஸாம்அபி** - அரக்கர்களை, **மாரணே** - கொல்லுவதிலும், **விசார** - விசாரமானது, **கார்ய ந** - செய்யக்கூடியதல்ல, **தஸ்ய** - அவனுக்கு, **ம்ருத்யு** - யமன், **ஸமாக³த** - வந்திருக்கின்றான், **தே** - அவர்கள், **தே³வ ப்³ராம்ஹண பீ³டனே -** தேவர்களையும் பிராம்மணர்களையும் வருத்துதலாகிய, **அத⁴ர்மே து** - அதருமத்தில், **ப்ரவ்ருத்தா** - சென்றிருக்கின்றனர், **தஸ்மாத்** - ஆதலால், **தேஷாம்** - அவர்களது, **ஆயு:** - ஆயுளும், **ஶ்ரீஅபி** - செல்வமும், **க்ஷயம் யாதி** - நாசமடைகின்றது.

பொழிப்புரை: - ஓ ராம உன்னால் ராவணனது வதத்திலும் அரக்கர்களைக் கொல்லுவதிலும் விசாரஞ் செய்யத்தக்கதல்ல. அவனுக்கு மிருத்தியு வந்திருக்கின்றான். அவர்கள் தேவர்களையும் அந்தணர்களையும் பீடித்தலாகிய பாவத்திற் சென்றிருக்கின்றனர். ஆதலால் அவர்களுக்கு ஆயுளும் செல்வமும் குன்றுகின்றது.

ஶ்லோகம்.

ராஜஸ்த்ரீ லங்க4னாஸக்தம் ராவணம் நிஹனிஷ்யஸி
பானாஸக்தோ ரிபுர் ஜேதும் ஸுகரஸ் ஸங்க3ராங்க3ணே (31)

அத4ர்மஸஹித: ஶத்ருர் பா4க்யேனைவ ஹி லப்4யதே
அதீ4த வேத3 ஶாஸ்த்ரோऽபி ஸதா3 த4ர்ம ரதோऽபி வா (32)

வியாக்யானம்: - **ராஜஸ்த்ரீ லங்க4ணாஸக்தம்** - ராஜஸ்திரீயை யடைவதில் விருப்புற்றவனான, **ராவணம்** - ராவணனை, **நிஹநிஷ்யஸி** - வதம் செய்வாய், **பானாஸக்த -ரிபு:** - கட்குடிப்போனான சத்ருவானவன், **ஸமராங்கணே** - யுத்தகளத்தில், **ஜேதும்ஸுகர** - ஜெயிக்களளிதானவன், **அத4ர்மஸஹித:** - அதருமமுடையோனாகிய, **ஶத்ரு** - பகைவன், **பா4க்யேநஏவஹி** - பாக்கியத்தாலே யே யன்றோ, **லப்4யதே** - கிடைக்கின்றான், **அதீதவேதசாஸ்த்ரோபி** - வேதசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவனாயினும், **ஸதா** - எப்போதும், **த4ர்மரத அபிவா** - தருமத்தில் விருப்புற்றவனாயினும்.

பொழிப்புரை: - ராஜஸ்த்ரீயை யடைவதில் விருப்புற்றவனான ராவணனை வதைப்பாய். கட்குடிப்போனாகிய சத்துரு யுத்தகளத்தில் எளிதில் ஜயிக்கப் படுவானன்றோ. அதருமமுடையோனாகிய சத்துரு பாக்கியத்தினாலேயே கிடைக் கின்றான். வேதசாஸ்திராத்தியயனம் செய்பவனாயினும் எப்போதும் தருமத்திலேயே விருப்புற்றவனாயினும்.

ஶ்லோகம்.

விநாஶகாலே ஸம்ப்ராப்தே த4ர்ம மார்கா3த் ச்யுதோ ப4வேத்
பீட்3யந்தே தே3வதாஸ் ஸர்வா: ஸததம் யேன பாபினா (33)

ப்3ராஹ்மணா ரிஷ்யஶ்சைவ தஸ்ய நாஶ: ஸ்வயம் ஸ்தி2த:
கிஷ்கிந்தா4 நக3ரே ராம! தே3வானா மம்ஶ ஸம்ப4வா: (34)

வானரா ப3ஹவோ ஜாதா து3ர்ஜயா ப3லவத்தரா:
ஸாஹாய்யம் தே கரிஷ்யந்தி தைர் ப3தா4ன பயோநிதி4ம் (35)

வியாக்யானம்: - **விநாஶகாலே** - விநாசகாலமானது, **ஸ்ம்ப்ராப்தே** - வரின், **த⁴ர்ம மார்க்கா³த்** - தருமமார்க்கத்தினின்றும், **ச்யுத:** - நழுவியவன், **பவேத்** - ஆவான், **யேன** - எந்த, **பாபினா** - பாபியால், **ஸததம்** - எப்போதும், **ஸர்வா தேவா** - ஸகலதேவர்களும், **ப்³ராம்ஹணா:** - பிராமணர்களும், **ருஷ்ய ச ஏவ** - ருஷிகளும், **பீட்³யந்தே** - வருத்தப்படுகின்றார்களோ, **தஸ்ய** - அவனுக்கு, **நாஶ: -** நாசமானது, **ஸ்வயம்** - தானே, **ஸ்தி2த:** - உளது, **ராம** - ஓராமா, **கிஷ்கிந்தாநகரே** - கிஷ்கிந்தாநகரத்திற், **தே3வானாம் அம்ஶ ஶம்ப⁴வா**: **-** தேவர்களது அம்சங்களாய்த் தோன்றியவர்களாய், **துர்ஜ்ஜயா:** - ஜயிக்கக் கூடாதவர்களும், **ப³லவத்தரா:** - பலவான்களுமாகிய, **ப³ஹவ:** - பல, **வானரா** - வாநரர்கள், **ஜாதா** - உண்டாயிருக் கின்றனர், **தே** - அவர்கள், **ஸாஹாய்யம்** - உதவியை, **கரிஷ்யந்தி** - செய்வார்கள், **தை** - அவர்களால், **பயோநிதிம்** - கடலை, பதாந - (தகைந்து) அணைபோடுவாயாக.

பொழிப்புரை: - விநாசகாலம்வரின் தருமமார்க்கத்தினின்றும் நழுவியனா வான். எந்தபாபியால் எப்போதும் ஸகலதேவர்கலும் பிராமணர்களும் ருஷிகளும் பீடிக்கப்படுகின்றனரோ அவனுக்கு நாசம்தானேயுளது. ஓ ராமா கிஷ்கிந்தாநகரில் தேவாம்சத்தோற்றமுடையவர்களாய் ஜயிக்கப்படாதவர்களும் மிக்கபலவான்களுமா கிய வாநரர்கள் பலர் உண்டாயிருக்கின்றனர். அவர்கள் உதவி செய்வார்கள். அவர்களால் கடலைத் தகைந்து அணை போடுவாயாக

ஶ்லோகம்.

அநேக ஶைல ஸம்ப³த்³தே⁴ ஸேதௌ யாந்து பலீமுகா²:
ராவணம் ஸ³கணம் ஹத்வா தாமானய நிஜாம் ப்ரியாம் (36)

வியாக்யானம்: - **அநேக ஶைல ஸம்ப³த்³தே₄** - பற்பல மலைகளால் கட்டப்பட்ட, **ஸேதள** - அணையில், **பலீமுகா** - வாநரர்கள், **யாந்து** - போகட்டும், **ஸகணம்** - கூட்டத்தோடுகூட, **ராவணம்** - ராவணனை, **ஹத்வா** - கொன்று, **நிஜாம் பிரியாம்** - தனது பிரியையாகிய, **தாம்** - அச்சீதையை, **ஆநய** - கூட்டிக்கொண்டு வருவாய்.

பொழிப்புரை: - பற்பலமலைகளாகிய அணையில் வாநரர்கள் செல்லட்டும் கூட்டத்தோடுகூட ராவணனை வதைத்து உன் பிரியை யாகிய சீதையை கூட்டிக் கொண்டு வருவாயாக.

ஶ்லோகம்.

ஶஸ்த்ரைர் யுத்³தே⁴ ஜயோ யத்ர தத்ராsஸ்த்ராணி ந யோஜயேத்
அஸ்த்ராணி முஞ்சன் தி³வ்யானி ஸ்வயமேவ விநஶ்யதி (37)

வியாக்யானம்: - யதரயுத்[3]தே[4] - எந்த யுத்தத்தில், **ஶஸ்த்ரை: -** ஆயுதங்களால், **ஜய** - ஜயம் கிட்டுமோ), **தத்ர** - அங்கு, **அஸ்த்ராணி** - அஸ்திரங்களை, **நயோஜயேத்** - பிரயோகிக்கக்கூடாது, **தி[3]வ்யானி அஸ்த்ராணி** - திவ்யாஸ்திரங்களை, **முஞ்சன்** - விடுவோன், **ஸ்வயமேவ** - தானே, **விநஶ்யதி** - அழிகின்றான்.

பொழிப்புரை: - எந்தயுத்தத்தில் ஆயுதங்களால் ஜயம்வருமோ அங்கு திவ்யாஸ்திரங்களைப் பிரயோகிக்கக்கூடாது. பிரயோகிப்பான் தானே அழிகின்றன்.

ஶ்லோகம்.

அத[2]வா கிம் ப[3]ஹூக்தேன மயைவோத்பாதி[3]தம் ஜக[3]த்
மயைவ பால்யதே நித்யம் மயா ஸம்ஹ்ரியதேऽபி ச (38)

அஹமேக ஜ[3]க[3]ன் ம்ருத்யுர் ம்ருத்யோரபி மஹீபதே
க்[3]ரஸேऽஹமேவ ஸகலம் ஜக[3]தே[3]தச் சராசரம் (39)

மம வக்த்ர க[3]தா ஸ்ஸர்வே ராக்ஷஸா யுத்[3]த[4] து[3]ர்மதா[3]:
நிமித்தமாத்ரம் த்வம் பூ[4]யா: கீர்த்தி மாப்ஸ்யஸி ஸங்க[3]ரே (40)

வியாக்யானம்: - **அதவா** - இனி, **பஹூக்தேநகிம் -** மிக்கக் கூறுவதால்யாது, **ஜகத்** - உலகு, **மயா ஏவ -** என்னாலேயே, **உத்பாதி[3]தம் -** உண்டாக்கப்பட்டது, **மயாஏவ** - என்னாலேயே, **நித்யம்** - எப்போதும், **பால்யதே** - இரக்ஷிக்கப்படுகின்றது, **மயா** - என்னால், **ஸம்ஹிரியதேச** - சங்கரிக்கப்படுகின்றது, **அஹம்ஏக** - யான் ஒருவனே, **ஜ[3]க[3]ன் ம்ருத்யு** - உலகத்துக்கு ம்ருத்தியு, **மஹீபதே** - அரசனே, **மருத்யோ அபி** - ம்ருத்யுவுக்கும் மருத்யு, **அஹம்ஏவ** - நானே, **சராசரம்** - சராசரமாகிய, **ஏதத்** - இந்த, **ஜகத்ஸர்வம்** - ஜகமெல்லாவற்றையும், **க்ரஸே** - விழுங்குகிறேன், **யுத்ததுர்மதா** - யுத்தத்தில் மதங்கொண்ட, **ராக்ஷஸா ஸர்வே** - அரக்கர்களெல்லோரும், **மமவக்த்ரகதா** - எனது வாயில் சென்றிருக்கின்றனர். **த்வம்** - நீ, **நிமித்தமாதரம்** - நிமித்தமாத்திரமாய், **பூயா** - ஆகுக, **ஸங்கரே** - யுத்தத்தில், **கீர்த்திம்** - கீர்த்தியை, **ஆப்ஸ்யஸி** - அடைவாய்.

பொழிப்புரை: - இனி மிக்கக் கூறுவதால் யாது. உலகு என்னாலேயே உண்டாக்கப்பட்டுளது என்னாலேயே எப்போதும் காக்கப்படுகின்றது. என்னால் சங்கரிக்கப்படுகின்றது, யான் ஒருவனே உலகத்திற்கும் மிருத்யு அரசனை ம்ருத்யுவுக்கும் ம்ருத்யுக நானே சராசரமாகிய இச்சகமெல்லாவற்றையும் விழுங்கு கின்றேன் யுத்தத்தில் மதங்கொண்டவரான அரககர்களெல்லோரும் எனது வாயில் அகப்பட்டிருக்கின்றனர். நிமித்தமாத்திரமாவாயாக. யுத்தத்தில் கீர்த்தியை அடைவாய்.

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஆறாம் அத்தியாயம்

விபூதி யோகம்

ஸ்ரீ ராம உவாச

ப4க3வன்னத்ர மே சித்ரம் மஹதே3தத் ப்ரஜாயதே
ஶுத்3த4 ஸ்ப2டிக ஸங்காஶ: த்ரிணேத்ரஶ் சந்தரஶேக2ர: (1)

மூர்த்தஸ்த்வம் து பரிச்சி2ன்னா க்ருதி புருஷரூப த்4ருக்
அம்ப3யா ஸஹிதோऽத்ரைவ ரமஸே ப்ரமதை2: ஸஹ (2)

வியாக்யானம்: - **பகவன்** - ஓ பகவனே, **மே** - எனக்கு, **அத்ர** - இவ்விஷயத்தில், **எதத்** - இந்த, **மஹத்** - பெரிய, **சித்ரம்** - ஆச்சரியம், **ப்ரஜாயதே** - உண்டாகின்றது (அதாவது), **ஶுத்தஸ்படிக ஸங்காஶ** - சுத்தமானஸ்படிகம் போன்றவரும், **த்ரிணேத்ர:** - முக்கண்ணுடையோரும், **சந்த்ரஶேக2ர:** - சந்திரனை சிரஸினில் தரிப்போரும், **மூர்த்த** - உருவுடையோருமாகிய, **த்வம்து** - நீரோவெனின், **பரிச்சி2ன்னா க்ருதி:** - ஏகதேசமூர்த்தியாயுள்ளவர் (அதாவது அளவை யிலடங்கியவர்), **புருஷரூப த்4ருக்** - புருஷவுருவமெடுத்தவராய், **அம்பயா** - தேவி **ஸஹித** - கூடியவராய், **அத்ர ஏவ** - இங்கே, **ப்ரமதை2: ஸஹ** - ப்ரமதகணங்களோடு கூட, **ரமஸே** - விலாஸம் செய்கின்றீர்.

பொழிப்புரை: - ஸ்ரீ ராமபிரான் கூறியதாவது ஓ பகவனே எனக்கு இவ்விஷய த்தில் இப்பெரிய வியப்புண்டாகின்றது. அதாவது சுத்தஸ்படிகம் போன்றவரும் முக்கண்ணரும் சந்திர சேகரரும் உருவங்கொண்டவருமாகிய, நீரோவெனின் எகதேச மூர்த்தியாய் அதாவது பிண்டப்பொருளாய் உள்ளவர். புருட உருவங்கொண்டு தேவியுடன் கூடியவராய் இவ்விடத்திலேயே பிரமதகணங்களோடுங்கூட விலாஸம் செய்கின்றீர்.

தாத்பரியம்: - முந்திய அத்தியாயத்தினிறுதியில் சிவபெருமான் ஸ்ரீராமனை நோக்கித் தானே ஸகலசராசரங்கன் ஸ்ருஷ்டி ஸ்திதிலயங்களுக்கும் காரணன் என்றுபதேசித்ததாய்ப் பிரதிபாதிக்கப் பட்டது, அதனைக் கேட்டு அவ்விறைவனது உருவத்தையும் பார்த்து இராமன் சிவபெருமானுக்கும் பிரபஞ்சத்திற்கு முள்ள அத்வைதத்தன்மையைக் கண்டு பேராச்சரியமுற்று வினவுகின்றான். சுத்தஸ்படிகம் போன்றவர் என்பது முதல் விலாஸஞ் செய்கின்றீர் என்பதீறாய் கூறியதனால் சிவபெருமான் ஏகதேசமாய் அளவையிலடங்கிய மூர்த்தியென்று கொண்டு அத்வைதத் தன்மையில் முறணுபாட்டைக்கறத் தொடங்கியது காண்க. க.

ஶ்லோகம்.

த்வம் கத²ம் பஞ்ச பூ⁴தாதி ஜக³தே³தச் சராசரம்
தத்³ ப்³ரூஹி கி³ரிஜா காந்த! மயி தேऽனுக்³ரஹோ யதி³ (3)

வியாக்யானம்: - **த்வம்** - நீர், **கதம்** - எப்படி, **பஞ்சபூதாதி** - பஞ்சபூதங்களை யாதியாயுடையதும், **சராசரம்** - அசைவதும் அசையாததுமாகிய, **ஏதத்** - இந்த, **ஜகத்** - ஜகம் ஆகிறீர், **தே** - உமக்கு, **மயி** - என்னிடம், **அனுக்³ரஹ யதி** - அநுக்கிரகமிருக்குமாயின், **கிரிஜாகாந்த** - ஓ பார்வதிநாதனே, **தத்** - அதை, ப்ரூஹி கூறும்.

பொழிப்புரை: -- நீர் எப்படி பஞ்சபூதாதியும் சராசரமுமாகிய இப்பிரபஞ்சமாகக் கூடும ஓ பார்வதிநாதா உமக்கு என்னிட மனுக்கிரஹமிருக்கு மாயின் அதனைக் கூறும்.

தாத்பரியம்: - நீர் என்றதனால் முற்கூறியபடி சரமூர்த்தியும்பரிச்சின்னரா யிருக்கின்றவரும் புருஷ வடிவருமாகிய நீர் என்று கொள்க. சரமாயும் அசாமாயுமிரு க்கும் பிரபஞ்சததோடு அத்துவிதத்தன்மை பெறுதல் எங்ஙனம் ஒவ்வும் என்று வினவியதறிக. உமக்கு அநுக்கிரஹமிருக்குமாயின், என்றதனால் இது சாமான்னிய மாய்த் தெரிந்துகொள்ளக்கூடியதல்ல சிவாநுக்கிரஹத்தாலேயே தெரிந்து கொள்ளக் கூடியது என்பதுகருத்து.

ஶ்லோகம்.

ஶ்ருணு ராம! மஹாபா⁴க³! து³ர்ஞேய மமரை ரபி
தத் ப்ரவக்ஷ்யாமி தே ப⁴க்த்யா ப்³ரஹ்மசர்யேண ஸுவ்ருத (4)

பாரம் யாஸ்யஸ்யऽனாயாஸாத்³ யேன ஸம்ஸார வாரிதே⁴:

வியாக்யானம்: - **ஸ்ரீ ஶிவ: உவாச** - ஸ்ரீ சிவபெருமான் கூறியதாவது, **ராம** - ஓ ராமா, **மஹாபாக** - மஹாபாக்கியவானே, **யத்** - யாதொன்று, **அரைமரபி** - தேவர்களாலும், **துர்ஞ்ஞேயம்** - அறிதலறிதோ, **தத்** - அத்தகைய (அத்துவிதத் தன்மையை) **ப்ரவக்ஷ்யாமி** - கூறுகின்றேன், **ஸுவ்ரத** - நல்லநியமமுடையோனே, **ப்ரும்ஹசர்யேண** - பிரும்ஹசர்யத்தோடு, **யத்நேந** - நன்றாய்க்கவனித்து அதாவது, **ஏகாக்கிரசித்தத்தோடு, ச்ருணு** - கேட்பாயாக, **யேன** - எதனால் எதைக்கேட்டு மாத்திரத்தில், **ஸம்ஸார வாரிதே**⁴: - ஸம்ஸாரக்கடலினின்றும், **பாரம்** - கரையை, **அநாயாஸாத்** - ஸுலபமாய், **யாஸ்யஸி** - அடைவாயோ.

பொழிப்புரை: - ஸ்ரீ சிவபெருமான் கூறியதாவது ஓ ராமா மஹாபாக்கிய வானே யாதொன்று தேவர்களாலு மறிதற்கரிதோ அத்தகைய அத்துவிதத்தன்மை

யைக் கூறுகின்றேன். ஓ நியமவானே பிரும்ஹசாரியத்தோடும் ஏகாக்கிரசித்தத் தோடுங் கேட்பாயாக. எதனைக்கேட்டதினால் ஸம்ஸாரக்கடலினின்றும் சுலபமாய்க் கரையேறுவாயோ.

ஶ்லோகம்.

த்^{3}ருஶ்யந்தே பஞ்சபூ^{4}தானி யே ச லோகாஶ் சதுர் த^{3}ஶ (5)

ஸமுத்^{3}ரா: பர்வதா தே^{3}வா ராக்ஷஸா ரிஷயஸ் ததா^{2}
த்^{3}ருஶ்யந்தே யானி சான்யானி ஸ்தா^{2}வராணி சராணி ச (6)

க^{3}ந்த^{4}ர்வா: ப்ரமதா^{2} நாகா^{3}: ஸர்வே தே மத்^{3} விபூ^{4}தய: (7)

வியாக்யானம்: - **பஞ்சபூ^{4}தானி** - பஞ்சபூதங்கள், **த்^{3}ருஶ்யந்தே** - காணப் படுகின்றன, **யே ச** - யாதொரு, **சதுர் த^{3}ஶ** - பதினான்கு, **லோகா:** - உலகங்களும், **ஸமுத்^{3}ரா:** - கடல்களும், **பர்வதா:** - மலைகளும், **தே^{3}வா** - தேவர்களும், **ராக்ஷஸா** - அரக்கர்களும், **ருஷய:** - ருஷிகளும் காணப்படுகின்றனரோ, **அந்யாநிச** மற்றுமுள்ள, **யானி** - யாதொரு, **ஸ்தாவராணி** - அசரங்களும், **சராணிச** - ஜங்கமங் களும், **க^{3}ந்த^{4}ர்வா:** - கந்தர்வர்களும், **ப்ரமதா:** - பிரமதகணங்களும், **நாகா:** - நாகர்களும், **த்^{3}ருஶ்யந்தே** - காணப்படுகின்றனரோ, **தேஸர்வே** - அவர்களெல்லோரும், **மத்விபூதய:** - எனது அம்சங்கள் ஆகின்றனர்.

பொழிப்புரை: - பஞ்சபூதங்களும் யாதொரு பதினான்கு உலகங்களும் கடல்களும் மலைகளும் தேவர்களும் அரக்கர்களும் ருஷிகளும் காணப்ப டுகின்றனரோ, மற்றுமுள்ள யாதொரு ஸ்தாவர ஜங்கமங்களும் கந்தர்வர்களும் பிரமதர்களும் நாகர்களும் காணப்படுகின்றனரோ, அவர்களெல்லோரும் எனது அம்சங்கள் ஆகின்றனர்.

ஶ்லோகம்.

புரா ப்^{3}ரஹ்மாத^{3}யோ தே^{3}வா: த்^{3}ரஷ்ட்டுகாமா மமாக்ருதிம் (7)

மந்த^{3}ரம் ப்ரயயுஸ் ஸர்வே மம ப்ரியதரம் கி^{3}ரிம்
ஸ்துத்வா ப்ராஞ்ஜலயோ தே^{3}வா: மாம் ததா^{2} புரத: ஸ்தி^{2}தா: (8)

வியாக்யானம்: - **புரா** - பூர்வம், **பிரும்ஹாதய:** - பிரும்மாமுதலிய, **தேவா:** - தேவர்கள், **ஸர்வே** - எல்லோரும், **மம** - எனது, **ஆக்ருதிம்** - ஆகாரத்தை (உருவத்தை), **த்ருஷ்டுகாமா:** - பார்க்க விரும்பியவர்களாய், **மம** - எனக்கு, **ப்ரிய தரம்** - மிக்கப்பிரியமாகிய, **மந்தரம்கிரிம்** - மந்தாரபர்வதத்தை, **ப்ரயயு:** -

அடைந்தார்கள், **தேவா:** - தேவர்கள், **மாம்** - என்னை, **ஸ்துத்வா** - தோத்திரம் செய்து, **ததாப்ராஞ்சலய:** - அஞ்சலி செய்தவர்களாய், **புரத: ஸ்திதா:** - நின்றார்கள்.

பொழிப்புரை: - பூர்வம் பிரம்மாதியரான தேவர்களெல்லோரும் என் உருவத்தைக் காண விரும்பியவர்களாய் எனக்கு மிக்கப் பிரியமான மந்தர பர்வதத்தை யடைந்தனர். தேவர்கள் என்னைத் துதிசெய்து அஞ்ஜலி கட்டிக்கொண்டு முன் நின்றார்கள்.

தாத்பரியம்: - முன்சுலோகத்தில்சாமான்னியமாய் இராமனுக்கு கூறிப் பின்னர் அதனை அதருவசிர உபநிடதங் கூறியவாறு கூறலானார், அதாவது, “தேவாஹவைஸ்வர்கம் லோகமகந் தேதேவாருத்ரம ப்ரச்சந் கோபவாநிதி" என்பதாதி அதருவசிர உபநிடதங்காண்க.

ஶ்லோகம்.

தான் த்^{3}ருஷ்ட்வாsத மயா தே^{3}வான் லீலாssகுலித சேதஸ:
தேஷா மபஹ்ருதம் ஞானம் ப்^{3}ரஹ்மாதீனாம் தி^{3}வௌகலாம் (9)

வியாக்யானம்: - **அத** - பிறகு, **லீலாகுலிதசேதஸ:** - விளையாட்டில் குதூஹலமான மனமுடையவர்களான, **தான்** - அந்த, **தே^{3}வான்** - தேவர்களை, **த்ருஷ்ட்வா** - பார்த்து, **மயா** - என்னால், **தேஷாம்** - அந்த, **ப்ரும்ஹாதீநாம்** - பிரும்மாதியர்களான, **திவௌகஸாம்** - தேவர்களது, **ஜ்ஞாநம்** - ஞானமானது, **அபஹ்ருதம்** - அபகரிக்கப்பட்டது.

பொழிப்புரை: - பின்னர் விளையாட்டால் குதூஹலமான சித்தமுடையவர்களான அத்தேவர்களைக் கண்டு என்னால் அப்பிரும்ஹாதி தேவர்களுடைய ஞானமானது அபகரிக்கப்பட்டது.

ஶ்லோகம்.

ஆஸம்ஸ்த்தேsஸக்ருத^{3}ஜ்ஞானா மாமாஹு: கோ ப^{4}வானிதி
அதா^{2}ப்^{3}ருவ மஹம் தே^{3}வானஹமேவ புராதன: (10)

ஆஸம் ப்ரத^{2}ம மேவாஹம வர்த்தாமி ச ஸுரேஶ்வரா:
ப^{4}விஷ்யாமி ச லோகேஸ்மிந் மத்தோ நான்யோsஸ்தி கஶ்சன (11)

வியாக்யானம்: - **தே** - அத்தேவர்கள், **ஆஸந்** - உட்கார்ந்து கொண்டனர், **அஞ்ஞானாத்** - அறியாமையால், **மாம்** - என்னை, **பவான்** - நீர், க: - யார், **இதி** - என்று, **அஸக்ருத்** - பல தடவை, **ஆஹு** - கேட்டனர், **அத -** பின்னர், அஹம் - நான், தேவான - தேவர்களை (நோக்கி), **அப்ருவம்** - கூறினேன், **ஸுரேஶ்வரா:** - ஒ

தேவர்களை நோக்கி), **அஹமேவ** - நானே, **புராதன:** - பூர்வபுருஷன், **அஹமேவ** - யானே, **ப்ரதமம்** - ஸ்ருஷ்டிக்குமுன், **ஆஸம்** - இருந்தேன், வர்த்தாமிச - இருக்கின்றேன், **பவிஷ்யாமிச** - இருப்பேன், **அஸ்மிந** - இந்த, **லோகே** - ஜகத்தில், **மத்த:** - என்னிலும், **அந்ய** - இதரன், **கஸ்சநநாஸ்தி** - யாருமில்லை.

பொழிப்புரை: - அத்தேவர்கள் உட்கார்ந்து கொண்டனர். அறியாமையால் என்னை நீ யார் என்று அடிக்கடி கேட்டனர். பின்னர் நான் அத்தேவர்களை நோக்கிக் கூறினேன். (அதாவது) ஓ தேவச்ரேஷ்டர்காள் யானே பூர்வகாலத்தில் இருந்தேன் ஸ்ருஷ்டிக்கு முன் (அதாவது பிரளயத்திலும்) இருந்தேன். இப்பொழுது மிருக் கின்றேன். இனியுமிருப்பேன். இச்சகத்தில் என்னிலும் இதரன் யாருமில்லை.

தாத்பரியம்: - இங்கு யானே புராதனன் என்றதனால் தான் தோற்ற முடையவரல்ல என்பதும், ஸ்ருஷ்டிக்கு முன் இருந்தவன் என்றதனால் தானே பிரம்மனை யுண்டாக்கி அவரால் பிரபஞ்சங்களை ஸ்ருஷ்டிக்கச் செய்தவர் என்பதும் அறிக. இருக்கின்றேன் இருப் பேன் என்றதனால் எக்காலத்திலுமழிவில்லாதவர், காலவரைக்குட் படாதவர் என்பதும் ஏகாரத்தேற்றத்தால் அங்ஙனம் தன்னைத் தவிர யாருமில்லை யென்றதாகவும் காண்க.

ஶ்லோகம்.

வ்யதிரிக்தம் ச மத்தோஸ்தி நான்யத் கிஞ்சித் ஸுரேஶ்வரா:
நித்யோ²நித்யோ²ஹ மனகோ⁴ ப்³ரஹ்மணாம் ப்³ரஹ்மணஸ்பதி (12)

வியாக்யானம்: - ஸுரேச்வரா: - தேவச்ரேஷ்டர்காள், **மத்த வ்யதிரிக்தம்** - யானில்லாத, **அன்யதந்** மற்றது, **கிஞ்சித்ச** - யாதும், **ந** - இல்லை, **நித்ய** - நித்திய னும், **அநித்ய** - அழிவுடையதும், **அஹம்** - யான், **அநக:** - பாவமற்றவனும் (சுத்தனும்), **ப்ரும்ஹணாம்** - ஸத்யோஜாதாதி பஞ்சபிரும்ஹங்களினுடைய, **ப்ரும்ஹணஸ்பதி:** - பிரும்ஹம் எனும் பெயருக்கேதுவாயுள்ளவனும் யானே.

பொழிப்புரை: - ஓ தேவசிரேஷ்டர்காள் யானில்லாத மற்றை யாதுமில்லை. நித்தியனும் அநித்தியனும் யான். சுத்தனும் ஸத்யோஜாதம் முதலிய பஞ்சப்பிரும் ஹங்களுக்கும் பிரும்ஹமென்ற பெயருக்கு ஏதுவாயுள்ளவனும யானே.

தாத்பரியம்: - இங்கு நித்தியனும் அநித்தியனும் என்றதனால் அவரவர் வினைக்கேற்மாயையைத் துணையாச்சேர்த்து வெளிப்படுத்தலின் சீவர்களும், காரியப்படுத்தலின் சடங்களும் யானென்றனர்.

ஶ்லோகம்.

த^{3}க்ஷிணாஞ்ச: உ^{3}தஞ்சோsஹம் ப்ராஞ்ச: ப்ரத்யஞ்ச ஏவ ச
அத^{4}ஶ்சோர்த்4வம் ச விதி^{3}ஶோ தி^{3}ஶ ஶ்சாஹம் ஸுரேஶ்வரா: (13)

வியாக்யானம்: - **ஸுரேஶ்வரா:** - தேவச்ரேஷ்டர்களே, **தக்ஷிணாஞ்ச** - தென் திசையிலுள்ளவையும், **உதஞ்ச:** - வடதிசையிலுள்ளவையும், **ப்ராஞ்ச** - கிழக்கிலுள் ளவையும், **ப்ரத்தியஞ்ச:ச** - மேற்றிசையிலுள்ளவையும், **அஹம்ஏவ** - யானே, **அதஶ்ச** - கீழ்ப் பக்கமும், **ஊர்த்வம்ச** - மேற்பக்கமும், **விதிஶ** - இடைத்திசைகளும், **தி^{3}ஶச** - திசைகளும், **அஹம்** - யானே.

பொழிப்புரை: - ஓ தேவச்ரேஷ்டர்களே தென் திசையிலுள்ளவையும் வடக்குத்திக்கிலுள்ளவையும் கிழக்கிலுள்ளவையும் மேற்றிசையிலுள்ளவையும் யானே. கீழ்ப்பக்கமும் மேற்பக்கமும் இடைத்திசைகளும் திசைகளும் யானே.

தாத்பரியம்: - இங்கு அஹமேவபுராதந ஆஸம்ப்ரதமமேவாஹம் பவிஷ்யாமி சஸுரேஶ்வரா. என்பது முதல் கூறியுள்ள சுலோகங்களால் ஸோப்ரவீத் அஹமேக ப்ரதமமாஸம்வர் தாமிச பவிஷ்யாமிசநாந்ய: கஶ்சிந்மத்தோவ்யதி ரிக்தஇதி ஸோந்தராதந்தரம் ப்ராவிஶத்ஸோஹம்நித்யாநித்யோஹம்ப்ரஹ்மாஹம்ப்ராஞ்ச: ப்ரத்யம்சோஹம் தக்ஷிணாம்சோதஞ்சோஹமதஶ்சோர்த்வம்ச திஶஶ்ச விதிஶஶ்சா ஹம்புமாநபுமாம்ஸ்த்ரியம்சாஹம்" என்பதாதி அதருசிர உபநிடதவாக்கியங்களை யநுவதித்தது காண்க.

ஶ்லோகம்.

ஸாவித்ரீ சாsபி கா^{3}யத்ரீ ஸ்த்ரீ புமா னபுமா னபி
த்ரிஷ்டுப் ஜக^{3}த் யனுஷ்டுப் ச பங்க்திச் ச^{2}ம்த^{3}ஸ் த்ரயீமய: (14)

வியாக்யானம்: - **ஸாவித்ரீச** - ஸாவித்ரீயும், **காயத்ரீ அபி** - காயத்ரீயும், **ஸ்த்ரீ** - பெண்ணும், **புமான்** - ஆணும், **அபுமான் அபி** - அலியும் (நபும்ஸகனும்), **த்ரிஷ்டுப்** - திரிஷ்டுப்புஎன்னும், **ஜகதீ** - ஜகதீ என்னப்படுவதும், **அனுஷ்டுப்** - அனுஷ்டுப் என்னப்படுவதும், **பங்தி: ச** - பங்தி என்னப்படுவதுமாகிய, **சந்த:** - சந்தமும், **த்ரியீமய:** - மூன்று வேதச்சொரூபனும் யானே.)

பொழிப்புரை: - ஸாவித்திரியும் காயத்ரீயும் பெண்ணும் ஆணும் அலியும் திருஷ்டுப்ஜகதீ அநுஷ்டுப் பங்தி எனும் சந்தங்களும் மூன்று வேதங்களும் யானே.

தாத்பரியம்: - ஈண்டு த்ரிஷ்டுப் என்றதும் முப்பாதமுடைய காயத்ரீ எனும் சந்தம் ஜகதீ பன்னிரெண்டு அக்ஷர சந்தம் அநுஷ்டுப் எட்டக்ஷர பாதசந்தம் பங்தி

ஐந்தக்ஷர பாதசந்ததமென்பது த்ரயீ (மூன்று வேதம்) இருக்கு எஜுஸ் ஸாமம் என்ற வேதங்கள் என்பதுமறிக.

ஶ்லோகம்

ஸத்யோऽஹம் ஸர்வத: ஶாந்த: த்ரேதாக்[3]னிர் கௌ[3]ரவம் கு[3]ரு:
கௌ[3]ர்யஹம் க[3]ஹ்வரம் சாஹம் த்[3]யௌாஹம் ஜக[3]தாம் விபு[4]:

(15)

வியாக்யானம்: - **அஹம்** - யான், **ஸத்ய** - ஸத்தியன், **ஸர்வத:** - எவ்வாற்றாலும், **ஶாந்த:** - சாந்தன், **த்ரேதாக்னி:** - கார்ஹபத்தியம், **ஆஹவனீயம் -** தக்ஷிணாக்கி என்ற மூன்றக்கிநி, **கௌ[3]ரவம்** - குருத்துவம், **கு[3]ரு:** - ஆசிரியன் (உபதேசம் செய்வோன்), **அஹம்** - யான், **கௌ[3]:** - வாக்கு, **க[3]ஹ்வாம்ச** - குஹையும், **அஹம்** - யான், **த்[3]யௌ:** - ஆகாயமும், **ஜக[3]தாம் விபு[4]:** - ஜகதீசனும், **அஹம்** - யான்.

பொழிப்புரை: - யான் ஸத்தியன், மிக்கசாந்தன், கார்ஹபத்தி யாஹவனீய தக்ஷிணாக்கிரி, குருத்துவம் உபதேசம் செய்வோன். யான் வாக்கு. குஹையும் யான். ஆகாயமும் ஜகதீசனும் யான். இங்கு குஹையெனின் இருதய குஹையென்றறிக.

ஶ்லோகம்.

ஜ்யேஷ்ட[2]: ஸர்வ ஸுரஶ்ரேஷ்டோ[2] வர்ஷிஷ்டோ[2]ऽஹ மபாம் பதி:
ஆர்யோऽஹம் ப[4]க[3]வானீஶ ஸ்தேஜோऽஹம் சாதி[3]ரப்யஹம் **(16)**

வியாக்யானம்: - **ஜ்யேஷ்ட:** - வயதிற்பெரியோனும், **ஸர்வ ஸுரஶ்ரேஷ்டர்** - சகலதேவர்களுக்கும் ச்ரேஷ்டர், **வர்ஷிஷ்ட:** - மழை பெய்யச்செய்வோனும், **அபாம்பதி:** - சமுத்திரனும், **அஹம்** - யானே, **ஆர்ய** - (ஸகல) பூஜ்ஜியனும், **அஹம்** யான், **ப[4]க[3]வான்** - உற்பத்தி, விநாசம், பூதங்கள் வருதல், போதல், வித்தியை, அவித்தை இவைகளையறிவோனும், **ஈச:** - (சகலத்தையும்) ஆள்வோனும், **தேஜ:ச** - சோதியும், **அஹம்** - யானே, **ஆதி அபி** - காரணனும், **அஹம்** - நானே.

பொழிப்புரை: - வயதிற்பெரியோனும் சகலதேவச்ரேஷ்டனும் மழை பெய்யச் செய்வோனும் சமுத்திரனும் நானே. ஸகல பூஜ்யனும் யான். உற்பத்திவிநாசங்கள் பூதங்கள் வருதல் போதல் வித்தை அவித்தையிவைகளை யறிந்தவனும் ஆள்வோ னும் சோதியும் யானே. காரணனும் யானே.

ஶ்லோகம்.

ருக்[3]வேதோ[3]ऽஹம் யஜுர்வேத[3]: ஸாமவேதோ[3]ऽஹ மாத்மபூ[4]:
அத[2]ர்வணஶ்ச மந்த்ரோऽஹம் ததை[2] வாங்கி[3]ரஸோ வர: **(17)**

வியாக்யானம்: - **அஹம்** - நான், **ருக்வேத** - ருக்குவேதம், **யஜுர்வேத** - யஜர்வேதமும், **ஸாமவேத** - ஸாமவேதமும், **அஹம்** - யான், **ஆத்மபூ:** - பிரும்மதேவனும், **அத^{2}ர்வணஸ்ச மந்த்ர** - அதருவவேதமந்திரமும், **அஹம்** - நான், **ஆங்கி^{3}ரஸ வர: ச** - (பிருகஸ்பதி நூல்) ஆங்கிகிரஸமந்திரமும், **ததா** - நான்.

பொழிப்புரை: - நான் இருக்குவேதம். யஜுர்வேதமும் ஸாமவேதமும் நான். தருமதேவனும் அதருவவேதமும் நான். ஆங்கிர ஸமந்திர (பிருகஸ்பதி நூலும்) நானே.

ஶ்லோகம்.

இதிஹாஸ: புராணானி கல்போஹஸ்ம் கல்பவானஹம்
நாராஶம்ஸீ ச கா^{3}தா^{2} ச வித்^{3}யோபநிஷதோ^{3}ஸ்ம்யஹம் (18)

வியாக்யானம்: - **இதிஹாஸ: புராணானி** - இதிகாஸபுராணங்களும், **கல்ப்ப:** - கல்ப்பமும், **அஹம்** - நான். **கல்ப்பவான்** - கல்ப்பத்தை செய்தவனும், **அஹம்** - நான். **நாராஶம்ஸீகாதாச** - நாராஶம்ஸீ என்னும் காதையும், **அஹம்** - நான், **வித்யோபநிஷத:** - வித்தையைப் பிரதிபாதிக்கும் உபநிடதங்களும், **அஹம்அஸ்மி** - நானாகின்றேன்.

பொழிப்புரை: - (சிவரகஸிய முதலிய) இதிகாச (பதினெண்மஹா) புராணங்களும் கல்ப்பமும் நான். கல்ப்பத்தை செய்தவனும் நான். நாராஶம்ஹீ எனும் வைதிககாதையும் நான். பிரும்ம வித்தையைப் பிரதிபாதிக்கும் உபநிடதங் களும் நானாகின்றேன்.

ஶ்லோகம்.

ஶ்லோகா: ஸூத்ராணி சைவாஸஹ மனுவ்யாக்^{2}யானமேவ ச
வ்யாக்^{2}யானானி பரா வித்^{3}யா இஷ்டம் ஹுத மதா^{2}ஹுதி: (19)

த^{3}த்தோஸதத் மயம் லோக: பரலோகோஸஹ மக்ஷர:
ப^{3}ஹிஶ்சாஹம் ததா^{2} சாந்த: புரஸ்தா த^{3}ஹ மவ்யய: (20)

வியாக்யானம்: - **ஶ்லோகா:** - சுலோகங்களும், **ஸூத்ராணி** - ஸூத்திரங்களும், **அஹம்ஏவ** - நானே, **அதுவ்யாக்யாநம்ஏவச** - (அநுவ்யா) உபவியாக்கியாகமும், **வ்யாக்யானானி** - வியாக்கியாநங்களும், **ததாவித்யா** - வித்தையும், **இஷ்டம்** - யாகமும், **ஹுதம்** - வைஶ்வதேவாதிஹோமமும், **அதஆஹுதி -** பிராணாஹுதியும், **தத்த:** - தானம் செய்யப்பட்டதும், **அதத்தம்** - கொடுக்கப்படாததும், **அஹம்** - நான், **லோக:** - பூவுலகமும், **பரலோக:** - ஸ்வர்க்கா திவுலகும், **அஹம்** - நான், **அக்ஷரம்** - பிரும்ஹமும், **அஹம்** - நான், **பஹிஶ்ச** -

வெளியிலும், **அந்த:** - உள்ளும், **புரஸ்தாத்** - எதிரிலும், **அஹம்** - நான், **அவ்யயம்** - நாசம் அல்லாததும் நான்.

பொழிப்புரை: - சுலோகங்களும் ஸூத்திரங்களும் நானே. உபவியாக்கியானமும் வியாக்கியானங்களும் வித்தையும் யாகமும் வைஶ்வதேவாதி ஹோமமும் பிராணாஹுதியும் தானம் செய்யப்பட்டதும் தானம் செய்யப்படாததும் நான், பூவுலகும் சுவர்க்க முதலிய வுலகும் நான். அக்ஷரமான பிரும்ஹமும் நான் உள்ளும் வெளியிலும் எதிரிலும் நான். நாசமற்றதும் நான்.

ஶ்லோகம்.

ஜ்யோதிஶ்சாஹம் தமஶ்சாஹம் தன்மாத்ரா ணீந்த^{3}ரியாண்யஹம்
பு^{3}த்^{3}தி^{4}ஶ்சாஹ மஹங்காரோ விஷ்யாண்யஹமேவ ஹி (21)

வியாக்யானம்: - **ஜ்யோதிஶ்ச** - சோதியும், **அஹம்** - நான், **தம:ச** - அஞ்ஞானமும், **அஹம்** - நான், **தந்மாத்திராணி** - சப்த முதலியவையை யறிவனவாகிய, **இந்திரியாணி** - ஞானேந்திரியங்களும், **அஹம்** - நான், **புத்தி ச** - புத்தியும், **அஹங்கார**. - அகங்காரமும், **விஷயாணி -** சப்தஸ்பரிசரூப ரஸகந்தங்களும், **அஹம் ஏவஹி** - யானே.

தாத்பரியம்: - சோதியும்நான், அஞ்ஞானமும் நான், சப்தமுதலியவையை யறிவனவாகிய இந்திரியங்களும் நான் புத்தியும் நான், அஹங்காரமும் நான், சப்தஸ்பரிசரூபரஸகாதங்களும் நானே.

ஶ்லோகம்.

ப்^{3}ரஹ்மா விஷ்ணுர்மஹேஶோ ஹ முமா ஸ்கந்தோ^{3} விநாயக:
இந்த்^{3}ரோsக்^{3}னிஶ்ச யமம்சாஹம் நிருதிர் வருணோsநில: (22)

குபே^{3}ரோsஹம் ததே^{2}ஶானோ பூ^{4}ர் பு^{4}வஸ் ஸ்வர் மஹர் ஜன:
தப: ஸத்யம் ச ப்ருதி^{2}வீ ச ssபஸ்தேஜோsநிமிலோsஸ்ம்யஹம் (23)

வியாக்யானம்: - **ப்ருஹ்மா -** பிரமனும், **விஷ்ணு** - விஷ்ணுவும், **மஹேச:** - சங்கரரும், **அஹம்** - நான், **உமா** - பார்வதியும், **ஸ்கந்த:** - ஸுப்ரம்மண்யனும் ஸ்கந்தரும், **விநாயக**: - கணநாதரும் நான், **இந்த்ர:** - இந்திரனும், **அக்நி:ச** - அக்கியும், **யம: ச** - யமனும், **அஹம்** - ரான், **நிருரிதி:** - நிருருதியும், **வருண:** - வருணனும், **அநில:** - வாயுவும் நான், **குபேர:** - குபேரனும், **அஹம்** - நான், **ததாஈசான**: - ஈசானரும் நான், **பூ:** - பூவுலகமும், **புவ:** - புவர்லோகமும், **ஸ்வ**: - ஸுவர்லோகமும், **மஹ:** - மஹர்லோகமும், **ஜன:** - ஜநோலோகமும், **தப:** - தபோலோகமும், **ஸத்யம்ச** - ஸத்தியலோகமும் (நான்), **பிருதிவீச** - பிருதிவியும்,

ஆப: - ஜலமும், **தேஜ:** - தேயுவும், **அநில:** - வாயுவும், **அஹம் அஸ்மி** - நானாகின் றேன்.

பொழிப்புரை: - பிரும்ஹாவும் விஷ்ணுவும் உருத்திரனும் நான். பார்வதியும் ஸ்கந்தரும் விநாயகரும் நான். இந்திரனும் அக்னியும் யமனும் நான். நிருருதியும் வருணனும் வாயுவும் நான். குபேரனும் நான். ஈசானனும் நான். பூவுலகும் புவர்லோகமும் ஸ்வர்லோகமும் மஹோலோகமும் ஜநோலோகமும் தபோ லோகமும் ஸத்தியலோகமும் நான். பிருதிவியும் ஜலமும் தேயுவும் நானே யாகின்றேன்.

ஶ்லோகம்.

ஆகாஶோsஹம் ரவி: ஸோமோ நக்ஷத்ராணி க்^{3}ரஹாஹ்யஹம்
ப்ராண: காலஸ் ததா^{2} ம்ருத்யு: அம்ருதம் பூ^{4}த மப்யஹம் (24)

வியாக்யானம்: - ஆகாஶ: - ஆகாயம், **அஹம்** - நான், **ரவி:** - சூரியனும், **ஸோம:** - சந்திரனும், **நக்ஷத்ராணி** - நக்ஷத்திரங்களும், **க்ரஹா:** - அங்காரகன் முதலிய கிரகங்களும், **அஹம்** - நான், **ப்ராண:** - பிராணனும், **கால:** - நிமிஷம் முதலிய காலமும், **ததாம்ருத்யு:** - சகலப்ராணசங்காரகனும், **அமிருதம்** - முக்தியும், **பூதம் அபி** - சென்றதும், **அஹம்** - நான்.

பொழிப்புரை: - ஆகாயம் நான். சூரியனும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் அங்காரகன் முதலிய கிரகங்களும் நானே. ப்ராணனும் நிமிஷம் முதலிய காலமும் சகலப்பிராணசங்காரனும் முக்தியும் (இதுவரையில்) சென்றதும் யானே.

ஶ்லோகம்.

ப^{4}வ்யம் ப^{4}விஷ்யத் க்ருத்யம் ச விஶ்வம் ஸர்வாத்மகோsப்யஹம்
ஓமாதௌ^{3} ச ததா^{2} மத்^{4}யே பூ^{4}ர் பு^{4}வஸ் ஸ்வஸ் ததை^{2}வ ச (25)

வியாக்யானம்: - **பவ்யம்** - நிகழ்கின்றதும், **ப^{4}விஷ்யத் கிருத்தயம் ச** - இனி நடக்கும் விஷயமும், **விஶ்வம்** - சகலசராசரமும், **ஸர்வாத்மக: அபி** - சகல ஜீவஸமஷ்டிஸ்வரூபனும், **அஹம்** - யான், **ஓமாதௌ^{3} ச** - பிரணவாதியிலும், **ததா^{2} மத்^{4}யே** - நடுவிலும், **பூ:புவ: ஸுவ: ததை^{2}வச** - பூர்வஸ்ஸுவ: என்ற வியாஹ்ரு திகளும், நானே.

பொழிப்புரை: -- நிகழ்கின்றதும் இனிவருவதும் சகலசராசரமும் சகலஜீவஸ்வரூபனும் நானே. பிரணவாதி யந்தமத்தியிலும் பூர்ப்புவஸ்ஸுவ: என்னும் வியாஹ்ருதிகளும் நானே.

தாத்பரியம்: - இவ்வத்தியாயம் தொடங்கியிதுகாறும் சிவபெருமான் தானே சகலரும் என்று கூறப்பட்டது. இதெங்ஙனம் பொருந்துமெனின் அடியிற் குறித்த பிரமாணங்களாற் காண்க.

பிரமாணம்: - **தைத்திரீயம்.**

விஶ்வம்பூதம்புவநம்சித்ரம் பஹுதாஜாதம்ஜாயமாநம்சயத்
ஸர்வோஹ்யேஷருத்ரஸ் தஸ்மை ருத்ராயநமோ அஸ்து

சகலமும் உண்டானதும், ஆச்சரியமான உலகும் பற்பலவாயுண்டானதும் உண்டாவதுமாய் யாதொன்றோ சகலமும் இவ்வுருத்திரனே அவ்வுருத்திரன் பொருட்டு நமஸ்காரம்.

தைத்திரீயம்.

ததாத்மாநம்ஸ்வயமகுருத
அவர் தன்னைத்தானே செய்துகொண்டார்

ஸச்சத்யச்சாபவத்
பிருதிவி யப்பு தேயு வாயு வாகாய மானான்.

பிரமாணம்: -
ததைக்ஷதபஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி
அது பற்பலபிரஜைகளாவோமென்று சங்கற்பித்தது.

சதருத்திரீயம்.

நம பர்ண்யாயசபர்ணஶத்யாயச
என்பதீறாயும் அதருவசிரம் பிரதமகண்டமுழுதும் (ஜகதாகாரனென்று) ஸகலாகாரனென்று கூறப்பட்டுளது. இங்ஙனமே: --

வாயுஸம்ஹிதை.

ஶக்த்யாதிசப்ருதிவ்யந்தம் ஶிவதத்வஸமுத்பவம்
தேநைகேந்துதத்வ்யாப்தம் ம்ருதாகும்பாதிகம்யதா

சக்திமுதல் பிருதிவியீறாகச் சிவதத்துவத்தினின்றும் தோன்றியது. மண்ணினால் குடம் போல அவ்வொருவனால் அது வியாபிக்கப்பட்டுளது. இங்ஙனமே எண்ணிறந்த பிரமாணவாக்கியங்கள் சிவபெருமான் ஜெகதாகாரனென்று கூறுகின்றன. இனி: -

கைவல்யோபநிடதம்.

ஸர்வைஶ்சர்ய ஸம்பந்நஸ் ஸர்வேஶ்வர:
சகல ஐசுவரியமுடையோன், சகலேசுவரன்.

சுவேதாச்சுவத ரோபநிடதம்.

விஶ்வாதிகோருத்ரோமஹர்ஷி
விசுவாதிகன் ருத்திரன்மகருஷி.

வித்யாவித்யோ ஈஶதேயஸ்துஸோந்ய:
பசுபாசங்களை நடாத்துவோன் ஈசன் அந்நியனே.

பிரமாணம்: - **தைத்திரீயம்.**

ஈஶாநஸ்ஸர்வவித்யாநாமீஶ் வரஸ்ஸர்வபூதாநாம்
சகல வித்தைகளுக்கு மீசன் சகல பூதங்கட்கு மீசன்.

சதருத்திரீயம்.

நமோ ஹிரண்யபாஹவே (என்றாரம்பித்து) குலுஞ்சாநாம்பதயே) என்பதீறாய் அதருவசிரஸில் உத்தரகாண்டம் இரண்டாங்காண்டத்திலும் சகலாதிபதியென்றும் கூறப்பட்டுளது. இங்ஙனம் கூறிய ஜகதாகாரத்துவம் ஜகதீசுவரத்துவம் என்றிரண்டு தருமங்களையே இவ்வத்தியாயத்திலும் கூறியிருப்பது காண்க. இதுகாறும் ஜகத்ஸ் வரூபத்துவங் கூறப்பட்டாலும் இனி ஜகதீசுவரத்துவமும் கூறப்பட்டிருப்பது வரும் சுலோகங்களாலறிக. சகலசேதனாசேதனங்களிலும் அந்தரான்மாவாய் விளங்குகின்ற மையாலும் ஸர்வ வியாபகனாதலாலும் சகல சொல்லுக்கும் பொருளாயிருக்கின்ற மையால் ஜகத்ஸ்வரூபத்துவம் கூறுதல் ஒவ்வும். இது பற்றியன்றோ.

அதருவசிரம்.

யஶ்சவிஷ்ணு: யஶ்சமஹேஶ்வர: யாசோமா யஶ்சவிநாயக:
யஶ்சஸ்கந்த: யஶ்சேந்த்ர: யஶ்சாக்நி: யாசபூ:

யாதொருவன் விஷ்ணுவோ, யாதொருவன் மஹேச்வரனோ, யாதொருவன் சோமனோ, யாதொருவன் விநாயகரோ, யாதொருவன் ஸ்கந்தரோ, யாதொருவன் இந்திரனோ, யாதொருவன் அக்நியோ, யாதொருவன் பூமியோ எனக் கூறியிருக் கின்றது. இதனைச் சீகண்டபாஷ்யத்தில் (1) அத்தியாயம் (4) பாதம் வாக்கியாந்வயாதி கரணத்தில் (அந்வஸ்திதேரிதிகா) என்ற ஸூத்திரத்தின் பாஷ்யத்தில் விரிவாய்க் காண்க. அன்றியும் மேற்போந்தசுலோகங்களினாலும் பிரமாணங்களினாலும் பெருமான் நானே என்றதனால் பிரமமே பிரபஞ்சமாகப்பரிணமித்திருப்பன் என

ஒருசாரார் கூறும் கூற்றன்று மற்றென்னையோ வெனின்? முதல்வன் சேதனா சேதனப் பிரபஞ்சத்தில் பாலினெய்போலவும், பழத்தில்மதுரம்போலவும், எள்ளிலெண் ணெய் போலவும் ஔபச்யேஷிக வியாப்தி கொண்டு ஆன்மாக்களுடன் பிறிவற நின்றறிவித்தும், மாயாகாரியங்களைச் சங்கோசவிரிவுசெய்தும் நடத்தலின் எல்லாம் நானே யென்றது காண்க. இக்கருத்துப் பற்றியே, "எல்லாவுலகுமானாய் நீயே" எனவும், "இருநிலனாய்" எனவும், "வானாகி" எனவும், "நினைப்பறநினைந்தானீயலாற் பிரிது மற்றின்மை" எனவும், தேவாரதிருவாசகங்களில் உண்மை நாயன்மார் திருவாய் மலர்ந்தருளினர்.

ஶ்லோகம்.

அதோsஹம் விஶ்வரூபோsஸ்மி ஶிரஷ்ம் ச ஜனதோ³ம் ததா
அஶிதம் பாஶிதம் சாஹம் க்ருதம் சாsக்ருத மப்யஹம் (26)

பரம் சைவாபரம் சாஹ மஹம் ஸர்வ பராயண:
அஹம் ஜக³த்³தி⁴தம் தி³வ்ய மக்ஷரம் ஸூக்ஷ்ம மவ்யயம் (27)

வியாக்யானம்: - **தத**: - ஆதலால், **அஹம்** - நான், **விஶ்வரு: அஸ்மி** - விஸ்வரூபனாகின்றேன் (நான்), **ஸதா** - எப்போதும், **ஜபதாம்** - ஜபிக்கின்றவர் களுக்கு, **ஶிரஷம் ச** - சிரஸுமாகின்றேன், **அஶிதம்** - புசிக்கப்பட்டதும், **பாஶிதம்ச** - ஜீர்ணமானதும், **அஹம்** - நான், **க்ருதம்ச** - செய்யப்பட்டதும், **அக்ருதம்ச** - செய்யப்படாததும், **அஹம்** - நான், **பரம்ச** - ஸாமான்னியஸத்தையும், **அபரம்ச** - த்ரவ்யக்த்வாதிஸத்தையும், **அஹம்ஏவ** - நானே, **அஹம்** - நானே, **ஸர்வபராயண:** - சகலரும் அடையக்கூடியவிடம், **அஹம் -** நான், **ஜகத்திதம்** - சகலருக்கும் ப்ரேமைக்கு இடமான, **திவ்யம்** - தஹராகாசத்திலுள்ளது, **அக்ஷரம்** - அக்ஷரமும், **ஸூக்ஷ்மம்** - அணுவும், **அவ்யயம்** - நாசமற்றதும் நானே.

பொழிப்புரை: - ஆதலால் நான் விசுவரூபனாகின்றேன். ஜபிக்கின்றவர் களுக்குச் சிரஸுமாகின்றேன். புசிக்கப்பட்டதும் ஜீர்ணமானதும் நானே. செய்யப் பட்டதும் செய்யப்படாததும் நானே. ஸாமான்னியஸத்தையும் திரவியத்துவஸத் தையும் நானே. யானே ஸகலமும் நிலைபெறுமிடம். ஸகலருக்கும் பிரேமைக்கு இடமாய்க் தகாராகாயத்திலுள்ளதும் நானே. அக்ஷரமாயுள்ளதும் ஸூக்ஷமமாயு ள்ளதும் நாசமற்றதும் நானே.

ஶ்லோகம்.

ப்ராஜாபத்யம் பவித்ரம் ச ஸௌம்ய மக்³ராஹ்ய மக்³ரிமம்
அஹ மேவோபஸம்ஹர்தா மஹா க்³ராஸௌஜஸாம் நிதி4: (28)

வியாக்யானம்: - **பவித்ரம்** - புண்ணியமாகிய, **ப்ராஜாபத்தியம்** - புத்திரோத்பத்தி செய்வித்தலும் (நானே), **ஸௌம்யம் -** அழகாயுள்ளதும், **அக்ராஹ்யம்** - அறியக்கூடாததும், **அக்ரியம்** - முந்தியேற்பட்டதும் நானே, **மஹாகராஸ**.- பெருங்கவளத்தோனாகிய, **உபஸம்ஹர்த்தா** - உபசங்காரகன், **அஹம்ஏவ** - நானே, **ஓஜஸாம் நிதி:** - தேஜஸுக்கு இருப்பிடமானவனும் யானே.

பொழிப்புரை: - புண்ணியமாகிய பிரஜோற்பத்தி செய்வித்தலும் நானே. ஸௌம்யமாயுள்ளதும் கிரஹிக்கக்கூடாததும் முந்தியதும் யானே. பெருங்கவளத் தோனான உபசங்காரகன் நானே, தேஜஸுக்கு நிதியும் நானே.

தாத்பரியம்: - புண்ணியமாகிய பிரஜோற்பத்தியென்றது, பிதிரர் கடனை நற்புதல்வனாலேயே தீர்க்கவேண்டுமாதலின் "ப்ரஜநநம்வை ப்ரதிஷ்டாலோகேஸாது ப்ரஜாயாஸ்தம் துந்தந்லாந. பித்ருணாமாருணோபவதி" என்ற சுருதியைய நுஸரித்துக் கூறியது காண்க. உடன் சங்காரகன் இதனை "யஸ்யப்ரஹ்மசக்ஷத்ரம்ச உபெபவதஒதந:" என்பதாதி சுருதிகளாலறிக.

ஶ்லோகம்.

ஹ்ருத³யே தே³வதாத்வேன ப்ராணத்வேன ப்ரதிஷ்டி²த:
ஶிரஶ் சோத்தரதோ யஸ்ய பாதௌ³ த³க்ஷிணத ஸ்ததா² **(29)**

யஸ்ய ஸர்வோதர ஸ்ஸாக்ஷா தோ³ம்காரோsஹம் த்ரிமாத்ரக:
ஊர்த்⁴வமுன்னாமயே யஸ்மா த³த⁴ஶ் சாபனயாம்யஹம் **(30)**

தஸ்மா தோ³ங்கார ஏவாsஹ மேகோ நித்ய: ஸனாதன:

வியாக்யானம்: - **தே³வதாத்வேன** - தேவதையாகவும், **ப்ராணத்வேன** - பிராணனாகவும், **ஹ்ருதயம்** - இருதயகமலத்தை, **ப்ரதிஷ்டித:** - அடைந்திருக் கின்றவன் நானே, **உத்தரத:** - மேற்பாகத்தில், **யஸ்ய** - எவனது, **ஶிரஶ்** - சிரஸும், **யஸ்ய** - எவனது, **பாதௌ³** - கால்கள், **த³க்ஷிணத** - வலதுபாகத்திலு முளவோ (அப்படிப்பட்டதாகிய), **த்ரிமாத்ரக:** - மும்மாத்திரைகளுடையதும், **ஸர்வோத்தர: -** ஸர்வசிரேஷ்டமுமாகிய, **ஓங்கார:** - ஓங்காரமானது, **ஸாக்ஷாத் அஹம்** - நானே, **யஸ்மாத்** - யாதொருகாரணத்தால், **ஊர்த்வம்** - (உச்சரித்தல் மாத்திரத்தால்) மேலே, **உந்நாமயே** - ஜீவனை செல்லச் செய்கின்றேனோ, **அத ச** - பாவத்தைகீழும், **அபநயாமி** - போகச்செய்கின்றேனோ கீழவீழ்க்கிறேனோ, **தஸ்மாத்** - ஆதலால், **அஹமேவ** - நானே, **ஓங்காரம்** - ஓங்காரமாகின்றேன், **ஏக:** - ஏகனானவனும், **நித்திய:** - நித்தியனும், **ஸனாதன:** - பலகாலமாயுள்ளவனும் நானே.

பொழிப்புரை: - தேவதையாகவும் பிராணனாகவும் இருதயத்திலிருக் கின்றவன் நானே. மேற்பக்கத்தில் சிரஸும் அதாவது அகாரமும் பாதங்கள்

மகாரங்கள் வலது பக்கத்திலும் உளவோ அப்படிப்பட்ட மும்மாத்திரை வடிவமும் சகல ச்ரேஷ்டமுமாகிய ஓங்காரம் நானே. யாதொரு காரணத்தினால் உச்சரித்தல் மாத்திரத்தால் ஜீவனை மேல்வரச் செய்கின்றேனோ கீழ்ப்போகச் செய்கின்றேனோ ஆதலால் நான் ஓங்காரமாகின்றேன். ஏகனாயுள்ளவனும் நித்தியனும் பன்னெடுங் காலமாயுள்ளவனும் நானே.

தாத்பரியம்: - ஈண்டு மேற்பக்கம் கீழ்ப்பக்கங்களாய்க் குறித்து இருதயத்திற்கு மேற்பக்கங்களும் கீழ்ப்பக்கங்களுமென்பதறிக.

பிரமாணம்: - **அதருவச்ரோபநிடதம்.**

ஹ்ருதிஸ்தாதேவதாஸ்ஸர்வா ஹ்ருதிப்ராணா ப்ரதிஷ்டிதா:
ஹ்ருதித்வமஸியோநித்யம் திஸ்ரோமாத்ரா பரஸ்துஸ

தஸ்யோத்தர தச்ஶிரோதக்ஷிதை பாதோயஉத்தர
அதகஸ்மாதுச்யதே ஓம்கார: யஸ்மாதுச்சார்யமாணஏவ

ஸர்வம்ஶரீரமூர்த்வ முந்தாமயதிதஸ்மாதுச்ச்யதே ஓம்கார

ஶ்லோகம்

ர்ரிசோ யஜும்ஷி ஸாமானி யோ ப்[3]ரஹ்மா யஜ்ஞ கர்மணி
ப்ரணாமயே ப்[3]ராஹ்மணேப்[4]ய ஸ்தேனாsஹம் ப்ரணவோ மத: (31)

ஸநேஹோ யதா[2] மாம்ஸக[2]ண்டம் வ்யாப்னோதி வ்யாபயத்யபி
ஸர்வ லோகானஹம் தத்[3]வத் ஸர்வ வ்யாபீ ததோsஸ்ம்யஹம் (32)

வியாக்யானம்: - **ய** - யாதொருவன், **யஜ்ஞகர்மணி** - வேள்வியில், **ப்ரஹ்மா** யஜமானனாயிருந்து, **ரிச:** - ருக்குகளையும், **யஜூம்ஷி** - யஜுஸ்ஸுகளையும், **ஸாமானி -** ஸாமங்களையும், **ப்[3]ராஹ்மணேப்ய:** - பிராமணர்களின் (இருத்துவிக்கு முதலியவர்களின்) பொருட்டு, **ப்ரணாமயே** - வணங்கச்செய்கின்றேனோ, **தோ** - அதனால், **அஹம்** - நான், **ப்ரணவோ மத:** - ப்ரணவம் என்னப்படுகின்றோன், **யதா** - எப்படி, **ஸ்நேஹ** - எண்ணெயானது, **மாம்ஸகண்டம்** - மாம்ஸத்துண்டை, **வ்யாப்நோதி** - வியாபிக்கின்றதோ, **வ்யாபயதி** - வியாபிக்கவும் செய்கின்றதோ, **தத்வத்** - அதுபோல, **அஹம்** - நான், **ஸர்வலோகார்** - ஸகல உலகங்களையும் வியாபிக்கச் செய்கின்றேன், **தத** - ஆதலால், **ஸர்வவ்யாபீ அஸ்மி** - ஸர்வ வியாபி என்னப்படுகின்றேன்.

பொழிப்புரை: - யாதொருவன் வேள்வியில் யஜமானனாயிருந்து ருக்குயஜுஸ் ஸாமங்களை இருத்துவிக்கு முதலிய ப்ராமணர்களின் பொருட்டு

வணங்கச்செய்கின்றேனோ அதனால் நான் பிரணவம் என்னப்படுகின்றேன். எண்ணெயானது எப்படி மாம்ஸத்துண்டை வியாபித்தும் வியாபிக்கச்செய்து மிருக்கின்றதோ அதுபோல் நான் ஸகலலோகங்களையும் வியாபிக்கச்செய்கின்றேனாதலால் ஸர்வ வியாபி என்னப்படுகின்றேன்.

பிரமாணம்: - அதருவச்ரோபநிடதம்.

அதகஸ்மாதுச்யதேப்ரணவ யஸ்மாதுச்சார்யமாணஏவ
ருசோயஜூம்ஷிஸாமாநி அதர்வாங்கிரஸஶ்சயஜ்ஞே
ப்ரஹ்மசப்ராஹ்மணேப்ய ப்ரணாமயதி தஸ்மாதுச்யதேப்ரணவ
அதகஸ்மாதுச்யதேஸர்வவ்யாபீ யஸ்மாதுச்சார்யமாணஏவ
ஸர்வாந்லோகாந்வ்யாப்நோதிஸ்நே ஹோபதாபல்லபிண்டம்

ஶ்லோகம்.

ப்[3]ரஹ்மா ஹரிஶ்ச ப[4]க[3]வான் ஆத்[3]யந்தம் நோபலப்[3]த[4]வான்
ததோsன்யே ச ஸுரா யஸ்மா த்[3]னந்தோsஹமதோ மத: (33)

வியாக்யானம்: - **யஸ்மாத்** - யாதொருகாரணத்தால், **ப்ரஹ்மா** - பிரமனும், **ப[4]க[3]வான் ஹரிஶ்ச -** பகவனான ஹரியும், **ஆத்யந்தம்** - (அடிமுடியை), **உபலப்[3]த[4]வான் -** காணவில்லையோ, **தத அநயே** - அவருக்கந்நியர்களான, **ஸுரா ச** - தேவர்களும் (காணவில்லையோ), **அத** - அதனால், **அஹம் -** நான், **அநந்த: மத:** - அனந்தனென்னப்படுகின்றேன்.

பொழிப்புரை: - யாதொருகாரணத்தால் பிரம்மாவும் ஹரியும் அடிமுடிகளைக் காணவில்லையோ மற்றுமுள்ளதேவர்களும் காணவில்லையோ ஆதலால் நான் அனந்தனென்னப் படுகின்றேன்.

பிரமாணம்: - ருக்குவேதம்.

விஷ்ணுர் வைவாராஹம்ருபமாஸ்தாய பூமிந்விதாரயந்
ஸஹஸ்ரம்ஸமா ஆஸந் பாதாந்பேஷணபரோபூத்வா
த்வமேவமாதாஸித்வமேவபிதாஸி த்வமேவப்ராதாஸி
த்வமேவஜ்யேஷ்டோஸித்வமேவ ஶ்ரேஷ்டோஶியஏவம்மஹி
மாநம்வேதத்ரஷ்டாபவதி விஜ்ஞாதாபவதிகர்தாபவதி
காரயிதாபவதியஏவந்வேத ஶிவஸாயுஜ்யமாப்நோதி
ப்ரஹ்மாவைஹம்ஸோபூத்வா ஶிரோந்வேஷ்டவ்யஸஹஸ்ரம்
ஸமாஆஸந்ப்ரஹ்மாநாஹம்ஶிரோஜாநே
த்வமேவமாதாஸித்வமேவபிதாஸித்வமேவப்ராதாஸி
த்வமேவத்ரஷ்டாஸிஶ்ரோதாஸி கர்தாஸிகாரயிதாஸி
ஜ்யேஷ்டோஸிஶ்ரேஷ்டோஸி யஏவந்வேதஶிவஸாயுஜ்யமாப்நோதி

என அரிபிரமர் சிவபெருமானைத் தேடியலுத்தார்களெனும் வடமொழி வேதமகா வாக்கியங்களுக் கிணங்க.

திராவிடவேதம்.

"செங்கணெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்குமலர்பாதம் பூதலத்தைப் போந்தருளி"

மகாபாரதம்.

"ஒரேனந் தனைத்தேட வொளித்தருளு மிருபாதத் தொருவனந்த
போரேனந் தனைத்தேடிக் கணங்களுடன் புறப்பட்டான்" -

பிரமாணம்: - **சிவானந்தலகரி சங்கராசாரிய சுவாமிகள்.**

அரிப்ரஹ்மாதீநாமபிநிகடபாஜாமஸுலபம்சிரம்
யாசேஶம்போஶிவதவ பதாம்போஜபஜநம்

எனப்பிரகாசிக்கும் வடமொழி தென்மொழி வேதமகா வாக்கியங்களாலும், மகாபாரத முதலிய விதிகாச வாக்கியங்களாலும் அறிக.

ஶ்லோகம்.

க³ர்ப⁴ ஜன்ம ஜரா ம்ருத்யு ஸம்ஸார ப⁴ய ஸாக³ராத்
தாரயாமி யதோ ப⁴க்தம் தஸ்மாத் தாரோऽஹமீரித: (34)

வியாக்யானம்: - **யத:** - தாருகாரணத்தால், **க³ர்ப⁴ ஜன்ம ஜரா ம்ருத்யு ஸம்ஸார ப⁴ய ஸாக³ராத்** - கருப்பவாஸப்பிறப்புஜரை மரண ஸம்ஸாரமாகிய சாகரத்தினின்றும், **ப⁴க்தம்** - பக்தனை, **தாரயாமி** - கரையேறச்செய்கின்றேனோ, **தஸ்மாத்** - ஆதலால், **அஹம்** - நான், **தார:** - தார(னென்று), **ஈரித:** - கூறப்படுகின்றேன்.

பொழிப்புரை: - யாதொருகாரணத்தால் கருப்பவாஸப் பிறவி ஜரை மரண ஸம்ஸாரமாகிய பயக்கடலினின்றும் பக்தனைக் கரையேறச் செய்கின்றேன் ஆதலால் நான் தாரனென்னப்படுகின்றேன்.

ஶ்லோகம்.

சதுர்விதே⁴ஷு தே³ஹேஷு ஜீவத்வேன வஸாம்யஹம்
ஸூக்ஷ்மோ பூ⁴த்வாऽத²ஹ்ருத்³தே³ஶேதஸ்மாத்ஸூக்ஷ்ம: ப்ரகீர்த்தித:

வியாக்யானம்: - **யத:** - யாதொருகாரணத்தால், **அஹம்** - நான், **சதுர்விதேஷு** - நால்வகைகளாகிய, **தேஹேஷு** - தேகங்களில், **ஹ்ருத்தேசே** - ஹ்ருதயதேசத்தில், **ஸூக்ஷ்ம பூத்வா** - சூக்ஷுமனாயிருந்து, **ஜீவத்வேன** - ஜீவத்தன்மையோடு, **வஸாமி** - வஸிக்கின்றேனோ ஆதலால், **சூக்ஷும:** - சூஷ்மன், **ப்ரகீர்த்தித**: - என்று கூறப்படுகின்றேன்.

பொழிப்புரை: - யாதொருகாரணத்தால் நான் நால் வகைச்சரீரங்களிலும் ஹ்ருதயதேசத்தில் சூக்ஷுமனாயிருந்து ஜீவத்தன்மையோடு வஸிக்கின்றேன். ஆதலால் சூக்ஷுமனென்னப் படுகின்றேன்.

தாத்பரியம்: - இந்நால்வகைதேஹம் ஸ்வேதஜம் அண்டஜம் உற்பிஜம் ஜராயுஜம் அதாவது வெயர்வையல்லது புழுக்கத்தினின்றும் தோன்றுவன கருப்பை யினின்றும் தோன்றுவன வென்று முறையே கொள்க.

ஶ்லோகம்.

மஹா தமஸி மக்[3]னேப்[4]யோ ப[4]க்தேப்[4]யோ யத்ப்ரகாஶயே
வித்[3]யுத்[3]வ த[3]துலம் ரூபம் தஸ்மாத்[3] வைத்[3]யுத மஸ்ம்யஹம் (36)

வியாக்யானம்: - **யத்** - யாது காரணத்தால், **மஹாதமஸி** - (அஞ்ஞானத்தில்) ஸம்ஸாரத்தில், **மக்நேப்யு** - மூழ்கியிருக்கின்றவர்களாகிய, **பக்தேப்ய:** - பக்தர்களின் பொருட்டு, **அதுலம்** - நிகரற்ற, **ரூபம்** - உருவத்தை, **வித்யுத்வத்** - மின்னல்போல, ப்ரகாஶயே - பிரகாசிக்கச்செய்கின்றேனோ, **தஸ்மாத்** - ஆதலால், **அஹம்** - நான், **வைத்யுதம் அஸ்மி** - வைத்யுதன் என்பானாகின்றேன்.

பொழிப்புரை: - யாதொருகாரணத்தால் பேரிருளாகிய ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்கும் பக்தர்களின் பொருட்டு, நிகரற்ற உருவத்தை மின்னலைப்போல விளங்கச்செய்கின்றேன் ஆதலால் நான் வைத்யுதனென்னப்படுகின்றவனா கின்றேன்.

ஶ்லோகம்.

ஏக ஏவ யதோ லோகான் விஸ்ருஜாமி ஸ்ருஜாமி ச
விவாஸயாமி க்[3]ருஹ்ணாமி தஸ்மா தே[3]கோऽஹ மீரித: (37)

வியாக்யானம்: - **யத:** - யாதொருகாரணத்தால், **ஏக ஏவ** - ஒருவனாகவே, **லோகானந்** உலகங்களை, **விஸ்ருஜாமி** - சிருஷ்டிக்க எண்ணுகின்றேனோ, **ஸ்ருஜாமிச** - ஸ்ருஷ்டிக்கின்றேனோ, **விவாஸயாமி** - சங்கரிக்கின்றேனோ,

க்ருஹ்ணாமி - தன்னிடமடக்கிக் கொள்கின்றேனோ, **தஸ்மாத்** - ஆதலால், **ஈஶ்வர** - ஈச்வரனாகிய, **அஹம்** - நான், **ஏக** - ஏகனென்னப்படுகின்றேன்.

பொழிப்புரை: - யாதொருகாரணத்தால் நானொருவனே உலகங்களை ஸ்ருஷ்டிக்க ஸங்கல்ப்பஞ் செய்கின்றேனோ, ஸ்ருஷ்டிக்கின்றேனோ, ஸங்கரிக் கின்றேனோ என்னிடம் கிரஹித்துக்கொள்ளுகின்றேனோ ஆதலால் ஈஸ்வரனாகிய நான் ஏகனென்னப்படுகின்றேன்.

ஶ்லோகம்.

ந த்³விதீயோ யஸ்தஸ்தே² துரீயம் ப்³ரஹ்ம யத்ஸ்வயம்
பூ⁴தான்யாத்மனி ஸம்ஹ்ருத்ய சைகோ ருத்³ரோ வஸாம்யஹம் (38)

வியாக்யானம்: - **யத** - யாதொருகாரணத்தால், **த்விதீய:** - இரண்டாகுபவன், **ந தஸ்தே₂** - இல்லையோ, **யத்** - யாதொருகாரணத்தால், **துரீயம் ப்ரஹ்ம** - நான்காவதான பிரும்ஹமாகிய (நான்), **ஸ்வயம்** - தானே, **பூதானி** - பூதங்களை, **ஆத்மனி** - தன்னிடம், **ஸம்ஹ்ருத்ய** - ஒடுக்கிக்கொண்டு, **வஸாமி** - வஸிக்கின்றேனோ, ஆதலால், **அஹம்** - நான், **ஏகோ ருத்³ர** - ஏகோருத்ர (ஒருவனுருத்திரன்) என்னப்படுகின்றேன்.

பொழிப்புரை: - யாதொருகாரணத்தால் இரண்டாகுபவனில்லையோ யாதொரு காரணத்தால் துரியப்பிரும்மமான நான் தானே பூதங்களைத் தன்னிடம் ஒடுக்கிக் கொண்டு வஸிக்கின்றேனோ? ஆதலால் ஏகோருத்திரனென்னப் படுகின்றேன்.

ஶ்லோகம்.

ஸர்வான் லோகான் யதீஶேsஹ மீஶானீபிஶ்ச ஶக்திபி⁴:
ஈஶானமஸ்ய ஜக³த: ஸ்வர் த்³ருஶம் சக்ஷு ரீஶ்வரம் (39)

ஈஶான மிந்த்³ர தஸ்து²ஷ: ஸர்வேஷாமபி ஸர்வதா³
ஈஶானஸ் ஸர்வ வித்³யானாம் யதீ³ஶான ஸ்தத³ஸ்ம்யஹம் (40)

வியாக்யானம்: - **யத்** - யாதொருகாரணத்தால், **ஈஶ: அஹம்** - ஈஶானான, **ஈஶிநீபி, ஶக்திபி⁴: ச** - ஈசிநீசக்திகளால், **ஸர்வாந்லோகாந்** - ஸகல சராசரங் களையும் ஆளுகின்றேனோ, **அஸ்ய ஜகத:** - இச்சகத்திற்கு ஈசாநனும், **ஸ்வத்ருஶம் -** ஸ்வர்க்காதிலோகங்களைக் காண்போனும், **சக்ஷு:** - கண்போன்றவனும், ஈஶ்வரம் - ஈஶ்வரனும், **இந்த்ர தஸ்துஷ:** - இந்திரனைப்பற்றியுள்ளவைக்கும், **ஸர்வேஷாம் அபி** - ஏனைய ஸகலருக்கும், **ஸர்வதா** - எப்போதும், **ஈஶாநம்** - ஈஶாநனுமாயு ள்ளவன் என்று கூறுகின்றமையாலும், **யத்** - யாதொருகாரணத்தால், **ஸர்வவித்யா**

னாம் - ஸகல வித்தைகளுக்கும், **ஈஶான** - இறைவனோ, **தத்** - ஆதலால், **அஹம்** - நான், **ஈஶான: அஸ்மி** - ஈசானனாகின்றேன்.

பொழிப்புரை: - ஈசனான நான் --ஈசனான நான் யாதொருகாரணத்தால் ஈசிநீ சக்திகளால் ஸகலலோகங்களையும் ஆள்கின்றேனோ? யாதொருகாரணத்தால் இவ்வுலகிற்கு ஈசானனும் ஸ்வர்க்காதி உலகங்களைக் காண்போனும் கண் போன்ற வனும் இறைவனும் இந்திராதியர்க்கும் சகலருக்கும் ஈசானனுமாகிய (உம்மை வணங்குவாம்) என்று கூறப்படுகின்றேனோ? யாதொருகாரணத்தால் நான் ஸகல வித்தைகளுக்கும் மீசன்? ஆதலால் நான் ஈசானனென்னப் படுகின்றேன்.

ஶ்லோகம்.

ஸர்வான் பா[4]வான் நிரீக்ஷேsஹ மாத்மஞானம் நிரீக்ஷயே
யோக[3]ம் ச ஸமயே யஸ்மாத்[3] ப[4]க[3]வான் மஹதோ மத: (41)

வியாக்யானம்: - **யஸ்மாத்** - யாதொருகாரணத்தால், **அஹம்** - நான், **ஸர்வான் பா[4]வான்** - உற்பத்தியாதி ஸகலபாவகங்களையும், **நிரீக்ஷே** - காண்கின் றேனோ, **ஆத்மஞானம்** - ஆன்மஜ்ஞானத்தை, **நிரீக்ஷேஹம்யதி** - நன்றாய் விளங்கச் செய்கின்றேனோ, **யோகம்ச** - யோக ஸித்தியையும், **கமயே** - அடையச் செய்கின்றேனோ (ஆதலால்), **பகவான்** - பகவான் (என்று,) **மஹதாம்** - மகான்களால், **மத:** - எண்ணப்பட்டவன்.

பொழிப்புரை: - யாதொருகாரணத்தால் நான் உற்பத்தியாதி ஸகலபாவகங் களையும் காண்கின்றேனோ, ஆன்மஞானத்தை பக்தர்களுக்கு அளிக்கின்றேனோ, (யமநியமாதி அங்கங்களுடன் கூடிய), யோகஸித்தியையும் அடையச் செய்கின் றேனோ, ஆதலால் பகவான் என்று மஹான்களால் எண்ணப்படுகன்றேன்.

ஶ்லோகம்.

அஜஸ்ரம் யச்ச க்[3]ருஹ்ணாமி விஸ்ருஜாமி ஸ்ருஜாமி ச
ஸர்வான்லோகான் ஸ்வமாயாபி[4] ஸ்வேனாஹம் வை மஹேஶ்வர: (42)

வியாக்யானம்: - **யத்** - யாதொருகாரணத்தால், **ஸர்வான்லோகான்** - ஸகல உலகங்களையும், **ஸ்வமாயாபி**[4] - எனது மாயைகளால், **அஜஸ்ரம்** - பிரளய காலந்தோறும், **ப்ரக்ருஹ்ணாமி** - என்னிடம் (அடக்கி) ஒடுக்கிக்கொள்கின்றேனோ, **விஸ்ருஜாமி** - ஸ்ருஷ்டிக்க ஸங்கல்பிக்கின்றேனோ, **ஸ்ருஜாமி ச** - ஸ்ருஷ்டிக் கின்றேனோ, **தேந** - அதனாலேயே, **அஹம்** - நான், **மஹேஶ்வர** - மஹேசுவர னென்னப் படுகின்றேன்.

பொழிப்புரை: - யாதொரு காரணத்தால் நான் எனது மாயைகளால் பிரளய காலந்தோறும் ஸகல லோகங்களையும் என்னிடம் ஒடுக்கிக்கொள்ளுகின்றேனோ, ஸ்ருஷ்டிக்க வெண்ணுகின்றேனோ, அங்ஙனம் ஸ்ருஷ்டிக்கின்றேனோ, ஆதலால் நான் மஹேச்வரனென்னப்படுகின்றேன்.

ஶ்லோகம்.

மஹத் ஸ்வாத்ம ஞானயோகை³ ரைஶ்வர்யைஸ்து மஹீயதே
ஸர்வான் பா⁴வான் பரித்யஜ்ய மஹாதே³வஶ்ச ஸோऽஸ்ம்யஹம்
(43)

வியாக்யானம்: - **ய:** - யாதொருவன், **மஹத்ஸ்வாத்மஞான யோகை:** - மஹத்தாகிய ஸுவான்மஞானயோகங்களாகிய, **ஐஶ்வர்யைஸ்து** - ஐசுவர்யங்களால், **மஹீயதே** - பூசிக்கப்படுகின்றானோ, **ஸர்வான்** - ஸகலங்களாகிய, **பா⁴வான்** - பொருள்களையும், **ஸ்ருஜதி** - ஸ்ருஷ்டிக்கின்றானோ, **அவதி** - ரக்ஷிக்கின்றானோ, **ஸமஹாதேவ:** - அப்படிப்பட்ட மஹாதேவன், **அஹம் அஸ்மி** - நானாகின்றேன்.

பொழிப்புரை: - யாதொருவன் மஹத்தாகிய சுவாத்மஞான யோகைஶ்வர்யங்களால் ஸகலர்களாலும் பூஜிக்கப்படுகின்றானோ சகல ஜகங்களையும் உண்டாக்குகின்றானோ காக்கின்றானோ னா அம் மஹாதேவன் யானாகின்றேன்.

ஶ்லோகம்.

எஷோऽஸ்மி தே³வ ப்ரதி³ஶோனு ஸர்வா:
பூர்வோ ஹி ஜாதோऽஸ்ம்யஹமேவ க³ர்பே⁴
அஹம் ஹி ஜாதஶ்ச ஜனிஷ்யமான:
ப்ரத்யக்³ ஜனா திஷ்ட²தி விஶ்வதோமுக²: (44)

வியாக்யானம்: - ஸர்வா ப்ரதிஶ - ஸகலதிசைகளும், **எஷ: ஏவ: அஸ்மி** - மஹாதேவனாகிய (யானே) இருக்கின்றேன் **கர்ப்பே** - புவனகோசமத்தியில், **பூர்வ ஜாத** - முந்தித்தோன்றியவனாகிய இரண்யகர்ப்பனும், **அஹம் ஏவ** - நானே, **ஜாத:** - உண்டாகிய (உலகும்,) **ஜனிஷ்யமானப்ச** - இனியுண்டாவதும், **அஹம்ஹி** - யானே, **ப்ரத்தியக்³ ஜனா** - பக்தஜகங்களும், **விஶ்வதோமுக:** - அக்நியுமாக, **திஷ்டதி** - மஹாதேவனிருக்கின்றான்.

பொழிப்புரை: - சகலதிசைகளும் மஹாதேவனாகிய யானே யாகின்றேன். புவனகோசமத்தியில் முதற்றோன் றியவனாகிய ஹிரண்யகர்ப்பனும் நானே. தோன்றிய உலகும் இனி தோன்றுவதும் நானே. என்னிடம் பக்திநிலை பெற்றவர்களும் அக்நியுமாய் இம் மஹாதேவனாகிய யானேயிருக்கின்றேன்.

ஶ்லோகம்.

விஶ்வதஶ் சக்ஷுருத விஶ்வதோ முகோ²
விஶ்வதோ பா³ஹுருத விஶ்வதஸ் பாத்
ஸம்பா³ஹுப்⁴யாம் த⁴மதி ஸம்பதத்ரைர்
த்³யாவா பூ⁴மீ ஜனயன் தே³வ ஏக: **(45)**

வியாக்யானம்: - **விஶ்வதஶ்சக்ஷு:** - எங்குங் கண்களுடையவனும், **விஶ்வதோ முகோ²** - எங்கும் முகமுடையவனும், **விஶ்வதோஹ ஸ்த:** - எங்குங் கைகளுடையவனும், விஶ்வதஸ்பாத் - எங்குங்கால்களுடையோனும் (நானே) இவனே, **பதத்ரை:** - பக்ஷிகளோடு கூட, **ஸம்பாஹுப்யாம்** - கைகளால், **தமதி** - பறக்கின்றான், **ஏக:** - ஒருவனாக, **தயாவாபூமி** - ஆகாய பூமிகளை, **ஜனயத்** - உண்டாகும், **தேவ:** - தேவனும், நானே.

பொழிப்புரை: - எங்குங் கண்களுடையவனும், எங்கு முகமுடையவனும், எங்குங்கைகளுடையவனும், எங்குங் கால்களுடையவனும், (நானே) இவனே பட்சிகளுடன் கைகளாற் பறக்கின்றான், ஒருவனாக ஆகாயபூமிகளை உண்டாக்கும் தேவனும் நானே.

ஶ்லோகம்.

வாலாக்³ரமாத்ரம் ஹ்ருத³யஸ்ய மத்⁴யே
விஶ்வம் தே³வம் ஜாதவேத3ம் வரேண்யம்
மா மாத்மாஸ்த2ம் யேsனுபஶ்யந்தி
தீராஸ்தேஷாம் ஶாந்தி: ஶாஶ்வதீ நேதரேஷாம் **(46)**

வியாக்யானம்: - **ஹ்ருதயஸ்ய -** இருதயத்தினது, **மத்யே** - நடுவில், **வாலாக்ரமாத்ரம்** - மிக்கச் சூக்ஷுமனும், **விஶ்வம்தேவம்** - விஶ்வவியாபகனும், **வரேண்யம்** - (எல்லோராலும்) அடையப்படுவோனும், **ஜாதவேதம்** - வைஶ்வாநர னுமாய், ஆத்மஸ்தம் - தன்னிடமிருப்பவனுமாகிய, **மாம்** - என்னையே, **தீரா:** - எந்த தீரர்கள், **அனுபஶ்யந்தி** - காண்கின்றனரோ, **தேஷாம்** - அவர்களுக்கு, **ஶாஶ்வதீ ஶாந்தி:** - எப்பொழுதும் சாந்தியுளது, **இதரேஷாம்** - மற்றவர்களுக்கு, **ந** - அல்ல.

பொழிப்புரை: - இருதயத்தின் நடுவில் மிக்க சூக்ஷுமனும் விஶ்வவ்யாபகனும் எல்லாராலும் அடையப்படுவோனும் வைஶ்வாநரனுமாய்த் தன்னிடமிருப்பவனுமாகிய என்னை எந்த தீரர்கள் காண்கின்றனரோ அவர்களுக்கே எப்பொழுதும் சாந்தியுளது மற்றவர்க்கல்ல.

ஶ்லோகம்.

அஹம் யோனிம் யோனி மதி⁴ திஷ்டா²மி
சைகோ மயேத³ம் பூர்ணம் பஞ்ச வித⁴ம் ச ஸர்வம்
மா மீஶானம் புருஷம் தே³வ மித்த²ம்
நிசாய்யேமாம் ஶாந்தி மத்யந்த மேதி (47)

வியாக்யானம்: - **அஹம் ஏக** - யானொருவனே, **யோனிம் யோனிம்** - காரணந்தோரும், **அதிதிஷ்டா²மி** - அதிஷ்டிக்கின்றேன், **பஞ்ச விதம்** - ஐம்பூதமாகிய, **இதம்ஸர்வம்ச** - இதெல்லாம், **மயா** - என்னால், **பூர்ணம்** - வியாபிக்கப்பட்டுளது, **புருஷம்** - புருஷஉருவனும், **தேவம்** - விலாஸம் செய்வோனும், **ஈஶானம்** - ஈஶான னுமாகிய, **மாம்** - என்னை, **இத்தம்** - இவ்வாறு, **விசார்ய** - விசாரித்து, **அத்யந்தம்**, **ஶாந்திம்** - மிக்கசாந்தியை, **எதி** - அடைகின்றான்.

பொழிப்புரை: - யான் ஒருவனே காரணந்தோறும் அதிஷ்டித்திருக்கின்றேன். ஐம்பூதமாகிய ஈதெல்லாம் என்னாலேயே வியாபிக்கப் பட்டுள்ளது. புருஷஉருவமாய் விலாஸஞ் செய்வோனும் ஈசானனுமாகிய என்னை இவ்வாறு விசாரித்துப் பரம சாந்தியை யடைகின்றான்.

ஶ்லோகம்.

ப்ராணேஷ்வந்தர் மனஸோ லிங்க³ மாஹுர்
யஸ்மின் னஶனா யா ச த்ருஷ்ணா க்ஷமா ச (48)

த்ருஷ்ணாம் ச்சி²த்வா ஹேது ஜாலஸ்ய மூலம்
பு³த்³த்⁴யா சித்தம் ஸ்தா²பயித்வா மயீஹ (49)

ஏவம் யே மாம் த்⁴யாயமானா ப⁴ஜந்தே
தேஷாம் ஶாந்தி: ஶாஶ்வதீ நேதரேஷாம் (50)

வியாக்யானம்: - (யா தாருவனை) **ப்ராணேஷு** - ப்ராணன்களிலும், **மனஸோந்த**: - மனதிற்குள்ளும், **லிங்கம்** - சூக்குமமாயிருக்கின்றவனென்று, **ஆஹு:** - கூறுகின்றனரோ, **யஸ்மின்** - எவனிடம், **அசனாயாச** - போஜன விருப்பமும், **த்ருஷ்ணா** - தீர்த்தபானேச்சையும், **அக்ஷமாச** - பொறுமையின்மையும் இருக்கின்றனவோ, **ஹேது ஜாலஸ்ய மூலம்** - ஏதுக்கூட்டங்களுக்கு மூலமாகிய, **த்ருஷ்ணாம்** - (அவனது) ஆசையை, **சித்வா** - ஒழித்து, **இஹமயி** - இவ்வென்னிடம், **புத்யா** - புத்தியால் (நிச்சயத்தால்), **சித்தம்** - மனதை, **ஸ்தாபயித்வா** - நிறுத்தி, **ஏவம்** - இவ்வாறு, **யே** - எவர்கள், **மாம்** - என்னை, **த்யாயமாநா:** - தியானிக்கின்றவர்களாய்க் கொண்டு, **பஜந்தே** - உபாஸிக்கின்றனரோ, **தேஷாம்** -

அவர்களுக்கு, **ஶாஶ்வதீ** - நித்தியமாகிய, **ஶாந்தி:** - சாந்தியாம், **இதரேஷாம்** - மற்றவர்களுக்கு, **ந** - இல்லை.

பொழிப்புரை: - யாதொருவனை ப்ராணன்களுக்கும் மனதிற்கும் உள்ளில் சூக்ஷ்மமாயிருக்கின்றவனென்று கூறுகின்றனரோ, எவனிடம் பசியும் தாகமும் கோபமும் இருக்கின்றனவோ. ஹெது ஜாலங்களுக்கு மூலமாகிய அவனது ஆசையை ஒழித்து என்னிடம் புத்தியால் மனதை நிறுத்தி இவ்வாறு எவர் என்னை தியானிக்கின்றவர்களாய்க் கொண்டு உபாஸிக்கின்றனரோ; அவர்களுக்கே சாச்வதமாகிய சாந்தியுளது ஏனையர்க்கு அல்ல.

ஶ்லோகம்.

யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ
ஆனந்தம் ப^{3}ரஹ்ம மாம் ஞாத்வா ந பி^{3}பே^{4}தி குதஶ்சன (51)

வியாக்யானம்: - **வாச:** - வாக்குகள், **மனஸா ஸஹ** - மனதோடு கூட, **யத:** - எவனிடமிருந்து, **அப்ராப்ய** - அடையாது, **நிவர்த்தந்தே** - திரும்புகின்றனவோ, **ஆனந்தம்** - ஆனந்தமான, **ப்ரும்ம** - ப்ரும்மமாகிய, **மாம்** - என்னை, **த்யாத்வா -** தியானம் செய்து, **குதஶ்சந** - எக்காரணத்தாலும், **ந பி^{3}பே^{4}தி** - பயப்படுகின்றதில்லை.

பொழிப்புரை: - வாக்கும் மனமும் எவனையடைய முடியாமல் திரும்புகின் றனவோ அப்படிப்பட்ட ஆனந்த ஸ்வரூபமாகிய ப்ரும்மமாயுள்ள என்னைத் தியானிப்பவன் எக்காரணத்தாலும் பயப்படுகிறதில்லை.

ஶ்லோகம்.

ஶ்ருத்வேதி தே^{3}வா மத்^{3} வாக்யம் கைவல்ய ஞான முத்தமம்
ஜபந்தோ மம நாமானி மம த்^{4}யான பராயணா: (52)

வியாக்யானம்: - **உத்தமம்** - ச்ரேஷ்டமாயும், **கைவல்யஞானம்** - கைவல்ய ஞானஹேதுவாயும், **இதி** - இவ்வாறுள்ள, **மத்வாக்யம்** - எனது வாக்கியத்தை, **ஶ்ருத்வா** - கேட்டு, **தேவா:** - தேவர்கள், **மம** - எனது, **நாமானி** - நாமங்களை, **ஜபந்த:** - ஜபிக்கின்றவர்களும், **மம:** - எனது, **த்யானபராயணா:** - தியானத்தையே முக்கியமாய்க் கொண்டவர்களுமாய் இருந்தனர்.

பொழிப்புரை: - சிரேஷ்டமும் கைவல்யஞான ஹேதுவுமாகிய இவ்விதமான எனது வாக்கியத்தைக் கேட்டுத் தேவர்கள் எனது நாமங்களை ஜபிக்கின்றவர்களும் என்னைத் தியானித்தலையே முக்கியமாய்க் கொண்டவர்களுமாய் இருந்தனர்.

ஶ்லோகம்.

ஸர்வே தே ஸ்வஸ்வ தே^{3}ஹாந்தே மத் ஸாயுஜ்யம் க^{3}தா: புரா
ததோ யே பரித்^{3}ருஶ்யந்தே பதா^{3}ர்த்தா^{2} மத்^{3} விபூ^{4}தய: (53)

வியாக்யானம்: - **தேஸர்வே** - அவர்களெல்லோரும், **ஸ்வஸ்வதேஹாந்தே** - தத்தம்தேஹமுடிவில், **புரா** - பூர்வம், **மத்ஸாயுஜ்யம்** - எனது ஸாயுஜ்யத்தை, **கதா:** - அடைந்தனர், **தத:** - ஆதலால், **யேபதார்த்தா:** - எந்தப் பதார்த்தங்கள், **பரித்ருச்யந்தே** - காணப்படுகின்றனவோ அவைகளெல்லாம், **மத்விபூதய:** - எனது விபூதிகளே.

பொழிப்புரை: - அவர்களெல்லோரும் தத்தம் தேஹாந்த்தத்தில் பூர்வம் எனது ஸாயுஜ்யத்தையடைந்தனர். ஆதலால் காணப்படும் பதார்த்தங்களெல்லாம் எனது விபூதிகளே.

ஶ்லோகம்.

மய்யேவ ஸகலம் ஜாதம் மயி ஸர்வம் ப்ரதிஷ்டி^{2}தம்
மயி ஸர்வம் லயம் யாதி தத்^{3} ப்^{3}ரஹ்மாஸ்ம்யஹ மவ்யயம் (54)

வியாக்யானம்: - **ஸகலம்** - எல்லாம், **மயிஏவ -** என்னிடமே, **ஜாதம்** - தோன்றியது, **ஸர்வம்** - எல்லாம், **மயி** - என்னிடம், **ப்ரதிஷ்டி^{2}தம்** - நிலை பெற்றுளது, **ஸர்வம்** - எல்லாம், **மயி** - என்னி டம், **லயம்** - ஒடுக்கத்தை, **யாதி** - அடைகின்றது, **தத்** - ஆதலால், **அஹம்** - நான், **அத்வயம்** - அத்விதீயமாகிய, **ப்ரும்ம அஸ்மி** - ப்ரும்மமாகின்றேன்.

பொழிப்புரை: - ஸகலமும் என்னிடம் தோன்றி என்னிடம் நின்று என்னிடமே ஒடுங்குகின்றது. ஆதலால் யான் அத்வயமாகிய ப்ரும்மமாகின்றேன்.

பிரமாணம்: - **ஏகோதேவருத்ரோநத்விதீயாயதஸ்தே**

என்ற வாக்கியங்களாலும் அறிக.

ஶ்லோகம்.

அணோரணீயா னஹமேவதத்^{3}வன்
மஹானஹம் விஶ்வமஹம் விஶுத்^{3}த^{4}:
புராதனோsஹம் புருஷோsஹ மீஶோ
ஹிரண்மயோsஹம் ஶிவரூப மஸ்மி (55)

வியாக்யானம்: - **அணோ:** - அணுவிலும் (சூக்ஷுமத்திலும்), **அணீயான்** - மிக்கச் சூக்ஷமமாயுள்ளவன், **அஹம் ஏவ** - யானே, **தத்வத்** - அங்ஙனமே, **மஹான்** - பெரியனும், **அஹம்** - யானே, **விஶ்வம்** - ஸகலமும் (யானே), **விஶுத்த** - சுத்தனும், அஹம் - யான், **புராதான:** - புராணனாகிய, **புருஷ:** - புருஷன், **அஹம்** - யான், **ஈச:** - ஈச்வரன், **அஹம்** - யான், **ஹிரண்மய:** - பொன்னிறமுடையனாய் உள்ளவனும், **அஹம்** - யான், **சிவரூபம்** - சிவரூபனும், **அஸ்மி** - யானாகின்றேன்.

பொழிப்புரை: - அணுவிலும் அணுவும் மஹானும் ஸகலமும் மிக்க சுத்தனும் புராதனனாகிய புருஷனும் ஈசனும் பொன்மயனும் சிவரூபனும் யானே யாகின்றேன்.

ஶ்லோகம்.

அபாணிபாதோ³sஹ மசிந்த்ய ஶக்தி:
பஶ்யாம்யசக்ஷுஸ் ஸ ஶ்ருணோம்யகர்ண
அஹம் விஜானாமி விவிக்தரூபோ
ந சாஸ்தி வேத்தா மம சித் ஸதா³ஹம் (56)

வியாக்யானம்: - அஹம் - நான், **அபாணிபாத:** - கைகால்களில்லாதவன், **அசிந்த்ய ஶசக்தி: -** சிந்திக்கக்கூடாத சக்தியுடையோன், **அசக்ஷு** - கண் இல்லா தவன் ஆயினும், **பச்யாமி** - பார்க்கின்றேன், **அகர்ண:** - காதில்லாதவனாயினும், **ஶ்ருணோமி** - கேட்கின்றேன், **அஹம்** - நான், விவிக்தரூப: - தனித்துள்ள ஸ்வரூபனாயினும், **விஜானாமி** - பொருள்களையறிகின்றேன், **மம** - எனக்கு வேத்தா - அறிவோன், **நாஸ்தி** - இல்லை, **அஹம்** - நான், ஸதா - எப்போதும், சித் - சைதன்னியமே.

பொழிப்புரை: - நான் கைகால்களில்லா தவனாயினும் சிந்திக்கக் கூடாத ஆற்றலுடையவன். கண்ணில்லாதவனாயினும் காண்கின்றேன். காதில்லாதவனா யினும் கேட்கின்றேன். யான் தனித்துள்ள ஸ்வரூபமுடையோன் ஆயினும் பொருள் களையறிகின்றேன் என்னை யறிபவன் இல்லை நான் எப்போதும் சித்ரூபனே.

ஶ்லோகம்.

வேதை³ரனேகை ரஹமேவ வேத்³யோ
வேதா³ந்த க்ருத்³ வேத³ விதே³வ சாஹம்
ந புண்யபாபே மயி நாஸ்தி நாஶோ
ந ஜன்ம தே³ஹேந்த்³ரிய பு³த்³த⁴யஸ்தி (57)

வியாக்யானம்: - **அசேஷை:** - ஸகல, **வேதை:** -வேதங்களாலும் **அஹம், ஏவ** - நானே, **வேத்ய:** - அறியப்படுவோன், **வேதாந்தக் ருத்** - வேதாந்தத்தை

(உபநிஷதத்தை) ச்செய்தவனும், **வேதவித் ஏவச** - வேதத்தையுணர்நதவனும், **அஹம்** - நான், **மம** - எனக்கு, **புண்யபாபே** - புண்ணிய பாபங்கள், **நாஸ்தி** - இல்லை, **நாச:** - இல்லை, **ஜந்மதேஹேநத்ரியபுத்தய: ச** - பிறவிதேஹேந்திரிய புத்திகளும், **ந** - இல்லை.

பொழிப்புரை: - ஸகல வேதங்களாலும் அறியப்படுவோனும் வேதாந்தத்தைச் செய்தவனும் வேதமுணர்ந்தவனும் யானே. எனக்குப் புண்ணிய பாவங்களும் ஜன்மமும தேஹேந் திரிய புத்திகளும் இல்லை.

ஶ்லோகம்

ந பூ⁴மிராபோ ந ச வஹ்னிரஸ்தி
ந சானிலோ மேsஸ்தி ந மே நப⁴ஶ்ச **(58)**

ஏவம் விதி³த்வா பரமாதம ரூபம்
கு³ஹாஶயம் நிஷ்கல மத்³விதீயம்
ஸமஸ்த ஸாக்ஷிம் ஸத³ஸத்³ விஹீனம்
ப்ரயாதி ஶுத்³தி⁴ம் பரமாத்ம ரூபம. **(59)**

வியாக்யானம்: - **மே** - எனக்கு, **பூமி:** -பிருதிவி, **ந** - இல்லை, **ஆப:** - ஜலம், **ந -** இல்லை, **வஹ்னி ச** - அக்நியும், **ந** - அஸ்தி இல்லை, **அநில: ச** - வாயுவும், **ந** - இல்லை, **நப: ச** - ஆகாசமும், **நாஸ்தி** - இல்லை, **ஏவம்** - இவ்விதம், **குஹாசயம்** - புத்தி குஹையிலுள்ளவனும், **நிஷ்களம்** - மலமாயாதிகளில்லாதவனும், **அத்விதீயம்** - அத்விதீயனும் (இரண்டாவதில்லாதவனும்), **ஸமஸ்தஸாக்ஷம்** - எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயுள்ளவனும், **ஸத³ஸத்³ விஹீனம்** - காரிய காரண மில்லாதவனும், **விதித்வா** - அறிந்து, **சுத்தம்** - சுத்தமாகிய, **பரமாத்மரூபம்** - பரமாத்மஸ்ரூபத்தை, **ப்ரயாதி** - அடைகின்றான்.

பொழிப்புரை: - எனக்குப் பூமி ஜலம் அக்கினி வாயு ஆகாயம் இவைகளி ல்லை. இவ்விதம் புத்தி குஹையிலுள்ளவனும் மலமாயாதி யில்லாதவனும் அத்விதியனும் எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயுள்ளவனும் காரியகாரணமில்லா தவனும் ஆகிய பரமாத்மரூபத்தையறிந்து சுத்தமாகிய பரமாத்மஸ்வரூபத்தை படைகின்றான்.

ஶ்லோகம்

ஏவம் மாம் தத்வதோ வேத்தி யஸ்து ராம! மஹாமதே
ஸ ஏவ நான்யோ லோகேஷு கைவல்ய பத³மஶ்னுதே **(60)**

வியாக்யானம்: - ராம - ஒராமனே, **மஹீபதே** - அரசனே, **ய:** - எவன் **மாம்** - என்னை, **ஏவம்** - இவ்விதம், **தத்வத**: - உள்ளபடி, **வேத்தி** - அறிகின்றாலே), **ஸ: ஏவ** - அவனேயன்றி, **லோகேஷு -** உலகங்களில், **அநய:** - வேறெவனும், **கைவல்யபலம்** - கைவல்யபலத்தை, **ந அஶ்னுதே** - அடைகின்றதில்லை.

பொழிப்புரை: - ஒ ராமா ஒ அரசனே எவன் என்னை இவ்விதம் உள்ளபடி யறிகின்றானோ அவனேயன்றி உலகங்களில் மற்றெவனும் கைவல்யபல மடைகிறதில்லை.

விபூதியோகமென்னும்

ஆறாம் அத்தியாயம்

முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்.

விச்வரூப தர்சனம்

ஸ்ரீராமர் சொன்னார்.

ஸ்லோகம்.

ப4க3வன்! யங்மயா ப்ருஷ்டம் தத் ததை2வ ஸ்தி2தம் விபோ4
அக்ரோத்தரம் மயா லப்3த4ம் தவத்தோ நைவ மஹேஶ்வர! (1)

வியாக்யானம்: - **விபோ** - வியாபகனே, **ப4க3வன்** - பகவனே, **மயா** - என்னால், **யத்** - யாதொன்று, **ப்ருஷ்டம்** - ப்ரச்னம் செய்யப்பட்டதோ, **தத** - அது, **ததா, ஏவ** - அப்படியே, **ஸ்திதம்** - உளது, **மஹேஶ்வர** - ஓ மகேஸ்வரனே, **அத்ர** - இங்கு, **த்வத்த**: - உம்மிடமிருந்து, **உத்தரம்** - சங்கைக்குச்சமாதானமானது, **மயா** - என்னால், **லப்3த4ம்ந ஏவ** - பெறப்பட்டிலதே.

பொழிப்புரை: - ஓ வியாபகனான பகவனே என்னால் யாதொன்று பிரசனம் செய்யப்பட்டதோ அஃதப்படியேயுளது. ஓ மகேச்வரா ஈண்டு உம்மிடமிருந்து உததரம் என்னால் பெறப்பட்டிலதே.

விரிவுரை: - முன்னத்தியாயத்தின் துவக்கத்தில் இராமன் சிவபெருமானை நோக்கி ஓ ஸ்வாமி மூர்த்தராயும் பரிச்சின்னராயும் காணப்படும் நீர் பஞ்சபூதாதி ஸகல சராசரமாய் இருக்கிறீர் என்பது எங்ஙனம் பொருந்துவது இவ்வுண்மையை எனக்குரையும் என்று பிரச்னை செய்தான், ஈண்டு “யாதொன்று” என்றதனால் அச்சங்கையே என்பதறிக. "அப்படியே உளது" என்று கூறிப் பின்னர் “உத்தரம் பெறப்பட்டிலதே” என்றும் கூறியது, பொருண் முறையில் கூறியதையே கூறுதலா கிய குற்றமேயெனின் இறைவனிடமுள்ள பக்திச் சிறப்பினாலும் தத்துவ ஞானத்திலுள்ள அதிக ஆதரவினாலும் அங்ஙனம் கூறினமையின், குற்றறம் யாது மில்லை யெனும், சாஸ்திரவரம்பறிக.

ஸ்லோகம்.

பரிச்சி2ன்ன பரீமாணே தே3ஹே ப4க3வத ஸ்தவ
உத்பத்தி: பஞ்ச பூ4தானாம் ஸ்தி2திர்வா விலய: கத2ம்? (2)

வியாக்யானம்: - **பகவத**: - பகவனான, **தவ** - உம்முடைய, **பரிச்சி2ன்ன பரீமாணே** - பரிச்சின்ன பரிமாணமுடையதாகிய, **தே3ஹே** - தேகத்தில், **ஸர்வ பூ4தானாம்** - ஸகல பூதங்களுடைய, **உத்பத்தி**: - தோற்றமும், **ஸ்திதி**: - நிலையும், **விலய: வா** - ஒடுக்கமும், **கதம்** - எப்படி.

பொழிப்புரை: - பகவனான உம்முடைய பரிச்சின்ன பரீமாணமுடையதாகிய தேகத்தில் ஸகல பூதங்களின் தோற்றநிலை ஒடுக்கங்களெப்படி

விரிவுரை:- "பரிச்சின்ன பரிமாணமுடையதாகிய" என்றதனால் ஏகதேசமாயுள்ள அதாவது சடை சந்திரகலை தரித்து வெண்ணிறம் பெற்று விளங்கும் திவ்விய சரீரத்தில் என்பது அறிக பரப்ரும்மமாகிய இறைவனிடமிருந்து சகல சராசரங்களும் உண்டாகி நின்றொடுங்குகின்னவென்று தைத்திரீய உபநிடதம், "யதோவா இமாநிபூதாநி ஜாயந்தேயேந ஜாதா நிஜீவந்தியத்ப்ரயந்த்ய பிஸம்விஸாதீதி'" எவனிடமிருந்து இப்பூதங்களுதிக்கின்றனவோ, தோன்றினவை எவனால் ஜீவிக்கின்றனவோ, எதனிடம் ஒடுங்குகின்றனவோ "'ஜந்மாத்யஸ்யத::' என்பது முதலிய சுருதி சூத்திரங்களால் போதிக்கப்படுகின்றது. பரமான்மாவே ஈண்டு திவ்விய சரீரத்தோடு எதிரில் சந்நிதிகொண்டிருப்பவன் அங்ஙனமாயின், தனக்கெதிரில் ஏகதேசத்தில் வீற்றிருக்கும் ஈசன் சரீரத்திலிருந்து சகலசராசரங்களும் தோன்றி நின்றொடுங்குவது எங்ஙனமென்ற ஆசங்கைராமபிரானுக்கு உதித்ததென்க. எதிரில் காணப்படும் சிறிய பரிமாணமுள்ள வஸ்துவிலிருந்து மிக்கவிரிந்துள்ள இச்சராசரம் தோன்றி நின்றொடுங்குகின்றனவென்பது ஒரு சிறு குடத்தினின்று பெரியமலைதோன்றி நின்றொடுங்குகின்றதென்றால் எங்ஙனம் சங்கிக்கக்கூடியதோ அங்ஙனமே ஆதலால் ஈண்டு சங்கை நிகழ்ந்தது.

ஶ்லோகம்.

ஸ்வ ஸ்வாதி^{4}கார ஸம்ப^{3}த்தா கத^{2}ம் நாம ஸ்தி^{2}தா: ஸுரா:
தே ஸர்வே த்வம் கத^{2}ம் தே^{3}வ! பு^{4}வனானி சதுர்த்த^{3}ச^{3} (3)

வியாக்யானம்: - **ஸ்வஸ்வாதி காரஸம்பத்தா** : - தத்தமதிகாரத்தோடு கூடியவர்களான, **ஸுரா:** - தேவர்கள் தேவர்கள் உமதுதேகத்தில் கதம், **நாம** - எப்படித்தான், **ஸ்திதா**: - இருக்கின்றவராவர், **தேவ** - ஒதேவா, **தேஸர்வே** - அவர்களெல்லோரும, **சதுர்த்தச** - பதினான்கு, **புவனானி** - உலகங்களும், **கதம்** - எங்ஙனம், **தவம்** - நீர் என்பது.

பொழிப்புரை: - தத்தமதிகாரத்தோடு கூடியவர்களான தேவர்கள் உமது தேகத்தினில் எங்ஙனமிருக்கின்ற ராகின்றனர். ஒ தேவா அவர்களெல்லோரும் பதினான்கு புவனங்களும் எங்ஙனம் உமது ஸ்வரூபமாகும்.

தாத்பரியம்: - ஈண்டும் பரிச்சின்ன பரிமாணமுடையதாகிய இறைவனது தேகத்தில் பற்பல வகைகளாகிய அதிகாரங்களையுடைய தேவர்களெல்லோரும் இருக்கின்றதும், அத்தேவர்கள்களும் சகல சராசரங்களும் இறைவனோடு பேதமற்றிருத்தலும் எங்ஙன மென்று ராமனாலாசங்கீக்கப்பட்ட தென்பதுணர்க

ஶ்லோகம்.

த்வத்த: ஶ்ருத்வாபி தே³வாऽத்ர ஸந்தே³ஹோ மே மஹானபூ⁴த்
அப்ரத்யாயித சித்தஸ்ய ஸம்ஶயம் ச்சே²த்து மர்ஹஸி (4)

வியாக்யானம்: - **தேவ** - ஓ தேவனே, **தவத்த:** - உம்மிடமிருந்து, **ஶ்ருத்வாபி** - ச்ரவணம் செய்தும், **அத்ர** - இதில், **மே** - எனக்கு, **மஹாந்** - பெரிய, **ஸந்தேஹ:** - சந்தேகம், **அபூத்** - உண்டாகியது, **அப்ரத்யாயிதசித்தஸ்ய** - நிச்சயம்பெறாத சித்தமுடையவனான, **மே** - எனது, **ஸம்சயம்** - சந்தேகத்தை, **சேத்தும்** - சேதிப்பதற்கு, **அர்ஹஸி** - நீர் தக்கவராகின்றீ ரன்றோ.

பொழிப்புரை: - ஓ தேவா உம்மிடம் சிரவணம் செய்தும் இவ்விஷயத்தில் எனக்கு மகத்தாகிய சந்தேகமிருக்கின்றது. நிச்சய மின்னதென் றுணராத சித்தமுடை யவனான என்னுடைய சமுசயத்தை நீரன்றோ நீக்கத்தக்கவராகின்றீர்.

தாத்பரியம்: - "உம்மிடம் சிரவணம் செய்தும்" என்றதனால் இறைவனுக்கு உபதேசத்திறமையின் குறைசங்கிக்கக்கூடியதல்ல. மற்று சங்கையின் பெருமை மாத்திரம அறியற்பாலது அங்ஙனமிராவிடில் இச்சந்தேகத்தை நீங்கச்செய்யும் திறமுடையவர் நீரே என்று விளங்கும் பிந்திய வாக்கியத்தோடு முறணுவதாகும் என்க.

ஸ்ரீபகவான் சொன்னதாவது.

ஶ்லோகம்.

வடபீ³ஜே ஸுஸுக்ஷ்மேऽபி மஹாவட தருர் யதா²
ஸர்வதா³ऽऽஸ்தேऽந்யதா² வ்ருக்ஷ: குத ஆயாதி தத்³ வத³ (5)

வியாக்யானம்: - **ஸுஸுக்ஷ்மே அபி** - மிக்கச் சூக்ஷமமாயுள்ளதாயினும், **வடபீஜே** - ஆலம் வித்தில், **ஸர்வதா** - எப்போதும், **யதா** - எப்படி, **மஹாவடதரு:** - பெரிய ஆலமரமானது, ஆஸ்தே - அடங்கியுள்ளதோ, **அந்யதா** - அல்லாவிடில், **வ்ருக்ஷ:** - மரமானது, **குத:** - எதனிடமிருந்து, **ஆயாதி** - வருகின்றது, **தத்** - அக்காரண த்தை, **வத** - சொல்வாயாக.

பொழிப்புரை: - மிக்கச் சூக்குமமாயுள்ளதாயினும் ஆலம் விதையதனில் எப்போதும் எப்படி பெரிய ஆலமரமானது உளதோ அல்லாவிடில் அம்மரம் எதனிடமிருந்து வருகின்றது, அக்காரணத்தைச் சொல்வாயாக.

ஶ்லோகம்.

தத்³வன் மம தனௌ ராம! பூ⁴தானா மாக³திர் லய:
மஹாஸைந்த⁴வ பிண்டோ³sபி ஜலே க்ஷிப்தோ விலீயதே (6)

ந த்³ருஶ்யதே புன: பாகாத் தத ஆயாதி பூர்வவத்
ப்ராத: ப்ராதர் யதா²ssலோகோ ஜாயதே ஸுர்ய மண்ட³லாத் (7)

ஏவம் மத்தோ ஜக³த்³ ஸர்வம் ஜாயதேsஸ்தி விலீயதே
மய்யேவ ஸகலம் ராம! தத்³வஜ் ஜானீஹி ஸுவ்ரத (8)

வியாக்யானம்: - **ரரம** - ஓராமா, **தத்வத** - அதுபோல, **மம** - எனது, **தனௌ** - தேகத்தில், **பூதானாம்** - பூதங்களின், **ஆகதி**: - தோற்றமும், **லய:** - ஒடுக்கமும், என்க, **மஹாஸைந்த⁴வ பிண்டோ³sபி** - பெரிய உப்புத்திரளாயினும், **ஜலே** - ஜலத்தில், **க்ஷிப்த:** - போடப்பட்டதாய்க்கொண்டு, **விலீயதே** - ஒடுங்குகின்றது, **நத்ருச்யதே** - காணப்படுகின்றதில்லையோ, **புந:** - மீண்டும், **பாகாத்** - பாகம்செய்தலால் (காய்ச்சுதலால்) **பூர்வவத்** - முன்போல, **தத:** - அந்நீரினின்றும், **ஆயாதி** - தோன்றி வருகின்றது, **ப்ராத: ப்ராத:** - காலைதோறும் - காலை தோறும், **யதா** - எப்படி, **ஆலோக**: - கிரணமானது, **ஸுர்யமண்டலாத்** - சூர்யமண்டலத்தினின்றும், **ஜாயதே** - தோன்றுகின்றதோ, **ஏவம்** - இதுபோல, **மத்த:** - என்னிடத்தினின்றும், **ஸர்வம் ஜகத்** - சகல ஜகமும், **ஜாயதே** - உண்டாகின்றது, **அஸ்தி** - நிலைபெறுகின்றது **விலீயதே** - லயமடைகின்றது, **ஸுவ்ரத** - நல்லொழுக்கமுடையவனே, **ராம** - ஓ ராமனே, **தத்வத** - அவ்வாறு, **மயிஏவ** - என்னிடத்திலேயே, **ஸகலம** எல்லாவற்றையும், **ஜாநீஹி** - அறிவாயாக.

பொழிப்புரை: - ஓ ராமனே அதுபோலவே எனது தேகத்தில் பூதங்களின் தோற்றலயங்கள். பெரிய உப்புத்திரளாயினும் நீரில் போடப்பட்டதாய்க்கொண்டு ஒடுங்குகின்றது. காணப்படுகின்றதில்லை மீண்டும் காய்ச்சுதலால், முன்போல் அந்நீரினின்று முண்டாகின்றது. தினந்தோறும் காலையில் எப்படி கிரணமானது சூரிய மண்டலத்தினின்று முண்டாகின்றதோ இங்ஙனமே என்னிடத்தினின்றும் சகல ஜகமும் தோன்றுகின்றது நிற்கின்றது ஒடுங்குகின்றது நல்லொழுக்கமுடையனாகிய ஓ ராமனே அவ்வாறு என்னிடத்திலேயே சகலமுமென்றறிக.

ஸ்ரீராமர் சொன்னதாவது.

ஶ்லோகம்.

கதி²தேsபி மஹாபா⁴க³! தி³க்³ ஜட³ஸ்ய யதா² தி³ஶி
நிவர்த்தே தமோ நைவ தத்³வன் மம கரோமி கிம்? (9)

வியாக்யானம்: - **மஹாபாக** - ஓ மஹாமஹிமையுடையோனே, **கதிதே அபி** - சொன் னாலும் கூட, **திக்ஜடஸ்ய** - திசைப்பிரமமுடையவனுக்கு, **திசி** - திசையில், (உள்ள) **ப்ரம:** - மயக்கமானது, **யதா** - எப்படி, **நநிவர்த்ததே ஏவ** - நீங்குகின்ற தில்லையோ, **தத்வத்** - அது போலவே, **மம** - எனக்குமுளது, **கிம், கரோமி** - (யான்) யாது செய்வேன்.

பொழிப்புரை: - மஹாமஹிமையுடையோனே சொன்னாலும்கூட திசைப்பிரம முடையவனுக்குத் திசையிலுள்ள மயக்கம் எப்படி நீங்குகின்றதில்லையோ அது போலவே எனக்குமுளது யான் யாது செய்வேன்.

ஸ்ரீபகவான் சொன்னதாவது

ய்லோகம்.

மயி ஸர்வம் யதா^{2} ராம! ஜக^{3}தே^{3}தச் சராசரம்
வர்த்ததே தத்^{3} த^{3}ர்ஶயாமி ந த்ரஷ்டும் க்ஷமதே ப^{4}வான் (10)

தி^{3}வ்யம் சக்ஷு: ப்ரதா^{3}ஸ்யாமி துப்^{4}யம் த^{3}ஶரதா^{2}த்மஜ!
தேன பஶ்ய ப^{4}யம் த்யக்த்வா மத்தேஜோ மண்ட^{3}லம் த்^{4}ருவம் (11)

வியாக்யானம்: - **ராம** - ஓ ராமனே, **ஏதத்** - இந்த, **சராசரம்** - சராசரமாகிய, **ஜகத்** - ஜகம், **ஸர்வம்** - எல்லாம், **மயி** - என்னிடத்தில், **யதா** - எப்படி, **வர்த்ததே** - இருக்கின்றதோ, **தத்** - அதனை, **தர்சயாமி** - காண்பிக்கின்றேன், **ப^{4}வான்** - நீ, **த்ரஷ்டும்** - பார்க்க, **ந க்ஷமதே** - சக்தியுடையவனாயிருக்க வில்லை, **த3ஶரதா^{2}த்மஜ -** ஓ தசரதன் தனயனே, **துப்^{4}யம்** - உனக்கு, **திவ்யம் சக்ஷு**: - திவ்வியமான நேத்திரத்தை, **ப்ரதா^{3}ஸ்யாமி** - கொடுக்கின்றேன், **தேன** - அதனால், **ப^{4}யம் த்யக்தவா** - பீதியை விடுத்து, **த்^{4}ருவம்** - நிச்சயமாயுள்ள, **மத்தேஜோ மண்டலம்** - எனது சோதிமண்டலத்தை, **பச்ய** - பார்ப்பாயாக,

பொழிப்புரை: - ஓ ராமா இச்சராசரமாகிய ஜகமெல்லாம் என்னிடம் எப்படி உள்ளதோ அதனைக் காண்பிக்கின்றேன் நீ பார்க்கச் சக்தியுடையவ னல்லனா கின்றாய் ஓ தசரதன் தநயனே உனக்குத் திவ்விய நேத்திரத்தைத் தருகின்றேன். அதனால் பயத்தை விடுத்து நிச்சயமாயுள்ள எனது தேஜோ மண்டலத்தைப் பார்ப்பா யாக.

சூதர் சொன்னதாவது.

ய்லோகம்.

ந சர்ம சக்ஷுஷா த்^{3}ரஷ்டும் ஶக்யதே மாமகம் மஹ:
நரேணபி ஸுரேணாபி தன் மமானுக்^{3}ரஹம் வினா (12)

வியாக்யானம்: - **மாமகம்** - என்னுடையதாகிய, **தத்** - அந்த, **மஹ:** தேஜலானது, **மம** - எனது, **அனுக்ரஹம் வினா** - பிரஸாதமின்றி, **நரேணவா** மனிதனாலாவது, **ஸுரேண அபி** - தேவனாலாவதும், **சர்மசக்ஷுஷா** - இம்மானிட தேகக்கண்ணால், **த்ரஷ்டும்** - பார்க்க, **ந சக்யதே** - கூடியதாகின்றதில்லை.

பொழிப்புரை: - எனது அச்சோதியானது எனது அநுக்கிரஹமின்றி மனிதனாலாவது தேவனாலாவது மானிட தேகத்திலமைந்த கண்ணினால் பார்க்கக் கூடியதாகின்றதில்லை.

ய்லோகம்.

இத்யுக்த்வா ப்ரத^{3}தெள^{3} தஸ்மை தி^{3}வ்யம் சக்ஷுர் மஹேஶ்வர:
அதா^{2}ssத^{3}ர்ஶயதே^{3} தஸ்மை வக்தரம் பாதாள ஸன்னிப^{4}ம் (13)

வித்^{3}யுத்கோடி ப்ரப^{4}ம் தீ^{3}ப்த மதிபீ^{4}மம் ப^{4}யாவஹம்
தத்^{3} த^{3}ருஷ்ட்வைவ ப^{4}யாத்^{3} ராமோ ஜானுப்^{4}யா மவனீம் க^{3}த: (14)

வியாக்யானம்: - **இதி உக்த்வா** - இவ்வாறு சொல்லி, **மஹேஶ்வர:** - மஹேச்வரன், **தஸ்மை** - அந்தராமனுக்கு, **திவ்யம்** - திவ்யமாகிய, **சக்ஷு:** - கண்ணை, **ப்ரத^{3}தெள** - கொடுத்தார், **அத** - பின்னர், **வித்^{3}யுத்கோடி ப்ரதீகாசம்** - மின்னல் கொடி போல் விளங்குவதும், **அதிபீமம்** - மிக்க பயங்கரமாயுள்ளதும், **பாதாள ஸ்ன்னிப^{4}ம்** - பாதாலம் போற் காணப்படுகின்றதுமான, **வக்த்ரம்** - வாயை, **தஸ்மை** - அந்தராமன் பொருட்டு, **அதர்சயத்** - காண்பித்தனர், **பயாவறம்** - பயத்தை யுண்டாக்குவதாகிய, **தத்** - அவ்வாயை, **த்ருஷ்ட்வா ஏவ** - பார்த்ததும், **ராம:** - இராமன், **ப^{4}யாத்^{3}** - பயத்தினால், **ஜானுப்^{4}யாம்** - முழங்கால்களால், **அவனீம்** - பூமியை, **கத:** - அடைந்தனன்.

பொழிப்புரை: - இங்ஙனம் சொல்லி மஹேச்வரன்; அந்த ராமனுக்கு திவ்ய நேத்திரந்தந்தார். பின்னர் மின்னல் கொடிபோல் ஜ்வலிக்கின்றதும் மிக்கப் பயங்கரமாயுள்ளதும் பாதாளம் போற் காணப்படுகின்றதுமான வாயை அந்த ராமனுக்குக் காண்பித்தனர். அவ்வாயைப்பார்த்ததும் ராமன் பயத்தினால் முழங்கால்களால் பூமியில் விழுந்தனன்.

தாத்பரியம்: - ஈண்டு, முழங்கால்களால் என்றது முழங்கால் படிய என்று கொள்க.

ய்லோகம்.

ப்ரணம்ய த^{3}ண்ட^{3}வத்^{3} பூ^{4}மெள துஷ்டாவ ச புன:புன:
அதோ^{2}த்தா^{2}ய மஹாவீரோ யாவதே^{3}வ ப்ரபஶ்யதி (15)

வக்த்ரம் புரபி4த3 ஸ்தத்ர அந்தர் ப்3ரம்ஹாண்ட3 கோடய:
சடகா இவ லக்ஷ்யந்தே ஜ்வலஜ் ஜ்வாலா ஸமாகுலா: (16)

வியாக்யானம்: - **பூமௌ** - பூமியில், **தண்டவத்** - தடிபோல், **ப்ரணம்ய** - நன்குவணங்கி நமஸ்கரித்து, **புந:** - மீண்டும் மீண்டும், **துஷ்டாவச** - தோத்திரமும் செய்தான், **அத** - பின்னர், **மஹாவீர:** - மஹா வீரனாகிய ராமன், **உத்தாய** - எழுந்து, **புரபித்:** - புரத்தை பேதித்தவனாகிய இறைவனுடைய, **வக்த்ரம்** - வாயை, **யாவத் ஏவ** - எவ்வளவில், **ப்ரபச்யதி** - பார்க்கின்றானோ அவ்வளவில், **அந்தர்** - வாய்க்குள், **ஜ்வாலா மாலாஸ மாகுலா:** - ஜ்வாலாமாலைகளால் வியாபிக்கப் பட்டனவாகிய, **ப்ரம்மாண்ட கோடய:** - பிரம்மாண்டகோடி.கள், **சடகா: இவ** - ஊர்க்குருவி களைப்போல, **லக்ஷ்யந்தே** - காணப்படுகின்றனவாயிருந்தன,

பொழிப்புரை: - பூமியில் தண்டம் போல விழுந்து நமஸ்கரித்து மீண்டும் மீண்டும் தோத்திரம் செய்தான் பின்னர் மஹாவீரனாகிய ராமன் எழுந்து திரிபுரமெரித்த விறைவனது வாயைப் பார்க்கவே வாய்க்குள் சுவாலைமாலைகளால் வியாபிக்கப்பட்டுப் பிரமாண்ட கோடிகள் ஊர்க்குருவிகளைப் போலக் காணப்பட்டன.

ஶ்லோகம்

மேரு மந்த3ர விந்த்4யாத்3யா கி3ரய: ஸப்த ஸாக3ரா:
த்3ருஶ்யந்தே சந்த்3ர ஸூர்யாத்3யா: பஞ்ச பூ4தானி தே ஸுரா: (17)

அரண்யானி மஹாநாகா: பு4வனானி சதுர்த3ச4
ப்ரதி ப்3ரஹமாண்ட3 மேவம் து த்3ருஷ்ட்வா த3ஶரதா2த்மஜ: (18)

ஸுராஸுராணாம் ஸங்க3ராமான் தத்ர பூர்வாsபரானபி
விஷ்ணோர் த3ஶாவதாராம்ஶ்ச தத் கர்தவ்யானி ச த்3விஜா: (19)

பராப4வாம்ஶ்ச தே3வானாம் புரதா3sஹம் மஹேஶிது:
உத்பத்3யமானாsனுத்பன்னான் ஸர்வானபி விநஶ்யத: (20)

த்3ருஷ்ட்வா ராமோ ப4யாவிஷ்ட: ப்ரணனாம முஹுர் முஹு:
உத்பன்ன தத்வ ஞானோபி ப3பூ4வ ரகு4நந்த3ன: (21)

வியாக்யானம்: - **மேருமந்தரவிந்த்பாத்யா:** - மேரு மந்தரம் விந்தியம் முதலிய வைகளாகிய, **கி3ரய:** - மலைகளும், **ஸப்த ஸாக3ரா:** - எழு ஸமுத்திரங்களும், **சந்த்3ர ஸூர்யாத்3யா: -** சந்திரஸூர்யர் முதலியர்களும், **பஞ்ச பூ4தானி** - பஞ்சபூதங்களும், **தேஸுரா:** - அத்தேவர்களும், **அரண்யானி** -

வனங்களும், **மஹாநாகா:** - மஹா நாகர்களும், **சதுர்த்தச** - பதினான்கு, **பு4வனானி** - புவனங்களும், **த்3ருஸ்யந்தே** - காணப்பட்டன, **த3ஶரதா2த்மஜ:** - தசரசன் தநயன், **ஏவம் து** - இவ்வாறே, **ப்ரதி ப்3ரம்ஹாண்ட3ம்** - ப்ரூம்மாண்டம்தோரும், **த்ருஷ்ட்வா** - பார்த்து, **பூர்வாபரான் அபி** - நடந்ததும் இனி நடப்பதுமாகிய, **விஷ்ணோ:** - விஷ்ணுவின், **தஶஅவதாராந்ச** - பத்து அவதாரங்களையும், **தத்கர்த்தவ்யாநி அபி** - அவதார கார்யங்களையும், **ஸுராஸுராணாம்** - தேவாஸுரர்களுடைய, **ஸங்க்ராமாந் -** யுத்தங்களையும், **தேவாநாம்** - தேவர்களுடைய, **பராபவாந்ச** - தோல்விகளையும், **மஹேசிது:** - மஹேச்வரனுடைய, **புரதாஹம்** - புரதகனத்தையும், **உத்பத்யமானான** - உண்டாகின்றவர்களும், **உத்பன்னான்** - உண்டானவர்களும், **விநச்யத:** - நசிக்கின்றவர்களுமாகிய, **ஸர்வாந் அபி** எல்லோர்களையும், **த்ருஷ்ட்வா** - பார்த்து, **ராம:** - ராமன், **பயாவிஷ்ட:** - பயங்கொண்டவனாய், **முஹு: முஹு:** - அடிக்கடி, **ப்ரணநாம** - நமஸ்கரித்தான், **ரகு4நந்தன:** - ரகுநந்தனனாகிய ராமன், **உத்பன்ன தத்வ ஞானோபி** - உதித்ததத்வஞா நமுடையவனும், **ப3பூ4வ** - ஆனான்.

பொழிப்புரை: - மேரு மந்தரம் விந்தியம் முதலிய மலைகளும் ஏழு சமுத்திரங்களும் சந்திரசூர்யாதிகளும் பஞ்சபூதங்களும் அத்தேவர்களும் வனங்களும் மஹா நாகர்களும் பதினான்கு புவனங்களும் காணப்பட்டன, ராமன் இவ்வாறே ப்ரம்ஹாண்டம்தோரும் கண்டு நடந்ததும் நடப்பதுமாகிய விஷ்ணுவினுடைய பத்து அவதாரங்களையும் அந்த அவதார கிருத்தியங்களையும் தேவாசுரர்களுடைய யுத்தங்களையும் தேவர்களுடைய தோல்விகளையும் மஹேச்வரனுடைய புரதகனத் தையும் உண்டாகின்றவர்களும் உண்டானவர்களும் நசிக்கின்றவர்களுமாகிய எல்லோர்களையும் பார்த்து ராமன் பயங்கொண்டவனாய் அடிக்கடி நமஸ்கரித்தான் பின்னர் ராமன் தத்துவஞானமும் உதிக்கப் பெற்றான்.

விரிவுரை: - இங்ஙனம் பரமேச்வரனிடம் சடசேதனங்களாகிய பரசபசுக்கள் எங்ஙனம் அடங்கியுள்ளன என்னும் விஷயத்தில் உள்ள அஸம்பாவனையால் தத்துவஞானம் பிரதிபந்திக்கப்பட்டிருந்தது. அங்ஙனமாகிய பிரதிபந்தமானது திவ்ய நேத்திரத்தால் பகவானுடைய தேகத்தில் சகல சராசரங்களையும் நேரில் கண்டு தெளிந்தமையால் ராமனுக்கு நீங்கவே தத்துவஞான முதித்தவனானான் என்றதறிக.

ஸ்ரீராமன் சொன்னதாவது.

ஶ்லோகம்

அதோ2பநிஷதா3ம் ஸாரை ரர்த்தை2 ஸ்துஷ்டாவ ஶங்கரம்
தே3வ! ப்ரபன்னார்த்திஹர! ப்ரஸீத3
ப்ரஸீத3 விஶ்வேஶ்வர! விஶ்வ வந்த்3ய!
ப்ரஸீத3 க3ங்கா3த4ர! சந்த்3ரமௌளே!
மாம் த்ராஹி ஸம்ஸார ப4யாத3நாத2ம் **(22)**

வியாக்யானம்: - **அத** - பின்னர், **உபநிஷதாம்** - உயநிஷதங்களுடைய, **ஸாரை:** - ஸாரங்களாயுள்ள, **அர்த்தை:** - விஷயங்களால் (துதிகளால்) **ஶங்கரம்** - சங்கரனை, **துஷ்டாவ** - தோத்திரம் செய்தான், **ராம:** - ராமன், **உவாச** - சொன்னதாவது, **தேவ** - ஓ தேவனே, **ப்ரபந்நார்த்திஹா** - சரணமடைந்தவரது பீடையை நீங்கச் செய்வோனே, **ப்ரஸீத** - அருள்செய்யும், **விஶ்வேஶ்வர** - சகலங்களுக்கு மீசனே, **விஶ்வ வந்த்³ய** - ஸகலர்களாலும் நமஸ்சரிக்கப்படு வோனே, **ப்ரஸீத** - அருள்செய்யும், **கங்காதர** - கங்கைதரிக்கின்றவனே, **சந்த்³ரமௌளே** - சந்திரகலை தரித்த சிரமுடையவனே, **ப்ரஸீத** - அருள்செய்யும், **அநாதம்** - ஏனைய நாதனில்லாதவனான, **மாம்** - என்னை, **ஸம்ஸாரபயாத்** - பவபயத்தினின்றும், **த்ராஹி** - ரக்ஷியும்.

பொழிப்புரை: - பிறகு உபநிடதஸாரங்களாகிய துதிகளால் சங்கரனை தோத்திரம் செய்தான். ராமன் சொன்னதாவது ஓ தேவா சரணமடைந்தவரது பீடையை நீக்குமிறைவா அருள் செய்யும் விச்வேச்வரா விச்வஸேவ்ய அருள் செய்யும் கங்காதரா சந்த்ர கலாதரா அருள் செய்யும் அனாதனான என்னை பவபயத்தினின்றும் ரக்ஷியும்,

ஶ்லோகம்.

த்வத்தோ ஹி ஜாதம் ஜக³தே³ததீஶ!
த்வய்யேவ பூ⁴தானி வஸந்தி நித்யம்
த்வய்யேவ ஶம்போ⁴! விலயம் ப்ரயாந்தி
பூ⁴மௌ யதா² வ்ருக்ஷ லதாத³யோऽபி **(23)**

வியாக்யானம்: - **ஈச** - ஓ ஈசா, **ஏதத்** - இந்த, **ஜகத்** - ஜகமானது, **த்வத்த:ஹி** - உம்மிடமிருந்தே, **ஜாதம்** - உண்டாகியது, **பூ⁴தானி** - பூதங்கள் உண்டான சராசரங்கள், **த்வயி ஏவ** - உம்மிடத்திலேயே, **நித்யம்** - எப்போதும், வஸந்தி - வஸிக்கின்றன, ஸ்திதி பெறுகின்றன, **ஶம்போ⁴** - சுகம் தருவோனே, **வ்ருக்ஷலதா தய:** - மரமகொடிமுதலியன, **யதா** - எப்படி, **பூமௌ** - பூமியிலோ அப்படியே, **த்வயிஏவ** - உம்மிடத்திலேயே, **விலயம்** - ஒடுகத்தை, **ப்ரயாந்தி** - அடைகின்றன.

பொழிப்புரை: - ஓ ஈசா இந்த ஜகமானது உம்மிடமிருந்தே தோன்றியது. உண்டான சராசரங்கள் எப்போதும் உம்மிடத்திலேயே ஸ்திதி பெறுகின்றன. ஓ சம்போ பூமியில் மரம் கொடிமுதலியன எப்படியோ அப்படியே உம்மிடத்திலேயே ஒடுக்கம் அடைக்கின்றன.

பிரமாணம்: -

யதோவா இமாநிபூதாநி ஜாயந்தேயேந
ஜாதாநிஜீவந்தியத் ப்ரயந்த்யபிஸம்விசந்தீதி

எதனிடமிருந்தே இப்பூதங்கள் தோன்றுகின்றனவோ தோன்றின எதனாலேயே ஜீவிக்கின்றனவோ எதனை யடைந்து ஒடுங்குகின்றனவோ. என்பதாதி யஜுச்சிகாதி வாக்கியங்களின் பொருளைக் காண்க.

ஶ்லோகம்

ப்³ரஹ்மேந்த்³ர ருத்³ராஶ்ச மருத்³ க³ணாஶ்ச
க³ந்த⁴ர்வ யக்ஷாஸுர ஸித்³த⁴ ஸங்கா⁴:
க³ங்கா³தி³ நத்³யோ வருணாலயாஶ்ச
வஸந்தி ஶூலின்! தவ வக்த்ர மந்திகே (24)

வியாக்யானம்: - ஶூலின் - ஓ சூலமேந்தியவனே, **ப்ரம்ஹேந்தர ருத்ரா: ச** - ப்ரும்மேந்திரருத்திரர்களும், **மருத்³ க³ணாஶ்ச** - தேவர் கூட்டங்களும். **கந்தர் வயக்ஷாஸுரவித்தஸங்கர:** - கந்தருவயக்ஷாசுர சித்தர் கூட்டங்களும், **கங்காதி நத்ய:** - கங்கை முதலிய நதிகளும், **வருணாலயா: ச** - சமுத்திரங்களும், **தவ** - உமது, **வக்த்ரம் அந்தி** - ஸமீபத்தில், **வஸந்தி** - வஸிகின்றன.

பொழிப்புரை: - ஓ சூலமேந்திய இறைவனே ப்ரும்மா இந்திரன் ருத்திரன் தேவர்கூட்டங்கள் கந்தருவர் யக்ஷர் அசுரர் சித்தர் இவர்கள் கூட்டங்களும் கங்காதி நதிகளும் ஸமுத்திரங்களும் உமது வாய்க்கருகில் வஸிக்கின்றன.

தாத்பரியம்: - இங்கு வாய்க்கருகில் வசிக்கின்றன என்றதனால் ப்ரளயகாலத்தில் சகல சராசரங்களையும் தன்னிடம் ஒடுங்கச் செய்து அடக்கிக் கொள்வோர் இவ்விறைவன் என்பது விளங்குகின்றது இதனை,.

பிரமாணம்: - கடவல்லியுப நிடதம்.

யஸ்யப்ரஹ்ம சக்ஷத்ரம்ச உபேயவத ஒதந
தஸ்மைமஹாக்ரா ஸாய வைநம்

ஜகத்ப்ரதிஷ்டா தேவர்ஷே ப்ருதிவ்யப் ஸுப்ரலீயதே
தேஜஸ்யாப: ப்ரலீயந்தே தேஜோவா யௌப்ரலீயதே
வாயு: ப்ரலீயதேவ்யோம்நி ததவ்யக்தே ப்ரலீயதே
அவ்யக்தம் புருஷேப்ரஹ்மந் நிஷ்களே ஸம்ப்ரலீயதே
புருஷாந்நபரம் கிஞ்சித் ஸாகாஷ்டா ஸாபராகதி:

எவனுக்கு ப்ரம்ஹ க்ஷத்ரமாகிய சகல ப்ரபஞ்சமும் அந்நமோ பெருங்க வளத்தனாகிய அவ்விறைவனுக்கு நமஸ்காரம் ஒதேவ ருஷியே உலகத்துக்கா தாரமாகிய பிருதிவி ஜலத்தில் லயிக்கின்றது தேஜஸில் ஜலம் லயிக்கின்றது, கேஜஸ் வாயுவில் லயிக்கின்றது. வாயு ஆகாயத்தில் ஒடுங்குகின்றது அவ்வாகாயம் அவ்யக்தத்தில் ஒடுங்குகின்றது ஓ அந்தணரே அவ்யக்தம் நிஷ்களனாகிய

புருஷனிடம் ஒடுங்குகின்றது. புருஷனிலும் பரம் யாதுமில்லை அவனே எல்லை, அவனே பரகதியாம். என்பதாதி யுபநிடத புராண மொழிகளாலு முணர்க.

ஶ்லோகம்.

தவன்மாயயா கல்பித மிந்து[3] மௌளே!
த்வய்யேவ த்[3]ருஶ்யத்வ முபைதி விஶ்வம்
ப்[4]ராந்த்யா ஜன: பஶ்யதி விஶ்வமேத
ச்சுº[2]க்தௌ யதா[2]ரூப்ய மஹிம் ச ரஜ்ஜௌ (25)

வியாக்யானம்: - **இந்து[3] மௌளே** - ஓ சந்த்ரகலாதரா, **விஶ்வம்** - ஜகமெலாம், **த்வந்மாயயா** - உமது மாயையால், **கல்பிதம்** - கற்பிக்கப்பட்டதாய்க் கொண்டு, **த்வயி ஏவ** - உம்மிடத்திலேயே, **த்[3]ருஶ்யத்வம்** - காணப்படுந்தன்மையை, **உபைதி** - அடைகின்றது, **ஜந** - ஜனமானது, **யதா** - எப்படி, **சுக்தேள** - இப்பியில், **ரூப்யம்** - வெள்ளியை, **ரஜ்ஜௌ** - கயிற்றில், **அஹிம்ச** - ஸர்ப்பத்தையுமோ, அப்படியே, **எதத் விஶ்வம்** - இஃதெல்லாவற்றையும், **ப்ராந்தியா** - ப்ராந்தியால், **பச்யதி** - பார்க்கின்றது.

பொழிப்புரை: - ஓ சந்த்ர கலாதரா ஜகமெல்லாம் உமது மாயையாற் கற்பிக்கப்பட்டதாய்க்கொண்டு உம்மிடத்திலேயே காணப்படுந்தன்மையை யடை கின்றது. ஜனமானது இப்பியில் வெள்ளியையும் கயிற்றில் அரவத்தையும் போல இதனையெல்லாம் ப்ராந்தியால் பார்க்கின்றது.

தாத்பரியம்: - இங்கு உமது மாயையால் என்றதனால் உமக்கு வசப்பட்டிருக்கும் மாயையால் என்பதும் உம்மிடத்திலேயே என்றதனால் ஸர்வாதாரன் பரம்பொருளாகிய இவ்விறைவனேயென்பதும் சிவம் தோன்றாது உலகமே தோன்றுதற்குக்காரணம் சாம்பவியாகிய மாயையே என்பதும் காண வேண்டியதாகிய இப்பியையும் கயிற்றையும் விடுத்து அவைகளில் வெள்ளியையும் அரவத்தையும் காண்பதற்குப் போலக் காணவேண்டிய சிவத்தை விடுத்து உலகத்தை க்காண்பதற்குக்காரணம் ப்ராந்தியே யென்பதும் அறிக. சிவனை யறிந்தோர்க்கு ப்ரந்தி ஏதுவாகிய ஆணவம் நீங்கினமையால் உலகம் காணப்படாமல் சிவமே தோன்று மென்க இதனை. பரஞானத்தால் பரத்தைத் தரிசிததால் பரமே பார்த்திருப் பர்பதார்த் தங்கள் பாரார் என்பதாதி முன்னோர் மொழியாலுமுணர்க.

ஶ்லோகம்

தேஜோபி[4] ராபூர்ய ஜக[3]த் ஸமஸ்தம்
ப்ரகாஶமான: குருஷே ப்ரகாஶம்
வினா ப்ரகாஶம் தவ தே[3]வதே[3]வ!
ந த்[3]ருஶ்யதே விஶ்வமித[3]ம் க்ஷணேன (26)

வியாக்யானம்: - **தேவ தேவ** - ஓ தேவ தேவனே, **ஸமக்ரம்** - எல்லா, **ஜகத்** - ஜகத்தையும், **தேஜோபி** -தேஜஸ்களால், **ஆபூர்ய** - வியாபித்து, **ப்ரகாசமாந -** விளங்குகின்றவனாய்க்கொண்டு, ப்ரகாசம் விளக்கத்தை, **குருஷே** - செய்கின்றீர், **தவ** - உமது, **ப்ரகாஶம் வினா** - பிரகாசமின்றி, **இதம் விச்வம்** - இந்தப் பிரபஞ்சமானது, க்ஷணேன - கணப்போதும், **ந த்³ருஶ்யதே** - காணப்படுகின் றதில்லை.

பொழிப்புரை: - ஓ தேவதேவா ஸகல ஜகத்தையும் தேஜஸ்களால் வியாபித்து விளங்குகின்றவராய்க்கொண்டு விளக்கத்தைச் செய்கின்றீர். உமது ப்ரகாசமின்றி இப்பிரபஞ்சமானது ஓர் கணப் போதும் காணப்படுகின்றதில்லை.

தாத்பரியம்: - "திவ்" என்னும் ப்ரகாசமாததமுடையதாது வினின்றும் பிறந்ததாதலின் தேவஎனும் சொல் 'தேவதேவா' என்றதனால் விளங்கும் பொருள் களுக்குவிளக்கம் தருவோன் என்பது கூறியதாயிற்று அஃதெங்ஙனமெனின் இச்சுலோகத்தினால் அதனை விளக்குகின்றார். "ஸகலப்ரபஞ்சத்தையும் தேஜஸ்திகளால் வியாபித்து ப்ரகாசிக்கின்றவராய்க் கொண்டு ப்ரகாசத்தை செய்கின்றீர்' இங்குள்ள ப்ரகாச எனும் சொல்லுக்கு வெளிச்சம் என்பது பொருளல்ல ஏனெனின் (அஶப்தமஸ்பர்ஶமரூபம்) சப்தமல்லாததுஸ்பரிசமல்லாதது ரூபமல்லாத **கடவல்லியுபநிடதம்** (நஸந்தருஶேதிஷ்டதி ரூபமஸ்ய நசக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம்). இவனது உருவம் நேத்திரத்திற்கு விஷயமாய் இருக்கின்றதில்லை இவனை ஒருவனும் நேத்திரத்தால் பார்க்கின்றதில்லை யஜுர் வேதம் நாராயணீய ஜஞகீ முதலிய ப்ரமாணங்கள் வெளிச்சமல்லாதது என்று வெளிச்சத்தை நிஷேதிக் கின்றமையாலென்க. ஆதலின் இங்கு சைதன்னியமெனும் சொல்லுக்கு போ தப்ரகாசம் என்பது பொருள். இனி விளங்குகின்றவராய்கொண்டு விளக்கத்தைச் செய்கின்றீர் என்பது புனருக்தி கூறியதைக் கூறுதல் எனும் குற்றமன்றோ வெனின். அல்லமுதலிலுள்ள ப்ரகாசச்சொலலுக்குஸ்வயம்பிரகாசர் என்றும் பிரகாசததைச் செய்கின்றீர் என்பதற்கு பிரபஞ்சத்தை பிரகாசமுடையதாகச் செய்கின்றீர் என்றும் பொருள் கொள்க "இதனால் சிவன் ஸ்வயம் பிரகாசராயிருந்து கொண்டு பிரபஞ்சத்தையும் பிரகாசத்தோடு கூடியதாகும்படி செய்கின்றார் என்பது கூறப்பட்டது. இதுவே வெதிரேகமுகத்தாலும் "உமது ப்ரகாசமின்றி என்பதாதி பிற்பாதியால் நிரூபிக்கப்பட்டது. இச்சுலோகத்தால்.

பிரமாணம்: - **கடவல்லியுபநிடதம்.**

நததா ஸூர்யோ பாதிந்சந்த்ர தாரகம்
நேமாவிதயு தோபாநதி குதோயமக்நி
தமேவபாந்த மநுபாதிஸர்வம் தஸ்ய
பாஸாஸாவ மிதம் விபாதி:

சூதஸம்ஹிதை.

ஆதித்யசந்த்ரா நலதாரகாதயாநபாந்தி யஸமிந்நநிஶம்மஹாந்தம்

ப்ரகாஶமாநம் தமநுப்ரபாந்தி ப்ரபாஸமஸ்யைவஹிநேதரேஷாம்

தாத்பரியம்:- "அங்குச் சூரியன் விளங்குகின்றதில்லை. சந்திர நக்ஷத்திரமு மல்ல. இம்மின்னல்களும் விளங்குகின்றதில்லை. இவ்வக்கினி யெங்ஙனம் விளங்குவது. விளங்குகின்றவனாகிய அவனையே அநுஸரித்து விளங்குகனறன. அவனுடைய விளக்கத்தாலேயே இதெல்லாம் விளங்குகன்றது.

"சூரியசந்திராக்கினி நக்ஷத்திரங்கள் முதலியன எவனிடம் விளங்குகின்றன வில்லையோ எப்போதும் விளங்கிக்கொண்டிருக்கும் அந்த மஹானை யநுஸரித்தே விளங்குகின்றன. இவனுக்கே விளக்கம். ஏனையோாக்கில்லை என்பதாதி பிரமாண வாக்கியங்களின் பொருளே விளக்கப்பட்டது காண்க.

ஶ்லோகம்.

அல்பாஶ்ரயோ நைவ ப்[3]ருஹந்த மர்த்த[2]ம்
த[4]த்தேऽணுரேகோ ந ஹி விந்த்[4]ய ஶைலம்
த்வத்[3] வக்த்ர மாத்ரே ஜக[3]தே[3]த த[3]ஸ்தி
த்வன் மாயயைவேதி ச நிஶ்சினோமி **(27)**

வியாக்யானம்: - **அல்பாச்ரய** - சிறிய இடமானது, **ப்ருஹந்தம்** - பெரிய, **அர்த்தம்** - பொருளை, **நதத்தே ஏவ** - தரிக்கின்றதே இல்லை, **ஏக:** - ஒரு, **அணு:** - அணுவானது, **விந்த்யசைலம்** - விந்தியகிரியை, **நஹி** - தரிப்பதில்லையன்றோ, **தத்** - ஆதலின், **ஏதத** - இந்த, **ஜகத்** - ஜகமானது, **த்வந்மாய்யா ஏவ** - உமது மாயையாலேயே, **வக்த்ர மாத்ரே** - முகத்திலேயே, **அஸ்தி** - இருக்கின்றது, **இதி நிஶ்சிநோமி** - நிச்சயிக்கின்றேன்.

பொழிப்புரை: - சிறிய இடமானது பெரிய பொருளைத்தரிக்கின்றதில்லை. ஒரு அணு விந்தியகிரியைத் தூக்காதன்றே இந்த ஜகமானது உமது முகத்திலேயே இருக்கின்றதைக்கவனித்தால் உமது மாயையே இங்ஙனமென்று நிச்சயிக்கின்றேன்.

ஶ்லோகம்.

ரஜ்ஜௌ பு[4]ஜங்கோ[3] ப[4]யதோ[3] யதை[2]வ
ந ஜாயதே நாஸ்தி ந சைதி நாஶம்
த்வன் மாயயா கேவல மாத்ம ரூபம்
ததை[2]வ விஶ்வம் த்வயி நீலகண்ட[2]: **(28)**

வியாக்யானம்: - **ரஜ்ஜௌ** - கயிற்றில், **யதா** - எப்படி, **புஜங்க:** - பாம்பானது, **பயத: ஏவ** - பயத்தைக்கொடுக்கின்றதோ, **ந ஜாயதே** - உண்டாகின்றதில்லையோ,

நாஸ்தி - இருக்கின்றதில்லையோ, நாமும் - நாசத்தை, **ந ஏதிச** - அடைகின்றது மில்லையோ, **நீலகண்ட** - ஒ நீலகண்டரே, ததைவ - அப்படியே, **த்வயி** - உம்மிடத்தில், **விச்வம்** - ஸகலமும் கேவலம், **த்வந்மாயயா** - உமது மாயையா லேயே, **ஆத்தரூபம்** - உருப்பெற்றுள்ளது.

பொழிப்புரை: - கயிற்றினில் அரவம் கேவலம் பயத்திற்கு மாத்திரம் ஏதுவாகின்றதேயன்றி எப்படி தோற்றம் நிலை ஒடுக்கம் இவையில்லாததோ அப்படியே ஒ நீலகண்டரே உம்மிடம் ஸகலமும் கேவலம் மாயையாலேயே உருக்கொண்டுள்ளது.

ஶ்லோகம்.

விசார்ய மாணே தவ யச் ச²ரீர-
மாதா⁴ர பா⁴வம் ஜக³தா முபைதி
தத³ப்யவஶ்யம் யத³வித்³ய யைவ
பூர்ணஶ் சிதா³னந்த³மயோ மதஸ்த்வம் (29)

வியாக்யானம்: - விசார்யமாணே - விசாரித்துப்பார்க்குங்கால், **தவ** - உமது, **சரீரம்** - தேகமானது, **ஜக³தாம்** - ஜகங்களுக்கு, **ஆதாரவம்** - ஆதாரத்தன்மையை, **உபைதி இதி யத்** - அடைகின்றதென்பது யாதோ, **தத் அபி** - அதுவும், **அவச்யம்** - நிச்சயம், **மத்வித்யயைவ** - எனது அவித்தையினாலேயேயாம், **யத** - யாதொரு காரணத்தால், **த்வம்** - நீர், **பூர்ண** - பரிபூர்ணனாகிய, **சிதாநந்தமய** - நானானந்தஸ்வருபரோ.

பொழிப்புரை: - விசாரித்துப்பார்க்குங்கால் உமது தேஹம் உலகங்களுக்கு ஆதாரமாயிருக்கின்றதென்பது எனது அவித்தையியாலேயேயாம். ஏனெனின் நீர் பரிபூர்ணராகியசிதானந்தமயரன்றே

ஶ்லோகம்.

பூஜேஷ்ட பூர்த்தாதி³ ப²லம் க்ரியாணாம்
போ⁴க்து: ப²லம் யச்ச²ஸி ஶஸ்தமேவ
ம்ருஷை ததே³வம் வசனம் புராரே!
தவத்தோऽஸ்தி பி⁴ன்னம் ந ச கிஞ்சிதே³வ (30)

வியாக்யானம்: - பூஜேஷ்ட பூர்த்தாதி3 வரக்ரியாணாம் - பூஜை - ந ரகம், தடாகப்ரதிஷ்டை அன்னசத்திரம் முதலிய புண்ணியகர்மங்களின் பயனை, **போக்து.** - புசிப்பவர்க்கு **பலம் -** ஸ்வர்க்காதி பயனை, **யச்சஸி** - கொடுக்கின்றாய் என்பதும், **சஸ்தம் ஏவ** - பிரஸித்தமே எவம் தத், வசனம் - இங்ஙனம் இவ்வசனமானது, **ருஷா**

- பொய்யே, **புராரே** - ஓ பரமேசவரா, **த்வத்த:** - உம்மிலும், **பின்னம்** - அநநியமாயுள்ள பொருள், **கிஞ்சித் ஏவ** - சிறிதும், இல்லை.

பொழிப்புரை: - பூஜையாகம் தடாகம் அந்தஸத்திர ப்ரதிஷ்டை முதலிய புண்ணிய கர்மங்களின் பயனைப்புசிப்பவர்களுக்கு ஸ்வர்க்காதி பயனை கொடுக் கின்றாய் என்பதும் பிரஸித்தமே. இங்ஙனம் இவ்வசனமும் பொய்யே பரமேஶ்வரா உம்மிலும் பின்னம் உள்ள பொருள் சிறிதுமில்லை.

இதனால் முதல்வன் சீவர்கள் மாட்டு அபின்னமாக விருந்து அவரவர்கள் கன்மத்தின்படி எவற்றையு முடிப்பானாகலின், முதல்வனுக்கு அந்நியமாகவொரு செயலுமில்லை யென்பார் "உம்மிலும் பின்னமாயுள்ள பொருள் சிறிதுமில்லை" யென்றனர்.

ஊட்டுவிப்பானு முறக்குவிப்பானு மிங்கொன்றொடொன்றை
மூட்டுவிப்பானு முயங்குவிப்பானு முயன்றவினை
காட்டுப்பானு மிருவினைப்பாசக் கயிற்றின் வழி
யாட்டுவிப்பானு மொருவனுண்டே தில்லையம்பலக்கே.

எனப் பட்டினத்துச் சுவாமிகள் திருவாக்காற்காண்க.

ஶ்லோகம்

அஞ்ஞானமூடா⁴ முனயோ வத³ந்தி
பூஜோபசாரதி³ ப3லி க்ரியாபி⁴:
தோஷம் கி³ரீஶோ ப⁴ஜதீதி மித்²யா
குதஸ் த்வமூர்த்தஸ்ய து போ⁴க³ லிப்ஸா? (31)

வியாக்யானம்: - **கிரீஶ:** - சிவன், பூஜோபசாராதியஹி **க்ரியாயி⁴:** - ஜோபசாரம் முதலிய வெளிக்கிரியைகளால், **தோஷம்** - சந்தோஷத்தை, **பஜதி** - அடைகின்றான், **இதி** - என்று, அஞ்ஞானமூடா - அஞ்ஞானத்தால் மூடர்களாகிய, **முநய:** - முநிவர்கள், வதந்தி - சொல்லுகின்றனர், **மித்யா** - இது பொய்யே, **அமூர்த்தஸ்ய** - அமூர்த்தனுக்கு உருவமில்லாதவனுக்கு, **போகலிப்ஸாது** - போகவிருப்பமோ, எனின், குத எதனால் நிகழும்.

பொழிப்புரை: - சிவபெருமான் பூஜோபசாரமுதலிய வெளிக் கிரியைகளால் பிரீதியடைகின்றான் என்று அஞ்ஞான மூடர்களாகிய முனிவர்கள் சொல்லு கின்றனர். இது மித்தையே. அமூர்த்தனுக்கு போகவிருப்பம் எதனால் நிகழும்.

இதனால் வெளிக்கிரியைகள் சகலவடிவினனுக்கே வேண்டுமெனவும், நிஷ்களனுக்கு வேண்டியதில்லை யெனவும் உள்ளன்பு இலாதவர் கட்கு வெளிப்பூசையும் பிரயோசனமில்லை யெனவும் பெறப்பட்டது.

இதனை :

காடித்தீர்த்தங்கலந்து குறித்தவை
ஆடினாலுமானுக் கன்பில்லையேல்
நீரினையோட்டைக் குடத்தட்டி
மூடிவைத்திட்ட மூர்க்கனோடொக்குமே.

என்ற தமிழ்வேதத்தாலுணர்க.

ஶ்லோகம்.

கிஞ்சித்³ த³லம் வா சுஃகோத³கம் வா
யத் த்வம் மஹேஶ! ப்ரதிக்³ருஹ்ய த³த்ஸே
த்ரைலோக்ய லக்ஷ்மீ மபி யஜ் ஜனேப்⁴ய:
ஸர்வம் த்வவித்³யா க்ருத மேவ மன்யே (32)

வியாக்யானம்: - **மஹேச** - ஒ மகேசா, **த்வம்** - நீர், **ஜநேப்ய:** - ஜநங்களிட மிருந்து, **கிஞ்சித்தளம் வா** - கொஞ்சம் பத்திரத்தையாவது, **சுளுகோதகம்வா** - ஸ்வற்பதீர்த்தத்தையாவது, **ப்ரதிக்ருஹ்ய** - பெற்றுக்கொண்டு த்ரைலோக்ய **லக்ஷ்மீம் அபி** - மூவுலகஸாம் ராஜ்யத்தையும், **தத் ஸர்வம்** - கொடுக்கின்றீர், **இதியத்** - என்பது யாதோ, **தத் ஸர்வம்** - அஃதெல்லாம், **அவித்யாக்ருதம் ஏவ** - அவித்தையால் செய்யப்பட்டதுவே என்று, **மந்யே** - எண்ணுகின்றேன்.

பொழிப்புரை: - ஓ மஹேசா நீர் ஜநங்களிடமிருந்து கொஞ்சம் பத்திரத்தை யாவது சொற்பதீர்த்தத்தையாவது பெற்றுக் கொண்டு மூவுலக ஸாம்ராஜ்ஜியத் தையும் கொடுக்கின்றீர் என்பது யாதொன்றுளதோ அஃதெல்லாம் அவித்தையால் செய்யப்பட்ட தென்றே எண்ணுகின்றேன்.

முதல்வனை அனன்னியமாகப் பாவித்துச் சிவோகம் பாவனையிலிருந்து ஒரு காரியம் செய்யவேண்டுமே யொழிய அவனியமாக வெண்ணிச் செய்தல் அப்பிரயோசன மென்பார் அவித்தை யென்றார்.

ஶ்லோகம்.

வ்யாப்னோஷி ஸர்வா விதி³ஶோ தி³ஶஶ்ச
த்வம் விஶ்வமேக: புருஷ: புராண:
நஷ்டே஽பி தஸ்மின் தவ நாஸ்தி ஹானி:
க⁴டே விநஷ்டே நப⁴ஸோ யதை²வ (33)

வியாக்யானம்: - **புராண:** - பழமையாகிய, **புருஷ -** புருஷனாகிய, **த்வம்** - நீர், **ஏக:** - ஒருவரே, **ஸர்வா விதிச: -** திசைவெளிகளையும், **திச** - திசைகளையும்,

விஸ்வம் - ஸகலஜகத்தையும், **வ்யாப்நோஷி** - வ்யாபிக்கின்றீர், **தஸ்மிந** - ஸகலமும், **நஷ்டே அபி** - நாசமடையினும், **கடே** - குடமானது, **விநஷ்டே** - நசித்தால், **நபஸ:** - ஆகாயத்திற்கு, **யதா** - எப்படியோ அப்படியே, **தவ** - உமக்கு, **ஹாநி**: - கேடு, **நாஸ்தி** - இல்லை.

பொழிப்புரை: - புராண புருஷராகிய நீர் ஒருவரே ஸகல திசை வெளிகளையும் திசைகளையும் ஸகல ஜகத்தையும் வியாபிக்கின்றீர். பிரபஞ்சம் நசிக்கினும் குடம் நசித்தால் ஆகாயத்திற்கு ப்போலவே உமக்கு ஹானியில்லை.

ஶ்லோகம்.

யதை²க மாகாஶக³ மர்க்க பி³ம்ப³ம்
க்ஷுத்³ரேஷு பாத்ரேஷுஜலாந்விதேஷு
ப⁴ஜத்யனேக ப்ரதி பி³ம்ப³ பா⁴வம்
ததா² த்வ மந்த: கரணேஷு தே³வ! (34)

வியாக்யானம்: - **ஆகாசகம்** - ஆகாயத்திற் செல்லுகின்றதாகிய, **ஏகம்** - ஓர், **அர்க்கபிம்பம்** - ஸூர்யபிம்பமானது, **ஜலாந்விதேஷு** - ஜலத்தோடு கூடிய, **க்ஷுத்ரேஷு** - சிறியதுகளாகிய; பரத்ரேஷு - பாத்திரங்களில், **யதா** - எப்படி, **அநேகப்ரதிபிம்பபாவம்** - பலபிரதிபிம்பத்தன்மையை, **பஜதி** - அடைகின்றதோ, **ததா** - அப்படியே, **தேவ** - ஓ தேவனே, **த்வம்** - நீர், **அந்த**:கரணேஷு - அந்தக் கரணங்களில் ஆகின்றீர்.

பொழிப்புரை: - ஆகாயத்திலுள்ள ஸூர்யமண்டலமொன்றே எப்படி சிறிய ஜலபாத்திரங்களில் பலபிரதிபிம்பத்தன்மையைப் பெறுகின்றதோ அப்படியே ஓ தேவனே நீர் அந்தக்கரணங்களில் ஆகின்றீர்.

ஶ்லோகம்.

ஸுஸர்ஜனே வாப்யவனே விநாஶே
விஶ்வஸ்ய கிஞ்சித் தவ நாஸ்தி கார்யம்
அனாதி³பி⁴ர் தே³ஹ ப்⁴ருதா மத்³ருஷ்டை
ஸ்ததா²பி தத்ஸ்வப்னவ தா³தனோஷி (35)

வியாக்யானம்: - **விஶ்வஸ்ய** - எல்லாப்பிரபஞ்சத்தின், **ஸுஸர்ஜனே** - ஸ்ருஷ்டியிலும், **அவனே** - ர க்ஷிப்பதிலும், **விநாஶே** - நாசம் செய்வதிலும், **தவ** - உமக்கு, **கார்யம்** - செய்ய வேண்டியகிரியை, **கிஞ்சித்** - சிறிதும், **நாஸ்தி** - இல்லை, **ததாபி** - அப்படியாயினும், **தத்** - ஸ்ருஷ்டிஸ்திதிலயத்தை, **அனாதிபி** - அனாதி களாயுள்ள, **தேஹப்ருதாம்** - தேகிகளுடைய, **அத்ருஷ்டை**: - அதிருஷ்டங்களால், **ஸ்வப்னவத்** - கனாவைப்போல, **ஆதநோஷி** - நடைபெறச் செய்கின்றீர்.

பொழிப்புரை: - ஸகல ப்ரபஞ்சங்களின் ஸ்ருஷ்டி ஸ்திதிலயங்களில் உமக்குச்சிறிதும் செய்கையில்லை. அப்படியாயினும் அதனையும் ப்ராணி கர்மங் களால் ஸ்வப்பனம் போல நடாத்துகின்றீர்.

ஶ்லோகம்.

ஸ்தூ^{2}லஸ்ய ஸூக்ஷ்மஸ்ய ஜட^{3}ஸ்ய போ^{4}கோ^{3}
தே^{3}ஹஸ்ய ஶம்போ^{4}! ந சித^{3}ம் விநாஸ்தி
அதஸ்த்வ தா^{3}ரோபண மாதனோ
ஶ்ருதி: புராரே! ஸுக^{2}து^{2}க^{2}யோ: ஸதா^{3} (36)

வியாக்யானம்: - **ஶம்புவே** - ஒ சம்புவே, **ஜடஸ்ய** - ஜடமாகிய, **ஸ்தூலஸ்ய -** ஸ்தூலமும், **ஸூக்ஷ்மஸ்ய** - ஸூக்ஷ்மமுமாகிய, **தேஹத்வயஸ்ய** - இரண்டு தேஹங்களுக்கும், **அம்விநா** - ஆத்மாவின்றி, **சித்** - சைதன்யமானது, **நாஸ்தி** - இல்லை, **புராரே** - ஒ புரமெரித்த இறைவரே, **அத** - ஆதலால், **ச்ருதி** - வேதமானது, ஸதா - எப்போதும், **ஸுகதுக்கயோ** - ஸுகதுக்கங்களுக்கு, **த்வதாரோபணம்** - உமது ஆரோபணஸம்பந்தத்தை, **ஆதநோதி** - ப்ரதிபாதிக்கின்றது.

பொழிப்புரை: - ஜடங்களாகிய ஸ்தூல ஸூக்ஷ்மங்களுக்கு ஆத்மாவின்றி சைதன்யமில்லை - ஓ புரமெரித்தவரே எப்போதும் ஸுகதுக்கங்களுக்கு, ஆதலால் வேதமானது உமது ஆரோபணத்தைப்பிரதிபாதிக்கின்றது.

ஶ்லோகம்.

நமஸ் ஸச்சித^{3}ம்போ4தி ஹம்ஸாய துப்^{4}யம்
நம கால கண்டா^{2}ய கலாத்மகாய
நமஸ்தே ஸமஸ்தாக^{2} ஸம்ஹார கர்த்ரே
நமஸ்தே ம்ருஷா சித்த வ்ருத்யைக போ^{4}க்த்ரே (37)

வியாக்யானம்: - **ஸச்சித^{3}ம்போ^{4}தி ஹம்ஸாய** - ஸச்சித் ஸமுத்திரத்திற்கு, ஹம்ஸம் போலுள்ள வராகிய, **துப்^{4}யம்** - உமக்கு, **நம:** - நமஸ்காரம், **காலகண்டாய** - நீலகண்டரும், **கலாத்மகாய** - கலாஸ்வ ரூபரும் ஆகிய உமக்கு, **நம:** - நமஸ்காரம், **ஸமஸ்தாக^{2} ஸம்ஹார கர்த்தரே** - ஸகலபாவங்களையும், **சங்காரம்** - செய்கின்றவராகிய, **தே** - உமக்கு, **நம** - நமஸ்காரம், ம்ருஷாசித்தவ்ருத்யேக போக்த்ரே - பொய்யாகிய சித்த விருத்திகளுக்கு முக்கியசாக்ஷியாயுள்ளவரும் ஆகிய, **தே** - உமக்கு, **நம:** - நமஸ்காரம்.

பொழிப்புரை: - நித்தியபோத ஸமுத்திரத்திற்கு, ஹம்ஸப் பறவை போலுள்ள வராகிய, உமக்கு நமஸ்காரம். நீலகண்டரும் கலாஸ்வரூபருமாகிய உமக்கு நமஸ்காரம். ஸகலபாவங்களையும் சங்காரஞ் செய்வோராகிய உமக்கு நமஸ்காரம்

பொய்யாகிய சித்தவிருத்திகளுக்கு ஸாக்ஷியாயுள்ள வருமாகிய உமக்கு நமஸ்காரம்.

ஸூதர் சொல்லிய தாவது.

ஏவம் ப்ரணம்ய விஶ்வேஶம் புரத: ப்ராஞ்ஜலி ஸ்தி^{2}த:
விஸ்மித: பரமேஶானம் ஜக^{3}தே^{3} ரகு4நந்த3ன: (38)

வி யாக்யானம்: - ஏவம் - இவ்வாறு, **விச்வேஶம்** - விச்வேசனை, **ப்ரணம்ய** - நமஸ்கரித்து, **புரத:** - எதிரில், **ப்ராஞ்ஜலி:** - அஞ்சலி பந்தஞ்செய்துகொண்டு, **ஸ்தி2த:** - நிற்கின்றவனாகிய, **ரகுநந்தன:** - ராகவன், **விஸ்மித**. - ஆச்சரியங்கொண்டவனாய், **பரமேசானம்** - பரமேச்வரனை நோக்கி, **ஜகதே** - சொன்னான்.

பொழிப்புரை: - இவ்வாறு விச்வேசனை நமஸ்கரித்து எதிரில் அஞ்சலி பந்தஞ் செய்து கொண்டு நிற்கும் ராகவன் ஆச்சரியங் கொண்டவனாய்ச்சொன்னான்.

ஸ்ரீராமர் சொன்ன தாவது.

உப ஸம்ஹர விஶ்வாத்மன்! விஶ்வரூப மித^{3}ம் தவ
ப்ரதீதம் ஜக^{3}தை^{3}காத்ம்யம் ஶம்போ^{4} ப^{4}வ த^{3}னுக்^{3}ரஹாத் (39)

வியாக்யானம்: - **விச்வாத்மன்** - விச்வஸ்வரூபனே, **தவ** - உமது, **இதம்** - இந்த, **விச்வரூபம்** - விச்வரூபத்தை, **உபஸம்ஹர** - உபசங்கரித்து கொள்ளும், **சம்போ** - ஓ சம்புவே, **பவத் அனுக்கிரஹாத்** - உ.மது அநுக்கிரஹத்தால், **ஜகதைகாத்ம்யம்** - ஜகதேக ஸ்வரூபத்துவமானது, **ப்ரதீதம்** - விளங்கியது.

பொழிப்புரை: - ஓ விச்வரூபனே உமது இவ்விச்வரூபத்தை யடக்கிக் கொள்வீராக. ஓ சம்புவே உமதனுக்கிரஹத்தால் ஜகதேகஸ்வரூபத்துவமானது விளங்கியது.

ஸ்ரீபகவான் கூறியதாவது.

பஶ்ய ராம! மஹாபா^{3}ஹோ! மத்தோ நான்யோsஸ்தி கஶ்சன
இத்யுக்த்வை வோபஸம்ஜஹ்ரே ஸ்வதே^{3}ஹே தே^{3}வதாதி^{3}கான் (40)

வியாக்யானம்: - **ராம** - ஓ ராமா, **மஹாபாஹோ** - ஓ மஹாபாகுக்களை யுடையோனே, **பச்ய** - பார்ப்பாயாக, **மத்த:** - என்னிலும், **அந்ய:** - இதரன், **க:சந** - எவனும், **நாஸ்தி** - இல்லை, **இதி** - என்று, **உக்த்வா** - சொல்லி, **தே^{3}வதாதி^{3}கான்** - தேவதை முதலியவர்களை, **ஸ்வதேஹே** - தனது தேகத்தினில், **உபஸஞ்ஜஹ்ரே** - உபஸங்கரித்துக்கொண்டார்.

பொழிப்புரை: - ஓ ராமா ஓ மஹாபாகுவே பார்ப்பாயாக என்னிலும் அன்னியன் எவனுமில்லை என்று இங்ஙனம் சொல்லி தேவர் முதலியவர்களைத் தனது தேகத்திலேயே உ.பஸங்கரித்துகொண்டனர்.

ஶ்லோகம்.

மீலிதாக்ஷ: புனர் ஹர்ஷாத்³ யாவத்³ராம: ப்ரபஶ்யதி
தாவதே³வ கி³ரே: ஶ்ருங்கே வ்யாக்⁴ர சர்மோபரி ஸ்தி²தம் **(41)**

வியாக்யானம்: - **மீலிதாக்ஷ** - மூடியகண்ணை யுடையவனாய், **ராம:** - ராமன், **ஹர்ஷாத்** - ஸந்தோஷத்தால், **புந:** - மீண்டும், **யாவத்ப்ரபச்யதி** - எவ்வளவில் பார்க்கலாயினனோ, **தாவதேவ** - அவ்வளவிலேயே, **கிரே:** - பர்வதத்தின், **ச்ருங்கே** - கொடுமுடியில், **வ்யாக்ரசர்மோபரிஸ்திதம்** - புலித்தோலின் மேலுள்ள வரும்.

பொழிப்புரை: - மூடியகண்களை யுடையவனாய் ராமன் ஸந்தோஷத்தோடு கூட மீண்டும் எவ்வளவில் பார்க்கலாயினனோ அவ்வளவிலேயே மலையின் கொடி முடியில் புலித்தோல்மேலுள்ளவரும்.

ஶ்லோகம்.

த³த³ர்ஶ பஞ்ச வத³னம் நீலகண்ட²ம் த்ரிலோசனம்
வ்யாக்⁴ர சர்மாம்ப³ரத⁴ரம் பூ⁴தி பூ⁴ஷித விக்³ரஹம் **(42)**

ப²ணி கங்கண பூ⁴ஷாட்⁴யம் நாக³ யக்ஞோபவீதினம்
வ்யாக்²ர சர்மோத்தரீயம் ச வித்³யுத் பிங்க³ ஜடாத⁴ரம் **(43)**

ஏகாகினம் சந்த்³ரமௌலிம் வரேண்ய மப⁴ய ப்ரத³ம்
சதுர்பு⁴ஜம் க²ட்³க³ பர்ஶூ ம்ருக³ ஹஸ்தம் ஜக³த் பதிம் **(44)**

வியாக்யானம்: - **பஞ்ச வத³னம்** - சந்திரன்போன்ற முகமுடையோனும், **நீலகண்டம்** - நீலகண்டனும், **த்ரிலோசனம்** - முக்கண்ணனும், **வ்யாக்⁴ர சர்மாம் ப³ரதரம்** - புலித்தோலாடையுடுத்தியவனும், **பூதிபூஷிதவிக்ரஹம்** - விபூதியால் அலங்கரிக்கப்பட்ட தேஹமுடையவனும், **பணி கங்கண பூ⁴ஷாட்⁴யம்** - ஸர்ப்ப கங்கணாபரணத்தால் விளங்குகின்றவனும், **நாக³ யஞ்ஞோபவீதினம்** - ஸர்ப்பபூணூ லுடையோனும், **வ்யாக்2ர சர்மோத்தரீயம் ச** - வ்யாக்ரசர்மத்தை மேலாடையாய்க் கொண்டவனும், **வித்³யுத் பிங்க³ ஜடாத⁴ரம்** - மின்னல் போல் சொலிக்கும் சடையைத் தரிக்கின்றவனும், **ஏகாகினம்** - ஒருவனும், **சநத்ரமௌளிம்** - சந்திரனை சிரஸில் தரிக்கின்றவனும், **வரேண்ணியம்** - வரமளிப்பவனும் ச்ரேஷ்டனும்,

அபயப்ரதம் - அபயமளிப்பவனும், **சதுர்ப்புஜம** - நான்குகைகளையுடையவனும், **கண்டபரசும்** - கண்டற் கோடரியுடையோனும், **ம்ருகஹஸ்தம்** - மானை க்கையிலுடையவனும், **ஜகத்பதிம்** - ஜகங்களுக்கீசனுமாகிய இறைவனை, **ததர்ச** - கண்டான்.

பொழிப்புரை: - சந்திரன் போன்ற முகமுடையவரும் நீலகண்டரும் முக்கண்ணரும் புலித்தோலாடையுடுத்தியவரும் விபூதியால் அலங்கரிக்கப்பட்ட தேஹமுடையவரும் ஸர்ப்பகங்கணாபரணத்தால் விளங்குகின்றவரும் ஸர்ப்பப் பூணூலுடையவரும் புலித்தோலை மேலாடையாகக் கொண்டவரும் மின்னலை யொத்து ஜ்வலிக்கும் சடையைத்தரிக்கின்றவரும் ஒருவரும் சந்திரனைச்சிரஸில் தரிக்கின்றவரும் வரமளிப்பவரும் அபயமளிப்பவரும் நான்குகைகளையுடையவரும் மானைக்கையிலேந்தியவரும் ஜகங்களுக்கு ஈசனுமாகிய இறைவனைக் கண்டான்.

ஶ்லோகம்.

அதா²ஞ்யா புரஸ்தஸ்ய ப்ரணம்யோப விவேஶ ஸ: (45)

அதா²ஹ ராமம் தே³வேஶோ யத்³யத் ப்ரஷ்டு மபீ⁴ச்ச²ஸி
தத்ஸர்வம் ப்ருச்ச² ராம! த்வம் மத்தோ நான்யோஸ்தி தே குரு³: (46)

வியாக்யானம்: - **ஸ:** - அந்தராமன், **அத** - பிறகு, **ஆஞ்ஞாய** - ஈசனென்றுணர்ந்து, **ப்ரணம்ய** - நமஸ்கரித்து, **தஸ்ய - அவ்வீச**னுக்கு, **புர:** - எதிரில், **உபவிவேச** - உட்கார்ந்துகொண்டான், **தேவேச** - இறைவன், **அத** - பிறகு, **ராமம்** - ராமனை நோக்கி, **ராம** - ஓராமனே, **யத் யத்** - எவ்வெதை, **ப்ரஷ்டும்** - கேட்டுத் தெரிந்துகொள்வதற்கு, **அபீச்சஸி** - விரும்புகின்றனையோ, **தத்ஸர்வம்** - அதனையெல்லாம், **ப்ருச்ய** - கேட்டுக்கொள், **தே** - உனக்கு, **மத்த** - என்னிலும், **அந்ய** - அன்னியனாகிய, **குரு:** - குருவானவர், **நாஸ்தி** - இல்லை, என்று **ஆஹ** - சொன்னார்.

பொழிப்புரை: - அந்த ராமன் பிறகு ஈசனென்றுணர்ந்து நமஸ்கரித்து அவருக்கெதிரில் உட்கார்ந்துகொண்டார். இறைவன் பிறகு ராமனை நோக்கி ஓ ராமனே எவ்வெதனைக்கேட்க விரும்புகின்றனையோ அவ்வதனை யெல்லாம் கேட்டுக் கொள்வாயாக. உனக்கு என்னிலும் அந்நியராய் குரு இல்லையன்றோ என்றார்.

ஏழாவது அத்தியாயம்
முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்.

பிண்டோத்பத்தி கதனம்

ஸ்ரீராமர் சொன்னதாவது.

பாஞ்ச பௌ^{4}திக தே^{3}ஹஸ்ய சோத்பத்திர் விலய: ஸ்தி^{2}தி
ஸ்வரூபம் ச கத^{2}ம் தே^{2}வ! ப^{4}க^{3}வன் வக்து மர்ஹஸி (1)

வியாக்யானம்: - **பாஞ்ச பௌ^{4}திக தே^{3}ஹஸ்ய** - பஞ்சபூதவிகாரமாகிய தேகத்திற்கு, **உத்பத்தி** - தோற்றம், **ஸ்திதி** - நிலை, **விலய:** - ஒடுக்கம் இவைகள், **கதம்** - எப்படி, **தே^{3}ஹே** - இத்தேஹத்தில், **ஸ்வரூபம்ச** - ஸ்வரூபமும், **கத^{2}ம்** - எப்படி, **ப^{4}க^{3}வன்** - ஓ பகவனே, **வக்தும்** - சொல்வதற்கு, **அர்ஹஸி** - தக்கவராகின்றீர்.

பொழிப்புரை: - பாஞ்சபௌதிகமாகிய ஸ்தூல தேஹத்திற்கு உத்பத்தி ஸ்திதி ஒடுக்கம் தேகத்தில் ஸ்வரூபம் இவை எப்படி? ஓ பகவனே நீர் சொல்லத்தக்க வராயுள்ளவர்.

ஸ்ரீ பகவான் கூறியதாவது.

ஶ்லோகம்.

பஞ்ச பூ^{4}தைஸ் ஸமாரப்^{3}தோ^{4} தே^{3}ஹோऽயம் பாஞ்ச பௌ^{4}திக:
தத்ர ப்ரதா^{4}னம் ப்ருதி^{2}வீ ஶேஷாணாம் ஸஹகாரிதா (2)

வியாக்யானம்: - **பாஞ்ச பௌதிக:** - பாஞ்சபௌதிகமாகிய, **அயம் தேஹ:** - இந்த தேஹமானது, **பஞ்சபூதை:** - ஐம்பூதங்களால், **ஸ மாரப்த** - எற்பட்டுள்ளது, **தத்ர** - இச்சரீரத்தில் உள்ளவைகளில், **ப்ருதிவீ** - ப்ருதிவியானது ப்ரதானம் முக்கியமாயுள்ளது, **ஶேஷாணாம்** - ஏனையவைகளுக்கு, **ஸஹகாரிதா** - கூடவிருக்கும் தன்மையே அப்பிரதானத்தன்மையே என்க.

பொழிப்புரை: - பாஞ்சபௌதிகமாகிய இத்தேஹமானது பஞ்ச பூதங்களால் உண்டாகியது இச்சரீரத்தில் உள்ள பூதங்களுள் பிருதிவியே முக்கியம் இதர பூதங்களுக்கு அமுக்கியத்துவமேயுள்ளது.

ஶ்லோகம்.

ஜராயுஜோऽண்ட^{3}ஜ ஶ்சைவ ஸ்வேத^{3}ஜ ஶ்சோத்^{3}பி^{4}த^{3}ஸ் ததா^{2}
ஏவம் சதுர்வித^{4}: ப்ரோக்தோ தே^{3}ஹோऽயம் பாஞ்ச பௌ^{4}திக: (3)

வியாக்யானம்: - **பாஞ்ச பௌ⁴திக:** - பாஞ்சபௌதிகமாகிய, **அயம்** - இந்த பார்த்திவமாகிய, **தேஹ:** - தேஹமானது, **ஜராயுஜ:** - கருப்பையில் நின்றுண்டாவது, **அண்டஜ**. - முட்டையில் நின்றுண்டாவது, **ஸ்வேதஜ** - புழுக்கத்தில் நின்றுண்டாவது, **உத்பிஜ** - வித்தில் நின்றுண்டாவது என்று, **ஏவம்** - இவ்விதம், **சதுர்வித** - நான்கு விதமாய், **ப்ரோக்த:** - சொல்லப்பட்டுள்ளது.

பொழிப்புரை: - பாஞ்சபௌதிகமாகிய இப்பார்த்திவதேஹமானது கருப்பையில் நின்றுண்டாவது முட்டையில் நின்றுண்டாவது புழுக்கத்தில் நின்றுண்டாவது மேலே பேதித்துக்கொண்டு விதையில் நின்றுண்டாவது என்று இவ்விதம் நான் விதமாய்ச் சொல்லப்பட்டுள்ளது.

ஶ்லோகம்.

மானஸோऽபி பர: பரோக்தோ தே³வானா மேவ ஸ ஸ்ம்ருத:
தத்ர வக்ஷ்யே ப்ரத²மத: ப்ரதா⁴னத்வாஜ் ஜராயுஜம் (4)

வியாக்யானம்: - **மானஸஸ்து** - மனம் எண்ணுகிறபடி யுண்டாவதென்று, **பர:** - மற்றொன்று. **ப்ரோக்த** - சொல்லப்பட்டுள்ளது, **ஸ** - அந்த தேஹமானது, **தேவானாம் ஏவ** - தேவர்களுக்கே, **ஸ்ம்ருத:** - உள்ளதாகச் சொல்லப்பட்டது. **தத்ர** - அவைகளுள், **ப்ரதானத்வாத்** - முக்கியமாயிருத்தலால், **ஜராயுஜம்** - கர்ப்பத்திலிருந் துண்டாகும் தேகத்தையே, **ப்ரதமத** - முதலில், **வக்ஷ்யே** - சொல்லுகிறேன்.

பொழிப்புரை: - மனம் எண்ணுகிறபடி உண்டாவதாய் மற்றோர் சரீரம் உள்ளதென்று சொல்லப்பட்டது. அது தேவர்களுக்கே கருதப்பட்டது அங்கு முக்கியமாயிருத்தலால் ஜராயுஜத்தையே முதலில் சொல்லுகின்றேன்.

ஶ்லோகம்

ஶுக்ல ஶோணித ஸம்பூ⁴தாவ்ருதி ரேவ ஜராயுஜ:
ஸ்த்ரீணாம் க³ர்பா⁴ஶயே ஶுக்லம் ருதுகாலே விஶேத்³ யதா³ (5)

வியாக்யானம்: - **ஶுக்ல ஶோணித ஸம்பூ⁴தவ்ருத்தி: ஏவ** - சுக்ல சோணி தங்களால் ஏற்பட்ட நிலைமையுடையதே, **ஜராயுஜ** - ஜராயுஜம் என்பதாம. **ருதுகாலே** - ருதுகாலத்தில், **யதா** - எப்போது, **ஸ்த்ரீணாம்** - ஸ்த்ரீகளது, **க³ர்பா⁴ஶயே** - கர்ப்பகோசத்தில், **சுக்லம்** - சுக்லமானது, **விசேத** - பிரவேசிக்குமோ.

பொழிப்புரை: - சுக்ல சோணிதங்களால் எற்பட்ட நிலைமையுடையதே ஜராயுஜம என்னப்படும், ருதுகாலத்தில் எப்போது ஸ்திரீகளின் கர்ப்பகோசத்தில் சுக்கிலம் பிரவேசிக்கின்றதோ.

ஶ்லோகம்.

ரஜஸா யோஷிதோ யுக்தம் ததை^{3}வ ஸ்யாஜ் ஜராயுஜம்
பா^{3}ஹுல்யாத்^{3} ரஜஸ: ஸ்த்ரீஸ்யாத் ஶுக்லாதி^{4}க்யே புமான் ப^{4}வேத் **(6)**

வியாக்யானம்: - **யோஷித** - ஸ்திரீயினுடைய, **ரஜஸா** - சோணிதத்தோடு, **யுக்தம்** - கூடியதாய்க்கொண்டு, **தத்ஏவ** - அச்சுக்கிலமே, **ஜராயுஜம்** - ஜராயுஜம் ஆகின்றது, **ரஜஸ:** - சோணிதத்தின் - **பாஹுல்யாத்** - மிகுதியால், **ஸ்திரீ** - பெண், **ஸ்யாத்** - உண்டாகும், **சுக்லாதிக்யே** - சுக்கிலம் மிகுதியாயின், **புமான்** - ஆண், **பவேத்** - உண்டாகும்.

பொழிப்புரை: - ஸ்தரீயன் சோணிதத்தோடு கலந்ததாய்க் கொண்டு அச்சுக்லமே ஜராயுஜமாகின்றது. சோணிதம் விசேஷமாயிருந்தால் பெண்ணும் சுக்லம் விசேஷமாயின் ஆணும் உண்டாகும்.

ஶ்லோகம்.

ஶுக்ல ஶோணிதயோஸ் ஸாம்யே ஜாயதே து நபும்ஸகம்

ர்ருது ஸ்நாதா ப^{4}வேன் நாரீ சதுர்த்த^{2} தி^{3}வஸே தத:
ர்ருது காலஸ்து நிர்தி^{3}ஷ்ட ஆஷோட^{3}ஶ தி^{3}னாவதி^{4} **(7)**

வியாக்யானம்: - **அத** - இனி, **சுக்லசோணியே:** -- சுக்லசோணி தங்களுக்கு, **ஸாம்யே** - ஸமத்து வமாயின், **நபும்ஸக -** அலியாய், **ஜாயதே** - தோன்றுகிறது, **நாரீ** - ஸ்திரீயானவள், **சதுர்த்ததிவஸே** - நாலாவது தினத்தில், **ருதுஸ்நாதா** - ருது நீங்கி மூழ்கி சுத்தையாவாள், **தத** - அதற்குப் பிறகு, **ஆஷோடசதினாவதி** - பதினாறு தினங்கள் வரையில், **ருதுகால** - ருது காலமென்பது, **நிர்த்தி^{3}ஷ்ட** - குறிக்கப்பட்டது.

பொழிப்புரை: - சுக்ல சோணிதங்கள் ஸமமாயிருக்கின் ஆணும் பெண்ணு மற்றவனாய்த் தோன்றுகின்றான் ஸ்திரீ நான்காமதினத்தில் ருது நீங்கிச் சுத்தை யாவாள், பிறகு பதினாறு நாள் வரையில் ருதுகாலம் என்பது குறிக்கப்பட்டது,

ஶ்லோகம்.

தத்ராꠓயுக்^{3}ம தி^{3}னே ஸ்த்ரீ ஸ்யாத் புமான் யுக்^{2}மதின ப^{4}வேந் **(8)**

ஷோட^{3}ஶ்திவஸே கர்^{3}போ ஜாயதே யதி^{3} ஸுப்^{4}ருவ
சக்ரவர்த்தீ ததா^{3} ராஜா ஜாயதே ச ந ஸம்ஶய: **(9)**

வியாக்யானம்: - **தத்ர** - ஆண்டு, **அயுக்மதினே** - ஒற்றைப்படை தினத்தில், **ஸ்திரீ** - பெண்ணாக, **ஸ்யாத்** - தோன்றும், யுக்மதினே - இரட்டைப்படை தினத்தில். **புமான் -** புருஷனாய், **பவேத்** - ஆவான், **ஸுப்ருவ:** - அழகுடையமங்கைக்கு, **ஷோடசே** - பதினாறாவது, **திவஸே** - நாளில், **கர்ப:** - கருப்பம், **ஜாயதே யதி** - உண்டாகுமானால், **ஸ:** - அப்பிரஜையானது, **சக்ரவர்த்தீ** - சக்கிரவர்த்தியாகவாவது, அரசனாகவாவது, **ஜாயதே** - பிறக்கின்றான், **ஸம்ஶய:ந** - ஸந்தேகமில்லை. மதினே

பொழிப்புரை: - ஆண்டு ஒற்றைப்படைதினத்தில் பெண்ணும் இரட்டைப் படைதினத்தில் ஆணும் தோன்றும் அழகுவாய்ந்த மங்கைக்குப் பதினாறாவது தினத்தில் கர்ப்பம் ஏற்படுமாயின் அந்தப்பிரஜை சக்கிரவர்த்தியாகவோ அல்லது அரசகைவோ பிறக்கின்றான்.

ஶ்லோகம்

ர்ருது நாதா யஸ்ய பும்ஸ: ஸாகாங்க்ஷம் முக²மீக்ஷத
த்தா³ssக்ருதிர் ப⁴வேஹ்³ க³ர்ப தத் பஶ்யேத் ஸ்வாமினோ முக²ம் (10)

வியாக்யானம்: **- ர்ருது ஸ்நாதா** - ருது நீங்க ஸ்நானம் செய்தது. **எந்த** - பும்ஸ புருஷனது, **முகம்** - முகத்தை, **ஸாகாங்க்ஷம்** - ஆசையோடுகூட. **ஈக்ஷதே** - காண்கின்றனளோ, **கர்ப** - கர்ப்பமானது. **ததாக்குகி** - அவனது உருவம் போல வுருக்கொண்டதாய், **பவேத** - எற்படும், **தத்** - ஆதலின. **ஸ்வாமின:** - தனது கணவனது, முகம் முகத்தை, பச்யேத் - பார்க்க வேண்டும்.

பொழிப்புரை: - ருது நீங்கி ஸ்தாநம் செய்ததும் மங்கை எந்தப்புருஷனது முகத்தை விருப்புற்று நோக்குகின்றாளோ. அந்தப்புருஷனது உருப் போன்ற உருக் கொண்டதாய் கர்ப்பம் எற்படும். ஆதலால் தனது கணவனது முகத்தையே பார்க்க வேண்டும்.

ஶ்லோகம்.

யா ஸ்த்ரீ சர்மாவ்ருதி: ஸுக்ஷ்மா ஜராயு: ஸா நிக³த்³யதே
ஶுக்ல ஶோணிதயோர் யோக³ ஸ்தஸ்மின்னேவ ப⁴வேத்³ யத: (11)

வியாக்யானம்: - **ஸ்த்ரீ சர்மாவ்ருதி:** - ஸ்த்ரீயின் தோலுருவமாகிய (ஆவரணமானது) பையானது, **ஸூக்ஷ்மா** - சிறிதாய், **யா** - யாதொன்றுளதோ, **ஸா - அது**, **ஜராயு:** - ஜராயு என்று, **நிகத்யதே** - சொல்லப்படுகின்றது, **யத:** - யாதொருகாரணத்தால், **தஸ்மின்ஏவ** - அதிலேயே, **ஶுக்ல ஶோணிதயோ** - சுக்லசோணி தங்களது, **யோக³** - ஸம்பந்தமானது, **பவேத்** - ஏற்படுகின்றதோ.

பொழிப்புரை: - ஸ்த்ரீயின் தோலுருவமாகிய பையானது சிறிதாய் யாதொன்றுளதோ அது ஜராயு என்று சொல்லப்படுகின்றது. யாதொருகாரணத்தால் அதிலேயே சுக்லசோணி தங்களின் ஸம்பந்தம் எற்படுகின்றதோ.

ஶ்லோகம்.

தத்ர க3ர்போ4 ப4வேத்யஸ்மாத் தேன ப்ரோக்தோ ஜராயுஜ:
அண்ட3ஜா: பக்ஷி ஸர்பாத்3யா ஸ்வேத3ஜா மஶகாத3ய: (12)

வியாக்யானம்: - **யஸ்மாத்** - யாதொருகாரணத்தால், **தத்ர** - அங்கு, **கர்ப்ப** - கர்ப்பம், **பவேத** - உண்டாகுமோ, **தேன** - ஆதலால், **ஜராயுஜ:** - ஜராயுஜம் என்று, **ப்ரோக்த** - சொல்லப்பட்டது, **அண்டஜா:** - அண்டஜங்கள், **பக்ஷிஸர்ப்பாத்யா** - பறவைபாம்பு முதலியன, ஸ்வேதஜா - ஸ்வேதஜங்கள், மசகாதய - கொசுகு முதலியன.

பொழிப்புரை: - அங்கு கர்ப்பம் உண்டாகின்றமையால் ஜராயுஜமென்று சொல்லப்பட்டது, அண்டஜங்கள் பறவை பாம்பு முதலியன ஸ்வேதஜங்கள் கொசுகு முதலியன.

ஶ்லோகம்

உத்3பி4ஜ்ஜா வ்ருக்ஷ கு3ல்மாத்3யா: மானஸாஶ்ச ஸூரர்ஷய:

ஜன்ம கர்ம வஶாதே3வ நிஷிக்தம் ஸ்மர மந்தி3ரே
ஶுக்லம் ரஜஸ் ஸமாயுக்தம் ப்ரத2மே மாஸி த்த்3 த்3ரவம் (13)

வியாக்யானம்: - உத்3பி4ஜ்ஜா - உத்பிஜ்ஜங்கள், **வ்ருக்ஷ கு3ல்மாத்3யா**: - மரம் செடி, கொடி முதலியன, **மானஸா:** - மனதிற்கு இயைந்தவாறு எடுக்கும் தேகமுடையவர், **ஸூரர்ஷ்ய:** - தேவருஷிகள், **ஸ்மரமந்திரே** - யோநிவாயில், **நிஷிக்தம்** - விடப்பட்ட, **ஶூலம்** - சுக்லமானது, **ஜன்ம கர்ம வஶாத் ஏவ** - ஜன்ம கர்மங்களின் வலியாலேயே, **ரஜஸ்** - சோணித்ததோடு, **ஸமாயுக்தம்** - சேர்ந் ததாகின்றது, **ததத்ரவம்** - அந்த திரவமானது, **ப்ரத2மே** - முதலாவது, **மாஸி** மாஸத்தில்.

பொழிப்புரை: - உத் பிஜ்ஜங்கள் மரம் செடி கொடி முதலியன மனதிற்றோன் றிய வண்ணம் எடுக்கும் உருவமுடைய தேகம் தேவரூஷிகள் ஸ்திரீகளின் யோநிவாயில் சென்ற சுக்லமானது ஜன்ம கர்ம பலத்தால் சோணிதத்தோடு கூடிக் கலந்ததாகின்றது அத்தத்ரவமானது முதலாது மாசத்தில்.

ஶ்லோகம்.

பு3த்3பு3த3ம் கலலம் தஸ்மாத் தத: பேசீ ப4வே தி3த3ம்
பேசீ க2னம் த்3விதீயே து மாஸி பிண்ட3: ப்ரஜாயதே. **(14)**

வியாக்யானம்: - **புத்புதம்** - நீர்க்குமிழி வடிவமும், **தஸ்மாத்** - அதனிலிருந்து, **கலலம்** - சற்று இறுகியதாயும், **தத:** - அதற்குப் பிறகு, **பேசீ** - முட்டை பையாகவும், **பவேத்** - ஆகும், **தவிதீ யேது மாஸி** - இரண்டாம் மாதத்திலோவெனின், **பேசீகனம்** - பைகட்டிப் பட்டதாய்க்கொண்டு, **இதம்** - இது. **பிண்ட:** - பிண்டம், **ப்ரஜாயதே** - ஆகின்றது.

பொழிப்புரை: - நீர் கருமிழ் போலாய் பின்னர் சற்று இறுகியதாய் பிறகு கருப்பை போன்ற வட்டமதாய் ஆகும். இரண்டாவது மாதத்தில் அந்தப்பை வடிவம் சற்றுக்கட்டிப்பட்ட தாய்க் கொண்டு அந்த இறுகிய த்ர்வமானது பிண்டமாகின்றது.

ஶ்லோகம்.

கராங்க்4ரி சீர்ஷகாதீ3கானி த்ருதீயே ஸம்ப4வந்தி ஹி
அபி4 வ்யக்திஸ்ஶ்ச ஜீவஸ்ய சதுர்த்தே2 மாஹி ஜாயதே **(15)**

வியாக்யானம்: - **கராங்க்ரிசீர்ஷகாதீநி** - கைகால் முதலியன, **த்ருதீயே** - மூன்றுவது மாதத்தில், **ஸம்பவந்திஹி** - உண்டாகின்றன, **சதுர்த்தே** - நான்காவது, **மாஸி** - மாதத்தில், **ஜீவஸ்ய** - ஜீவனுக்கு, **அபிவ்யக்தி:ச** - தோற்றமும், **ஜாயதே** - ஏற்படுகின்றது.

பொழிப்புரை: - கை கால் தலை முதலியன மூன்றா மாதத்தில் உண்டா கின்றன. நான்காம் மாதத்தில் ஜீவனுக்கு (அபிவ்யக்தி) தோற்றமேற்படுகின்றது

ஶ்லோகம்.

ததஶ் சலதி க3ர்ப்போ4sபி ஜனன்யா ஜட2ரே ஸ்வத: **(16)**

புத்ரஶ்ஶேத்3 த3க்ஷிணே பார்ஶ்வே கன்யா வாமே ச திஷ்ட2தி
நபும்ஸக ஸ்தூத3ரஸ்ய பா4கே திஷ்ட2தி மத்4யத: **(17)**

வியாக்யானம்: - **தத:** - அதற்குப்பிறகு, **ஜனன்யா** - அன்னையினது, **ஜடரே** - வயிற்றினால், **கர்ப்ப:** - கர்ப்பமானது, **ஸ்வத:** - தானே, **சலதி** - சலிக்கின்றது, **புத்ர: சேத்** - புத்திரனாயின், **தக்ஷிணே** - வலது, **பார்ச்வே** - பாரிசத்திலும், **கன்யா** - பெண்ணானது, **வாமே ச** - இடதுபக்கத்திலும், **திஷ்ட2தி** - இருக்கின்றது, **நபும்ஸக:து**

- அலியாயின், **உதரஸ்ய** - வயிற்றின், **மத்யமே பாகே** - நடுப்பக்கத்தில், **திஷ்டதி** - இருக்கின்றது.

பொழிப்புரை: - அதற்குப்பிறகு அன்னையின் வயிற்றினில் கர்ப்பம் தானே சலிக்கின்றது. புத்திரனாயின் வலது பக்கத்திலும் புத்திரியாயின் இடதுபக்கத்திலும் இருக்கன்றது. நபும்ஸகனாயின் வயிற்றின் நடுப்பக்கத்தில் இருக்கின்றது.

ஶ்லோகம்.

அதோ த^{3}க்ஷிண பார்ஶ்வே து ஶேதே மாதா புமான் யதி
அங்க^{3} ப்ரத்யங்க^{3} பா^{4}கா^{3}ஶ்ச ஸுக்ஷ்மா: ஸ்யுர் யுக^{3}பத் ததா^{3} (18)

விஹாய ஶ்மஶ்ரு த^{3}ந்தாதீ^{3}ன் ஜன்மானந்தர ஸம்ப^{4}வான்
சதுர்த்தே^{2} வ்யக்ததா தேஷாம் பா^{4}வானா முபஜாயதே. (19)

வியாக்யானம்: - **அத**: - ஆதலால், **புமான் யதி** - புத்திரனாயிருந்தால், **மாதா** அன்னையாகியகர்ப்பிணி, **த^{3}க்ஷிண பார்ஶ்வே து** - வலதுபக்கத்தைக் கீழேவைத்து, **ஶேதே** - படுத்துறங்குகின்றனள், **ததா^{3}** - அப்போது, **ஜன்மாநந்தர ஸம்ப^{4}வான்** - பிறந்த பிறகுண்டாவனவாகிய, **ஶ்மஶ்ரு த^{3}ந்தாதீ3ன்** - மீசை பல் முதலியவைகளை, **விஹாய** - விடுத்து (தவி)) **அங்க^{3} ப்ரதயங்க^{3} பா^{4}கா**: - அங்கபரத்யங்கங்களும், **யுக^{3}பத்** - ஒரே காலத்தில், **ஸூக்ஷ்மா: ஸ்யு**: - ஸூக்ஷ்மங்களாயுண்டாகும், **தேஷாம் பாவாநாம் அபி** - அத்தன்மைகளுக்கும், **சதுர்த்தே^{2}** - நாலாவது மாதத்தில். **வ்யகத்தா** - விளக்கமுற்றிருத்தல், **ஜாயதே** - ஏற்படுகின்றது.

பொழிப்புரை: - ஆதலால் புத்திரனாயிருந்தால் கர்ப்பிணி வலப்பக்கம் கீழாய்ப் படுக்கன்றனள். அப்போதூ பிறந்த பிறகு குண்டாகக்கூடிய மீசை பல முதலியவை நீங்கலாகிய மற்ற அங்கப்பிரதயங்களால் ஏககாலத்தில் ஸூக்ஷமங்களாயுண்டாகும் அத்தன்மைகள் நாலாம் மாதத்தில் வியக்தமாய்த் தோன்றுகின்றது.

ஶ்லோகம்.

பும்ஸாம் ஸ்தை^{2}ர்யாத^{3}யோ பா^{4}வா:பூ^{4}தத்வாத்^{3}யாஶ் ச யோஷிதாம்
நபும்ஸகே து தே மிஶ்ரா ப^{4}வந்தி ரகு^{4}நந்த^{3}ன ! (20)

வியாக்யானம்: **- ரகு4நந்த^{3}ன** - ஓ ராமா, **பும்ஸாம் -** புருஷர்ககளுக்கு **ஸ்தைர்யாதய**: - சலனமற்றிருத்தல் முதலிய, **பாவா**: - தன்மைகளும், **யோஷிதாம்** - பெண்களுக்கு, **பூ^{4}தத்வாத்^{3}யா**: - சலன முதலியவைகளும், **நபும்ஸகே** - ஆண் பெண்ணல்லாதனிடம், **தே** - அத்தன்மைகள், **மிஶ்ரா**: - கலந்தவைகளாகவும், **ப^{4}வந்தி** - இருக்கின்றன.

பொழிப்புரை: - ஓ ராமா புருஷர்களுக்கு நிச்சலமாயிருத்தல் முதலிய தன்மைகளும் ஸ்திரீகளுக்கு சலனமுறுதல் முதலிய தர்மங்களும் அலியினிடம் அவ்விருதன்மைகளும் கலந்தனவாயும் இருக்கின்றன.

ஶ்லோகம்.

மாத்ருஜம் சாsஸ்ய ஹ்ருத3யம் விஷயா னபி4 காங்க்ஷதி
ததோ மாதுர் மனோபீ4ஷ்டம் குர்யாத்3 க3ர்ப4 விவ்ருத்3த4யே (21)

வியாக்யானம்: - **அஸ்ய** - கர்ப்பப்பிரஜையினது, **ஹ்ருதயம்** - இருதயகமல மானது, **மாத்ருஜம்** - அன்னையின் ஹ்ருதயத்தாலுண்டாவதாய்க்கொண்டு, **விஷயாந்** - விஷயங்களை, **அபிகாங்க்ஷதி** - விரும்புகின்றது. **அத**: - ஆதலால், **க3ர்ப4 விவ்ருத்3த4யே** - கர்ப்பவிர்த்தியின் பொருட்டு, **மாத்ரு மனோபீ4ஷ்டம்** - அன்னையின் மனத்திருப்தியை, **குர்யாத்** - செய்ய வேண்டும்.

பொழிப்புரை: - கர்ப்பத்திலுள்ள பிரஜையினது ஹ்ருதயமானது அன்னையின் ஹ்ருதயத்தாலுண்டாவதாய்க் கொண்டு விஷயங்களை விரும்புகின்றது ஆதலால் கர்ப்பவிருத்தியின் பொருட்டு கர்ப்பிணியின் மனத்திருப்தியைச் செய்யவேண்டும்

ஶ்லோகம்.

தாம் ச த்3விஹ்ருத3யாம் நாரீ மாஹுர் தௌ3 ஹ்ருதி3னீம் தத:
அதா3னாத்3 தௌ3ஹ்ருதா3னாம் ஸ்யுர்க3ர்ப்4பஸ்ய வ்யங்க3தாத3ய: (22)

வியாக்யானம்: - **தத**: - ஆதலால் கர்ப்பிணியாகிய, **த்3விஹ்ருத3யாம்** - இருஹ்ருதயமுள்ள, **தாம்** - அந்த, **நாரீம்** - பெண்ணை, **தௌஹ்ருதிநீம்** - தௌஹ்ருதி நீ என்று, **ஆஹு**: - சொல்லுகின்றனர், **தோஹதாநாம்** - விரும்பிய அன்னபானாதிகளை, **அதானாத்** - கொடுக்காவிடில், **கர்ப்பஸ்ய** - கர்ப்பத்திற்கு, **வ்யங்கதாதய:** - அங்கஹீனத்தன்மை முதலியன, **ஸ்யு** - எற்படும்,

பொழிப்புரை: - ஆதலால் கர்ப்பிணியாகிய இருஹ்ருதயமுள்ள அம்மங்கையை தௌஹ்ருதிநீ என்று சொல்லுகின்றனர் கர்ப்பிணிவிரும்பிய அன்னபானாதிகளைத் தராவிடில் கர்ப்பத்திற்கு அங்கஹீனத்துவமுதலியன எற்பார்.

ஶ்லோகம்

மாதுர் யத்3 விஷயே லோப4 ஸ்ததா2ரத்தோ2 ஜாயதே ஸுத:
ப்ரபு3த்3த4ம் பஞ்சமே சித்தம் மாம்ஸ ஶோணித புஷ்டதா (23)

வியாக்யானம்: - **மாதுர்** - அன்னைக்கு, **யத்3 விஷயே** - எந்த விஷயத்தில், **லோப4** - ஆசையோ, **ஸுத** - புதல்வன், **ததா2ர்த்த:** - அதில் பிரியமுடைாவன். **ஜாயதே** - ஆகின்றான், **பஞ்சமே** - ஐந்தாம்மாதத்தில், **சித்தம்** - மனமானது. **ப்ரபு3த்3த4ம்** - நன்றாயறியும் யோக்கிதையுடையதாகும், **மாம்ஸ ஶோணித புஷ்டதா** - மாம்ஸரத்தம் இவைபுஷ்டியடையும்.

பொழிப்புரை: - அன்னைக்கு எவ்விஷயத்தில் விருப்பமுள்ளதோ அவ்விஷயம் புதல்வனாலும் விரும்பப்படுவதாம் ஐந்தாம் மாதத்தில் மனம் நன்றா யறியக் கூடிய யோக்கிதை யுடையயுடைதாம் மாம்ஸரத்தம் இவைகளும் புஷ்டி யடையும்.

ஶ்லோகம்.

ஷஷ்டேsஸ்தி2 ஸ்நாயு நக2ரகேஶ லோம விவிக்ததா
ப3லவர்ணௌ சோபசித்தௌ ஸப்தமே த்வங்க3 பூர்ணதா (24)

வியாக்யானம்: - **ஷஷ்டே** - ஆறாம்மாதத்தில், **அஸ்தி2 ஸ்நாயு நக2ரகேஶ லோம விவிக்ததா** - எலும்புஸ்நாயுப்பசைநகம் தலைமயிர் மற்ற இடமுள்ள ரோமம் இவை தோன்றுகின்றன. **பலவர்ணௌச** - பல வாணங்களும், **உபசிதௌ** விருத்தியடையும், **ஸப்தமேது** - எழாமாதத்தில், **அங்கபூர்ணதா** - அங்கங்களெல் லாம் பூர்த்தியடையும்.

பொழிப்புரை: - ஆறாமமாதத்தில் எலும்பு ஸ்நாயு நககேச லோமங்கள் தோன்றும் பலவானங்களும் விருத்தியடையும் ஏழாம்மாதத்தில் அங்கங்கள் பரிபூர்த்தியாகும்

ஶ்லோகம்.

பாதா3ந்தரித ஹஸ்தாப்4யாம் ஶ்ரோத்ர ரந்த்4ரே பிதா4ய ஸ:
உத்3விக்3னோ க3ர்ப4 ஸம்வாஸா த3ஸ்தி து3:க2 ப4யான்வித: (25)

வியாக்யானம்: - பாதா3ந்தரித ஹஸ்தாப்4யாம் - கால்களுக் கிடையில் சென்றதைகளால், **ஸ:** - அந்தகர்ப்பத்திலுள்ள சிசு, **ஶ்ரோத்ர ரந்த்ரம்** - காதோட்டைகளை, **பிதா4ய** - முடிக்கொண்டு, **க3ர்ப4 ஸ்ம்வாஸாத** - கர்ப்பவாஸத்தினால், **உத்3விக்னோ** - மிக்ககிலேசமுற்றதாய்க கொண்டு, **க3ர்ப4 ப4யான்வித:** - கர்பபவாஸபயத்தினால் பீடிக்கப்பட்டதாய்க கொண்டு, **அஸ்தி** - இருக்கின்றது.

பொழிப்புரை: - அந்தக் கர்ப்பசிசுவானது கால்களுக்கிடையில் சென்ற கைகளால் காதொட்டைகளை, மூடிக்கொண்டு கர்ப்ப வாஸத்தினால் மிக்ககி

லேசமுற்றதாய்க கொண்டு கர்பபவாஸ பயத்தினால் பீடிக்கப்பட்டதாய்க் கொண்டிருக்கின்றது.

ஶ்லாகம்.

ஆவிர்ப்பூ⁴த ப்ரபோ³தோ⁴sஸெள க³ர்ப⁴ து³:கா²தி³ ஸம்யுத:
ஹா கஷ்டமிதி நிர்விண்ண: ஸவாத்மான்ம் ஶோஶுசீத்யத² **(26)**

வியாக்யானம்: - **அஸெள** - இந்தச்சிசுவானது, **ஆவிர்ப்பூ⁴தஸ்வரூப:** - தோன்றிய நிஜஸ்வரூபத்தை யுடையதாய்க்கொண்டு, **கர்ப்பதுக்காதிஸம்யுத**: கர்ப்பதுக்கமுதலியவைகளை யுடையதாய், **அத** - பிறகு, **நிர்விண்ண** - வைராக்கிய முடையதாய், **ஹா கஷ்டமிதி** - அந்தோ கஷ்டமென்று, **ஸ்வாத்மானம்** - தன்னைக்குறித்து, **சோகசீதி** - மிகவும் சோகமடைகின்றது.

பொழிப்புரை: - இந்தச் சிசுவானது தோன்றிய நிஜஸ்வரூபத்தை யுடையதாய் கர்ப்பதுக்கானுபவத்தோடு கூடியதாய்க் கொண்டு வைராக்கியமுடையதாய் அந்தோ கஷ்டமென்று தன்னைக் குறித்து மிக்க சோசாகமடைகின்றது.

ஶ்லோகம்.

அனுபூ⁴தா மஹாsஸஹ்ய புரா மர்மச் சி²தோ³sஸக்ருத்
கரம்ப⁴ வாலுகா ஸ்தப்தா சாsத³ஹ்யந்தாsஸுகா²ஶயா: **(27)**

வியாக்யானம்: - **மர்மச் சி²த** - மர்மங்களைச் சேதியபனவாகிய துன்பங்களை யுடைய, **மஹாsஸஹ்யபுர** - மிகவும் ஸகிக்கக்கூடாத நரகதேஹங்கள், **அஸக்ருத** - பலகோடி முறை, **அனுபூ⁴தா:** - அனுபவிக்கப்பட்டன. **கரம்ப⁴ வாலுகா ஸ்தப்தாச** - (வறுத்தமா) வறுக்கப்பட்ட மாவு போன்ற மணல்களில் வறுக்கப்பட்டவாகளாய்க் கொண்டு, **அஸுகாசயா** - ஸுகஸங்கல்பபமற்றவர்களாய், **அதஹ்யந்த** - தஹிக்கப்பட்டனம்

பொழிப்புரை: - மர்மங்களைச் சேதிப்பனவாகிய துன்பங்களை யுடைய மிகவும் ஸகிக்கக் கூடாதனவாகிய எண்ணிறந்த தேஹங்களைப் பெற்று எவ்வளவோ துன்புற்றனம். வறுத்தமாபோலுள்ள வறுக்கப்பட்ட மணல்களில் வறுக்கப்பட்டு மஹா துன்பத்தோடு தஹிக்கப்பெற்றனம்.

ஶ்லோகம்.

ஜட²ரானல ஸந்தப்தா: பித்தாக்²ய ரஸ விப்லுஷ:
க³ர்பா⁴ஶயே நிமக்³னந்து த³ஹந்த்யதிப்⁴ருஶம் ஹி மாம் **(28)**

வியாக்யானம்: - க3ர்ப்பா4ஶயே - கர்ப்பகோசத்தில், **நிமக்3னம்** - அகப்பட்டுக் கொண்டவனாகிய, **மாம்** - என்னை, **ஜட2ரானல ஸந்தப்தா: க்2ய ரஸ விப்ருஷ:** - ஜடராக்நியால் கொதிக்கப் பெற்ற பித்தநீர்த்துளிகள், **அதிப்ருசமஹி** - மிக்கக் கடுமையாய், **தஹந்தி** - கொளுத்துகின்றன

பொழிப்புரை: - கர்ப்பகோசந்திலகப்பட்டு கொண்டவனாகிய என்னை ஜடராக்கிகிநியால் கொதிக்கபெற்ற பித்தநீர்த்துளிகள் மிகவும் கடுமையாய்த் தஹிக்கன்றன.

ஶ்லோகம்.

உத3ர்ய க்ரிமி வக்த்ராணி கூட ஶால்மலி கண்டகை:
துல்யானி ச துத3ந்த்யார்த்தம் பார்ஶ்வாஸ்தி2 க்ரகசார்தி3தம் (29)

வியாக்யானம்: - **பார்ஶ்வாஸ்தி2 க்ரகசார்தி3தம்** - வில்லப்பக்கத்திலுள்ள ரம்பம் போன்ற எலும்புகளால் தொந்தரையடைந்தவனாகிய என்னை, **கூட ஶால்மலி கண்டகை:** - முள்ளிலவையின் முள்ளுக்கு, **துல்யானி** - நிகராயுள்ள, **உத3ர்ய க்ரிமி வக்த்ராணி** - உதரத்திலுள்ள புழுக்களின் வாய்களும், **துதந்தி** - ஹிம்ஸிக்கின்றன.

பொழிப்புரை: - விலாப்பக்கத்திலுள்ள ரம்பம் போன்ற எலும்புகளால் தொந்தரையடைந்தவனாகிய என்னை முள்ளிலவையின் முள்ளுகளுக்கு நிகராயுள்ள வயிற்றுப்புழுக்களின் முகங்களும் ஹிம்ஸிக்கின்றன.

ஶ்லோகம்

க3ர்பே4 து3ர்க3ந்த4 பூ4யிஷ்டே2 ஜட2ராக்3னி ப்ரதீ3பிதே
து3:க்க2ம் மயாப்தம் யத் தஸ்மாத் கனீய: கும்ப4 பாகஜம் (30)

வியாக்யானம்: - **ஜட2ராக்3னி ப்ரதீ3பிதே** - ஜடாக்நியால் கொளுத்தப் பெற்றதும், **து3ர்க3ந்த4 பூ4யிஷ்டே2** - கெட்டநாற்ற நிறைந்ததுமாகிய, **க3ர்ப்பே4** - கர்ப்பத்தில், **மயா** - என்னால், **யத்** - எந்த, **து3:க்க2ம்** - துன்பமானது, **ஆப்தம்** - அடையப்பட்டுளதோ, **தஸ்மாத்** - அதிலும், **கும்ப4 பாகஜம்** - கும்பீபாகமெனும் நரகத்தி லுண்டாகும் துன்பமானது, **கநீய:** - அற்பமேயாம்..

பொழிப்புரை: - ஜடராக்கினியால் கொளுத்தப்பெற்றதும், கெட்டநாற்ற நிறைந்ததுமாகிய கர்ப்பத்தில் என்னால் எந்தத் துன்பம் அனுபவிக்கப்பட்டுள்தோ அத் துன்பத்திலும் கும்பீபாக மெனும் நரகத்திலனுபவிக்கும் துன்பம் அற்பமேயாம்.

ஶ்லோகம்.

பூயா ஸ்ருக் ஶ்லேஷ்ம பாயித்வம் வாந்தாஶித்வம் ச யத்³ ப⁴வேத்
அஶுசௌ க்ரிமி பா⁴வஶ்ச தத் ப்ராப்தம் க³ர்ப⁴ சா⁴யினா (31)

வியாக்யானம்: - **பூயா ஸ்ருக் ஶ்லேஷ்ம பாயித்வம்** - சீழ்ரத்தம் கபம் இவைகளைக் குடித்தல், **வாந்தாஶித்வம்** ச - வாந்தத்தைப்புசித்தல், **அசுசௌ** - மலத்தில், **க்ரிமி பா⁴வஶ்ச** - புழுபோலாதல் ஆகிய, **யத்** - யாதொன்று, **பவேத்** - ஏற்படுவதோ, **தத்** - அஃது, **க³ர்ப⁴ சா⁴யினா** - கர்ப்பத்திலுறங்கியவனாகிய என்னால், **ப்ராப்தம்** - அனுபவிக்கப்பட்டுளது.

பொழிப்புரை: - சீழ் ரத்தம் கபம் இவைகளைக் குடித்தல் வாந்தத்தைப் புசித்தல் மலத்தில் புழுபோலாதல் ஆகிய இவைகளும் கர்ப்பவாஸம் செய்யும் என்னால் அனுபவிக்கப்பட்டுளது.

ஶ்லோகம்.

க³ர்ப⁴ ஶய்யாம் ஸமாருஹ்ய து³:க²ம் யாத்³ருங் மயாபி தத்
நாதிஶேதே மஹா து³:க்க²ம் நிச்ஶேஷம் நரகேஷு யத் (32)

வியாக்யானம்: - **க³ர்ப⁴ ஶய்யாம்** - கர்ப்பமாகிய படுக்கையை, **மாருஹ்ய** - அடைந்து, **மயா** - என்னால், **யாத்ருக்** - எத்தஸகைய, **துக்கம்** - துன்பம், **ஆபி** - அடையப்பட்டதோ, **தத்** - அந்த துக்கத்தை, **நிச்ஶேஷ நரகேஷு** - ஸகல நரகங்க ளிலும் ஏற்படுவதாகிய, **மஹாதுக்கம்** - பெருந்துக்கமானது, **நாதிசேதே** - அதிசயிக்கின்ற தில்லை.

பொழிப்புரை: - கர்ப்பகோசத்தையடைந்து என்னால் எத்தகைய துக்கம் அனுபவிக்கப்பட்டதோ அதனை ஸகல நரகங்களிலுமுள்ள பெருந்துக்கமும் மீறுகின்றதில்லை

ஶ்லோகம்.

ஏவம் ஸ்மரன் புரா ப்ராப்தா நானா ஜாதீஶ்ச யாதனா:
மோக்ஷோபாய மபி⁴த்⁴யாயன் வர்த்ததே஽ப்⁴யாஸ தத் பர: (33)

வியாக்யானம்: - **ஏவம்** - இவ்வாறு, **புரா** - பூர்வம், **ப்ராப்தா** - அடையப் பட்டனவாகிய, **நானா ஜாதீஶ்ச** - பற்பலதேஹங்களையும், **யாதனா: ச** - துன்பங்களையும், **ஸ்மரன்** - நினைந்துகொண்டு, **மோக்ஷோபாயம்** - மோக்ஷத்திற்கு உபாயத்தை, **அபி⁴த்⁴யாயன்** - சிந்தித்துக்கொண்டு, **அப்யாஸதத்பா** - அப்பியாஸத் தையே முக்கியமாய்க்கொண்டவனாய், **வர்த்ததே** - இருக்கிறான்.

பொழிப்புரை: - இவ்வாறு பூர்வம் அடையப்பட்ட ஜன்மங்களையும் துன்பங்களையும் நினைத்துகொண்டு மோக்ஷோபாயத்தைச் சிந்தித்துக்கொண்டு அப்பியாஸதத்பரனாய் இருக்கிறான்.

ஶ்லோகம்.

அஷ்டமே த்வக் ஶ்ருதீ ஸ்யாதாம் ஓஜஸ் தேஜஶ்ச ஹ்ருத்[3] ப[4]வம்
ஶூத்[3]த[4]மா பீத ரக்தம் ச நிமித்தம் ஜீவிதே மதம் (34)

வியாக்யானம்: - **அஷ்டமே** - எட்டாமாதத்தில், **த்வக் ஸ்ருதீ** - தோலும் சலனமும், **ஸ்யாதாம்** - உண்டாகும், **ஹ்ருத்[3] ப[4]வம்** - ஹ்ருதய கமலத்திலிருந்து திக்கின்றதும், **ஜீவிதே** - ஜீவனஹேதுவாய், **ஆபீத ரக்தம் ச** - கொஞ்ஜம் மஞ்சள் நிறம்கலந்த சென்னிறமுடையதாகிய ஓஜ எனும் தாதுபரிணாயமும், **தேஜஶ்ச** - தேஜஶ் எனும் தாது பரிணாமும் உண்டாகின்றது.

பொழிப்புரை: - எட்டாமாதத்தில் தோலும் சலனமும் உண்டாகின்றது. ஹ்ருதய கமலத்திலுண்டாகின்றதும் ஜீவதாரண ஹேதுவும் வெண்ணிறமும் கொஞ்சம் மஞ்சள் கலந்த சென்னிறம் பெற்றதுமாகிய ஓஜ தேஜ எனும் தாது பரிணாமங்களும் ஏற்படுகின்றன.

ஶ்லோகம்.

மாதரம் ச புனர்க[3]ர்ப[4]ம் சஞ்சலம் தத் ப்ரதா[4]வதி
ததோ ஜாதோऽஷ்டமே மாஸி ந ஜீவத் யோகஸோஜ் ஜி[4]த: (35)

வியாக்யானம்: - **க[3]ர்ப்ப[4]ம்** - கர்ப்பமானது, **சஞ்சலம்** - சலிக்கின்றதாயினும். றம், **மாதரம்** - அன்னையின் வயிற்றிலிருத்தலயே, **ப்ரதா[4]வதி** - விசேஷாய்க் கொண்டு சலிக்கின்றது, **தத** - ஆதலால், **அஷ்டமே** - எட்டாம், **மாஸி** - மாதத்தில், **ஜாத** - உண்டானசிசு, **ஓஜஸா** - ஓஜஸ் எனும் தாதுவினால், **உஜ்ஜித** - இல்லாத தாய்க் கொண்டு, **ந ஜீவதி** - ஜீவிக்கின்றதில்லை.

பொழிப்புரை: - கர்ப்பமானது சலிக்கின்றதாயினும் மீண்டும் அன்னையின் வயிற்றிலேயே இருக்க வேண்டிய தவசியமாதலால் அவ்வாறு இருந்து கொண்டு விசேஷமாய்ச் சலிக்கின்றது. ஆதலால் எட்டாம் மாதத்தில் பிறந்த சிசு ஓஜஸ் என்பதாக பூர்வம் சொல்லப்பட்ட தாது பரிணாமமில்லாததாய்க் கொண்டு ஜீவிக்கின் றதில்லை.

ஶ்லோகம்.

கிஞ்சித் கால மவஸ்தா²னம் ஸம்ஸ்காராத் பீடி³தாங்க³வத்
ஸமய: ப்ரஸவஸ்யாஸ்ய மாஸேஷு நவமாதி³ஷு (36)

வியாக்யானம்: - **பீடி³தாங்க³வத்** - பீடையடைந்த தேஹமுடையவன் போல், **ஸமஸ்காராத்** - ஸம்ஸ்காரத்தால் அப்பியாஸவி சேஷத்தால், **கிஞ்சித்காலம்** - ஸ்வல்ப்பகாலம், **அவஸ்தானம்** - இருத்தல் ஏற்படுகின்றது, **ப்ரஸவஸ்ய** - பிறத்தலுக்கு, **ஸமயம்** - சமயம், **நவமாதிஷு** - ஒன்பதாவது முதலிய, **மாஸேஷு** - மாதங்களில், **ஸ்யாத்** - ஏற்படும்.

பொழிப்புரை: - பீடையடைந்த தேஹமுடையவன் போல, அதன் அப்பியாஸ விசேஷத்தால் கொஞ்சகாலம் இருத்தல் ஏற்படுகின்றது. பிறகு ஒன்பதாவது முதலிய மாதங்களில் பிரஸவ ஸமயம் எற்படும்.

ஶ்லோகம்.

மாதுரஸ்ரவஹாம் நாடீ³ மாஶ்ரித்யா஽ன்வவதாரிதா
நாபி⁴ஸ்த² நாடீ³ க³ர்ப⁴ஸ்ய மாத்ர஽ஹார ரஸாவஹா (37)

வியாக்யானம்: - **மாது:** - அன்னையின், **அஸ்ரவஹாம்** - ரக்தத்தைவ ஹிக்கின்ற தாகிய, **நாடீம்** - நாடியை, **ஆச்ரித்ய** - ஆச்ரயித்து, (பற்றிக்கொண்டு) **அந்வவதாரிதா** - ஏற்பட்டுள்ள, **நாபி⁴ஸ்த² நாடீ³** - தொப்புளிலுள்ள நாடியானது, **கர்ப்பஸ்ய** - கர்ப்பசிசுவுக்கு, **மாத்ராஹபரஸாவஹா** - அன்னையின் அன்ன ரஸத்தை சேர்ப்பிப்பதாம்..

பொழிப்புரை: - அன்னையின் ரக்ததகை வஹிக்கின்றதாகிய நாடியைப் பற்றிக்கொண்டு, ஏற்பட்டுள்ள தொப்புளிலுள்ள நாடி.யானது கர்ப்பத்திற்கு அன்னையின் அன்னரஸத்தைச் சேர்ப்பிக்கின்றதாயுள்ளது

ஶ்லோகம்

தேன ஜீவதி க³ர்ப்போ⁴஽பி மாத்ரா஽ஹாரேண போஷித:
அஸ்தி² யந்த்ர விநிஷ்பிஷ்ட: பதித: குக்ஷி வர்தமனா (38)

மேதோ³ ஸ்ருக்³ தி³க்³த⁴ ஸர்வாங்கோ³ ஜராயு பட ஸம்வ்ருத:
நிஷ்க்ராமன் ப்⁴ருஶ து³:க்கார்த்தோ ருத³ன்னுச்சை ரதோ⁴முக²: (39)

யத்னாதி³வ விநிர்முக்த: பதத் யுத்தான ஶாய்யுத (40)

வியாக்யானம்: - **கர்ப்ப அபி** - கர்ப்பசிசுவும், **தேன** - அந்தக் தொப்புள் நாடியினால், **மாத்ராஹாரேண** - அன்னையின் அன்னையின் ஆகாரத்தால், **போஷித:** - போஷிக்கப்பட்டதாய்க்கொண்டு, **ஜீவதி** - ஜீவிக்கின்றது, **அஸ்தி² யந்த்ர விநிஷ்பிஷ்ட:** - எலும்பினால் சூழப்பட்டுள்ள கர்ப்பகோசத்தில் நெருக்குள்ளவனும், **மேதோ³ ஸ்ருக்³ தி³க்³த⁴ ஸர்வாங்க:** - மேதஸ் (வஸை எனும் இருதயமாம்ஸம்) ருதிரம் இவைகளால் பூசப்பெற்ற ஸகல அங்கங்களையும் உடையவனும், **ஜராயு புட ஸம்வருத:** - கர்ப்ப வடிவமாகிய ஓர் புடத்தால் சூழப்பெற்றவனுமாய், **குக்ஷி வர்த்மனா** - யோனிவாயாக, **பதித:** - வந்தவனாய்க்கொண்டு, **அதோமுக²:** - கீழ்முகமுடையவனாய், **ப்⁴ருஶ து³:க்கார்த்தோ:** - மிக்க துக்கத்தால் பீடிக்கப் பட்டவனாய், **உச்சை: ருதன்** - உரக்கக்கத்திக்கொண்டு, **நிஷ்க்ராமன்** - வெளிப் படுகின்றவனாகின்றான், **ஏவம்** - இவ்விதம், **யந்த்ராத்** - கர்ப்பகோசத்திலிருந்து, **விநிர்முக்த:** - வெளிப்படுகின்றவனாய்க் கொண்டு, **உத்தானசாயி** - மடிமீது படுக்கக் கூடியவனாய், **பததி** - விழுகின்றான்.

பொழிப்புரை: - கர்ப்பசிசுவானது அந்தத் தொப்புள் நாடியால் அன்னையின் ஆகாரத்தினால் போஷிக்கப்பட்டதாய்க் கொண்டு ஜீவிக்கின்றது. எலும்பினால் சூழப்பட்டுள்ள கர்பபகோசத்தில் நெருக்குள்ளவனும் மேதஸ்ருதிரம் இவைகளால் பூசப்பெற்றவனுமாய் யோனிவழி வந்து கீழ்முகமுடையவனாய் மிகவும் துக்கத்தால் நொந்தவனுமாய் உரக்கக்கத்திக்கொண்டு வெளிப் படுகின்றான். இவ்விதம் கர்ப்பகோ சத்திலிருந்து வெளிப்பட்டவனாய்க் கொண்டு மடிமீது வைக்கக்கூடியவனாய் விழுகின்றான்.

ஶ்லோகம்.

அகிஞ்சித்க ஸ்ததா³ லோகைர் மாம்ஸ பேஶீவத்ssஸ்தி²த:
ஶ்வ மார்ஜாராதி³ த³ம்ஷ்ரிப்யோ ரக்ஷ்யதே த³ண்ட³பாணிபி⁴: (41)

பித்ருவத்³ ராக்ஷஸம் வேத்தி மாத்ருவட்³ டா³கினீ மபி

வியாக்யானம்: - **ததா** - அப்போது, **அகிஞ்சித்க:** - யாதும் செய்ய இயலாதவனும், **மாம்ஸபேசிவத்** - மாம்ஸபிண்டம் போல், **ஆஸ்தித:** - இருக்கின்றவனும், **தண்டபாணிபி:** - தண்டம் கையிலுடையவர்களாகிய, **லோகை** - ஜனங்களால், **ச்வமார்ஜ் ஜாராதிதம்ஷ்ட்ரிபய** - நாய்பூனை முதலியவைகளினின்றும், **ரக்ஷ்யதே** - பாதுகாக்கப்படுகின்றான், **ராக்ஷஸம்** - அரக்கனை, **பித்ருவத்** - தகப்பனைப்போலும், **டாகிநீம்** - டாகிநீமுதலிய தேவதையை, **மாத்ருவத்** - தாய்போலும், **வேத்தி** எண்ணுகின்றான்.

பொழிப்புரை: - அப்போது யாதும் செய்ய இயலாதவனாய் மாம்ஸப் பிண்டம் போன்றவனாய்த் தண்டத்தைக் கையிலுடையவர்களாகிய ஜனங்களால் நாய் பூனை முதலியவைகளால் பயப்படுவராதிருப்பதற்காகக்காக்கப்படுகின்றான். ராக்ஷஸனை தகப்பன் போலும் டாகிநீ தேவதையை தாய்போல் எண்ணுகின்றான்.

ஶ்லோகம்.

பூயம் பயோ வத³க்ஞானாத்³ தீ³ர்க்க⁴ கஷ்டந்து ஶைஶவம் (42)

ஶ்லேஷ்மணா பிஹிதா நாடீ³ ஸுஷும்னா யாவதே³வ ஹி
வ்யக்த வர்ணம் ச வசனம் தாவத்³ வக்தும் ந ஶக்யதே (43)

வியாக்யானம்: - **பூயம்** - சீழை, **பயோவத்** - பாலைப் போல, **அஞ்ஞானாத்** - அறியாமையால் எண்ணப்பட்டது, **ஶைஶவம்** - சிசுப்பருவமானது, **தீர்க்ககஷ்டம் -** பெருங்கஷ்டத்திற்கு ஹேது, **யாவத்** - எவ்வளவுகாலம், **ஸுஷும்னா** - ஸுஷும்னை எனும், **நாடீ** - நாடியானது, **ச்லேஷ்மணா** - கபத்தால், **பிஹிதா** - சூழப்பெற்றதா யிருக்கின்றதோ, **தாவத்** - அவ்வளவுகாலம் வரையில், **வ்யக்த வர்ணம் ச** - அக்ஷரசுத்தமாய், **வசனம்** - வார்த்தையை, **வக்தும்** - சொல்லுவதற்கு, **ந ஶக்யதே** - இயலுவதில்லை.

பொழிப்புரை: - சீழையபாலைப்போல் அறியாமையால் எண்ணப்பட்டது சிசுப் பருவமானது பெருங்கஷ்டமேயன்றோ எவ்வவவு காலம் ஸுஷும்னையெனும் நாடியானது கபத்தினால் சூழப்பட்டு உள்ளதோ அத்தனை காலம் வரையில் அக்ஷ்ரஸ்பஷ்டமாய் வார்க்தை சொல்ல இயலாதன்றோ.

ஶ்லோகம்.

அத ஏவ ச க³ர்பே⁴sபி ரோதி³தும் நைவ ஶக்யதே
த்ருப்தோsத² யௌவனம் ப்ராப்ய மன்மத² ஜ்வர விஹ்வல: (44)

கா³யத் யகஸ்மா து³ச்சைஸ்து ததா² கஸ்பாச்ச வல்க³தி

வியாக்யானம்: - **அத ஏவ ச** - இக்காரணத்தாலேயே, **கர்ப்பே4sஅபி -** கர்ப்பத்திலும், **ரோதி³தும்** - அழுவதற்கு, **ந சக்யதே ஏவ** - இயலுவதேயில்லை, **அத** - பிறகு, **யௌவனம்** - யௌவனப்பருவத்தை, **ப்ராப்ய -** அடைந்து, **த்ருப்த** - மதித்தவ னாய், **மன்மத² ஜ்வர விஹ்வல:** - ஸ்திரீபோகத்திலேயே ஆவலுள்ளவனாய், **அகஸ்மாத்** - காரணமின்றி சற்றுநேரம், **காயதி** - பாடுகின்றான். **ததா** - அப்படியே, **அகஸ்மாத்ச** - காரணமின்றிச்சற்றுநேரம். **வல்க³தி** - ஓடுகின்றான்.

பொழிப்புரை: - இக்காரணத்தாலேயே கர்பயத்திலும் அழுவதற்கியலுவதே யில்லை. பின்னர் யௌவனப்பருவம் வந்ததும் யாதும் தெரியாதவனாய் மதித்தும் ஸ்திரீபோகமொன்றிலேயே ஆவலுற்றுச்சற்றுநேரம் பாடுவதும் சற்றுநேரம் ஓடுவதும் இவை முதலிய செய்கைகளைச் செய்கின்றான்.

ஸ்லோகம்.

ஆரோஹதி தரூன் வேகா³த் சா²ந்தா னுத்³வேஜயத்யபி
காம க்ரோத⁴ மதா³ந்த⁴ஸ் ஸன் ந காம்ஸசித³பி வீக்ஷதே (45)

வியாக்யானம்: - **வேகா³த்** - வேகமாய், **தரூன்** - மரங்களில், **ஆரோஹதி** - எறுகின்றான், **சாந்தான்** - அடக்கமுடைய பெரியோர்களை. **உத்வேஜயதி** - துன்பப் படுத்துகின்றான், **காமக்ரோதமதாந்த ஸந்** - காமக்குரோதங்களால் மதித்து யாதும் தெரியாதவனாய், **காந்சித் அபி** - எவர்களையும், **நவீக்ஷதே** - லக்ஷியம் செய்கின்ற தில்லை.

பொழிப்புரை: - வேகமாய் மரத்தினிலேறுகிறான் பெரியோர்களைத் துன்புறுத் துகின்றான் காமக்குரோதமதத்தால் யாதும் தெரியாதவனாய் எவர்களையும் லக்ஷியம் செய்கின்றதில்லை.

ஸ்லோகம்

அஸ்தி² மாம்ஸ ஸிராலாயா வாமாயா மன்மதா²லயே
உத்தானபூதி மண்டூ³க பாடிதோத³ர ஸன்னிபே⁴ (46)

ஆஸக்த: ஸ்மரபா³ணார்த்த ஆத்மனா த³ஹ்யதே ப்⁴ருஸம் (47)

வியாக்யானம்: - **அஸ்தி² மாம்ஸ ஸிராலாயா** - எலும்பு மாம்ஸ நரம்பு இவைகளின் சேர்க்கை வடிவமாகிய, **வாமாயா:** - ஸ்திரீயினது, **உத்தானபூதி மண்டூ³க பாடி தோத³ர ஸன்னிபே⁴** - விரிந்து துக்கந்தமுள்ள தவளையின் பிளப்புற்றவயிற்றுக்கு சமானமாகிய, **மன்மதா²லயே** - நிதம்பத்தில், **ஆஸக்த:** - ஆவலுள்ளவனாய், **ஸ்மரபா³ணார்த்த:** - ஸ்த்ரீபோகவிச்சையால் நொந்து, **ஆத்மனா** - மனதினால், **ப்ருசம்** - மிகவும், **தஹ்யதே** - தஹிக்கப்படுகின்றான்.

பொழிப்புரை: - எலும்பு மாம்ஸம் நரம்பு இவைகளின் சேர்க்கை வடிவமாகிய ஸ்திரீயின் விகாரமாய் காணப்படுவதும் கெட்ட நாற்றமுள்ளதுமாகிய தவளையின் பிளப்பு அடிவயிற்றுக்கு (ஆஸனத்துவாரத்திற்கு) நிகராகிய நிதம்பத்தில் ஆவலுடை யவனாய் ஸ்திரீபோக இச்சையால் நொந்து மனதினால் மிக்க தஹிக்கப்படுகின் றான்.

ஸ்லோகம்.

அஸ்தி² மாம்ஸ ஸிரா த்வக்³ப்⁴ய: கிமன்யத்³ வர்த்ததே வபு:
வாமானாம் மாயயா மூடோ⁴ ந கிஞ்சித்³ வீக்ஷதே ஜக³த் (48)

வியாக்யானம்: - **வாமானாம்** - ஸ்திரீகளின், **வபு:** - தேஹமானது, **அஸ்தி2 மாம்ஸ ஸிரா த்வக்3ப்4ய** - எலும்பு மாம்ஸம் நரம்பு தோல் இவைகளைக் காட்டிலும், **அன்யத்** - வேறாக, **கிம்** - யாது, **வர்த்ததே** - இருக்கின்றது, **மாயயா** மாயையால், அஜ்ஞானத்தால், **மூட:** - மோஹித்தவனாய்க்கொண்டு, **ஜகத்** - ஜகத்தை, **கிஞ்சித்** - சிறிதும், **ந வீக்ஷதே** - பரியாலோசனை செய்து பார்க்கின்ற திலை.

பொழிப்புரை: - ஸ்திரீகளின்'ம் தேஹமானது எலும்பு மாம்ஸம் நரம்பு தோல் இவைகளைக் காட்டிலும் வேறாய் யாதுளது அஞ்ஞானத்தால் மோஹித்தவனாய்க் கொண்டு ஜத்தைச் சிறிதும் விவேகித்துப் பார்க்கின்றதில்லை.

ஶ்லோகம்.

நிர்க3தே ப்ராண பவனே தே3ஹோ ஹந்த! ம்ருகீ3த்3ருஶ:
யதா2 ஹி ஜாயதே நைவ வீக்ஷதே பஞ்சஷைர் தி3னை: (49)

வியாக்யானம்: - **ப்ராண பவனே** - ப்ராணவாயுவானது, **நிர்க்கதே** - வெளிப் போய்விடின், **ம்ருகீத்ருச:** - ஸ்திரீயின், **தேஹ:** - தேஹமானது, **பஞ்சஷை:** - ஐந்தாறு, **தி3னை:** - தினங்களில், **யதாஹி** - எப்படி, **ஜாயதே** - ஆகின்றதோ, **ஹந்த** - அந்தோந, **வீக்ஷதே ஏவ** - அது பார்க்கப்படுகின்றதில்லை.

பொழிப்புரை: - ப்ராணவாயுவானது வெளிப்போய்விடின் ஸ்திரீயின் தேக மானது ஐந்தாறு தினங்களில் எவ்வாறாகுமோ அந்தோ அதனை ஆலோசித்துப் பார்க்கின்றதில்லை.

ஶ்லோகம்.

மஹா பரிப4வ ஸ்தா2னம் ஜராம் ப்ராப்யாதி து3:க்கி2த:
ஶ்லேஷ்மணா பிஹிதோரஸ்கோ ஜக்3த4மன்னம் ந ஜீர்யதி (50)

ஸன்ன த3ந்தோ மந்த3 த்3ருஷ்டி: கடு திக்த கஷாய பு4க்

வியாக்யானம்: - **மஹா பரிப4வ ஸ்தா2னம்** - பெரும் அவமதிப்பிற் கிடமாகிய, **ஜராம்** - கிழத்தன்மையை, ப்ராப்யாதி - அடைந்து, **அதி து3:கி2த** - மிக்க துன்புறகின்றவனாகின்றான், **ஶ்லேஷ்மணா** - கபத்தால், **பிஹிதோரஸ்க:** - மறைக்கப்பட்ட மார்பினையுடையவனாகின்றான், **ஜக்தம்** - புசிக்கப்பட்ட, **அன்னம்** - உணவு, **ந ஜீர்யதி** - ஜரிக்கின்றதில்லை, **ஸன்ன த3ந்தோ** - உதிர்ந்து போன பற்களையுடையவனுமா, **மந்த3 த்3ருஷ்டி:** - குன்றிய பார்வையுடையவனும். **கடு திக்த கஷாய பு4க்** - கசப்பு துவர்ப்பு கலப்புச் சுவை இவைகளைப் புசிக்கின்றவனும் ஆகின்றான்.

பொழிப்புரை: - பெரும் அவமதிப்பிற்கிடமாகிய கிழத்தன்மையை அடைந்து மிக்கத் துன்புறுகின்றான். கபத்தினால் கட்டப்பட்ட மார்புடையவனாகின்றான் உண்ட உணவு செரிப்பதில்லை. பற்களுதிர்ந்து பார்வையும் குன்றிப்போன நிலைமை யுடையவனாய்க் கசப்புதுவர்ப்பு முதலியவைகளைப் புசிப்பவனாகின்றான்.

ஶ்லோகம்.

வாதபு4க்3ன கடி க்3ரீவா கரோரு சரணோऽப3ல:
க3தா3யுத ஸமாவிஷ்ட: பரிபூ4த: ஸ்வப3ந்து4பி4: (51)

வியாக்யானம்: - **வாதபு4க்3ன கடி க்3ரீவா கரோரு சரண:** - வாயுவால் தங்கப் பெற்றுக்கோணிய இடை கழுத்து துடை கால் இவைகளையுடையவனும், **அபல** - பலமற்றவனும், **கதாயுத ஸமாவிஷ்ட:** - அளவிலடங்காத பிணிகளையுடைய வனும், **ஸ்வப3ந்து4பி4:** - தனது பந்துக்களால், **பரிபூ4த:** - அவமதிக்கப்பட்டவனும் ஆகின்றான்.

பொழிப்புரை: - வாயுவின் பீடையால் கோணிப்போன இடைகழுத்து கை துடைகால் இவைகளையுடையவனும் பலமற்றவனும் எண்ணிறநத ரோகங்களை யுடையவனும் தனது பந்துக்களால் அவமதிக்கப்பட்டவனுமாகின்றான்.

ஶ்லோகம்.

நிஶ்ஶௌசோ மலதி3க்3தா4ங்க: ஆலிங்கி3த வரோஷித:
த்4யாயன் னஸுலபா4ன் போ4கான் கேவலம் வர்த்ததேऽசல: (52)

வியாக்யானம்: - **நிஶ்ஶௌசோ** - சுத்தியில்லாதவனும், **மலதி3க்3தா4ங்க:** - மலத்தால் பூசப்பெற்ற அங்கமுடையோனும், **ஆலிங்கிதவரோஷித:** - ஆலிங்கனம் செய்யப் பெற்ற பெருந்தாபமுடையோனும் கேவலம், **அஸுலபா4ன்** - எளிதில் கிடைக்காதனவாகிய, **போ4கான்** - போகங்களையே, **த்4யாயன்** - சிந்தித்துக்கொண்டு, **அசல:** - அசைவற்றவனாய், **வர்த்ததே** - இருக்கின்றான்.

பொழிப்புரை: - சுத்தியில்லா வனும் மலம் பூசப்பெற்ற தேகமுடையவனும் தேஹம் கொடுமையாய்ப் எரிக்கப்பெற்றவனும் எளிதில் கிடைக்காதனவாகிய போகங்களையே சிந்தித்துக்கொண்டு இருக்குமிடம் விட்டசையாம லிருக்கின்றான்.

ஶ்லோகம்.

ஸர்வேந்த்3ரிய க்ரியா லோபாத்3 ஹாஸ்யதே பா3லகை ரபி
ததோ ம்ருதிஜ து3:க்க2ஸ்ய த்3ருஷ்டாநதோ நோபலப்4யதே (53)

வியாக்யானம்: - **ஸர்வேந்த்3ரிய க்ரியா லோபாத்3** - எந்த இந்திரியமும் வேலை செய்வதற்கில்லாமற் போனமையால், **பா3லகை: அபி** - சிறுபாலர்களாலும், **ஹாஸ்யதே** - பரிஹஸிக்கப்படுகின்றான், **தத** - பிறகு, **ம்ருதிஜதுக்கஸ்ய** - மரணகாலத்துக்கத்திற்கு, **த்ருஷ்டாந்த:** - திருஷ்டாந்தமானது, **நஉபலப்4யதே** - காணப் படுகின்றதில்லை.

பொழிப்புரை: - எவ்விந்திரியமும் வேலை செய்வதற்கில்லாமற் போனமையால் சிறுபாலர்களும் பரிகஸிக்கின்றார்கள். அதன் பிறகு மரணகாலத் துக்கத்திற்கு நிகரில்லை.

ஶ்லோகம்.

யஸ்மாத் பி3ப்4யதி பூ4தானி ப்ராப்தான்யபி பராம் ருஜம்
நீயதே மருத்யுனா ஜந்து: பரிஷ்வக்தோऽபி ப3ந்து4பி4: **(54)**

ஸாக3ராந்தர் ஜலக3தோ க3ருடே3னேவ பன்னக3: **(55)**

வியாக்யானம்: - **பராம் ருஜம்** - பெரும்பிணியை, **ப்ராப்தான் அபி** - அடைந்தனவுமாகிய, **பூ4தானி** - பிராணிகள், **யஸ்மாத்** - எந்த எமனிடம், **பிப்யுதி** - பயப்படுகின்றனரோ, **பந்துபி** - பந்துக்களால், **பரிஷ்வக்த: அபி** - தழுவப்பட்டுள்ள வனாயினும், **ஜந்து:** - மனிதன், **ஸாக3ராந்தர் ஜலக3த:** - ஸமுத்திரத்தி னடுஜலத் தில் உள்ள, **பன்னக3:** - ஸர்ப்பமானது, **க3ருடே3னேஇவ** - கருடனாலே போல், **ம்ருத்யுனா** - யமனால், **நீயதே** - கொண்டுபோகப்படுகின்றான்.

பொழிப்புரை: - பெரும்பிணிகளையுடைய பிராணிகளும் எவனிடம் பயப்படு கின்றனவோ பந்துக்களால் தழுவப்பட்டிருக்கினும் சமுத்திர நடுவிலுள்ள ஸர்ப்பம் கருடனாலேபோல எமனால் கொண்டு போகப்படுகின்றனர்.

ஶ்லோகம்.

ஹா! காந்தே! ஹா! த4னம் புத்ரா:! க்ரந்த3மான: ஸுதா3ருணம்
மண்டு3க இவ ஸர்ப்பேண ம்ருத்யுனா நீயதே நர: **(56)**

வியாக்யானம்: - **ஹா** - ஹா, **காந்தே** - ஒ பத்நீ, **ஹா** - ஹா, **த4னம்** - பணம் - **புத்ரா** - புதல்வர்களே என்று, **ஸுதா3ருணம்** - மிக்கக்கோமாய் **க்ரந்த3மானம்** - அழுகின்றவனாகிய, **நர:** - மனிதன், **மண்டு3க** - தவளையானது, **ஸர்ப்பேண இவ** - பாம்பினாலே போல, **ம்ருத்யுனா** - எமனால், **நீயதே** - கொண்டு போகப்படுகின்றான்.

பொழிப்புரை: - ஹா பத்நீ ஹா தனமே புத்திரர்களே என்று மிக்கப் பயங்கரமாய் அழுகின்றவனாயினும் தவளையானது ஸர்ப்பத்தினாலே போல எமனால் கைப்பற்றப்படுகன்றன்.

ஶ்லோகம்.

மர்ம ஸூத்க்ருஷ்யமாணேஷு முச்யமானேஷு ஸந்தி4ஷு
யத்3 து3:க்க2ம் ம்ரியமாணஸ்ய ஸ்மர்யதாம் தன் முமுக்ஷுபி4: (57)

வியாக்யானம்: - **மர்மஸு** - மர்மஸ்தாநங்கள், உன்மத்யமாணேஷு - ப்ராணன் வெளிப்படுவதில் தொந்தரையடையும்போதும், **ஸந்தி4ஷு** - ஸந்திபந்தங்கள், **முச்யமானேஷு** - பிராணனால்விடப்படும் போதும், **ம்ரியமாணஸ்ய** - மரணாவஸ்தையிலுள்ளவனுக்கு, **யத்** - யாதொரு, **துக்கம்** - துக்கமுள்ளதோ, **தத்** - அத்துக்கமானது, **முமுக்ஷுபி:** - மோக்ஷத்தில் விருப்புற்றவர்களால், **ஸ்மர்யதாம்** - சிந்திக்க வேண்டியது.

பொழிப்புரை: - மர்மஸ்தானங்கள் ஹிம்ஸைப்படும்போதும் ஸந்திபந்தங்கள் துடிக்கும் போதும் மரணாவஸ்தையிலுள்ளவனுக்கு எந்த துக்கம் நேருமோ அந்த துக்கம் மோக்ஷத்தில் விருப்புற்றவர்களால் சிந்தித்துப் பார்க்க வேண்டியது.

ஶ்லோகம்.

த்3ருஷ்டாவாக்ஷிப்ய மாணாயாம் ஸமஞ்யா ஹ்ரியமாணயா
ம்ருத்யு பாசே4ன ப3த்3த4ஸ்ய த்ராதா நைவோலப்4யதே (58)

வியாக்யானம்: - த்ருஷ்டௌ - கண்ணானது, **ஆக்ஷிப்யமாணாயாம்** - விழிக்க முடியாது சொருகும் போதும், **ஸம்ஜ்ஞயா** - ஞாபகமும், **ஹ்ரியமாணயா** - குன்றிப்போகவே, **ம்ருத்யு பாசே4ன** - பாசத்தால், **பத்தஸ்ய** - கட்டப்பட்டவனுக்கு, **த்ராதா** - ரக்ஷகன், **ந உபலப்யதே, எவ** - காணப்படுகின்றதேயில்லை

பொழிப்புரை: - கண் விழிக்கமுடியாது சொருகப்படும் போதும் நினைவும் தவிரவே ம்ருத்யு பாசத்தால்கட்டப்பட்டவனுக்கு ரக்ஷகன் காணப்படுகின்றதில்லையன்றோ.

ஶ்லோகம்.

ஸம்ருத்4யமான ஸ்தமஸா மஹச்சித்த மிலாவிஶத்
உபாஹுத ஸ்ததா3 ஞாதீ னீக்ஷதே தீ3ன சக்ஷுருஷா (59)

வியாக்யானம்: - **தமஸா** - அஞ்ஞானத்தால், **ஸம்ருத்⁴யமான:** - தகையப்பட்டவனும், **மஹத்சித்தம்** - நன்றாயுள்ள சித்தத்தை, **ஆவிஶத், இவ** - உடையவன்போல, **ததா** - அப்போது, **உபாஹூத:** - கூப்பிடப்பட்டவனாய் (க்கொண்டு) **தீ³ன சக்ஷுஷா** - தீனமாகிய நேத்திரத்தால், **ஜ்ஞாதீன்** - ஸஹோதரவர்க்கங்களை, **ஈக்ஷதே** - பார்க்கின்றான்.

பொழிப்புரை: - அஞ்ஞானத்தால் தகையப்பட்டவனாய் சரியாய் உள்ள சித்தமுடையவன்போலக் கூப்பிடப்பட்டு ஞாதிகளை தீனத்தன்மையுடன் கூடிய விழியால் பார்க்கின்றான்.

ஶ்லோகம்.

அய: பாஶேன காலேஸ்ய ஸ்நேஹ பாஶேன ப³ந்து⁴பி⁴:
ஆதிமானம் க்ருஷ்யமாணம் தமீக்ஷதே பரிதஸ்த்தா² (60)

வியாக்யானம்: - **காலேன** - எமனால், **அய: பாஶேன** - இருப்புச் சங்கிலியாலும், **ப³ந்துபி⁴:** - பாதுக்களால், **ஸ்நேஹ பாஶேன** - ஸ்நேகம் எனும் கயிற்றனாலும், **ஆத்மானம்** - தன்னை, **பரித** - இங்குமங்கும், **க்ருஷ்யமாணம்** - இழுக்கப்படுகின்றவனாக, ஈக்ஷதே - காண்கின்றான்.

பொழிப்புரை: - காலனால் இருப்புச்சங்கிலியாலும் பந்துக்களால் ஸ்நேஹபாசத்தாலும் தான் இருபக்கங்களிலும் இழுக்கப்படுகன்றதாகக் காண்கின் றான்.

ஶ்லோகம்.

ஹிக்கயா பா³த்⁴யமா ஶ்வாஸேன பரிஶுஷ்யத:
ம்ருத்யுனா க்ருஷ்யமாணஸ்ய ந க2ல்வஸ்தி பராயணம் (61)

வியாக்யானம்: - **ஹிக்கயா** - ஹிக்கையெனும் (இருமல்) வியாதியினால் தொந்தரையடைகின்றவனும், **ஶ்வாஸேன** - வாஸத்தால், **பரிஶுஷ்யத:** - தேஹம்வறண்டுபோனவனும், **ம்ருத்யுனா** - எமனால், **ஆக்ருஷ்யமாணஸ்ய** - இழுக்கப்படுகின்றவனுமான மனிதனுக்கு, பராயணம் - ரக்ஷகன், **ந அஸ்திகலு** - இல்லையன்றோ.

பொழிப்புரை: - ஹிக்கையென்னும் இருமலால் தொந்தரையுற்று ச்வாஸத்தால் வறண்டும் காலபாசத்தால் இழுக்கப்படுகின்றவனுமாகிய மனிதனுக்கு ரக்ஷகன் இல்லையன்றோ பராயணம்

ஶ்லோகம்.

ஸம்ஸாரயந்த்ர மாரூடோ^{4} யமதூ^{3}தை ரதி^{4}ஷ்டி^{2}த:
க்வ யாஸ்யாமீதி து^{3}:க்கா^{2}ர்த்த: கால பாஶேன யோஜித: (62)

வியாக்யானம்: - **ஸம்ஸாரயந்தரம் -** ஸம்ஸாரமாகிய யந்திரத்தில், **ஆரூட:** - எறியவனாய், **யமதூ^{3}தை** - யமதூதர்களால், **அதி^{4}ஷ்டித:** - அடக்கப்பட்டவனாய், கால பாஶேன - யமபாசத்தால், **யோஜித:** - கட்டப்பட்டவனுமாய், **க்வ** - எங்கு, **யாஸ்யாமி** - செல்லுவேன், **இதி** - என்று, **து^{3}:க்கா^{2}ர்த்த -** சோகத்தினால் வருத்துவோ னாகின்றான்.

பொழிப்புரை: - ஸம்ஸாரமாகிய யந்தரத்திலேறியவனய் யமதூதர்க்கு வசங்கதனும் யமபாசத்தினால் கட்டப்பட்டவனுமாய்க் கொண்டு எங்கு செல்லுவேன் என்று வருத்தமுறுகின்றான்.

ஶ்லோகம்.

கிம் கரோமி க்வ க^{3}ச்சா^{2}மி கிம் க்^{3}ருஹ்ணாமி தயஜாமி கிம்
இதி கர்த்தவ்யதாமூட^{4}: க்ரிச்ச^{2}ராத்^{3} தே^{3}ஹாத் த்யஜத்யஸூன் (63)

வியாக்யானம்: - **கிம்** - என்ன, **கரோமி** - செய்வேன், **க்வ** - எங்கு, **க^{3}ச்சா^{2}மி** - செல்லுவேன், **கிம்** - எதனை, **க்ருஹ்ணாமி** - கிரஹித்துக்கொள்வேன், **கிம்** - எதனை, **தயஜாமி** - விடுவேன், **இதி** - என்று, **கர்த்தவ்யதாமூட:** - செய்வதின்ன தென்று தெரியாதவனாய், **க்ருச்ராத் -** மஹாகஷ்டப்பட்டுக்கொண்டு, **தேஹாத்** - தேஹத்திலிருந்து, **அஸூன்** - ப்ராணனை, **த்யஜதி** - விடுகின்றான்.

பொழிப்புரை: - என்ன செய்வேன் எங்கு செல்லுவேன் எதைப்பற்றுவேன் எதை விடுவேன் என்று இவ்விதம் செய்வது யாதொன்று அறியாமல் மிகவும் தொந்தரையடைந்து தேஹத்திலிருந்து பிராணனோடு வெளிப்படுகின்றன்.

ஶ்லோகம்.

யாதனா தே^{3}ஹ ஸம்ப^{3}த்^{3}தோ^{4} யமதூ^{3}தை ரதி^{4}ஷ்டி^{2}த:
இதோ க^{3}த்வானுப^{4}வதி யா யாஸ்தா யம யாதனா: (64)

வியாக்யானம்: - **யாதனா தே^{3}ஹ ஸம்ப^{3}த்^{3}த:** - யாதனாதேஹத்தோடு கூடியவனாய், **யமதூதை** - யமதூதர்களால், **அதிஷ்டித:** - கைப்பற்றப்பட்டவனாய், **இத:** - இவ்விருந்து, **க^{3}த்வா** - சென்று, **யா யா** - எந்த எந்த, **யம யாதனா:** - யமயாதனைகள் உள்ளனவோ, **தா** - அவைகளை, **அனுபவதி** - அனுபவிக்கின்றான்.

பொழிப்புரை: - யாதனாதேஹத்தைப் பற்றிக்கொண்டுயமதூதருக்குட்பட்டு இங்கிருந்து சென்று யமயாதனைகளெல்லாவற்றையும் அனுபவிக்கின்றான்.

ஶ்லோகம்

தாஸு யல்லப⁴தே து³:க்க²ம் தத்³வக்தும் ஸஹதே குத:

வியாக்யானம்: - தாஸு - அந்நரகயாதனைகளுள், **யத்** - யாதொரு, **து³:க்க²ம்** - துன்பத்தை, **லப⁴தே** - அனுபவிக்கின்றானோ, **தத்** - அதனை, **வக்தும்** - சொல்ல, **குத:** - எங்ஙனம், **ஸஹதே** - ஸஹிப்பான்.

பொழிப்புரை: - அந்நரகயாதனைகளுள் அனுபவிக்கும் துக்கத்தைச் சொல்ல எங்ஙனம் இயலும்.

ஶ்லோகம்

கர்ப்பூர சந்த³னாத்³யைஸ்து லிப்யதே ஸததம் ஹி யத் **(65)**

பூ⁴ஷணைர் பூ⁴ஷ்யதே சித்ரை ஸ்ஸுவஸ்த்ரை: பரிவார்யதே
அஸ்ப்ருஶ்யம் ஜாயதேऽப்ரேக்ஷ்யம் ஜீவ த்யக்தம் ஸதா³ வபு: **(66)**

வியாக்யானம்: - **யத்** - யாதொரு தேஹமானது, **கர்ப்பூர சந்த³னாத்யைஸ்து** - கர்ப்பூர சந்தனாதிகளாலேயே, **ஸததம்**- எப்போதும், **லிப்யதே** - பூசப்பெறு கின்றதோ, **சித்ரை:** - அற்புதங்களாகிய, **பூஷணை:** - ஆபரணங்களால், **பூஷ்யதே** - அணியப்படுகின்றதோ, **ஸுவஸ்த்ரை:** - நல்ல ஆடைகளால், **பரிவார்யதே** - அலங்கரிக்கப்படுகின்றதோ, **வபு:** - அத்தேஹமே, **ஜீவ த்யக்தம்** - ஜீவனால் விடப்பட்டதாயின், **அஸ்ப்ருஶ்யம்** - தொடுவதற்குத்தகாததும், **அப்ரேக்ஷ்யம்** - பார்க்கத்தகாததும், **ஜாயதே** - ஆகின்றது..

பொழிப்புரை: - யாதொருதேஹமானது கர்ப்பூர சந்தனாதிகளால் எப்போதும் பூசப்பெறுகின்றதோ அழகிய ஆபரணங்களாலும் சிறந்த வஸ்த்ரங்களினாலும் அலங்கரிக்கப்படுகின்றதோ அத்தேஹமே ஜீவனால் பிரியப்பட்டதாயின் தொடத்த காததும் பார்க்கத்தகாததுமாகின்றது

ஶ்லோகம்

நிஷ் காஸயந்தி நிலயாத் க்ஷணம் ந ஸ்தா²பயந்தி ஹி

வியாக்யானம்: - **நிலயாத்** - இல்லத்தினின்றும், **நிஷ் காஸயந்தி** - வெளிக் கொண்டு போகின்றார்கள், **க்ஷணம் அபி** - க்ஷணப்போதும், **ந ஸ்தா²பயந்தி** - வைத்திருக்கின்றதில்லை.

பொழிப்புரை: - இல்லத்தினின்றும் வெளிக்கொண்டு போகின்றார்கள் க்ஷணப்போதும் வைத்திருக்கின்றதில்லை.

ஶ்லோகம்.

த³ஹ்யதே ச தத: காஷ்டை²: தத்³ ப⁴ஸ்ம க்ரியதே க்ஷணாத் (67)

ப⁴க்ஷயதே வா ஸ்ருகா³லேன் க்³ருத்4ர-குக்குர-வாயஸை:
புனர் ந த்³ருஶ்யதே ஸோsத ஜன்ம கோடி ஶதைரபி (68)

வியாக்யானம்: - -தத: - அதன் பிறகு, **காஷ்டை²:** - கட்டைகளோடு, **த³ஹ்யதே** - கொளுத்தப்படுகின்றது, **தத்** - அதுவும், **க்ஷணாத்** - ஓர் கணத்தில், **ப⁴ஸ்ம ச** - சாம்பலாயும், **க்ரியதே** - செய்யப்படுகின்றது அல்லது, **ஸ்ருகா³லேன் வா** - நரியாலாவது, **க்³ருத்ர-குக்குர-வாயஸை:** - கழுகு நாய் காக்கை இவைகளா லாவது, **பக்ஷயதே** - புசிக்கப்படுகின்றது, **புன:** - மறுபடியும், **ஸ:** - அதே தேஹ மானது, **ஜன்ம கோடி ஶதை: அபி** - நூறுகோடி ஜன்மம் எடுத்தாலும், **ந த்³ருச்யதே** - காணப்படுகின்றதில்லை.

பொழிப்புரை: - அதன் பிறகு கட்டைகளோடு கொளுத்தப் படுகின்றது. அதுவும் க்ஷணத்தில் சாம்பலாக்கப்படுகின்றது. அல்லது நரி கழுகு நாய் காக்கை முதலியவைகளால் தின்னப்படுகின்றது, நூறு கோடி ஜந்மமெடுக்கினும் அதே தேஹம் மீண்டும் காணப்படுகின்றதில்லை.

ஶ்லோகம்.

மாதா பிதா கு³ருஜன: ஸ்வஜனோ மமேதி
மாயோபமே ஜக³தி கஸ்ய ப⁴வேத் ப்ரதிஞா
ஏகோ யதோ வ்ரஜதி கர்ம புரஸ்ஸரோsயம்
விஶ்ராம வ்ருக்ஷ ஸத்³ருஶ: க²லு ஜீவலோக: (69)

வியாக்யானம்: - **மாயோபமே** - இந்திரஜாலப்பொருள்களுக்குங்கராகிய, **ஜகதி** - (உலகில்), **மம** - எனது, **மாதா** - அன்னை, **பிதா** - எனது தந்தை, **கு³ருஜன: -** எனது பெரியோர், **ஸ்வஜனோ** - எனது பந்து ஜனம், **இதி** - என்று, **கஸ்ய** - எவனுக்கு, **ப்ரதிஞா** - நிச்சயம், **ப4வேத்** - ஏற்படும், **யத** - யாதொருகரரணத்தால், **அயம்** - இந்த (ஜீவன்), **கர்மபுரஸ்ஸர** - (தனது) புண்ணியபாவங்களாகிய கர்மங்களை முன்னிட்டவனாக, **ஏக:** -ஒருவனாகவே **வ்ரஜதி** - போகின்றானோ, **ஜீவலோக** -

இம்மனிதலோகமானது, **விஶ்ராம வ்ருக்ஷ ஸத்³ருஶ: க²லு** - களைப்பாறுமிடமாகிய மரத்திற்கு நிகரேயன்றோ.

பொழிப்புரை: - இந்திர ஜாலப்பொருள்களுக்கு நிகராயுள்ள இவ்வுலகவாழ்க்கையில் எனது தாய் தந்தை எனது குரு ஜன்ம எனது பந்து என்று நிச்சயிப்பது எப்படிக்கூடும் ஏனெனின் கர்மத்தோடுகூட தான் ஒருவனே போகும்படி ஆகின்றமையால் இம்மனிதலோகமானது களைப்பாறுதற்குச் சற்றுத்தங்குமிடமாகிய மரத்திற்குஸமானமே யன்றோ.

ஶ்லோகம்.

ஸாயம் ஸாயம் வாஸ வ்ருக்ஷம் ஸமேதா:
ப்ராத: ப்ராத ஸ்தேன தேன ப்ரயாந்தி
த்யக்த்வாsன்யோன்யம் தம் ச வ்ருக்ஷம் விஹங்கா³-
ஸ்தத்³வத்³ தத்³வத் ஞாதயோsஞாதயஶ் ச (70)

வியாக்யானம்: - ஸாயம் ஸாயம் - மாலைதோறும் மாலைதோறும், வாஸ வ்ருக்ஷம் வஸிக்கும் - வஸிக்கும் மரத்தை, **ஸமேதா:** - சென்று அடைந்து சேர்ந்திருந்தனவாகிய, **விஹங்கா** - பக்ஷிகள், **யத்வத்** - எப்படி ப்ராத ப்ராத காலை தோறும் காலை தோறும், தஞ்ச வ்ருக்ஷம் - அம்மரத்தை, **த்யக்தவா** - விட்டுவிட்டு, அன்யோன்யம் - ஒன்றிற்கொன்று பிரிந்து, **தேன தேன** - அவ்வவ்வழியோடு, **ப்ரயாந்தி** - போய்விடுகின்றனவோ, **தத்³வத்** - அது போலவே, **ஞாதய** - ஞாதிகளும், **அஜஞாதாய** - ஞாதிகளல்லாதவர்களும் என்க.

பொழிப்புரை: - எப்படி மாலைதோறும் மாலைதோறும் வசிக்கும் மரத்தை யடைந்து ஒன்றுகூடிய பறவைகள் பிறகு காலை தோறும் காலை தோறும் அம்மரத்தைவிட்டு ஒன்றுக்கொன்று பிரிந்து அது வது வந்தவழியோடு சென்று விடுகின்றதோ அது போலவே ஜ்ஞாதிகளும், அஞாதிகளும் என்றறியத்தக்கது.

ஶ்லோகம்

ம்ருதிபீ³ஜம் ப⁴வேஜ்ஜன்ம ஜன்மபீ³ஜம் ப⁴வேன் ம்ருதி:
க⁴ட யந்தரவ த³ஶ்ராந்தோ ப³மப்⁴ரமீத்யனிஶம் நர: (71)

வியாக்யானம்: - **ஜன்ம** - பிறவி, **ம்ருதிபீ⁴ஜம்** - மரண ஹேது, **ப⁴வேத்** - ஆகும், **ம்ருதி** - மரணமானது, **ஜன்மபீ³ஜம்** - பிறப்புக்கு ஏது, **ப⁴வேத்** - ஆகும், **நர** - ஜீவன், **க⁴ட யந்த்ரவத்** - ஏற்றுமரம் போல, **அச்சராந்த** - ஓய்வின்றி, **அனிஶம்** - இடைவிடாமல், **ப³மப்⁴ரமீதி** - சுற்றிக்கொண்டேயிருக்கிறான்.

பொழிப்புரை: - ஜந்மம் மரணஹேதுவும் மரணம் ஜந்மஹேதுவும் ஆகின்றது ஜீவன் ஏற்றுமரம் போல் ஓய்வின்றி எப்போதும் சுற்றிக்கொண்டேயிருக்கிறான்.

ஶ்லோகம்.

க^{3}ர்பே^{4} பும்ஸ: ஶுக்ல பாதாத்^{3} யது^{3}க்தம் மரணாவதி^{4}
ததே^{3}தஸ்ய மஹா வ்யாதே^{4}ர் மத்தோ நான்யோऽஸ்தி பே^{4}ஷஜம்

(72)

வியாக்யானம்: - **பும்ஸ:** - ஜீவனுக்கு, **க^{3}ர்ப்பே^{4}** - கர்ப்பத்தில், **சுக்ரபாதாத்** - சுக்லம் விழுந்தது முதல், **மரணாவதி** - மரணம் வரையில், **யத்** - யாதொன்று, **உக்தம்** - சொல்லப்பட்டதோ, **தத் ஏதஸ்ய** - அந்த இந்த, **மஹா வ்யாதே** - பெரும் பிணிக்கு, **பே^{4}ஷஜம்** - மருந்து, **மத்த** - என்னிலும், அன்யந் அன்னியன், **நாஸ்தி** - இல்லை.

பொழிப்புரை: - ஜீவனுக்குக் கர்ப்பத்தில் சுக்கிலம் சேர்ந்தது முதல் மரணம் வரையில் யாதொன்று சொல்லப்பட்டதோ அவ்விந்த பெரும்பிணிக்கு மருந்து என்னிலும் அன்னியன் இல்லை.

எட்டாவது அத்தியாயம்.

முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

தேஹ ஸ்வரூப நிர்ணயம்.

ஶ்லோகம்.

தே3ஹ ஸ்வரூபம் வக்ஷ்யாமி ஶ்ருணுஷ்வாsவஹிதோ ந்ருப!
மத்தோ ஹி ஜாயதே ஸர்வம் மயைவைதத் ப்ரதா4ர்யதே (1)

வியாக்யானம்: - **ந்ருப -** ஓ அரசனே! **தே3ஹ ஸ்வரூபம்** - தேஹ ஸ்வரூப த்தை, **வக்ஷ்யாமி** - சொல்லுகிறேன், **அஹித:** - ஸாவதானமனதோடிருந்து, **ச்ருணுஷ்வ** - கேட்பாயாக, **ஸர்வம்** - எல்லாம் பிரபஞ்சம், **மத்த: ஹி** - என்னிடமிருந்தே, **ஜாயதே** - உண்டாகின்றது, **மயி ஏவ** - என்னிடமே, **எதத்** - இது, **ப்ரதா4ர்யதே** - நிலைபெறுகின்றது.

பொழிப்புரை: - ஓ அரசனே தேஹஸ்வரூபத்தைச் சொல்லுகின்றேன் ஸாவ தானமனதோடு கேட்பாயாக என்னிடமிருந்தே ஸகல சராசாமும் தோன்றுகின்றது என்னிடமே இதுநிலை பெறுகின்றது.

ஶ்லோகம்

மய்யேவேத3 மதி4ஷ்டா2னே லீயதே ஸுக்தி ரூப்யவத்
அஹம் து நிர்மல: பூர்ண: ஸச்சிதா3னந்த3 விக்3ரஹ: (2)

வியாக்யானம்: - **இதம்** - பிரபஞ்சமானது, **ஶுக்தி ரூப்யவத்** - இப்பியில் வெள்ளி போல, **அதிஷ்டா2னே** - அதிஷ்டானமாகிய, **மயி ஏவ** - என்னிடமே, **லீயதே** - ஒடுங்குகின்றது, **அஹம் து** - யானோவெனின், **நிர்ம்மல:** - நிர்ம்மலனும் **பூர்ன:** - பரிபூர்ணனும், **ஸச்சிதா3னந்த விக்3ரஹ:** - ஸச்சிதாநந்தஸ்வரூபனுமா யிருக்கின்ற வன்.

பொழிப்புரை: - இப்பிரபஞ்சமானது. இப்பியில் வெள்ளி போல அதிஷ்டான மாகிய என்னிடமே ஒடுங்குகின்றது யானோவெனின் நிர்ம்மலனும் பூர்ணனும் ஸச்சிதாநந்த ஸ்வரூபனுமானவன்.

ஶ்லோகம்

அஸங்கோ3 நிரஹங்கார: ஶுத்3த4ம் ப்3ரஹ்ம ஸநாதனம்
அநா த்3யவித்3யா யுக்தஸ்ஸன் ஜக3த் காரணதாம் வ்ரஜே (3)

வியாக்யானம்: - **அஸங்க:** - ஸம்பந்தமில்லாதவன், **நிரஹங்கார:** - அஹங்காரமில்லாதவன், **ஸநாதனம்** - எப்போதுமுள்ளதாகிய, **ஶுத்^{3}தம்** - மாயையின் கலப்பற்ற, **ப்^{3}ரஹ்ம** - ப்ரும்ம, **அனாத்வித்யாயுக்த:ஸன** - அனாதியாகிய அவித்தையோடு கூடியவனாய்க்கொண்டு, **ஜகத்காரணதாம்** - ஜகங்களுக்குக்காரணமாயிருத்தலை, **வ்ரஜே** - அடைகின்றேன்.

பொழிப்புரை: - ஸம்பந்தமில்லாதவனும், அஹங்காரமில்லாதவனும் எப்போதும் உள்ள ப்ருமமாயுமுள்ள நான் அனாதியாயுள்ள அவித்தையோடு கூடியவனாய்க் கொண்டு ஜகத்காரணனாகின்றேன்.

ஶ்லோகம்.

அநிர்வாச்யா மஹாவித்^{3}யா த்ரிகு^{3}ணா பரிணாமினீ
ரஜ: ஸத்வம் தமஶ்சேதி தத்^{3} கு^{3}ணா: பரிகீர்த்திதா: (4)

வியாக்யானம்: - **அநிர்வாசயா** - துணிந்தோதமுடியாததாகிய, **மஹாவித்^{3}யா** - மஹத்தாகிய அவிததையானது, **த்ரிகுணா** - முக்குணமுடையதும் **பரிணாமினீ** - பரிணமிக்கினறதுமாயுள்ளது, **தத்குணா** - அதன்குணங்கள், **ரஜஸ் ஸ்த்வம்** - ஸத்துவம், **தமஶ்சேதி** - தமஸ் என்று, **பரிகீர்த்திதா** - சொல்லப்பட்டன.

பொழிப்புரை: - துணிந்தோதமுடியாத அந்த அவித்தையானது முக்குண முடையதும் பரிணமிக்கின்றதுமானது. அதன் குணங்கள் ரஜஸ் ஸத்துவம் தமஸ் என்று சொல்லப்பட்டன.

ஶ்லோகம்

ஸத்வம் ஶுக்லம் ஸமாதி^{3}ஷ்டம் ஸுக^{2}ஜ்ஞானஸ்ஸ்பத^{3}ம் ந்ருணாம்
து^{3}:க்கா^{2}ஸ்பத^{3}ம் ரக்தவர்ணம் சஞ்சலம் ச ரஜோ மதம் (5)

வியாக்யானம்: - **ஸத்வம்** - ஸத்துவமானது; **சுக்லம்** - வெண்ணிறமானது என்று, **ஸமாதி^{3}ஷ்டம்** - சொல்லப்பட்டது, **ந்ருணாம்** - மனிதர்களுக்கு ஸுகஞானங் களுக்கிடமாயுள்ளது, **ரஜ:** - ரஜோகுணமானது, **து^{3}:க்கா^{2}ஸ்பத^{3}ம்** - துக்கத்திற்கிட மாயும், **ரக்தவர்ணம்** - செந்நிறமுடையதும், **சஞ்சலம்** - சலித்துக்கொண்டே இருப்பதும் என்று, **மதம்** - சொல்லப்பட்டது.

பொழிப்புரை: - ஸத்துவமானது வெண்ணிறமுள்ளது என்றும் மனிதர்களுக்கு ஸுகஞானங்களுக்கிடமாயுள்ள தென்றும் சொல்லப்பட்டது. ரஜோகுணமானது துக்க த்திற்கிடமும செந்நிறமுடையதும் சஞ்சலமாயுள்ளதுமானது என்று சொல்லப் பட்டது.

ஶ்லோகம்

தம: க்ருஷ்ணம ஜட^{3}ம் ப்ரோக்தம் உதா^{3}ஸீனம் ஸுகா^{2}தி^{3}ஷு
அதோ மம ஸமாயோகா^{3}ச் ச^{2}க்தி: ஸா த்ரிகு^{3}ணாத்மிகா (6)

அதி^{4}ஷ்டா^{2}னே து மய்யேவ ப^{4}ஜதே விஶ்வ ரூபதாம்
ஶுக்தௌ ரஜதவத்^{3} ரஜ்ஜௌ பு^{4}ஜங்கோ^{3} யத்^{3}வதே^{3}வ து (7)

வியாக்யானம்: - **தம** - தமோகுணமானது, **க்ருஷ்ணம்** - கருநிறமானது, **ஜட^{3}ம்** - அசேதனமானது, **ப்ரோக்தம்** - என்று சொல்லப்பட்டது (சிறிதும் பிரகாச மில்லாதது), **ஸுகா^{2}தி^{3}ஷு** - ஸுகம் முதலியவைகளில், **உதா^{3}ஸீனம்** - உதாஸீன மாயுள்ளது, **அத:** - ஆதலால், **மம** - எனது, **ஸமாயோகாத்** - சேர்க்கையால், **த்ரிகு^{3}ணாத்மிகா** - முக்குணஸ்வரூபமாகிய, **ஸா** - அந்த, **சக்தி:** - மாயாசக்தி யானது, **அதிஷ்டா^{2}னே** - அதிஷ்டானமாகிய, **மயி ஏவ** - என்னிடத்திலேயே, **சுக்தௌ** - இப்பியில், ரஜதவத்^{3} **-** வெள்ளிபோலும், **ரஜ்ஜௌ** - கயிற்றின், **புஜங்க -** ஸர்பபமானது, **யத்வத் ஏவது** - போலவேயும், **விஶ்வபாவதாம்** - பிரபஞ்சபாவத் தன்மையை, **பஜதே** - அடைகின்றது..

பொழிப்புரை: - தமோகுணமானது கருநிறமுடையது. ஜடம் ஸுகாதிகளில் உதாஹீனமாயுள்ளது என்றும் சொல்லப்பட்டது. ஆதலால் எனது சேர்க்கையால், முக்குணஸ்வரூபமாகிய அந்த சக்தியானது அதிஷ்டானமாகிய என்னிடமே இப்பியில் வெள்ளி போலும் கயிற்றினில் அரவம் போலும் பிரபஞ்சமாகும் தன்மை யைப் பெறுகின்றது.

ஶ்லோகம்.

ஆகாஶாதீ^{3}னி ஜாயந்தே மத்தோ பூ^{4}தானி மாயயா
தை ராரப்^{3}த^{4} மித^{3}ம் ஸர்வம் தே^{3}ஹோऽயம் பாஞ்ச பௌ^{4}திக: (8)

வியாக்யானம்: - **மத்த** - என்னிடமிருந்து, **மாயயா** - மாயை யால், **ஆகாஶா தீ^{3}னி** - ஆகாயம் முதலியனவாகிய, **பூ^{4}தானி** - பூதங்கள், **ஜாயந்தே** - உண்டாகின் றன. **தை** - அப்பூதங்களால், **இதம் ஸர்வம்** - இஃதெல்லாம், **ஆரப்தம்** - உண்டாயின, **அயம்** - இந்த, **தேஹ** - தேஹமானது, **பாஞ்சபௌதிக** - பஞ்சபூதங்களால் உண்டா யினது.

பொழிப்புரை: - என்னிடமிருந்து மாயையால் ஆகாயம் முதலிய பூதங்கள் உண்டாகின்றன அப்பூதங்களாலேயே பிரபஞ்சம் உண்டாயிற்று. இத்தேஹம் ஐம்பூதங்களாலேயே உண்டானது.

.

ஶ்லோகம்

பித்ருப்[4]யா மஶிதா த[3]ன்னாத் ஷட்கோஶம் ஜாயதே வபு:
ஸ்னாயவோऽஸ்தீ[2]னி மஜ்ஜா ச ஜாயந்தே பித்ருத ஸ்ததா[2] (9)

வியாக்யானம்: - **பித்ருப்யாம்** - தாய் தந்தையர்களால், **அசிதாத்** - புசிக்கப் பட்ட, அன்னாத் - ஆகாரத்தால், **ஷட்கோஶம்** - ஆறுகோசமாயுள்ளதாகிய, **வபு:** - தேஹமானது, **ஜாயதே** - உண்டாகின்றது, **ஸ்னாயவ:** - சிறுநரம்புகள், **அஸ்தீ[2]னி** - எலும்புகள், **மஜ்ஜாச** - மஜ்ஜை என்னும் எலும்பு நரம்புகளிலுள்ள கசிவு இவைகள், **பித்ருத:** - தந்தையினிடமிருந்து, **ஜாயந்தே** - உண்டாகின்றன.

பொழிப்புரை: - தாய் தந்தையர்களால் புசிக்கப்பட்ட அன்னத்தால் ஆறுகோச மாகிய தேஹம் உ.ண்டாகின்றது. சிறு நரம்பு எலும்பு மஜ்ஜை இவைகள் தந்தை யினிடமிருந்தாகும் அம்சங்கள்.

ஶ்லோகம்

தவங் மாம்ஸ ஶோணித மிதி மாத்ருதஶ்ச ப[4]வந்தி ஹி
பா[4]வா: ஸ்யு: ஷட்[3]விதா[4] ஸ்தஸ்ய மாத்ருஜா: பித்ருஜா ஸ்ததா[2]
(10)

வியாக்யானம்: - **தவங் மாம்ஸ ஶோணிதம் இதி** - த்வக்கு மாம்ஸம் ரக்தம் எனும் இவைகள், **மாத்ருதஶ்:ச** - அன்னையினிடமிருந்து, **பவந்திஹி** - உண்டாகின் றனவன்றோ, **தஸ்ய** - சரீரத்திற்கு, **மாத்ருஜா**: - அன்னையினிடமிருந்து உண்டாவன வும், **ததா பித்ருஜா:** - தந்தையினிடமிருந்துண்டாவனவுமாகிய, **பாவா:** - பாவங்கள், **ஷட்விதா:, ஸ்யு:** - ஆறுவிதங்களாகும்.

பொழிப்புரை: - த்வக்கு மாம்ஸம் ரக்தம இவைகள் அன்னை யினிடமிருந்து ண்டாவனவன்றோ தேஹத்திற்குத் தாய் தந்தையரிடம் உண்டாகும் தாதுக்கள் அறுவகையாகும்.

ஶ்லோகம்

ரஜஸா ஆத்மஜா ஸத்ய ஸம்பூ[4]தா ஸ்வாத்மஜா ஸ்ததா[2]

வியாக்யானம்: - **ரஸஜா:** **-** (பின் சொல்லப்படுகின்றவனாகிய) ரஸஜங்களாகிய, **ஸப்த** - ஏழும், **ஆத்மஜா:** - (ஆத்மஜங்கநென) பின் சொல்லப் படுகின்றனவாகிய ஏழும், **ததா** - அங்ஙனமே, **ஸ்வாத்மஜா** - ஸ்வாத்மஜங்க நென்னப்படுவனவும், **ஸம்பூதா:** - கூடியனவாகின்றன.

பொழிப்புரை: - ரஸஜங்கநெனப் பின் சொல்லப்படுகின்றனவாகிய ஏழும் ஆத்மஜங்கநென்னப்படுவனவாகிய ஏழும் அங்ஙனமே ஸ்வாத்மஜங்கநென்னப் படுவனவும் கூடியனவாகின்றன.

ஶ்லோகம்.

ம்ருத^{3}வ: ஶோணிதம் மேதோ^{3} மஜ்ஜா ப்லீஹா யக்ருத்^{3} கு^{3}தம்
ஹ்ருன் நாபீ^{4}த்யேவ மாத்^{3}யாஸ்து பா4வா மாத்ரு ப^{4}வா மதா: (11)

வியாக்யானம்: - **ஶோணிதம்** - ரக்தம், **மேத:** - ஹ்ருதயத்திலுள்ள மாம்ஸவி சேஷம், **மஜ்ஜா** - எலும்புநரம்புகளில் நிகழும்கசிவு, **ப்லீஹா** - குல்மம் என்னப்படும் வயிற்றின் இடப்பக்கத்தில் உள்ள மாம்ஸம், **யக்ருத்** - காலகண்டமென்னப்படுவது வயிற்றின்வலப்பக்கத்திலுள்ளமாம்ஸம், **குதம்** - அபானம், **ஹ்ருத** - மார்பினின் தாமரை போன்றுள்ளஹ்ருதயம், **நாபீ** - தொப்புள், **இதிஏவ மாத்யா:** - எனும் இவைமுதலிய, **ம்ருதவ:** - மிருதுவாயுள்ள, **பாவா:** - பாவங்கள், **மாத்ரு பவா:** - அன்னையினிடமிருந்துண்டாவன என்று, **மதா:** - சொல்லப்படுவன.

பொழிப்புரை: - ரத்தம, மேதஸ், மஜ்ஜை, ப்லீஹா, யக்ருத, குதம், ஹ்ருத், நாபீ, இவை முதலிய மிருதுவாகிய பாவங்கள் அன்னையிட மிருந்துண்டாவன என்பதாம்.

ஶ்லோகம்

ஶமஶ்ரு ரோம கச ஸ்நாயு ஶிரா த^{4}மனயோ நகா^{2}:
த^{3}ஶனா: ஶுக்ல மித்யாதி^{3} ஸ்தி^{2}ரா: பித்ரு ஸமுத்^{3}ப^{4}வா: (12)

வியாக்யானம்: - **ஶமஶ்ரு** - (முகத்திலுள்ளரோமம்) மீசை, **ரோம** - ரோமம் (மற்ற இடங்களிலுள்ள ரோமம்), **கச:** - தலையிலுள்ளனவாகிய கேசங்கள், **ஸ்நாயு** - வஸை எனும் தாதுவிசேஷம், **ஶிராதமநய:** - ஸூக்ஷ்ம ஸ்தூலநாடிகள், **நகா:** - நகங்கள், **தசனா:** - பற்கள், **சுக்ரம்** - ரேதஸ், **இத்யாதிஸ்திரா:** - இது முதலிய ஸ்திரமாகிய அம்சங்கள், **பித்ருஸமுத்பவா:** - தந்தையினிடமுண்டாவன.

பொழிப்புரை: - மீசை ரோமம் கேசம் வஸை ஸூக்ஷ்ம ஸ்தூல நாடிகள் நகம் பல் சுக்லம் இது முதலியனவாகிய அம்சங்கள் தந்தையினிடமுண்டாவன.

ஶ்லோகம்.

ஶரீரோபசிதிர் வர்ணோ வ்ருத்^{3}தி^{4} ஸ்த்ருப்திர் ப^{3}லம் ஸ்தி^{2}தி:
அலோலுபத்வ முத்ஸாஹ இத்யாதீ^{3}ன் ரஜஸான் விது: (13)

வியாக்யானம்: - **சரீரோபசிதி**: - சரீர உற்பத்திகாலத்தில் உள்ள பருமன், **வர்ண**: - நிறம், **வ்ருத்தி**: - க்ரமமாய்வளருதல், **த்ருப்தி**: - பூரிப்பு, **பலம்** - வலிமை, **ஸ்திதி**: - அவயவங்களின் உறுதித்தன்மை, **அலோலு பத்வம்** - க்ருபணத்தன்மை யின்மை, **உத்ஸாஹ**: - உற்சாகம், **இத்யாதீ^{3}ன்** - இது முதலியவை, **ரஸஜான்** - தாது விசேஷத்தாலுண்டாயின என்று, **விது**: - அறிகின்றனர்.

பொழிப்புரை: - உற்பத்திகாலத்திலுள்ள பெருமன் நிறம் வளருதல் பூரிப்பு வலிமை அவயங்களின் உறுதித்தன்மை, க்ருபணத்தன்மையின்மை, உற்சாகம் இவை முதலிய தாது விசேஷத்தால் உண்டாவன என்பதாம்

.

ஶ்லோகம்

இச்சா^{2}த்^{3}வேஷ: ஸுக^{2}ம் து^{3}:க்க^{2}ம் த^{4}ர்மாsத^{4}ர்மௌ ச பா^{4}வனா
ப்ரயத்னோ ஞான மாயுஶ் சேந்த்^{3}ரியாணீ த்யேவ மாத்மஜா: (14)

வியாக்யானம்: - **இச்சா** - விருப்பம், **த்வேஷ**: - வெறுப்பு, **ஸுகம்** - ஷெ, துக்கம் - ஷெ, **த^{4}ர்மாsத^{4}ர்மௌ** - புண்ணியபாவங்கள், **பா^{4}வனா** ஸ்மரண ஹேதுவாகிய ஸம்ஸ்காரம், **ப்ரயத்ன**: - முயற்சி, **ஞானம்** - அறிவு, **ஆயு**: - ஆயுள், **இந்திரியாணி** - இந்திரியவ்யாபாரம், **இத்யேவம்** - இவை முதலியன, **ஆத்மஜா**: - ஜீவனால் உண்டாவன.

பொழிப்புரை: - இச்சை, துவேஷம், ஸுகம், துக்கம், புண்ணியபாவங்கள் பாவனை முயற்சி ஞானம் ஆயுள் இந்திரியவியாபாரம் இவை முதலியன ஜீவனால் ஏற்படுவன.

ஶ்லோகம்

ஞானேந்த்^{3}ரியாணி ஶ்ரவணம் ஸ்பர்ஶனம் த^{3}ர்ஶனம் ததா^{2}
ரஸநம் க்^{4}ராண மித்யாஹு: பஞ்ச தேஷாம் து கோ^{3}சரா: (15)

ஶப்^{3}த^3: ஸ்பர்ஶ ஸ்ததா^{2} ரூபம் ரஸோ க^{3}ந்த^4 இதி க்ரமாத்

வியாக்யானம்: - **ஞானேநத்^{3}ரியாணி** - ஞாநேந்திரியங்கள், **ச்ரவணம் -** காது, **ஸ்பர்ஶனம்** - தொக்கு, **த^{3}ர்ஶனம்** - கண், **ரஸநம்** - நாவு, **க்^{4}ராணம்** - மூக்கு, **இதி** - என்று, **பஞ்ச** - ஐந்து என்றும், **ஆஹு:** - சொல்லுகின்றனர், **தேஷாம்** - அவைகளின், **கோ^{3}சரா:** - விஷயங்களும், **க்ரமாத்** - முறையே, **சப்த**: - சப்தம், **ஸ்பர்ச**: - ஸ்பர்சம், **ரூபம்** - உருவம், **ரஸ** - ரஸம், (சுவை) **கந்த:** - வாஸனை, **இதி** - என்று சொல்லப்படுகின்றன.

பொழிப்புரை: - ஞானேந்திரியங்கள் காது தோக்கு கண் நாவு மூக்கு என்று ஐந்துள்ளன. அவைகளின் விஷயங்களுமுறையே சப்தம் ஸ்பர்சம் ரூபம் ரஸம் கந்தம் என்று சொல்லப்படுகின்றன.

ஶ்லோகம்

வாக் கராங்க்⁴ரி கு³தோ³பஸ்தா²ன் யாஹுः கர்மேந்த்³ரியாணி ஹி **(16)**

வசனாதா³ன க³மன விஸர்க³ரதய: க்ரமாத்
க்ரியாஸ் தேஷாம் மனோ பு³த்³தி⁴ ரஹங்கார ஸ்தத: பரம். **(17)**

கர்மேந்த³தியாணாம் ஜானீயான் மநஶ்சைவோப⁴யாத்மகம்
அந்த:கரண மித்யாஹுः சித்தம் சேதி சதுஷ்டயம் **(18)**

வியாக்யானம்: - வாக் கராங்க்ரி குதோபஸ்தானி - வார்த்தை (வாக்)பாணி பாதம் அபானவாய் குஹ்யம் இவைகள், **கர்மேந்த்³ரியாணி** - கர்மேந்திரியங் களென்று, **விது:** - என்றறிந்தனர், **தேஷாம், கர்மேந்த்³ரியாணாம்** - கர்மேந்திரியங்களின், **க்ரியா:** - கிரியைகள், **க்ரமாத்** - முறையே, **வசனாதா³ன க³மன விஸர்க³ரதய:** - வசநம், வாங்குதல், போதல், விடுதல், ஆனந்தித்தல் இவைகள் என்று, **ஜானீயாத்** - அறிக, **மந:** - மனமானது , **உபயாத்மகம்** - இருவகை யிந்திரியங்களோடு விஷயங்களில் பிரவர்த்திக்கின்றது, **மந:** - மனம், **புத்தி** - புத்தி **அஹங்காரம்** - அஹங்காரம், **சித்தம்** - சித்தம், **இதி** - என்று, **சதுஷ்டயம்** - நான்கும், **அந்த** - கரணம், **இதி** - அந்தக்கரணமென்று, **ஆஹு:** - சொல்லுகின்றனர்.

பொழிப்புரை: - வாக்கு பாணி பாதம் குஹ்யம் குதம் இவை கர்மேந்திரியங் களென்னப்படுவதாம். அந்தக்கர்மேந்திரியங்களின் கிரியைகள் முறையே, வகனம் பெற்றுக்கொள்ளுதல் போதல் விடுதல் ஸுகித்தல் எனும் இவைகளாம். மனமானது ஞானகர்மேந்திரியங்களோடு கலந்து பிரவர்த்திக்கின்றதாம். மனோ புத்தி சித்தாஹங் காரம் எனும் இந்நான்கும் அந்தக்கரணம் என்னப்படும்.

ஶ்லோகம்

ஸுக²ம் து³:க்க²ம் ச விஷயௌ வஜ்ஞேயௌ மனஸ: க்ரியா: **(18)**

ஸ்ம்ருதி பீ⁴தி விகல்பாத்³யா: பு³த்³தி⁴ஸ் ஸ்யான் நிஶ்சயாத்மிகா
அஹம் மமேத்யஹங்கார ஶ்சித்தம் சேதயதே யத: **(19)**

ஸ்த்வாக்²ய மந்த:கரணம் கு³ண பே⁴தா³த் த்ரிதா⁴ மதம்

வியாக்யானம்: - **மனஸ:** - மனஸிற்கு, **ஸுகம்** - ஸுகமும், **து³:க்கம் ச** - துக்கமும், **விஷயௌ** - விஷயங்களென்று, **விஜ்ஞேயௌ** - அறியத்தக்கவைகளாம், **க்ரியா:** - கிரியைகள், **ஸ்ம்ருதி பீ⁴தி விகல்பாத்³யா:** - நினைவு பயம் விகல்ப்பம் முதலியனவாம், **புத்தி** - புத்தியானது, **நிஸ்சயாத்மிகா** - நிச்சயவடிவமாம், **அஹம் மம** - யான் எனது, **இதி** - எனது, **அஹங்கார:** - அஹங்காரமாம், **யத:** - யாதொரு காரணத்தில், **சேதயதே** - சிந்திக்கச்செய்கின்றதோ, **தத:** - ஆதலால், **சித்தம்** - சித்தமென்பதாம், **ஸத்வாக்யம்** - ஸத்துவமெனனப்படும், **அந்த கரணம்** - அந்த கரணமானது, **குணபேதாத** - குணபேதத்தால், **த்ரிதா** - முவ்வகையாய், மதம் - கொள்ளப்பட்டது.

பொழிப்புரை: - மனஸிற்கு ஸுகதுக்கங்கள் விஷயங்களாம். கிரியைகள் நினைவு பயம் விகல்பம் முதலியன வாம். புத்தியானது நிச்சயவடிவமாம். யான் எனது என்பது அஹங்காரமாம். சிந்திக்கின்றமையால் சித்தம் என்பதாம. ஸத்துவமென்னபப்படும் அந்தக்கரணம் குணபேதத்தால் மூவகையாயுள்ளது.

ஶ்லோகம்.

ஸத்வம ரஜஸ் தம இதி கு³ணா: ஸத்வாத்து ஸாத்விகா: (20)

ஆஸ்திக்ய ஶூத்³தி⁴ தர்மைக ருசி ப்ரப்⁴ருதயோ மதா:
ரஜஸோ ராஜஸா பா⁴வா: காமக்ரோத⁴ மதா³த³ய: (21)

நித்ராऽऽலஸ்ய ப்ரமௌட்⁴யாதி³ வஞ்சனாத்³யாஸ்து தாமஸா:

வியாக்யானம்: - ஸத்வம், ரஜஸ், தம, இதி, - ஸத்வம் ரஜஸ் தமஸ் என்று, **குணா:** - குணங்களாம், **ஸத்வாத்து** - ஸத்துவத்தினால் (நிகழ்வனவாகிய), **ஆஸ்திக்ய ஶூத்³தி⁴ தர்மைக ருசி ப்ரப்ருதய:** - ஆஸ்திகத்துவம் சௌசம் தர்மத்திலேயே பிரியம் முதலியன, **ஸாத்விகா:** - ஸாத்விகங்களாம், **ரஜஸ:** - ரஜஸினால், **காமக்ரோத⁴ மதா³த³ய:** - காமக்ரோ தமதங்கள் முதலியன வாகிய **ராஜஸா:** - ராஜஸங்களாகிய, **பா⁴வா:** - தன்மைகளாம், **நித்ராவஸ்ய ப்ரமாதாதி வஞ்சனாத்யா:** - நித்திரை சோம்பல் அஜாக்கிரதை வஞ்சனை முதலியன, **தாமஸா:** - தாமஸ (தமோகுணததாலாகிய) தன்மைகளாம்.

பொழிப்புரை: - ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்று குணங்களாம், ஸத்துவகுணத்தால எற்படுவன ஆஸ்திக்கியம் சௌசம் தர்மசிந்தனை முதலியன வாகிய ஸாத்துவிகத்தன்மைகளாம. ரஜஸினால் காமக்ரோதமதம் முதலியனவாகிய ராஜஸத்தன்மைகள் ஏற்படுவனவாம். தமோகுணத்தால் நித்திரை சோம்பல் அஜாக்கிரதை வஞ்சனை முதலியனவாகிய தாமஸத்தன்மைகள் ஏற்படுவனவாம்.

ஶ்லோகம்.

ப்ரஸன்னேந்த்³ரிய தாரோக்³யாsனாலஸ்யா த்³யாஸ்து ஸத்வஜா: (22)

தே³ஹோ மாத்ராத்மக ஸ்தஸ்மா தா³த³த்தே தத்கு³ணானிமான்

வியாக்யானம்: - **ப்ரஸந்நேந்த்³ரியதா** - இந்திரியங்கள் தெளிவுற்றிருத்தல் ரோகமின்மை ரோகமின்மை முதலியன, ஸத்வஜா: - ஸத்துவகுணத்தினால் உண்டாவன, **தே³ஹ:** - தேஹமானது, **மாத்ராத்மக:** - பஞ்சபூதங்களின் அம்சங்களா லுண்டானது, **தஸ்மாத்** - ஆதலால், **தத்கு³ணான்** - அவைகளின் குணங்களாகிய, **இமான்** - இவைகளை, ஆதததே - பெறுகின்றது.

பொழிப்புரை: - இந்திரிய சுத்திரோகமின்மை சோம்பலின்மை முதலியன ஸத்துவத்தின் காரியங்கள். தேஹமானது பஞ்ச பூதங்களின் அம்சங்களாலுண்டான தாதலின் அக்குணகாரியங்களாகிய இவைகளைப் பெறுகின்றது.

ஶ்லோகம்.

ஶப்³த³: ஶ்ரோத்ரம் முக²ரதா வைசித்ர்யம் ஸூக்ஷ்மதா த்⁴ருதி: (23)

ப³லம் ச க³க³னாத்³ வாயோ: ஸ்பர்ஶம் ச ஸ்பார்ஶனேந்த்³ரியம்
உத்க்ஷேபண மவக்ஷேபாssகுஞ்ஜனே க³மனம் ததா² (24)

ப்ரஸாரண மிதீமானி பஞ்ச கர்மாணி ரூக்ஷதாம்
ப்ராணா பானௌ ததா² வ்யான ஸமானோதா³ன ஸம்ஞகான் (25)

நாக³ம் ச கூர்மம் க்ருகரம் தே³வ த³த்தம் த⁴னஞ்ஜயம்
த³ஶேதி வாயு விக்ருதீ ஸ்ததா² க்³ருஹ்ணாதி லாக⁴வம் (26)

வியாக்யானம்: - **சப்த:** - சப்தம், **ச்ரோத்ரம்** - ச்ரோத்ரேந்திரியம், **முக²ரதா வைசித்ரியம் -** பேசுந்தன்மையின் விசேஷம், **ஸூக்ஷ்மதா** - ஸூக்ஷ்மத்துவம், **த்⁴ருதி:** - தைர்யம், **ப³லம் ச** - பலமெனும் குணங்கள், **க³க³னாத்³** - ஆகாயத் திலிருந்து பெறப்பட்டன, **வாயோ:** - வாயுவினின்றும், **ஸ்பர்ஶம்** - பரிசம், **ஸ்பர்சனேந்த்³ரியம்** - தொக்கிந்திரியம், **உத்க்ஷேபணம்** - உயரக்கிளம்புதல், **அபக்ஷேபாகுஞ்சனே** - கீழிறங்குதல் குறுக்குப்பாய்தல், **க³மனம்** - செல்லுதல், **ப்ரஸாரணம்** - பரவுதல், **இதி** - என்று, **இமாணி** - இந்த பஞ்சகர்மாணி - ஐந்துகர்மங்களையும், **ரூக்ஷதா** - கடினத்தன்மை, ப்ராணா பானௌ - ப்ராணுபானன்

இவைகளையும், **வ்யான ஸமானோதா3ன ஸம்ஞகான்** - வியானஸமான உதான என்பவைகளையும், **நாகம்** - நாகனையும், **கூர்மம்** - கூர்மனையும், **க்ருகரம்** - க்ரு
பும், **தேவதத்தம்** - தேவதத்தனையும், **தனஞ்ஜயம்** - தனஞ்
பும் ஆகிய **ஏதா:** - இந்த, **தச** - பத்து, **வாயுவிக்ருதீ:** - வாயுவிகாரங்களையும், **லாகவம்** - லகுத்தன்மையையும், **க்ருஹ்ணாதி** - பெறுகின்றது.

பொழிப்புரை: -- சப்தம் காது பேசுந்தன்மையின் விசேஷம் ஸூக்ஷ்மத்துவம் தைர்யம் பலம் எனும் குணங்களை ஆகாயத்திலிருந்து கிரஹிக்கின்றது. வாயுவினின்று பரிசம் தொக்கு இவைகளையும் உத்க்ஷேபணம் அவக்ஷேபணம் ப்ரஸாரணம் கமநம் ஆகுஞ்சநம் எனும் ஐந்துகர்மங்களையும் ப்ராண அபானவ்யான உதாநஸமானநாக கூர்மக்ருகர தேவதத்ததனஞ்ஜய எனும் இந்தப்பத்து வாயு விகாரங்களையும் லகுத்தன்மையையும் கிரஹிக்கின்றது.

ஶ்லோகம்.

தேஷாம் முக்2யதர: ப்ராணோ நாபே4: கண்டா2 த்3வஸ்தி2த:
சரத்யஸௌ நாஸிகயோர் நாபௌ4ள ஹ்ருத3ய பங்கஜே (27)

ஶப்3தோ3ச்சாரண நி:ஶ்வாஸோச்ச2வாஸாதே3ரபி காரணம்

வியாக்யானம்: - **தேஷாம்** - அவைகளுள், **முக்யதர:** - முக்கியமாயுள்ள, **ப்ராண:** - பிராணனானது, **நாபே:** - நாபிக்குமேல், **கண்டாத்** - கண்டத்துக்குக்கீழ், **அவஸ்தி** - இருக்கின்றது, **அஸௌ** - இந்த (ப்பிராணனானது), **நாஸிகயோ:** - மூக்குகளின் (வழியாய்), **நாபௌ** - நாபியிலும், **ஹ்ருதயபங்கஜே** - ஹ்ருதய கமலத்திலும், **சரதி** - ஸஞ்சரிக்கின்றது, **ஶப்3தோ3ச்சாரண நிஶ்வாஸோச்ச2வாஸாதே3: அபி** - சப்தங்களை உச்சரித்தல் உச்சுவாஸம் நிச்வாஸ முதலியதற்கும் காரணம் - ஹேதுவாயுள்ளது.

பொழிப்புரை: - அவைகளுள் முக்கியமாயுள்ள பிராணனானது நாபிக்குமேல் கண்டத்திற்குக்கீழ் உள்ளது. மூக்குகளின்வழியாய் நாபியிலும் ஹ்ருதய கமலத்திலும் ஸஞ்சரிக்கின்றது. சப்தோச்சாரணம் மூச்சிழுத்தல் மூச்சுவிடுதல் முதலியவற்றிற்கும் காரணமாயுள்ளது.

ஶ்லோகம்.

அபானஸ்து கு3தே மேட்4ரே கடி ஜங்கோ4த3ரேஷவபி (28)

நாபி4கந்தே3 ப்ரேக்ஷணயோ ரூரு ஜாநுஷு திஷ்ட2தி
தஸ்ய மூத்ர பூரிஷாதி3 விஸர்க3: கர்மகீர்த்திதம் (29)

வியாக்யானம்: - **அபான: து** - அபானனானது அபானனானது, **குதே** - ஆஸன த்திலும், **மேட்4ரே** - குஹ்யத்திலும், **கடி ஜங்கோ4தரேஷ அபி** - இடைமுழங்கால் வயிறு இவைகளிலும், **நாபிகண்டே** - நாவியிலும் கண்டத்திலும், **வங்க்ஷணயோ:** - துடைகளின் ஸந்தியிலும், **ஊரு ஜானுஷு** - துடைமுழங்கால்களின் மத்தியங்களாகிய இடங்களிலும், **திஷ்டதி** - இருக்கின்றது, **தஸ்ய** - அந்த அவானடைய, **கர்ம** - காரியமானது, **மூத்ர புரிஷாதி3 விஸர்க்க3:** - முத்திர மலமுதலிய மோசனம், **கீர்த்தித:** - என்று சொல்லப்பட்டது.

பொழிப்புரை: - அபானனானது ஆஸனத்திலும் குஹ்யத்திலும் இடைமுழங் கால் வயிறு இவைகளிலும் நாபியிலும் கண்டத்திலும் துடைகளின் ஸநதிகளிலும் துடைமுழங்கால்களுக்கு நடுவிலுள்ள இடங்களிலும் இருக்கின்றது. அதன் காரியமானது மூத்திர மலாதிமோசனம் என்க.

ஶ்லோகம்

வ்யானோऽக்ஷி ஶ்ரோத்ர கு3ல்ப்பே2 ச ஜங்கா4 க்ராணேஷு திஷ்ட3தி
ப்ராணாயாம த்4ருதி த்யாக3 க்3ரஹணாத்3யஸ்ய கர்ம ச (30)

வியாக்யானம்: - வ்யான: - வியானனானது, **அக்ஷிஶ்ரோத்ர கு3ல்ப்பே2 ச** - கண் காது பாதக்கறடுகளிலும், **ஜங்கா4 க்ராணேஷு** - நாவு மூக்குகளிலும், **திஷ்ட3தி** - இருக்கின்றது, **அஸ்ய** - இதனுடைய, **கர்ம** - கர்மமானது**, ப்ராணாயாம த்4ருதி த்யாக3 க்3ரஹணாதி** - பிராணாயாமத்தின் கும்பகரேசகபூரகம் முதலியவாம்.

பொழிப்புரை: - வியானனானது கண் காது பாதக்கறடு நாக்கு மூக்கு இவ்விடங்களில் இருக்கின்றது. இதன் கர்மமானது பிராணாயாமத்தின் பூரகரேசக கும்பகம் முதலியனவாம்.

ஶ்லோகம்.

ஸமானோ வ்யாப்ய நிகி2லம் ஶரீரம் வஹ்னினா ஸஹ
த்3வி: ஸப்ததி ஸஹஸ்ரேஷு நாடீ3 ரந்த்4ரேஷு ஸஞ்சரன் (31)

பு4க்த பீத ரஸான் ஸம்க் ஆனயன் தே3ஹ புஷ்டி க்ருத்

வியாக்யானம்: - **ஸமான:** - ஸமானனானது, **வஹ்னினா ஸஹ** - அக்கிநி யோடு கூட, **நிகி2லம், ஶரீரம்** - ஸகல சரீரத்தையும், **வ்யாப்ய** - வியாபித்துக் கொண்டு, **த்3வி: ஸப்ததி ஸஹஸ்ரேஷு** - எழுத்தீராயிரங்களாகிய, **நாடீரந்த்ரேஷு** - நாடீத்வரரங்களிலும், **ஸஞ்சரன்** - ஸஞ்சரிக்கின்றதாய், **பு4க்த பீத ரஸான்** - புசிக்கப்பட்டதும் அருந்தப்பட்டதுமாகிய ரஸங்களை, **ஸம்யக்** - ஆநயந் நன்கு கொண்டு சேர்க்கின்றதாய் தேஹபுஷ்டியைச் செய்கின்றது.

பொழிப்புரை: - ஸமானனானது அக்கிநியோடுகூட ஸகல சரீரத்தையும் வியாபித்துக்கொண்டு எழுபத்தீராயிரம் நாடித்துவாரங்களிலும் ஸஞ்சரிக்கின்றதாய், புசிக்கப்பட்டதும் அருந்தப்பட்டதுமாகிய ரஸங்களை நன்கு கொண்டு சேர்க்கின்ற தாய்த்தே ஹபுஷ்டியைச் செய்கின்றது.

ஶ்லோகம்.

உதா3ன: பாத3யோ ராஸ்தே ஹஸ்தயோரங்க3 ஸந்தி4ஷு
கர்மாஸ்ய தே3ஹோன்னயன உத்க்ரமணாதி3 ப்ரகீர்த்திதம் (32)

வியாக்யானம்: - **உதான:** - உதானனானது, **பாத3யோ** - கால்களிலும், **ஹஸ்தயோ:** - கைகளிலும், **அங்கஸந்திஷு** - அங்கஸந்திகளிலும், ஆஸ்தே - இருக்கின்றது, **அஸ்ய** - இதன், **கர்ம** - கருமமானது, **தேஹோந்நயநோத்க்ரமணாதி** - தேஹத்தை எழுந்திருக்கச்செய்தல் மேல்கிளம்பச்செய்தல் முதலியது என்று, **ப்ரகீர்த்திதம்** - சொல்லப்பட்டது.

பொழிப்புரை: - உதானன் கால்களிலும் கைகளிலும் அங்கஸந்திகளிலும் இருக்கின்றது. இதன் (கர்மமா) தொழிலானது எழுந்திருக்கச் செய்தல் மேல்கிளம்பச் செய்தல் முதலியது என்க,

ஶ்லோகம்.

த்வகா3தி3 தா4தூனாஶ்ரித்ய பஞ்ச நாகா3தய: ஸ்தி2தா
உத்3காராதி3 நிமேஷாதி3 க்ஷுத் பிபாஸாதி3கம் க்ரமாத் **(33)**

தந்த்3ரீ ப்ரப்4ருதி ஶோதி ஶோகாதி3 தேஷாம் கர்ம ப்ரகீர்த்திதம் (34)

வியாக்யானம் - நாகாதய: - நாகன் முதலிய, **பஞ்ச** - ஐந்தும் (கூர்ம, க்ருகா, தேவதத்த, தனஞ்ஜயர்கள்), **தவ்காதிதாதூங்** - தொக்கு முதலிய தாதுக்களை **ஆச்ரித்ய** - ஆச்ரயித்துக்கொண்டு, **ஸ்திதா** - இருக்கின்றன, **தேஷாம் - அவைகளின் கர்ம தொழிலானது க்ர்மாத் -** முறையே, **உக்காராதி** - கக்குதல் முதலியது, **நிமேஷாதி** - இமை கொட்டுதல் முதலியது, **க்ஷுத்பிபாஸாதிகம்** - பசிதாகம் முதலியது, **தந்தரீப்ரக்ருதி** - சோம்பல் முறித்தல் முதலியது, **சோகாதி** - சோகமடைதல் முதலியது என்று, **ப்ரகீர்த்திதம்** - சொல்லப்பட்டது.

பொழிப்புரை:- நாகன் முதலிய ஐந்துவாயுக்களும் த்வக் முதலிய தாதுக்க ளைப் பற்றிக் கொண்டிருக்கின்றன. அவைகளின் தொழில் முறையே, கக்குதல் முதலியது இமைகொட்டுதல் முதலியது பசி தாகம் முதலியது, சோம்பல் கொட்டாவி முதலியது சோகம் முதலியது என்பதாம்.

ஶ்லோகம்

அக்3னேஸ்து ரோசகம் ரூபம் தீ3ப்தம் பாகம் ப்ரகாஶதாம்
அமர்ஷ தீக்ஷ்ண ஸௌக்ஷ்மாணா மோஜஸ் தேஜஶ்ச ஶௌரதாம் (35)

மேதா4விதாம் ததா2 த4த்தே ஜலாத்து ரஸநம் ரஸம்
ஶைத்யம் ஸ்னேஹம் த்3ரவம் ஸ்வேத3ம் கா3த்ராதி3 ம்ருது3தாமபி
(36)

வியாக்யானம்: - **அக்3னே** - அக்கிதியினிடமிருந்து, **ரோசகம்** - நேத்திரேந்திரித்தையும், **ரூபம்** - உருவத்தையும், **தீப்தம்** - வெண்ணிறம் சென்னிறம் முதலிய நிறங்களையும், **பாகம்** - (உண்ட உணவை) ப்பாகமசெய்தல் முதலியதையும், **ப்ரகாஶதாம்** - விளக்கத்தையும், **அமர்ஷ தீக்ஷ்ண ஸௌக்ஷ்மாணாம்** - பொறுமையின்மை கடுரத்தன்மை இளைப்புற்றிருத்தல் இவைகளையும், **ஓஜ:** - சரீரஸ்திதிஹேதுவாகிய குணவிசேஷத்தையும், **தேஜ:** - ஸந்தாபத்தையும், **சூரதாம்** - பராக்கிரமத்தையும், **மேதாவிதாம்** - புத்திசாலித்தன்மையையும், **ஆதத்தே** - கிரஹிக்கின்றது, **ஜலாத், து** - ஜலத்தினின்றும், **ரஸநம்** - நாவையும், **ரஸம்** - ரஸத்தையும், **சைத்யம்** - சீதத்தையும், **ஸ்நேஹம்** - அடர்ந்திருத்தலையும், **த்ரவம்** - த்ரவத்தையும், **ஸ்வேத3ம்** - வியர்வையையும், **கா3த்ராதி3 ம்ருது3தாம்** - அங்கங்கள் மிருதுவாயிருத்தலையும் கிரஹிக்கின்றது.

பொழிப்புரை: - அக்கிநியிடமிருந்து நேத்திரேந்திரியம் உருவம் வெண்மை முதலிய நிறம் உண்ட உணவை ஜடராக்கியால் பாகம் செய்தல் முதலியது விளக்கம் பொறுமையின்மை கொடுந்த தன்மை இளைப்புற்றிருத்தல் இவைகளையும் ஓஜஸ் தேஜஸ் சூரத்தன்மை மேதாவித்தன்மை இவைகளையும் கிரஹிக்கின்றது. ஜலத்தினின்றும் நாவையும் ரஸத்தையும் சீதளத்தன்மையையும் அடர்ந்திருத்தலையும் த்ரவத்தையும் வியர்வையையும், அங்கங்கள் ம்ருதுவாயிருத்தலையும் கிரஹிக்கின்றது

ஶ்லோகம்.

பூ4மேர் க்4ராணேந்த்3ரியம் க3ந்த4ம் ஸ்தை2ர்யம் தை3ர்யம் ச கௌ4ரவம்
த்வக3ஸ்ருங் மாம்ஸ மேதோ3sஸ்தி2 மஜ்ஜா ஶுக்லாதி3 தா4தவ: (37)

அன்னம் பும்ஸாஶிதம் த்ரேதா4 ஜாயதே ஜட2ராக்3னினா

வியாக்யானம்: - **பூ4மே:** - பூமியிலிருந்து, **க்4ராணேந்த்3ரியம்** - நாசியிந்த்ரியத்தையும், **க3ந்த4ம்** - நாற்றத்தையும், **ஸ்தைர்யம்** - கனத்தையும், **தைர்யம்** - தைரியத்தையும், **கௌரவம்** - பருமனையும் அடைகின்றது. **த்வக3ஸ்ருங் மாம்ஸ**

மேதோ^{3}sஸ்தி மஜ்ஜா சுக்ராணி - தொக்கு ரத்தம் மாம்ஸம் மேதஸ் (வஸை) எலும்பு மஜ்ஜை சுக்கிலம் இவைகள், **தாதவ:** - தாதுக்களென்னப்படும், **பும்ஸா** - மனிதனால், **அசிதம்** - உண்ணப்பட்ட, **அன்னம்** - உணவானது, **ஜட^{2}ராக்^{3}னினா** - ஜடராக்கிநியால், **த்ரேதா^{4}** - மூவகை, **ஜாயதே** - ஆகின்றது.

பொழிப்புரை: - ப்ருதிவியிலிருந்து க்ரானேந்திரியம் நாற்றம் கனம் தைரியம் பருமன் இவைகளைப்பெறுகின்றது. தொக்கு உதிரம் மாம்ஸம் மேதஸ் எலும்பு மஜ்ஜை சுக்கிலம் இவைகள் ஸப்ததாதுக்களாம். மனிதனால் புசிக்கப்பட்ட உணவு ஜடராக்கிநியால் மூவகையாகின்றது

ஶ்லோகம்

மலம் ஸ்த^{2}விஷ்டோ^{2} பா^{4}க^{3}:ஸ்யான் மத்^{4}யமோ மாம்ஸதாம் வ்ரஜேத் (38)
மன: கனிஷ்டோ^{2} பா^{4}க^{3}: ஸ்யாத் தஸ்மா த^{3}ன்னமயம் மன:

வியாக்யானம்: - **மலம்** - மலமானது, **ஸ்த^{2}விஷ்ட:** - ஸ்தூலமாகிய, **பாக:** - அம்சம், **ஸ்யாத** - ஆகும், **மத்யம: பாக:** - மத்திம பாகமானது, **மாம்ஸதாம்** - மாம்ஸத்தன்மையை, **வ்ரஜேத்** - அடையும், **மன:** - மனமானது, **கனிஷ்ட:** - ஸூக்ஷ்மத்தன்மையுடைய, **பா^{4}க^{3}: ஸ்யாத்** - அம்சமாம், **தஸ்மாத்** - ஆதலால், **மந:** - மனமானது, **அந்நமயம்** - அந்தமயம் என்னப்படுவதாம்.

பொழிப்புரை: - மலமானது ஸ்தூலமாகியபாகம். மத்திமபாகம் மாம்ஸமா கின்றது. ஸூக்ஷ்மபாகமானது மனமாகின்றதாதலின் மனம் அந்நமயமென்று சொல்லப்படுகின்றது..

ஶ்லோகம்

அபாம் ஸ்த^{2}விஷ்டோ^{2} மூத்ரம் ஸ்யான் மத்^{4}யமோ ருதி^{4}ரம் பவேத் கனிஷ்ட^{2}பா^{3}க^{3}: ப்ராண: ஸ்யாத் தஸ்மாத் ப்ராணோ ஜலாத்மக: (39)

வியாக்யானம்: - **அபாம்** - ஜலத்தினது, **ஸ்தவிஷ்ட:** - ஸ்தூல பாகம், **மூத்ரம், ஸ்யாத்** - மூத்திரமாகின்றது, **மத்யம்** - நடுத்தரமாகிய பாகமானது, **ருதிரம்** - ரதத்தை, **வரஜேத்** - அடைகின்றது, **கநிஷ்டபாக:** - நட்பமாகிய பாகமானது, **ப்ராண, ஸ்யாத்** - ப்ராணனாகின்றது, **தஸ்மாத்** - ஆதலால், **ப்ராண:** - ப்ராணனானது, **ஜலாத்மக** - ஜலஸ்வரூபமானது என்பதாம்.

பொழிப்புரை: - ஜலத்தினது ஸ்தூலபாகம் மூத்திரமாகின்றது மத்திய பாகமானது ரத்தத்தையடைகின்றது நுட்பமாகிய பாகமானது ப்ராணனாகின்றது. ஆதலால் ப்ராணன் ஜலமயம் என்பதாம்.

ஸ்லோகம்.

தேஜஸோ஽ஸ்தி^{2} ஸ்த^{2}விஷ்ட^{2}ம் ஸ்யான் மஜ்ஜா மத்^{4}ய ஸமுத்^{3}ப^{4}வ:
அணிஷ்டோ^{2} வாங்மதா தஸ்மாத் தேஜோப^{3}ன்னாதாத்மகம் ஜக^{3}த்
(40)

வியாக்யானம்: - **தேஜஸ** - தேஜவி (அக்கிநியி)னுடைய, **ஸ்தவிஷ்ட:** - ஸ்தூலமாகிய பாகமானது, **அஸ்தி** - எலும்பு, **ஸ்யாத்** - ஆகும், **மஜ்ஜா** - மஜ்ஜை எனும் தாதுவானது, **மத்யஸமுத்பவ:** - மத்திமபாகமாம், **கநிஷ்டா** - ஸூக்ஷ்மபாகமானது, **வாங்மதா** - வாக் என்று சொல்லப்படுவதாம், **தஸ்மாத்** - ஆதலால் ஜகத் - ஜகமானது, **தோஜோபந்நாத்மகம்** - அக்கிநி ஜலமந்தரூபமாக உள்ளது.

பொழிப்புரை: - அக்கிநியினுடைய ஸ்தூலமாகிய பாகமானது எலும்பாகும். மஜ்ஜை எனும் தாது மத்திமபாகமாகின்றது ஸூக்ஷ்மபாகமானது வாக் என்னப் படுகின்றது. ஆதலின் ஜகமானது தேயுஜலாந்தரூபமாயுள்ளது.

ஶ்லோகம்.

லோஹிதாஜ் ஜாயதே மாம்ஸம் மேதோ^{3} மாம்ஸ ஸமுத்^{3}ப^{4}வம்
மேத^{3}ஸோ஽ஸ்தீ^{2}னி ஜாயந்தே மஜ்ஜா த்வஸ்தி^{2} ஸமுத்^{3}ப^{4}வம் (41)

வியாக்யானம்: - **லோஹிதாத்** - ரத்தத்தினின்றும், **மாம்ஸம்** - மாம்ஸமானது, **ஜாயதே** - உண்டாகின்றது, **மேத:** - மேதஸ்ஸானது, **மாம்ஸஸமுத்பவம்** - மாம்ஸத்திலிருந்துண்டாவதாம், **மேதஸ:** - மேதஸ்ஸிலிருந்து, **அஸ்தீனி** - எலும்புகள், **ஜாயந்தே** - உண்டாகின்றன, **மஜ்ஜா** - மஜ்ஜை என்பது, **அஸ்தி ஸமுத்பவா:** - எலும்பிலிருந்துண்டாவதாம்.

பொழிப்புரை: - ரத்தத்தினின்றும் மாம்ஸமும் மாம்ஸத்திலிருந்து மேதஸ்ஸும் மேதஸ்ஸிலிருந்து எலும்புகளும் எலும்புகளிலிருந்து மஜ்ஜையும் உண்டாகின்றது.

ஶ்லோகம்

நாட்^{3}யோ஽பி மாம்ஸ ஸங்கா^{4}தாச்சு^{2}க்லம் மஜ்ஜா ஸமுத்^{3}ப^{4}வம்
வாத பித்த கபா^{2}ஶ்சா஽த்ர தா^{4}தவ: பரிகீர்த்திதா: (42)

வியாக்யானம்: - **மாம்ஸ ஸங்கா^{4}தாத்** - மாம்ஸச்சேர்க்கையில் நின்றாம், **நாட்^{3}ய: அபி** - நாடிகளும் உண்டாகின்றன, **சுக்லம்** - ரேதஸானது, **மஜ்ஜா ஸமுத்^{3}ப^{4}வம் -** மஜ்ஜையிலிருந்துண்டாகின்றது, **வாத பித்த கபா^{2}: ச** - வாயு பித்தம்

சிலேஷ்மம் ஆகிய இவைகள், **அத்ர** - இத்தேஹத்தினில், **தா⁴தவ:** - தாதுக்கள் என்று **பரிகீர்த்திதா:** - சொல்லப்பட்டுள்ளன

பொழிப்புரை: - மாம்ஸங்களிலிருந்து நாடிகள் உண்டாகின்றன. ரேதஸானது மஜ்ஜையிலிருந்துண்டாகின்றது. வாதபித்த கபங்கள் இத்தேகத்திலுள்ள தாதுக்கள் என்று சொல்லப்பட்டுள்ளன.

ஶ்லோகம்

த³ஶாஞ்ஜலி ஜலம் ஜ்ஞேயம் ரஸஸ்யா஽ஞ்ஜலயோ நவ
ரக்தஸ்யாஷ்டௌ புரீஷஸ்ய ஸப்த ஸ்யு: ஶ்லேஷ்மணஶ்ச ஷட் (43)

பித்தஸ்ய பஞ்ச சத்வாரோ மூத்ரஸ்யா஽ஞ்ஜலயஸ்த்ரய:
வஸாயா மேத³ஸோ த்³வௌ து மஜ்ஜா த்வஞ்ஜலி ஸம்மித: (44)

அர்த்தா⁴ஞ்சலி தத: ஶுக்லம் ததே³வ ப³லமுச்யதே
அஸ்த்²னாம் ஶரீரே ஸங்க்²யா து ஷஷ்ட்டியுக்தம் ஶத த்ரயம் (45)

வியாக்யானம்: - **ஜலம்** - ஜலமானது, **தசாஞ்ஜலி** - பத்து அஞ்ஜலி பரிமாணமுடையதென்று, **ஜ்ஞேய:** - அறியத்தக்கது (அஞ்ஜலியெனின் இருசிரங்கைகள் என்பது பொருள்) **ரஸஸ்ய** - ரஸத்திற்கு (அன்னஸாரத்திற்கு) **நவ** - ஒன்பது, **அஞ்ஜலய: -** அஞ்ஜலிபரிமாணங்களாம், **ரக்தஸ்ய** - ரத்தத்திற்கு, **அஷ்டௌ** - எட்டு (அஞ்ஜலிகளாம்), **புரீஷஸ்ய** - மலத்திற்கு, **ஸப்த** - ஏழு, **அஞ்ஜலி** - பரிமாணமாம், **ச்லேஷ்மண:** - கபத்திற்கு, **ஷட்** - ஆறு (அஞ்ஜலிகளாம்) **பித்தஸ்ய** - பித்தத்திற்கு, **பஞ்ச** - ஐந்து (அஞ்ஜலிகளாம்), **வஸாயா:** - மாம்ஸத்ரவத்திற்கு, **த்ரய:** - மூன்று (அஞ்ஜலிகளாம்), **மேதஸ:** - ஹ்ருதயமாம்ஸத்திற்கு, **த்வௌ** - இரண்டாம், **மஜ்ஜா** - மஜ்ஜையானது, **அஞ்ஜலி ஸம்மித:** - ஓரஞ்ஜலி (யாம்), **ஶுக்லம்** - ரேதஸானது, **அர்த்தாஞ்ஜலி** - அரை அஞ்ஜலியாம், **தத் ஏவ** - அதுவே, **பலம்** - பலம் என்று **உச்யதே** - சொல்லப்படுகின்றது, **ஶரீரே** - சரீரத்திலுள்ள, **அஸ்த்²னாம்** - எலும்புகளின், **ஸங்க்²யா** - ஆளவை, **ஷஷ்டியுக்தம் -** அறுபதோடு கூடிய, **சதத்ரயம்** - மூன்று நூறுகளாம்.

பொழிப்புரை: - ஜலம்பத் தஞ்ஜலியும் ரஸம் ஒன்பதஞ்ஜலியும் ரக்தம் எட்டு அஞ்ஜலியும் மலம் ஏழஞ்ஜலியும் கபம் ஆறஞ்ஜலியும் பித்தம் ஐந்தஞ்ஜலியும் மூத்திரம் நான்கஞ்ஜலியும் வஸை மூன்றஞ்ஜலியும் மேதஸ் இரண்டஞ்ஜலியும் மஜ்ஜை ஓரஞ்ஜலியும் சுக்கிலம் அரையஞ்ஜலி பரிமாணம் சுக்கிலமே பலம் என்பதாம் சரீரத்திலுள்ள எலும்புகளின் ஸங்கியை முன்னூற்றறுபதாம்.

ஶ்லோகம்.

ஜலஜானி கபாலானி ருசகா ஸ்தரணானி ச
நவகானீதி தான்யாஹு: பஞ்சதா^{4}ஸ்தீனி ஸூரய: (46)

வியாக்யானம்: - **அஸ்தீனி** - எலும்புகள், **ஜலஜானி** - ஜலஜங்களென்றும், (தாமரை போன்றனவும்) **கபாலானி** - கபாலங்களென்றும் (சிரஸிலுள்ளனவும்) **ருசகா ஸ்தரணானி ச** - ருசகங்களென்றும், ஆஸ்தரணங்களென்றும் (மாதளை போன்றவும் ஆஸனம்போன்றனவும்) **நவகானீதி** - நளகம் (கணுக்கால் எலும்பு முதலியன) என்றும், **பஞ்சதா** - ஐந்து வகைப்பட்டனவென்று, **ஸூரயம்** - வித்வான்கள், **ஆஹு** - சொல்லுகின்றனர்.

பொழிப்புரை: - எலும்புகள் ஜலஜங்கள் பாலங்கள் ருசகங்கள் ஆஸ்தரணங்கள் நளகம முதலியன என்று ஐந்துவிதங்களாய் வித்வான்களால் சொல்லப்படுகின்றன.

ஶ்லோகம்.

த்^{3}வே ஶதே த்வஸ்தி^{2} ஸந்தீ^{4}னாம் ஸ்யாதாம் தத்ர த^{3}ஶோத்தரே (46)

வியாக்யானம்: - **தத்ர** - ஆண்டு, **அஸ்தி ஸந்தீனாம்** - எலும்பு ஸந்திகளின் (எண்ணிக்கை) **த^{3}ஶோத்தரே -** பத்து அதிகமாகிய, **த்^{3}வே ஶதே** - இரண்டு நூறுகளாம்.

பொழிப்புரை: - ஆண்டு ஸந்திகளிலுள்ள எலும்புகளின் எண்ணிக்கை இரு நாற்றுப்பத்து.

ஶ்லோகம்.

ரௌரவா: ப்ரஸராஸ்துந்த^{3} ஸேசனாஸ்ஸ்யு ருலூக^{2}லா:
ஸமுத்^{3}ரா மண்ட^{3}லா: ஶங்கா^{2}வர்த்தா வாமன குண்ட^{3}லா: (47)

இதயஷ்டதா^{4} ஸமுத்^{3}தி^{3}ஷ்டா: ஶரீரே த்வஸ்தி^{2} ஸந்த^{4}ய:

வியாக்யானம்: - **ரௌரவா:** - ரௌரவங்கள், **ப்ரஸரா** - ப்ரஸரங்கள், **ஸ்கந்த ஸேசனா** - ஸ்கந்தஸேசனங்கள், **உலூக^{2}லா:** - உலூகலங்கள், **ஸமுத்^{3}ரா** - ஸமுத்திரங்கள், **மண்டலா** - மண்டலங்கள், **ஶங்கா^{2}வர்த்தா** - சங்காவர்த்தங்கள், **வாமன குண்ட^{3}லா** - வாமன குண்டலங்கள், **இதி** - என்று, **அஷ்டதா** - எண் வகையாய், **ஶரீரேஷு** - சரீரங்களில், **அஸ்தி^{2} ஸந்த^{4}ய:** - அஸ்திஸந்திகள், **ஸமுத்^{3}தி^{3}ஷ்டா:** - சொல்லப்பட்டுள்ளன.

பொழிப்புரை: - ரௌரவங்கள் ப்ரஸரங்கள் ஸ்கந்தஸேசனங்கள் உலூகலங்கள் ஸமுத்ரங்கள் மண்டலங்கள் சங்காவர்த்தங்கள் வாமனகுண்டலங்கள் என்று எண்வகையாய் சரீரத்திலுள்ள எலும்புகள் சொல்லப்பட்டுள்ளன.

ஶ்லோகம்.

ஸார்த்^{3}த^{4}கோடி த்ரயம் ரோம்ணாம் ஶ்மஶ்ரு கேஶா ஸ்திரி லக்ஷகா: (48)

தே^{3}ஹ ஸ்வரூபமேவம் தே ப்ரோக்தம் த^{3}ஶரதா^{2}த்மஜ!
யஸ்மா த^{3}ஸாரோ நாஸ்த்யேவ பதா^{3}ர்த்தோ^{2} பு^{4}வன த்ரயே (49)

வியாக்யானம்: - **ரோம்ணாம்** - உரோமங்களுக்கு, **ஸார்த்^{3}த^{4}கோடி த்ரயம்** - மூன்றரைக் கோடிக் (கணக்குள்ளது) **ஶ்மஶ்ரு கேஶா** - மீசை கேசம் இவைகள், **ஸ்த்ரி லக்ஷகா:** - மூன்றுலக்ஷங்களாம், **த^{3}ஶாரதா^{2}த்மஜ** - ஓ தசரதன் புதல்வனே, **தே^{3}ஹ ஸ்வரூபம்** - தேஹஸ்வரூபம், **ஏவம்** - இவ்வாறு, **தே** - உனக்கு, **ப்ரோக்தம்** - சொல்லப்பட்டது, **பு^{4}வன த்ரயே** -மூவுலகிலும், **யஸ்மாத்** - யாதொருதேஹத்தைக் காட்டிலும், **அஸார** - ஸாரமற்றது, **நாஸ்தி ஏவ** - இல்லவே இல்லையோ அப்படிப்பட்டதன்றோ இத்தேஹமானது.

பொழிப்புரை: - உரோமங்கள் மூன்றரைக்கோடிக்கணக்குள்ளன. மீசை கேசம் இவைகள் மூன்று லக்ஷங்களாம் ஓ தசரதன் தநயனே இவ்வாறு உனக்கு தேஹ ஸ்வரூபம் சொல்லப்பட்டதன்றோ. யாதொன்றைக்காட்டிலும் இழிவாகியது மூன்றுலகத்திலும் இல்லையோ அப்படிப்பட்டதன்றோ இத்தேஹம்.

ஶ்லோகம்.

தே^{3}ஹேsஸ்மின் னபி^{4}மானேன ந மஹோபாய பு^{3}த்^{3}த^{3}ய:
அஹங்காரேண பாபேன க்ரியாந்தே ஹந்த ஸாம்ப்ரதம் (50)

வியாக்யானம்: - **அஸ்மின்** - இந்த, **தேஹே** - தேஹத்தினிடத்தில், **அபிமானேன** - அபிமானமாகிய, **பாபேன** - மிக்கக்கெட்டதாகிய, அஹங்காரேண - அஹங்காரத்தால், **ஸாம்ப்ரதம்** - இப்போது, **மஹோபாய பு^{3}த்^{3}த^{3}ய:** - பரசிவவிசார ரூபங்களாகிய புத்தி விருத்திகள், **ந க்ரியந்தே** - செய்யப்படுவதில்லை, **ஹந்த** - அந்தோ.

பொழிப்புரை: - இந்ததேஹத்தினில் அபிமானமாகிய கொடியதாகிய அகங்காரத்தினால் இம்மனிதப்பிறவியில் பிறவிப்பிணி நீங்கி ஸுகம் பெறும் உபாயமாகிய பரசிவவிசாரம் எனும் சித்த விருத்திகள் செய்யப்படுகின்றதில்லை.

ஶ்லோகம்.

தஸ்மா தே^{3}தத் ஸ்வரூபம் து விபோ^{3}த்^{3}த^{4}வ்யம் மனீஷிணா: (51)

வியாக்யானம்: - **தஸ்மாத்** - ஆதலால், **ஏதத்ஸ்வரூபம் -** (அகங்காரத்திற் கிடமாகிய) தேஹஸ்வரூபமானது, **மனீஷிணா** - புத்திமானால், **விபோத்தவ்யம்** - நன்கறிந்துகொள்ள வேண்டியது.

பொழிப்புரை: - ஆதலால் அஹங்காரத்திற்கிடமாகிய தேஹத்தின் ஸ்வரூபம் புத்திமான்களால் நன்கறிந்து கொள்ள வேண்டியது.

ஒன்பதாவது அத்தியாயம்

முற்றிற்று.

பத்தாவது அத்தியாயம்

ஜீவ ஸ்வரூப நிரூபணம்

ஸ்ரீராமன் கூறலானார்.

ஶ்லோகம்.

ப⁴க³வன்னத்ர ஜீவோऽஸௌ ஜந்தோர் தே³ஹேऽவதிஷ்ட²தே
ஜாயதே வா குதோ ஜீவ:? ஸ்வரூபம் சாஸ்ய கிம்? வத³ (1)

வியாக்யானம்: - **பகவன்** - ஓ பகவனே, **அத்ர** - இந்த, **ஜந்தோ**: - பிராணிகளது, **தேஹே** - தேஹத்திலுள்ளவனாய், **அஸௌ** - இதுகாறும் சொல்லப் பட்ட, **ஜீவ:** - ஜீவனானவன், **அவதிஷ்ட²தே** - தனித்துள்ளவனா அல்லது, **ஜாயதே வா** - உண்டாகின்றானா, **குத:** - எக்காரணத்தால், **ஜீவ:** - ஜீவன் என்னப்படுகின்றான், **அஸ்ய** - இந்த ஜீவனது, **ஸ்வரூபம் வா** - ஸ்வரூபம்தான், **கிம்** - யாது, வத - சொல்லும்.

பொழிப்புரை: - ஓ பகவனே இந்தப்பிராணியின் தேஹத்திலுள்ளவனாய் இது காறும் சொல்லப்பட்ட ஜீவன் தேகத்திலும் தனித்துள்ளவனா அல்லது உண்டாகின்ற வனா எக்காரணத்தால் ஜீவன் என்று சொல்லப்படுகின்றான் இவனது ஸ்வரூபம் தான் யாது சொல்லும்.

ஶ்லோகம்.

தே³ஹாந்தே வா குத்ர யாதி க³த்வா வா குத்ர திஷ்ட²தி
கத² மாயாதி வா தே³ஹம்? புனர்ந யதி³ வா வத³ (2)

வியாக்யானம்: - **தே³ஹாந்தே** - தேஹமுடிவில் (மரணத்தினில்) **குத்ர** - எங்கு, **யாதி** - செல்லுகின்றான், **கத்வாவா** - சென்று, **குத்ர** - எங்கு, **திஷ்ட²தி** - இருக்கின்றான், **கத²ம்** - எப்படி, **ஆயாதி வா** - வருகின்றான், **தேஹம் -** தேஹத்தை, **புன** - மறுபடியும், **ந ஆயாதிவா** - வந்து அடைகின்றதில்லையா, **வத³** - சொல்லும்.

பொழிப்புரை: - தேஹம் நசித்தபின் ஜீவன் எங்கு செல்லுகின்றான்? சென்று எங்கிருக்கன்றன்? எப்படி வருகின்றான்? அல்லது மறுபடியும் வந்து தேஹத்தை யடைகின்றதில்லையா? என்ன சொல்லும்?

ஸ்ரீ பகவான் கூறலானார்

ஶ்லோகம்.

ஸாது^{4} ப்ருஷ்டம் மஹாபா^{4}க^{3} கு^{3}ஹ்யாத் கு^{3}ஹ்யதமம் ஹி தத்
தே^{3}வைரபி ஸுது^{3}ர்ஜ்ஞேயம் இந்த்^{3}ராத்^{3}யைர் வா மஹர்ஷிபி^{4}: (3)

அனயஸ்மை நைவ வக்தவ்யம் மயாபி ரகு^{4}நந்த^{3}ன!
த்வத்^{3} ப^{4}க்த்யாஹம் பரம் ப்ரீதோ வக்ஷ்யாம்யவஹித: ஶ்ருணு (4)

வியாக்யானம்: - **மஹாபா^{4}க^{3}** - ஓ மஹாபாக்கியவானே, **ஸாது** - நன்கு, **ப்ருஷ்டம்** - வினவப்பட்டது, **யத்ஹி** - யாதொன்றே, **குஹ்யாத், குஹ்யதமம்** - ரஹஸ்யங்களிலும் அறிய ரஹஸ்யமாயுள்ளதோ, **இந்த்ராத்யை:** - இந்திரன் முதலியவர்களாகிய, **தே^{3}வை அபி** - தேவர்களாலும், **மஹர்ஷிபி^{4}:** - மஹாருஷிகளாலும், **ஸுதுர்ஜ்ஞேயம்** - எளிதில் அறியமாட்டாததோ, ரகுநந்தன - ஓ ரகு குலத்தில் தோன்றியவனே, **மயாபி** - என்னாலும், **அனயஸ்மை** - மற்றவனுக்கு, **ந ஏவ வக்தன்யம்** - சொல்லக்கூடியதேயல்ல, **அஹம்** - யான், **த்வத்ப^{4}க்த்யா** - உனது பக்தியால், **பரம்** - மிகவும், **ப்ரீத:** - பிரீதியடைந்த வனாய்க்கொண்டு, **வக்ஷ்யாமி** - சொல்லுகின்றேன், **அவஹித** - ஏகாக்ரசித்த முடையவனாய், **ஶ்ருணு** - கேட்பாயாக.

பொழிப்புரை: - ஓ மஹாபாக்கியவானே உன்னால் நன்கு வினவப்பட்டது யாதொரு இவ்வினா ரஹஸ்யத்திலும் ரஹஸ்யமாய் உள்ளதோ இந்திராதி தேவர் களாலும் மஹருஷிகளாலும் யாதொன்று எளிதில் அறிய முடியாததோ ஓ ரகு குலத்தில் தோன்றியவனே என்னாலும் ஏனையோர்களுக்குச் சொல்லக் கூடாதது ஆயினும் யான் உனது பக்தியால் மிகவும் பிரீதியடைந்தவனாய்க்கொண்டு சொல்லுகின்றேன் ஸாவதனனாய்ச் ச்ரவணஞ் செய்வாயாக.

ஶ்லோகம்

ஸத்ய ஞானாத்மகோऽனந்த^{3}: ஸ பரானந்த விக்^{3}ரஹ:
பரமாத்மா பரஞ்ஜ்யோதி ரவ்யக்தோ வ்யக்தி காரணம் (5)

நித்யோ விஶுத்^{3}த^{4}: ஸர்வாத்மா நிர்லேபோऽஹம் நிரஞ்ஜன:
ஸர்வத^{4}ர்ம விஹீனஶ்ச ந க்^{3}ராஹ்யோ மனஸாபி ச (6)

வியாக்யானம்: - **அஹம்** - யான், **ஸத்ய ஞானாத்மக** - ஸத்ய போத வடிவனும், **அனந்த** - அந்தமில்லாதவனும், **பரமானந்த விக்ரஹ:** - பேரானந்த உருவனும், **பரமாத்மா** - பரமாத்மாவும், **பரம் ஜ்யோதி**: - பரம்சோதியாயுள்ளவனும்,

அவ்யக்த - வ்யக்தம் (இந்திரியங்களுக்கு விஷயம்) அல்லாதவனும், **அவ்யக்த காரணம்** - அவ்யக்தத்திற்கும் அதிஷ்டான மாயுள்ளவனும், **நித்ய:** - நித்தியனும், **விஶுத்[3]த[4]:** - நிர்மலனும், **ஸர்வாத்மா** - ஸகல (பொருள்களின் வடிவங்களுக்கும் ஆத்மாவாயுள்ளவனும், **நிர்லேப:** - அஸங்கனும் (ஸம்பந்தமற்றவனும்), **நிரஞ்ஜன:** - நிஷ்கிரியனும், **ஸர்வத[4]ர்ம விஹீனஸ்ச** - ஸகலதர்மங்களுமில்லாதவனும், **மனஸாபி** - மனதினாலும், **ந க்[3]ராஹ்ய:** - கிரஹிக்கக்கூடாதவனுமாயுள்ளவன்.

பொழிப்புரை: - நான் ஸத்தியபோதவடிவனும் அநந்தனும் பேரானந்த வடிவனும் பரமாத்மாவும் பரஞ்ஜோதியும் அவ்யக்தனும் அவ்யக்தத்திற்கும் ஆதார மாயுள்ளவனும் நித்தியனும் நிர்மலனும் ஸர்வாத்மாவாயுள்ளவனும் அஸங்கனும் நிஷ்கிரியனும் ஸகலதர்மங்களுமில்லாதவனும் மனதிற்கும் எட்டாதவனுமாயுள்ள வன்

ஶ்லோகம்.

நாஹம் ஸர்வேந்த்[3]ரிய: க்[3]ராஹ்யோ ஸர்வேஷாம் க்[3]ராஹகோ ஹ்யஹம்
ஞாதாஹம் ஸர்வலோகஸ்ய மம ஞாதா ந வித்[3]யதே (7)

வியாக்யானம்: - அஹம் - நான், **ஸர்வேந்த்[3]ரிய: க்ராஹ்ய** - ஸகலேந்திரி யங்களாலும் அறியக்கூடியவனல்ல, **ஸர்வேஷாம்** - எல்லாவற்றையும், **க்[3]ராஹக:** - அறியச் செய்வோன், **அஹம் ஹி** - யானேயன்றோ, **அஹம்** - நான், **ஸர்வலோகஸ்ய** - ஸகல உலகத்தையும், **ஞாதா** - அறிவோன், **மம** - என்னை, **ஞாதா** - அறிவோன், **ந வித்[3]யதே** - இல்லை.

பொழிப்புரை: - நான் எவ்விந்திரியத்தாலும் அறியக்கூடாதவனும் எல்லாவற் றையும் அறியச் செய்வோனுமாயுள்ளவன். நான் உலகங்களையும் அறிகின்றவன். என்னை யறிகின்றவன் இல்லை.

ஶ்லோகம்.

தூ[3]ர: ஸர்வ விகாராணாம் பரமாண்வாதி[3]கஸ்ய ச
யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ (8)

வியாக்யானம்: - **ஸர்வ விகாராணாம்** - ஸகலவிகாரங்களுக்கும், **பரமாண்வாதிக[3]ஸ்ய ச** - பரமாணு முதலியவைகளுக்கும், **தூர: -** தூரத்திலுள்ளவன், **வாச:** - வாக்குகள், **மனஸா, ஸஹ** - மனஸோடுகூட, **அப்ராப்ய** - அடையாமல், **யத:** - எவனிடமிருந்து, **நிவர்ததந்தே** - திரும்புகின்றனவோ.

பொழிப்புரை: - ஸகலவிகாரங்களுக்கும் பரமாணு முதலியவைகளுக்கும் தூரத்திலுள்ளவன். வாக்குகள் மனதோடுகூட எவனிடம் அடையாமல் திரும்புகின்ற னவோ.

ஶ்லோகம்.

ஆனந்த3ம் ப்3ரஹ்ம மாம் ஞாத்வா ந பி3பே4தி குதஶ்சன

யஸ்து ஸர்வாணி பூ4தானி மய்யேவேதி ப்ரபஶ்யதி
மாம் ச ஸர்வேஷு பூ4தேஷு ததோ ந விஜுகு3ப்ஸதே (9)

வியாக்யானம்: - **ஆனந்தம்** - ஆனந்தவடிவமாகிய, **ப்ரும்ம** - ப்ரும்மமான, **மாம்** - என்னை, **த்யாத்வா** - த்யானம் செய்யின், **குத: ச, ந** - எதனாலும், **நபிபேதி** - பயமடையான், **ய: து** - யாதொருவன், **ஸர்வாணி பூ4தானி** - ஸகலபூதங்களையும், **மயி, ஏவ,** - என்னிடமே, **இதி** - என்று, **பச்யதி** - பார்க்கின்றானோ, **ஸர்வேஷு பூ4தேஷு ச** - ஸகல பூதங்களிலும், **மாம்** - என்னை (பார்க்கின்றானோ) அவன், **தத:** - அதன்பிறகு, **ந விஜுகு3ப்ஸதே** - (எதனையும்) வெறுக்கவிரும்பான்.

பொழிப்புரை: - ஆனந்தவடிவமாகிய ப்ரும்மமான என்னைத்யானம் செய்யின் எதனாலும் பயமடையான் யாதொருவன். ஸகல பூதங்களிலும் யானே என்றும் காண்கின்றானோ அவன் அதன் பின்னர் எதனையும் வெறுக்கமாட்டான்.

ஶ்லோகம்.

யஸ்ய ஸர்வாணி பூ4தானி ஹ்யாத்மைவாபூ4த்3 விஜானத:
கோ மோஹஸ் தத்ர கஶ்ஶோக: ஏகத்வ மனுபஶ்யத: (10)

ஏஷ ஸர்வேஷு பூ4தேஷு கூ3டா4த்மா ந ப்ரகாஶதே
த்ருஶ்யதே த்வக்3ர்யயா பு3த்3த4யா ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்ம த3ர்ஶிபி5:
(11)

வியாக்யானம்: - விஜானத: - நன்கறிவோனாகிய, **யஸ்ய - எவனுக்கு, ஸர்வாணி பூ4தானி** - ஸகல பூதங்களும், **ஆத்மா ஏவ** - ஆன்மாவாகவே, **அபூத்** - ஆச்சுதோ, **ஏகத்வம்** - ஏகத்துவத்தை, **அனுபஶ்யத:** - காண்கின்றவனாகிய, **தத்ர** - அவனிடம், **மோஹ:** - மோஹமானது, **க** - ஏது, **சோக:** - சோகம், **க** - ஏது, **ஏஷ** - இந்த, **ஆத்மா** - ஆத்மாவானது, **ஸர்வேஷு பூதேஷு** - ஸகலபூதங்களிலும், கூட - மறைபட்டவனாய்க்கொண்டு, **ந ப்ரகாஶதே** - காணப்படுகின்றதில்லை, **ஸூக்ஷ்ம த3ர்ஶிபி5:** - மிக்க விவேகிகளால் **ஸூக்ஷ்மயா** - கூர்மையாயுள்ளதும், **அக்ர்யயா** - ஏகாக்கிரமாயுள்ளதுமாகிய, **புத்யா** - புத்தியினால், **த்ருஶ்யதே** - காணப்படுகின்றான்.

பொழிப்புரை: - நன்கறிவோனாகிய எவனுக்கு ஸகலபூதங்களும் ஆத்மாவாக வே ஆச்சுதோ.சேகத்தன்மையைக் காண்போனாகிய அவனுக்கு மோஹமேது சோக மேது. இவ்வாத்மா ஸகலபூதங்களிலும் கூடியவனாயிருந்து கொண்டு நன்கு காணப்படுகின்றதில்லை ஸூக்ஷ்ம திருஷ்டியுடையவர்ளால் கூர்மையாயும் ஏகாக்ரமாயும் உள்ள புத்தியால் காணப்படுகின்றான்.

ஶ்லோகம்.

அனாத்³ யவித்³யயா யுக்த ஸ்ததா²sப்யேகோsஹ மவ்யய:
அவ்யாக்ருத ப்³ரஹ்ம ரூபோ ஜக³த் கர்த்தா மஹேஶ்வர: (12)

வியாக்யானம்: - அஹம் - நான், **ஏக** - ஏகனும், **அவ்யயஅபி** - வ்யயம் (நாசம்) இல்லாதவனுமாயுள்ளவன், **ததா அபி:** - அப்படியிருக்கினும், **அனாத்³ யவித்³யயா** - அனாதியாகிய அவித்தையோடு கூடியவனாய்க்கொண்டு, **அவ்யாக்ருத ப்³ருஹ்மரூப:** - அவ்யாக்ருதப்ரும்ஹவடிவனாய், **ஜகத்கர்த்தா** - ஜகங்களை ஸ்ருஷ்டிக்கின்றவனாகிய, **மஹேஶ்வர:** - மஹேஸ்வரனாகின்றேன்.

பொழிப்புரை: - நான் ஏகனும் வ்யயமில்லாதவன் அங்ஙனமாயினும் அனாதி யாகிய அவித்யையோடு கூடியவனாய்க்கொண்டு அவ்யாக்ருதப்ரும்ஹவடிவ மாயிருந்து ஜகத்கர்த்தாவாகிய மஹேஸ்வரனாகின்றேன்.

ஶ்லோகம்.

ஞான மாத்ரே யதா² த்³ருஶ்யம் இத³ம் ஸ்வப்னே ஜக³த் த்ரயம்
தத்³வன் மயி ஜக³த் ஸர்வம் த்³ருஶ்யதேsஸ்தி விலீயதே (13)

வியாக்யானம்: - **ஸ்வப்னே** - கனவினில் உள்ளதாகிய, **ஜக³த் த்ரயம்** - மூவுலகும், **ஞானமாத்ரே** - ஞானமாத்திரத்தில், **யதா** - எப்படி, **த்ருச்யம்** - காணப் படுகின்றதோ, **தத்வத்** - அது போலவே, **ஜகத்ஸர்வம்** - ஜகமெல்லாம், **மயி** - என்னிடம், **த்ருச்யதே** - தோன்றுகின்றது, **அஸ்தி** - இருக்கின்றது, **விலீயதே** - ஒடுங்குகின்றது.

பொழிப்புரை: - கனவினில் உள்ளதாகிய மூவுலகும் ஞான மாத்திரத்தில் எப்படிக் காணப்படுகின்றதோ அது போலவே ஸகல ஜகமும் என்னிடம் தோன்று கின்றது நிற்கின்றது ஒடுங்குகின்றது.

ஶ்லோகம்.

நானா வித்^{3}யா ஸமாயுக்தோ ஜீவத்வேன வஸாம்யஹம்
பஞ்ச கர்மேந்த்^{3}ரியாண்யேவ பஞ்ச ஞானேந்த்^{3}ரியாணி ச (14)

மனோ பு^{3}த்^{3}தி^{4} ரஹங்கார ஶ்சித்தம் சேதி சதுஷ்டயம்
வாயவ: பஞ்ச மிலிதா யாந்தி லிங்க^3 ஶரீரதாம் (15)

வியாக்யானம்: - **அஹம்** - நான், **நானா வித்^{3}யா ஸமாயுக்த:** - எண்ணிறந்த அவித்தைகளோடு கூடியவனாய், **ஜீவத்வேன** - ஜீவத்தன்மைபெற்று, **வஸாமி** - வவக்கின்றேன், **கர்மேந்திரியாணி** - கர்மேந்திரியங்கள், **பஞ்ச** - ஐந்தும், **ஞானேந்திரியாணி** - ஞானேந்திரியங்கள், **பஞ்ச** - ஐந்தும், **மன:** - மநம், **புத்தி:** - புத்தி, **அஹங்கார:** - அஹங்காரம், **சித்தம்** - சித்தம், **இதி** - என்று, **சதுஷ்டயம்** - நான்கும், **வாயவ:** - வாயுக்கள், பஞ்ச - ஐந்து, **மிளிதா:** - இவைகள் கூடியவை களாய்க்கொண்டு, **லிங்க ஶரீரதாம்** - லிங்கசரீரத்தன்மையை, **யாந்தி** - அடைகின்றன.

பொழிப்புரை: - நான் எண்ணிறந்த அவித்தைகளோடு கூடியவனாய் ஜீவத்தன்மை பெற்றுவஸிக்கின்றேன். கர்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து மனோபுத்திரித்தாஹங்காரங்களாகிய நான்கு, வாயுக்கள் ஐந்து ஆகிய இவைகள் கூடி லிங்க சரீரத்தன்மையைப் பெறுகின்றன.

ஶ்லோகம்.

தத்ராऽவித்^{3}யா ஸமாயுக்தம் சைதன்யம் ப்ரதி பி^{3}ம்பி^{3}தம்
வ்யாவஹாரிக ஜீவஸ்து க்ஷேத்ரஞ: புருஷோऽபி வா (16)

ஸ ஏவ ஜக^{3}தாம் போ^{4}க்தாऽனாத்^{3}யயோ: புண்ய பாபயோ: (17)

வியாக்யானம்: - **தத்ர** - லிங்கமெனப்படும் அந்த ஸூக்ஷ்ம சரீரத்தில், **ப்ரதிபிம்பிதம்** - பிரதிபிம்பிக்கப்பட்ட, **அவித்^{3}யா ஸமாயுக்தம்** - அவித்தையோடு கூடிய, **சைதன்யம்** - சைதன்யமானது, **வ்யாவஹாரிக ஜீவ:** - வியாவஹார ஸம்பந் தமதாகிய ஜீவனென்றும், **க்ஷேத்ரக்ஞ:** - க்ஷேத்திரக்ஞனென்றும், புருஷ:அபி வா - புருஷனென்றும் சொல்லப்படுகின்றது, **ஸ ஏவ** - அவனே, **புண்ய பாபயோ:** - புண்ய பாவங்களின் பயனாகிய, **ஜகதாம்** - ஜகங்களை, **போக்தா** - புசிப்பவன், **ந அந்ய:** - மற்றவனல்ல.

பொழிப்புரை: - லிங்கதேஹ மென்னப்படும் ஸூக்ஷ்மசரீரத்தில் பிரதி பிம்பிக்கப்பட்ட அவித்தையோடு கூடிய சைதன்யமானது வ்யாவஹாரிக ஜீவனெ

ன்றும் க்ஷேத்ரக்ஞனென்றும் புருஷனென்றும் சொல்லப்படுகின்றது. அவனே அனாதிகளாகிய புண்ணிய பாபபயன்களைப் புசிப்பவன்.

ஶ்லோகம்.

இஹாமுத்ர க3தி தத்ர ஜாக்3ரத் ஸ்வப்னாதி3 போ4க்த்ருதா
யதா2 த3ர்ப்பணகாலிம்னா மலினம் த்3ருஶ்யதே முக2ம் (18)

தத்3வ த3ந்த:கரணகை3ர் தோ3ஷை ராத்மாபி த்3ருஶ்யதே (19)

வியாக்யானம்: - **தத்ர** - அவ்விதமான லிங்கசரீரத்தில் இருக்கும், **தஸ்ய** - அவனுக்கு, **இஹாமுத்ர** - இங்கிருந்து அங்கும் அங்கிருந்திங்கும், **கதி** - செல்லுதலும், **ஜாக்ரத்ஸ்வ ப்நாதிபோக்த்ருதா** - ஜாக்ரத்ஸ்வப்நம் முதலியவை களில் ஸுகதுக்கங்களைப் புசித்தலுமாம், **முகம்** - முகமானது, **த3ர்ப்பணகாலிம்னா** - கண்ணாடியின் அழுக்கினால், **யதா** - எப்படி, **மலினம்** - அழுக்குற்றதாய், **திருச்யதே** - காணப்படுகின்றதோ, **தத்வத்** - அது போலவே, **அந்தகரணகை:** - அந்தக்கரணத்திலுள்ள, **தோஷை:** - குற்றங்களால், **ஆத்மாபி** - ஆன்மாவும் **த்ருச்யதே** - காணப்படுகின்றான்.

பொழிப்புரை: - அவ்விதமான லிங்கசரீரத்திலிருந்து கொண்டே இவ்வுலகிலிருந்து ஸ்வர்க்கநரகங்களுக்கும் ஸ்வாக்கநரகங்களிலிருந்து இவ்வுலகத்திற்கும் போக்குவருத்து செய்தலும் ஜாக்கிரஸ்வப்பனம் முதலியவைகளிலுள்ள ஸுகதுக்கத்தைப் புசித்தலுமாம். முகமானது கண்ணுடியின் மலத்தினால் அழுக்குற்றதாய்க் காணப்படுகின்றது; அதுபோலவே அந்தக்கரணதோஷங்களால் ஆன்மாவும் தோஷமுள்ளது போலக் காணப்படுகின்றது.

ஶ்லோகம்.

பரஸ்பராத்4யாஸ வஶாத் ஸ்யா த3ந்த:கரணாத்மனோ:
ஏகீபா4வாऽபி4மானேன பராத்மா து3:க2 பா4கி3வ (20)

வியாக்யானம்: - **அந்த:கரணாத்மனோ:** - அந்தக்கரணான்மாக்களுக்கு, **பரஸ்பராத்4யாஸ வஶாத்** - ஒன்றிலொன்றின் ஆரோபத்தால், **ஏகீபா4வாபி4மா னேன** - ஒன்றென்றதன்மையாலாகிய அபிமானத்தால், **பராத்மா** - பரன், **து3:க2 பா4கி3வ** - துக்கமுற்றவன் போல, **ஸ்யாத்** - ஆவான்.

பொழிப்புரை: - அந்தக்கரணாத்மாக்களுக்கு ஒன்றிலொன்றின் ஆரோபத்தால் ஒன்றென்பதாகிய பாவனையால் வந்த அபிமானத்தால் பரமன் துக்கிபோலாகின்றான்.

ஶ்லோகம்.

மரு பூ⁴மௌ ஜலத்வேன மத்⁴யாஹ்னார்க்க மரீசிய:
த்³ருஶ்யந்தே மூட⁴ சித்தஸ்ய ந ஹ்யார்த்ராஸ் தாபகாரகா: (21)

தத்³வ தா³த்மாபி நிர்லேபோ த்³ருஶ்யதே மூட⁴ சேதஸாம்
ஸ்வா வித்³யாமாऽऽத்ரதோ³ஷேண கர்த்ருத்வாதி³க த⁴ர்மவான் (22)

தத்ர சாऽன்னமயே பிண்டே³ ஹ்ருதி ஜீவோऽவதிஷ்ட²தே
ஆநகா²க்³ரம் வ்யாப்ய தே³ஹம் தத்³ப்³ருவேऽவஹித: ஶ்ருணு. (23)

வியாக்யானம்: - **மரு பூ⁴மௌ** - பாலைவனத்தில், **மத்⁴யாஹ்னார் கமரீசிகா:** - நடுப்பகல் ஸூரியனுடைய கிரணங்கள், **மூடசித்தஸ்ய** - மூடபுத்தியுடையோனுக்கு, **ஜலத்வேன** - ஜலமாக, **த்ருஶ்யந்தே** - காணப்படுகின்றன, **ஆர்த்ரா:** - ஈரமுடையன, **நஹி** - அல்ல, **தாபகாரகா:** - தாபத்தையே செய்வனவாம், **தத்வத்** - அது போலவே, **நிர்லேப:** - அஸங்கனாகிய ஆத்மா, **அபி** - ஆன்மாவும், **மூட⁴ சேதஸாம்** - மூடபுத்தியுடையோர்களுக்கு, **ஸ்வா வித்³யாத்மாऽऽத்மதோ³ஷேண** - தனது அவித்யைவடிவமாகிய தன்னுடைய தோஷத்தினால், **கர்த்தருத்வாதி³க த⁴ர்மவான்** - கர்த்திருத்வம் முதலிய தர்மமுடையவனாய், **த்ருச்யதே** - காணப்படுகின்றான், **தத்ர** - ஆண்டு, **அந்நமயே** - அன்னவிகாரமாகிய, **பிண்டே** - பிண்டமான தேஹத்தில், **ஹ்ருதி** - ஹ்ருதயத்தில், **ஜீவ:** - ஜீவன், **ஆநகாக்ரம்** - நகமுனைவரை யிலுமுள்ள, **தேஹம்** - தேஹத்தை, **வ்யாப்ய** - வ்யாபித்து, **அவதிஷ்டதே** - இருக்கின்றான், **தத்** - அதை, **ப்ருவே** - சொல்லுகிறேன்.

பொழிப்புரை: - பாலைவனத்தில் நடுப்பகலிலுள்ள ஸூரிய கிரணங்கள் மூடனுக்கு ஜலமாகத்தோன்றுகின்றன; ஆனால் சிறிதுமீரமுடையனவன்று. கேவலம் தாபத்தையே செய்வனவாம். அது போலவே அஸங்கனாகிய ஆன்மாமூடபுத்தியுடை யோர்களுக்குத் தமது அவித்யாதோஷத்தினால் கர்த்திருத்துவம் முதலியனவுடை யனாகக்காணப்படுகின்றான். ஆண்டு அந்நவிகாரமாகிய இத்தேகத்தினில் ஹிருதயத் தில் ஜீவன் நகமுனைவரையிலும் தேஹத்தைவியாபித்துக்கொண்டிருக்கின்றான். அதனைச் சொல்லுகின்றேன் சாவதானமாய்க்கேட்பாயாக.

ஶ்லோகம்.

ஸோऽயம் தத³பிமானேன மாம்ஸ பிண்டோ³ விராஜதே
நாபே⁴ ரூர்த்⁴வம் அத⁴: கண்டா²த்³ வ்யாப்ய திஷ்ட²தி யத்ஸதா³
(24)

தஸ்ய மத்⁴யேऽஸ்தி ஹ்ருத³யம் ஸநாலம் பத்³ம கோஶவத்
அதோ⁴முக²ம் ச தத்ராஸ்தி ஸூக்ஷ்மம் ஸுஷிர முத்தமம் (25)

வியாக்யானம்: - **ஸ: அயம்** - அந்த இந்த, **மாம்ஸபிண்ட**: - மாம்ஸபிண்டமான தேஹமானது, **தத³பிமானேன** - அந்த ஜீவாத்மாவின் அபிமானத்தினால், **விராஜதே** - விளங்குகின்றது. **நாபே⁴**: - நாபிக்கு, **ஊர்த்வம்** - மேல்கண்டாத், **அத**: - கண்டத்திற்குக் கீழ், **ஸதா** - எப்போதும், **வ்யாப்ய** - வியாபித்து, **யத்** - யாதொன்று, **திஷ்ட²தி** - இருக்கின்றதோ, **தஸ்ய** - அதன், **மத்யே** - நடுவில், **பத்³ம கோஶவத்** - தாமரைமொக்குபோல, **ஸநாலம்** - காம்போடு கூடியதாய், **அதோமுகம்** - கீழ்முகமாய், **ஹ்ருதயம்** - ஹ்ருதயமானது, **அஸ்தி** - இருக்கின்றது, **தத்ர** - அதனில், **ஸூக்ஷ்மம்** - நுட்பமும், **உத்தமம்** - ஸர்வச்ரேஷ்டமும், **தஹராகாசம் இதி உக்தம்** - தஹராகாசம் என்று சொல்லப்பட்டதும் ஆகிய, **ஸுஷிரம்** - இடம் - (துவாரமானது) **அஸ்தி** - இருக்கின்றது.

பொழிப்புரை: - அந்த இம்மாம்ஸபிண்டமானதேஹமானது ஜீவனின் அபிமானத்தினால் விளங்குகின்றது. நாபிக்கு மேல்கண்டத்திற்குக் கீழ் எப்போதும் விஸ்தாரமாயுள்ளது யாதொன்று (மார்புளதோ) அதன் காம்போடு கூடியதும் தாமரை மொக்குப் போன்றதும் கீழ்முகமும் ஆகிய இருதயம் இருக்கின்றது. அதில் நுட்பமாயும் ஸர்வசிரேஷ்டமாயுமுள்ள தஹராகாசமென்ற அவகாசமொன்றிருக்கின்றது.

ஸ்லோகம்.

த³ஹராகாஶ மித்யுக்தம் தத்ர ஜீவோ஽வதிஷ்ட²தே (26)

வாலாக்³ர ஶதபா⁴க³ஸ்ய ஶததா⁴ கல்பிதஸ்ய ச
பா⁴கோ³ ஜீவ: ஸ விஞேய: ஸ சா஽஽னந்த்யாய கல்பதே. (27)

வியாக்யானம்:- **தத்ர** - அங்கு, **ஜீவ**: - ஜீவன், **அவதிஷ்ட²தே** - இருக்கின்றான், **வாலாக்³ர ஶதபா⁴கஸ்ய** - கேசமுனையின் நூறிலோர் பங்கின், **ஶததா கல்பிதஸ்ய ச** - நூறாகச்செய்யப்பட்ட, **பாக** - பாகமானது, **ஸ**: - முற்கூறிய, **ஜீவ**: - ஜீவனென்று', **விக்ஞேய:** - அறியத்தக்கது, **ஸ ச** - அச்சீவனும், **ஆநந்த்யாய** - (அபரிச்சின்னத் தன்மைக்கு,) அந்தமின்மைக்கு, **கல்பதே**- தக்கவனாகின்றான்.

பொழிப்புரை: - அங்கு ஜீவன் இருக்கின்றான். கேசமுனையினை நூறாக்கிய அந்த பாகத்தையும் நூறாக்கினால் நிகழும் பாகமானது ஜீவனாம். அந்த ஜீவன் அந்த முறாத்தன்மையையுடையோன் என்பதாம்.

ஶ்லோகம்.

கத³ம்ப³ குஸுமோத்³ ப³த்³த⁴ கேஸரா இவ ஸர்வத:
ப்ரஸ்ருதா ஹ்ருத³யான் நாட்³யோ யாபி⁴ர் வ்யாப்தம் ஶரீரகம் (28)

வியாக்யானம்: - **கத³ம்ப³ குஸுமோத்³ ப³த்³த⁴ கேஸரா: இவ** - கடப்பம் பூவினிலுள்ள கேஸரங்கள் போல, **ஹ்ருதயாத்** - ஹ்ருதயத்தினின்று, **நாட்³ய:** - நாடிகள், **ஸர்வத:** - எங்கும், **ப்ரஸ்ருதா** - பரவியிருக்கின்றன, **யாபி:** - எந்தநாடிகளால், **ஶரீரகம்** - சரீரமானது, **வ்யாப்தம்** - வியாபிக்கப்பட்டுளதோ,

பொழிப்புரை: - கடப்பம் பூவினிலுள்ள கேஸரங்கள் போல ஹ்ருதயத்தினின்று நாடிகள் எங்கும் பரவியிருக்கின்றன. எவைகளால் சரீரம் வியாபிக்கப் பட்டிருக்கின்றதோ.

ஶ்லோகம்.

ஹிதம் ப³லம் ப்ரயச்ச²ந்தி யஸ்மாத் தேன ஹிதா: ஸ்ம்ருதா:
த்³வா ஸப்ததி ஸஹஸ்ரைஸ்தா: ஸங்க்²யாதா: யோக³ வித்தமை:
(29)

வியாக்யானம்: - **யஸ்மாத்** - யாதொரு காரணத்தால், ஹிதம் - ஹிதமென்னப்படும், **பலம்** - பலத்தை, **ப்ரயச்சந்தி** - தருகின்றனவோ, **தேன** - ஆதலால், **ஹிதா:** - ஹிதங்கள், (என்று) **ஸம்ருதா:** - சொல்லப்பட்டன, **தா:** - அந்நாடிகள், **யோக³ வித்தமை** - யோகமுணர்ந்த பெரியோர்களால், **த்³வா ஸப்ததி ஸஹஸ்ரை:** - எழுபத்தீராயிரம் என்பதாக, **ஸங்க்யாதா:** - கணக்கிடப்பட்டுள்ளன.

பொழிப்புரை: - யாதொருகாரணத்தால், அந்நாடிகள், ஹிதமென்னப்படும் பலத்தைத் தருகின்றனவோ, அக்காரணத்தால், ஹிதா என்னப்பட்டுள்ளன. அந்நாடிகள், யோகமுணர்ந்த பெரியோர்களால், எழுபத்தீராயிரமென்பதாகக் தாகக் கணக்கிடப்பட்டுள்ளன.

ஶ்லோகம்.

ஹ்ருத³யாத் தாஸ்து நிஷ்க்ராந்தா: யதா²ர்க்காத்³ ரஶ்மயஸ் ததா²
ஏகோத்தரம் ஶதம் தாஸாம் முக்²யா விஷ்வங் வினிர்க³தா: (30)

வியாக்யானம்: - **அர்க்காத்** - சூரியனிடமிருந்து, **ரஶ்மய** - கிரணங்கள், **யதா** - எவ்வாறோ, **ததா** - அவ்வாறே, **தா:** - அந்த நாடிகள், **ஹ்ருதயாத்** - ஹ்ருதயத்தினின்றும், **நிஷ்க்ராந்தா:** - வெளிப்பட்டிருக்கின்றன, **தாஸு** - அந்நாடிகளுள், **ஏகோத்தர சதம்** - நூற்றோர் நாடிகள், **முக்²யா:** - முக்யங்களாய், **விஷ்வங்** - எங்கும், **வினிர்க³தா:** - பரவியிருக்கின்றன.

பொழிப்புரை: - ஸூர்யனிடமிருந்து கிரணங்கள் எப்படியோ அப்படி அந்த நாடிகள் ஹ்ருதயத்தினின்றும் வெளிப்பட்டிருக்கின்றன. அந்நாடிகளுள் நூற்றொரு நாடிகளே முக்கியங்களாய் எங்கும் பரவியிருக்கின்றன.

ஶ்லோகம்.

வஹந்த்யம்போ4 யதா2 நத்3யோ நாட்3ய: கர்மப2லம் ததா2
அனந்தைகோர்த4வகா3 நாடீ3 மூர்த்3த4பர்யந்த மஞ்ஜஸா (31)

வியாக்யானம்: - **நத்ய:** - நதிகள், **யதா** - எப்படி, **அம்ப:** - ஜலத்தை, **வஹந்தி** - வஹிக்கின்றனவோ, **ததா** - அப்படி, **நாட்ய** - நாடிகள், **கர்மபலம்** - கர்மபலத்தை வஹிக்கின்றது; அவைகளுள், **அஞ்ஜஸா** - நேராக, **மூர்த்தபர்யந்தம்** - சிரஸ்வரையில், **ஊர்த்வகா** - மேனோக்கிச் செல்லுகின்றதாயும், **அநந்தா** - அழிவற்ற பதத்தைத் தருவதாயும், **ஏகா** - ஓர் நாடியுள்ளது.

பொழிப்புரை: - நதிகள்ஜலத்தை வஹிக்கின்றன போல, நாடிகள், கர்மபலமாகிய ஸுகதுக்கங்களை வஹிக்கின்றன. அவைகளுள், கபாலம் வரையில் நேராகச் செல்லுகின்றதும், அனந்தமாகிய பதத்தை யடைவதற்குத் துவாரமாயு முள்ள ஓர் நாடியுள்ளது.

ஶ்லோகம்.

ப்ரதீந்த்3ரியம் த3ஶ த3ஶ நிர்க3தா விஷயோன் முகா2:
நாட்3ய: ஶர்மாதி3 ஹேதுத்வாத் ஸ்வப்னாதி3 ப2ல பு4க்தயே (32)

வியாக்யானம்: - **விஷயோன் முகா2:** - விஷயங்களை நோக்குகின்றனவாய், **ப்ரதீந்த்3ரியம்** - ஒவ்வோரிந்திரியத்திலும், **த3ஶ த3ஶ** - பத்துப்பத்து, **நாட்3ய:** - நாடிகள், **நிர்க3தா:** - வெளிப்பட்டுச் செல்லுகின்றனவும், **ஸுகதி ஹேதுத்வாத்** - ஸுகாதி ஹேதுவாய், **ஸ்வப்னாதி3 ப2ல பு4க்தயே** - ஸ்வப்னம் முதலிய பலத்தைப் புசிப்பதன் பொருட்டு உபயோகப்படுகின்றனவுமாயுள்ளன.

பொழிப்புரை: - விஷயங்களை நோக்குகின்றனவாய் ஒவ்வோரிடத்திலும் பத்துப் பத்து நாடிகள் ஸம்பந்தம் பெற்றுள்ளனவும் ஸுகதுக்க ஹேதுவாய் ஸ்வப்பனம் முதலிய பயன்களைப் புசிப்பதற்குபயோகப்படுகின்றனவுமாயுள்ளன.

ஶ்லோகம்.

ஸுஷும்னேதி ஸமாதி3ஷ்டா தயா க3ச்ச2ன் ஹி முச்யதே
தயோபசித சைதன்யம் ஜீவாத்மானம் விது3ர் பு3தா4: (33)

வியாக்யானம்: - யாதொன்று **ஸுஷும்னா இதி** - ஸுஷும்னை என்று, **ஸமாதி3ஷ்டா** - சொல்லப்பட்டதோ, **தயா** - அதன் வழியாய், **க3ச்ச2ன்** - செல்லுகின்றவன், **விமுச்யதே** - விமுக்தியடைகின்றான். **தயா** - அந்த ஸுஷும்னையால் நிகழ்ந்த அப்பியாசத்தால், **உபசித சைதன்யம்** - மேன்மை

பெற்றுள்ள சைதன்யத்தையும், **ஜீவாத்மானம்** - ஜீவான்மா என்றே, **புதா:** - வித்வான்கள், **விது:** - அறிகின்றனர்.

பொழிப்புரை: - யாதொன்று ஸுஷும்னையென்று சொல்லப்பட்டதோ அதன்வழி வெளிப்படுவோன் கிரமமாய் முக்தியடைகின்றான். அந்த ஸுஷும்னையில் செய்த ஸகுணோபாஸ்தியப்பியாஸத்தால் மேன்மைபெற்ற சைதன்யமும் ஜீவான்மா என்றே பெரியோர் அறிகின்றனர்.

ஶ்லோகம்.

யதா^{2} ராஹு ரத்^{3}ருஶ்யோऽபி த்^{3}ருஶ்யதே சந்த்^{3}ர மண்ட^{3}லே
தத்^{3}வத் ஸர்வக^{3}தோऽப்யாத்மா லிங்க^{3}தே^{3}ஹேऽபி த்^{3}ருஶ்யதே. (34)

வியாக்யானம்: - யதா^{2} - எப்படி, **ராஹு** - ராஹு என்று சொல்லப்படும் கருப்பானது, **அத்^{3}ருஶ்ய அபி** - காணப்படாததாயினும், **சந்த்^{3}ர மண்ட^{3}லே** - சந்திரமண்டலத்தில், **த்^{3}ருஶ்யதே** - காணப்படுகின்றதோ, **தத்^{3}வத்** - அதுபோல, **ஆத்மா** - ஆன்மாவானவன், **ஸர்வக^{3}தோऽபி** - எங்கும் உள்ளவனாயினும் (அறியப்படாத வுருவமுடையோனாயினும்) **லிங்க^{3}தே^{3}ஹே அபி** - ஸுக்ஷ்மதேகத்திலும், **த்^{3}ருஶ்யதே** - காணப்படுகின்றான்.

பொழிப்புரை: - ராஹு காணப்படாததாயினும் சந்திரமண்டலத்தில் காணப்படுகின்றது போல ஆத்மா எங்குமுள்ளவனாய் இருப்பது பற்றி, காணப்படாத வுருவமுடையோனாயினும், ஸுக்ஷ்ம தேஹத்தின் அங்கமாகிய மனதினில் காணப்படுகின்றான்.

ஶ்லோகம்.

த்^{3}ருஶ்யமானே யதா^{2} கும்பே^{4} க^{4}டாகாஶோऽபி த்^{3}ருஶ்யதே
தத்^{3}வத் ஸர்வக^{3}தோऽப்யாத்மா லிங்க^{3}தே^{3}ஹேऽபி த்^{3}ருஶ்யதே. (35)

வியாக்யானம்: - த்^{3}ருஶ்யமானே - காணப்படுகின்றதாகிய, **கும்பே^{4}** - குடத்தினில், **க^{4}டாகாஶோ அபி** - குடாகாசமானது, **யதா** - எப்படி, **த்^{3}ருஶ்யதே** - காணப்படுகின்றதோ, **தத்^{3}வத்** - அதுபோலவே, **ஆத்மா** - ஆன்மா, **ஸர்வகத: அபி** - எங்குமுள்ளவனாயினும், **லிங்க^{3}தேஹே அபி** - ஸுக்ஷ்மதேஹத்திலும், **த்^{3}ருஶ்யதே** - காணப்படுகின்றான்.

பொழிப்புரை: - ஆகாசமும் காணப்படுகின்றதாகிய குடத்தினில் குடாகாச வுருவமாக எப்படிக்காணப்படுகின்றதோ அப்படியே எங்குமுள்ளவனாயினும் ஆன்மா விங்கதேஹத்தில் காணப்படுகின்றான்.

ஶ்லோகம்.

நிஶ்சல: பரிபூர்ணோऽபி க^{3}ச்ச^{2}தீ த்யுபசர்யதே
ஜாக்^{3}ரத் காலே யதா^{2}ஞேய மபி^{4}வ்யக்த விஶேஷதீ (36)

வ்யாப்னோதி நிஷ்க்ரிய: ஸர்வான் பா^{4}னுர் த^{3}ஶ தி^{3}ஶோ யதா^{2} (37)

வியாக்யானம்: - நிஶ்சல: - கிரியையில்லாதவனும், **பரிபூர்ண அபி** - பரிபூர்ணனுமாயினும், **க^{3}ச்ச^{2}தீ இதி** - போகின்றான் என்று, **உபசர்யதே** - ஔபசாரிகமாய்ச் சொல்லப்படுகின்றது, **ஜாக்^{3}ரத் காலே** - ஜாக்கிரத்காலத்தில், **யதா^{2}ஞேயம்** - அறியப்படும் விஷயங்களையடைந்து. (அதன் உருவமாய்) **அபி^{4}வ்யக்த விஶேஷதீ:** - விளக்கமுற்ற விஷயாகார விருத்தியையுடையவனாய். **பானு:**- சூரியன், **யதா** - எப்படி, **தஶதிஶ:** - பத்துத்திசைகளையும் வ்யாபிக்கின்றானோ அதுபோலவே, **நிஷ்கிரிய:** - நிஷ்கிரியனாயினும், **ஸர்வான்** - எல்லாப் பதார்த்தங்களையும், **வ்யாப்னோதி** - வியாபிக்கின்றான்.

பொழிப்புரை: - கிரியையில்லாதவனும் பரிபூர்ணனுமாயினும் போகின்றான் என்று உபசரிக்கப்பட்டுச் சொல்வதாம். ஜாக்கிரத் காலத்தில் விஷபாகாரப்பட்டுத் தோற்றமுற்ற விருத்திகளையுடையதாய்க்கொண்டவனாய், சூரியன் பத்துத் திசைகளையும் போல நிஷ்கிரியனாயினும் ஸகலபதார்த்தங்களையும் வியாபிக்கின்றான்.

ஶ்லோகம்.

நாடீ^{3}பி^{4}ர் வ்ருத்தயோ யாந்தி லிங்க^{3}தே^{3}ஹ ஸமுத்^{3}ப^{4}வா:
தத்தத் கர்மானுஸாரேண ஜாக்^{3}ரத் போ^{4}கோ^{3}பலப்^{4}த^{4}யே (38)

இதம் லிங்க^3 ஶரீராக்^{2}யம் ஆமோக்ஷம் ந விநஶ்யதி (39)

வியாக்யானம்: - தத்தத் கர்மானுஸாரேண - அவனவன் கர்மங்களுக்குத் தக்க, **ஜாக்^{3}ரத் போ^{4}கோ^{3}பலப்^{4}த^{4}யே** - ஜாக்கிரத்காலஸுக துக்கங்களையனுபவிக்க, **லிங்க^{3}தே^{3}ஹ ஸமுத்^{3}ப^{4}வா:** - லிங்கதேஹஸம்பந்தமாகிய, அந்த கரணத்தினவைகளாகிய, **வ்ருத்தய:** - விருத்திகள், **நாடீ^{3}பி^{4}** - நாடீகளால், யாந்தி - செல்லுகின்றன, **இதம்** - இந்த, **லிங்க^3 ஶரீராக்^{2}யம்** - லிங்கசரீரமென்பது, **ஆமோக்ஷம்** - மோக்ஷம்வரையில், **ந விநஶ்யதி** - நாசமடைகின்றதில்லை..

பொழிப்புரை: - அந்தந்தக் கருமத்திற்குத் தக்கபடியுள்ள ஜாக்ரத்கால ஸுகதுக்கங்களைப் புசிக்க லிங்கதேகத்தினின்றும் தோன்றுவனவாகிய விருத்திகள், நாடிகளால் செல்லுகின்றன. இந்த லிங்கசரீரமானது மோக்ஷம் வரையில் நாசமடைகின்றதில்லை.

ஶ்லோகம்.

ஆத்ம ஞானேன நஷ்டேsஸ்மின் ஸாவித்^{3}யே ஸ்வ ஶரீரகே
ஆத்ம ஸ்வரூபாsவஸ்தா^{2}னம் முக்தி ரித்யபி^{4}தீ^{4}யதே (40)

உத்பாதி^{3}தே க^{4}டே யத்^{3}வத்^{3} க^{3}டாகாஶத்வம் ருச்ச^{2}தி
க^{4}டே நஷ்டே யதா^{2}sகாஶ: ஸ்வரூபேணாsவதிஷ்ட^{2}தே (41)

வியாக்யானம்: - **அஸ்மின்** - இந்த, **ஸ்வ ஶரீரகே** - தனதுசரீரமானது, **ஆத்ம ஞானேன** - ஆத்மஞானத்தால், **ஸாவித்யே** - அவித்தையோடுகூட, **நஷ்டே** - நாசமெய்திப்போகவே, **ஆத்மஸ்வரூபாவஸ்தாநம்** - ஆத்மஸ்வரூப நிலைமை யானது, **முக்தி**: - முக்தி, **இதி** - என்று, **அபி^{4}தீ^{4}யதே** - சொல்லப்படுகின்றது, (ஆகாசமானது) **கடே** - குடமானது, **உத்பாதி^{3}தே** - உண்டாக்கப்படின், **யத்வத்** - எப்படி, **க^{3}டாகாஶத்வம்** - குடாகாசத்தன்மையை, **ருச்ச^{2}தி** - அடைகின்றதோ, **கடே** - குடமானது, **நஷ்டே** - நாசமாயின், **ஆகாசம்** - ஆகாசமானது, **ஸ்வரூபேண** - தன் உருவத்தோடு, **அவதிஷ்டதே** - தனித்திருக்கின்றதோ.

பொழிப்புரை: - இந்தத் தனது சரீரமானது ஆத்ம ஞானத்தால் அவித்தை யோடுகூட நாசமடையவே பரமாதமஸ்வரூப மாத்திரமாய் நிற்றலே முக்தியென்னப் படுவதாம். குடமுண்டாயின் ஆகாசம் குடாகாசத்தன்மையை அடைகின்றது. குடம் நசிக்கின் ஆகாசம தான்மாத்திரமாய்த் தனித்திருத்தலும் போலவாம். ஈண்டுக்கு ஸ்தானத்தில் தேகத்தை வைத்துக்கொள்க.

ஶ்லோகம்.

ஜாக்^{3}ரத் கர்மக்ஷய வஶாத் ஸ்வப்ன போ^{4}க^{3} உபஸ்தி^{2}தே
போ^{3}தா^{4}வஸ்தா^{2}ம் திரோதா^{4}ய தே^{3}ஹாத்^{3} யாஶ்ரய லக்ஷணாம் (42)

கர்மோத்^{3}பா^{4}வித ஸம்ஸ்கார: தத்ர ஸ்வப்னரி ரம்ஸயா
அவஸ்தா^{2}ம் ச ப்ரயாத்யன்யாம் மாயாவீசாssத்ம மாயயா (43)

வியாக்யானம்: - **ஜாக்3ரத் கர்மக்ஷய வஶாத்** - ஜாக்கிரத்காலத்தில் பயன் தரும் கருமங்கள் ஓய்ந்தது போகவே, **ஸ்வப்ன போ^{4}கே^{3}** - ஸ்வப்பனத்தில் பயன் தரும் கருமங்கள், **உபஸ்தி^{2}தே** - (பயன் தர) வரவே, **தே^{3}ஹாத் யாஶ்ரய லக்ஷணாம்** - தேஹம் முதலியவைகளை ஆசரயித்தலாகிய, **போ^{3}தா^{4}வஸ்தா^{2}ம்** - அறிவுநிலைமையை, **திரோதா^{4}ய** - மறைத்து, **கர்மோத்^{3}பா^{4}வித ஸம்ஸ்கார**: - செய்கைக்குத்தக்கபடி ஏற்பட்டுள்ள வாஸனைகளையுடைய (னாதலின்) னாய்க் கொண்டு, **ஸ்வப்னபோகரிம்ஸயா** - ஸ்வப்னபோகத்தில் சென்று மகிழ்வதில்

விருப்புற்றவனாய், **மாயாவீ** - மாயையோடு கூடியவனாகிய (ஜீவன்), **ஆத்மமாய்யா** - தனது மாயையால், **அன்யாம்** - வேறு, **அவஸ்தா^{2}ம்** - அவஸ்தையை (நிலைமையை), **ப்ரயாதி** - அடைகின்றான்.

பொழிப்புரை: - ஜாக்கிரத்காலத்தில் பயன் தரும் கருமங்கள் ஓய்ந்து போகவே ஸ்வப்பனத்தில் பயன் தரும் கருமங்கள் தலைப்படவே தேஹம் வீடு புத்திர மித்திர களத்திராதிகளையறிந்து கொண்டிருத்தலாகிய நிலைமையை (மறைத்து) விடுத்து செய்கைக்குத்தக்கபடி. ஏற்கனவே நிகழ்ந்துள்ள வாஸனைகளை யுடையனாய்க்கொண்டு ஸ்வப்பனபோகத்தில் விருப்புற்றவனாய் ஜீவன் தனது மாயையால் வேறுநிலைமையைப் பெறுகின்றான்.

ஶ்லோகம்.

க^{4}டாதி^{3} விஷயான் ஸர்வான் பு^{3}த்^{4}யாதி^{3} கரணானி ச
பூ^{4}தானி கர்மவஶதோ வாஸனா மாத்ரsவஸ்தி^{2}தான் (44)

ஏதான்பஶ்யன் ஸ்வயம்ஜ்யோதி: ஸ்ஸாக்ஷயாத்மாவ்யவதிஷ்ட^{2}தே
அத்ராsந்த: கரணாதீ^{3}னாம் வாஸனாத் வாஸனாத்மதா (45)

வியாக்யானம்: - **வாஸனா மாத்ரsவஸ்தி^{2}தான்** - வாஸனையால் ப்ரமாதா வினில் (அத்யாஸத்தினால்) உள்ளதாகிய **க^{4}டாதி^{3} விஷயான் ஸர்வான்** - கடாதி களான ஸகலவிஷயங்களையும், **கர்மவசத்:** - கர்ம வசத்தால், **பூ^{4}தானி** - தோன்றின (உண்டான), **பு^{3}த்^{4}யாதி^{3} கரணானி ச** - புத்திமுதலிய கரணங்களையும் ஆகிய, **ஏதான்** - இவைகளை, **பஶ்யன்** - பார்த்துக்கொண்டு, **ஸ்வயஞ்ஜோதி:** - ஸ்வயம் சோதியாயுள்ள பொருளானது, **ஸாக்ஷயாத்மா** - ஸாக்ஷிஸ்வரூபமாய், **வ்யவதிஷ்ட^{2}தே** - மிஞ்சி நிற்கின்றது, **அத்ர** - இந்த (ஸ்வப்ந) நிலைமையில், **அந்த: கரணாதீ^{3}னாம்** - அந்த கரணம் முதலியவைகளுக்கு, **வாஸனாத்** - வாஸனை யாகிய ஸம்ஸ்காரத்தினால் நிகழும் தன்மையுள்ளதாகையால், **வாஸனாத்மதா** - வாஸனாஸ்வரூபத்துவம் என்பதாம்.

பொழிப்புரை: - வாஸனையாக, ப்ரமாதாவினில் அத்தியாஸத்தினால் உள்ளனவாகிய குடாதிஸகல விஷயங்களையும் கர்மவசத்தால் தோன்றிய புத்தி முதலிய கரணங்களையும் பார்த்துக்கொண்டு ஸ்வயஞ்சோதியாயுள்ள பொருளானது ஸாக்ஷிஸ்வரூபமாய் மிஞ்சி நிற்கின்றது. இந்த நிலமையில் அந்தக்கரணம் முதலியவைகள் வாஸனையால் நிகழ்கின்றமையால் வாஸனாத்மத்துவமுளது என்பதாம்.

ஶ்லோகம்.

வாஸனா மாத்ர ஸாக்ஷித்வம் தேன தத்ர பராத்மன:
வாஸனாபி⁴: ப்ரபஞ்சோsத்ர த்³ருஶ்யதே கர்ம சோதி³த: (46)

ஜாக்³ரத் பூ⁴மௌ யதா² தத்³வத் கர்த்ரு கர்ம க்ரியாத்மக:
நிஶ்ஶேஷ புத்தி ஸாஷ்யாத்மாஸ்வயமேவப்ரகாசதே. (47)

வியாக்யானம்: - **தேன -** அக்காரணத்தால், **பராத்மான:** - பரமான்மாவுக்கு, **தத்ச** - அந்த, **வாஸனா மாத்ர ஸாக்ஷித்வம் -** மாத்திரத்திற்கு ஸாக்ஷியாயிருத்தலாம், **அத்ர** - இங்கு (ஸ்வப்னத்தில்), **வாஸனாபி:** - வாஸனைகளாலாகியதும், **கர்ம சோதி³த:** - கர்மத்தினால் ஏவப்பட்டதுமாகிய, **ப்ரபஞ்ச** - பிரபஞ்சமானது, **ஜாக்³ரத் பூமௌ** - ஜாக்கிரதவஸ்தையில், **யதா** - எப்படியோ, **தத்வத்** - அப்படியே, **கர்த்ரு கர்ம க்ரியாத்மக:** - கர்த்தாகர்மம் கிரியை இவைகள் ஸ்வரூபமாய், **திருச்யதே** - காணப்படுகின்றது, **ஆத்மா** - ஆத்மாவான வன், **நிஶ்ஶேஷபுத்தி ஸாக்ஷி** - ஸகலபுத்தி ஸாக்ஷியாகிய, **ஸ்வயம் ஏவ -** தானே, **ப்ரகாசதே** - விளங்குகின்றான்.

பொழிப்புரை: - அக்காரணத்தால் பரமாத்மாவுக்கு அவ்விதமாகிய வாஸனா மாத்திரத்திற்கு ஸாக்ஷியாயிருத்தலாம். ஸ்வப்பனத்தில் வாஸனைகளாலாகியதும் கர்மத்தினால் ஏவப்பட்டதுமாகிய ப்ரபஞ்சமானது ஜாக்கிரத்தில் போலவே கர்த்திரு கர்மக்ரியாவடிவமாய்க் காணப்படுகின்றது. ஆத்மா ஸகல புத்தி லாக்ஷியாய்த் தான் விளங்கிக்கொண்டிருக்கின்றான்.

ஶ்லோகம்.

வாஸனா மாத்ர ஸாக்ஷித்வம் ஸாக்ஷிண: ஸ்வாப உச்யதே

பூ⁴த ஜன்மனி யத்³பூ⁴தம் கர்ம தத்³ வாஸனா வஶாத்
நேதீ³யஸ்த்வாத்³ வயஸ்யாத்³யே ஸ்வப்னம் ப்ராய: ப்ரபஶ்பதி (48)

வியாக்யானம்: - **ஸாக்ஷிண:** - ஆத்மாவுக்கு, **வாஸனா மாத்ர ஸாக்ஷித்வம்** - வாஸனை மாத்திரத்திற்கு ஸாக்ஷியாயிருத்தலே, **ஸ்வாப:** - ஸ்வப்பனம், **உச்யதே** - என்று சொல்லப்படுகின்றது. **பூ⁴த ஜன்மனி** - பூர்வஜன்மத்தில், **யத்³கர்ம** - எந்தக்கர்மமானது, **பூ⁴தம்** - ஏற்பட்டுளதோ, **தத்³ வாஸனா வஶாத்** - அதன் வாஸனா வசத்தால், **ப்ராய:** - விசேஷமாய், **ஆத்யேவயஸி** - குழந்தைப்பருவத்தில், **நேதீ³யஸ்த்வாத்³ -** அவ்வாஸனைகள் நெருங்கியிருத்தலால், **ஸ்வப்னம்** - ஸ்வப்ன த்தை, **ப்ரபஶ்யதி** - காண்கின்றான்.

பொழிப்புரை: - ஆத்மாவுக்கு வாஸனாமாத்திர ஸாக்ஷித்வமே ஸ்வப்பனம் என்பதாம். பூர்வஜன்மத்தில் எக்காரியங்கள் நிகழ்ந்தனவோ அவைகளின் வாஸனையின் வசத்தால் விசேஷமாய் பால்ய வயஸில் அவ்வாஸனைகள் நெருங்கியிருத்தலால் ஸ்வப்பனம் காணுகின்றான்.

ஶ்லோகம்.

மத்⁴யே வயஸி கார்க்கஶ்யாத் கரணானா மிஹார்த்தி²த:
ப்ராயேண வீக்ஷதே ஸ்வப்னம் வாஸனா கர்மணோ வஶாத் (49)

வியாக்யானம்: - **மத்⁴யே வயஸி** - நடுப்பருவத்தில், கரணானாம் - கரணங்களின், **கார்க்கஶ்யாத்** - வலிமையால், **இஹ** - விஷயத்தில், **அர்த்தித**: - பீடிக்கப்பட்டவனாய்க்கொண்டு, **ப்ராயேண** - விசேஷமாய், **வாஸனா கர்மணோ**: - வாஸனாகர்மங்களின், **வசாத்** - வசத்தினால், **ஸ்வப்னம்** - ஸ்வப்பநத்தை, **வீக்ஷதே** - காண்கின்றான்.

பொழிப்புரை: - நடுப்பருவத்தில் கரணங்களின் வலிமையால் விஷயத்தில் அல்லற்பட்டவனாய்க்கொண்டு விசேஷமாய் வாஸனா கர்மங்களின் வசத்தால் ஸ்வப்பனத்தைக் காண்கின்றான்.

ஶ்லோகம்

இயாஸு: பரலோகம் து கர்ம வித்³யாதி ஸம்ப்⁴ருதம்
பா⁴வினோ ஜன்மனோ ரூபம் ஸ்வப்னே ஆத்மா ப்ரபஶ்யதி (50)

வியாக்யானம்: - பரலோகம் இயாஸு: து - பரலோகம் செல்லும் தருணமுடையோனாகிய, **ஆத்மா** - ஜீவன், **கர்ம வித்³யாதி ஸம்ப்⁴ருதம்** - கர்மம் வித்தை முதலியதனால் ஸம்பாதிக்கப்படுவதாகிய, **பாவின் ஜன்மன**: - வரும் ஜன்மத்தின், **ரூபம்** - உருவத்தை, **ஸ்வப்னே** - ஸ்வப்பனத்தில், **பஶ்யதி** - பார்க்கின்றான்.

பொழிப்புரை: - பரலோகம் செல்லும் தருணமாகிய மரண ஸமீபகாலத்தில் ஜீவன் கர்மவித்தை முதலியவைகளால் வரப்போவதாகிய ஜன்மத்தின் உருவத்தை ஸ்வப்பனத்தில் காண்கின்றான்.

ஶ்லோகம்.

யத்³வத் ப்ரபதனாத்ச்²யேன: ஶ்ராந்தோ க³க³ன மண்ட³லே
ஆகுஞ்ச்ய பக்ஷௌ யததே நீடே³ நிலயனாய நீ: (51)

ஏவம் ஜாக்³ரத்ஸ்வப்ன பூ⁴மௌ ஶ்ராந்த ஆத்மாऽபி⁴ஸஞ்சரன்
ஆபித கரண க்³ராம: காரணேனைதி சைகதாம் (52)

வியாக்யானம்: - **ச்²யேன:** - பருந்தானது, **யத்வத்** - எப்படி, **க³க³ன மண்ட³லே -** ஆகாயத்தினில், **ப்ரபதனாத்** - மிகவும் ஸஞ்சரித்தலால், **ஶ்ராந்த:** - சிரமமடைந்த தாய்க்கொண்டு, **நீ:** - செல்லுகின்றதாய், **பக்ஷௌ** - இரக்கைகளை, **ஆகுஞ்ச்ய** - அடக்கிக்கொண்டு, நீடே - கூண்டினில், **நிலயநாய** - வந்து தங்குவதன் பொருட்டு, **யததே** - யத்தனிக்கின்றதோ, **ஏவம்** - இவ்வாறு, **ஆத்மா** - ஜீவனும், ஜாக்கிரத் ஸ்வப்ன பூமிகளில், **அபிஸஞ்சரன்** - திரிந்துழன்று, **ஶ்ராந்த:** - சிரமமுற்றதாய் க்கொண்டு, **ஆபீத கரண க்³ராம:** - இந்திரியமனாங்கங்களாகியகாரணங்களை யொடுக்கிக்கொண்டு, **காரணேன** - காரணமாகிய ஈச்வரனிடம், **ஏகதாம்** - ஒன்றுபடுதலை, **யாதி** - அடைகின்றது.

பொழிப்புரை: - எப்படி பருந்தானது ஆகாயமண்டலத்தில் மிகவும் சஞ்சரித்து சிரமமடைந்த தாய்க்கொண்டு செல்லுகின்றதாய்ரக் கைகளை ஒடுக்கிக்கொண்டு, கூண்டினில் வந்து தங்குதலின் பொருட்டு எத்தனிக்கின்றதோ, அப்படியே ஆத்மாவும் ஜாக்கிரஸ்வப்பன பூமிகளில் திரிந்துழன்று சிரமமடைந்ததாய்க்கொண்டு கரணவர்க்க ங்களை யொடுக்கிக்கொண்டு காரணத்தோடு சேர்ந்து அடங்குகின்றது.

ஶ்லோகம்.

நாடீ³ மார்க்கை³ ரிந்த்³ரியாணாம் ஆக்ருஷ்யாதா³ய வாஸனா:
ஸர்வம் க்³ரஸித்வா கார்யம் ச விஞ்ஞானாத்மா ப்ரலீயதே (53)

ஈஶ்வராக்²யேऽவ்யாக்ருதேऽத² ததா² ஸுக²மயோ ப⁴வேத்
க்ருத்ஸ்ன ப்ரபஞ்ச விலய: ததா² ப⁴வதி சாத்மண: (54)

வியாக்யானம்: - **விஞ்ஞானாத்மா** - ஜீவன், **நாடீ மார்க்கை³** - நாடீ மார்க்கங்களால், **இந்திரியாணாம்** - இந்திரியங்களது, **வாஸனா:** - வாஸனைகளை, **ஆக்ருஷ்ய** - ஆகர்ஷித்து, **ஆதாய** - எடுத்துக்கொண்டு, **ஸர்வம் சகார்யம்** - ஸகலகாரியத்தையும், **க்³ரஸித்வா** - ஒடுக்கிக்கொண்டு, **ஈஶ்வராக்யே** - ஈச்வர னெனும், **அவ்யாக்ருதே** - அவ்யாக்ருதத்தில், **விலீயதே** - விலயமடைகின்றான். **அத** - அவ்விதமிழுத்துக்கொண்டு சென்றபிறகு, **யதா** - எப்படி **ஸுக²மய:** - சுகஸ்வரூபன், **ப⁴வேத்** - ஆவானோ, **ததா** - அவ்விதம், **ஆத்மண:** - ஜீவான்மாவுக்கு **க்ருத்ஸ்ன ப்ரபஞ்ச விலய:** - ஸகலப்ரபஞ்சத்திற்கும், **லயம் பவதி** - ஆகின்றது.

பொழிப்புரை: - ஜீவன் நாடீமார்க்கங்களால் இந்திரியங்களது வாஸனைகளை ஆகர்ஷித்துச் சேர்த்துக்கொண்டு ஸகல காரியங்களையும் அடக்கிக்கொண்டு ஈச்வரனெனும் அவ்யாக்ருதத்தில் விலயமடைகின்றான். பின்னர் எப்படி ஸுகமயனாவானோ அவ்வாறு ஆத்மாவுக்கு ஸகல ப்ரபஞ்சவிலயம் ஏற்படுவதாம்.

ஶ்லோகம்.

யோஷித: காம்ய மானாயா: ஸம்போ⁴கா³ந்தே யதா² ஸுக²ம்
ஸ ஆநந்த³மயோ பா³ஹ்யோ நாந்தர: கேவல ஸ்ததா² (55)

வியாக்யானம்: - **காம்யமானாயா:** - காமமுடையவளாகிய, **யோஷித:** - மங்கைக்கு, **ஸம்போகாந்தே** - ஸம்போகத்தின் கடைசியில், **யதா²** - எப்படி, **ஸுக²ம்** - சுகமுள்ளதோ, அப்படியே அந்த, **ஆனந்தமய:** - ஆனந்தமயன், **அபா³ஹ்ய:** - வெளிவஸ்துவைப்பற்றியதுமல்ல, **ஆந்தர:** - உள்ளத்தைப்பற்றியதுமல்ல, **ததா, கேவல:** - கேவலம் அவ்யக்தஸுகனே.

பொழிப்புரை: - சிற்றின்பமுடைய மங்கைக்கு போக இறுதியில் எப்படி சுகமோ அப்படியே அவ்வானந்தமயன் வெளியைப்பற்றியாவது உள்ளத்தைப் பற்றியாவது நிகழ்வதின்றி கேவலம் அவ்வியக்தமாகிய ஸுகமேயாம்.

ஶ்லோகம்.

ப்ராஞ்ஞாத்மானம் ஸமாஸாத்³ய விஞ்ஞானாத்மா ததை²வ ஸ:
விஞ்ஞானாத்மா காரணாத்மா ததா² திஷ்ட²ன்னதா²பி ஸ: (56)

அவித்³யா ஸுக்ஷ்ம வ்ருத்யாऽனுப⁴வத்யேவ ஸுக²ம் யதா²

வியாக்யானம்: - ஸ அர்த விஞ்ஞானாத்மா - விஞ்ஞானமயனான ஆத்மா, **பிராஞ்ஞாத்மானம்** - பிராஞ்ஞனாகவே ஆகின்றேன், **விஞ்ஞானாத்மா** - விஞ்ஞானமயனான ஆத்மா, **காரணாத்மா** - காரணஸ்வரூபனாகின்றான், **ததா²** - அவ்வாறு, **திஷ்ட²ன்** - உள்ளவனாகிய, ஸ - அவன், **அத அபி** - அன்றியும், **அவித்³யா ஸூக்ஷ்ம வ்ருத்யா** - அவித்யையின் ஸூக்ஷ்மமாகிய வ்ருத்தியால், **சுகம்** - சுகத்தை, **யதாஏவ** - எப்படி, **அனுபவதி** - அநுபவிக்கின்றானோ.

பொழிப்புரை: - அந்த விஞ்ஞானமயனான ஆத்மா ப்ராஞ்ஞாத்மாவை யடைந்து ப்ராஞ்ஞஸ்வரூபனேயாகின்றான். விஞ்ஞானாத்மா காரணஸ்வரூபனா கின்றான். அவ்வாறுள்ளவனாயினும் அவன் அவித்தையின் ஸூக்ஷ்மவிருத்தி யினால் எப்படி ஸுகமனுபவிக்கின்றானோ.

ஶ்லோகம்.

அஞானமபி ஸாக்ஷ்யாதி³ வ்ருத்திபி⁴ஶ்சாऽனுபூ⁴யதே (57)

ததா2ஹம் ஸுக2 மஸ்வாப்ஸம் நைவ கிஞ்சி த்3வேதி3ஷம்
இத்யேவம் ப்ரத்யபி4ஞ்ஞாபி பஶ்சாத் தஸ்யோபபத்3யதே (58)

ஜாக்3ரத் ஸ்வப்ன ஸுஷுப்த்யாக்2ய மேவேஹாமுத்ர லோகயோ:
பஶ்சாத் கர்ம வஶாதே3வ விஸ்பு2லிங்கா3 யதா2sனலாத் (59)

ஜாயந்தே காரணாதே3வ மனோ பு3த்4யாதி3கானி து (60)

வியாக்யானம்: - **ததா** - அப்படி, **அஹம்** - நான், **ஸுக2ம்-** சுகமாக, **அஸ்வாப்ஸம்** - தூங்கினேன், **கிஞ்சித்** - யாதும், **ந அவேதி3ஷம்** - அறிந்தேனில்லை (என்பதாம்), **அஞ்ஞானம் அபி** - அவித்தையும், **ஸாக்ஷ்யாதிவ்ருத்திபி: ச** - ஸாக்ஷ்யாகாரவிருத்திகளால், **அனுபூயதே** - அநுபவிக்கப்படுகின்றது, **இதி** - இவ்வாறாதலால், **ஏவம்** - முற்கூறியவாறே, **தஸ்ய** - அந்த ஜீவனுக்கு, **பஶ்சாத்** - பின்னர், **ப்ரத்யபி4ஞ்ஞா அபி** - ப்ரத்யபிஞ்ஞையும் (ஸ்மரணமும்), **உபஜாயதே** - உண்டாகின்றது, **ஜாக்3ரத் ஸ்வப்ன ஸுஷுப்த்யாக்2யம் ஏவ -** ஜாக்ரம், ஸ்வப்னம் ஸுஷுப்தி எனும் மூன்று அவஸ்தைகளே, **இஹாமுத்ர, லோகயோ**: - இவ்வுலகிலும் ஸ்வர்க்க நரகங்களிலும் ஏற்படுவன, **பஸ்சாத்** - ஸுஷுப்திக்குப்பிறகு **கர்ம வஶாத், ஏவ** - கர்மவசத்தினாலேயே, **அனலாத்** - அக்கிநியிலிருந்து, **விஸ்பு2லிங்கா3** - நெருப்புத்தணற் கண்டங்கள் போல, **காரணாத்ஏவ** - காரணத்திலிருந்தே, **மனோ பு3த்3யாதிகானி து** - மனம் புத்தி இந்திரியங்கள், **ஜாயந்தே** - வெளிப்படுகின்றன.

பொழிப்புரை: - அங்ஙனம் யான் சுகமாய்த் தூங்கினேன் ஒன்றுமறியேன் என்பதாம் அஞ்ஞானமும் ஸாக்ஷ்யாதி விருத்திகளால் அநுபவிக்கப்படுகின்றது. ஆதலின் பிறகு அவனுக்கு முற்கூறியவாறு அநுபவஸ்மரணமுண்டாகின்றது, ஜாக்கிரத்ஸ்வப்பனம் சுஷுப்தி எனும் மூன்றவஸ்தைகளே இவ்வுலகிலும் ஸ்வர்க்கநரகங்களிலும் உள்ளன. சுஷுப்தியின் இறுதியில் கர்மவசத்தாலேயே அக்கினியினின்றும் நெருப்புத்தணற்கண்டங்கள் போலக்காரணத்தினின்று மனோ புத்தியாதிகள் தோன்றுகின்றன.

ஶ்லோகம்.

பய:பூர்ணோ க4டோ யத்3வத் நிமக்3ன: ஸலிலாஶயே
தை ரேவோத்3த்4ருத ஆயாதி விஞ்ஞாநாத்மா ததை2த்யஜாத் (61)

விஞ்ஞானாத்மா காரணாத்மா ததா2sதிஷ்ட2த் ததா2பி ஸ:
த்3ருஶ்யதே ஸர்வமேஷ்வேவ நஷ்டேஷ்வாயாத் யத்3ருஶ்யதாம்
(62)

வியாக்யானம்: - **யத்வத்** - எப்படி, **ஸலிலாஶயே** - ஜலமிருக்குமிடத்தில் (தடாகம் ஏரிமுதலியவைகளில்) **நிமக்^{3}ன:** - மூழ்கப்பட்ட, **பய:பூர்ணக^{4}ட:** - ஜலம் நிறைத்துள்ள குடமானது, **உத்ருத:** - எடுக்கப்பட்டதாயின், **தை: ஏவ** - அந்தத் தீர்த்தங்களோடு கூடவே, **ஆயாதி** - வருகின்றதோ, **ததா** - அப்படியே, **விஞ்ஞானாத்மா** - விஞ்ஞானமயனாகிய ஆத்மா, **அஜாத்** - காரணமயாத்மாவினின்று, **ஏதி** - வருகின்றான், **ஸ:** - அவ்வான்மா, **விஞ்ஞானாத்மா** - விஞ்ஞானமயன், **காரணாத்மா** - காரணாத்மா என்று, **ததா** - அவ்வாறு, **திஷ்ட^{2}த்** - இருக்கின்றவன், **அதாபி** - அவ்வாறிருத்தலின், **ஸர்வம்** - ஸகலமும் **ஏஷு, ஏவ** - இவைகளில் வைகளிலேயே, **த்ருஶ்யதே** - காணப்படுகின்றது, **ஏஷு** - இவைகள், **நஷ்டேஷு** - நசித்துப்போயின், **அத்ருச்யதாம் ஏவ** - காணப்படாத்தன்மையையே, **ஆயாதி** - அடைகின்றது.

பொழிப்புரை: - ஜலாசயத்தில் மூழ்கப்பட்ட ஜலம் நிறைந்த குடமானது எடுக்கப்படின் முன்னுள்ள தீர்த்தத்தோடு கூடவே வருகின்றதோ அவ்வாறு விஞ்ஞானமயனாகிய ஆத்மா காரணமயாத்மாவில் அடங்கியிருந்துவருகின்றான். ஆத்மா விஞ்ஞானாத்மா காரணாத்மா என்றவ்வாறு உள்ளவன் அவ்வாறிருத்தலின் இவைகளிலேயே ஸகலமும் காணப்படுகின்றது. இவைகள் நசித்துப்போயின் காணப்படாத்தன்மையையே அடைகின்றது.

ஶ்லோகம்.

ஏகாகாரோऽர்யமா தத்தத் கார்யேஷ்வம் பர: புமான்
கூடஸ்தோ^{2} த்^{3}ருஶ்யதே தத்^{3}வத்^{3} க^{3}ச்ச^{2}த் யாக^{3}ச்ச^{2}தீதி ஸ: (63)

மோஹ மாத்ரோऽந்தராயத்வாத் ஸர்வம் தஸ்யோபபத்^{3}யதே
தே^{3}ஹாத்^{3}யுதீத ஆத்மாபி ஸ்வயம் ஜ்யோதி: ஸ்வபா^{4}வத: (64)

ஏவம் ஜீவ ஸ்வரூபம் தே ப்ரோக்தம் த^{3}ஶரதா^{2}த்மஜ! (65)

வியாக்யானம்: - **அர்யமா** - ஸூர்யன், **ஏகாகார** - ஒரே ஒருவனாயினும், **தத்தத் கார்யேஷு** - அவ்வக்காரியங்களில் எப்படியோ, **ஏவம்** - அப்படியே, **பர: புமான்** - பரமபுருஷனாகிய, **கூடஸ்த:** - கூடஸ்தனாகிய, **ஸு** - அந்த ஆத்மா, **கச்சதி** - போகின்றது போலவும், **ஆகச்சதீ** - வருகின்றது போலுமாம், **ஆத்மா** - ஆன்மா, **ஸ்வபாவாத்** - இயற்கையில், **ஸ்வயம்ஜ்யோதி:** - ஸ்வயம் ஜயோதியாய், **தேஹாத்யதீத: அபி** - தேஹாதிகளுக்கதீதனாயினும், **மோஹமாத்ராந்தராயத்வாத்** - அஞ்ஞானமெனும் ஓர் தடையால், ஸர்வம் - ஸகலமும், **தஸ்ய** - அவனுக்கு, **உப்பத்யதே** - ஒவ்வுவதாம், **தசரதாத்மஜ** - தசரதன்மகனே, **தே** - உனக்கு, **ஏவம்** - இவ்வாறு, **ஜீவஸ்வரூபம்** - ஜீவஸ்வரூபமானது, **ப்ரோக்தம்** - சொல்லப்பட்டது.

பொழிப்புரை: - ஸூர்யன் ஒருவனேயாயினும் அவ்வக்காரியங்களில் எப்படியோ அப்படியே பரம புருஷனாகிய கூடஸ்தனுமாம். அதுபோலவே அவன் போகின்றது போலும் வருகின்றது போலும் காணப்படுகின்றான். ஆன்மா இயற்கை யில் ஸ்வயஞ்ஜோதியாய் தேஹாதிகளுக் கதீதனாயினும் அஞ்ஞானமெனும் ஓர் தடையினாலேயே அவனுக்கு ஸகலமும் ஒவ்வுவதாம் ஓ தசரததநயனே உனக்கு இவ்வாறு ஜீவஸ்வரூபம் சொல்லப்பட்டது.

பத்தாவது அத்தியாயம்

முற்றிற்று.

பதினோராம் அத்தியாயம்.

ஜீவ கத்யாதி நிரூபணம்

பகவான் கூறியதாவது.

ஶ்லோகம்.

தே³ஹாந்தர க³திம் தஸ்ய பரலோக க³திம் ததா³
வக்ஷ்யாமி ந்ருப ஶார்தூ³ல மத்த: ஶ்ருணு ஸமாஹித: (1)

வியாக்யானம்: - **ந்ருப ஶார்தூல** - ஓ ராஜச்ரேஷ்டனே, **தஸ்ய** - அந்த ஜீவனுடைய, **தே³ஹாந்தர க³திம்** - வேறு தேஹத்தைப் பற்றுதலையும், **பரலோக க³திம்** - லோகாந்தரம் செல்லுதலையும், **வக்ஷ்யாமி** - சொல்லுகிறேன், **மத்த:** - என்னிடமிருந்து, **ஸமாஹித:** - ஸாவதானமானவனாய், **ஶ்ருணு** - கேட்டுத் தெரிந்து கொள்வாயாக.

பொழிப்புரை: - ஓ அரசவீரனே ஜீவனுடைய வேறு தேஹப் பிராப்தியையும் லோகாந்தரகதியையும் சொல்லுகின்றேன். என்னிடம் ஸாவதனனாய்க்கேட்பாயாக.

ஸ்லோகம்.

பு⁴க்தம் பீதம் யதஸ் தத்ர தத்³ரஸா தா³ம ப³ந்த⁴னம்
ஸ்தூ²ல தே³ஹஸ்ய லிங்க³ஸ்ய தேன ஜீவன தா⁴ரணம் (2)

வியாக்யானம்: - **யத**: - எதனால் (எந்த உணவு), **புக்தம்** - புசிக்கப்பட்டதோ, **பீதம்** - அருந்தப்பட்டதோ, **தத்ரலாத்** - அவ்வன்னபானஸாரத்தால், **ஸ்தூ²ல தே³ஹஸ்ய** - ஸ்தூலதேஹத்திற்கும், **லிங்க³ஸ்ய** - லிங்கதேஹத்திற்கும், **ஆமபந்தனம்** - நூதனமாகிய, பற்று ஏற்படுகின்றது, **தேன** - அதனால், **ஜீவநதாரணம்** - பிராணவாயுவைத்தரித்தலாம்.

பொழிப்புரை: - எதனால் எந்த உணவு புசிக்கப்பட்டதோ எது அருந்தப்பட்ட தோ அவ்வன்னபான ரஸத்தால் ஸ்தூல ஸூக்ஷ்ம தேஹங்களுக்கு புதிது புதிதாகிய பற்றேற்படுகின்றது. அதனால் பிராண தாரணமாம்.

ஶ்லோகம்.

வ்யாதி⁴னா ஜரயா வாபி பீட்³யதே ஜாட³ரோ஽னல:
ஶ்லேஷ்மணா தேன பு⁴க்தா஽ன்னம் பீதம் வா ந பசத்யலம் (3)

வியாக்யானம்: - **வ்யாதி⁴னா** - ரோகத்தினாலாவது, **ஜரயா வா** - அல்லது ஜரையினாலாவது, **ஶ்லேஷ்மணா** - உதித்து ஓங்கிய ச்லேஷ்மத்தால், **ஜாடர:** - ஜடரத்திலுள்ள, **அனல:** - அக்கினியானது, **பீட்யதே** - பீடிக்க (அடக்கப்படுகின்றது) **தேன** - அதனால், **பு⁴க்தாsன்னம் பீதம் வா** - புசிக்கப்பட்ட அன்னமும், அருந்தப் பட்டதும் ஆகிய உணவுகளை அலம்பேரதுமானபடி, **ந பசதி** - பாகம் செய்கின்ற தில்லை.

பொழிப்புரை: - வியாதியினாலாவது ஜரையினாலாவது கபம் ஓங்கி ஜடராக்கினியின் வலியைத்தணிக்கின்றது. அதனால் புசிக்கப்பட்ட அன்னபானாதிகள், போதுமானபடி பாகமாகின்றதில்லை.

ஶ்லோகம்.

பு⁴க்த பீத ரஸாsபா⁴வாத் ததா³ ஶுஷ்யந்தி தா⁴தவ:
பு⁴க்த பீத ரஸேனைவ தே³ஹே லிம்பந்தி நித்யஶ: (4)

வியாக்யானம்: - **புக்தபீதரஸாபாவாத்** - புசிக்கப்பட்டதும் அருந்தப்பட்டது மாகிய உணவுகளுக்கு ரஸம் ஏற்படாமையால், **ததா** - அப்போது, **தாதவ:** - தாதுக்கள், **சுஷ்யந்தி** - வற்றிப்போகின்றன, **தேஹே** - தேஹத்தினில், **புக்தபீதர ஸேநைவ** - அன்னரஸத்தினாலேயே, **வாயவ:** - வாயுக்கள், **லிம்பந்தி** - தாதுவிருத்தி செய்கின்றன.

பொழிப்புரை: - அன்னபான ரஸமில்லாமையால் அப்போது தாதுக்கள் வற்றிப் போகின்றன. தேஹத்தினில் அன்னபான ரஸத்தினாலேயே வாயுக்கள் தாதுக்களை புஷ்டிசெய்விக்கின்றன.

ஶ்லோகம்.

ஸமீகரோதி யஸ் தஸ்மாத் ஸமானோ வாயுருச்யதே
இதா³னீம் தத் ரஸாsபா⁴வாத் ஆம ப³ந்த⁴ன ஹானித: (5)

பரி பக்வ ரஸத்வேன யதா² கௌ³ரவத: ப²லம்
ஸ்வய மேவ பதத் யாஶு ததா² லிங்க³ம் தனோர் வ்ரஜேத் (6)

வியாக்யானம்: - **யத்** - யாதொருகாரணத்தினால், **ஸமீகரோதி** - அன்னபானரஸத்தை, நாடிகளில், செல்லும்படி செய்கின்றானோ, **தஸ்மாத்** - அக்காரணத்தால், **ஸமான: வாயு:** - ஸமானவாயு என்று, **உச்யதே** - சொல்லப் படுகின்றது, **ததாநீம்** - அப்போது, **தத்ரஸா பாவாத்** - அன்னபானரஸமின்மையால், **ஆமபந்தனஹாநித:** - ஆமபந்தனமின்மையால், **யதா** - எப்படி, **பலம்** - கனியானது, **பரி பக்வ ரஸத்வேன** - பரிபக்குவமாகிய ரஸமுடைதுபற்றி, **கௌரவத:** -

கனதத்தினால், காம்பு கெட்டு விழுகின்றதோ, **ததா** - அப்படி, **ஆசு** - சீக்கிரமாய், **ஸ்வயம் ஏவ** - தானே, **பததி** - விழுகின்றது, லிங்கம் - ஸூக்ஷ்மதேஹமானது, தநோ: - ஸ்தூல தேஹத்தினின்றும், வ்ரஜேத் - வெளிப்போகின்றது.

பொழிப்புரை: - அன்னபானரஸங்களை ஸகலநாடிகளிலும் ஸமப்படுத்தி போஷணம் செய்தலால் ஸமாநவாயு என்னப்படுகின்றது அப்போது அன்னபான ரஸமில்லாமையால் ஆமபந்தனம் இல்லாதது பற்றிப்பழமானது, பரிபக்குவமாகிய ரஸமுடையதுபற்றி கனத்தினால் காம்பு கெட்டுப் பிரிவதுபோல உடனே நசிக்கின்றது. ஸூக்ஷ்மதேஹத்தினின்றும் பிரிந்து போகின்றது.

ஶ்லோகம்.

தத்தத் ஸ்தா^{2}னா த^{3}பாக்ருஷ்ய ஹ்ருஷகாணாம் து வாஸனா:
ஆத்^{4}யாத்மிகாதி^{4} பூ^{4}தானி ஹ்ருத் பத்மே சைக்சுதாம் க3த: (7)

ததோர்த்^{4}வக^{3}: ப்ராணவாயு: ஸம்யுக்தோ நவ வாயுபி:
ஊர்த்^{4}வோச்ச^{2} வாஸீ ப^{4}வத்யேஷ ததா^{2} தேனைகதாம் க^{3}த: (8)

வியாக்யானம்: - **தத்தத் ஸ்தா^{2}னாத்** - அதனதன் ஸ்தானத்திலிருந்து, **ஹ்ருஷகாணாம்** - இந்திரியங்களின், **வாஸநா:** - வாஸனைகளையும், **ஆத்யாத் மிகாதிபூதாநி -** புத்தி சித்தாதிகளையும் தேஹத்திற்கு ஸமானதனமாயுள்ள பூதநுட்பங்களையும், **அபாக்ருஷ்ய** - அகரஷிதிக் கொண்டு, அகரஷித்க் கொண்டு, **ஹ்ருத் பத்மே** - ஹ்ருதய கமலத்தில், **ஏகதாமகத: -** ஒன்றாய் கூடியதாகின்றது, **தத:** - பிறகு, **பிராணவாயு** :-பிராணவாயுவானது, **அத்வக:** - வெளிப்படச்சன்னத்த மாய், **நலவாயுபி:** - மற்ற ஒன்பது வாயுக்களோடும், **ஸம்யுக்த:** - சேர்ந்ததாய்க் கொண்டு, **ஊர்த்வோச்வாஸீ** - மேனோக்கிய சுவாசமுடையதாகின்றது, **ஏஷ:** - ஜீவன்**,** **ததா** - அப்படியுள்ள, **தேன** - அந்தப்பிரணவாயுவோடு, **ஏகதரம்கத:** - கூடியவனாகின்றான் !

பொழிப்புரை: - அதனதன் ஸ்தானத்திலிருந்து இந்திரிய வாஸனைகளையும் புத்திசித்தாதிகளையும் வரும்சரீரஸாதனமாகிய பூதாம்சங்களையும், ஆகர்ஷித்துக் கொண்டு, ஹ்ருதயகமலத்தில் ஒன்றாய்க்கூடிப் பிறகு வெளிப்படச்சந்நத்தமாய் மற்ற ஒன்பது வாயுக்களோடும் பிராணவாயுகூடி மேனோக்கிய சுவாசமுடைய தாகின்றது. ஜீவன் அவ்வாறுள்ள அந்தப்பிராணவாயுவோடுகூடி யவனாகின்றான்.

ஶ்லோகம்.

சக்ஷுஷோர்வாsத^{2} மூர்த்^{4}னோ வா நாடீ^{3}மார்க்க^{3}ம் ஸமாஶ்ரித :
வித்^{3}யா கர்ம ஸமாயுக்தோ: வாஸனாபி^{4}ஶ்ச ஸம்யுத: (9)

ப்ராக்ஞாத்மானம் ஸமாஶ்ரித்ய விஞ்ஞானாத்மோபஸர்பதி

வியாக்யானம்: - **விஞ்ஞானாத்மா** - ஜீவன், **வித்3யா கர்ம ஸமாயுக்த**: - உபாஸ்தி கர்மஸம்ஸ்காரங்களோடும், **வாஸனாபி4ஶ்ச**: - சுபாசுபவிஷயபோக ஸம்ஸாரங்களோடும், **ஸம்யுத**: - கூடியவனுமாய், **ப்ராஞ்ஞாத்மானம்** - ப்ராஞ்ஞாத்மாவை, **ஸமாஶ்ரித்ய** - பற்றிக் கொண்டு, **நாடீ3மார்க்க3ம் ஸமாச்ரித**: - நரடீமார்க்கத்தைப்பற்றியவனாய், **க்ஷுஷோ:வா** - கண்களின் வழியாகவாவது, **அத மூர்த்தன வா** - தலைவழியாயாவது, **உபஸர்ப்பதி** - செல்லுகின்றான்.

பொழிப்புரை: - ஜீவன் உபாஸ்திகர்மஸம்ஸ்காரங்களோடும் சுபாசுபவிஷய போகவாஸனைகளோடுங்கூடியவனாய் ப்ராஞ்ஞான்மாவைப் பற்றிக்கொண்டு நாடிமார்க்கத்திற்சென்று கண்களின் வழியாயாவது சிரசின் வழியாயாவது செல்லு கின்றான்.

ஶ்லோகம்.

யதா2 கும்போ4 நீயமானோ தே3சா4த்3 தே3ஶாந்தரம் ப்ரதி (10)

க2பூர்ண ஏவ ஸர்வத்ர ஸ ஆகாஶோபி தத்ர து
க4டாகாஶாக்2யதாம் யாதி தத்3வத்3 லிங்க3ம் பராத்மன: (11)

புனர் தே3ஹாந்தரம் யாதி யதா2 கர்மானு ஸாரத:
ஆமோக்ஷாத் ஸஞ்சரத்யேவம் மத்ஸ்ய: கூல த்3வயம் யதா2 (12)

வியாக்யானம்: - **யதா** - எப்படி, **தேசாத் -** ஓரிடத்திலிருந்து, **தேசாந்தரம்ப்ரதி** - மற்றோரிடத்திற்கு, **நீயமான:** - கொண்டுபோகப்படும், **கும்ப** - குடமானது, **ஸர்வத்ர** - எங்கும், **கபூர்ண: ஏவ** - ஆகாசபூரணமாகவே யுள்ளதோ, **தத்ர** - அதிலுள்ள, **ஆகாஶ: து** - ஆகாசமோ எனின், **க4டாகாஶாக்2யதாம்** - குடாகாசம் எனும் பெயரை, **யாதி** - பெறுகின்றதோ, **தத்வத்** - அது போல, **லிங்கம்** - சூக்ஷ்மசரீரம், **பராத்மான:** - பரனான ஆன்மாவுக்குள்ள தாய், **யதா கர்மானுஸாரத** - கர்மானுசாரத்திற்குத் தக்கபடி, **புன:** - மீண்டும், **தேஹாந்தரம்** - வேறுஸ்தூலசரீரத்தை, **யாதி** - அடைகின்றது, **யதா** - எப்படி, **மத்ஸ்ய:** - மீன், **கூலத்வயம்** - இருகரைகளையுமே, **ஏவம்** - இவ்வாறு, **ஆமோக்ஷாத்** - மோக்ஷம் வரையில், **ஸஞ்சரதி** - சஞ்சரிக்கின் றது.

பொழிப்புரை: - ஓரிடத்திலிருந்து குடம் மற்றோரிடம் கொண்டு போகப்படின் எங்கும் ஆகாயம் பரிபூர்ணமேயாயினும் அதிலுள்ள ஆகாசம் குடாகாசம் எனும் பெயரைப்பெறுகின்றதோ பரனாகிய ஆன்மாவுக்கு ஸூக்ஷ்மசரீரமும் அது போல வேயுள்ளதாய் கர்மானுஸாரமாய் மீண்டும் வேறு ஸ்தூல தேஹத்தைப் பற்றுகின் றது. மீன் நதிமுதலியதின் இக்கரையிலிருந்து அக்கரைக்கும் அக்கரையிலிருந்து

இக்கரைக்கும் சஞ்சரிப்பதுபோலவே மோக்ஷம் வரையிலும் இவ்வாறு ஸஞ்சரிக்கின்றது.

ஶ்லோகம்.

பாபபோ4கா3ய சேத்3 க3ச்சே2த் யமதூ3தை ரதி4ஷ்டி2த:
யாதனா தே3ஹ மாஶ்ரித்ய நரகானேவ கேவலம் (13)

வியாக்யானம்: - **பாபபோ4கா3ய சேத்** - பாபபயனைப் புசிக்கவேண்டுமாயின், **யாதனா தே3ஹம்** - யாதனாதேஹமாகிய, வாயவ்யதேஹத்தை, **ஆசரித்ய** - பற்றிக்கொண்டு, **யமதூ3தை:** - யமதூதர்களால், **அதி4ஷ்டி2த:** - அடக்கப்பட்டவனாய்க்கொண்டு, **கேவலம், நரகான்ஏவ** - கேவலம் நரகங்களைமாத்திரம், **க3ச்சே2த்** - அடைவான்.

பொழிப்புரை: - பாவங்களின் பயனைப்புசிக்க வேண்டியவனாயின் யாதனா தேஹமெனும் வாயவ்யதேஹத்தைப்பற்றிக்கொண்டு யமதூதர்களுக்குட்பட்டுக் கேவலம் நரகங்களையே அடைவான்.

ஶ்லோகம்.

இஷ்டா பூர்த்தானி கர்மாணி யோऽனுதிஷ்ட2தி ஸர்வதா3
பித்ரு லோகம் ப்ரயாத்யேஷ யாம மாஶ்ரித்ய ப3ர்ஹிஷ: (14)

தூ4மம் ராத்ரிம் க3த: க்ருஷ்ண பக்ஷம் தஸ்மாச்ச த3க்ஷிணம்
அயனம் ச ததோ லோகம் பித்ருணாம் ச தத:பரம் (15)

சந்த்3ர லோகே தி3வ்ய தே3ஹம் ப்ராப்ய பு4ங்க்தே பராம் ச்ரியம்

வியாக்யானம்: - ய: - யாதொருவன், **ஸர்வதா** - எப்போதும், **இஷ்டா பூர்த்தானி கர்மானி** - யாகம் தடாகவாபீ அன்னஸத்திரம் முதலிய கர்மங்களை, **அனுதிஷ்டதி** - அநுஷ்டிக்கின்றானோ, **ஏஷ:** - இவன், **பர்ஹிஷ:** - அக்கினி ஹேது வாய்க்கொண்டு, **யாமம்:** - யமதூதரை, **ஆச்ரித்ய** - ஆச்ரயித்து, **பித்ருலோகம்** - பித்ருலோகத்தை, **வ்ரஜதி** - அடைகின்றான், **தூமம்** - தூமதேவதை, **ராத்ரிம்** - ராத்ரி தேவதை, **தத:** - அதன்பின்னர், **க்ருஷ்ணபக்ஷம்** - கிருஷ்ணபக்ஷாபிமானிதேவதை, **தஸ்மாச்ச** - அதன்பிறகு, **தக்ஷினயனம்** - தக்ஷிணாயனாமிமானிதேவதை, **தத:** - அதன் பிறகு, பிதிரர்களுடைய, **லோகம்** - உலகு, **சந்த்ரலோகே** - சந்திரலோகத்தில், **திவ்யதேஹம்** - அற்புதமாகிய (அம்ருத) தேஹத்தை ப்ராப்யபெற்று, **பராமச்ரியம்** - பெரும் ஸுகத்தை, **பு4ங்க்தே** - புசிக்கின்றான்.

பொழிப்புரை: - எவன் எப்போதும் யாகம் தடாகவாஸீ அன்னஸத்திரம் இவைகள் முதலியவைகளின் பிரதிஷ்டை இது போன்ற கருமங்களை அநுஷ்டிக்கின் றானோ அவன் தான் பூஜித்த அக்கிநியை ஹேதுவாய்க்கொண்டு யமதூதன் எனப்படும் ஆதிவாஹி தேவதைகளை அடைந்து பித்ருலோகம் செல்லுகின்றான். தூமதேவதை ராத்திரிதேவதை கிருஷ்ணபக்ஷாபிமானிதேவதை பிறகு தக்ஷிணா பிமானிதேவதை இவர்களின் மூலமாய் பித்ருலோகத்தை யடைகின்றான். சந்திர லோகத்தில் திவ்வியமாகிய தேஹத்தைப்பெற்று பெரும் ஸுகபோகத்திலிருக் கின்றான்.

ஶ்லோகம்.

தத்ர சந்த்³ர ஸமானோऽஸௌ யாவத் கர்ம ப²லம் வஸேத் (16)

ததை²வ கர்மஶேஷேண யதே²தம் புனராவ்ரஜேத்

வியாக்யானம்: - **தத்ர** - அவ்வுலகில், **அஸௌ -** இந்த ஜீவன், **சந்தர ஸமான்** - சந்திரன் போன்றவனாய், **யாவத் கர்ம ப²லம்** - கர்மபலம் உள்ளவரையில், **வஸேத்** - வஸிப்பான், **ததாஏவ** - அப்படியே, **கர்மஶேஷேண** - மிஞ்சியுள்ளகர்மவசத்தால், **புன:** - மீண்டும், **யதேதம்** - இங்கிருந்து, போனவழியாகவே, **ஆவ்ரஜேத்** - வருவான்.

பொழிப்புரை: - அவ்வுலகில் இந்த ஜீவன் சந்திரன் போன்றவனாய் கர்மபலம் புசிக்கும் வரையில் வஸிப்பான் அப்படியே கர்மசேஷத்தால் இங்கிருந்து போன வழியே மீண்டும் திரும்பி வருகின்றான்.

ஶ்லோகம்.

வபுர் விஹாய ஜீவத்வ மாஸா த்3யாகாஶ மேதி ஸ: (17)

ஆகாஶாத்3 வாயு மாகா3த்ய வாயோ ரம்போ4 வ்ரஜத் யத2
அத்³ப்⁴யோ மேக⁴ம் ஸமாஸாத்⁴ய ததோ வ்ருஷ்டிர் ப⁴வே த³ஸௌ (18)

ததோ தா⁴ன்யானி ப⁴க்ஷ்யாணி ஜாயதே கர்ம சோதி³த:

வியாக்யானம்: - ஸ: - அவன், **வபு:** - அந்த ஸ்தூலதேஹத்தை, **விஹாய** - விடுத்து, **ஜீவத்வ** - ஜீவத்துவத்தை, **ஆசாத்ய -** அடைந்து, **ஆகாசம்** - ஆகாசத்தை, **ஏதி** - அடைகின்றான், **ஆகாசாத்** - ஆகாசத்திலிருந்து, **வாயும்** - வாயுவை, **ஆகத்ய** - அடைந்து, **அத** - பின்னர், **வாயோ:** - வாயுவினின்றும், **அம்ப:** - ஜலத்தை, **வரஜதி** - அடைகின்றான், **அத்ப்ய**: - ஜலத்திலிருந்து, **மேகம்** - மேகத்தை, **ஸமாஸாத்ய** - அடைந்து, **தத:** - அதன்பிறகு, **அஸளை** - இந்த ஜீவன், **வ்ருஷ்டி**: - மழை, **பவேத் -**

ஆகின்றான், **தத:** - அதன்பின்னர், **கர்மசோதித:** - கர்மங்களுக்குத்தக்கபடி, **தா4ன்யானி** - தாந்யங்களும், **பக்ஷயாணி** - உண்டிகளும், **ஜாயதெ** - ஆகின்றான்.

பொழிப்புரை: - அவன் அந்தஸ்தூல தேஹத்தை விடுத்து கேவல ஜீவத்துவத்தை மாத்திரமுடையவனாய் ஆகாசம், பின்னர் வாயு அதன்பிறகு மேகஹேது பிறகுமேகம் இவைகளையடைந்து பிறகு மழை மூலமாய்க் கர்மங்களுக்குத் தக்கபடி தான்யங்களும் உண்டிகளும் ஆகின்றான்.

ஶ்லோகம்.

யோனி மன்யே ப்ரபத்3யந்தே ஶரீரத்வாய தே3ஹின:
முக்திமந்யேsனுஸம் யாந்தி யதா2 கர்ம யதா2 ஶ்ருதம் (19)

ததோsன்னத்வம் ஸமாஸாத்3ய பித்ருப்4யாம் பு4ஜ்யதே பரம்
தத: ஶுக்லம் ரஜஶ்சைவ பூ4த்வா க3ர்போ4sபி4ஜாயதே (20)

தத: கர்மானுஸாரேண ப4வேத் ஸ்த்ரீ புன் நபும்ஸகம்

வியாக்யானம்: - **தே3ஹின:** - ஜீவனுக்கு, **ஶரீரத்வாய** - தேஹத்தின்பொ, **அன்யே** - சிலர், **நிதம்பம்** - நிதம்பத்தை, **ப்ரபத்யந்தே** - அடைகின் னர், **அந்யேது** - மற்ற சிலரோவெனின், **யதாகர்ம** - கர்மத்திற்கும், **யதாச்ருதம்** - ச்ரவணத்திற்கும் தக்கபடி, **முக்திம்** - முக்தியை, **ஸம்யாந்தி** - அடைகின்றனர், **தத்:** - பூவுலகில், ஓஷதிகளானபிறகு, **அன்னத்வம்** - உண்ணப்படும் உணவாதலை, **ஸமாஸாத்3ய** - அடைந்து, **பித்ருப்4யாம்** - தந்தை தாய்களால், **பு4ஜ்யதே** - புஜிக்கப்படுகின்றான், **தத: பரம்** - அதன்பிறகு, **சுக்ரம்** - சுக்கிலத்தையும், **ரஜஶ்ச** - ரஜஸூம், **பூ4த்வா** - ஆகி, **கர்ப்ப:** - கர்ப்பம், **அபி4ஜாயதே** - உண்டாகின்றது, **தத:** - அதன்பிறகு, **கர்மானுஸா ரேண** - கர்மத்திற்குத் தக்கபடி, **ஸ்த்ரீ புன் நபும்ஸக:** - பெண் ஆண் அலியாய்த் தோன்றுகின்றான்.

பொழிப்புரை: - ஜீவன்ஸூக துக்கங்களைப் புசிப்பதன் பொருட்டுச்சிலர் நிதம்பத்தையடைகின்றனர். மற்ற சிலர் கர்மானுஷ்டான சித்தசுத்தியின்படி சிரவணம் செய்தவண்ணம் முக்தியடைகின்றனர். பூவுலகில் ஓஷதிகளாய் வந்த பிறகு அன்னமாய் தாய்தந்தையர்களால் புசிக்கப்படுகின்றான். பிறகு சுக்கிலமாயும் சோணிதமாயும் ஏற்பட்டுக் கர்ப்பம் ஏற்படுகின்றது. பிறகு கர்மத்திற்குத் தக்கபடி பெண் அல்லது ஆண் அல்லது அலி இவ்வுருவாய்த் தோன்றுகின்றான்.

ஶ்லோகம்

ஏவம் ஜீவ க^{3}தி: ப்ரோக்தா முக்திம் தஸ்ய வதா^{3}மி தே (21)

யஸ்து ஶாந்த்யாதி^{3} யுக்தஸ்ஸன் ஸதா^{3} வித்^{3}யாரதோ ப^{4}வேத்
ஸ யாதி தே^{3}வயானேன ப்^{3}ரஹ்ம லோகாsவதி^{4}ம் நர: (22)

அர்ச்சிர் பூ^{4}த்வா தி^{3}னம் ப்ராப்ய ஶுக்லபக்ஷ மதோ^{2} வ்ரஜேத்
உத்தராயண மாஸாத்^{3}ய ஸம்வத்ஸர மதோ^{2} வ்ரஜேத் (23)

ஆதி^{3}த்ய சந்த்^{3}ர லோகௌ து வித்^{3}யுல் லோக மத: பரம்
அத^{2} தி^{3}வ்ய: புமான் கஶ்சித் ப்^{3}ரஹ்ம லோகாதி3ஹைதி ஸ: (24)

தி^{3}வ்யே வபுஷி ஸந்தா^{4}ய ஜீவ மேவம் நயத்யஸௌ (25)

வியாக்யானம்: - **ஏவம்** - இவ்வாறு, **ஜீவ க^{3}தி:** -ஜீவர்களின் கதியானது, **ப்ரோக்தா** - சொல்லப்பட்டது, **தஸ்ய** - ஜீவனின், **முக்திம்** - முக்திக்கிரமத்தை, **தே** - உனக்கு, **வதா3மி** - சொல்லுகின்றேன், **ய: து** - எவன், **ஶாந்த்யாதி^{3} யுக்த:ஸன்** - சாந்திமுதலியவைகளோடு கூடியவனாய்க்கொண்டு, **ஸதா** - எப்போதும், **வித்யாரத: ப^{4}வேத்** - ஸகுணோபாஸனையில் ஆவலுற்றவனாக உள்ளவனோ, **ஸ: நர:** - அந்த மனிதன், **தேவயானேன** - தேவயா நமெனும் மார்க்கத்தினால், **ப்ரம்ஹலோகா வதிம்** - ப்ரும்ஹலோகமீறாக, **யாதி** - செல்லுகின்றான், **அர்ச்சி: பூத்வா** - அர்ச்சிஸ் வடிவமாய், **தி^{3}னம்** - தினாபிமானியாகிய தேவதையை, **ப்ராப்ய** - அடைந்து, **அதோ** - பிறகு, **ஶுக்லபக்ஷம்** - சுக்லபக்ஷாபிமானியாகிய தேவதையை, **வ்ரஜேத்** - அடைகின்றான், **உத்தராயணம்** - உத்தராயணாபிமானிதேவதையை, **ஆஸாத்ய** - அடைந்து, **அதோ** - பிறகு, **ஸம்வத்ஸாம்** - ஸம்வத்ஸராபிமானிதேவதையை, **வ்ரஜேத்** - அடைகின்றான், **ஆதித்ய சந்த்ரலோகௌது** - ஆதித்ய சந்திரலோகங்களையும், **அத** - பிறகு, **விதயுல்லோகம்** - வித்யுல்லோகத்தையும் அடைகின்றான், **அத** - வித்யுல் லோகம் சென்றபிறகு, **தி^{3}வ்ய: புமான்** - ஆதிவாஹிகனெனும் திவ்விய புருஷனே, **கச்சித்** - ஒருவன், **ப்ரம்ஹலோகாத்** - ப்ரும்ஹலோகத்தினின்றும், **இஹ** - இங்கு, **ஏதி** - வருகின்றான், **ஸ:** - அவன், **ஏவம்** - இந்த, **ஜீவம்** - ஜீவனை, **திவ்யே** - திவ்வியமாகிய, **வபுஷி** - சரீரத்தில், **ஸந்தா^{4}ய** - பிரவேசிக்கச்செய்து, **நயதி** - கொண்டுபோகின்றான்.

பொழிப்புரை: - இவ்வாறு ஜீவர்களின் கதி சொல்லப்பட்டது. இனி அவனுடைய முக்திக்கிரமத்தை உனக்குச்சொல்லுகின்றேன். எவன் சாந்தி தாந்தி முதலியவைகளை யுடையவனாய்க் கொண்டு எப்போதும் ஸகுணோபாஸ்தியில் ஆவலுற்றிருக்கின்றானோ அந்த மனிதன் தேவயான மார்க்கத்தினால் ப்ரும்ம லோகம் செல்லுகின்றான். அர்ச்சிஸ்வடிவமாய்த் தினாபிமானிதேவதையை

யடைந்து பிறகு சுக்லபக்ஷாபிமானி தேவதையையடைந்து அதன் பிறகு உத்தராய ணாபிமானி தேவதையை யடைந்து பிறகு ஸம்வத்ஸராபிமானி தேவதையையும் அடைகின்றான். பிறகு ஆதித்ய சந்திர லோகங்களையும் பின்னர் வித்யுல் லோகத்தையும் அடைகின்றான். பிறகு திவ்ய புருஷனொருவன் ப்ரும்மலோகத்திலி ருந்து அங்கு வருகின்றான். அவன் அந்த ஜீவனை திவ்ய தேஹ முடையோனாகச் செய்து கூட்டிக்கொண்டு போகின்றான்.

ஸ்லோகம்.

ப்ரும்ஹ லோகே தி3வ்ய தே3ஹே பு4க்த்வா போ4கா3ன்
யதே2ப்ஸிதான்
தத்ரோஷித்வா சிரம் காலம் ப்3ரும்ஹணா ஸஹ முச்யதே. (26)

வியாக்யானம்: - **ப்ரம்ஹலோகே** - ப்ரும்மலோகத்தில், **திவ்ய தேஹே** - திவ்யதேஹத்தினில், **யதேப்ஸிதான்** - விரும்பப்பட்டவைளாகிய, **போ4கா3ன்** - போகங்களை, **புக்த்வா** - புசித்து, **தத்ர** - அங்கு, **சிரம் காலம்** - வெகுகாலம், **உஷித்வா** - வஸித்து, **ப்ரும்ஹணாஸஹ** - ப்ரும்மனோடு கூட, **முச்யதே** - முக்தியடைகின்றான்,

பொழிப்புரை: - பிரும்மலோகத்தில் திவ்யதேஹத்தோடு இருந்து விரும்பிய போகங்களைப் புசித்துக்கொண்டு வெகுகாலமிருந்து பிரும்மனோடு கூடமுக்தியடை கின்றான்.

ஸ்லோகம்.

சுத்த ப்ரஹ்மரதோ யஸ்து ந ஸ யாத்யேவ குத்ரசித்
தஸ்ய ப்ராணா விலீயந்தே ஜலே ஸைந்தவ கில்யவத் (27)

வியாக்யானம்: - **யஸ்து** - யாதொருவன், **சுத்த ப்ரஹ்மரத:** - சுத்த ப்ரம்மத்தில், விருப்புற்றவனோ, **ஸ:** - அவன், **குத்ரசித்** - ஒரிடத்திற்கும், **நயாதி ஏவ** - போகின்றதேயில்லை, **தஸ்ய** - அவனுடைய, **ப்ராணா** - பிராணன்கள். **ஜலே** - ஜலத்தினில், **ஸைந்தவ கில்யவத்** - உப்புக்கல்போல, **விலீயந்தே** - விலயமடை கின்றன.

பொழிப்புரை: - யாதொருவன் சுத்தப்ரும்மத்தை யுபாசிக்கின்றவனோ அவன் ஒரிடத்திற்கும் செல்லுகின்றதில்லை. அவனுடைய ப்ராணன்கள் * ஜலத்தினில் உப்புக்கல்போல லயமடைகின்றன.

***** ஜலத்துடன் சேர்ந்த வுப்புத் தன்சுவை முழுவதும் அச்சலத்திற்காக் கித்தன் னோடொப்பச் சமன் செய்து நிற்குமது போல விரும்பி உயிரைச்சார்ந்த விறைவனும்

தனக்குரிய எண் குணங்களையும் அவ்வுயிரின்கண் பதிப்பித் தன்னோடொப் பச்செய்து நிற்பன்.

ஶ்லோகம்.

ஸ்வப்நத்ருஷ்டா யதா ஸ்ருஷ்டி:ன்: ப்ரபுத்தஸ்ய விலீயதே
ப்ரஹ்மஜஞானவதஸ் தத்வத் விலீயந்தே ததைவ தே (28)

வியாக்யானம்: - **ஸ்வப்நத்ருஷ்டா** - ஸ்வப்பனத்தில் காணப்பட்ட, **ஸ்ருஷ்டி:** - ஸ்ருஷ்டியானது, (பிரபஞ்சமானது) **ப்ரபுத்தஸ்ய** - விழித்துக் கொண்டவனுக்கு, **யதா** - எப்படி, **விலீயதே** - (காணப்படாமல்) லயமடைகின்றதோ, **தத்வத்** - அதுபோல, **ப்ரஹ்மஞானவத்:** - பிரும்மஞானிக்கு, **ததைவ** - ஞானமுதித்ததும், **தே** - அவைகள், **விலீயந்தே** - லயமடைகின்றன..

பொழிப்புரை: - ஸ்வப்பனத்தில் காணப்பட்ட ஸ்ருஷ்டியானது விழித்துக் கொண்டதும் எப்படி லயமடைகின்றதோ அது போல ப்ரம்மஞானிக்கு ஞானமுதித் ததும் அவைகள் விலயமடைகின்றன.

ஶ்லோகம்.

வித்[3]யா கர்ம விஹீனோ யஸ் த்ரிதீயம் ஸ்தா[2]ன மேதி ஸ:
பு[4]க்த்வாsத்ர நரகாண் கோ[4]ரான் மஹா ரௌரவ ரௌரவான்
பஶ்சாத் ப்ராக்த னஶேஷேண க்ஷத்ர ஜந்துர் ப[4]வே த[3]ஸௌ (29)

வியாக்யானம்: - ய: - யாதொருவன், **வித்[3]யா கர்ம விஹீன:** - உபாஸ்தி கர்மங்களில்லாதவனோ, **ஸ:** - அவன், **த்ருதீயம்** - மூன்றாவதாகிய ஸ்தானம் இடத்தை, **ஏதி** - அடைகின்றான், **கோ[4]ரான்** - மிக்கப் பயங்கரங்களாகிய, மஹா ரௌரவ ரௌரவான் - மஹா ரௌரவ ரௌரவங்களாகிய, **நரகாண்** - நரகங்களை, **பு[4க்]த்வாச** - புசித்தும், **பஶ்சாத்** - பின்னர், **ப்ராக்த னஶேஷேண** - பூர்வகர்மசேஷத் தால், **அஸௌ** - இவன், **க்ஷுத்ர ஜந்து:** - இழிய ஜந்துவாய், **ப[4]வேத்** - ஆவான்.

பொழிப்புரை: - யாதொருவள் உபாஸ்தி கர்மங்களில்லாதவனோ அவன் மூன்றாவதாகிய ஸ்தானத்தை யடைகின்றான். மிக்க கோரங்களாயுள்ள மஹா ரௌரவரௌரவங்களாகிய நரகங்களை யடைந்து துக்கங்களை யனுபவித்துப் பின்னர் பூர்வ கர்ம சேஷத்தினால் இழிய ஜந்துவின் பிறவியைப் பெறுகின்றான்.

ஸ்லோகம்.

யூகா மஶக த[3]ம்ஶாதி ஜன்மாஸௌ லப[4]தே பு[4]வி
ஏவம் ஜீவக[3]தி: ப்ரோக்தா கிமன்யத் ஶ்ரோது மிச்ச[2]ஸி. (30)

வியாக்யானம்: - அஸள - இந்த ஜீவன், **புவி** - பூவுலகில், **யூகா மஶக த^{3}மஶாதி ஜன்ம** - ஈ கொசுகு பெருங்கொசுகு முதலியவைகளின் ஜந்மத்தை, **லபதே** - பெறுகின்றான், **ஏவம்** - இவ்வாறு, **ஜீவகதி**: - ஜீவகதியானது, **ப்ரோக்தா** - சொல்லப்பட்டது, **அந்யத்** - மற்று, **கிம்** - எதனை, **ஶ்ரோதும்** - கேட்க, **இச்சஷ** - விரும்புகின்றனை.

பொழிப்புரை: - இந்த ஜீவன் பூவுலகில் ஈ கொசுகு முதலியவைகளின் ஜந்மத்தைப் பெறுகின்றான். இவ்வாறு ஜீவகதி சொல்லப்பட்டது. ஓ ராமா பின்னும் யாது கேட்க விரும்புகின்றனை (என்றனர்.)

ஸ்ரீராமர் சொல்லுகிறார்.

ஶ்லோகம்.

ப^{4}க^{3}வன்! யத் த்வயா ப்ரோக்தம் ப^{2}லம் து ஞான கர்மணோ:
ப்ருஹ்ம லோகே சந்த்^{3}ர லோகே பு^{4}ங்க்தே போ^{4}கா^{3} னிதி ப்ரபோ^{4}
(31)
க^{3}ந்த^{3}ர்வாதி^{3}ஷு லோகேஷு கத^{2}ம் போ^{4}க^{3}ஸ் ஸமீரித:

வியாக்யானம்: - **ப^{4}க^{3}வன்** - ஓ பகவனே, **த்வயா** - உம்மால், **ப்ருஹ்ம லோகே** - ப்ருஹ்மலோகத்தினில், **சந்த்ரலோகே** - சந்தரலோகத்தினில், **போ^{4}கா^{3}ன்** - போகங்களை, **பு^{4}ங்க்தே** - புசிக்கின்றான், **இதி** - என்று, **ஞானகர்மணோ**: - ஞானகர் மங்களுக்கு, **யத்** - யாதொரு, **பலம்** - பயன், **ப்ரோக்தம்** - சொல்லப்பட்டதோ, **கந்தர்வாதிஷு** - கந்தர்வாதிகளாகிய, **லோகேஷு** - உலகங்களில், **கதம்** - எப்படி, **போக** - போகம், **ஸமீரித:-** சொல்லப்பட்டது

பொழிப்புரை: - ஓ பகவனே ! உம்மால் ப்ருஹமலோகத்தினில் சந்திரலோகத்தினில் போகங்களைப் புசிக்கின்றான் என்று ஞான கர்மங்களின் பயன் யாதொன்று சொல்லப்பட்டதோ, அங்ஙனம் கந்தர்வாதிலோகங்களிலுள்ள போகம் எப்படி.

ஶ்லோகம்

தே^{3}வத்வம் ப்ராப்னுயாத் கஶ்சித் கஶ்சி தி^{3}ந்த்^{3}ரத்வ மேவ ச **(32)**

ஏதத் கர்மப^{2}லம் வாsஸ்து? வித்^{3}யாப^{2}ல மதா^{2}sபி வா?
தத்^{3} ப்^{3}ரூஹி கி^{3}ரிஜாகாந்த! தத்ர மே ஸம்ஶயோ மஹான் **(33)**

வியாக்யானம்: - **கஶ்சித்** - ஒருவன் தேவத்துவத்தை, **ப்ராப்னுயாத்** - அடைய வேண்டும், **கஸ்சித்** - ஒருவன், **இந்த்ரத்வம் ஏவ** - இந்த்ரத்வத்தை அடைய

வேண்டும், **ஏதத்** - எனும் இது, **கர்மபலம் வா** - கர்மபலமாகவோ, **அதாபிவித்யா பலம்** - உபாஸ்திபலமாகவோ, **அஸ்து** - இருக்கட்டும், **கிரிஜாகாந்த** - ஒ பார்வதி ரமணா, **தத்** - அதனை, (கந்தர்வாதிபோக தாரதம்மியத்தை) **ப்ரூஹி** - சொல்லும், **தத்ர** - அவ்விஷயத்தில், **மே** - எனக்கு, **மஹான்** - பெரிய, **ஸம்சய:** - ஸந்தேஹ முளது.

பொழிப்புரை: - தேவத்துவத்தை ஒருவனும் இந்திரத்துவத்தை ஒருவனும் அடைய வேண்டு மென்பது கர்மபலமாகட்டும் அல்லது உபாஸ்தியின் பலமாகட்டும். கந்தர்வாதி போகதார தம்மியத்தைச் சொல்லும், பார்வதிரமனா? அவ்விஷயத்தில் எனக்குப்பெரிய ஸந்தேஹமுளது.

ஸ்ரீபகவான் சொல்லுகிறார்.

ஶ்லோகம்.

தத்^{3}வித்^{3}யா கர்மணோரேவாऽனுஸாரேண ப^{2}லம் ப^{4}வேத்
யுவா ச ஸுந்த^{3}ர: ஶூரோ நீரோகோ^{3} ப^{3}லவான் ப^{4}வேத் (34)

ஸப்த த்^{3}வீபாம் வஸுமதீம் பு^{4}ங்க்தே நிஷ்கண்டகம் யதி^{3}
ஸ ப்ரோக்தோ மானுஷானந்த^{3} ஸ்தஸ்மாச் ஶத கு^{3}ணோ மத: (35)

மனுஷ்யஸ் தபஸா யஸ்து க^{3}ந்த^{4}ர்வோ ஜாயதேऽஸ்ய து (36)

வியாக்யானம்: - **தத்^{3}** - கந்தர்வாதிபோகமானது, **வித்யாகர்மணோ: ஏவ** - **அனுஸாரேண** - உபாஸ்திகர்மங்களின் அநுஸாரமாகவே, **பலம்** - பயன், **பவேத்** - ஆகும், **யுவா ச** - யௌவனப் பருவம் உடையவனும், **ஸுந்த^{3}ர** - அழகுடையவனும், **சூர:** - சூரனும், **நீரோக:** - ரோகமில்லாதவனும், **பலவான்** - பலமுடையவனும், **ஸப்த த்^{3}வீபாம்** - ஏழுத்வீபமுடைய, **வஸுமதீம்** - பூமியை, **நிஷ்கண்டகம்** - குறை யாதுமின்றி, **பு^{4}ங்க்தே யதி^{3}** - புசிக்கின்றானாயின், **ஸ:** - அந்த போகமானது, **மானுஷாநந்த^{3}:** - மானுஷாநந்தமென்று, **ப்ரோக்த:** - சொல்லப்பட்டுள்ளது. **மனுஷ்ய** - மநுஷ்யன், **தபஸாயுக்த:** - தவமுடையோனாய், **கந்தர்வ** - கந்தர்வனாக, **ஜாயதே** - உண்டாகின்றானாயின், **அஸ்யது** - அவனுக்கு, **தஸ்மாத்** - மாநுஷாநந்தத்தைக் காட்டிலும், **ஶத கு^{3}ண:** - நூறுபங்கு, **ஸ்ம்ருத்:** - உள்ள தென்று சொல்லப்பட்டுள்ளது.

பொழிப்புரை: - கந்தர்வாதிபோகம் வித்தியா கர்மங்களின் அநுஸாரமாயுள்ள பலமேயாம். யுவாவாகவும் அழகுடையவனும் சூரனும் ரோகமில்லாதவனும் பலமுடையவனுமாயுள்ள ஒருவன் ஸப்த ஸமுத்திரங்களால் சூழப்பட்ட உலகை எக்குறையுமின்றி அனுபவிக்கின்றானாயின் அது மாநுஷாநந்தமாம். மனிதன் தவ முடையவனாய்க் கந்தர்வனாயின் மனிதானந்தத்தைக் காட்டிலும் அவனுக்கு நூறு பங்கு மிகுதியாய் ஆனந்தமுள்ளதென்று சொல்லப்பட்டது.

ஶ்லோகம்.

தஸ்மாச் ச²த கு³ணோ தே³வ க³ந்த⁴ர்வாணாம் ந ஸம்ஶய: (37)

ஏவம் ஶத கு³ணானந்த: உத்தரோத்த ரதோ ப⁴வேத்
பித்ருணாம் சிர லோகானாம் ஆஜாநஸூர ஸம்பதா³ம் (38)

தே³வதானா மதே²ந்த்³ரஸ்ய கு³ணாஸ் தத்³வத் ப்ரஜாபதே:
ப்³ரஹ்மண ஶ்சைவ மானந்தா³: புரஸ்தா து³த்தரோத்தரம் (39)

வியாக்யானம்: - **தஸ்மாத்** - அதனிலும், **தே³வ க³ந்தர்வாணாம்** - தேவகந்தர்வர்களுடைய ஆனந்தமானது, **ஶத குண**: - நூறுபங்கதிகமாம், **ஸம்ஶய: ந** - ஸந்தேஹமில்லை, **ஏவம்** - இவ்வாறு, **உத்தரோத்த ரத:** - மேன்மேல், **ஶத கு³ணாநந்த:** - நூறுபங்கானந்தமானது, **பவேத்** - ஆகும், **சிர லோகானாம்** - நீடித்திருக்கும் உலகங்களையுய, **பித்ருணாம்** - பிதிருகளுக்கும், **ஆஜாநஸூர ஸம்பதா³ம்** - தோற்றமுதல் தேவச்செல்வம் பெற்றுள்ளவராகிய, **தேꢀவதானாம்** - தேவர்களுக்கும், **அத** - பிறகு, **இந்தரஸ்ய** - இந்திரனுக்கும், **குரோ:** - ப்ருஹஸ்பதிக் கும், **தத்³வத்** - அங்ஙனம், **ப்ரஜாபதே:** - ப்ரஜாபதிக்கும், **ப்ரும்மண: ச** - ப்ரும்மத்திற்கும், **புரஸ்தாத்** - முந்தி, **உத்தரோத்தரம்** - மேன்மேலும், **ஆனந்தா:** - ஆநந்தங்கள் நூறுபங்கதிகமாம்.

பொழிப்புரை: - அதனிலும் தேவகந்தர்வர்களுடைய ஆனந்தமானது நூறு பங்கதிகமாம் ஸந்தேகமில்லை. இவ்வாறே மேன்மேல் நூறுபங்கதிகமாய் ஆநந் தமுளது. சிரலோக பிதிருக்களுக்கும் ஆஜானதேவர்களுக்கும் இந்திரனுக்கும் பிருஹஸ்பதிக்கும் பிரஜாபதிக்கும் ப்ரும்மத்திற்கும் உள்ள ஆனந்தமானது முறையே ஒவ்வொன்றிலும் மேன்மேலும் நூறுபங் கதிகமாயுள்ளது என்றறிக.

ஸ்லோகம்.

ஞானாதி⁴க்யாத் ஸுகா²தி⁴க்யம் நான்ய த³ஸ்தி ஸுராலயே
ஶ்ரோத்ரியோऽவ்ரஜினோऽகாமஹதோ யஶ்ச த்³விஜோ ப⁴வேத் (40)

தஸ்யாப்யேவம் ஸமாக்²யாதா ஆனந்தா³ஶ் சோத்தரோத்தரம் (41)

வியாக்யானம்: - **ஞானாதிக்யாத்** - ஞானச்சிறப்பினால், **சுகாதிக்யம்** - சுகச்சிறப்பாம், **சுராலயே** - தேவலோகத்தில், **அந்யத்** - வேறு, **நாஸ்தி** - இல்லை, **ஶ்ரோத்ரிய:** - வேதாத்தியயனம் செய்து அர்த்தமுணர்ந்தவனும், **அவ்ரஜின:** - பாவச் செயல்களில்லாதவனும், **அகாமஹத:** - காமக்கேடில்லாதவனும் ஆகிய, **ய:** - யாதொரு, **த்விஜோத்தம:** - பிராமணச்ரேஷ்டனுளனோ, **தஸ்ய அபி** - அவனுக்கும்,

ஏவம் - இவ்வாறு, **உத்தரோத்தரம்** - மேன்மேல், **ஸமாக்யாதா:** - சொல்லப்பட்டன வாகிய, **ஆநந்தா:** - ஆனந்தங்கள் உள்ளன.

பொழிப்புரை: - ஞானாதிக்கியத்தினால் சுகச்சிறப்பாம் இதுவன்றித் தேவ லோகத்தில் யாதுமில்லை. வேதாத்தியயனம் செய்து அர்த்தமுணர்ந்தவனும் கெட்ட காரியங்களில்லாதவனும் காமககேடில்லாதவனும் ஆகிய யாதொரு அந்தணவரன் உளனோ அவனுக்கும் இவ்வாறே மேன்மேலும் சொல்லப்பட்ட ஆநந்தங்களுள்ளன வாம்.

ம்லோகம்.

ஆத்மஞானாத் பரம் நாஸ்தி தஸ்மாத்^{3} த^{3}ஶரதா^{2}த்மஜ!
ப்^{3}ராஹ்மண: கர்மபி^{4}ர் நைவ வர்த^{3}த^{4}தே நைவ ஹீயதே (42)

ந லப்^{4}ய: பாதகேனைவ கர்மணா ஞானவான் யதி^{3}
தஸ்மாத் ஸர்வாதி^{4}கோ விப்ரோ ஞானவானேவ ஜாயதே (43)

வியாக்யானம்: - **த^{3}ஶசரதா^{2}த்மஜ** - ஓ தசரதன் புதல்வனே, **தஸ்மாத்^{3}** - ஆதலால், **ஆத்மஞானாத்** - ஆத்மஞானத்திலும், **பரம்** - சிறந்தது, **நாஸ்தி** - இல்லை, **ப்ராமண** - ஆன்மஞானமுடைய அந்தணன், **கர்மபி^{4}** - கர்மங்களால், **நவர்த்ததே ஏவ** - மேன்மை பெறுதலில்லை, **நஹீயதே ஏவ** - குறைவுறுதலுமில்லை, **ஞானவான் யதி^{3}** - ஞானவானாயிருந்தால், **பாதகேன கர்மணா** - பாவச்செயலால், **நலப்யதே** - பற்றப்படுகின்றவனல்ல, **தஸ்மாத்** - ஆதலால், **ஞானவான்** - ஞானவா னாகிய, **விபர ஏவ** - பிராஹ்மணனே, **ஸர்வாதிக:** - ஸகலரிலும் உத்தமனாய், **ஜாயதே** - ஆகின்றான்.

பொழிப்புரை: - ஓ தசரதன் புதல்வனே! ஆதலின் ஆத்மஞானத்திலும் சிறந்தது யாதுமில்லை. ஞானமுடைய அந்தணன் கர்மங்களால் வளருதலாவது தாழ்தலாவது இல்லை ஞானவானாயிருந்தால் பாதகச்செயல்களால் பற்றப்படுகின்ற வனல்ல. ஆதலா ஆதலால் ஞானவானாகிய அந்தணனே ஸர்வோத்தமனாகின்றான்.

ம்லோகம்.

ஞாத்வா ய: குருதே கர்ம தஸ்யாsக்ஷய்ய ப^{2}லம் ப^{4}வேத் (44)

யத்ப^{2}லம் லப^{4}தே மர்த்ய: கோடி ப்^{3}ராஹ்மண போ^{4}ஜனை:
தத்ப^{2}லம் ஸமவாப்னோதி ஞானினம் யஸ்து போ^{4}ஜயேத் (45)

வியாக்யானம்: - **ய:** - யாதொருவன், **ஞாத்வா** - அறிந்து, **கர்ம** - கர்மத்தை, **குருதே** - செய்கின்றானோ, **தஸ்ய** - அவனுக்கு, **அக்ஷய்யபலம்** - குறைவற்றபலன், **பவேத்** - நிகழும், **மர்த்ய:** - மனிதன், **கோடி ப்³ராஹ்மண போ⁴ஜனை** - கோடி ப்ராஹ்மணர்களைப்போஜனம் செய்வித்தலால், **யத்ப²லம்** - எந்தப்பயனை, **லபதே** - பெறுகின்றானோ, **ய:** - யாதொருவன், **ஞானினம்** - ஞானியை, **போ⁴ஜயேத்** - போஜனம் செய்விக்கின்றானோ அவன், **தத்ப²லம்** - அந்தப்பலத்தை, **ஸமவாப்நோதி** - பெறுகின்றான்.

பொழிப்புரை: - யாதொருவன், அறிந்து கர்மம் செய்கின்றானோ அவனுக்குக் குறைவற்ற பயன் நிகழும். மனிதன் கோடிப்ராஹ்மண போஜனம் செய்வித்தலால் எந்தப்பயனைப் பெறுவானோ அந்தப்பயனை ஞானிக்குப் போஜனமளிப்பவன் அடைகின்றான்.

ஶ்லோகம்.

ஞானவந்தம் த்³விஜம் யஸ்து த்³விஷ்யதே ச நராத⁴ம:
ஸ ஶூஷ்யமாணோ ம்ரியதே யஸ்மா தீஶ்வர ஏவ ஸ: (46)

வியாக்யானம்: - **ய:துநராதம:** - யாதொருநராதமன், **ஞானவந்தம்** - ஞானவானாகிய, **த்விஜம்** - அந்தணனை, **த்விஷ்யதே** - துவேஷிக்கின்றானோ, **ஸ:** - அவன், **சுஷ்யமாண:** - தாபத்தால் தஹிக்கப் பெற்று, **ம்ரியதே** - நசிக்கின்றான், **யஸ்மாத்** - யாதொருகாரணத்தால், **ஸ:** - அந்த ஞானியானவன், **ஈச்வர ஏவ** - ஈச்வரனேயோ.

பொழிப்புரை: - யாதொரு நராதமன் ஞானியாகிய மனிதனை துவேஷிக்கின்றானோ அவன் தாபமடைந்து நசிக்கின்றான் யாதொரு காரணத்தினால் ஞானியானவன் ஈச்வரனேயோ.

ஶ்லோகம்.

உபாஸகோ ந யாத்யேவ யஸ்மாத் புன ரதோ⁴க³திம்
உபாஸன ரதோ பூ⁴த்வா தஸ்மா தா³ஸ்வ ஸுகீ² ந்ருப⁴ (47)

வியாக்யானம்: - **யஸ்மாத்** - யாதொருகாரணத்தால், **உபாஸக** - உபாஸ்தி செய்பவன், **புன** - மீண்டும், **அதோகதிம்** - இழியநிலைமையை, **நயாதிஏவ** - அடைகின்றதேயில்லையோ, **தஸ்மாத்** - ஆதலால், **ந்ருப⁴** - ஓ அரசனே, **உபாஸன ரதோ பூ⁴த்வா** - உபாஸனாதத்பரனாயிருந்து, **ஸுகீ** - ஸுகமுடையவனாக, **ஆஸ்வ** - இருப்பாயாக.

பொழிப்புரை: - யாதொரு காரணத்தால் உபாஸ்கன் மீண்டும் அதோகதியை அடைகின்றதில்லையோ ஆதலால் ஓ அரசனே உபாஸனாதத்பரனாயிருந்து சுகமுடையவனாவாய்.

பதினோராவது அத்தியாயம்

முற்றிற்று.

பனிரண்டாவது அத்தியாயம்.

உபாஸனா ஞானபல யோகம்

ஸ்ரீராமர் சொன்னதாவது.

ஸ்லோகம்

.

ப4க3வன் தே3வதே3வேஶ நமஸ்தேऽஸ்து மஹேஶ்வர
உபாஸனாவிதி4ம் ப்3ரூஹி தே3ஶகாலம் ச தஸ்ய து (1)

வியாக்யானம்: - **தே3வதே3வேஶ -** ஒ தேவதேவேசனே, **ப4க3வன்** - ஒ பகவனே, **தே** - உமக்கு, **நம** - நமஸ்காரம், **அஸ்து** - இருக்கட்டும், **மஹேஶ்வர** - ஒ மஹேச்வரனே, **உபாஸனாவிதிம்** - உபாஸனையின் முறையையும், **தஸ்யது** - அவ்வுபாஸனையின், **தேசம்** - தேசத்தையும், **காலம் ச** - காலத்தையும், **ப்ரூஹி** - சொல்லும்.

பொழிப்புரை: - ஓ தேவதேவேசா ஓ பகவனே உமக்கு நமஸ்காரம். மஹேச்வர தேவரீர் உபாஸனையின் கிரமத்தையும் அதற்குரிய தேச காலகாலங்களையும் சொல்லும்.

பகவான் சொன்னதாவது.

ஶ்லோகம்,

ஶ்ருணு ராம ப்ரவக்ஷ்யாமி தே3ஶம் கால முபாஸனே
மத3ம்ஶேன பரிச்சி2ன்னா தே3ஹா: ஸர்வ தி3வௌகஸாம் (2)

வியாக்யானம்: - **ராமா -** ஓ ராமா, **உபாஸனம்** - உபாஸனையும், **தேசகாலம்** - தேசகாலங்களையும், **ப்ரவக்ஷ்யாமி** - சொல்லுகின்றேன், **ஶ்ருணு** - கேட்பாயாக, **ஸர்வதிவௌகாஸம்** - ஸகலதேவர்களின், **தேஹா** - தேஹங்கள், **மத3ம்ஶேன** - எனது அம்சத்தினால், **பரிச்சி2ன்னா** - வரைந்து (பிரிக்கப்பட்டனவாய்) உள்ளன,.

பொழிப்புரை: - ஓ ராமா உபாஸனத்தையும் தேசகாலத்தையும் சொல்லுகின்றேன் கேட்பாயாக. ஸகலதேவர்களின் தேஹங்களும் எனது அம்சத்தினால் வரைந்து பிரிக்கப்பட்டனவாயுள்ளன.

ஶ்லோகம்.

யே த்வன்ய தே3வதா ப4க்தா யஜந்தே ஶ்ரத்3த4யான்விதா:
தேऽபி மாமேவ ராஜேந்த்3ர! யஜந்த்யவிதி4 பூர்வகம் (3)

வியாக்யானம்: - **யேது** - எவர்கள், **அன்ய தே³வதா ப⁴க்தா** - அந்நியதேவ பக்தர்களிடம் பக்தியுடையவர்களும், **ஶ்ரத்தயா அன்விதா** - ச்ரத்தையுடையவர் களுமாய் இருந்து கொண்டு, **யஜந்தே** - தேவாராதனை செய்கின்றனரோ, **ராஜேந்திர** - ஓ அரசச்ரேஷ்டனே, **தேஅபி** - அவர்களும், **அவிதிபூர்வகம்** - விதிப்படியின்றி, மா**மேவ** - என்னையே, **யஜந்தி** - பூஜிக்கின்றனர் (என்பதே)

பொழிப்புரை: - எவர் அந்யதேவரின் பக்தியுடையோரும் ச்ரத்தையுடையோ ருமாயிருந்து தேவாராதனை செய்கின்றனரோ. ஓ அரசச்ரேஷ்டனே அவர்களும் விதிப்படியின்றி என்னை பூஜிக்கின்றனராகின்றனர்.

ஶ்லோகம்.

யஸ்மாத் ஸர்வமித³ம் விஶ்வம் மத்தோ ந வ்யதி ரிச்யதே
ஸர்வ க்ரியாணாம் போ⁴க்தாsஹம் ஸர்வஸ்யாsஹம் ப²ல ப்ரத³: (4)

வியாக்யானம்: - **யஸ்மாத்** - யாதொருகாரணத்தால், **இதம்** - இந்த, **ஸர்வம்** - ஸகல, **விஶ்வம்** - பிரபஞ்சமும், **மத்த:** - என்னிலும், **ந வ்யதி ரிச்யதே** - வ்யதிரேகமாவதில்லையோ, ஆதலால், **ஸர்வ க்ரியாணாம்** - ஸகல கிரியைகளை யும், **போ⁴க்தா** - புசிப்பவன், **அஹம்** - யான், **ஸர்வஸ்ய** - எல்லோருக்கும், **பலப்ரத:** - கர்மபலதாதா, **அஹம்** - யான்.

பொழிப்புரை: - யாதொரு காரணத்தால் இச்சகலப்பிரபஞ்சமும் என்னிலும் வேற்றுமைப்படுகின்றதில்லையோ ஆதலால் ஸகல கர்மபோக்தா நான் ஸசலர்களு க்கும் கர்மபலதாதாவும், நான்.

ஸ்லோகம்.

யேனா காரேண யே மர்த்யா: மாமேவைக முபாஸதே
தேனா காரேண தேப்⁴யோsஹம் ப்ரஸன்னோ வாஞ்சி²தம் த³தே³ (5)

வியாக்யானம்: - யே - எந்த, **மர்த்யா:** - மனிதர், **யேன** - எந்த, **ஆகாரேண** - வடிவமுடையனாய் மாம், **ஏகம் ஏவ** - என்னொருவனையோ, **உபாஸதே** - உபாவிக்கின்றனரோ, **தேப்ய:** - அம்மனிதருக்கு **தேந ஆகாரேண** - அவ்வடிவம் கொண்டவனாய், **அஹம்** - நான், **ப்ரஸன்ன:** - ப்ரஸன்னராய், **வாஞ்சிதம்** - விரும்பியதை, **ததே** - கொடுக்கின்றேன்,

பொழிப்புரை: - எந்த மனிதர் எவ்வடிவமுடையவனாய் என்னையே உபாஸிக்கின்றனரோ அம்மனிதருக்கு அவ்வடிவம் கொண்டவராய் ப்ரஸந்நராய் வேண்டிய பொருளைக் கொடுக்கின்றேன்.

ஶ்லோகம்.

விதி4னாऽவிதி4னா வாபி ப4க்த்யா யே மா முபாஸதே
தேப்4ய: ப2லம் ப்ரயச்சா2மி ப்ரஸன்னீऽஹம் ந ஸம்ஶய: (6)

வியாக்யானம்: - **விதினா** - விதிப்படியாவது, **அவிதினா வாபி** - விதிப்படி யில்லாமலாவது, **யே** - எவர், **ப4க்த்யா** - பக்தியோடு கூடியவராய், **மாம்** - என்னை, **உபாஸதே** - உபாவிக்கின்றனரே, **தேப்ய** - அவர்களின் பொருட்டு, **அஹம்** - நான், **ப்ரஸன்ன:** - ப்ரஸன்னராய், **ப2லம்** - (வேண்டிய) பயனை, **ப்ரயச்சா2மி** - கொடுக்கின்றேன், **ஸம்ஶய: ந** - ஸம்பயமில்லை.

பொழிப்புரை: - விதிப்படி யாயினும் விதியில்லாம லாயினும் எவர் என்னைப் பக்தியோடு உபாவிக்கின்றனரோ. அவர்களுக்கு நான் பிரஸநநராய் வேண்டியதைத் தருவேன். ஸந்தேஹமில்லை.

ஶ்லோகம்.

அபி சேத் ஸுது3ராசாரோ ப4ஜதே மா மனன்ய பா4க்
ஸாது4ரேவ ஸ மந்தவய: ஸம்யக்3 வ்யவஸிதோ ஹி ஸ: (7)

வியாக்யானம்: - **ஸுது3ராசார, அபி சேத்** - மிக்கக்கெட்ட நடத்தையுடைய னாயினும், (எவன்) **மாம்** - என்னை, **அனன்ய பா4க்** - ஏனையப்பற்றில்லாதவனாய், **பஜதே** - பஜிக்கின்றானோ? **ஸ:** - அவன், **ஸாது: ஏவ** - ஸாதுவே (என்று), **மந்தவ்ய** - எண்ணத்தக்கவன், **ஹி** - யாதொருகாரணத்தினால், **ஸ** - அவன், **ஸம்யக் வ்யவஸித** - திடநிச்சயமுடையவனாகின்றானோ. ஸாது

பொழிப்புரை: - மிக்கக்கெட்ட நடத்தை உடையோனாயினும் என்னை எவன் ஏனைய பற்றைவிடுத்துப் பஜிக்கின்றானோ அவன் ஸாது என்றே எண்ணத்தக்கவன். யாதொரு காரணத்தால் நல்ல நிச்சயம் உடையவனாகின்றானோ.

ஸ்லோகம்.

ஸ்வ ஜீவத்வேன யோ வேத்தி மாமேவைக மனன்ய தீ4
தம் ந ஸ்ப்ருஶந்தி பாபானி ப்3ரஹ்ம ஹத்யாதி3 கான்யபி (8)

வியாக்யானம்: - **ய**: - எவன், **அனன்ய தீ** - மற்றதில் மனதைச் செலுத்தாத வனாய், **மாம் ஏகம் ஏவ** - என்னொருவனையே, **ஸ்வ ஜீவத்வேன** - தனது ஆத்மாவாய், **வேத்தி** - அறிகின்றானோ, **தம்** - அவனை, **ப்ரும்ஹஹத்யாதிகாநி அபி** - ப்ரும்ஹஹத்தி முதலியவைகளுமாகிய, **பாபானி** - பாவங்களும், **நஸ்ப்ருஶந்தி** - பரிசிக்கின்றதில்லை.

பொழிப்புரை: - எவன் மற்றதில் மனதைச்செலுத்தாதவனாய் என்னையே தனது ஆத்மாவாய் அறிகின்றானோ. அவனைப் ப்ரும்ஹஹத்தி முதலிய மஹாபாவங்களும் அணுகுகின்றதில்லை.

ஸ்லோகம்.

உபாஸா வித4யஸ் தத்ர சத்வார: பரி கீர்த்திதா:
ஸம்ப தா3ரோப ஸம்வர்கா3 த்4யாஸா இதி மனீஷிபி4: (9)

வியாக்யானம்: - **தத்ர** - ஆண்டு, **உபாஸாவிதய** - உபாஸனாவிதிகள், **ஸம்பதாரோபஸம்வர்காத்யாஸா:** - ஸம்பத், ஆரோபம், ஸம்வர்க்கம், அத்யாஸம் இதி - என்று, **சத்வரர:** - நான்குவிதங்களாய், **மனீஷிபி4:** - மேதாவிகளால் (பெரியோர்களால்) **கீர்த்திதா:** - சொல்லப்பட்டுள்ளன.

பொழிப்புரை: - ஆண்டு உபாஸனாமுறையானவை ஸம்பத் ஆரோபம் ஸம்வர்கம் அத்யாஸம் என்று நான்குவகையாய்ப் பெரியோர்களால் சொல்லப் பட்டுள்ளன.

ஸ்லோகம்.

அல்ப்பஸ்ய வாsதி4கத்வேன கு3ணயோகா3த்3 விசிந்தனம்
அனந்தம் வை மன இதி ஸம்பத்3 விதி4 ருதீ3ரித: (10)

வியாக்யானம்: **- அல்ப்பஸ்ய** - அற்பமாயுள்ளதை, **குணயோகாத்** - குண ஸம்பந்தத்தால், **அதி4கத்வேன** - மஹத்தாய், மன - மனமானது, **அனந்தம் வை** - அனந்தமே, **இதி** - என்பதாய், **விசிந்தனம்** - சிந்தித்தலானது, **ஸம்பத்விதி** - ஸம்பது பாஸனை என்று, **உதீ3ரித:** - சொல்லப்பட்டுள்ளது.

பொழிப்புரை: **-** அற்பாயுள்ளதை குணஸம்பந்தத்தால் மஹத்தாகச் சிந்தித்தல் அதாவது மனம் அனந்தமே என்பமுதலியது ஸம்பத் உபாஸனை என்று சொல்லப்படுவதாம்.

ஸ்லோகம்.

விதா4 வாரோப்ய யோபாஸா ஸாரோப: பரிகீர்த்தித:
யத்3வ தோ3ங்கார முத்3கீ3த2 முபாஸீதேத் யுதா3ஹ்ருத: (11)

வியாக்யானம்: - **விதௌ** - விதியில் (கர்மாங்கத்தில்), **ஆரோப்ய** - ஆரோபித்து, **யா** - யாதொரு, **உபாஸா** - உபாஸனையுளதோ, **ஸா** - அவ்வுபாஸனை

யானது, **ஆரோப** - ஆரோபமென்று, **பரிகீர்த்தித:** - சொல்லப்பட்டுளது, **யத்^{3}வத்** - எப்படி போல (எனின்), **ஓங்காரம்** - ஓங்காரத்தை, **உத்^{3}கீ^{3}த^{2}ம்** - உத்கீதமாக, **உபாஸீத** - உபாஸனைசெய்க, **இதி** - என்று, **உதா^{3}ஹ்ருத** - உதாஹரிக்கப்பட்டதோ.

பொழிப்புரை: - அங்கத்தில் ஆரோபித்து யாதொரு உபாஸனையுளதோ அஃது ஆரோபம் எனப்படுவதாம் எப்படியெனின் ஓங்காரத்தை உத்கீதமாக உபாஸனை செய்க என்று சொல்லப்பட்டதோ.

ஶ்லோகம்.

ஆரோபோ பு^{3}த்^{3}தி^{4} பூர்வேண ய உபாஸா விதி^{4}ஶ்ச ஸ:
யோஷித் யக்^{3}னிமதிர் யத்^{3}வ த^{3}த்^{4}யாஸ: ஸ உதா^{3}ஹருத: (12)

வியாக்யானம்: - **புத்திபூர்வேண** - புத்திபூர்வமாய், **ய** - யாதொரு, **ஆரோப:** - ஆரோபம் உளதோ, **ஸ உபாஸாவிதி** - அவ்வுபாஸனாவிதியே, (அதாவது) **யோஷிதி** - ஸ்திரீயினிடம், **யத்** - யாதொரு, **அக்னிமதி** - அக்னிபுத்தி செய்வதோ, **தத்** - அஃது, **அத்யாஸ:** - அத்யாஸம் என்று, **உதாஹ்ருத:** - சொல்லப்பட்டுள்ளது.

பொழிப்புரை: - புத்திபூர்வமாய் யாதொரு ஆரோபம் உளதோ அதாவது ஸ்திரீயினிடம் அக்கினி புத்திசெய்வது முதலியது அத்தியாஸம் என்னப்படுவதாம்.

ஶ்லோகம்.

க்ரியா யோகே^{3}ன சோபாஸா விதி^{4}: ஸம்வர்க^3 உச்யதே
ஸம்வர்க^3 வாயு: ப்ரளயே பூ^{4}தான் யேகோऽவஸீத^{3}தி (13)

வியாக்யானம்: - **க்ரியா யோகே^{3}ன** - கிரியாஸம்பந்தத்தினால், **உபாஸா விதி^{4}:** - உபாஸனாவிதியானது, ஸம்வர்க்க - ஸம்வர்க்கமென்று, **உச்யதே** - சொல்லப்படுவதாம் (எப்படியெனின்), **ப்ரளயே** - பிரளயத்தில், **பூதானி** - பூதங்களை, **ஸம்வர்த்த** - ஸம்வர்த்தமெனும், **வாயு: ஏக:** - வாயுஒன்றே, **அவஸீததி** - அடக்கிக்கொள்ளுகிறதோ அப்படியாம்.

பொழிப்புரை: - கிரியா ஸம்பந்தத்தால் நிகழும் உபாஸனாமுறையானது ஸம்வர்க்கமெனப்படுவதாம் அதாவது பிரளயத்தில் பூதங்களை ஸம்வர்த்தமெனும் வாயு ஒன்றே அடக்கிக்கொள்ளுகின்றது என்பதாம்.

ஶ்லோகம்.

உப ஸங்க^{3}ம்ய பு^{3}த்^{3}த்^{4}யா யதா^{3}ஸனம் தே^{3}வதாத்மனா
தது^{3}பாஸன மந்த: ஸ்யாத் தத்^{3}ப^{3}ஹி: ஸம்பதா^{3}த்^{3}ய: (14)

வியாக்யானம்: - **புத்யா** - புத்திவிருத்தியால், **தே³வதாத்⁴மனா** - பரமாத்மதேவதாஸ்வரூபமாக, **உபஸங்கம்ய** - (குருமூலமாய்) நன்கறிந்து, **ஆஸனம் யத்** - இருத்தலென்பது யாதோ, **தத்** - அஃது அந்த, **உபாஸனம்** - அந்தருபாஸனம், **ஸ்யாத்** - ஆகும், **ஸம்பதாதய:** - ஸம்பத் முதலியனவாகிய உபாஸனமானது, **பஹி** - வெளியுபாஸனையாம்.

பொழிப்புரை : -- புத்தி விருத்தியால் பரமாத்ம ஸ்வரூபமாக குருமூலமாய் நிச்சயித்துத் தியானம் செய்தல் யாதோ அஃது அந்த ருபாஸனமாம். முற்கூறிய ஸம்பதாதியுபாஸனை வெளியுபாஸனை யானதுபற்றி பஹிருபாஸனையாம்.

ஶ்லோகம்.

ஞானாந்த ரானந்தரித ஸஜாதி ஞான ஸந்ததே:
ஸம்பன்ன தே³வ தாத்மத்வ முபாஸன முதீ³ரிதம் (15)

வியாக்யானம்: - **ஞானாந்த ரானந்தரித ஸஜாதி ஞான ஸந்ததே:** - வேறு விருத்தியால் தகையப்படாமல் பரமாத்ம ஸ்வரூபமேயாகிய ஓர் வகைப்பட்டுள்ள விருத்தியின் அப்பியாஸத்தினால், **ஸம்பன்ன தே³வ தாத்மத்வம்** - (நன்கறியப்பட்ட பரமாத்ம ஸ்வரூபத்தைப்பெற்றிருத்தல்) பரமாத்மஸ்வரூபத்தை நன்கறியப் பெற்றி ருத்தல், **உபாஸனம்** - உபாஸனம், **என உதீரிதம்** - சொல்லட்டுள்ளது.

பொழிப்புரை: - ஏனைய சிந்தனைகளால் சிறிதும் இடையில் தடைப்படாது ஓர் வகைப்பட்டுள்ள விருத்தியப்பியாஸத்தின் பலத்தினால் நன்கு பரமாத்ம ஸ்வரூபத்தை யறியப்பெற்றிருத்தல் உபாஸனை யென்னப்படுவதாம்.

ஶ்லோகம்.

ஸம்பதா³தி³ஷு பா⁵ஹ்யேஷு த்³ருட⁴பு⁴த்³தி⁴ ருபாஸனா
கர்மகாலேத் தங்கேஷு த்ருஷ்டிமாத்ரமுபாஸநம் (16)

வியாக்யானம்: - **ஸம்பதாதிஷு** - ஸம்பத்முதலிய, பாஹ்யேஷு - பிரபஞ்சப் பொருள்களில், **த்³ருட⁴பு⁴த்³தி⁴:** - உறுதியாகிய சித்தவிருத்தியானது, **உபாஸனம்** - உபாஸனையாம், **கர்மகாலே** - கர்மகாலத்தில், **ததங்கேஷு** - கர்மாங்க விஷயங்களில், **த்ருஷ்டிமாத்ரம்** - நோக்கமாத்ரமும், **உபாஸனம்** - உபாஸனமாம்.

பொழிப்புரை: - ஸம்பத் முதலிய பாஹ்யப்பொருள்களில் த்ருடமாகிய புத்தியானது உபாஸனமாம். கர்மகாலத்தில் அக்கர்மாங்கங்களிலும் நோக்கம் மாத்திரம் உபாஸனமாம்.

ஶ்லோகம்.

உபாஸனமிதி ப்ரோக்தம் தத3ங்கா3னி ப்3ருவே ஶ்ருணு

தீர்த்த2 க்ஷேத்ராதி3 க3மன ஶ்ரத்3தா4ம் தத்ர பரித்யஜேத்
ஸ்வ சித்தைகாக்3ரதா யத்ர தத்ராஹீத ஸுக2ம் த்3விஜ: (17)

வியாக்யானம்: - **இதி** - இவ்வாறு, **உபாஸனம்** - உபாஸனமானது, **ப்ரோக்தம் -** சொல்லப்பட்டது, **தத3ங்கா3னி** - அதன் அங்கங்களை, **ப்3ருவே** - சொல்லுகிறேன், **ஶ்ருணு** - கேட்பாயாக, **தீர்த்த2 க்ஷேத்ராதி3 க3மனம்** - தீர்த்தம் க்ஷேத்திரம் முதலியவைகளுக்குப் போதலையும், **தத்ர** - அவ்விஷயத்திலுள்ள, **ஶ்ரத்3தா4ம்** - ஆதரவையும், **பரித்யஜேத்** - விட்டுவிடுக, **யத்ர** - எவ்விடத்தில், **ஸ்வ சித்தைகாக்3ரதா** - தனது சித்தத்திற்கு ஏகாக்கிரப்படுதல் உள்ளதோ, **தத்ர** - அங்கு, **த்விஜ:** - இருபிறப்பாளன், **ஸுகம்** - ஸுகமாக, **ஆஸீத** - இருக்கவேண்டும்.

பொழிப்புரை: - இவ்வாறு உபாஸனம் சொல்லப்பட்டது. அதன் அங்கங்களைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக. தீர்த்தக்ஷேத்திராதிகளுக்குச் செல்லுதலையும் அதனிலுள்ள ச்ரத்தையையும் விட்டுவிடுக. எங்கு சித்தம் ஏகாக்கிரப்படுகிறதோ அங்கு த்விஜன் ஸுகமாக இருந்து தியானிப்பானாக.

ஶ்லோகம்.

கம்ப3ளே ம்ருது3தல்பே வா வ்யாக்4ர சர்மணி வா ஸ்தி2த:
விவிக்த தே3ஶே நியத: ஸமக்3ரீவ ஶிரஸ் தனு: (18)

அத்யாஶ்ரமஸ்த2: ஸகலா னீந்த்3ரியாணி நிருத்4ய ச
ப4க்த்யாsத2 ஸ்வகு3ரும் நத்வா யோக3ம் வித்3வான் ப்ரயோஜயேத்
(19)

வியாக்யானம்: - **கம்ப3ளே** - கம்பளத்தில், **ம்ருது3தல்பே வா** - அல்லது மிருதுவாகிய வஸ்திரத்திலாவது, **வ்யாக்4ர சர்மணி வா** - புலித்தோலிலாவது, **ஸ்தித:** - இருக்கின்றவனாய், **விவிக்த தே3ஶே** - ஏகாந்தமாகிய இடத்தில், **நியத:** - நியமத்தோடு கூடியவனாய், **ஸமக்3ரீவ ஶிரஸ் தனு:** - ஸமமாய் (கோணலின்றி) கழுத்து தலை உடல் இவை இருக்கும் படிபான நிலமையுடையவனாய், **அத்யாஶ் மஸ்த:** - விதிப்படி, விபூதி தராணம்செய்து கொள்ளுதலாகிய (அத்தியாஸ்ரம முடையவனாய்), **ஸகலானீ** - ஸகல, **இந்திரியாணிச** - இந்திரியங்களையும், **நிருத்4ய** - நிரோதனம் செய்து (தகைந்து), **ஸ்வகு3ரும்** - தனது குருவை, **பர்த்யா** - பக்தியோடு கூட, **நத்வா** - பணிந்து, **வித்3வான்** - குருமுசமாகமாகவறிந்த வித்தியா ஞானத்தை அநுஸந்திக்கின்றவனாய், **யோக3ம்** - சித்தத்தின் ஏனைய விருத்திகளின் நிரோதனத்தை, **யோஜயேத்** - செய்குக.

பொழிப்புரை: - கம்பளத்தில் அல்லது மிருதுவாகிய வஸ்திரத்திலாவது புலித்தோலிலாவது இருந்து ஏகாந்தமாகிய இடத்தில் நியதனாய் கழுத்து தலை உடல் இவைகளை ஒழுங்காய் இருக்கச்செய்து கொண்டு அத்தியாஸ்ரம விரதம் பூண்டு ஸகலேந்திரியங்களையும் தகைந்து தனது குருவைப்பணிந்து தான் உபதேசம் பெற்ற ஸ்வரூபத்தை அநுஸந்தித்துக்கொண்டு சித்தத்தின் ஏனைய விருத்திகளை (நிரோதனம்) தகைய வேண்டும்.

ஶ்லோகம்.

யஸ் த்வவிக்ஞானவான் ப⁴வத்யவ்யக்த மனஸா ஸதா³
தஸ்யேந்த்³ரியா ண்யவஶ்யானி து³ஷ்டாஶ்வா இவ ஸாரதே²: (20)

வியாக்யானம்: - யாது - யாதொருவன், **ஸதா** - எப்போதும், **அவ்யக்த மனஸா** - மோஹங்கொண்ட மனமுடையவனாய், **அவிஞ்ஞானவான்** - விஞ்ஞான மில்லாதவனாய், **பவதி** - இருக்கின்றானோ, **தஸ்ய** - அவனுக்கு, **இந்திரியாணி** - இந்திரியங்கள், **ஸாரதே:** - ரதப்பாகனுக்கு, **துஷ்டாஶ்வா: இவ** - துஷ்டக்குதிரைகள் போல, **அவஶ்யாநி** - வசப்படாதனவாம்.

பொழிப்புரை: - யாதொருவன் எப்போதும் மோகங்கொண்டு விஞ்ஞான மில்லாதவனாய் இருக்கின்றானோ அவனுக்கு இந்திரியங்கள் தேர்ப்பாகனுக்கு துஷ்டக்குதிரைகள் போல வசப்படாதனவாம்.

ஶ்லோகம்.

விஞ்ஞானீ யஸ்து ப³வதி யத்னேன மனஸா ஸஹ
தஸ்யேந்த்³ரியாணி வஶ்யானி ஸதஶ்வா இவ ஸாரதே²: (21)

வியாக்யானம்: - ய: து - யாதொருவன், **யத்னேன** - யத்தினத்தால், **விஞ்ஞானீ** - விஞ்ஞாநியாக, **பவதி** - ஆகின்றானோ, **தஸ்ய** - அவனுக்கு, **மனஸா**, **ஸஹ** - மனதோடு கூட, **இந்த்ரியாணி** - இந்திரியங்கள், **ஸாரதே²:** - தேர்ப்பாகனுக்கு, **ஸதஶ்வா: இவ** - நல்ல குதிரைகள் போல, **வஶ்யானி** - வசப்பட்டனவாகின்றன.

பொழிப்புரை: - யாதொருவன் உழைத்து விஞ்ஞானியாகின்றானோ அவனுக்கு மனஸோடு கூட இந்திரியங்கள் தேர்ப்பாகனுக்கு ஸாதுக்குதிரைகள் போல வசப்பட்டனவாகின்றன.

ஶ்லோகம்.

யஸ் த்வவிஞானவான் ப⁴வத் யமனஸ்க: ஸதா³ஶுசி:
ந ஸ தத்பத³ மாப்னோதி ஸம்ஸாரமபி க³ச்ச²தி (22)

வியாக்யானம்: - **ய:து** - யாதொருவன், **அவிஞ்ஞானவான்** - விஞ்ஞான மில்லாதவனும், **அமனஸ்க:** - மனம் வசப்படாதவனும், **ஸதா** - எப்போதும், **அஶுசி** - ராகத்துவேஷாதி அசுத்தியுடையனுமாய், **பவதி** - இருக்கின்றானோ, **ஸ:** - அவன், **தத்பதம்** - அப்பரபதத்தை, **ந ஆப்னோதி** - அடைகின்றதில்லை, **ஸம்ஸாரம் அபி** - ஸம்ஸாரத்தையே, **க³ச்ச²தி** - அடைகின்றான்.

பொழிப்புரை: - யாதொருவன் அவிஞ்ஞானவானாயும் மனம் வசப்படாத வனாயும் ராகத்துவேஷமுடையவனுமாய் இருக்கின்றானோ அவன் அப்பரபதத்தை படைகின்றதில்லை. ஸம்ஸாரத்தையே அடைகின்றான்.

ஶ்லோகம்.

விஞ்ஞானீ யஸ்து ப⁴வதி ஸமனஸ்க: ஸதா³ ஶுசி:
ஸ து தத்பத³ மவாப்னோதி யஸ்மாத்³ பூ⁴யோ ந ஜாயதே (23)

வியாக்யானம்: - **யது** - யாதொருவன், **விஞ்ஞானீ** - விஞ்ஞானமுடை யோனும், **ஸமனஸ்க:** - மனம் வசப்பட்டவனும், **ஸதா** - எப்போதும், **ஶுசி** - காமாதியற்றவனுமாய், **பவதி** - இருக்கின்றானோ, **ஸ:** - அவன், **யஸ்மாத்** - எப்பதத்தினின்றும், **பூய:** - மீண்டும், **ந ஜாயதே** - பிறப்பதில்லையோ, **தத்பதம்** - அப்பதத்தை, **அவாப்நோதி** - அடைகின்றான்.

பொழிப்புரை: - யாதொருவன் விஞ்ஞான முடையோனும் மனம் வசப்பட்டவ னும் எப்போதும் காமாதியற்றவனுமாயுள்ளவனோ அவன் மீண்டும் பிறவாத பதத்தை யடைகின்றான்.

ஶ்லோகம்.

விஞ்ஞான ஸாரதி²ர் யஸ்து மன: ப்ரக்³ரஹ ஏவ ச
ஸோsத்⁴வன: பார மாப்னோதி மமைவ பரமம் பதம் (24)

வியாக்யானம்: - **ய:து** - யாதொருவன், **விஞ்ஞான ஸாரதி²:** - விஞ்ஞான மாகிய ஸாரதியையுடையோனும், **மன: ப்ரக்³ரஹ ஏவ ச** - மனமாகிய கடிவாளத் தை யுடையோனுமாயுள்ளவனோ, **ஸ:** - அவன், **அத்வன:** - வழியின், **பாரம்** - முடிவாகிய, **மம** - எனது, **பரமம்பதம் ஏவ** - பரமமாகிய பதத்தையே, **ஆப்னோதி** - அடைகின்றான்.

பொழிப்புரை: - யாதொருவன் விஞ்ஞானமாகிய ஸாரதியை யுடையோனும் மனமாகிய கடிவாளத்தை யுடையோனுமாயுளனோ அவன் மார்க்கத்தின் முடிவாகிய எனது பரமமான பதத்தையே அடைகின்றான்.

ஸ்லோகம்.

ஹ்ருத் புண்ட3ரீகம் விரஜம் விஶுத்3த4ம் விஶத3ம் ததா2
விஶோகஞ்ச விசிந்த்யாऽத்ர த்4யாயேன் மாம் பரமேஶ்வரம் (25)

அசிந்த்ய ரூப மவ்யக்த மனந்த மம்ருதம் ஶிவம்
ஆதி மத்5யாந்த ரஹிதம் ப்ரஶாந்தம் ப்3ரஹ்ம காரணம் (26)

ஏகம் விபு4ம் சிதா3னந்த மரூப மஜ மத்3பு4தம்
ஶுத்3த4 ஸ்ப2டிக ஸங்காஶ முமா தே3ஹார்த்3த4 தா4ரிணம் (27)

வ்யாக்4ர சர்மாம்ப3ர த4ரம் நீலகண்ட2ம் த்ரி லோசனம்
ஜடா த4ரம் சந்த்3ர மௌலிம் நாக3 யஞ்ஞோப வீதினம் (28)

வ்யாக்4ர சர்மோத்தரீயஞ்ச வரேண்ய மப4ய ப்ரத3ம்
பராப்4யா மூர்த்4வ ஹஸ்தாப்4யாம் பி3ப்4ராணம் பரஶும் ம்ருக3ம் (29)

பூ4தி பூ4ஷித ஸர்வாங்க3ம் ஸர்வாப4ரண பூ4ஷிதம்

வியாக்யானம்: - **விசோகம்** - சோகமில்லாததும், **விரஜம்** - ராகத்துவேஷாதிகளுக்கிடமில்லாததும், **விஶுத்3த4ம்** - மிக்கச்சுத்த ஸ்வரூபமும், **விஶத3ம்** - பிரகாசமுமாகிய, **ஹ்ருத்புண்டரீகம்** - ஹ்ருதய கமலத்தை, **விசிந்த்ய** - நன்கு சிந்தித்து, **அத்ர** - அவ்விதய கமலத்தினில், **அசிந்த்ய ரூபம்** - மனதிற்கெட்டாத உருவத்தை யுடையவனும், **அவ்யக்தம்** - இந்திரியங்களுக்கு விஷயமல்லாதவனும், **அனந்தம்** - அந்த (பரிச்சேத) மில்லாதவனும், **அம்ருதம்** - நாசமில்லாதவனும், **ஶிவம்** - மங்களகரனும், **ஆதிமத்யாந்தரஹிதம்** - முதல் நடு முடிவில்லாதவனும், **ப்ரசாந்தம்** - ராகத்துவேஷாதிகளில்லாதவனும், **காரணம்** - ஸகலப்ரபஞ்சாதிஷ்டானமுமாகிய, **ப்ரஹ்ம** - ப்ருஹ்மமும், **விபும்** - வியாபகனும், **சிதாநந்தம்** - சிதாநந்தனும், **அரூபம்** - உருவமில்லாதவனும், **பரமேஶ்வரம்** - பரமேச்வரனுமாயினும், **அத்புதம்** - அற்புதமாய், **சுத்தஸ்படிகஸங்காசம்** - சுத்தஸ்படிகம் போன்றவனும், **உமாதேஹார்த்ததாரிணம்** - உமாதேவியைப் பாதிதேஹமாய்க் கொண்டவனும், **வ்யாக்ரசர்மாம்பரத்ரம்** - புலித்தோலை இடையில் அணிந்தவனும், **நீலகண்டம்** - கறுத்தகண்டமுடையோனும், **த்ரிலோசனம்** - முக்கண்ணனும், **ஜடாதரம்** - சடை தரிக்கின்றவனும், **சந்த்3ர மௌலிம** - சந்திரனைச் சிரஸினில் அணிந்தவனும், **நாக3 யஞ்ஜோப வீதினம்** - அரவப்பூனூலனும், **வ்யாக்ர சர்மோத்தரீயம்ச** - புலித்தோலை உத்தரீயமாய் உடையவனும், **வரேண்யம்** - வரமளிக்கின்றவனும், **அபயப்ரதம்** - அபயதானம் செய்கின்றவனும், **பராப்யாம்** - மற்றுமுள்ள, **ஊர்த்வஹஸ்தாப்யாம்** - மேல்நோக்கிய ஹஸ்தங்களால், **பரசும்** -

கோடரியையும், **ம்ருகம்** - மானையும், **பிப்ராணம்** - தரிக்கின்றவனும், **பூதிபூஷிதஸர்வாங்கம்** - விபூதிபூசிய ஸர்வாங்கங்களை உடையவனும், **ஸர்வாபரணபூஷிதம்** - ஸகலவாபரணங்களையும் அணிந்துள்ளவனுமாய், **ஏவம்** - இவ்வாறுள்ள என்னை, **த்யாயேத்** - தியானம் செய்குக.

பொழிப்புரை: - சோகத்திற்கும் ராகத்துவேஷாதிகளுக்கு மிடமில்லாததும் மிக்கச்சுத்தமும் பிரகாசமுமாயுள்ள ஹ்ருதய கமலத்தை நன்கு சிந்தித்து அங்கு மனதிற்கெட்டாதவனும் இந்திரியங்களுக்கு விஷய மில்லாதவனும் பரிச்சேத மில்லாதவனும் நாசமில்லாதவனும் முதல்நடு முடிவில்லாதவனும் ராகத்துவே ஷாதிகளில்லாதவனும் ஸகலப்ரபஞ்சா திஷ்டானமாயுள்ளவனும் ப்ருஹ்மமும் வியாபகனும் அரூபனும் பரமேச்வரனுமாயுள்ளவனாயினும் அற்புதமாய் சுத்த ஸ்படிகம் போன்றவனும் உமாதேவியைப் பாதிதேஹமாய்க் கொண்டவனும் புலித்தோலை இடையில் அணிந்தவனும் கறுத்தகண்டமுடையோனும் முக்கண்ண னும் சடைதரிக்கின்றவனும் சந்திரனைச் சிரஸினில் அணிந்தவனும் அரவப் பூணூலனும் புலித்தோலை உத்தரியமாய்க் கொண்டவனும் வரமளிக்கின்றவனும் அபயதானம் செய்கின்றவனும் உயரத் தூக்கியமற்றைய இரண்டு கைகளால் கோடரியையும் மானையும் தரிக்கின்றவனும் விபூதிபூசிய ஸர்வாங்கங்களையும் உடையவனும் ஸகலாபரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவனுமாய் இவ்வாறுள்ள உருவமுடையோனாகிய என்னைத் தியானம் செய்குக.

இங்கு மனோவாக்குகளுக் கெட்டாத பரிபூரணாநந்தபோத வடிவமாயுள்ள பரமாத்வாவுக்கு ஏகதேசத்தில் விளங்குவதாகிய உருவம் சொல்லுவது பொருந்துவ தெவ்விதம் எனின் லோகாநுக்கிரஹார்த்தமாய் திவ்விய சக்திமஹிமையால் அங்ஙனம் உருவம் பெற்றிருத்தல் பொருந்துவதேயாம் என்க. ஆனதுபற்றியே,

பராஸ்யசக்திர்விவிதைவச்ரூயதேஸ்வாபாவிகீஞானபலக்ரியாச

ச்வேதாரவதம்.

“*ஶிவம்ப்ரஶாந்தமம்ருதம்ப்ருஹ்ம* என்று தொடங்கி,

"*உமாஸஹாயம் பரமேவரம்ப்ரபும் த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரசாந்தம்* என்று கூறிய கைவல்லியம்

உமார்த்தவிக்ரஹாசுத்தாத்ரிணேத்ராசந்த்ரசேகரா
நீலக்ரீவாபராநந்தப்ரமோதாத்தாண்டவப்ரியா
ப்ருஹ்மவிஷ்ணுமஹாதேவைருபாஸ்யாகுணமூர்த்திபி:
ஸர்வமூர்த்திவிஹீநஸ்யஸர்வபூதாதிபஸ்யது
ததாப்யேஷாபாாமூர்த்திரித்யேஷாஶாஸ்வதீச்ருதி:

என்ற ஸூதஸம்ஹிதா க்ரந்தத்திலும் இங்ஙனமே பரிபூரண சிதாநந்தவருவனா யினும் உமார்த்ததேஹங்கொண்டு விளங்குகின்றான் என்று போதிக்கப்படுகின்றது.

ஶ்லோகம்.

ஏவ மாத்மாsரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம்
ஞான நிர்மத²னாsப்யாஸாத் ஸாக்ஷாத் பஶ்யதி மாம் ஜன: (30)

வேத³ வாக்யை ரலப்⁴யோsஹம் நாஶாந்தேனாபி சேதஸா

வியாக்யானம்: - ஏவம் - இங்ஙனம், **ஜந:** - மனிதன், **ஆத்மாரணிம்** - ஆத்மாவை அரணியாகவும், **ப்ரணவம்** - ப்ரணவத்தை, **உத்தராரணிம்ச** - மேல் அணியாகவும், **க்ருத்வா** - செய்து, **த்யான நிர்மதனாப் யாஸாத** - தியானமாகிய கடைதலைத்தடையின்றிச் செய்தலால், **மாம்** - என்னை, **ஸாக்ஷாத் பஶ்யதி** - ஸாக்ஷாத்காரமாய்த் தரிசிக்கின்றான், **அஹம்** - நான், **வேதவாக்யை:** - வேதவாக்கியங்களால், **அலப்ய:** - அடையக் கூடாதவன், **சாஸ்த்ரை:** - சாஸ்திரங்களாலும், **ந** - (காணக்கூடியவன்) அல்லன், **சேதஸா அபி** - மனதாலும், ந - காணக்கூடியவன் (அல்ல.)

பொழிப்புரை: - இங்ஙனம் மனிதன் ஆன்மாவை அரணியாகவும் பிரணவத்தை மேலரணியாகவும் செய்து தியானமாகிய உறையச்செய்தலின் அப்பியாஸத்தினால் என்னை ஸாக்ஷாத்கரிக்கப் பெறுகின்றான். நான் வேத வாக்கியங்களாலும் சாஸ்திரங்களினாலுமே காணக்கூடியவனல்லன்.

ஶ்லோகம்

நாவிரதோ து³ஶ்சரிதான் நாsஶாந்தோ நாsஸமாஹித:
நாsசாந்தமாநஸோ வாபி ப்ரக்ஞானேன லபே⁴த மாம் (31)

வியாக்யானம்: - **துஶ்சரிதாத்** - கெட்டகாரியங்களினின்றும், **அவிரத:** - ஒழிவுபெறாதவன், **ந** - அடைவதில்லை, **அசாந்த:** - இந்திரியங்களடங்காதவன், **ந** - அடைவதில்லை, **அஸமாஹித:** - ஏகாக்கிரசித்தமில்லாதவன், **ந** - அடைகின்றதில்லை, **அசாந்தமாநஸ:வா** - மனதை அடக்கப் பெறாதவனும், **ந** - அடைகின்றதில்லை, மற்றோ, **ப்ரக்ஞானேன** - ப்ரஹ்ம ஞானத்தினால், **ஏநம்** - அவனை, **ஆப்நுயாத்** - அடையலாம்.

பொழிப்புரை: - கெட்ட காரியங்களை ஒழிக்காதவனும், இந்திரியங்களை வெல்லாதவனும், ஏகாக்கிரசித்தமில்லாதவனும், மனம் அடங்கப்பெறாதவனும் இவனை அடைகின்றதில்லை. மற்று ப்ரஹ்ம ஞானத்தினாலேயே இவனை யடையலாம.

ஶ்லோகம்.

ஜாக்³ரத் ஸ்வப்ன ஸுஷுப்த்யாதி³ ப்ரபஞ்சோ ய: ப்ரகாஶதே
தத்³ ப்³ரஹ்மாऽஹமிதி ஞாத்வா ஸர்வ ப³ந்தை⁴: ப்ரமுச்யதே (32)

வியாக்யானம்: - **ய:** - யாதொருவன், **ஜாக்³ரத் ஸ்வப்ன ஸுஷுப்த்யாதி³ ப்ரபஞ்ச:** - ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்த்யாதி ப்ரபஞ்சமாக, **ப்ரகாஶதே** - பிரகாசிக்கின்றானோ, **தத்** - அந்த, **ப்ரஹ்மா** - பிரும்ஹமானது, **அஹம்** - நான், **இதி** - என்று, **ஞாத்வா** - அறிந்து, **ஸர்வபந்தை:** - ஸகல பந்தங்களினாலும், **ப்ரமுச்யதே** - விடுபடுகின்றான்.

பொழிப்புரை: - யாதொருவன் ஜாக்கிரத்ஸ்வப்னம் ஸுஷுப்தி முதலிய ப்ரபஞ்சமாகத்தோன்றுகின்றானோ, அப்படிப்பட்ட ப்ருஹமம் யான் என்றறிந்து ஸகல பந்தங்களினாலும் விடுபடுகின்றான்.

ஶ்லோகம்.

த்ரிஷு தா⁴மஸு யத்³ போ⁴க்³யம் போ⁴க்தா போ⁴க³ஶ்ச யத்³ ப⁴வேத்
தஜ் ஜ்யோதிர் லக்ஷண: ஸாக்ஷீ சின்மாத்ரோऽஹம் ஸதா³ஶிவ: (33)

வியாக்யானம்: - **திரிஷு** - மூன்று, **தா⁴மஸு** - அவஸ்தைகளிலும், **யத்** - யாதொன்று, **போ⁴க்³யம்** - புசிக்கப்படும் விஷயமும், **போ⁴க்தா** - புசிப்போனும், **போக: ச** - போகமும், **ப⁴வேத்** - ஆகுமோ, **தத்** - அப்படிப்பட்ட, **ஜ்யோதிர்லக்ஷண:** - சோதிவடிவனும், **ஸாக்ஷீ** - ஸாக்ஷிரூபனும், **சின்மாத்ர:** - சித்வடிவனும், ஆகிய **ஸதாசிவ:** - ஸதாசிவன் அஹம் யான்.

பொழிப்புரை: - மூன்றுவஸ்துகளிலும் யாதொருபோக்கியமும் போக்தாவும் போகமுமுளதோ அப்படிப்பட்ட சோதிவடிவனும் ஸாக்ஷியும் சிந்மாத் ரனுமாகிய ஸதாசிவன் யான்.

ஶ்லோகம்.

கோடிமத் யாஹ்ரு ஸுர்யாபம் சந்த்ரகோடிஸுசீதளம்
ஸுர்யசந்த்ராக்நிநயரும் ஸ்மேரவக்த்ரஸரோருஹம் (34)

வியாக்யானம்: - **கோடிமத் யாஹ்ரு ஸுர்யாபம்** - எண்ணிறந்த நடுப்பகற் சூரியன் போல் ஜ்வலிக்கின்றதும், **சந்த்ரகோடி ஸுசீதளம்** - எண்ணிறந்த சந்திரர் போல சீதளமாயுள்ளதும், **ஸுர்ய சந்த்ராக்நிநயரும்** - ஸுரிய சந்திராக்னிகளை நேத்திரமாய் உடையதும், **ஸ்மேரவக்த்ரஸரோருஹம்** - புந்நகைகொண்ட

முகத்தாமரை மலரையுடையதுமாகிய ஸதாசிவஸ்ரூபத்தைத் தியானித்து ஸகல பந்தங்களின்றும் விடுபடுகின்றான்.

பொழிப்புரை: - கோடிஸூரியர்போல் ஜ்வலிக்கின்றதும் கோடி சந்திரர் போல ஆனந்தகரமாயுள்ளதும் ஸூர்யசந்திராக்னிகளை நேத்திரமாக வுடையதும் புந்நகை கொண்ட முகத்தாமரை மலரை உடையதும் ஆகிய ஸதாசிவனுடைய திருவடிவத்தைத் தியானித்து ஸகல பந்தங்களினின்றும் விடுபடுகின்றான்.

ஶ்லோகம்.

ஏகோ தே[3]வ: ஸர்வபூ[4]தேஷு கூ[3]ட[4]:
ஸர்வ வ்யாபீ ஸர்வ பூ[4]தாsந்தராத்மா
ஸர்வாத்[4]யக்ஷ: ஸர்வ பூ[4]தாதி[4] வாஸ:
ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்கு[3]ணஶ்ச **(35)**

வியாக்யானம்: - ஏக: - ஏகனாகிய, **தேவ:** - தேவன், **ஸர்வபூதேஷு** - ஸகலபூதங்களிலும், **கூ[3]ட[4]:** - மறைபட்டுள்ளவனும், **ஸர்வவ்யாபீ** - ஸகலவ்யாபக னும், **ஸர்வ பூ[4]தாsந்தராத்மா** - ஸகல பூதங்களிலுள்ளத்திலிருக்கின்றவனும், **கர்மாத்யக்ஷ:** - கர்மங்களுக்கு அத்தியக்ஷனும், **ஸர்வபூதாதிவாஸ**: - ஸகல பூதங்களிலும் வஸிப்பவனும், **ஸாக்ஷீ** - ஸாக்ஷியாயுள்ளவனும், **சேதா** - அறியச்செய்வோனும், **கேவல:** -கேவலமாயுள்ளவனும், **நிர்க்குண:** - நிர்க்குணமாயு முள்ளவன்.

பொழிப்புரை: - ஏகனாகிய தேவன் ஸகல பூதங்களிலும் மறைபட்டுள்ளவ னும், ஸர்வவியாபகனும், ஸகல பூதங்களுக்கும் அந்தராத்மாவாயுள்ளவனும், கர்மாத்தியக்ஷனும், ஸகல பூதங்களிலும் வஸிக்கின்றவனும், ஸாக்ஷியும் அறியச்செய்வோனும், கேவலனும் நிர்க்குணனுமாயுள்ளவன்.

ஶ்லோகம்.

ஏகோsவாத்ஸீத் ஸர்வ பூ[4]தாந்தராத்மா
ஹ்யேகம் பீ[3]ஜம் நித்யதா[3] ய: கரோதி
தம் மாம் நித்யம் யேsனுபஶ்யந்தி தீ[4]ரா-
ஸ்தேஷாம் ஶாந்தி: ஶாஶ்வதீ நேதரேஷாம் **(36)**

வியாக்யானம்: - **ய: -** யாதொருவன், **ஏக:** - ஒப்புயர்வில்லாதவனும், **வசீ** - ஸர்வத்தையும் தன் வசப்படுத்தியவனும், **ஸர்வபூதாந்தராத்மா அபி** - ஸகல பூதங்களிலும் அந்தராத்மாவாயுள்ளவனாயினும், **ஏகம் பீஜம்** - ஒப்புயர்வில்லாத தாகிய (மாயையான) காரணத்தை, **நித்யதா** - (ஞானிகள் தவிர மற்றவர்க்கு) நித்தியமாயிருக்கும்படி, **கரோதி** - செய்கின்றானோ, **நித்யம்** - நித்தியனாகிய,

தம்மாம் - அவ்வென்னை, **யே** - எந்த, **தீரா:** - தீரர்கள், (இந்திரியங்களை வென்றவர்) **அநுபச்யந்தி** - சாஸ்திராசிரியரது உபதேசத்தால்ஸாக்ஷாத்கரிக்கின்றனரோ, **தேஷாம்** - அவர்களுக்கே, **ஶாஶ்வதீ** - நித்யமாகிய, **ஶாந்தி:** - சாந்தியாம், **இதரேஷாம்** - ஏனையோர்க்கு, **ந** - அல்ல.

பொழிப்புரை: - யாதொருவன் ஒப்புயர்வில்லாதவனும் நியாமக னும் ஸகல பூதங்களுக்கும் அந்தராத்மாவுமாயுள்ளவனாயினும் மாயையாகிய ஒப்புயர் வில்லாத பீஜத்தை நித்தியமாய் இருக்கச்செய்கின்றானோ அவ்வென்னை எந்த தீரர்கள் ஸாக்ஷாத்கரிக்கின்றனரோ அவர்களுக்குச் சாச்வதமாகிய சாந்தியே யன்றி எனையோர்க்கல்ல.

ஶ்லோகம்.

அக்னி³ர் யதை²கோ புவனம் ப்ரவிஷ்டோ
ரூபம் ரூபம் ப்ரதி ரூபோ ப³பூ⁴வ
ஏகஸ் ததா² ஸர்வ பூ⁴தாந்தராத்மா
ந லிப்யதே லோக து³:கே²ன பா³ஹ்ய: **(37)**

வியாக்யானம்: - எப்படி **அக்னி³:** - அக்கினியானவன், **ஏகம்** - ஒருவனாயினும், **புவனம்** - உலகப் பொருள்களை, **ப்ரவிஷ்ட:** - அடைந்தவனாய்க் கொண்டு, **ரூபம் ரூபம்** - உருவம் தோறும், **ப்ரதிரூப:** - ப்ரதிரூபமுடையவனாய், **பபூவ** - ஆயினனோ, **ததா** - அப்படியே, **ஏக:** - ஒருவனாயினும், **ஸர்வபூதாந்தராத்மா** - ஸகலபூதங்களுக்கும், அந்தராத்மாவாய், **ரூபம் ரூபம்** - உருவம் தோறும், **ப்ரதிரூப:** - பிரதி உருவமுடையோனாய், **பஹி: ச** - வெளியிலும் உள்ளவனாவன்.

பொழிப்புரை: - எப்படி அக்கினி ஒருவனாயினும் உலகப்பொருள்களை யடைந்து உருவம் தோறும் பிரதிரூப முடையவனாயுளனோ அவ்விதமே ஒருவனாயினும் ஸகல பூதங்களுக்கும் அந்தராத்மாவாய் ரூபம் தோறும் பிரதிரூபமுடையவனாய் வெளியிலும் உளன்.

ஶ்லோகம்.

வேதே³ஹ யோ மாம் புருஷம் மஹாந்த
மாதி³த்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்
ஸ ஏவ வித்³வா னம்ருதோऽத்ர பூ⁴யோ
நான்யஸ்து பந்தா² அயனாய வித்³யதே **(38)**

வியாக்யானம்: - **இஹ** - இந்த ஸம்ஸாரத்தின்கண், **ய:** - யாதொரு, **புருஷம்** - பூர்ணனும், **மஹாந்தம்** - வியாபகனும், **ஆதித்யவர்ணம்** - ஆதித்தன்போல் ஸ்வப்ரகாசனாயிருக்கின்றவனும், **தமஸ:** - பிரகிருதிக்கு, **பரஸ்தாத்** - அதீதனும்

ஆகிய, **மாம்** - என்னை, **வேத** - அறிகின்றானோ, **ஸ:வித்வான் ஏவ** - அந்த ஞானியே, **அத்ர** - இந்தபிரபஞ்சத்தினில், **அம்ருத:** - முக்தனாக, **பூயாத்** - ஆவான், **அயனாய** - முக்தியின் பொருட்டு, **அந்ய:** - வேறு, **பந்தா:** - மார்க்கம், **நவித்யதே -** இல்லை.

பொழிப்புரை: - இந்த ஸம்ஸாரத்தினில் எவன் பூர்ணனும் வியாபகனும் ஸ்வப்ரகாசனும் பிரகிருதிக்கு அதீதனும் ஆகிய என்னை அறிகின்றானோ அந்த ஞானியே முத்தனாகின்றான். முக்திக்கு வேறு வழி யில்லை.

ஶ்லோகம்.

ஹிரண்யக³ர்ப்ப⁴ம் வித³தாமி பூர்வம்
வேதா³ம்ஶ்ச தஸ்மை ப்ரஹிணோமி யோsஹம்
தம் தே³வ மீட்⁴யம் புருஷம் புராணம்
நிஶ்சித்ய மாம் ம்ருத்யு முகா²த் ப்ரமுச்யதே (39)

வியாக்யானம்: - **அஹம்** - யாதொரு நான், **பூர்வம்** - முதலில், **ஹிரண்ய கர்ப்பம்** - ஹிரண்யகர்ப்பரை, **விததாமி** - ஸ்ருஷ்டிக்கின்றேனோ, **தஸ்மை** - அவனுக்கு, **வேதா³ம்ஶ்ச** - வேதங்களையும், **ப்ரஹிணோமி** - உபதேசிக்கின்றேனோ, **ஏவம் ஈட்யம்** - இவ்வாறு துதிக்கப்படுகின்றவனும், **புராணம் புருஷம்** - புராணபுருஷனும் ஆகிய, **மாம்** - என்னை, **நிஶ்சித்ய** - உள்ளபடியறிந்து, **ம்ருத்யுமுகாத்** - ம்ருத்யுவின்வாயினின்றும் ஸம்ஸாரத்தினின்றும், **ப்ரமுச்யதே** - விடுபடுகின்றான்.

பொழிப்புரை: - யாதொரு நான் முதலில் ஹிரண்யகர்ப்பனை யுண்டாக்கு கின்றேனோ அவனுக்கு வேதங்களை யுபதேசிக்கின்றேனோ இவ்வாறு துதிக்கப் படுவோனும் புராண புருஷனுமாகிய என்னை உள்ளபடி அறிபவன் ஸம்ஸாரத் தினின்றும் விடுபடுகின்றான்.

ஶ்லோகம்

ஏவம் ஶாந்த்யாதி யுக்த: ஸன் வேத்தி மாம் யஸ்து தத்வத:
நிர்முக்த து³:க² ஸந்தான: ஸோsந்தே மய்யேவ லீயதே (40)

வியாக்யானம்: - **ய:** - எவன், **ஶாந்த்யாதி யுக்த: ஸன்** - சாந்தியாதிகளோடு கூடியவனாய்க்கொண்டு, **மாம்** - என்னை, **ஏவம்** - இவ்வாறு, **தத்வத:** - உள்ளபடி, **வேத்தி** - அறிகின்றானோ, **ஸ:** - அவன், **நிர்முக்த து³:க்க² ஸந்தான:** - துக்க பரம்பரைகளொழியப் பெற்றவனாய்க்கொண்டு, **அந்தே** - இன்றுதியில், **மயி ஏவ** - என்னிடமே, **லீயதே** - அடைகின்றான்.

பொழிப்புரை: - எவன் சாந்தியாதிகளை யுடையவனாய்க்கொண்டு என்னை இவ்வாறு உள்ளபடி அறிகின்றானோ அவன் துக்கபரம்பரைக ளொழியப்பெற்றவ னாய்க்கொண்டு இறுதியில் என்னிடமே அடங்குகின்றான்.

பனிரண்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

பதின்மூன்றாவது அத்தியாயம்

முக்தி லக்ஷணம்.

சூதர் சொன்னதாவது.

ஶ்லோகம்.

ஏவம் ஶ்ருத்வா கௌஸலேய ஸ்துஷ்டோ மதி மதாம் வர:
பப்ரச்ச^{2} கி^{3}ரிஜா காந்தம் ஸுப^{4}க^{3}ம் முக்தி லக்ஷணம் (1)

வியாக்யானம்: - **ஏவம்** - இவ்வாறு (கூறியதை), **ஶ்ருத்வா** - கேட்டு, **மதி மதாம் வர:** - யுத்திமான்களுள சிரேஷ்டனாகிய, **கௌஸலய:** - கௌஸல்யையின் புத்திரன் (ராமன்), **துஷ்ட:** - ஸந்தோஷமெய்யவனாய்க் கொண்டு, **கிரிஜாகாந்தம்** - கிரிஜா காந்தனை, **ஸுபகம்** - சோபனாகிய, **முக்திலக்ஷணம்** - முக்திஸ்வரூபத்தை, **பப்ரச்ச** - கேட்டான்.

பொழிப்புரை: - இவ்வாறு கூறியதைக்கேட்டுப் புத்திமான்களுள்றந்த வனாகிய ராமன் ஸந்தோஷித்துகி கிரிஜாநாதனைச் சோபனமாகிய முக்தி ஸ்வரூபத்தைக் கேட்டான்.

ஸ்ரீ ராமர் சொன்னதாவது.

ஶ்லோகம்.

ப^{4}க^{3}வன்! கருணாவிஷ்ட ஹ்ருத^{3}ய! த்வம் ப்ரஸீத^{3} மே
ஸ்வரூப லக்ஷணம் முக்தே: ப்ரப்^{3}ரூஹி பரமேஶ்வர! (2)

வியாக்யானம்: - **ப^{4}க^{3}வன்** - ஏ பகவனே, **கருணாவிஷ்ட ஹ்ருத^{3}ய** - கருணை மிகுந்த சித்தமுடையோனே, **த்வம்**. - நீர்ப்ரஸீத கருணை செய்யும், **முக்தே:.** - முக்தியின், **ஸ்வரூபலக்ஷணம்** - ஸ்வரூபலக்ஷணத்தை, **மே** - எனக்கு, **ப்ரப்ரூஹி** - நன்குசொல்லும்.

பொழிப்புரை: - ஏ பகவனே கருணாவள்ளலே நீர் கருணை செய்யும் முக்தியின் ஸ்வரூபலக்ஷணத்தை எனக்கு நன்கு சொல்லும்.

ஸ்ரீ பகவான் சொன்னதாவது.

ஶ்லோகம்.

ஸாலோக்ய மபி ஸாரூப்யம் ஸார்ஷ்ட்[2]யம் ஸாயுஜ்ய மேவ ச
கைவல்யம் சேதி தாம் வித்[3]தி[4] முக்திம் ராக[4]வ! பஞ்சதா[4] (3)

வியாக்யானம்: - **ராகவ** - ஏராகவனே, **முக்திம்** - முக்தி (யை) யானது, **ஸாலோக்கியம்** - ஸாலோக்கியமென்றும், **ஸாரூப்பியம்** - ஸாரூப்யமென்றும், **ஸார்ஷ்ட்யம்** - ஸார்ஷ்ட்யமென்றும், **ஸாயுஜ்யம்** - ஸாயுஜ்யமென்றும், **கைவல்யம்** - கைவல்லியமென்றும், **பஞ்சதா** - ஐந்துவகையென்பதாக, **வித்தி** - அறிக.

பொழிப்புரை: - ஓ ராகவா முக்தியானது ஸாலோக்யம் ஸாரூப்யம் ஸார்ஷ்ட்யம் ஸாயுஜ்யம் கைவல்யமென்பதாக ஐந்துவிதமென்றறிக..

ஶ்லோகம்.

மாம் பூஜயதி நிஷ்காம:
ஸர்வதா[3] ஞான வர்ஜித:
ஸ மே லோகாம் ஸமாஸாத்[4]ய பு[4]ங்க்தே
போ[4]கா[3]ன் யதே[2]ப்ஸிதான் (4)

வியாக்யானம்: - **ஞான வர்ஜித:** - ஞானமில்லாதவனாய் (என் ஸ்வரூபத்தை யுள்ளபடி யறியாதவனாய்), **ஸர்வதா**[3] - எப்பொழுதும், **நிஷ்காம:** - காமமில்லாத வனாய், **மாம்** - என்னை எவன், **பூஜயதி** - (சிவலிங்காதிகளில்) பூஜிக்கின்றானோ, **ஸ:** - அவன், **மே** - எனது, **லோகம்** - உலகத்தை, **ஸமாஸாத்[4]ய** - அடைந்து, **யதே[2]ப்ஸிதான்** - விரும்பியவண்ணம், **போகான்** - போகங்களை, **பு[4]ங்தே** - புஜிக்கின்றான்.

பொழிப்புரை: - என்னையுள்ளபடி யறியாதவனாய் எப்பொழுதும் காமனை யில்லாதவனாய் என்னை எவன் பூஜிக்கிறானோ அவன் எனது உலகத்தையடைந்து விரும்பியவண்ணம் போகங்களைப் புஜிக்கின்றான்.

ஶ்லோகம்.

ஞாத்வா மாம் பூஜயேத்[3]யஸ்து ஸர்வ காம விவர்ஜித:
மயா ஸமான ரூபஸ் ஸன் மம லோகே மஹீயதே (5)

வியாக்யானம்: - **யஸ்து** - யாதொருவன், **மாம்** - என்னை, **ஞாத்வா** - அறிந்து, **ஸர்வ காம விவர்ஜித:** - எக்காமமுமின்றி, **பூஜயேத்** - பூஜிக்கின்றானோ,

அவன், **மயா** - என்னோடு, **ஸமான ரூபஸ் ஸன்** - நிகரான உருவங்கொண்டு, **மம** - எனது, **லோகே** - உலகில், **மஹீயதே** - விளங்குகின்றான்.

பொழிப்புரை: - எவன் என்னையறிந்து ஸகலகாமமுமின்றி பூஜிக்கின்றானோ அவன் எனக்கு ஸமானமான ரூபமுடையவனாய் என் லோகத்தில் விளங்குவான்.

ஶ்லோகம்.

இஷ்டா பூர்த்தாதி[3] கர்மாணி மத்ப்ரீத்யை குருதே து ய:
ஸோபி தத்பலம் ஆப்னோதி நாத்ர கார்யா விசாரணா
யத் கரோதி யதஶ்னாதி யஜ்ஜுஹோதி த[3]தா[3]தி யத் (6)

யத்தத்பஶ்யபி தத்ஸர்வம் ய: கரோதி மத[3]ர்ப்பணம்
மல்லோகே ஸ ஶ்ரீயம் பு[4]ங்க்தே மத்துல்யம் ப்ராப[4]வம் ப[4]ஜன் (7)

வியாக்யானம்: - **ய:** - யாதொருவன், **இஷ்டாபூர்த்தாதி கர்மாணி** - யாகம் அன்னசத்திரவாபீகூபதடாகாதிப் பிரதிஷ்டைமுதலிய கர்மங்களை, **மத்ப்ரீத்யை து** - எனது பிரீதியர்த்தமாகவே, **குருதே** - செய்கின்றானோ, **ஸோபி** - அவனும், **தத்பலம்** - அதன் பயனை, **ஆப்னோதி** - அடைகின்றான், **அத்ர** - இவ்விஷயத்தில், **விசாரணா** - விசாரமானது. **நகார்யா** - செய்யவேண்டாம்., **யத்** - எதனை, **கரோதி** - செய்கின்றானோ, **யத்** - எதனை, **அஶ்னாதி** - உண்ணுகின்றானோ, **யத்** - எதனை, **ஜுஹோதி** - ஹோமஞ்செய்கின்றானோ, **யத்** - எதனை, **த[3]தா[3]தி** - கொடுக்கின்றானோ, **யத்தத்** - எவ்வெப்பொருளை, **பஶ்யதி** - பார்க்கின்றானோ, **தத்ஸர்வம்** - அதனையெல்லாம், **ய:** - எவன், **மத[3]ர்ப்பணம் -** என்பொருட்டு ஸமர்ப் பித்தலை, **கரோதி** - செய்கின்றானோ, **ஸ:** - அவன், **மல்லோகே** - எனது உலகில், **மத்துலயம்** - எனக்கு ஸமானமாகிய, **ப்ராப[4]வம்** - மஹிமையை, **ப[4]ஜன்** - அடைந்துள்ளவனாய், **ஶ்ரீயம்** - போகத்தை, **பு[4]ங்தே** - புஜிக்கின்றான்.

பொழிப்புரை: - யாதொருவன் இஷ்டாபூர்த்தாதிகர்மங்களை எனது பிரீதியர்த் தமாகவே செய்கின்றானோ அவனுமதன் பிரயோஜனத்தைச் சந்தேமன்னியில் அடைகின்றான். எதனைச் செய்கின்றானோ எதனைப் புசிக்கின்றானோ, எதனை ஹோமம் செய்கின்றானோ, எதனைக்கொடுக்கின்றானோ, எவ்வெப்பொருளைக் காண்கின்றானோ அதனையெல்லாம் என்பொருட்டுஸமர்ப்பணம் செய்வோன் என் உலகில் எனக்குநிகராகிய மஹிமை பெற்றவனாய்க்கொண்டு போகங்களைப் புஜிக்கின்றான்.

ஶ்லோகம்.

யஸ்து ஶாந்த்யாதி யுக்த ஸ்ஸன் மா மாத்மத்வேன பஶ்யதி
ஸ ஜாயதே பரம் ஜ்யோதி ரத்[3]வைதம் ப்[3]ரஹ்ம கேவலம்

ஆத்ம ஸ்வரூபாsவஸ்தா2னம் முக்தி ரித்யபி4தீ4யதே (8)

வியாக்யானம்: - யஸ்து - எவன், **ஶாந்த்யாதி யுக்த ஸ்ஸன்** - சாந்தி, தாந்தி (மனவடக்கம்) இந்திரியவடக்கம் முதலியஸாதனங்களையுடையவனாய்க்கொண்டு, **மாம்** - என்னை, **ஆத்மத்வேன** - தானாக, **பஶ்யதி** - காண்கின்றானோ, **ஸ:** - அவன், **அத்வைதம்** - அத்வைதமும், **பரம்ஞ்யோதி: -** பரஞ்ஜோதி வடிவமும் ஆகிய, **கேவலம் ப்3ரஹ்ம** - ப்ரஹ்மமாகவே, **ஜாயதே** - ஆகின்றான், **ஆத்ம ஸ்வரூபாsவஸ்தா2னம்** - ஆன்ம ஸ்வரூபமாத்திரமாய் நிற்றல், **முக்தி ரிதி** - முக்தி என்று, **அபி4தீயதே** - சொல்லப்படுகின்றது.

பொழிப்புரை: - எவன் சாந்திமுதலிய ஸாதனங்களோடு கூடியவனாய்க் கொண்டு என்னைத் தானாகக் காண்கின்றானோ அவன் அத்துவிதமும் பரஞ்ஜோதி யுமாகிய கேவலம் ப்ரஹ்மமாகின்றான். ஆன்ம ஸ்ரூபமாத்திரமாய் நிற்றல் முக்தி என்னப்படுகின்றது.

ஶ்லோகம்.

ஸத்யம் ஞான மனந்தம் ஸதா3னந்தம் ப்3ரஹ்ம கேவலம்
ஸர்வத4ர்ம விஹீனம் ச மனோவாசாமகோ3சரம் (9)

ஸஜாதீய விஜாதீய பதார்த்தா2னா மஸம்ப4வாத்,
அத ஸ்தத்3 வ்யதிரிக்தானா அத்3வைத மிதி ஸம்ஞிதம் (10)

மத்வா ரூப மித3ம் ராம! ஶுத்3த4ம் யத3பி4தீ4யதே

வியாக்யானம்: - ஸத்யம் - ஸத்யமும், **ஞானம்** - அறிவும், **அனந்தம்** - அந்தமில்லாததும், **ஆநந்தம்** - பேரின்பமுமாயுள்ள, **யத்** - யாதொரு, **கேவலம் ப்ரஹ்ம** - கேவலம் ப்ரஹ்மமுளதோ, **ஸர்வத4ர்ம விஹீனம் ச** - ஸகல தன்மைகளும் நீங்கப்பெற்றதும், **மனோவாசாம்** - மனோவாக்குகளுக்கு, **அகோசரம்** - விஷய மல்லாததுமாயுளதோ, **ஸஜாதீய விஜாதீய பதார்த்தா2னாம்** - தன்னினமும் பிறவினமுமாகிய பொருள்களுக்கு, **அஸம்பவாத்** - ஸம்பவமின்மையால், **தத்3 வ்யதிரிக்தானாம்** - அதற்கந்நியங்களாகிய பொருள்களுக்கு, **அந்த:** - அபாவமானது, **அத்வைதம் இதி** - அத்துவிதம் என்று, **ஸம்ஜ்ஞிதம் -** சொல்லப்பட்டுளது, **ராம** - ஏ ராம, **யத்** - யாதொன்று, **சுத்தம்** - சுத்தம் என்று, **அபிதீயதே** - சொல்லப்படுகின்றதோ, **இதம் ரூபம்** - இந்த வடிவத்தை, **மத்வா** - சிந்தித்து சுத்தமாகின்றான்,

பொழிப்புரை: - ஸத்யமும் ஞானமும் அனந்தமும் பேரின்பமுமான யாதொரு ப்ரும்மமுளதோ யாதொன்று ஸகல தன்மைகளுமில்லாததும் மனோவாக்குகளுக்கு எட்டாததுமாயுள்ளதோ தன்னினப்பிறவினப் பொருள்களி

ராமையால் அதற்கந்நியப் பொருள்களின் அந்தமானது அத்வைதமென்று சொல்லப் படுகின்றது ஏராமா யாதொன்று சுத்தம் என்று சொல்லப்படுகின்றதோ இந்த வடிவத்தைச் சிந்தித்துச் சுத்தனாகின்றான்.

ஶ்லோகம்.

மய்யேவ த்³ருஶ்யதே ரூபம் ஜக³த் ஸ்தா²வர ஜங்க³மம் (11)

வ்யோம்னி க³ந்த⁴ர்வ நக³ரம் யதா² த்³ருஷ்டே ந த்³ருஶ்யதே
அனா த்³யவித்³யயா விஶ்வம் ஸர்வம் மய்யேவ கல்ப்யதே (12)

மம ஸ்வரூப ஞானேன யதா³sவித்³யா ப்ரணஶ்யதி
ததை³க ஏவ வர்த்தேsஹம் மனோ வாசாம கோ³சர: (13)

ஸதை³வம் பரமானந்த³: ஸ்வ ப்ரகாஶ ஶ்சிதா³த்மனா

வியாக்யானம்: - **மயி ஏவ** - என்னிடமே, **ரூபம்** - உருவமாகிய, **ஸ்தாவர ஜங்கமம்** - அசையாததும் அசைவதுமாயுள்ள, **ஜகத்** - ஜகமானது, **த்ருச்யதே** - காணப்படுகின்றது, **வ்யோம்னி** - ஆகாயத்தில் **கந்தர்வ நகரம்** - கந்தர்வநகரம் எனும் காணியானது, **த்ருஷ்டம்** - காணப்பட்டதாய்க்கொண்டு, **யதா** - எப்படி, **ந த்3ருஶ்யதே** - காணப்படுகின்றதில்லையோ, **விஶ்வம் ஸர்வம்** - பிரபஞ்சமெல்லம், **அனா த்³யவித்³யயா** - அனாதி அவித்தையினாலே, **மய்யேவ** - என்னிடமே, **கல்ப்யதே** - கற்பிக்கப்படுகின்றது, **யதா** - எப்போது, **மம** - எனது, **ஸ்வரூப ஞானேன** - ஸ்வரூப ஞானத்தால், **அவித்யா** - அவித்தையானது, **ப்ரணஶ்யதி** - நாசமடைகின்றதோ, **ததா** - அப்பொழுது, **மனோ வாசாம்** மனோவாக்குகளுக்கு, **அகோசர:** - விஷயமல்லாதவனும், **ஸதை³வ** - எப்பொழுதும், **பரமானந்த:** - பேரானந்தனும், **சிதாத்மனா** - ஞானவடிவத்தால், **ஸ்வ ப்ரகாஶ** - ஸ்வயம் பிரகாஶனும் ஆகிய, **அஹம்** - நான், **ஏக: ஏவ** - ஒருவனே, **வர்த்தே** - இருக்கின்றேன்,

பொழிப்புரை: - உருவப் பொருளாகிய ஸ்தாவர ஜங்கமமாகிய ஜகமானது என்னிடமே காணப்படுகின்றது. ஆகாயத்தில் கந்தர்வ நகரம் காணப்பட்டதாய்க் கொண்டு எப்படி மறைகின்றதோ அப்படியே என்னிடத்திலேயே பிரபஞ்சமெல்லாம் அனாதியவித்தையால் கற்பிக்கப் படுகின்றது. எப்பொழுது எனது ஸ்ரூபஞானத்தால் அவித்தைதுலைகின்றதோ அப்பொழுது மனோவாக்குகளுக் கெட்டாதவனும் எப்பொழுதும் பரமானந்தனும்ஞானவடிவம்பற்றி ஸ்வயம்பிரகாசனும் ஆகிய யானொருவனே இருக்கின்றேன்.

ஸ்லோகம்.

ந கால: பஞ்ச பூ[4]தானி ந தி[3]ஶோ விதி[3]ஶஶ் ந **(14)**

மத[3]ன்யன் நாஸ்தி யதகிஞ்சித் ததா[3] வர்த்தேsஹ மேகல: **(15)**

வியாக்யானம்: - **கால:** - காலம், **ந** - இல்லை, **பஞ்சபூதாநி** - பஞ்ச பூதங்களும், **ந** - இல்லை, **திஶ:** - திக்குகளும், **ந** - இல்லை, **விதிஶஶ்ச** - திசை வெளிகளும், **ந** - இல்லை, **மதந்யத்** - எனக்கந்நியமாய், **யத்கிஞ்சித் -** யாதும், **நாஸ்தி** - இல்லை, **ததா** - அப்பொழுது, **அஹம்** - யான், **ஏகல:** - ஒருவனே, **வர்த்தே** - இருக்கின்றேன்.

பொழிப்புரை: - காலமில்லை ஐம்பூதங்களில்லை திசைகளில்லை திசை வெளிகளுமில்லை எனக்கந்நியமாய் யாதுமில்லை அப்போது யானொருவனே இருக்கின்றேன்.

ஶ்லோகம்.

ந ஸந்த்[3]ருஶே திஷ்ட[2]தி மே ஸ்வரூபம்
ந சக்ஷுஷா பஶ்யதி மாம் து கஶ்சித்
ஹ்ருதா[3] மநீஷா மனஸாபி[4] க்லுப்தம்
யே மாம் விது[3] ஸ்தே ஹ்யம்ருதா ப[4]வந்தி **(16)**

வியாக்யானம்: - **மே** - எனது, **ஸ்வரூபம்** - ஸ்வரூபமானது, **ஸந்த்ருஶே** - கண்ணெதிரில், **நதிஷ்டதி** - இருக்கின்றதல்ல, **கஶ்சித்** - ஒருவனும், **மாம்து** - என்னையோ வெனின், **சக்ஷுஷா** - கண்ணால், **ந பஶ்யதி** - பார்க்கின்றதில்லை, **மநீஷா** - ஸங்கற்பாதிகளை யடக்குகின்றதாகிய, **ஹ்ருதா** - புத்தியால், **மநஸா** - நன்குமனனம் செய்யப்படுதலினால், **அபிக்லுப்தம்** - நிச்சயிக்கப்பட்டவனாகிய, மாம் - என்னை, **யே** - எவர், **விது:** - அறிகின்றனரோ, **தேஹி** - அவர்களே, **அம்ருதா:** - அம்ருதர் முக்தர்கள், **பவந்தி** - ஆகின்றனர்.

பொழிப்புரை: - எனது வடிவங்களவனுக் கெதிர்ப்படுகின்றதல்ல. ஆதலால் அவனும் என்னை இந்திரியங்களால் அறிகின்றதில்லை. ஸங்கற்பாதிகளை யடக்குவதாகிய புத்தியினால் நன்றாய் மநநம் செய்யப்படுவதுபற்றி அறியப்படும் என்னை எவர் அறிகின்றனரோ அவர்களே முக்தர்களாகின்றனர்.

ஶ்லோகம்.

ஸ்ரீராமன் சொன்னதாவது.

கத^{2}ம் ப^{4}க^{3}வதோ ஞானம் ஶுத்^{3}த^{4}ம் மர்த்யஸ்ய ஜாயதே
தத்ரோபாயம் ஹர! ப்^{3}ரூஹி மயி தேsனுக்^{3}ரஹோ யதி^{3} (17)

வியாக்யானம்: - **ஹர** - ஏ ஹரரே, **மர்த்யஸ்ய** - மனிதனுக்கு, **பகவத:** - பகவானது, **ஶுத்^{3}த^{4}ம் ஞானம்** - சுத்தமான ஞானமானது, **கத^{2}ம்** - எப்படி, **ஜாயதே** - உண்டாகும், **தே** - உமக்கு, **மயி** - என்னிடம், **அனுக்^{3}ரஹோ யதி** - அநுக்கிரஹமிருக்கின், **தத்ர** - அவ்விஷயத்தில், **உபாயம்** - உபாயத்தை, **ப்ரூஹி** - சொல்லும்.

பொழிப்புரை: - ஏ ஹரரே மனிதனுக்கு பகவானது சுத்த ஞானமானது எப்படி உதிக்கும் உமக்கென்னிடம் அநுக்கிரஹ மிருக்கின் அதன் உபாயத்தைச் சொல்லி யருளும்.

ஶ்லோகம்.

பகவான் சொன்னதாவது.

விரஜ்ய ஸர்வ பூ^{4}தேப்^{4}ய ஆ விரிஞ்சி பதா^{3}த^{3}பி
க்^{4}ருணாம் விதத்ய ஸர்வத்ர புத்ர மித்ராதி^{3}கேஷ்வபி (18)

ஶ்ரத்^{3}தா^{4}லுர் முக்தி ஶாஸ்த்ரேஷு வேதா^{3}ந்த ஞான லிப்ஸயா
உபாயனகரோ பூ^{4}த்வா கு^{3}ரும் ப்^{3}ரஹ்ம வித^{3}ம் வ்ரஜேத். (19)

வியாக்யானம்: - **ஆவிரிஞ்சிபதாத்** - ப்ரஹ்மபதமீறாசிய, **ஸர்வ பூதேப்ய: அபி** - ஸகலபொருள்களிலும், **விரஜ்ய** - வைராக்கியம் பெற்று, **புத்ரமித்ராதிகேஷு** - புத்ரமித்திராதிகளான, **ஸர்வத்ராபி** - ஸகலங்களிலும், **க்ருணாம்** - ஜுகுப்ஸையை, **விதத்ய** - அடைந்து, **முக்திமார்கேஷு** - மோக்ஷசாஸ்திரங்களில், **ஶ்ரத்தாளு:** - சிரத்தை யுடையவனாய், **வேதா^{3}ந்த ஞான லிப்ஸயா** - வேதாந்த ஞானம் பெறவேண்டுமெனும் விருப்பத்தால், **உபாயனகர:** - காணிக்கையோடு கூடிய கையனாய், **ப்^{3}ரஹ்ம வித^{3}ம்** - ப்ரஹ்மவித்தாகிய, **குரும்** - ஆசிரியரை, **வ்ரஜேத்** - அடையவேண்டும்.

பொழிப்புரை: - ப்ரஹ்மபத மீறாயுள்ள ஸகல பொருள்களிலும் ஒழிவடைந்து புத்திர மித்திரகளத்திராதி ஸகலத்தையும் வெறுத்து மோக்ஷ சாஸ்திரத்தில் சிரத்தை உள்ளவனாய் வேதாந்தஞானம்பெற வேண்டுமெனும் விருப்பத்தால் உபாயனத்தோடு கூடிய கையனாய் ப்ரஹ்மஞானியாகிய குருவை அடைவானாக.

ஶ்லோகம்

தமர்த்தம் புரத: க்ருத்வா தண்டவத் ப்ரணமேத் குரும்
உத்தாய சாஞ்ஜலிம் க்ருத்வா வாஞ்சிதார்த்தாந் நிவேதயேத் (20)

ஸேவாபி[4]: பரி தோஷ்யைனம் சிர காலம் ஸமாஹித:
ஸர்வ வேதா[3]ந்த வாக்யார்த்த[2]ம் ஶ்ருணுயாத் ஸு ஸமாஹித: (21)

வியாக்யானம்: - **தமர்த்தம்** - அப்பொருளை, **புரத: க்ருத்வா** - முன்வைத்து, **குரும்** - ஆசானை, **தண்டவத் ப்ரணமேத்** - தடிபோல் வணங்கவேண்டும், **உத்தாய** - எழுந்து, **அஞ்ஜலிஞ்சக்ருத்வா** - கையைக் கூப்பிக்கொண்டு, **வாஞ்சிதார்த்தாந்** - வேண்டியவைகனை, **நிவேதயேத்** - தெரிவித்துக் கொள்ளவேண்டியது, **ஏநம்** - இவரை (இச்குருவை), **சிரகாலம்** - பலகாலம், **ஸேவாபி:** - சேவித்தலால், **பரிதோஷ்ய** - ஸந்தோஷப்படுத்தி, **ஸமாஹித:** - ஜாக்ருதையுடையோனும், **ஸுஸமா ஹித:** - சித்தத்தை ஒருமைப் படுத்தியவனுமாய், **ஸர்வ வேதா[3ந்]த வாக்யார்த்தம்** - ஸகல வேதாந்த வாக்கியங்களின் பொருளை, **ஶ்ருணுயாத்** - ஸ்ரவணம் செய்வானாக.

பொழிப்புரை: - தான் கொண்டு வந்த பொருளை குருவினெதிரில் வைத்து வணங்கிப் பிறகு தனக்கு வேண்டியவைகளைக் கேட்டுக் கொள்ளவும் குருவை பலகாலஞ் சேவித்து வழிபடுதலால் ப்ரீதியடையச் செய்து அஜாக்கிரதை யின்றியவனும் சித்தத்தை ஒருமைப் படுத்தியவனுமா யிருந்து ஸகல வேதாந்த வாக்கியங்களின் பொருளை ஸ்ரவணம் செய்வானாக.

ஶ்லோகம்.

ஸர்வ வேதா[3]ந்த வாக்யானாம் மயி தாத்பர்ய நிஶ்சயம்
ஶ்ரவணம் நாம தத்ப்ராஹு: ஸர்வே தே ப்[3]ரஹ்ம வாதி[3]ன: (22)

வியாக்யானம்: - **ஸர்வ வேதா[3]ந்த வாக்யானாம்** - ஸகலவேதாந்த வாக்கியங்களுக்கும், **மயி** - என்னிடம், **தாத்பர்ய நிஶ்சயம்** - தாத்பர்யத்தின் நிச்சலமானது, **ஶ்ரவணம் நாம** - ச்ரவணம் என்று, **ஸர்வே** - ஸகல, **ப்[3]ரஹ்ம வாதி[3]ன:** - ப்ரஹ்மவாதிகளெல்லோரும், **ப்ராஹு:** - சொல்லுகின்றனர்.

பொழிப்புரை: - ஸகலவேதாந்த வாக்கியங்களின் தாத்பரியத்தை என் விஷயமென விசாரித்து நிச்சயித்துக்கொள்ளுதல் சிரவணம் என்பதாக ப்ரஹ்மவாதி களெல்லோரும் சொல்லுகின்றனர்.

ஸ்லோகம்.

லோஹ மண்யாதி³ த்³ருஷ்டாந்த யுக்திபி⁴ர் யத் விசிந்தனம்
ததே³வ மனனம் ப்ராஹு: வாக்யார்த்த²ஸ்யோப ப்³ரும்ஹணம் (23)

வியாக்யானம்: - **லோஹமண்யாதி த்ருஷ்டாந்த யுக்திபி**: - இரும்பு ரத்தினம் முதலிய திருஷ்டாந்த யுக்திகளால், **யத்** - யாதொரு, **விசிந்தனம்** - சிந்தனையுள்ளதோ, **தத்ஏவ** - அதுவே, **வாக்யார்த்தஸ்ய** - வாக்யார்த்தத்தின், **உபப்ரும்ஹணம்** - உபப்ரும்ஹணமாகிய, மனனம் - மனனம் என்று, **ப்ராஹு**: - சொல்லுகின்றனர்.

பொழிப்புரை: - லோஹமணி முதலிய திருஷ்டாந்தங்களைக் கொண்டு புக்திகளால் சிந்தித்தலே வாக்யார்த்தத்தின் உபப்ரும்ஹணமாகிய மனனம் என்று சொல்லுகின்றனர்.

ஶ்லோகம்.

நிர்மமோ நிரஹங்கார: ஸம: ஸங்க³ விவர்ஜித:
ஸதா³ ஶாந்த்யாதி³ யுக்தஸ் ஸன் ஆத்ம னாத்மான மீக்ஷதே
யத் ஸதா³ த்⁴யான யோகே³ன தன் நிதி³த்⁴யாஸனம் ஸ்ம்ருதம்
(24)

வியாக்யானம்: - **நிர்மம்** - எனது எனும் பாவனை நீங்கியவனாய், **நிரஹங்கார:** - யான் எனும் பாவனையுமில்லா தவனாய், **ஸம:** - எல்லாவற்றிலும் ஸமபாவனை யுடையவனாய், **ஸங்கவர்ஜித**: - எந்த ஸங்கற்பமுமில்லாதவனாய், **ஸதா** - எப்போதும், **ஶாந்த்யாதி³ யுகதஸ் ஸன்** - சமம் தமம் முதலியவைகளை யுடையவனாய்க்கொண்டு, **ஸதா** - எப்போதும், **த்⁴யான யோகே³ன** - தியான் யோகத் தினால், **ஆத்மனி** - ஆத்மாவினிடத்திலேயே, (புத்தியினில்) **ஆத்மானம்** - ஆத்மாவை, **ஈக்ஷதே யத்** - காண்கின்றான் என்பது யாதோ, **தத்** - அது, **நிதி³த்⁴யாஸனம்** - நிதித்யாஸநம் என்று, **ஸ்ம்ருதம்** - கொள்ளப்படுவதாம்.

பொழிப்புரை: - எனது யான் எனும் பாவனைகளைய கற்றியவனாய் எல்லாவற்றிலும் ஸம்பாவனை யுடையவனாய் எந்த ஸங்கற்பப் பற்றுமிராதவனாய் எப்போதும் சமதமாதிகளை யுடையவனாய்க் கொண்டு ஸதா தியானயோகத்தினால் புத்தியினை உபக்ஷணமாய்க்கொண்டு ஆன்மாவைக் காண்கின்றானென்பதே நிதித்தி யாஸநம் என்னப்படும்.

ஶ்லோகம்.

ஸர்வ கர்ம க்ஷய வஶாத் ஸாக்ஷாத்காரோऽபி சாத்மன:
கஸ்ய சிஜ் ஜாயதே ஶீக்4ரம் சிர காலேன கஸ்யசித் (25)

வியாக்யானம்: - **ஆத்மன:** - ஆன்மாவின், **ஸாக்ஷாக்கார: அபி** - ஸாக்ஷாத்காரமும், **கஸ்யசித்** - எவனோ ஒருவனுக்கு, **ஸர்வகர்ம க்ஷயவசாத்** - ஸகல கர்மங்களும் நீங்கும் வசத்தால், **சீக்ரம்** - விரைவினில், **ஜாயதே** - உதிக்கின்றது, **கஸ்யசித்** - சிலமனிதனுக்கு, **சிரகாலேன** - பலகாலம் கழித்து உதிக்கின்றது.

பொழிப்புரை: - ஆத்ம ஸாக்ஷாத்காரமும் எவரோ ஒருவருக்கு ஸகலகர்ம ப்ரதிபந்தகங்களும் நீங்கவே விரைவினிலுதிக்கின்றது சிலருக்கு பல காலத்திற்குப் பின்னர் உதிக்கின்றது.

ஶ்லோகம்

கூடஸ்தா²னீஹ கர்மாணி கோடி ஜன்மார்ஜிதான்யபி
ஞானேனைவ விநஶ்யந்தி ந து கர்மாயுதை ரபி (26)

வியாக்யானம்: - **இஹ** - இந்த ஸம்ஸாரத்தினில், **கோடிஜந்மார்ஜிதாநி** - எண்ணிறந்த பலஜன்மங்களில் சம்பாதிக்கப் பட்டுள்ளனவாகிய, **கூடஸ்தாநி கர்மாணி அபி -** குவியலாயுள்ளகர்மங்களும், **ஜ்ஞாநேந ஏவ** - ஜ்ஞானத்தினா லேயே, **விநச்யந்தி** - விநாச மடைகின்றன, **கர்மாயுதை: அபி** - பலகோடி கர்மங்களாலும், **ந** - அழிகின்றனவல்ல.

பொழிப்புரை: - ஸம்ஸாரத்தில் பலகோடி ஜன்மங்களில் ஸம்பாதிக்கப் பட்டுள்ள கர்மக்குவியலும் ஜ்ஞானத்தினாலேயே நசிக்கின்றன எவ்வளவு கர்மங்களைச் செய்யினும் அழிவனவல்ல.

ஶ்லோகம்.

ஞானா தூ³ர்த்⁴வம் து யத்கிஞ்சித் புண்யம் வா பாப மேவ வா
க்ரியதே ப³ஹுவாऽல்பம் வா ந தேனாऽயம் விலிப்யதே (27)

வியாக்யானம்: - **ஞானத்** - ஞானோதயத்திற்கு, **ஊர்த்வம்** - மேல், (பிறகு) **புண்யம் வா** - புண்ணியமாவது, **பாபம்வா** - பாவமாவது, **யத்கிஞ்சித்** - யாதேனும், **பஹுவா** - ஏராளமாகவாவது, **அல்ப்பம் அபிவர** - அற்பமாகவாவது, **க்ரியதே** - செய்யப்படுகின்றதோ, **தேந** - அக்கர்மத்தினால், **அயம்** - இந்த ஞானியானவன், **ந விலிப்யதே** - பற்றப்படுகின்றதில்லை.

பொழிப்புரை: - ஞானோதயத்திற்குப் பின் புண்ணியமோ பாபமோ யாதேயினும் மிகுதியாவது ஸ்வற்பமாவது செய்யப்படின் அக்கர்மத்தால் ஞானியானவன் சிறிதும் பற்றப்படுகின்றதில்லை.

ஶ்லோகம்.

ஶரீராரம்ப[4]கம் யத்து ப்ராப்[3]த[4]ம் கர்ம ஜன்மின:
தத்[3] போ[4]கே[3]னைவ நஷ்டம் ஸ்யாத் ந து ஞானேன நஶ்யதி (28)

வியாக்யானம்: - **ஜன்மின:** - ஞானியினது, **ஶரீராம்பகம்** - தேகத்தை உண்டு பண்ணிய, **யத்** - யாதொரு, **ப்ராப்தம் கர்ம** - ப்ராப்தகர்மம் உளதோ, **தத்து** - அது, **போகேன ஏவ** - போகத்தினாலேயே, **நஷ்டம் ஸ்யாத்** - நாசமாகும், **ஞானேந்து** - ஞானத்தினாலெனின், **ந நஶ்யதி** - நாசமாகின்றதில்லை.

பொழிப்புரை: - ஞானியினது சரீரத்தைப் பயனாய்க்கொண்டுள்ள எந்த ப்ராப்த கர்மமுளதோ அஃது அதனால் புசிக்க வேண்டியனவாய் ஏற்கனவே ஏற்பட்டுள்ள போகங்களைப் புசிப்பதனாலேயே தீருமன்றி ஞானத்தினால் நாசமாகின்றதில்லை.

ஶ்லோகம்.

நிர்மோஹோ நிரஹங்காரோ நிர்லேப: ஸங்க[3] வர்ஜித:
ஸர்வ பூ[4]தேஷு சாத்மானம் ஸர்வ பூ[4]தானி சாத்மனி
ய: பஶ்யன் ஸஞ்சரதேஷ ஜீவன் முக்தோऽபி[4]தீ[4]யதே (29)

வியாக்யானம்: - **ய:** - எவன், **நிர்மோஹா:** - மோஹ நீங்கியவனும், **நிரஹங்கார:** - அஹங்கார மில்லாதவனும், **நிர்லேப:** - ஸம்பந்தமற்றவனும், **ஸங்க[3] வர்ஜித:** - ஸங்கற்பமற்றவனுமாய், **ஸர்வபூதேஷு** - ஸகலபூதங்களிலும், ஸகலபூதங்களிலும், **ஆத்மானம்** - ஆன்மாவையும், **ஆக்மநிச** - ஆனமாவிடத்திலும், **ஸர்வபூதாநிச** - ஸகலபூதங்களையும், **பஶ்யன்** - பார்த்துக்கொண்டு, **ஸஞ்சரதி** - ஸஞ்சரிக்கின்றானோ, **ஏஷ:** - இவன், **ஜீவன் முக்த:** - ஜீவன் முக்தனென்று, **அபிதீயதே** - சொல்லப்படுன்கிறான்.

பொழிப்புரை: - எவன் மோஹநீங்கியவனும், அஹங்காரமில்லாதவனும், ஸம்பந்தமற்றவனும் ஸங்கற்பமற்றவனுமாய் ஸகலபூதங்களிலும் ஆன்மாவையும் ஆன்மாவினில் ஸகல பூதங்களையும் பார்த்துக்கொண்டு ஸஞ்சரிக்கின்றானோ இவனே ஜீவன் முக்தனென்னப்படுகின்றான்.

ஶ்லோகம்.

அஹி நிர்ல்வயினீ யத்^{3}வத்^{3} த்^{3}ரஷ்டு: பூர்வம் ப^{4}ய ப்ரதா^{3}
ததோꞋஸ்ய ந ப^{4}யம் கிஞ்சித் தத்^{3}வத்^{3} த்^{3}ரஷ்டு ரயம் ஜன: (30)

வியாக்யானம்: - **அஹி நிர்ல்வயிநீ** - பாம்புச்சட்டை எனும் தோலானது, **பூர்வம்** - முன்னர் (ஸர்ப்பத்தின் தேஹத்திலிருக்கும்போது) **யத்^{3}வத்^{3}** - எப்படி, **த்^{3}ரஷ்டு**: - காண்போனுக்கு, **ப^{4}ய ப்ரதா^{3}** - பயத்தை உண்டாக்குவதோ, **தத**: - பிறகு, **அஸ்ய** - காண்போனுக்கு, **கிம்சித் ப^{4}யம் ந** - சிறிதும் பயமில்லையோ, **தத்வத்** - அதுபோல, **த்ரஷ்டு**: - காண்போனுக்கு, **அயம் ஜந**: - இச்சீவன் முக்தன் (என்றறிக.)

பொழிப்புரை: - பாம்புச் சட்டையானது பூர்வம் காண்பவனுக்குப் பயஹேது வாயும் தேஹத்திலிருந்து பிரிந்தபிறகு காண்போனுக்குப் பயஹேதுவல்லாத்துமா யிருக்கின்றதோ அவ்வாறே இச்சீவன் முக்தனும் காண்பவருக்கு ஆகின்றானென் றறிக.

ஶ்லோகம்.

யதா^{3} ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேꞋஸ்ய வஶம் க^{3}தா:
அத^2 மர்த்யோꞋம்ருதோ ப^{4}வத் யேதாவ த^{3}னுஶாஸனம் (31)

வியாக்யானம்: - **யே** - எவ்வாஸனைகள், **அஸ்ய** - இவனுக்கு, **வசந்தா**: - வசத்திலிருக்கின்றனவோ, **ஸர்வே காமா**: - அவ்வாஸனைகளெல்லாம், **யதா** - எப்போது, **ப்ரமுச்யந்தே** - முற்றுமொழிகின்றனவோ, **அத்** - பிறகு, **மர்த்ய** - மனிதன், **அம்ருத: பவதி** - முக்தனாகின்றான், **ஏதாவத்** - இவ்வளவே, **அனுஶாஸனம்** - சிக்ஷையாம்.

பொழிப்புரை: - இவனிடமுள்ள ஸகல வாஸனைகளும் எப்போது முற்று மொழிகின்றனவோ அதற்குப் பிறகே இம் மனிதன் முக்தனாகின்றான் இவ்வளவே சிக்ஷையாம்.

ஶ்லோகம்

மோக்ஷஸ்ய ந ஹி வாஸோꞋஸ்தி ந க்^{3}ராமாந்தர மேவ வா
அஜ்ஞாந ஹ்ருத^{3}யக்^{3}ரந்தி^{2} நாஶோ மோக்ஷ இதி ஸ்ம்ருத: (32)

வியாக்யானம்: - **மோக்ஷஸ்ய** - மோஷமெனும் பொருளுக்கு, **வாஸ**: - எங்கேயாவது வத்தல என்பது, **ந அஸ்திஹி** - இல்லவேயில்லை. **க்^{3}ராமாந்தரம் ஏவவா** - க்ராமாந்தரம் (வேறு கிராமத்திலிருத்தல்) என்பதும் இல்லை, **அஞ்ஞான**

ஹ்ருதய க்ரந்திநாச: - அஞ்ஞானமெனும் ஹ்ருதயக்ரந்தி நசித்தலே, **மோக்ஷ இதி** - மோக்ஷம் என்று, **ஸ்ப்ருக:** - கொள்ளப்பட்டது.

பொழிப்புரை: - மோக்ஷமென்பது எங்கேயோ கிராமாந்தரம் முதலியதில் இருத்தலென்பது இல்லவேயில்லை அஞ்ஞான ஹ்ருதயக்ரந்தி நர்சமே மோக்ஷமெனப் படுவதாம்.

ஶ்லோகம்.

வ்ருக்ஷாக்[3]ராத்ச்யுத பாதோ[3] ய: ஸ ததை[3]வ பதத்யத[4]:
தத்[3]வஜ் ஞானவதோ முக்திர் ஜாயதே நிஶ்சிதாபி து (33)

வியாக்யானம்: - **ய:** - யாதொருவன், **வ்ருக்ஷாக்[3]ராத்** - மரத்தினுனியினின் றும், **ச்யுதபாத:** - நழுவிய கால்களையுடையவனோ, **ஸ:** - அவன், **ததா ஏவ** - அப்போதே எப்படி, **அத** - கீழே, **பததி** - விழுகின்றானோ, **தத்வத்** - அது போல, **ஞானவத: அபி** - ஞானவானுக்கும், **முக்தி** - முக்தியோ எனின், **நிஶ்சிதா ஜாயதே** - நிச்சியிக்கப்பட்டதாகின்றது.

பொழிப்புரை: - மரத்தி னுனியினின்றும் தவறினவனுக்கு உடனே கீழ விழுதல் எங்ஙனமோ அங்ஙனமே, ஞானவானுக்கு முக்திப்பேறு நிச்சயிக்கப்பட்டதா கின்றது.

ஶ்லோகம்.

தீர்த்தே[2] சண்டா[3]ள கே[3]ஹே வா யதி[3] வா நஷ்ட சேதன:
பரி த்யஜன் தே[3]ஹ மேவம் ஞானா தே[3]வம் விமுச்யதே (34)

வியாக்கியானம்: - **தீர்த்தே** - தீர்த்தத்திலாவது, **சண்டா[3]ள கேஹவா** - நீசன் இல்லத்திலாவது, **நஷ்ட சேதன:** - அறிவிழந்தவனாய், **தேஹம்** - தேஹத்தை, **பரித்யஜன்** - விடுவானாயினும், **ஞானாத் ஏவ** - ஞானத்தினாலேயே, **விமுச்யதே** - முக்தியடைகின்றான்.

பொழிப்புரை: - தீர்த்தத்திலாயினும் சண்டாளன் வீட்டிலாயினும் அறிவிழந்த வனாய் எங்கு மரிக்கினும் ஞானவலியாயே முக்தனாகின்றான்.

ஶ்லோகம்.

ஸம்வீதோ யேன கேனாஶ்னன் ப[4]க்ஷயம் வா஽ப[4]க்ஷ்ய மேவ வா
ஶயானோ யத்ர குத்ராபி ஸர்வாத்மா முச்யதே஽த்ர ஸ: (35)

வியாக்யானம்: - **யேன கேன** - எதனாலாவது, (எவ்வஸ்திரத்தினாலாவது), **ஸம்வீத**: - மறைக்கப்பட்ட தேஹமுடையோனாய், **ப⁴க்ஷயம் வா** - புசிக்கத்தக்கதை யாவது, **அப⁴க்ஷயம் ஏவ வா** - புசிக்கத் தகாததையே யாவது, **அஶ்னன்** - புசிக்கின்றவனாய், **யத்ர குத்ர அபி** - எங்கேயாவது, **ஶயானோ** - படுக்கின்றவனா யிருக்கின்றாயினும், **ய:** - எவன், **ஸர்வாத்மா** - எல்லா மான்மாவாயுள்ளவனோ, **ஸ:** - அவன், **அத்ர** - இத்தேஹம் நீங்கியதும், **முச்யதே** - முக்தனாகின்றேன்.

பொழிப்புரை: - எதையாவது உடுத்திக்கொண்டும் பக்ஷயமோ அபக்ஷயமோ எதையாயினும் புசிக்கின்றவனும் எங்கேயாவது படுக்கின்றவனுமாயினும் எவன் ஸர்வமும் ஆத்மாவாய்க் கொண்டவனோ அவன் இத்தேஹ நீங்கவே முக்கதனாகின்றான்.

ஶ்லோகம்.

க்ஷீரா து³த்³த்³ருத மாஜ்யம் யத் க்ஷிப்தம் பயஸி தத்புன:
ந தேனைவைகதாம் யாதி ஸம்ஸாரே ஞானவாம் ஸ்ததா² **(36)**

வியாக்யானம்: - **க்ஷீராத்** - பாலினின்றும், **உத்ருதம்** - கடை ந்தெடுக்கப்பட் டதாகிய, **யத்** - யாதொரு, **ஆஜ்யம்** - நெய்யுளதோ, **தத் புந:** - அது மீண்டும், **பயஸி** - பாலினில், **க்ஷிபதம்** - போடப்பட்டதாயின், **தேநைவ** - அதனோடு, **ஏகதாம்** - ஒற்றுமையை, **ந ஏவ யாதி** - எப்படி யடைகின்றதில்லையோ, **ஞானவான்** - ஞானவானும், **ததா** - அப்படியே, **ஸம்ஸாரே** - ஸம்ஸாரத்தில் கலக்கின்றதில்லை.

பொழிப்புரை: - பாலினின்று கடைந்தெடுக்கப்பட்ட நெய் மீண்டும் அப்பாலினில் எப்படி ஒன்றாய்க்கலப்பதில்லையோ அப்படியே ஞானவானாகிய மனிதன் மீண்டும் ஸம்ஸாரத்தினில் சேருவதில்லை.

ஶ்லோகம்.

நித்யம் பட²தி யோsத்4யாய மிமம் ராம! ஶ்ருணோதி வா
ஸ முச்யதே தே³ஹ ப³ந்தா⁴ த³னாயாஸேன ராக4வ! **(37)**

வியாக்யானம்: - ராம: - ஓ ராமனே, **ய: -** எவன், **இமம்** - இந்த, **அத்யாயம்** - அத்யாயத்தை, **நித்யம்** - தினந்தோறும், **படதி** - படிக்கின்றானோ, **ஶ்ருணோதிவா** - அல்லது சிரவணஞ் செய்கின்றானோ, **ராகவ** - ஓ ராகவ, **ஸ:** - அவன், **தேகபந்தாத்** - தேகச்சிறையினின்றும், **அனாயாஸேன** - ஆயாஸமின்றி, **முச்யதே** - முக்தனாகி ன்றான்.

பொழிப்புரை: - ஓ ராமனே எவன் இவ்வத்தியாயத்தைத் தினந்தோறும் படனமாவது சிரவணமாவது செய்கின்றானோ, ஓ ராகவா அவன் தேஹச்கிறை யினின்றும் சுளுவாய் விடுபடுகின்றான்.

ஶ்லோகம்.

தத: ஸம்ஶய சித்தஸ்த்வம் நித்யம் பட² மஹீபதே!
அனாயாஸேன தேனைவ ஸர்வதா² மோக்ஷ மாப்ஸ்யஸி (38)

வியாக்யானம்: - **தத**: - ஆதலால், **ஸம்சயசித்த**: - ஸந்தேகசித்தமுடையோ னாகிய, **த்வம்** - நீ, **நித்யம்** - தினந்தோறும், **பட** - படிப்பாயாக, **மஹீபதே** - ஓ அரசனே, **ஸர்வதா²** - எப்படியாயினும், **தேந ஏவ** - அதனாலேயே, **அநாயாஸேந** - சிரமமின்றி, **மோக்ஷம்** - மோஷத்தை, **ஆப்ஸ்யஸி** - அடைவாய்.

பொழிப்புரை: - -ஆதலால் சந்தேக சித்தமுடையோனாகிய நீ தினந்தோறும் படிப்பாயாக. ஓ அரசனே அதனாலேயே சுளுவில் எவ்வாற்றானும் முக்தியடைவாய்.

பதின்மூன்றாவது அத்தியாயம்

முற்றிற்று.

பதினான்காவது அத்தியாயம்

பஞ்ச கோசோபர்ணனம்

ஸ்ரீராமர் சொன்னதாவது.

ஸ்லோகம்.

ப4க3வன்! யதி தே ரூபம் ஸச்சிதா3நந்த3 விக்3ரஹம்
நிஷ்களம் நிஷ்க்ரியம் ஶாந்தம் நிரவத்3யம் நிரஞ்ஜனம் (1)

ஸர்வத4ர்ம விஹீநம் ச மனோ வாசாம கோ3சரம்
ஸர்வ வ்யாபிதயாத்மான மீக்ஷதே ஸர்வத: ஸ்தி2தம் (2)

ஆத்ம வித்3யா தபோ மூலம் தத்3 ப்3ரஹ்மோபநிஷத் பரம்
அமூர்த்தம் ஸர்வ பூ4தாத்மாகாரம் காரண காரணம் (3)

யத்தத3த்ꜱரேஶ்ய மக்3ராஹ்யம் தத்3 பா3ஹ்யம் வா கத2ம் ப4வேத்?
அத்ரோபாய மஜானானஸ் தேன பின்னோꜱஸ்மி ஶங்கர! (4)

வியாக்யானம்: - **ப4க3வன்** - ஓ பகவனே, **தே** - உமது, **ரூபம்** - உருவமானது, **ஸச்சிதா3நந்த3 விக்3ரஹம்** - ஸச்சிதாநந்த வடிவமும், **நிஷ்களம்** - நிஷ்களம் (நிர வயவமும்), **நிஷ்க்ரியம்** - கிரியையில்லாததும், **ஶாந்தம்** - எவ்விதப் பயமுமில்லாததும், **நிரவத்3யம்** - குற்றமற்றுளதும், **நிரஞ்ஜனம்** - அஸங்கமும், **ஸர்வத4ர்ம விஹீநம்** - எந்தத்தன்மை யில்லாததும், **மனோ வாசாம்** - மனோ வாக்குகளுக்கு, **அகோ3சரம்** - விஷயமில்லாததும், **ஆத்மாநம்** - எந்த ஆத்மாவை, **ஸர்வ வியாபிதயா** - ஸர்வவியாபகத் தன்மையதாய், **ஈக்ஷதே** - காண்கின்றானோ (அங்கனம்); **ஸர்வத: ஸ்தி2தம்** - எங்குமுள்ளதும், **ஆத்ம வித்3யா தபோ மூலம்** - ஆத்மவித்தை தவம் இவைகளை ஞான ஸாதனமாய்க் கொண்டுள்ளதும், **உபநிஷத் பரம்** - உபநிஷதத்தின தாத்பரியமாயுள்ளதும், **அமூர்த்தம்** - மூர்த்தமல்லாததும், **ஸர்வ பூ4தாத்மாகாரம்** - ஸகல பூதாத்மவடிவமும், **காரண காரணம்** - காரணங்களுக்கும் காரணமும், **யத்** - யாதொன்று, **அத்ரேச்யம்** - காணக்கூடாததும், **அக்ராஹ்யம் யதி** - கிரஹிக்க வொணாதது மாயும் உள்ளதாயின், **தத்** - அத்தகைய, **ப்ரஹ்ம** - ப்ரும்மமானது, **கதம்வா** - எப்படித்தான், **க்ராஹ்யம்** - கிரஹிக்கக்கூடியதாய், **ப4வேத்** - ஆகும், **ஶங்கர** - ஓ சங்கரனே, **அதர** - இங்கு, **உபாயம்** - உபாயத்தை, **அஜானான:** - அறிகின்றவனல்லேன், தேன - ஆதலின், **பின்ன: அஸ்மி** - பேதமுடையோனா யிருக்கின்றேன்.

பொழிப்புரை: - ஓ பகவனே உமது ரூபம் ஸச்சிதாநந்த வடிவமும் நிஷ்களமும், நிஷ்கிரியமும், சாந்தமும், குற்றமற்றதும், அஸங்கமும், எத்தன்மையு மிலலாததும் மனோவாக்குகளுக் கெட்டாததுமாயுளதோ எந்த ஆன்மாவை ஸர்வ வியாபகத்தன்மையதாய்க் காண்கின்றானோ அங்ஙனம் எங்குமுள்ளதும் ஆத்ம வித்தை தவம் இவைகளால் காணப்படுவதும், உபநிஷதத்தின் தாத்பரியமாயுள்ளதும் மூர்த்தமல்லாததும் ஸகல பூதாத்மவடிவமும் காரணங்களுக்கும் காரணமும் காணக்கூடாததும் பற்ற ஒணாததுமாய் இங்ஙனம் உள்ளதாயின் அந்த ப்ரஹ்ம மானது எப்படித்தான் கிரஹிக்கக்கூடியதாகும் ஓ சங்கரனே இதற்குறிய உபாயத்தை யறியேனாதலின் பேதமுடையோனா யிருக்கின்றேன்.

சிவபெருமான் கூறினார்.

ஶ்லோகம்.

ஶ்ருணு ராம! ப்ரவக்ஷ்யாமி தத்ரோபாயம் மஹாபு^{4}ஜ
ஸகு^{3}ணோபாஸணாபி^{4}ஸ்து சித்தைகாக்^{3}ர்யம் விதா^{4}ய ச (5)

ஸ்தூ^{2}லாருந்த^{4}திகா ந்யாயாத் தத்ர சித்தம் ப்ரவர்த்தயேத்

வியாக்யானம்: - **மஹாபுஜ** - பெரும் தோளனாகிய, **ராம** - ஒராமா, **தத்ர** - அவ்விஷயத்தினில், **உபாயம்** - உபாயத்தை, **ப்ரவக்ஷ்யாமி** - சொல்லுகிறேன், **ஶ்ருணு** - கேட்பாயாக, **ஸகு^{3}ணோபாஸனாபி^{4}: து** - ஸகுணோபாஸனைகளாலே யே, **சித்தைகாக்^{3}ர்யம்** - சித்த ஏகாக்ரத்தன்மையை, **விதா^{4}ய ச** - செய்தும், **ஸ்தூல ஸௌராம் பிகாந்யாயாத்** - (வியக்தமாய்க் காணப்படும் கானலின் நீர்போன்ற) நியாயமாய், **தத்ர** - அதனில், **சித்தம்** - சித்தத்தை, **ப்ரவர்த்தயேத்** - பிரவர்த்திக்கச் செய்வானாக.

பொழிப்புரை: - பெருந்தோளனாகிய ஓ ராமா அதற்குபாயம் கூறுகின்றேன் கேழ்பாயாக ஸதனே பாஸனைகளால் சித்தை காக்கிரத்தன்மை ஸம்பாதித்து அபிவியக்த கானனீர் நியாயமாய் அதனில் சித்தத்தைப் பிரவர்த்திக்கச செய்ய வேண்டும்.

ஶ்லோகம்

தஸ்மின் னன்னமயே பிண்டே^{3} ஸ்தூ2லதே^{3}ஹே தனூப்^{4}ருதாம் (6)

ஜன்ம வ்யாதி^{4} ஜரா ம்ருத்யு நிலயே வர்த்ததே த்^{3}ருடா^{4}
ஆத்ம பு^{3}த்^{3}தி^{4} ரஹம் மானாத் கதா^{3}சித் நைவ ஹீயதே (7)

வியாக்யானம்: - **தனுப்4ருதாம்** - தேஹிகளுக்கு, **தஸ்மின்** - அந்த, **அன்ன மயே பிண்டே3** - அன்னவிகார பிண்டமும், **ஜன்ம வ்யாதி4 ஜரா ம்ருத்யு நிலயே** - ஜன்ம வியாதி ஜரைமரண மிவைகளுக் கிருப்பிடமுமாகிய, **ஸ்தூலதேஹே** - ஸ்தூல தேஹத்தினில், **அஹம் மானாத்** - அகங்காரத்தினால், **ஆத்ம பு3த்3தி4** - ஆந்ம புத்தியானது, **த்ருடா** - திடமாய், **வர்த்ததே -** இருக்கின்றது, **கதாசித** - ஒரு போதும், **நவிஹீயதே** - நீங்குகின்றதில்லை.

பொழிப்புரை: - பிராணிகளுக்கு அவ்வந்தமயமான பிண்டமும் ஜனன வியாதி ஜரா மரணங்களுக் கிருப்பிடமுமாகிய ஸ்தூல தேஹத்தினில் அஹங்காரத்தினால் ஆத்மபுத்தி திடமாய் இருக்கின்றது, ஒருபோதும் நீங்குகின்றதில்லை.

ஶ்லோகம்.

ஆத்மா ந ஜாயதே நித்யோ ம்ரியதே வா கத2ஞ்சன
ஸம் ஜாயதே஽ஸ்தி விபரிணமதே வர்த்3த4தே஽பி ச (8)

க்ஷயதே நஶ்யதீத்யேதே ஷட் பா4வா வபுஷ: ஸ்ம்ருதா:

வியாக்யானம்: - **ஆத்மா** - ஆன்மாவானவன், **ந ஜாயதே** - தோன்றுகின்ற தில்லை, **நித்ய:** - நித்தியன், **கத2ம்சன** - எவ்வாறானும், **நவாம்ரியதே** - மரிக்கின்றதில்லை, **யத்** - யாதொருகாரணகதினால், **ஜாயதே -** தோன்றுகின்றது, **அஸ்தி** - இருக்கின்றது, **விபரிணமதே** - மாறுகின்றது, **வர்த்ததே** - வளருகின்றது, **க்ஷீயதே** - குறைகின்றது, **நச்யதி** - நாசமடைகின்றது, **இதி ஏதே** - எனுமிவைகளா கிய, **ஷட்பாவா:** - ஆறு தன்மைகளும், **வபுஷ:** - தேகத்திற்கே, **ஸ்ம்ருதா:** - கொள்ளப்பட்டதோ.

பொழிப்புரை: - ஆன்மா உற்பத்தியாகின்றதில்லை நித்தியம் எவ்வாற்றானும் அழிகின்றதில்லை யாதொரு காரணத்தினால் தோன்றல், இருத்தல், மாறுதல், வளருதல், குறைதல், நசித்தல் எனும் இவ்வாறு பாவவிகாரங்களும் தேகத்திற்கே யுள்ளனவோ.

ஶ்லோகம்.

ஆத்மனோ ந விகாரித்வம் க4டஸ்த2 நப4ஸோ யதா2
ஏவமாத்மா வபுஸ்தஸ்மா தி3தி ஸஞ்சிந்தயேத்3 பு3த4: (9)

வியாக்யானம்: - **யதா2 கடஸ்த ந பஸ:** - எப்படி குடத்திலுள்ள ஆகாயத்திற் கோ அப்படியே, **ஆத்மன:** - ஆத்மாவுக்கு, **விகாரித்வம்** - விகாரப்படும் தன்மை, **ந** - இல்லை, **ஏவம்** - இவ்விதம், ஆத்மா - ஆன்மாவானவன், **அவபு:** - தேகத்திற் கத்தியன், **இதிபுத:** - அறிவாளன், **ஸம்சிந்தயேத்** - அறியவேண்டும்.

பொழிப்புரை: - குகடத்தி லிருக்கும் ஆகாயத்திற்குப்போலவே ஆன்மாவுக்கு விகாரித்தன்மை இல்லை இவ்வாறு ஆன்மா தேகத்திற் கன்னியனென்று சிந்திக்க வேண்டும்.

ஶ்லோகம்.

மூஷா நிக்ஷிப்த ஹேமாப⁴: கோஶ: ப்ராணமயோऽத்ர து
க்ஷுத் பிபாஸா பரா பூ⁴தோ நாऽயமாத்மா ஜடோ³ மத: (10)

வியாக்யானம்: - **மூஷா நிக்ஷிப்த ஹேமாப**: - அச்சினில் வார்க்கப்பட்ட பொன்போன்றதும், **க்ஷுத் பிபாஸா பரா பூத**: - பசிதாகங்களால் ஆகுலப்பட்டது மாகிய, **கோச:** - கோசமானது, **ப்ராணமய:** - ப்ராணமயம், **பவேத்** - ஆகும், **அயம்** - அது, **யத**: - யாதொரு காரணத்தால், **ஜட:** - அறிவற்ற, (ஜடமோ) ஆதலால் இது, **ஆத்மா** - ஆன்மா, **ந** - அல்ல.

பொழிப்புரை: - அச்சினில வார்க்கப்பட்ட பொன்போன்றதும் பசிதாகங்களால் வ்யாகுலப்பட்டதுமாகிய கோசமானது ப்ராணமயமென்பதாம் இது ஜடமாதலின் ஆன்மாவல்ல.

ஶ்லோகம்.

சித்³ரூப ஆத்மா யேநைவ ஸ்வம் தே³ஹ மபி⁴பஶ்யதி
ஆத்மைவாஹம் பரம் ப்³ரஹ்ம நிர்லேப: ஸுக² நீரதி⁴: (11)

வியாக்யானம்: - **ஆத்மா** - ஆன்மா, **சித்ரூப:** - அறிவுவடிவம், **யேன ஏவ** - எதனாலேயே, **ஸ்வதேகம்** - தனது தேகத்தை, **அபி⁴பஶ்யதி** - முழுதும் அறிகின்ற தோ, **நிர்லேப:** - சம்பந்தமற்றதும், **ஸுக² நீரதி**: - ஆனந்தக் கடலுமாகிய, **பரம்ப்ரும்ஹ** - பரப்ரும்ஹமானது, **ஆத்மா ஏவ ஹி** - ஆன்மாவே அன்றோ.

பொழிப்புரை: - ஆன்மா அறிவுவடிவமே எதனாலேயே தனது தேகம் முழுதும் அறிகின்றதோ அஸங்கமும் ஆனந்த நிதியுமாகிய பரப்ரும்ஹமானது ஆன்மாவேயன்றோ.

ஶ்லோகம்.

ந தத³ஶ்னாதி கிஞ்சைனம் ந தத³ஶ்னாதி கஶ்சன (12)

வியாக்யானம்: - **கிஞ்ச** - எதனையும், **தத்** - அது, **ந அச்நாதி** - புசிக்கின்றதில்லை. **தத் ஏதத்** - அவ்விதனை, **யத்கிஞ்சந** - யாதா மொன்றும், **நச்நாதி** - புசிக்கின்றதில்லை.

பொழிப்புரை: - அது எதனையும் புசிக்கின்றதில்லை யாதுமதனை புசிக்கின்ற தில்லை.

ஶ்லோகம்.

தத: ப்ராணமயே கோஶே கோஶோsஸ்த்யேவ மனோமய:
ஸ ஸங்கல்ப விகல்பாத்மா பு^{3}த்^{3}தீ^{4}ந்த்^{3}ரிய ஸமாயுத: (13)

வியாக்யானம்: - **தத**: - இனி, **ப்ராணமயே** - ப்ராணமயமாகிய, **கோசே -** கோசத்தில், **மனோமய:** - மனோமயமாகிய, **கோச**: - கோசமானது, **அஸ்தி** - உள்ளது, **ஸ:** - அக்கோசமானது, **புத்தீந்த்ரியஸமாயுத**: - ஞாநேந்த்ரியங்களுடன் கூடியதாகிய, **ஸங்கல்ப்ப விகல்ப்பாத்மா** - ஸங்கல்ப்ப விகல்ப்ப வடிவமாகிய மனமேயாம்.

பொழிப்புரை: - அதன் பின்னர் பிராணமய கோசத்தில் மனோமயகோச முளது மனோமயகோசமாவது ஞானேந்திரியங்களோடு கூடியதாகிய மனமேயாம்,

ஶ்லோகம்.

காம: க்ரோத^{4}ஸ்ததா^{2} லோபோ^{4} மதோ^{3} மாத்ஸர்ய மேவ ச
மோஹஶ்சேத் யரி ஷட்^{3} வர்க்கோ^{3} மமதேச்சா^{2}த^{3}யோsபி ச (14)

மனோமயஸ்ய கோஶஸ்ய த^{4}ர்மா ஏதஸ்ய தத்ர து
யா கர்ம விஷயா பு^{3}த்^{3}தி^{4}: வேத^{3} ஶாஸ்த்ரார்த்த^{2} நிஶ்சிதா (15)

ஸா து ஞானேந்த்ரியை: ஸார்த்^{3}த^{4}ம் விஞ்ஞானமய கோஶத:
இஹ கர்த்ருத்வாsபி^{4}மானீ ஸ ஏவ து ந ஸம்ஶய: (16)

வியாக்யானம்: - **காம**: - இச்சை, **க்ரோத**: - கோபம், **லோப**: - உலோபம் (தனது பொருள் நீங்க மனம்சகிக்காதிருத்தல் **மோஹ**: - அறிவின்மை, **மாத்ஸர்யம் ஏவ ச** - மாச்சர்யம் (பொறாமை) **மத: ச** - மதமும், **இதி** - ஆகிய இந்த, **அரிஷட்வர்க**: - அறுவகைக் கூட்டமும், **மமதேச்சாதய: அபி வா** - மமதை இச்சைமுதலியனவும், **ஏதஸ்ய** - இந்த, **மனோமயஸ்ய** - மனோமயமாகிய, **கோசஸ்ய** - கோசத்தின், **தர்மா**: - தர்மங்களாம், **தத்ர து** - அம்மனோமயகோசத்திலேயே, **வேத^{3} ஶாஸ்த்ரார்த்த^{2} நிஶ்சிதா** - வேதசாஸ்த்ரார்த்தங்களால் நிச்சயிக்கப்பட்டதும், **கர்மவிஷயா** - செய்கையை விஷயமாய்க் கொண்டதுமாகிய, **யா** - யாதொரு, **புத்தி**: - புத்தி உளதோ, **ஸாது** - அதுவே, **ஞாநேந்தரியை: ஸார்த்தம்** - ஞாநேந்த்ரியங்க ளோடு கூடி, **விக்ஞானமய கோஶத**: - விக்ஞானநமய கோசமென சொல்லப்

பட்டுளது, **இஹ** - இத்தேகத்தினில், **கர்த்ருத்வாடபி4மானி** - கர்த்ருத்வாபி, மானமுடையவன், **ஸ ஏவ** - அவனேயாம், ஸம்ஶய: ந - இதில் ஸம்சயமில்லை.

பொழிப்புரை: - காமம், குரோதம், லோபம், மோஹம், மாச்சரியம், மதம் எனும் இவ்வறுவகை பகைக்கூட்டமும் மமதை விருப்பம் முதலியனவும் இந்த மனோமயகோசத்தின் தர்மங்களே யாம் இனி அதனில் வேதசாஸ்திரார்த்தத்தை நிச்சையிப்பதும் கர்மாவை விஷயமாய்க் கொண்டதுமாகிய புத்தியே ஞானேந்த்ரிய ங்களோடு கூடி விக்ஞாநமய கோசமென்பதாம் இத்தேகத்தினில் கர்த்ருத்வாபிமான முடையதுமிதுவே சம்சயமில்லை.

ஶ்லோகம்.

இஹாமுத்ர க3தி ஸ்தஸ்ய ஸ ஜீவோ வ்யாவஹாரிக:
வ்யோமாதி3 ஸாத்விகாம்ஶேப்4யோ ஜாயந்தே தீ4ந்த்3தரியாணி து
(17)

வியாக்யானம்: - **தஸ்ய** - அந்த விக்ஞாந மயகோசனுக்கு, **இஹாமுத்ர க3தி**: - இங்குமங்கும் சஞ்சாரமாம், **ஸ:** - அவனே, **வ்யாவஹாரிக:** - வ்யவஹாரத்தில் சம்பந்தப் பட்டவனாகிய, **ஜீவ:** - ஜீவனாம், **வ்யோமாதி ஸாத்விகாம்சேப்ய:** - ஆகாயம் முதலியவைகளின் ஸத்வாம்சங்களினின்றும், **தீ4ந்த்3ரியாணி** - ஞனேந்திரியங்கள், **ஜாயந்தே** - தோன்றுகின்றன.

பொழிப்புரை: - அந்த விக்ஞாந மயகோசத்திற்கே லோகாந்தர கதாகதிகளாம் அவனே வ்யாவஹாரிகனாகிய ஜீவனாம் ஆகாயம் முதலியவைகளின் ஸத்வாம் சங்களினின்றும் ஞாநேந்திரியங்கள் தோன்றுகின்றன.

ஶ்லோகம்.

வ்யோம்ன: ஶ்ரோத்ரம் பு4வோ க்4ராணம் ஜலாஜ் ஜிஹ்வாSத2 தேஜஸ:
சக்ஷுர் வாயோ ஸ்த்வ கு3த்பன்னா தேஷாம் பௌ4திகதா தத: (18)

வியாக்யானம்: - **வ்யோம்ன:** - ஆகாயத்திலிருந்து, ஶ்ரோத்ரம் - சுரோத்ரேந்திரியமும், **பு4வ:** - பிருதிவியிலிருந்து, **க்ருணம்** - நாசிகேந்திரியமும், **ஜலாத்** - ஜலத்தினின்றும், **ஜிஹ்வா** - ஜிஹ்வேந்திரியமும், **தேஜஸ:** - தேஜஸில் நின்றும், **சக்ஷு: -** சக்ஷுரிந்திரியமும், **வாயோ:** - வாயுவினின்றும், **த்வக்** - த்வகிந்திரியமும், **உத்பன்னா** - உற்பன்னமாகியது, **தத:** - ஆதலால், **தேஷாம்** - அவைகளுக்கு, **பௌதிகதா** - பௌதிகத்வம் உளதென்பதாம்.

பொழிப்புரை: - ஆகாயத்திலிருந்து சுரோத்திரேந்திரியமும் ப்ருதிவியிலிருந்து நாசிகையும் அப்புவிலிருந்து ஜிஹ்வையும் தேஜவிலிருந்து சக்ஷுவும் வாயுவிலி ருந்து த்வக்கும் தோன்றியது ஆதலின் அவைகளை பூதவிகாரங்க ளென்பதாம்.

ஸ்லோகம்.

வ்யோமாதீ³னாம் ஸமஸ்தானாம் ஸாத்விகாம்ஶேப்⁴ய ஏவ து
ஜாயதே பு³த்³தி⁴ மனஸீ பு³த்³தி⁴ஸ் ஸ்யான் நிஶ்சயாத்மிகா (19)

வியாக்யானம்: - **வ்யோமாதீ³னாம்** - ஆகாயம் முதலியவைகளாகிய, **ஸமஸ்தானாம்** - எல்லா பூதங்களின், **ஸாத்விகாரஶேப்⁴ய: ஏவ** - ஸத்துவாம் சங்களினின்றே, **புத்திமனஸீ** - புத்திமனங்கள், **ஜாயதே** - உண்டாகின்றன, **புத்தி** - **நிஶ்சயாத்மிகா ஸ்யாத்** - நிச்சயவடிவமாம்.

பொழிப்புரை: - ஆகாயமுதலிய எல்லா பூகங்களின் சத்துவாம் சங்களினி ன்றே புத்திமனங்கள் தோன்றுகின்றன. புத்தியாவது நிச்சயவடிவமேயாம்.

ஶ்லோகம்.

வாக் பாணி பாத³பாயூபஸ்தா²னி கர்மேந்த்³ரியாணி து
வ்யோமாதீ³னாம் ரஜோம்ஶேப்⁴ய: வ்யஸ்தேப்⁴யஸ்தான் யனுக்ரமாத் (20)

வியாக்யானம்: - **தா²னி** - அந்த, வாக் பாணி பாத3பாயூபஸ்தா2னி - வாக்பாணிபரதம் அபானத்துவாரம் குஹ்யாவயவம் எனும் இவைகளாகிய, **கர்மேந்த்³ரியாணி து** - கர்மேந்திரியங்களோ வெனின், **வ்யோமாதீநாம்** - ஆகாயம் முதலியவைகளின், **வ்யஸ்தேப்ய:** - தனித்துள்ளவைகளாகிய, **ரஜோம்சேப்ய:** - ரஜோ அம்சங்களினின்றும், **அனுக்ரமாத்** - முறையே உண்டாகின்றன.

பொழிப்புரை: - அவ் வாக்பாணிபாத பாயுகுஹ்யங்களென்னும் கர்மேந்திரியங்கள் ஆகாயம் முதலிய பூதங்களின் பிரத்யேகரஜோம்சங்களினின்றும் முறையே தோன்றுகின்றன.

ஶ்லோகம்.

ஸமஸ்தேப்⁴யோ ரஜோம்ஶேப்⁴ய: பஞ்ச ப்ராணாதி³ வாயவ:
ஜாயந்தே ஸப்த த³ஶக மேவம் லிங்க³ ஶரீரகம் (21)

வியாக்யானம்: - **ப்ராணாதிவாயவ:** - பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன் எனும் வாயுக்கள், **பஞ்ச** - ஐந்தும், **ஸமஸ்தேப்ய:** - சேர்ந்துள்ள வைகளாகிய, **ரஜோம்சேப்ய:** - ரஜோம்சங்களினின்றும், **ஜாயந்தே** - தோன்றுகின்றன, **ஏவம்** - இங்ஙனம் (கூறிய), **ஸப்ததசகம்** - பதினேழும், **லிங்கசரீரகம்** - லிங்கசரீரம் என்பதாம்.

பொழிப்புரை: - பிராணாதி வாயுக்களைந்தும் அப்பூதங்களின் சேர்ந்துள்ள ரஜோம்சங்களி னின்றும் தோன்றின. இப்பதினேழு தத்துவமும் லிங்கசரீரம் என்பதாம்.

ஶ்லோகம்.

ஏதத் லிங்க^{3} ஶரீரம் து தப்தாய: பிண்ட^{3}வத் யத:
பரஸ்பராऽத்யாஸ யோகா^{3}த் ஸாக்ஷி சைதன்ய ஸம்யுதம் (22)

வியாக்யானம்: - **ஏவம்** - இந்த, **லிங்க^{3} ஶரீரம் து** - லிங்கசரீரமே எனின், **யத:** - யாதொரு காரணத்தினால், **பரஸ்பராத்யாஸ யோகா^{3}த்** - ஒற்றுமைப்பட்டுக் கற்பனையினால், **தப்தாய: பிண்டவத்** - காய்ச்சிய இரும்புத் துண்டம்போல், **ஸாக்ஷி சைதந்ய ஸம்யுதம்** - ஸாக்ஷியாகிய அறிவோடு கூடியதாகின்றது.

பொழிப்புரை: - இந்த லிங்கசரீரமானது யாதொருகாரணத்தினால் ஒன்றோடொன்றின் ஒற்றுமைப்பட்டுக் கற்பனையினால் காய்ச்சிய இருப்புத்துண்டம் போல ஸாக்ஷி சைதன்யத்தோடு கூடியதாகின்றது.

ஶ்லோகம்.

ததா^{3}னந்தமய: கோஶோ போ^{4}க்த்ருத்வம் ப்ரதி பத்^{3}யதே
வித்^{3}யா கர்ம ப^{2}லாதீ^{3}னாம் போ^{4}க்தேஹாமுத்ர ஸ ஸ்ம்ருத: (23)

வியாக்யானம்: - **ததா^{3}னந்தமய: கோஶ:** - அவ்வானந்த மயமாகிய கோசம், **போக்த்ருத்வம்** - போக்தாவாயிருக்கும் தன்மையை, **ப்ரதிபத்யதே** - அடைகின்றது, **ஸ:** - அவனே, **வித்^{3}யா கர்ம பலாதீ^{3}னாம்** - உபாஸ்தி கர்மப்பயன் முதலியவை களை, **இஹாமுத்ர** - இம்மையிலும் மறுமையிலும், **போக்தா** - புசிப்பவன், **ஸ்ம்ருத:** - என்று சொல்லப்பட்டவன்.

பொழிப்புரை: - அவ்வானந்தமாகிய கோசம் போக்திருத்துவத்தை யடைகின்றது. அவனே இம்மையிலும் மறுமையிலும் உபாஸ்தி கரும பயன் முதலியவைகளைப் புசிப்பவன் எதிச் சொல்லப்படுகின்றது.

ஶ்லோகம்.

யதா^{3}த்யாஸம் விஹாயைஷ: ஸ்வ ஸ்வரூபேண திஷ்ட^{2}தி
அவித்^{3}யா மாத்ர ஸம்யுக்த: ஸாக்ஷ்யாத்மா ஜாயதே ததா^{3} (24)

வியாக்யானம்: - **ஏஷ:** - இவ்வான்மா, **யதா** - எப்போது, **அத்யாஸம்** - ஒற்றுமைப்பட்டு மயக்கத்தை, **விஹாய** - விடுத்து, **ஸ்வ ஸ்வரூபேண** - தன்

நிஜரூபத்தோடு மாத்திரம், **திஷ்ட[2]தி** - இருக்கின்றனோ, **ததா** - அப்போது, **அவித்யா மாத்ர ஸம்யுக்த:** - அவித்தை மாத்திரத்தோடு கூடியவனாய், **ஸாக்ஷ்யாத்மா** - ஸாக்ஷிவடிவனாக, **ஜாயதே** - ஆகின்றான்.

பொழிப்புரை: - இவ்வான்மா எப்போது அத்தியாஸத்தை விடுத்து தன் நிஜரூபத்தோடு மாத்திர மிருக்கின்றானோ அப்போது அவித்தைமாத்திரத்தோடு கூடியவனாய் ஸாக்ஷி வடிவனாகின்றான்.

ஶ்லோகம்.

த்[3]ருஷ்டாந்த: கரணாதீ[3]னா மனு பூ[4]தே: ஸ்ம்ருதே ரபி
அதோऽந்த:கரணா த்[4]யாஸா னத்[4]யாஸித்வேன சாத்மன:
போ[4]க்த்ருத்வம் ஸாக்ஷிதா சேதி த்[3]வைத[4]ம் தஸ்யோப பத்[3]யதே (25)

வியாக்யானம்: - **அந்த:கரணாதீநாம்** - அந்தக்கரணம் முதலியவைகளுக்கும், **அனு பூ[4]தே:** - அநுபவத்திற்கும், **ஸ்ம்ருதே: அபி** - ஸ்மரணத்தி (நினைவிற்கும், **த்ரஷ்டா** - ஸாஷி (காண்போன்), **அத:** - ஆதலால், **அந்த கரணாத்யாஸாத்** - அந்தக்கரணத்தோடு அத்தியாஸத்தினால், **ஆத்மா:** - ஆன்மாவுக்கு, **அத்யாஸித்வேனச** - அத்தியாஸத்தை யுடையதாயிருக்கும் தன்மையாலும், **போக்த்ருத்வம்** - போக்தாவாக இருக்கும் தன்மை, **ஸாக்ஷிதாச** - ஸாக்ஷியாயி ருக்கும் தன்மை, **இதித்வைதம்** - எனுமிங்கனம் இருவகையாயிருத்தல், **தஸ்ய** - அவனுக்கு, **உபபத்யதே** - ஒவ்வுவதாம்.

பொழிப்புரை: - அந்தக்கரணம் முதலியவைகளுக்கும் அனுபவத்திற்கும் நினைவிற்கும் த்ரஷ்டாவாதலால் அந்தக்கரணத்தோடு அத்தியாஸத்தினால் ஆன்மாவுக்கு அத்தியாஸத்தை யுடையதாயிருக்கும் தன்மையாலும் போக்திருத் துவம் ஸாக்ஷித்வம் எனும் இருவகைத் தன்மைகளும் அவ்னுக்குப் பொருந்துவதாம்.

ஶ்லோகம்.

ஆதபஶ்சாபி தச்சா[2]யா தத் ப்ரகாஶே விராஜதே
ஏகோ போ[4]ஜயிதா தத்ர போ[4]க்தாऽன்ய: கர்மண: ப[2]லம் (26)

க்ஷேத்ரஜ்ம் ரதி[2]னம் வித்[3]தி[4] ஶரீரம் ரத[2]மேவ ச

வியாக்யானம்: - ஆதப:ச - வெய்யிலும், **தத்சாயா** - அதன் பிரதிபிம்பமும் (நிழலும்), **தத் ப்ரகாஶே** - அதன் பிரகாசத்திலேயே, **விராஜதே** - விளங்குகின்றது. **தத்ர** - ஆண்டு, **ஏக:** - ஒருவன், **போஜயிதா**- புசிக்கச்செய்வோன், **அந்ய:** - மற்றொருவன், **கர்மண:** - கர்மாவின், **பலம்** - பயனை, **புங்தே** - புசிக்கின்றான்.

க்ஷேத்ரக்ஞும் - ஆன்மாவை, **ரதிநம்** - ரதத்திலுள்ளவனாகவும், **சரீரம்** - சரீரத்தை, **ரதம் ஏவ து** - ரதமாகவேயும், **வித்தி** - அறிவாயாக.

பொழிப்புரை: - வெய்யிலும் அதன் பிரதிபிம்பமும் அதன் பிரகாசத்திலேயே விளங்குகின்றது. ஆண்டு ஒருவன் பிரோகன் மற்றொருவன் கர்மபலத்தைப் புசிப்பவன். ஆன்மாவை ரதத்தை யுடையோன் எனவும் சரீரத்தை ரதமே எனவும் அறிவாயாக.

ஶ்லோகம்

பு^{3}த்^{3}தி^{4}ம் து ஸாரதி^{2}ம் வித்^{3}தி^{4} ப்ரக்^{3}ரஹம் து மனஸ ததா^{2} (27)

இந்த்^{3}ரியாணி ஹயான் வித்^{3}தி^{4} விஷயா ஸ்தேஷு கோ^{3}சரா:

வியாக்யானம்: - **பு^{3}த்^{3}தி^{4}ம்து** - புத்தியோ வெனில், **ஸாரதிம்** - தேர்ப்பாக னென, **வித்^{3}தி^{4}** - அறி, **மன:** - மநஸை, **ப்ரக்ரஹம்து** - கடிவாளமாகவும், **ததா** - அவ்வாறு, **இந்திரியாணி** - இந்திரியங்களை, **ஹயான்** - குதிரைகளாகவும், **வித்தி** - அறி, **விஷயா:** - சப்தஸ்பர்சம்முதலிய பொருள்கள், **தேஷு** - ஆண்டு, **கோ^{3}சரா:** - செல்ல வேண்டிய இடங்களாக அறியத்தக்கது.

பொழிப்புரை: - புத்தியை தேர்ப்பாகனாகவும், மனஸை கடிவாளமாகவும் இந்திரியங்களை குதிரைகளாகவும் அறி. சப்தஸ்பர்சம் முதலிய பொருள்கள் ஆண்டு செல்ல வேண்டிய இடங்கள் எனவும் அறியத்தக்கது.

ஶ்லோகம்.

இந்த்^{3}ரியைர் மனஸா யுக்தம் போ4க்தாரம் வித்3தி4 பூருஷம் (28)

ஏவம் ஶாந்த்யாதி^{3} யுக்த: ஸன் உபாஸ்தே ய: ஸதா^{3} த்^{3}விஜ:
உத்^{3}கா^{4}ட்யோத்^{3}கா^{4}ட்யைக மேகம் யதை^{2}வ கத^{3}லீதரோ: (29)

வல்கலானி தத: பஶ்சாத்லபதே ஸார முத்தமம்
ததை^{2}வ பஞ்ச கோஶேஷு மன: ஸம்க்ராமயன் க்ரமாத் (30)

தேஷாம் மத்^{4}யே தத: ஸார மாத்மான மபி விந்த^{3}தி (31)

வியாக்யானம்: - **இந்த்ரியை**: - இந்திரியங்களோடும், **மனஸா** - மனஸோடும், **யுக்தம்** - கூடிய, **பூருஷம்** - ஆன்மாவை, **போக்தாரம்** - போக்தா என, **வித்தி** - அறிக, **ஏவம்** - இவ்வாறு, **ஶாந்த்யாதி யுகத: ஸன்** - சமம்

முதலியவைகளை யுடையவனாய்க்கொண்டு, **ஸதா** - எப்போதும், **ய: த்விஜ:** - எந்த அந்தணன், **உபாஸ்தே** - உபாசிக்கின்றானோ, **யதா ஏவ** - எங்ஙனம், **கதலீதரோ:** - வாழைமரத்தின், **வல்கலானி** - பட்டைகளை, ஏகமேகம் - ஒவ்வொன்றாய், **உத்காட்ய உத்காட்ய** - பிரித்து பிரித்து, **தத:பச்சாத்** - அதன் முடிவினில், **உத்தமம்** - சிறந்த, **ஸாரம்** - தண்டை, **லபதே** - அடைகின்றானோ, **ததா ஏவ** - அங்ஙனமே, **பஞ்ச கோஶேஷு** - பஞ்ச கோசங்களில், **மன:** - நமஸ்ஸை, **க்ரமாத்** - முறையே, **ஸங்க்ராமயன்** - நன்கு செலுத்துகின்றவ னாய்க்கொண்டு, **தத:** - அதன்பின்னர், **தேஷாம்** - அக்கோசங்களின், **மத்⁴யே** - நடுவினில் உள்ள, **ஸாரம்** - சாரமாகிய, **ஆத்மாநம் அபி** - ஆன்மாவையும், **விந்த³தி** - அடைகின்றான்..

பொழிப்புரை: - இந்திரியங்களோடும் மனஸோடும் கூடிய ஆன்மாவையே போக்தாவென்றறி. இவ்விதம் சமம் முதலியவைகளை யுடையவனாய்க்கொண்டு எவ்வந்தணன் எப்போதும் உபாஸிக்கின்றானோ எங்ஙனம் வாழைமரத்தின் பட்டைகளைத் தனித்தனியே ஒவ்வொன்றாகப் பிரித்துப் பிரித்து தடுக்கின் அதன் நடுவினில் உள்ள தண்டை யடைவானோ அவ்வாறே பஞ்சகோசங்களில் அறிவை நன்கு செலுத்துகின்றவனாய்க்கொண்டு ஒன்றொன்றாகத் தள்ளுவானாயின் அவைகளின் நடுவினிலுள்ள ஸாரமாகிய ஆன்மாவை அடைகின்றான்.

ஶ்லோகம்.

ஏவம் மன: ஸமாதா⁴ய ஸம்யதோ மனஸி த்³விஜ:
அத² ப்ரவர்தயேச் சித்தம் நிராகாரே பராத்மனி (32)

வியாக்யானம்: - **ஏவம்** - இவ்வாறு, **ஸம்யத:** - இந்திரியங்களை யடக்கியவனாய், **மனஸி** - மனஸிலேயே, **மன:** - மனஸை, **ஸமாதாய** - ஸமாதானம் செய்தவனாய்க்கொண்டு, **அத** - அதன் பின்னர், **சித்தம்** - சித்தத்தை, **நிராகாரே** - அருவனாகிய, **பராத்மனி** - பரமான்மாவினிடம், **ப்ரவர்த்தயேத்** - செலுத்துவோனாகுக.

பொழிப்புரை: - இவ்வாறு இந்திரியங்களை அடக்கி மனஸிலேயே மனஸையும் அடக்கும் அந்தணன் அதன் பின்னர் சித்தத்தை அருவனாகிய பரமான்மாவிடம் செலுத்துவோனாகுக.

ஶ்லோகம்.

ததோ மன: ப்ரக்³ருஹ்ணாதி பராத்மான கேவலம்
யத்த த³த்³ரேஶ்ய மக்³ராஹ்ய மஸ்தூ²லாத்³ யுக்தி கோ³சரம் (33)

வியாக்யானம்: - **தத**: - அதன்பிறகு, **மன**: - மனமானது, **கேவலம்** - எத்தன்மையு மிராதவனும், **அத்ரேச்யம்** - காணமுடியாததும், **அக்ராஹ்யம்** -

அடைய ஒண்ணாதவனும், **அஸ்தூலாத் யுக்திகோசரம்** - அஸ்தூலம் முதலிய சொற்களுக்கு இலக்கியமாயுள்ளவனும், **பராத்மாநம்** - பரமான்மாவை, **பரக்ருஹ்ணாதி** - உள்ளபடி அறிந்து கொள்ளுகின்றது.

பொழிப்புரை: - அதன்பின்னர் மனமானது எத்தன்மையும் இராதவனும் காண ஒண்ணாதவனும் அடைய ஒண்ணாதவனும் அஸ்துலம் முதலிய சொற்களுக் கிலக்கியமாயுள்ளவனுமாகிய பரமான்மாவை உள்ளபடி அறிந்துகொள்ளுகின்றது.

ஶ்லோகம்.

ஸ்ரீ ராமர் சொன்னார்.

ப^{4}க^{3}வன்! ஶ்ரவணே நைவ ப்ரவர்த்தந்தே ஜனா: கத^{2}ம்
வேத^3 ஶாஸ்த்ரார்த்த^2 ஸம்பன்னா யஜ்வான ஸத்ய வாதி^{3}ன: (34)

ஶ்ருண்வந்தோऽபி ததா^{2}த்மானம் ஜானதே நைவ கேசன
ஞாத்வாபி மன்வதே மித்^{2}யா கிமேதத் தவ மாயயா (35)

வியாக்யானம்: - **ப^{4}க^{3}வன்** - ஓ பகவனே, **வேத ஶாஸ்த்ரார்த்த^2 ஸம்பன்னா:** - வேதசாஸ்திரார்த்தங்களை யறிந்தவர்களும், **யஜ்வான:** - வேள்வியைச் செய்கின்ற வர்களும், **ஸத்ய வாதி^{3}ன:** - ஸத்தியத்தையே பேசுகின்றவர்களுமாகிய, **ஜனா:** - ஜனங்கள், **ஶ்ரவணே** - சிரவணஞ் செய்வதில், **கத^{2}ம்** - ஏன், **ந ப்ரவர்த்தந்தே** - பிரவர்த்திக்கின்றவர்களாக இல்லை, **ததா கேசன** - அங்ஙனம் மற்றும் சிலர், **ஶ்ருண்வந்தோऽபி** - சிரவணஞ் செய்கின்றவர்களேயாயினும், **ஆத்மானம் -** ஆன்மாவை (ஏன்), **ந ஜாந்தே** - அறிகின்றனரில்லை, **ஞாத்வா அபி** - அறிந்தும், **மித்^{2}யா** - மித்தை என, **மன்வதே** - எண்ணுகின்றனர், **ஏதத்** - இது, **தவ** - உமது, **மாயயா கிம்** - மாயையினாலா என்ன?

பொழிப்புரை: - ஓ பகவனே வேதசாஸ்திரார்த்தங்களை யுணர்ந்தவர்களும், வேள்வி செய்கின்றவர்களும், சத்தியமே பேசுகின்றவர்களுமாயிருந்தும் ஜனங்கள் சிரவணஞ்செய்கின்றதில் ஏன் பிரவர்த்திக்கின்றதில்லை. மற்றும் சிலர் சிரவணஞ் செய்கின்றவர்களே யாயினும் ஆன்மாவை ஏன் அறிகின்றதில்லை. அறிந்தும் சிலர் மித்தையாகக் கொள்கின்றனரே ஏன்? இது உமது மாயையினாலா என்ன.

ஶ்லோகம்.

சிவபெருமான் கூறினார்.

ஏவமேவ மஹாபா3ஹோ! நாத்ர கார்யா விசாரணா
தை^{3}வீ ஹ்யேஷா கு^{3}ணமயீ மம மாயா து^{3}ரத்யயா (36)

மாமேவ யே ப்ரபத்^{3}யந்தே மாயா மேதாம் தரந்தி தே
அப^{4}க்தா யே மஹாபா^{3}ஹோ! மம ஶ்ரத்^{3}தா^{4} விவர்ஜிதா: (37)

பலம் காமயமானா ஸ்தே வைஹிகா முஷ்மிகாதி^{3}கம்
க்ஷயிஷ்ண்வல்பம் ஸாதிஶயம் யத: கர்ம ப^{2}லம் மதம் (38)

தத^{3}விஞாய கர்மாணி யே குர்வந்தி நராsத^{4}மா:
மாது: பதந்தி தே க^{3}ர்பே^{4} ம்ருத்யோர் வக்த்ரே புன: புன: (39)

வியாக்யானம்: - **மஹாபாஹோ** - ஓ மஹா பாஹுவாகிய ராமனே, **ஏவம் ஏவ** - இவ்வாறே, **அத்ர** - இதனில், **விசாரணா** - விசஹித்தல, **கார்யான்** - செய்யவேண்டியதில்லை, **ஏஷா** - இது, **தைவீ** - தேவஸம்பந்தமாயுள்ளதும், **குணமயீ** - முக்குணமயமாயுள்ளதும், **துரத்யயா** - மீற அரிதாயுள்ளதுமாகிய, **மமத்மாயா** - எனது மாயையே, **யே** - எவர், **மாம் ஏவ** - என்னையே, **ப்ரபத்யந்தே** - உபாவிக்கின்றனரோ, **தேந்** அவர்கள், **ஏதாம் மாயாம்** - இம்மாயையை, **தரந்தி** - தாண்டுகின்றனர், **மஹாபாஹோ** - ஓ மஹாபஹுவாகிய ராமா? **ஶ்ரத்^{3}தா4 விவர்ஜிதா:** - சிரத்தையில்லாதவர்களும், **மம -** எனக்கு, **அபக்தா:** - பக்தரல்லாதவர் களுமாயிருக்கின்றனரோ, **தே** - அவர்கள், **ஐஹிகாமுஷ்மிகாதிகம்** - இம்மை மறுமை ஸம்பந்தமாயுள்ள, **பலம்** - பயனை, **காமயமாநா:** - விரும்புகின்றவர்களா யிருக்கின்றனர், **தத:** - ஆதலின், **கர்மபலம்** - கர்ம பலமானது, **க்ஷயிஷ்ணு** - அழிகின்றதும், **ஸாதிசயம்** - தாரதம்மிய முடையதும், **அல்பம்** - அற்பமுமானது என, **மதம் -** நிச்சயிக்கப்பட்டதாம், **தத -** அதனை, **அவிக்ஞாய** - அறியாமல், **யே** - எந்த, **நராதமா:** - நராதமர்கள், **கர்மாணி** - கர்மங்களை, **குர்வந்தி** - செய்கின்றனரோ, **தே** - அவர்கள், **மாதுர்** - அன்னையின், **கர்பே** - கர்ப்பகோசத்திலும், **ம்ருத்யோ:** - எமனின், **வக்த்ரே** - வாயினிலும், **புன: புன:** - அடிக்கடி, **பதந்தி** - வீழ்கின்றனர்.

பொழிப்புரை: - ஓ மஹா பாஹுவாகிய ராமா இது இவ்வாறே இதனில் சிறிதும் விசாரணை செய்யவேண்டாம் இது தாண்டுதற்கரியதும் குணமயமுமாயு ள்ள எனது மாயையேயாம். என்னையே எவர் உபாஸிக்கின்றனரோ அவர்களே இம்மாயையைத் தாண்டுகின்றனர். சிரத்தையில்லாதவர்களும் எனக்கு அபக்தர்களு மாய் எவரிருக்கின்றனரோ அவர்கள் இம்மை மறுமைப்பயன்களைக் காமுறுகின்ற வர்களா யிருக்கின்றனர். ஆதலின் கர்மபலமானது அழிகின்றதும் அற்பமும் தாரதம்மிய முடையதும் என நிச்சயிக்கப் அதனையறியாமல் எந்த நராதமர்கள் கர்மங்களைச் செய்கின்றனரோ அவர்கள் அன்னையின் கருப்பபையிலும் எமன் வாயினிலும் அடிக்கடி வீழ்கின்றனர்.

ஸ்லோகம்.

நானா யோநிஷு ஜாதஸ்ய தே^{3}ஹினோ யஸ்ய கஸ்ய சித்
கோடி ஜன்மார்ஜிதை: புண்யைர் மயி ப^{4}க்தி: ப்ரஜாயதே (40)

வியாக்யானம்: - **நானா யோநிஷு** - எண்ணிறந்த பல யோநிகளில், **ஜாதஸ்ய** - தோன்றிய, **யஸ்ய கஸ்ய சித் தே³ஹின**: - எந்த தேஹியானவனுக்கும், **கோடி ஜந்மார்ஜிதை**: - எண்ணிறந்த பல ஜன்மங்களில் சம்பாதிக்கப்பட்டுள்ள, **புண்யை**: - புண்ணியங்களால், **மயி** - என்னிடம், **பக்தி**: - பக்தியானது, **ப்ரஜாயதே** - ஏற்படுகின்றது.

பொழிப்புரை: - எண்ணிறந்த பல யோநிகளில் பிறந்தவனாயினும் எந்த தேஹியாயிருக்கினும் எண்ணிறந்த பல ஜன்மங்களில் சம்பாதிக்கப்பட்ட புண்ணியங்களாலேயே என்னிடம் பக்தி ஏற்படுகின்றது.

ஶ்லோகம்.

ஸ ஏவ லப4தே ஞானம் மத்3 ப4க்த: ஶ்ரத்3த4யான்வித:
நாsன்ய கர்மாணி குர்வாணோ ஜன்ம கோடி ஶதை ரபி (41)

வியாக்யானம்: - எவன், மத்பக்த 3 - என்னிடம் பக்தியுள்ளவ
னுமாய், ச்ரத்தயா அந்வித : - சிரத்தையுடையவனுமாய், ஜன்மகோடி
சதை : அபி - எண்ணி றந்த பலகோடி ஜன்மங்களைப் பெறினும்,
அந்யகர்மாணி- காம்பமெனும் கர்மங்களை, நகுர் வாண : - செய்யா படுகின்றது. மலிருக்கின்றவனுமாய் உள்ளவனோ, ஸ 8 ஏவ- அவனே, ஞானம் - ஞானத்தை, லபதே - பெறுகின்றான்.

பொழிப்புரை: - எவன் என்னிடம் பக்தியுடையவனும் சிரத் தையுடையவனுமாய் எண்ணிறந்த பலகோடி ஜன்மங்களைப்பெறி னும் காம்யகர்மங்களைச் செய்யாமலிருப்பானாயின் அவனே ஞானத் தைப் பெறுகின்றான்.

ஶ்லோகம்.

தத: ஸர்வம் பரித்யஜ்ய மத்³ ப⁴க்திம் ஸ முபாஶ்ரய
ஸர்வ த⁴ர்மான் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்⁴யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: (42)

வியாக்யானம்: - தத: - ஆகலால், **ஸர்வம்** - எல்லாவற்றையும், **பரித்யஜ்ய** - விடுத்து, **மத்பக்திம்** - எனது பக்தியை, **ஸமுதாஹர**: - ஆசரிப்பாயாக, **ஸர்வ த⁴ர்மான்** - (பயனில் விருப்பமுதலிய) ஸகல பந்து ஹேதுவாகிய தன்மைகளையும், **பரித்யஜ்ய** - விடுத்து, **மாம் ஏகம்** - என்னொருவனையே, **ஶரணம் வ்ரஜ** - சரணமடைவாயாக, **அஹம்** - நான், **த்வா** - உன்னை, **ஸர்வ பாபேப்4ய**: - ஸகல கர்மங்களினின்றும், **மோக்ஷயிஷ்யாமி** - விடுபடச்செய்வேன், **மா ஶுச**: - சோகமடைய வேண்டாம்.

பொழிப்புரை: - ஆதலால் எல்லாவற்றையும் விடுத்து எனது பக்தியை செய்வாயாக பயனில் விருப்பம் முதலிய பந்தஹேதுவாகிய ஸகல தன்மைகளை யும் விடுத்து என்னொருவனையே சரணமடைவாயாக நான் உன்னை ஸகலகர்மங்க ளினின்றும் விடுபடச் செய்வேன் சோகம் வேண்டாம்.

ஶ்லோகம்.

யத்கரோஷி யதஶ்னாஸி யஜ்ஜுஹோஷி த³தா³ஸி யத்
யத்தத்பச்யஸி ராம! த்வம் தத்குருஷ்வ மத³ர்பணம் (43)

தத: பரதரா நாஸ்தி ப⁴க்திர் மயி ரகூ⁴த்தம்! (44)

வியாக்யானம்: - **யத்** - யாதொன்றை, **கரோஷி** - செய்கின்றனையோ, **யத்** - யாதொன்றை, **அஶ்நாஸி** - புசிக்கின்றனையோ, **யத்** - யாதொன்றை, **ஜுஹோஷி** - ஹோமம் செய்கின்றனையோ, **யத்தத்** - எவ்வெதனை, **பச்யஸி** - பார்க்கின்றனை யோ, **ராம** - ஓ ராமா, **த்வம்** - நீ, **தத்** - அதனை, **மதர்ப்பணம்** - எனக்கு அர்ப்பணமாக, **குருஷ்** - செய்வாயாக, **ரகூ⁴த்தம** - ஓ ரகுகுலோத்தமனே, **மயி** - என்னிடம், **பக்தி**: - பத்தியானது, **தத:** - அதனிலும், **பரதரம்** - மேலாகியது, **நாஸ்தி -** இல்லை.

பொழிப்புரை: - யாதொன்றைச் செய்கின்றனையோ யாதொன்றைப் புசிக்கின் றனையோ யாதொன்றை ஹோமம் செய்கின்றனையோ யாதொன்றைப் பார்க்கின் றனையோ ஓ ராமா நீ அதனை எனக்கு அர்ப்பணம் செய்வாயாக ஓ ரகுகுல திலகனே என்னிடம் பக்தியானது அதனிலும் மேலாகியது யாதுமில்லை.

பதினான்காவது அத்தியாயம்

முற்றிற்று.

பதினைந்தாவது அத்தியாயம்.

பக்தி யோகம்

ஸ்லோகம்.

ஸ்ரீராமர் கூறியதாவது.

ப4க்தி ஸ்தே கீத்3ருஶீ தே3வ! ஜாயதே வா கத2ஞ்ச ஸா
யயா நிர்வாண ரூபத்வம் லப4தே மோக்ஷ முத்தமம்

வியாக்யானம்: - **தேவ** - ஓ தேவனே, **கே** - உனது, **பக்தி:** - பக்தியானது, **கீத்ருசீ** - எப்படிப்பட்டது, **ஸா** - அந்த பக்தியானது, **கதம்ச** - எப்படி, **ஜாயதே** - உண்டாகின்றது, **யயாது -** எந்த பக்தியினாலேயே, **நிர்வாணரூபம்** - கைவல்ய வடிவமாகிய, **உத்தமம்** - சிறந்த, **மோக்ஷம்** - மோக்ஷத்தை, **லபதே** - அடைகின்றானோ.

பொழிப்புரை: - ஓ தேவனே உனது பக்தி எப்படிப்பட்டது அந்த பக்தியானது எப்படி உண்டாகின்றது எந்த பக்தியினாலேயே கைவல்யமாகிய உத்தமமான மோக்ஷத்தை அடைகின்றானோ.

ஸ்லோகம்.

தத்3 ப்3ரூஹி கி3ரிஜா காந்த! ப்ராப்யதே யேன நிர் வ்ருதி:

வியாக்யானம்: - **கி3ரிஜா காந்த** - ஓ கிரிஜா காந்தராகிய ஓ இறைவனே, **யேன** - எதனால், **நிர் வ்ருதி:** - ஸுகமானது, **ப்ராப்யதே** - அடையப்படுகின்றதோ, **தத்** - அதனை, **ப்ரூஹி** - சொல்லும்,.

பொழிப்புரை: - ஓ கிரிஜாகாந்தராகிய இறைவனே எதனால் ஸுகமானது அடையப்படுகின்றதோ அதனைச் சொல்லும்.

ஸ்லோகம்.

பகவான் கூறியதாவது.

யோ வேதா3ऽத்யயனம் யஜ்ஞும் தா3னானி விவிதா4னி ச
மத3ர்பண தி3யா குர்யாத் ஸ மே ப4க்த: ஸ மே ப்ரிய: (2)

வியாக்யானம்: - **ய:** - எவன், **வேதா^{3}sத்யயனம்** - வேதாத்தியயனத்தையும், **யஜ்ஞும்** - வேள்வியையும், **விவிதாநி தாநாநி ச** - பற் பல விதங்களாகிய தானங்க ளையும், **மத^{3}ர்பண தியா** - எனக்கு அர்ப்பணம் செய்யும் பாவனையோடு, **குர்யாதி** - செய்வானோ, **ஸ:** - அவன், **மே** - எனக்கு, **ப^{4}க்த:** - பக்தன், **ஸ:** - அவன், **மே** - எனக்கு, **ப்ரிய:** - பிரியன்.

பொழிப்புரை: - எவன் வேதாத்யயனத்தையும் வேள்வியையும் பற்பலவகை களாகிய தானங்களையும் எனக்கு அர்ப்பணம் செய்யும் பாலனையோடு செய்கின்றா னோ அவன் எனது பக்தன் அவன் எனக்கு பிரியன்.

ஶ்லோகம்.

நர்ய ப^{4}ஸ்ம ஸமாதா^{3}ய விஶுத்^{3}த^{4}ம் ஶ்ரோத்ரியாலயாத்
அக்^{3}னி ரித்யாதி^{3}பி^{4}ர் மந்த்ரை ரபி^{4}மந்தர்ய யதா^{2} விதி^{4} **(3)**

உத்^{3}தூ^{4}லயதி கா^{3}த்ராணி தேன சார்சதி மாமபி

வியாக்யானம்: - **ஶ்ரோத்ரியாலயாத்** - வேதமோதியவனிடத்தினின்று, **விசுத்தம்** - மிக்கத் தூய்மையாயுள்ள, **நர்யபஸ்ம** - அக்கி நிஹோத்திர விபூதியை, **ஸமாதாய** - எடுத்து, **அக்னி:** - இத்யாதிபி: - "அக்நிரிதபஸ்ம" என்பது முதலிய, **மந்த்ரை:** - மந்திரங்களால், **அபிமந்த்ரிய** - அபிமந்திரித்து, **யதாவிதி** - விதிப்படி, **காத்ராணி** - அங்கங்களில், **உத்தூளயதி** - பூசுகின்றான் (என்பதும்), **தேந ச** - அதனாலேயே, **மாமபி** - என்னையும், **அர்ச்சதி** - அர்ச்சிக்கின்றான் (என்பதுமாகிய) யாதொன்றுளதோ.

பொழிப்புரை: - வேதமோதியவனிடத்தினின்றும் மிக்கத்தூய்மையாயுள்ள அக்கிநிஹோத்திர விபூதியை எடுத்து அக்நிரிதி என்பது முதலிய மந்திரங்களால் அபிமந்திரித்து விதிப்படி அங்கங்களில் பூசுகின்றதென்பதும் அதனாலேயே என்னையும் அர்ச்சிக்கின்றதென்பதுமாகிய யாதொன்றுளதோ.

ஶ்லோகம்.

தஸ்மாத் பரதரா ப^{4}க்திர் மம ராம! ந வித்^{3}யதே **(4)**

ஸர்வதா^{3} ஶிரஸா கண்டே^{2} ருத்ராக்ஷான் தா^{4}ரயேத்து ய:
பஞ்சாக்ஷரீ ஜபபர: ஸ மே ப^{4}க்த: ஸ மே பரிய: **(5)**

வியாக்யானம்: - **ராம** - ஓ ராமா, **தஸ்மாத்** - அதனிலும், **பரதரா** - சிறந்ததாகிய, **பக்தி** - பக்தியானது, **மம** - எனக்கு, **ந வித்^{3}யதே** - இல்லை, **ஸர்வதா** - எப்போதும், **ருத்ராக்ஷான்** - ருத்ராக்ஷங்களை, **ய:** - எவன், **சிரஸா** - சிரஸினிலும்,

கண்டே - கழுத்திநிலும், **தாரயேத்** - தரிக்கின்றானோ, **பஞ்சாக்ஷரீஜபர:** - பஞ்சாக்ஷர ஜபத்தைப் பாரமாகக்கொண்டவனுமாவனோ, **ஸ:** - அவனே, **மே** - எனக்கு, **பக்த:** - பக்தன், **ஸ:** - அவன், **மே** - எனக்கு, **ப்ரிய:** - பிரியன்.

பொழிப்புரை: - ஓ ராம அதனிலும் சிறந்ததாகிய பக்தி எனக்கில்லை எப்போதும் எவன் ருத்திராக்ஷங்களை சிரஸிலும் கண்டத்திலும் தரிக்கின்றானோ பஞ்சாக்ஷரஜபத்தை முக்கியமாய்க் கொண்டு மிருக்கின்றானோ அவனே எனக்குப் பக்தன் அவனே எனக்குப் பிரியன்.

ஶ்லோகம்.

ப⁴ஸ்மச் ச²ன்னோ ப⁴ஸ்ம ஶாயீ ஸர்வதா³ விஜிதேந்த்³ரிய:
யஸ்து ருத்³ரம் ஜபேன் நித்யம் சிந்தயேன் மா மனன்ய தீ: (6)

ஸ தேனைவ ஹி தே³ஹேன் ஶிவஸ் ஸஞ்ஜாயதே ஸ்வயம்

வியாக்யானம்: - **ப⁴ஸ்மச் ச²ன்ன:** - விபூதிபூசியவனும், **ப⁴ஸ்ம ஶாயீ** - விபூதியில் படுப்பவனும், **ஸர்வதா³** - எப்போதும், **விஜிதேந்த்³ரிய:** - இந்திரியங்களை வென்றவனுமாயிருந்து, **ய:து** - எவன், **ருத்ரம்** - ருத்ரத்தை, **நித்யம்** - தினந்தோறும், **ஜபேத்** - ஜபிப்பவனோ, **மாம்** - என்னை, **அனன்ய தீ:** - வேறு சிந்தையில்லா தவனாய், **சிந்தயேத்** - சிந்திப்பானோ, **ஸ:** - அவன், **தேன ஏவ தேஹேன** - அதே தேஹத்தோடு, **ஸ்வயம்** - தானே, **ஶிவ:** - சிவனாக, **ஸம்ஜாயதே** - ஆகின்றான்.

பொழிப்புரை: - விபூதி பூசியவனும் விபூதியைப் படுக்கையிட்டுப்படுப் போனும் எப்போதும் அடங்கியுள்ள இந்திரியங்களை யுடையோனுமாக யாதொரு வன் ருத்திரத்தைத் தினந்தோறும் ஜபிக்கின்றவனும் வேறு சிந்தையில்லாதவனாக என்னைச் சிந்திப்பவனுமாயுளனோ, அவன் அதே தேஹத்தோடு சிவனாக ஆகின்றான்.

ஶ்லோகம்.

நர்யபஸ்ம ஸமாதாய விசுத்தம் ச்ரோத்ரியாலயாத்
அக்னி ரித்யாதிபிர் மந்த்ரை ரபிமந்த்ர்ய யதாவிதி

உத்தூளயதி காத்ராணி தேநசார்சதி மாமபி

வியாக்யானம்: - **ச்ரோத்ரியாலயாத்** - வேதமோதியவனிடத்தினின்று, **விசுத்தம்** - மிக்கத் தூய்மையாயுள்ள, **நர்யபஸ்ம** - அக்கிநிஹோத்திர விபூதியை, **ஸமாதாய** - எடுத்து, **அக்னி: இத்யா திபி:** - "அக்னிரிதபஸ்ம" என்பது முதலிய, **மந்த்ரை:** - மந்திரங்களால், **அபிமந்த்ர்ய** - அபிமந்திரித்து, **யதாவிதி** - விதிப்படி,

காத்ராணி - அங்கங்களில், **உத்தூளயதி** - பூசுகின்றான் (என்பதும்), **தேநச** - அதனாலேயே, **மாமபி** - என்னையும், **அர்ச்சதி** - அர்ச்கின்றான் (என்பதுமாகிய) யாதொன்றுளதோ.

பொழிப்புரை: - வேதமோதியவனிடத்தினின்றும் மிக்கத் தூய்மையாயுள்ள அக்கிநிஹோத்திர விபூதியை எடுத்து அக்நிரிதி என்பது முதலிய மந்திரங்களால் அபிமந்திரித்து விதிப்படி அங்கங்களில் பூசுகின்றதென்பதும் அதனாலேயே என்னையும் அர்ச்சிக்கின்றதென்பது மாகிய யாதொன்றுளதோ.

குறிப்பு: - பஸ்மமானது ஐஸ்வர்யத்தைக் கொடுக்கும் தன்மையால் விபூதி, பூதியெனும் பெயர்பெற்றதாக "ஐச்வர்யகாரணாத் பூதி: என்னும் பிருஹஜ்ஜாபாலோ பநிஷத்.

பஸ்மமணியாத நெற்றியைச்சுடு, சிவாலயமில்லாத கிராமத்தைக் கொளுத்து, சிவார்ச்சனை யில்லாதவனது ஜன்மத்திலே தீயை வை, சிவனை யாசிரயிக்காத சாஸ்திரத்தை யெரித்து விடு.

பிருஹஜ்ஜாபாலம்.

"திக்பஸ்மரகிதம் பாலம் திக்கிராம மசிவாலயம்
திக்நீசார்ச்சநம் ஜந்ம திக்வித்யா மசிவாச்ரயாம்."

எந்தப் பிராமணனால் சிரசில் விபூதித் திரிபுண்டரதாரணம் செய்யப்பட்டதோ அவனால் வேதமெல்லாம் அத்யயனம் பண்ணப்பட்டனவாயின. சற்கரும் மனைத்தும் அனுஷ்டிக்கப்பட்டன வாயின, தனது வருணத்திற்குரிய நல்லாசாரத்தை யிழந்தவனேனும், சற்கருமங்களை விட்டவனேனும், பஸ்மங்கொண்டு திரிபுண்டரந் தரித்துக்கொண்டவன் பூஜிக்கப்படுவோனாய் விடுவன். எவர்கள் பஸ்மதாரணத்தைத் தள்ளிக் கருமங்களைச் செய்கிறார்களோ அவர்களுக்குக் கோடி ஜன்மமாயினு சமுசாரத் துக்கமில்லாத மோட்சவழி கிட்டாது.

பிருஹஜ்ஜாபலோபநிஷத்.

தேநாதீதம் ச்ருதந்தோதே நஸ்ரவமநுஷ்டிதம்
யோவிப்ரேண சிரஸித்ரிபுண்டரம் பஸ்மநாத்ருதம்
த்யக்தவர்ணாச்ரமா சாரோலுப்தஸர்வக்ரி யோபிய:
ஸக்ருத்திரயக் த்ரிபுண்டராங்கத தாரணாத்ஸோபிபூஜ்யதே
யேபஸ்மதாரணம் த்யக்த்வாகர்ம குர்வந்திமாநவா:
தேஷாம் நாஸ்திவிநிர்மோக்ஷஸ் ஸம்ஸாராஜ் ஜன்மகோடிபி:

தருமராஜனே! ஆயுள் விருத்தியடைய அவாவோரும், செல்வத்தை யிச்சிப் போரும், வீடுபேற்றை விரும்புவோருமான துவிஜர் நாடோறும் பஸ்மதாரணம் செய்ய வேண்டும்.

மஹாபாரதம் சாந்தி பருவம்.

“ஆயுஷ்டிகாமோதவா ராஜந்பூதிகாமோதவாநர:
நித்யம்வைதாரயேத் பஸ்மமோட்ச காமீசவைதவிஜ::”

பிரமதேவர் சிருஷ்டி செய்கையிலேயே பஸ்ம மஹாத்மியத்தைக்கூறி, அதனை யணிந்து கோடற்காகவே நெற்றியைக் குறுக்காகப் படைத்தார். மேனோக்காகவும், வட்டமாகவும் படைத்தாரல்லர். அப்படி செய்திருந்தும் மூர்க்கர் சிலர் நெற்றியிலே திரிபுண்டர மணிவதில்லை.

கூர்ம புராணம்.

"ஸ்ரஷ்டாஸ்ருஷ்டிச்சலே நாஹத்ரிபுண்ட்ர ஸ்யப்ரசஸ்ததாம்
ஸஸர்ஜஸலலாடம் ஹிதிர்யக் கோர்த்த்வம் நவர்த்துலம்
ததாபிமாநவா மூர்க்கா நகுர்வந்தி த்ரிபுண்ட்ரகம்"

இவ்விபூதியினைப்பற்றி யஜுர்வேத காலாக்நிருத்ரம், தைத்திரீயம், யோகதத்வம், ஸாமவேத ஜாபாலி, ஸந்ந்யாசம், வாசுதேவம், அதர்வவேத பஸ்ம ஜாபாலம், பிருஹஜ்ஜாபாலம், நாரதபரிவிராஜம், ராமரஹஸ்யம், சாண்டில்யம், திரிபுரதாபிதி, அதர்வசிரம் முதலிய உபநிஷத்துக்களும், யஜுர்வேத முதலியனவும் பூஜிக்கின்றன,

ஶ்லோகம்.

தஸ்மாத் பரதரா பக்தி: மம ராம நவித்யதே
ஸர்வதா சிரஸா கண்டே ருத்ராக்ஷாந் தாரயேத்துய:
பஞ்சாக்ஷரீஜபரதஸேமேபக்தஸேமேபரிய:

வியாக்யானம்: - **ராம** - ஓ ராமா, **தஸ்மாத்** - அதனிலும், **பரதரா** - சிறந்ததாகிய, **பக்தி:** - பக்தியானது, **மம** - எனக்கு, **நவித்யதே** - இல்லை, **ஸர்வதா** - எப்போதும், **ருத்ராக்ஷாந்** - ருத்ராக்ஷங்களை, **ய:** - எவன், **சிரஸா** - சிரஸினிலும், **கண்டே** - கழுத்தினிலும், **தாரயேத்** - தரிக்கின்றானோ, **பஞ்சாக்ஷரீஜபா:** - பஞ்சாக்ஷர ஜபத்தைப் பாரமாகக்கொண்டவனுமாவனோ, **ஸ:** - அவனே, **மே** - எனக்கு, **பக்த:** - பக்தன், **ஸ:** - அவன், **மே** - எனக்கு, **ப்ரியா:** - பிரியன்.

பொழிப்புரை: - ஓ ராம! அதனிலும் சிறந்ததாகிய பக்தி எனக்கில்லை எப்போதும் எவன் ருத்திராக்ஷங்களைச் சிரஸிலும் கண்டத்திலும் தரிக்கின்றானோ பஞ்சாக்ஷர ஜபத்தை முக்கியமாய்க் கொண்டு மிருக்கின்றானோ அவனே எனக்குப் பக்தன் அவனே எனக்குப் பிரியன்.

குறிப்பு: - அனைவருக்கும் அநுக்கிரகம் செய்யும் பொருட்டு உருத்திராட்சங்க ளுண்டாயின. அவற்றின் பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே பத்துக்கோதான பலனும், அவற்றைக் காண்டல் தீண்டல்களுக்கு மேலும் மேலும், இரட்டிப்பாகு பலனாம்.

ருத்ராட்ச ஜாபாலம்.

"*ருத்ராட்சாஜாதாஸ்ஸர் வாநுக்ரஹார்த்தாயதேஷாம் நாமோச்சாரணமாத்ரேணச கோப்ரதாநபலம் தர்சநஸ்பர்சநாப்யாம்த்விருணபலம்*"

மகாதேவன் (குணருத்திரன்) விஷ்ணு பிரமன் மற்றைத்தேவர்கள் யாவரும் எப்போதும் உருத்திராட்சத்தைப் பக்தியுடன் தரிக்கின்றனர். பாவிகளான மனிதர் கட்கு, வேதத்தினாற் சிந்தித்ததும் முக்தியைக் கொடுப்பதுமான உருத்திராட்ச தாரணத்திற் சிரத்தை யுண்டாவதில்லை.

பாரசரபுராணம்.

மகாதேவச்சவிஷ்ணுச்சப்ரஹ்மாதேஷாம் விபூதய:
தேவாச்சாந்யேஸதா பக்த்யாகலுருத்ராட்சதாரிண:
பாபிஷ்டாநாம் மனுஷ்யாணாம் ருத்ராட்சாணாஞ்சத
ச்ரத்தாநஜாய தேஸாக்ஷாத்வேத ஸித்தேவிமுக்திதே

உருத்ராட்சம் எக்காலமு மணியத்தக்கது.

ருத்ராட்ச ஜாபாலம்.

ஸுப்தேபீதே ஸதாகாலம் ருத்ராட்சம் தாரயேந்தர:

எவனுடைய நெற்றியில் விபூதியில்லையோ, உடம்பில் உருத்திராட்ச மணிகலில்லையோ, எவனுடைய கிருத்ததில் சிவபூஜையில்லையோ, அந்தவிப்பிரன் நாய் மாமிசத்தை தின்கிறவனிலும் கீழ்ப்பட்டவனாவன், மாமிசத்தை யுண்பவனாயினும், மதுவைக் குடிப்பவனாயினும், நீசஸ்திரீயைப் புணர்பவனாயி னும் அவனது தலையில் உருத்திராக்க மிருப்பின் பாவத்தினின்று விடுபவன்..

மகாஸ்காந்த புராணம்.

நவிபூதிர்யஸ்ய பாலேநாங்க ருத்ராட்சதாரணம்
சம்போர்பவநே பூஜாஸ்விப்ரச்சவ பசாதம:
காதந்மாம்ஸம் பிபந்மத்யம் ஸங்கச்ந்தந்த்ய ஜாமயி
பாதகேப்யோவிமுச்யேத ருத்ராட்சே ஸிரஸிஸ்திதே:

உருத்திராட்சத்தைப்பற்றிப் பஸ்மஜாபாலம், பிருஹஜ்ஜாபாலம், ராம ரஹஸ்யம், ருக்வேத அக்ஷமாலிகை, யஜுர்வேத தக்ஷிணாமூர்த்தி, ஸாமவேத ருத்ராக்ஷஜாபாலமென இத்தொடக்கத்து உபநிஷத்துக்களும், ருக்வேத ஸ்ரீருத்ர நமகமுமாம். இவற்றுள் ருத்ராட்ச ஜாபாலத்தில் உருத்திராட்ச மணிகளினுற்பத்தி, அளவு, முகம், காரணமந்திரம், தாரணபலா மந்திரம், தாரணபலாதி விவரணமும் அட்சமாலிகையில் அந்த மணிகளினிறம், அந்த மாலைகளின் பேதம், மகிமை முதலிய விவரமும், பிருகஜ்ஜாபாலத்தால் உருத்திராட்சோற்பததி, தாரணபலாதி விவரமும், அருளிச் செய்யப்பட்டன.

ஶ்லோகம்.

ஜபேத்^{3}யோ ருத்^{3}ர ஸூக்தானி ததா^{2}sத^{2}ர்வஶிர: பரம் (7)

கைவல்யோபநிஷத் ஸூக்தம் ஶ்வேதாஶ்வதர மேவ ச
தத: பரதரோ ப^{4}க்தோ மம லோகே ந வித்^{3}யதே (8)

வியாக்யானம்: - **ய:** - யா தொருவன், **ருத்ரஸூக்தானி** - ருத்திர ஸூக்தங் களையும், **ததா^{2}** - அங்ஙனமே, **பரம்** - சிறந்துள்ளதாகிய, **அதர்வசிர:** - அதர்வசிர உபநிஷத்தையும், **கைவல்யோபநிஷத் ஸூக்தம் -** கைவல்யோபநிஷத ஸூக்தத்தையும், **ஶ்வேதாஶ்வதரம், ஏவ ச** - சுவேதாச்வதர உபநிஷதத்தையும், **ஜபேத்** - ஜபிப்பானோ, **தத:** - அவனிலும், **பரதர:** - சிறந்தவனாகிய, பக்த: - பக்தன், **மம லோகே** - எனது உலகில், **ந வித்^{3}யதே** - இல்லை.

பொழிப்புரை: - யாதொருவன் ருத்திர ஸூக்தங்களையும் அதர்வ சிரத்தை யும் கைவல்யோபநிஷத ஸூக்தத்தையும் சுவேதாச்வதரத்தையும் ஜபிப்பவனோ அவனிலும் சிறந்த பக்தன் என்னுலகில் இல்லை.

ஶ்லோகம்.

அன்யத்ர த^{4}ர்மா த்^{3}ன்யஸ்மா த^{3}ன்யத்ராsஸ்மாத் க்ருதாsக்ருதாத்
அன்யத்ர பூ^{4}தாத்^{3} ப^{4}வ்யாத்ச யத் ப்ரவக்ஷ்யாமி தச்ச்^{2}ருணு (9)

வியாக்யானம்: - **த^{4}ர்மாத்** - தர்மத்திலும், **அன்யஸ்மாத்** - அதர்மத்திலும், **அன்யத்ர** - வேறுவகையாயுள்ளதும் (விலக்ஷணமாயுள்ளதும்), **அஸ்மாத்** - இந்த, **க்ருதாsக்ருதாத்** - கார்யகாரணங்களிலும், **அன்யதர** - விலக்ஷணமானதும், **பூ^{4}தாத்** - சென்றதிலும், **பவ்யாத் ச** - இனிவருவதிலும், **அன்யத்ர** - விலக்ஷணமாயுள்ளதுமா கிய, **யத்** - யாதொன்றை, **ப்ரவக்ஷ்யாமி** - சொலலுவேனோ, **தத்** - அதனை, **ச்ருணு** - கேட்பாயாக.

பொழிப்புரை: - தர்மாதர்மங்களிலும் கார்யகாரணங்களிலும் விலக்ஷண மாயுள்ளது காலவரையினில் அகப்படாததுமாகிய யாதொன்றைச் சொல்லுவேனோ அதனைக் கேட்பாயாக.

ஶ்லோகம்.

வத3ந்தி யத்பத3ம் வேதா: ஶாஸ்த்ராணி விவிதா4னி ச
ஸர்வோபநிஷதா3ம் ஸாரம் த3த்4னோ க்4ருத மிவோத்3த்4ருதம் (10)

யதிச்ச2ந்தோ ப்3ரஹ்மசர்யம் சரந்தி முனய: ஸதா3
தத்தே பத3ம் ஸங்க்3ரஹேண ப்3ரவீஷ்யாமீதி யத்பரம் (11)

வியாக்யானம்: - **வேதா**: - வேதங்களும், **விவிதா4னி** - பலவாறாயுள்ள, **ஶாஸ்த்ராணி ச -** சாஸ்திரங்களும், **யத்** - யாதொரு, **பதம்** - பதத்தை, **வத3ந்தி** - சொல்லுகின்றனவோ, **த3த்4ன:** - தயிரினின்றும், **உத்தருதம்** - கடைந்தெடுக்கப்பட்ட, **க்ருதமிவ -** வெண்ணெய் போல, **ஸர்வோபநிஷதாம்** - ஸகல உபநிஷதங்களுக்கும், **ஸாரம்** - ஸாரமாயுமுள்ளதோ, **முநய:** - முநிவர்கள், **யத்** - எதனை, **இச்சந்த**: - விரும்புகின்றவர்களாய், **ஸதா** - எப்போதும், **ப்ரஹ்மசர்யம்** - பிரஹ்மசரியத்தை, **அசாந்தி** - அனுஷ்டிக்கின்றனரோ, **தத்** - அந்த, **பதம்** - பதத்தை, **தே** - உனக்கு, **ஸங்க்ரஹேண** - சுருக்கமாக, **ப்ரப்ரவிஷ்யாமி** - சொல்லுகின்றேன்.

பொழிப்புரை: - வேதங்களும் பலவகை சாஸ்திரங்களும் எந்த பதத்தைச சொல்லுகின்றனவோ தயிரினின் றெடுக்கப்பட்ட வெண்ணெய்போல எது ஸகலோப நிஷதங்களின் ஸாரமாயுள்ளதோ முநிவர் எதனை விரும்பி எப்போது ப்ரஹ்மசரியத் தை அநுஷ்டிக்கின்றனரோ அப்பதத்தை உனக்குச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன்.

ஶ்லோகம்.

ஏததே3வாऽக்ஷரம் ப்3ரஹ்ம சைததே3வாऽக்ஷரம் பரம்
ஏததே3வாऽக்ஷரம் ஞாத்வா ப்3ரஹ்ம லோகே மஹீயதே (12)

வியாக்யானம்: - **ஏதத்** - இந்த, **அக்ஷரம் ஏவ** - அக்ஷரமே, **ப்ரஹ்ம** - ப்ரஹ்மமாய், **ஏதத் அக்ஷரம் ஏவ** - இவ்வக்ஷரமே, **பரம்** - பரமாயுள்ளது, **ஏதத் அக்ஷரம் ஏவ** - இவ்வஷரத்தையே, **ஞாத்வா** - அறிந்து, **ப்ரஹ்மலோகே** - ப்ரஹ்மலோகத்தினில், **மஹீயதே** - சிறப்புறுகின்றான். (பர சிவப்பேற்றை யடைகின்றான்.)

பொழிப்புரை: - இந்த அக்ஷரமே ப்ரஹ்மம் இவ்வக்ஷரமே பரம் இவ்வஷரத்தையே அறிந்து பரசிவப்பேற்றை யடைகின்றான்.

ஸ்லோகம்

ச²ந்த³ஸாம் யஸ்து தே⁴னூனாம் ருஷப⁴த்வேன சோதி³த:
இத³மேவ பதிஸ் ஸேது ரம்ருதஸ்ய ச தா⁴ரணாத் **(13)**

வியாக்யானம்: - ய: - யாதொன்று, **ச²ந்தஸாம்** - வேதங்களாகிய, **தே⁴னுனாம்** - பசுக்களுக்கு, **ருஷப⁴த்வேன** - ருஷபமாக, **சோதி³த:** - போதிக்கப்பட்டதோ, **இதம் ஏவ** - இதுவே, **பதி:** - பதியாம், **அம்ருதஸ்ய ச தாரணாத்** - அமருதத்தையும் தரிக்கின்றமையின், **ஸேது:** - சேதுவுமாம்.

பொழிப்புரை: - யாதொன்று வேதங்களாகிய கோக்களுக்கு வ்ருஷபமாகச் சொல்லப்பட்டுளதோ அவ்விதுவே பதியாம் அம்ருதத்தை (மோக்ஷ அம்ருதத்தைத் தரிக்கின்றமையின் சேதுமிதுவே.

ஸ்லோகம்.

மேத⁴யா பிஹிதே கோஶே ப்ரஹ்ம யத் பரமோமிதி **(14)**

வியாக்யானம்: - **மேதஸா** - மாம்ஸவிசேஷத்தினால், **பிஹிதே** - மறைப் பட்டுள்ள, **கோஶே** - கோசத்தில் இச்சடலத்தில், **யத்** - யாதொரு, **பரம்ப்ரஹ்ம** - பரப்ரஹ்மமுளதோ அது, **ஓம் இதி** - ஓம் என்பதற்குப் பொருளாம்.

பொழிப்புரை: - மேதஸால் மூடப்பட்டுள்ள இச்சடலத்தில் (ஸர்வஸாக்ஷி யாய் விளங்கும்) பரப்ரஹ்மமே ஓம் என்பதனால் சொல்லப்படுவதாம்.

ஸ்லோகம்.

சதஸ்ரஸ் தஸ்யமாத்ராஸ்யு ரகாரோகாரகௌ ததா²
மகாரஸ்சாऽவஸானேऽர்த்³த⁴ மாத்ரேதி பரி கீர்த்திதா **(15)**

வியாக்யானம்: - **தஸ்ய** - அந்தப்பிரணவத்திற்கு, **சதஸ்ர:** - நான்கு, **மாத்ரா:** - மாத்திரைகள், **ஸ்யு:** - ஆகும், **அகாரோகாரகௌ** - அகார உகாரங்களும், **மகார:ச** - மகாரமும், **அவஸானே** - இறுதியில், **அர்த்தமாத்ரா** - அரை மாத்திரை, **இதி** - என்று, **பரிகீர்த்திதா:** - சொல்லப்பட்டன.

பொழிப்புரை: - அந்தப் பிரணவத்திற்கு மாத்திரைகள் நான்காம் அகாரம் உகாரம் மகாரம் இறுதியில் அரை மாத்திரை எனச் சொல்லப்பட்டுள்ளன.

விரி உரை: - இங்கு நான்கு மாத்திரை எனக்கூறியதில் உள்ள மாத்திரை எனும் சொல்லுக்கு. அவயவம் அதாவது அம்சம் எனப் பொருள் கொள்க. அல்லாவிடில் இறுதியில் அரை மாத்திரை என்றது முற்றும்.

ஶ்லோகம்.

பூர்வத்ர பூ^{4}ஶ்ச ரிக்^{3}வேதோ3 ப்^{3}ரஹ்மாsஷ்ட வஸவஸ் ததா^{2}
கா^{3}ர்ஹபத்யஶ்ச கா^{3}யத்ரீ க^{3}ங்கா^{3} ப்ராதஸ் ஸவஸ் ததா^{2} (16)

வியாக்யானம்: - **பூர்வத்ர** - அகாரத்தில், **பூ:ச** - பூ என்பதும், **ருக்வேத:** - ருக்வேதமும், **ப்ரஹ்மா** - ப்ரஹ்மனும், **அஷ்டவஸவ:** - எட்டுவஸுக்களும், **கார்ஹபத்ய: ச** - கார்ஹபத்யமெனும் அக்னியும், **கா^{3}யத்ரீ** - காயத்ரீயும், **க^{3}ங்கா** - கங்கையும், **ததா** - அவ்வாறே, **ப்ராதஸ்ஸவ:** - காலைஸவநமும் அடங்கினவாகக் கொள்க.

பொழிப்புரை: - அகாரத்தில் பூ என்பதும் ருக்வேதம் ப்ரஹ்மா அஷ்ட வஸுக்கள் கார்ஹபத்தியமெனும் அக்கிநீ காயத்ரீ கங்கை காலைஸவனம் எனும் இவை அடங்கினவாகக் கொள்க.

ஶ்லோகம்.

த்^{3}விதீயா ச பு^{4}வோ விஷ்ணு: ருத்^{3}ரோsனுஷ்டுப்^{3} யஜுஸ் ததா^{2}
யமுனா த^{3}க்ஷிணாக்^{3}னிஶ்ச மாத்^{4}யந்தி^{3}ன ஸவஸ்ம்ருத: (17)

வியாக்யானம்: - த்விதீயாது - இரண்டாவதாகிய உகாரமாத்திரையே எனின், **புவ:** - புவ : என்பதும், **விஷ்ணு:** - விஷ்ணுவும், **ருத்ர:** - ருத்ரரும், **அனுஷ்டுப்** - அநுஷ்டுப் எனும் சந்தஸும், **யஜு:** - யஜுர்வேதமும், **யமுனா** - யமுனாநதியும், **தக்ஷிணாக்னி:ச** - தஷிணாக்நீயும், **மத்யந்திநஸவ:** - மத்தியானஸவனமும், **ஸ்ரும்த:** - எனச் சொல்லப்பட்டது.

பொழிப்புரை: - இரண்டாவதாகிய மாத்திரையில் புவ: என்பதும் விஷ்ணு ருத்திரர்களும் அநுஷ்டுப்சந்தஸும் யஜுர்வேதமும் யமுநாநதியும் தக்ஷிணாக் நீயும் மத்தியானஸவனமும் அடங்கிய தென்பதாம்.

ஸ்லோகம்.

த்ருதீயா ச ஸுவ: ஸாமான் யாதி^{3}த்யஶ்ச மஹேஶ்வர:
அக்^{3}னி ராஹவனீயஶ்ச ஜக^{3}தீ ச ஸரஸ்வதீ (18)
த்ரதீயம் ஸவனம் ப்ரோக்த மத^{2}ர்வத்வேன யன் மதம்

வியாக்யானம்: - **த்ருதீயா ச** - மூன்றாவதாகிய மாத்திரையானது, **ஸுவ:** - ஸுவ : என்பதும், **ஸாமானி** - ஸாமவேத வாக்கியங்களும், **ஆதித்ய: ச** - ஆதித்தியனும், **மஹேச்வர:** - மஹேசவரனும், **அக்[3]னி:** - அக்நீயாகிய ஸரஸ்வதீ, **ஆஹவநீய:ச** - ஆஹவனீயமும், **ஜகதீச** - ஜகதீ எனும சந்தஸும், த்ருதீயம் ஸவ னம் - மூன்றாவது ஸவனமுமாம், **யத்** - யாதொன்று, **அதர்வத்வேக** - அதர்வமென, **மதம்** - கொள்ளப்பட்டதோ

பொழிப்புரை: - மூன்றாவதாகிய மாத்திரையில் ஸுவ: என்பதும் ஸாமவேத மும் ஆதித்தியனும் மஹேச்வரனும் ஆஹவ நியமெனும் அக்கிநீயும் ஜகதீ எனும் சந்தஸும் மூன்றாவதாகிய லாயம் ஸவனமும் அடங்கியுள்ளது யாதொன்று அதர்வமெனக் கொள் ளப்பட்டதோ.

ஶ்லோகம்.

சதுர்த்தீ[2] யாऽவஸானேர்த்த மாத்ரா ஸா ஸோம லோககா[3]
அத[2]ர்வாங்கீ[3]ரஸஸ்ம்வர்த்தகோக்கில் சமஹஸ்ததா
விராட் ஸப்[4]யாவஸத்[2]யௌ ச ஶுதுத்[3]ரிர் யஜ்ஞு புச்ச[2]க: (19)

வியாக்யானம்: - **யா** - யாதொன்று, **அவஸானே** - இறுதியிலுள்ளதாகிய, **சதுர்த்தீ[2]** - நான்காவதான, **அர்ததமாத்ரா** - அரை மாத்திரையுளதோ, **ஸா** - அது, அது, ஸோமலோக்கா - சந்திரலோகத் லுவதாம், **அதர்வாங்கிரஸ:** - அதர்வாங்கி ரஸமும், ஶம்வர்த்தக: - ஸம்வர்த்தகமெனும் **அக்நி:ச** - அக்கிநியும், மஹ: மஹ: என்பதும், விராட்.விராட் என்பவனும், ஸப்யாவஸதௌச - ஸபயம் ஆவஸத்தியம் எனும் அக்கிநீகளும், ஶுதுத்ரு: - சுது த்ரு எனும் நதியும், **யஞுபுச்சக:** - யக்ஞுங்களை புச்சமாய்க்கொண்டது மாயுள்ளதென்பதாம்.

பொழிப்புரை: - யாதொன்று இறுதியிலுள்ள நான்காவதான அரை மாத்திரை யுளதோ அதனில் சந்திரலோகம் அதர்வாங்கிரஸம் ஸம்வர்த்தகாக்கிநீ மஹர் என்பது விராட்தேவதை ஸப்யாவ ஸத்யாக்கிநிகள் சுதுத்ரு எனும் நாவேள்வியைப் புச்சமா (வாலா)கக்கொண்டிருத்தல் எனும் இவையடங்கியுள்ளன.

ஸ்லோகம்.

ப்ரத[2]மா ரக்தவர்ணா ஸ்யாத்[3] த்[3]விதீயா பா[4]ஸ்வரா மதா
த்ருதீயா வித்[3]யு தா[3]பா[4] ஸா சதுர்த்தீ[2] ஶுக்ல வர்ணினீ (20)

வியாக்யானம்: - ப்ரதமா - முதலாவது மாத்திரை, **ரக்தவர்ணா ஸ்யாத்[3]** - சிவந்த நிறமுடையதாகும், **த்[3]விதீயா** - இரண்டாவதுமாத்திரை, **பா[4]ஸ்வரா** - மிக்கச் சொலிப்பது (சூரியன் போன் மது) **த்ருதீயா** - மூன்றாவதானது, **வித்[3]யு தா[3]பா[4]**

ஸ்யாத் - மின்னல் நிறமுடையதும், **சதுர்த்தீ**[2] - நான்காவது மாத்திரையானது, **ஶுக்ல வர்ணினீ** - வெண்ணிறமானது.

பொழிப்புரை: - முதலாவது மாத்திரை சிவந்தநிறமும் இரண்டாவது மாத்திரை சூரியநிறமுடையதும் மூன்றாவது மாத்திரை மின்னல் போன்றதும் நான்காவது மாத்திரை வெண்ணிறமுடையதுமாம். இங்கு பிரணவத்தின் மாத்திரை யளவும் மாத்திரையின் நிறமும் ஸர்வப்ரத்தியஷமென்பதல்ல. மற்று யோகிகளாலே யே அறியப்படுவதென சாஸ்திரங்களின் துணிபென அறிக.

ஶ்லோகம்

ஸர்வம் ஜாதம் ஜாயமானம் ததோ[3]ங்காரே ப்ரதிஷ்டித[2]ம் (21)

விஶ்வம் பூ[4]தம் ச பு[4]வனம் விசித்ரம் ப[3]ஹுதா[4] ததா[2]
ஜாதம் ச ஜாயமானம் ச தத்ஸர்வம் ருத்[3]ர உச்யதே (22)

வியாக்யானம்: - **ஜாதம்ச** - உண்டாகியதும், **ஜாயமானம்ச** - உண்டாகின்றது மாகிய ஸகலமும், **ஓங்காரே** - ஓங்காரத்தில், **ப்ரதிஷ்டிதம்** - ப்ரதிஷ்டிக்கப் பட்டுள்ளது, **விசித்ரம்** - விசித்திரமானதும், **பஹுதா** - பலவாறானதும், **ஜாதம்** - உண்டானதும், **ஜாயமானம்ச** - உண்டாகின்றதுமாகிய, **விஶ்வம்** - ஸகல, **புவனம்** - புவனமும், **பூதம்** - பூதமும் ஆகிய, **தத்ஸர்வம்** - அஃதெல்லாம், **ருத்ர:** - ருத்திரனென்று, **உச்யசே** - சொல்லப்படுகின்றது.

பொழிப்புரை: - உண்டானதும் உண்டாகிறதுமாகிய ஸகலமும் ஓங்காரத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளது விசித்திரமானதும் பலவாறானதும் உண்டானதும் உண்டாகின்றதுமாகிய ஸகல புவனமும் பூதமும் ஆகிய இவையெல்லாம் ருத்திர னென்று சொல்லப்படுகின்றது.

விரி உரை: - இங்கு சொல்லப்படுகின்றதென்பது வேதத்தில் என்பதறிக. அதாவது, என்பதாதி யஜுர்வேதாருணம் முதலிய வாக்கியங்களா மென்க.

ஶ்லோகம்.

தஸ்மின்னேவ புன: ப்ராண: ஸர்வ மோங்கார உச்யதே (23)

வியாக்யானம்:: - **தஸ்மின் ஏவ புன:** - அந்த ருத்திரரிடத்திலேயே, **ஸர்வம்** - எல்லரமாயிருக்கிற, **ஓங்கரர:** - ஓங்காரமானது, **ப்ராண:** - பிராணனென்று, **உச்யதே** - சொல்லப்படுகின்றது.

பொழிப்புரை: - அந்த ருத்திரருக்கு ஸர்வமாயுள்ள ஓங்காரம் பிராணனென் பதாம்.

ஶ்லோகம்.

ப்ர விலீனம் ததோ³ங்காரே பரம் ப்³ரஹ்ம ஸனாதனம்
தஸ்மா தோ³ங்கார ஜாபீ ய: ஸ முக்தோ நாத்ர ஸம்ஶய: (24)

வியாக்யானம்: - **தத்** - அந்த, **ஸனாதனம்** - ஸனாதானம் (நித்தியமாயுள்ள), **பரம் ப்ரும்ம** - பரப்ரும்மமானது, **ஓங்காரே** - ஓங்காரத்தில், **ப்ர விலீனம்** - ஒன்றுபட்டு (அடங்கியுள்ளது), **தஸ்மாத்** - ஆதலால், **ஓங்கார ஜாபீ ய:** - ஓங்கார ஜபமுடையோன், **முக்த:** - முக்தனாகின்றான், **அத்ர** - இதனில், ஸம்சய - ஸம்சய மில்லை.

பொழிப்புரை: - நித்தியமான அப்பரம் ப்ரும்மமானது அவ்வோங்காரத்தில் ஒன்றுப்பட்டு அடங்கியுள்ளது. ஆதலால் அவ்வோங்கார ஜபமுடையோன் முக்தனாகின்றான். இதனில் ஸம்சயமில்லை.

ஸ்லோகம்.

த்ரேதாக்³னே: ஸ்மார்த்த வஹ்னேர்வா
ஶைவாக்³னேர்வா ஸமாஹ்ருதம்
ப⁴ஸ்மாऽபிமந்த்ரிய யோமான் து
ப்ரணவேன ப்ரபூஜயேத் (25)

வியாக்யானம்: - **த்ரேதாக்³னே:** - கார்ஹபத்தியம், **ஆஹவநீயம்** - தக்ஷிணாக்கிநீ எனும் மூன்றக்கிநியிலிருந்தாவது, **ஸ்மார்த்த வஹ்னே:வா** - ஸ்மார்த்த அக்கிநியிலிருந்தாவது, **ஶைவாக்³னே:வா** - சைவாக்கிநியிலிருந்தாவது, **ஸமாஹிதம்** - எடுக்கப்பட்ட, **பஸ்ம** - விபூதியை, **ப்ரணவேன** - ப்ரணவத்தினால், **அபிமந்த்ரிஸ** - அபிமந்திரித்து, **மாம்** - என்னை, **ய:** - யாதொருவன், **ப்ரபூஜயேத்** - நன்கு பூஜிப்பானோ

பொழிப்புரை: - கார்ஹபத்தியம் முதலிய முவ்வக்கினியிலிருந்தாவது ஸ்மார்த்தாக்கினியிலிருந்தாவது சைவாக்கினியிலிருந்தாவது எடுக்கப்பட்ட விபூதியை ப்ரணவத்தினால் அபிமந்திரித்து என்னை எவன் நன்கு பூஜிப்பானோ.

ஶ்லோகம்.

தஸ்மாத் பரதரோ ப⁴க்தோ மம லோகே ந வித்³யதே
ஶாலாக்³னேர் தா³வ வஹ்னேர் வா ப⁴ஸ்மானீயாऽபி மந்தரிதம்

யோ விலிம்பதி காத்ராணி ஸ ஶூத்3ரோடபி விமுச்யதே (26)

வியாக்யானம்: - **மம** - எனக்கு, **தஸ்மாத்** - அவனிலும், **பரதா:** - சிரேஷ்டனான, **பக்த** - பக்தன், **லோகே** - உலகில், **நவித்யதே** - இல்லை, **ஶாலாக்³னே:** - ச்ரோத்திரிய னில்லத்திலிருக்கும் அக்கினியிலிருந்தாவது, **தா³வ வஹ்னே: வா** - காட்டுத் தீயினின்றாவது, **ஆனீய** - எடுத்து, **அபிமந்திரம்** - அபிமந்திரிக்கப்பட்ட, **பஸ்ம** - விபூதியை, **காத்ராணி** - அங்கங்களில், **ய:** - எவன், **விலிம்பதி** - பூசிக்கொள்கின்றானோ, **ஸ:** - அவன், **ஶூத்ர: அபி** - சூத்ரனாயினும், **முச்யதே** - முக்தனாகின்றான்.

பொழிப்புரை: - எனக்கு அவனிலும் சிறந்த பக்தன், உலகில் இல்லை வைதிகரது இல்லத்து (அடுப்பு) அக்கிகியிலிருந்தாவது காட்டுத் தீயினின்றாவது எடுத்து அபிமந்திரித்து விபூதியை எவன் அங்கங்களில் பூசிக்கொள்கின்றானோ அவன் சூத்ரனாயிறும் முக்தி யடைகின்றான்.

ஶ்லோகம்.

குஶ புஷ்பைர் பி³ல்வ த³ளை: புஷ்பைர் வா கி³ரி ஸம்ப⁴வை:
யோ மா மர்ச்யதே நித்யம் ப்ரணவேன ப்ரியோ ஹி ஸ: (27)

வியாக்யானம்: - **குஶ புஷ்பை:** - குச (நாணற்புல) புஷ்பங்களினாலாவது, **பில்வதளை:** - பில்வதளங்களினாலாவது, **கிரிஸம்பவை:** - மலையில் தோன்றும், **புஷ்பைர் வா** - புஷ்பங்களினாலாவது, மாம் - என்னை எவன், **நித்யம்** - தினந்தோரும், **ப்ரணவேன** - பிரணவத்தினால், **அர்சயதே** - அர்ச்சிக்கின்றானோ, ஸ: - அவன், **பரிய: ஹி** - பிரியனேயாகின்றான்.

பொழிப்புரை: - குசபுஷ்பங்களினாலாவது பில்வளங்களினாலாவது மலையில் உண்டாகும் மலர்களினாலாவது என்னை எவன் தினந்தோறும் பிரணவத் தினால் பூசிக்கின்றானோ அவன் எனக்குப் பிரியனாகின்றான்.

ஶ்லோகம்.

புஷ்பம் ப²லம் ஸமூலம் வா பத்ரம் ஸலிலமேவ வா
யோ த³த்³யாத் ப்ரணவைர் மஹ்யம் தத் கோடி கு³ணிதம் ப⁴வேத் (28)

வியாக்யானம்: - **புஷ்பம்** - புஷ்பமாயாவது (மாலையாவது), **பலம்** - பழமாயாவது, **ஸமூலம் பத்ரம்வா** - வேறுடன் கூடிய தளத்தையாவது, **ஸலிலம் ஏவவா** - ஜலத்தையேயாவது, ய: - எவன், ப்ரணர்வை: - ப்ரணவத்தினால், **மஹ்யம்** - என்பொருட்டு, **த³த்³யாத்** - கொடுப்பானோ, **தத்** - அது, **கோடி கு³ணிதம்** - கோடி பங்கதிகமாக, **ப⁴வேத்** - ஆகும்.

பொழிப்புரை: - மலரையாவது கனியையாவது வேறுடன் கூடிய தளத்தை யாவது ஜலத்தையேயாவது எவன் எனக்கு ப்ரணவத்தினால் ஸமர்ப்பிப்பானோ அது எனக்கு கோடிபங்கதிகமாகும்.

ஶ்லோகம்.

அஹிம்ஸா ஸத்ய மஸ்தேய ம ஶௌச மிந்த்[3]ரிய நிக்[3]ரஹ:
யஸ்யாஸ்ய த்யயநம் நித்யம் ஸ மே பக்த: ஸ மே ப்ரிய: (29)

வியாக்யானம்: - **யஸ்ய** - எவனுக்கு, **அஹிம்ஸா** - ஹிம்ஸையின்மை, **ஸத்யம்** - பொய்யின்மை, **அஸ்தேயம்** - திருட்டின்மை, **ஶௌசம்** - சுசித்தன்மை, **இந்தரிய நிக்ரஹ**: - இந்திரிய ஜயம், **அத்யயனம்** - வேதாத்யயனம், (எனும் இவை) **நித்யம்** - எப்போதும் மாறாமல், அஸ்தி உள்தோ, **ஸ**: - அவன், **மே** - எனக்கு, **பக்த:** - பக்தன், **ஸ**: - அவன், **மே** - எனக்கு, **ப்ரிய**: - இஷ்டன்.

பொழிப்புரை: - எவனுக்கு அஹிம்ஸை ஸத்தியம் அஸ்தேயம் சௌசம் இந்திரியஜயம் அத்யயனம் அவை நித்தியமாயுளதோ அவன் எனது பக்தன் அவன் எனது பிரியன்.

ஶ்லோகம்.

ப்ரதோ[3]ஷே யோ மம ஸ்தா[2]னம் க[3]த்வா பூஜயதே து மாம்
ஸ பராம் ஶ்ரீய மாப்னோதி பஶ்சான் மயி விலீயதே (30)

வியாக்யானம்: - **ப்ரதோ[3]ஷே** - ப்ரதோஷகாலத்தில், **ய**: - எவன், **மம ஸ்தா[2]னம்** - எனது இருப்பிடத்தை (ஆலயத்தை), **கத்வா** - அடைந்து, **மாம்து** - என்னையே, **பூஜயதே** - பூஜிக்கின்றானோ, **ஸ**: - அவன், **பாரம்** - சிறந்த, **ஶ்ரியம்** - செல்வத்தை, **ஆப்னோதி** - அடைகின்றான், **பஶ்சாத்** - மரித்தபின்னர், **மயி** - என்னிடம், **விதேயதே** - லயமடைகின்றான்.

பொழிப்புரை: - பிரதோஷகாலத்தில் எவன் என் ஆலயத்தை அடைந்து என்னையே பூஜிக்கின்றானோ அவன் சிறந்த ஐச்வரியத்தை யடைகின்றான் இறுதியில் என்னிடம் லயமடைகின்றான்.

குறிப்பு: - ஒருகாலத்தில், தேவர்களும், அசுரர்களும் திருப்பாற் கடலில் மந்தரமலையை மத்தாக நட்டு, ஆதிசேஷனை நாணாகப்பூட்டிக் கடையும்போது அக்கடலில் பஞ்சதருக்களும், காமதேனுவும், இலட்சுமியும், சந்திரனும், வெள்ளை யானையும், மற்று மனேகமான திரவியங்களுமுண்டாயின. இவற்றை யெல்லாம் தேவர்கள் கிரகித்துக்கொண்டார்கள், அப்போது ஆதிசேடன் உபத்திரவம் பொறுக்கா மல் விஷத்தினைக் கக்கிவிட்டனன். அவ்விஷம் எப்பக்கத்திலும் வீசச்

சமீபத்திலிருந்த விஷ்ணு கறுத்து விட்டனர். சிறிது தூரத்திலிருந்த பிரமன் புகை நிறமாயினர். உடனே தேவர்கள் பயந்து சிவபெருமானை நோக்கி முறையமிட, அவர் மனமிரங்கி அவ்விஷத்தினைக் கடுகளவாக்கித் திருவமுது செய்தருளிக் கண்டத் தினிறுத்திக் கொண்டனர். இவ்விஷமுண்டான காலம் திரயோதசி தினம் இரஜனி முகவேளை அதாவது மஞ்சள் வெயில் காய்கிற சாயுங்காலம். இக்காலமே பிரதோஷகாலம்.

இப்பிரதோஷகாலத்தில் தேவர்கள் முதலியவர்கட்கு இடபவாகன ரூடராய்ச் சூலஞ்சுழற்றி யொருசாமம் திருநடனஞ் செய்து அனுக்கிரகித்த தென்றும், அஸ்தமித்த மூன்றே முக்கால் நாழிகையாகிய பிரதோஷகாலம் பார்த்த சிவ தரிசனத்திற்குப் பரியாய பட்சகால மெனவும் சொல்லப்படும். இப்பிரதோஷகால நிர்ணயமானது சிவாலயங்கட்கும், சிவதரிசனம் பண்ணுகிறவர்களுக்கும், விரத மனுஷ்டிப் பவர்கட்கும், ஆத்மார்த்த பூசை பண்ணுகிறவர்கட்கும் விதித்திருக் கின்றது. பிரதோஷகாலத்தில் பிரமவிஷ்ணு முதலிய தேவர்களெல்லோரும் சிவபெருமான் சந்நிதியிலிருப்பார்களாகையால், அந்த வேளையில் சிவபெருமான் ஆலயத்தை நீங்கி வேறு ஆலயத்திற்குப் போகிறவர்கள். நரகத்தினையே யடைவார்கள். விநாயகர், சுப்பிரமணியர், அம்பாள் இவர் கட்கும் சிவபெருமானு க்கும் சிறிதும் பேதமின்மையால் இவ்வாலயங்கட்குப் பிரதோஷகாலத்தில் போய்த்தரிசிக்கலாம். இப்பிரதோஷ காலத்தில் சிவாலயத்தில் ஒரு தீபமேற்றி வைக்கின்றவர்களடையும் பலனை அம்மம்மா! ஆதிசேடனாலும் சொல்ல முடியா தெனின் அனேக தீபமேற்றி வைப்போர் அடையும் பலனை யாரெடுத்துச் சொல்ல வல்லவர். அச்சிவமாகவே விளங்குவார்களே யல்லது வேறில்லை. பிரதோஷ காலத்தில் நந்தியம் பெருமான் கழுத்தில் ஒரு மாலையிடுவோர் சிவசாயுச்சியமே யடைவர். பிரதோஷகாலத்தில் நந்திதேவராகிய இடபதேவருடைய இரண்டு கொம்புகளின் மத்தியில் சிவலிங்க தரிசனஞ் செய்தல் வேண்டும். விஷமுண்ட காலம் சனிக்கிழமை யானதினால், சனிப்பிரதோஷம் மிகுந்த சிறப்புடைத்து. பிரதோஷ காலத்தில் சோம சூத்திரமாகப் பிரதட்சணஞ் செய்யவேண்டும்.

அதாவது முதலில் நந்திதேவரைத் தரிசித்துக்கொண்டு, அங்கிருந்த வண்ணமே இடமாகச்சென்று சண்டேசுர நாயனாரைத் தரிசித்துச் சென்றவழியே திரும்பிவந்து மறுபடி நந்திதேவரைத் தரிசித்து, பின்பு சிவலிங்கந்தரிசனஞ் செய்ய வேண்டும். இவ்வாறு ஒரு பிரதட்சணம் செய்தால் அனந்த பலனுண்டு. ஒருவன் இவ் விரதத்தினை எக்காலமும் அனுஷ்டித்து வருவானாயின் அவனுக்கு மறுசென்மமில்லை. ஒருவன் தான் வாழும் ஊரிலுள்ள சிவாலயத்தில் பிரதோஷ தரிசனம் செய்யாது அன்னம் உண்ணுவானேயானால் அவ்வன்னம் மலத்துக்குச் சமானமாகும். அவனுக்கு ஆபத்துகள் அடிக்கடி நேரிடும். நாளுக்குநாள் குடும்பம் க்ஷணித்து விடும். முடிவில் அவமானமான மரணவேதனைப்பட்டு இறந்தபின் நரகத்தினையே யடைவன். பிரதோஷத்தினைத் தன்னாலியன்றளவு திரவிய சகாய்த்தால் நடத்துபவனும், அதற்கு உதவிசெய்பவனும், அக்காலத்தில் தீபம் வைப்பவனும், அக்காலத்தில் தரிசிப்பவனும் அடையும் பலன் ஒரு சிவாலயத்தினை நூதனமாகப் பிரதிஷ்டை செய்ததனாலுண்டாகிய பெரும் புண்ணியத்தினை யடை வார்கள். இத்தகைய அருமையான உயர்ந்த பிரதோஷத்தினுக்கு இடையூறு

செய்பவர்கள் அடையும் கதியினை இவ்வளவெனச் சொல்லி முடியாது. கோடானு கோடிகாலம் நரகத்தில் வீழ்ந்து துன்பத்தையே யனுபவிப்பார். ஒருவனுக்கு நல்ல மனைவி வேண்டுமாயினும் பிரதோஷ தரிசனமே செய்துவரல் வேண்டும்.

இப்பிரதோஷம் சுக்கிலபட்சம் திரயோதசியாவது, கிருஷ்ண பட்சம் திரயோதசி யாவது உதயாதி உதயாந்தம் அறுபது நாழி கையிருப்பது உத்தமம். உதயாதி முப்பது நாழிகையிருப்பது மத்திமம். உதயாதி இருபத்தாறேகால் நாழிகைக்குமேல் ஒரு வினாடியாவது இருப்பது அதமம். துவாதசிகலந்த திரயோதசி யென்பது முதலில் துவாதசி முப்பது நாழிகைக்குமேல் திரயோதசி பிரவேசித்து மறுநாள் இருபத்தாறே கால் நாழிகை யிருக்கு மேயானால் முதலில் பிரதோஷ கிரியைகள் நடத்த வேண்டியது. ஒருவேளை மறுநாள் உதயாதி இருபத்தாறேகால் நாழிகைக்கு மேல் ஒருவினாடி நாழிகையாவது இருக்குமேயாகில் அன்றைய தினமே நடத்த வேண்டியது. திரயோதசி உதயாதி இருபத்தாறே கால் நாழிகை முதல் இராத்திரி மூன்றே முக்கால் நாழிகை வரைக்கும் நாழிகை ஏழரை. இந்த நாழிகை ஏழரையில் ரஜனிமுக காலத்தில் சம்பவிக்கும் பிரதோஷ காலத்தினை யொப்புக்கொள்ள வேண்டியது. நாள் ஒன்றிற்கு முகூர்த்தம் பதினாறு இவற்றுள் மத்தியான முகூர்த்த மெட்டு, மத்தியான முகூர்த்தமெட்டில் உதயாதி முதல் ஏழு முகூர்த்தத்தைக் கழித்து எட்டாவது முகூர்த்தம் பிரதோஷ காலமாம். இந்த முகூர்த்த மூன்றே முக்கால் நாழிகையை மூன்று பிரிவாகப் பிரிக்கப்பிரிவு ஒன்றுக்கு நாழிகை ஒன்றே கால் இம்மூன்று பிரிவுகளில் முதற்பிரிவிற் பிரதோஷம் நடத்துவது உத்தமம். இரண்டாம் பிரிவில் நடத்துவது மத்திமம். மூன்றாவது பிரிவில் நடத்துவது அதமம். இம்மூன்று பிரிவினால் உண்டாகும் பயன் ஒன்றுக்கொன்று பேதித்ததல்ல. பிரதோஷ மென்றால் முற்பவத்திற்செய்த தோஷ நிவாரணம். அல்லது இராத்திரி யின் முன்காலம் அதாவது ரஜனி முகவேளை மஞ்சள் வெயில் காய்கிறசமயம்.

ஶ்லோகம்.

அஷ்டம்பாம்ச சதுர்தம்யாம் பர்வணோருபயோரபி
பூதிபூஷித ஸர்வாங்கோ யஃபூஜயதி மாமகிசி
க்ருஷ்ணலே விசேவேண ஸமேயக்த ஸமேப்ரிய: (31)

வியாக்யானம்: - **அஷ்டம்யாம்** - அஷ்டமியிலும், **சதுர்த்தஶ் யாம் ச** - சதுர்த்தசியிலும், **உபயோ அபி பர்வணோ:** - இரண்டு பருவங்களிலும் (பூர்ணிமை அமாவாஸ்யைகளிலும்) **விசேஷேண** - விசேஷமாக, **க்ருஷணபக்ஷே** - க்ருஷ்ண பக்ஷத்திலும், **பூதி ஓஷித ஸர்வாங்க:** - தேகமுழுதும் விபூதி பூசியவனாய், **நிசி** - இரவில், **மாம்** - என்னை, **ம:** - எவன், **பூஜயதி** - பூஜிக்கின்றானோ, **ஸ** - அவன், **மே** - எனக்கு, **பக்த:** - பக்தன், **ஸ:** - அவன், **மே** - இஷ்டன்.

பொழிப்புரை: - அஷ்டமியிலும் சதுர்த்தசியிலும் இருபர்வங்களிலும் விசேஷமாக கிருஷ்ணபக்ஷத்திலும் உடம்பு முழுதும் விபூதி பூசியவனாய் எவன் என்னை இரவில் பூஜிக்கின்றானோ அவன் எனது பக்தன் அவன் எனது பிரியன்.

ஶ்லோகம்

ஏகாத3ஶ்யா முபோஷ்யைவம் ய: பூஜயதி மாம் நிஶி
ஸோம வாரே விசேஷேண ஸ மே ப4க்தோ ந நஶ்யதி (32)

வியாக்யானம்: - **ஏகாதச்யாம்** - ஏகாதசியில், **உபோஷ்ய ஏவ** - உபவாஸமாகவே யிருந்தும், **விசேஷேண** - விசேஷமாக, **ஸோம வாரே** - ஸோமவாரத்திலும், **நிசி** - இரவில், **ய:** - எவன், **மாம்** - என்னை, **பூஜயதி** - பூஜிக்கின்றானோ, **ஸ:** - அவன், **மே** - எனது, **பக்த:** - பக்தன், **ந நஶ்யதி** - கேட்டை, அடைகின்றதில்லை.

பொழிப்புரை: - ஏகாதிசியில் உபவாஸ மிருந்தும் விசேஷமாக ஸோமவாரத் தன்றும் இரவில் எவன் என்னைப் பூஜிக்கின்றானோ அவன் என் பக்தன் ஜனன மரணக் கேட்டையடைகின்றதில்லை.

ஶ்லோகம்.

பஞ்சாம்ருதை: ஸ்னாபயேத்3 ய: பஞ்ச க3வ்யேன வா புன:
புஷ்போத3கை: குஶஜலை: தஸ்மான் நான்ய: ப்ரியோ மம (33)

வியாக்யானம்: - **ய:** - எவன் என்னை, **பஞ்சாம்ருதை:** - பஞ்சாமிருதங் களாலும், **பஞ்ச கவ்யேன வா** - பஞ்சகவ்யத்தினாலும், **புஷ்போத3கை:** - மலர்த் தீர்த்தங்களாலும், **குசஜலை:** - தர்ப்ப தீர்த்தங்களாலும், **ஸ்னாபயேத்3** - ஸ்நாநம் செய்விப்பானோ, **மம** - எனக்கு, **தஸ்மாத்** - அவனிலும், **அந்ய:** - அந்நியனாகிய, **ப்ரிய:** **பிரியன், ந** - இல்லை.

பொழிப்புரை: - எவன் என்னைப்பஞ்சாம்ருதங்களினாலும் பஞ்ச கவ்யத்தி னாலும் புஷ்ப தீர்த்தங்களினாலும் தர்ப்ப தீர்த்தங்களினாலும் ஸ்நாநம் செய்விப்பானோ எனக்கு அவளிலும் அக்கியனாகிய பிரியன் இல்லை.

ஶ்லோகம்.

பயஸா ஸர்பிஷா வாऽபி மது4னேக்ஷுரஸேன வா
பக்வாம்ர ப2லஜேனாऽபி நாலிகேர ஜலேன வா (34)

க3ந்தோ4த3கேன வா மாம் யோ ருத்3ர மந்த்ர மனுஸ்மரன்
அபி4ஷிஞ்சேத் ததோ நான்ய: கஶ்சித் ப்ரிய தரோ மம (35)

வியாக்யானம்: - **பயஸா** - பாலினாலும், **ஸர்பிஷாச** - நெய்யினாலும், **மதுநா அபி** - தேனினாலும், **இக்ஷுரஸோ வா** - கரும்புச் சாறினாலும், **பக்வாம்ர பலஜேன அபி** - பக்வமாகிய மாங்கனியின்ரஸத்தாலும், **நாரிகேளஜலேன வா** - இளநீராலும், **கந்தோத கோவா** - சந்தனாதி பரிமள தீர்த்தத்தாலும், **ருத்ர மந்த்ரம்** - ருத்ர மந்திரத்தை, **ஸமுச்சரந்** - உச்சரித்துக்கொண்டு, **ய:** - எவன், **மாம்** - என்னை, **அபிஷிஞ்சேத்** - அபிஷேகம் செய்வானோ, **தத:** - அவனிலும், **அந்ய:** - அந்நியனாகிய, **கச்சித்** - ஒருவனும். **மம** - எனக்கு, **ப்ரியதம:** - மிக்கப்பிரியன், **ந** - இல்லை.

பொழிப்புரை: - பாலினாலும், நெய்யினாலும், தேனினாலும், கரும்புச் சாற்றினாலும், பக்குவமாகிய மாங்கனியினாலும், இளநீராலும், சந்தன பரிமள தீர்த்தத்தாலும் ருத்திர மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு எவன் என்னை, அபிஷேகம் செய்வானோ அவனிலும் எனக்கு மிக்கப்பிரியன் எவனுமில்லை.

ஶ்லோகம்.

ஆதி^{3}த்யாsபி^{4}முகோ^{2} பூ^{4}த்வா ஊர்த்^{4}வ பா^{3}ஹுர் ஜலே ஸ்தி^{2}த:
மாம் த்^{4}யாயன் ரவி பி^{3}ம்ப^{3}ஸ்த^{2}ம் அத^{2}ர்வாங்கி^{3}ரஸம் ஜபேத் (36)

வியாக்யானம்: - எவன், **ஜலே** - ஜலத்தின், **ஸ்தித:** - நின்று கொண்டுள்ள வனாய், **ஆதி^{3}த்யாsபி^{4}முக: பூ^{4}த்வா** - ஆதித்தியனுக்கு (சூரியனுக்கு) எதிர்முகமாய் இருந்து, **ஊர்த்துவபாஹு:** - உயர எடுத்துக் கூப்பியகைகளை யுடையவனாய், **ரவிபிம்பஸ்தம்** - சூரியமண்டலத்திலுள்ளவனாக, **மாம்** - என்னை, **த்யாயன்** - தியானம் செய்து கொண்டு, **அத^{2}ர்வாங்கி^{3}ரஸம்** - அதர்வவேதமந்திரத்தை, **ஜபேத் -** ஜபிப்பானோ.

பொழிப்புரை : -- எவன் ஜலத்திலிருந்துகொண்டு சூரியனுக்கு எதிர்முகமாக வும் உயரக்கைகளைக் கூப்பிக்கொண்டும் சூரியபிம்பத்திலுள்ளவனாகிய என்னைத் தியானித்துக்கொண்டு அதர்வவேத மத்திரத்தை ஜபிக்கின்றானோ.

ஶ்லோகம்.

ப்ரவிஶேன் மே ஶரீரேsஸௌ க்^{3}ருஹம் க்^{3}ருஹபதிர் யதா^{2} (37)

வியாக்யானம்: - **க்ருஹபதி:** - வீட்டுக்காரன், **யதா** - எப்படி, **க்ருஹம்** - வீட்டை அடைகின்றானோ, அப்படியே, **அஸௌ** - இவன், **மே** - எனது, **சரீரே** - சரீரத்தில், **பிரவிசேத்** - பிரவேசிப்பான்.

பொழிப்புரை: - வீட்டுக்காரன் தனது வீட்டிற்குச் செல்லுவது போல இவன் எனது தேகத்தை யடைகின்றான்.

ஶ்லோகம்.

ப்^{3}ருஹத்^{3} ரத^{2}ந்தரம் வாம தே^{3}வ்யம் தே^{3}வ வ்ரதானி ச
தத்^{3}யோக^{3} யாஜ்ய தே^{3}ஹாம்ஶ்ச யோ கா^{3}யதி மமாக்^{3}ரத:
இஹ ஸ்ரீயம் பராம் பு^{4}க்த்வா மம ஸாயுஜ்ய மாப்னுயாத் (38)

வியாக்யானம்: - **ப்^{3}ருஹத்^{3} ரத^{2}ந்தரம்** - பருஹத்ரதwதரம் எனும் வேத பாகத்தையும், **வாம தே^{3}வ்யம்** - வாமதேவ் எனும் மந்திரபாகத்தையும், **தே^{3}வ வ்ரதானி ச** - தேவவ்ரதமந்திரங்களையும், **தத்^{3}யோக^{3} யாஜ்ய தே^{3}ஹாம்ஶ்ச** - அதன் ஸம்பந்தமாகப் பூஜிக்கப்படும் தேஹங்களையும், **மம** - எனக்கு, **அக்^{3}ரத:** - எதிரிலிருந்து, **ய:** - எவன், **காயதி** - ஓதுகின்றானோ, அவன், **இஹ** - இங்கு, **பராம்** - சிறந்த, **ஶ்ரியம்** - ஐச்வர்யச்தை, **புக்த்வா** - புசித்து (பின்னர்) **மம** - எனது, **ஸாயுஜ்யம்** - ஸாயுஜ்யத்தை, **ஆப்நுயாத்** - அடைவான்.

பொழிப்புரை: - ப்ருஹத்ர தந்தர மந்திரத்தையும் வாமதேவ மந்திரத்தையும் அதனில் பிரதிபாதிக்கப்படும் தேகங்களையும் என்னெதிரில் எவன் ஓதித் துதிக்கின் றானோ அவன் இங்கு உத்தமமாகிய ஐச்வரியத்தைப் புசித்துப் பின்னர் என்னை யடைகின்றான்.

ஶ்லோகம்.

ஈஶாவாஸ்யாதி மந்த்ரான் யோ ஜபேன் நித்யம் மமாக்^{3}ரத:
மத் ஸாயுஜ்ய மவாப்னோதி மம லோகே மஹீயதே (39)

வியாக்யானம்: - **ஈஶாவாஸ்யாதி மந்த்ரான்** - ஈசாவாஸ்ய என்பது முதலிய மந்திரங்களை, **ய:** - எவன், **மம** - எனக்கு, **அக்ரத்** - எதிரில், **நித்யம்** - தினந்தோறும், **ஜபேத்** - ஜபிப்பானோ, அவன், **மம** - எனது, **லோகே -** உலகில், **மஹீயதே** - பூஜிக்கப்படுகின்றான், **மத் ஸாயுஜ்யம்** - எனது ஸாயுஜ்யத்தையும், **அவாப்னோதி** அடைகின்றான்.

பொழிப்புரை: - ஈசாவாஸ்யம் முதலிய மந்திரங்களை எவன் எனக்கெதிரிலி ருந்து தினந்தோறும் ஜபிக்கின்றானோ, அவன் எனது உலகில் பெருமை பெறுவதும் தவிர என்னோடு ஸாயுஜ்யத்தையும் அடைகின்றான்.

ஶ்லோகம்.

ப^{4}க்தி யோகோ^{3} மயாக்^{2}யாத: ஏவம் ரகு^{4} குலோத்^{3}வஹ!
ஸர்வ காம ப்ரதோ^{3} மத்த: கிமன்யச் ச்^{2}ரோது மிச்ச^{2}ஸி? (40)

வியாக்யானம்: - ரகு குலோத்³வஹ - ரகு குலத்தைப் பெருமைப்படுத்துவோனாகிய, ஓ ராம, **ஏவம்** - இவ்வாறு, **அமர்த்யா** - நித்தியமாயுள்ளதும், **ஸர்வ காம ப்ரத** - ஸகல கோரிக்கைகளையும் தருவதுமாகிய, **பக்தியோக:** - பக்தியோகமானது, **மயா** - என்னால், **ப்ரோக்த:** - சொல்லப்பட்டது, **அன்யத்** - இன்னம் வேறு, **கிம்** - எதனை, **ச்²ரோதும்** - சிரவணம் செய்ய, **இச்சவி** - இச்சிக்கின்றனை,

பொழிப்புரை: - ஓ ரகு குல ச்ரேஷ்டனே இவ்வாறு நித்தியமும் ஸகல காமங்களையும் தருவதுமாகிய பக்தியோகமானது என்னால் சொல்லப்பட்டது இன்னம் யாதைக்கேட்க விரும்புகின்றனை.

பதினைந்தாம் அத்தியாயம்.

முற்றிற்று.

பதினாறாவது அத்தியாயம்

மோக்ஷ யோகம்

கீதாதிகாரி நிரூபணம்.

ஸ்ரீராம உவாச - ஸ்ரீராமர் சொன்னதாவது.

ஶ்லோகம்.

ப^{4}க^{3}வன்! மோக்ஷ மார்கோ^{3} யஸ்த்வயா ஸம்யகு^{3}தா^{3}ஹ்ருத:
தத்ராऽதி^{4}காரிணம் ப்^{3}ரூஹி தத்ர மே ஸம்ஶயோ மஹான் (1)

வியாக்யானம்: - **ப^{4}க^{3}வன்** - ஓ பகவனே! **த்வயா** - உம்மால், **ய:** - யாதொரு, **மோக்ஷ மார்க:** - மோக்ஷமார்க்கமானது, **ஸம்யக்** - நன்கு, **உதாஹ்ருத:** - சொல்லப் பட்டதோ, **தத்ர** - அதனில், **அதிகாரிணம் -** அதிகாரியை, **ப்ரூஹி** - சொல்லும், **தத்ர** - அதனில், **மே** - எனக்கு, **மஹான்** - பெரிய, **ஸம்சய:** - ஸம்சயமுளது.

பொழிப்புரை: - ஓ பகவனே உம்மால் யாதாமொரு மோக்ஷ மார்க்கம் நன்கு சொல்லப்பட்டதோ அதனில் அதிகாரியைச் சொல்லும் அதனில் எனக்கு மிகவும் ஸந்தேஹமுள்ளது.

ஸ்ரீபகவாந் உவாச - பகவான் கூறியதாவது.

ஶ்லோகம்.

ப்^{3}ரஹ்ம க்ஷத்ர விஶ ஶூத்^{3}ரா: ஸ்த்ரிய ஶ்சாத்ராऽதி^{4}காரிண:
ப்^{3}ரஹ்மசாரீ க்^{3}ருஹஸ்தோ வாऽனுபநீதோऽத^2 வா த்^{3}விஜ: (2)

வனஸ்தோ^{2} வாऽவனஸ்தோ^{2} வா யதி: பாஶுபத வ்ரதீ
ப^{3}ஹுனாऽத்ர கிமுக்தேன யஸ்ய ப^{4}க்தி: ஶிவார்சனே
ஸ ஏவாத்ராऽதிகாரீ ஸ்யான் நான்ய சித்த: கத^{2}ம்சன (3)

வியாக்யானம்: - **அத்ர** - இதனில் (மோக்ஷமார்க்கத்தில்,) **ப்^{3}ருஹ்ம க்ஷத்ர விஶ:** - பிராம்மணக்ஷத்திரிய வைசியர்களும், **ஶூத்^{3}ரா:** - சூத்ரர்களும், **ஸ்த்ரிய: ச** - ஸ்திரீகளும், **அதிகாரிண:** - அதிகாரிகள், **ப்ரஹ்மசாரீ** - பிரரும்மசாரி, **க்ருஹஸ்த: வா** - கிருஹஸ்தன், **அதவா** - அல்லது, **அனுபநீத:** - உபநயநம் செய்யப்பெறாத, **த்^{3}விஜ:** - ப்ராம்மணன், **வன்ச்ஸ்த:** - வனத்திலுள்ளவன், **அவவஸ்த: வா** - வனத்திலில்லாதவன், **யதி:** - ஸந்நியாஸி, **பாஶுபத வ்ரதீ** - பாசுபதவ்ருதமுடை

யோன் எனுமிவர்களாம், **அத்ர** - இவ்விஷயத்தில், **பஹூனா உக்தேன** - மிக்கக்கூறுதலால், **கிம்** - யாது, **யஸ்ய** - எவனுக்கு, **ஶிவார்ச்சனே** - சிவார்ச்சனையில், பக்தி - பக்தியுளதோ, **ஸ:ஏவ** - அவனே, **அத்ர** - இறுதில், **அதிகாரீ ஸ்யாத** - அதிகாரியாவன், **அன்யசித்த:** - ஏனையவைகளில் சித்தமுடையோன், **கத²ம்சன** - எவ்வாற்றாலுமல்ல.

பொழிப்புரை: - இதனில் ப்ராஹ்மண க்ஷத்திரியவைசிய சூத்ரர்களும் ஸ்திரீகளும் அதிகாரிகளாம் ப்ரம்மசாரீ, கிருஹஸ்தன், உபநயனமாகாத பிராஹ்மணன், வானப்பிரஸ்தன், வனத்திலில்லாதவன், ஸந்நியாஸி பாசுபதவ்ருத முடையோன் ஆகிய இவர்கள் அதிகாரிகளாம். மிக்கக்கூறுவதேன் எவனுக்குச் சிவார்ச்சனையில் பக்தியுளதோ அவனே மோக்ஷ மார்க்கத்தில் செல்லத்தக்கவன் வேறுசித்த முடையோனல்ல.

ஶ்லோகம்.

ஜடோ³sந்தோ ப³தி⁴ரோ மூகோ நிஶ்ஶௌச: கர்ம வர்ஜித:
அஞோப ஹாஸாsப⁴க்தாஶ்ச பூ⁴தி ருத்³ராக்ஷ தா⁴ரிண:
லிங்கி³னோ யஶ்ச வா த்³வேஷ்டி தே நாத்ரைவாsதி⁴காரிண: (4)

வியாக்யானம்: - **ஜட:** - மஹாமூடன், **அந்த:** - குருடன், **பதிர**: - செவிடன், **மூக:** - ஊமையன், **நிஶ்ஶௌச:** - ஸ்நாநம் முதலிய சௌசமில்லாதவன், **கர்ம வர்ஜித**: - விதிக்கப்பட்ட கர்மானுஷ்டாநங்களில்லாதவன், **அஞோப ஹாஸா ப⁴க்தாச்சு** - அநுக்ரஹத்திற்குத் தக்க மூடர்களிடம் கருணையின்றி ஏளனம் செய்வோர் பக்தியில்லாதவர், **பூ⁴தி ருத்³ராக்ஷ தா⁴ரிண:** - விபூதி ருத்ராக்ஷதாரிகளாகிய, **லிங்கி³ன:** - சிவசின்னம் தரிப்பவர்களை, **யச்ச** - எவன், **த்வேஷ்டி** - துவேஷிக்கின்றானோ, **தே** - இவர்கள், **அத்ர** - மோக்ஷமார்க்கத்தில், **அதிகாரிண: ந** - அதிகாரிகளல்ல.

பொழிப்புரை: - மஹாமுடன், குருடன், செவிடன், ஊமையன், ஸ்நாநாதி சௌசமில்லாதவன் விதிக்கப்பட்ட கர்மங்களை அனுஷ்டியாத வ்ராத்தியன் மூடர்களிடம் கருணையின்றி ஏளனம் செய்வோன், பக்தியில்லாதவன், விபூதி ருத்திராக்ஷதாரிகளான சிவசின்னகாரர்களை துவேஷிப்பவன் ஆகிய இவர்கள் இதனில் அதிகாரிகளே யல்ல.

ஶ்லோகம்.

யோ மாம் கு³ரும் பாஶுபதம் வ்ரதம் த்³வேஸ்டி நராதி⁴ப!
விஷ்ணும் வா ஸ ந முச்யேத ஜன்ம கோடி ஶதை ரபி (5)

வியாக்யானம்: - **ய:** - எவன், **மாம்** - என்னேயாவது, **குரும்** - தனது குருவையாவது, **பாசுபதம் வ்ரதம்** - பாசுபதவ்ருதத்தை யாவது, **விஷ்ணும்வா** - விஷ்ணுவையாவது, **த்வேஷ்டி** - துவேஷிக்கின்றானோ, **நராதிப** - ஓ அரசனே, ஸ: - அவன், **ஜன்ம கோடி ஶதை: அபி** - ஜன்மகோடி சதங்களாலும், **ந முச்யேத** - முக்தி யடையமாட்டான்,

பொழிப்புரை: - எவன், என்னையாவது தனது குருவையாவது பாசுபதவிரத த்தையாவது விஷ்ணுவையாவது துவேஷிக்கின்றானோ ஓ அரசனே அவன் கல்ப்ப கோடி சதங்களாலும் முக்தியடையான்.

.

ஶ்லோகம்.

அனேக கர்ம ஸக்தோऽபி ஶிவஞான விவர்ஜித:
ஶிவ ப⁴க்தி விஹீனஶ்ச ஸமஸாரீ நைவ முச்யதே (6)

வியாக்யானம்: - **அனேக கர்ம ஸத்த: அபி** - பல கர்மங்களை அநுஷ்டிக் கின்றவனாயினும், **ஶிவஞான விவர்ஜித:** - ஶிவஞானமில்லாதவனும், **ஶிவ ப⁴க்தி விஹீனஶ்ச** - சிவபக்தியில்லாதவனுமான, **ஸம்ஸாரீ** - ஸமஸாரியானவன், **ந முச்யதே ஏவ** - முக்தியடைகின்றதில்லை.

பொழிப்புரை: - பற்பல கர்மங்களை யநுஷ்டிக்கின்றவனாயினும் சிவஞானமும் சிவபக்தியுமில்லாத ஸம்ஸாரியானவன் முக்தியடைகின்றதே யில்லை.

ஶ்லோகம்.

ஆஸக்தா ப²லஸங்கே³ண யே த்வவைதி³க கர்மணி
த்³ருஷ்ட மாத்ர ப²லாஸ்தே து ந ப⁴க்தா வதி⁴காரிண: (7)

வியாக்யானம்: - **யேது** - எவர்கள், **ப²லஸங்கேண** - பயனின் விருப்பத்தினால், **அவைதிக கர்மணி** - அவைதிக (வேதவிரோத)) மாகிய கர்மத்தில், **ஆஸக்தா:** - பிரவர்த்திக்கின்றவர்களை, **த்ருஷ்ட மாத்ரபலா:** - பிரத்தியக்ஷப்பயன் மாத்திரத்தை யுடையவர்களாகிய, **தேது** - அவர்களேவெனின், **முக்தௌ** - முக்தியினில், அதிகாரிண: - அதிகாரிகளல்ல.

பொழிப்புரை: - எவர்கள் பயனின் விருப்பத்தினால் வேத விரோதமாகிய கர்மங்களில் செல்லுகின்றனரோ அப்போதே காணப்படுவதாகிய பிரத்தியக்ஷ மாத்திரப் பயனையுடையவர்களாகிய அவர்கள் முக்திக்கு அதிகாரிகளல்ல.

ஶ்லோகம்.

அவிமுக்தே த்³வாரகாயாம் ஶ்ரீஶைலே புண்ட³ரீககே
தே³ஹாந்தே தாரகம் ப்³ரஹ்ம லப⁴தே மத³னுக்³ரஹாத் (8)

வியாக்யானம்: - **அவிமுக்தே** - காசியிலாவது, **த்³வாரகாயாம்** - துவாரகையிலாவது, **ஶ்ரீசைலே** - ஸ்ரீசைலத்திலாவது, **புண்ட³ரீககே** - சிதம்பரத்திலாவது, **தே³ஹாந்தே** - மரித்தால், **மதனுகரஹாத்** - என்னுடைய அநுக்கிரஹத்தினால், **தாரகம் ப்³ரஹ்ம** - தாரகப்ரஹ்மத்தை (மோக்ஷஹேதுவாகிய பிரணவப்ரும்மோபதேசத்தை) **லபதே** - பெறுகின்றான்..

பொழிப்புரை: - காசியிலாவது துவாரகையிலாவது ஸ்ரீசைலத்திலாவது சிதம்பரத்திலாவது மரிப்பவன் எனது அனுக்கிரஹத்தால் தாரகப்ரும்மோபதேசத் தைப் பெறுகின்றான்.

குறிப்பு: - தாரகம் = ஓம், இது பிரணவம், பிரணவமாவார் சிவபெருமான் “அகாரம் பரஹ்மாணம்” உகாரம் விஷ்ணும்), "மகாராருத்ரம்" “'ஓங்காரம் ஸர்வேசவரம்" என்னும் நிருவிஹ்மோத்தரதாபிக்யுப நிஷத்தால் அறிக. "அத்ரஹி ஐந்தோர் முமூர்ஷோ:" எனும் ஜாபாலோபநிஷத் வாக்யத்தால், பிராணோத் கிரமண காலத்தில், காசிப்பதியின் கண்ணே மூர்ச்சிதர்களாகிய ஸர்வபிராணிகளுக்கும் ஸ்ரீ ருத்ரபகவான் தாரகமாகிய பிரணவத்தை யுபதேசிக்கிறாரென்பதாலு முணர்க.

ஶ்லோகம்.

யஸ்ய ஹஸ்தௌ ச பாதௌ³ ச மனஶ்சாபி ஸு ஸம்யுதம்
வித்³யா தபஶ்ச கீர்த்திஶ்ச ஸ தீர்த்த² ப²ல மஶ்னுதே (9)

வியாக்யானம்: - **யஸ்ய** - எவனுக்கு, **ஹஸ்தௌ ச** - கைகளும், **பாதௌ³ ச** - கால்களும், **மனஶ் ச** - மனமும், **ஸு ஸம்யுதம்** - மிக்க அடக்கங் கொண்டு ள்ளனவோ, **வித்யா** - வித்தையும், **தபச்ச** - தவமும், **கீர்த்திச்ச** - கீர்த்தியும் (ஸாத் விகமாயுள்ளதோ), **ஸ:** - அவன், **தீர்த்தபலம்** - தீர்த்த பயனை, **அஶ்னுதே** - அடைகின்றான்.

பொழிப்புரை: - எவனுக்கு கை, கால், மனம் இவை மிக்க அடக்கமுள்ளன வாகவும் வித்தை, தவம், கீர்த்தி இவை ஸாத்துவிகங்களாகவும் இருக்கின்றனவோ அவனே தீர்த்தபயனை அடைகின்றான்.

நுட்பம்: - பூர்வம் காசிமுதலிய இடங்களில் மரிப்பவனுக்கு மோக்ஷ ஹேது வாகிய தாரகப்ரஹ்மோபதேசம் செய்யப்படுகின்றதாகச் சொல்லப்பட்டதானது காசி முதலிய இடங்களில் பாவங்களைச் செய்துக்கொண்டு நியமம் தவறி மரிப்பவனு

க்கும் நிகழுமோ எனும் சங்கை நிகழ இந்த சுலோகத்தினால் அவ்வுண்மை உபதேசிக்கப்பட்டது. அதாவது காசி முதலிய இடங்களிலிருந்து கொண்டு விதிவழுவி நடப்பவனுக்கு அதோ கதியே யன்றி வேறில்லை என்பதே இவ்வுண்மையானது.

அவர்கள் காசியில் விதிமுறை வழுவி ஆகார வியவஹாரங்களில் உழன்று கொண்டு வஸிக்கின்றார்களோ அவர்களுக்கு காசி நரகத்திற்கு சமானமாகவும் கங்கை அக்னி யாற்றிற்கு சமானமாயும், ஆகின்றது. என்பது முதலிய வாக்கியங்களால் காசிகாண்டம் முதலியவைகளில் உபதேசிக்கப்படுகின்றது.

ஶ்லோகம்.

விப்ரஸ்யாsனுபநீதஸ்ய விதி[4]ரேஷ உதா[3]ஹ்ருத:
நாsபிவ்யாஹாரயேத் ப்[3]ரஹ்ம ஸ்வதா[4] நினயனா த்[3]ருதே (10)

வியாக்யானம்: - அனுபநீதஸ்ய - உபநயனமாகாதவனான, **விப்ரஸ்ய** - அந்தணனுக்கு, **ஏவம்** - பின்வருமாறு, **விதி:** - விதியென்று, **உதாஹ்ருத:** - உதகரிக்கப்பட்டது, **ப்ரஹ்ம** - வேதத்தை, **ஸ்வதா நிநயநாதருதே** - உபாயந ஸம்ஸ்காரமின்றி, **ந அபிவ்யாஹாரஹாரயேத்** - சொல்லக்கூடாது.

பொழிப்புரை: - உபநயனம் பெறாத அந்தணனுக்குப் பின் வருமாறு விதியாம். வேதத்தை உபநயன ஸம்ஸ்காரம் பெறாமல் சொல்லக்கூடாது.,

ஶ்லோகம்.

ஸ ஶூத்[3]ரேண ஸமஸ்தாவத் யாவத்[3] வேதா[3]ன் ந ஜானதே
நாம ஸங்கீர்த்தனே த்[4]யானே ஸர்வ ஏவாsதி[4]காரிண: (11)

வியாக்யானம்: - **எவன்**, **யாவத்** - எதுவரையில், **வேதாத்** - வேதத்தால் (உபநயனச் சடங்கால்), **ந ஜாயதே** - பிறக்கின்றதில்லையோ (ஸம்ஸ்கரிக்கப் பட்டவனாகவில்லையோ) **தாவத்.** - அதுவரையில், **ஸ:** - அவன், **ஶூத்ரேண** - சூத்திரனோடு,. **ஸம:** - ஸமனயுள்ளவன், **நாம ஸங்கீர்த்தனே** - நாமோச் சாரணத்திலும், **த்யானே** - தியானத்திலும், **ஸர்வே ஏவ** - எல்லோருமே, அதிகாரிண: - அதிகாரிகளாகின்றனர்.

பொழிப்புரை: - எவன் எதுவரையில் உபநயன ஸம்ஸ்காரம் பெறவில்லையோ அதுவரையில் சூத்திரனுக்கு நிகராம். நாமோச் சாரணத்திலும் தியானத்திலும் எல்லோருமே அதிகாரிகள்.

ஶ்லோகம்.

ஸம்ஸாரான் முச்யதே ஐந்து: ஶிவ தாதா³த்ம்ய பா⁴வனாத் (12)

யதா² தா³னம் தபோ வேதா³த்⁴யயனம் சாsன்ய கர்ம வா
ஸஹஸ்ராம் ஶந்து நாsர்ஹந்தி ஸர்வதா³ த்⁴யான கர்மண: (13)

வியாக்யானம்: - **ஐந்து**: - ஜீவன், **ஶிவ தாதா³த்ம்ய பாவனாத்** - ஶிவனோடு தாதான்மியத்தியானத்தினால், **ஸம்ஸாரான்** - ஸம்ஸாரத்தினின்றும், **முச்யதே** - முக்தியடைகின்றான், **யதாதானம்** - விதிப்படியுள்ள **தானம், தப**: - தவம், **வேதாத்யயனம்ச** - வேதாத்தியயனமுமு, **அன்ய கர்ம வ:** - மற்றுமுள்ள புண்ணிய கர்மமும், **ஸாவதா** - எப்போதும், **த்யானகர்மண:** - தியானித்தலெனும் கர்மாவுக்கு, **ஸஹஸ்ராம் ஶந்து** - ஆயிரத்திலோர் அம்சத்திற்கும், **நஅர்ஹந்தி** - அர்ஹமா தக்கதா என்றறிக.

பொழிப்புரை: - ஜீவன் சிவதாதான்மிய பாவனையால் ஸம்ஸாரத்தினின்றும் முக்தனாகின்றான். விதிப்படியாகிய தானம் தவம் வேதாத்யயனமும் மற்றுமுள்ள புண்ணியங்களும் தியானத்தின் ஆயிரத்தில் ஒரு பங்குக்கும் நிகராகா.

ஶ்லோகம்

ஜாதி மாஶ்ரம் மங்கா³னி தே³சம் கால மதா²பி வா
ஆஸனாதீ³னி கர்மாணி த்⁴யானம் நாபேக்ஷதே க்வசித் (14)

வியாக்யானம்: - **த்யானம்** - தியானமானது, **ஜாதிம்** - ஜாதியை யாவது, **ஆஶ்ரமம்** - பரம்மசரியம் முதலிய ஆச்ரமத்தையாவது, **அங்கா³னி** - யமநியமாதி அங்கங்களையாவது, **தேசம்** - இடத்தையாவது, **அதகாலம் அபிவா** - காலத்தையாவது, **ஆஸநாதீ³னி** - ஆஶனம் முதலியனவாகிய, **கர்மாணி** - கர்மங்களையாவது, **க்வசித்** - ஒரு போதும், **ந அபேக்ஷதே** - அபேவிக்கின்றதில்லை.

பொழிப்புரை: - தியானமானது ஜாதி, ஆச்ரமம், அங்கங்கள், தேசம், காலம், ஆஸனம் முதலிய கர்மங்கள் இவை முதலியவைகளில் எதனையும் ஒருபோதும் கோருகின்றதில்லை அதாவது தியானத்திற்கு இவைகளுள் யாதேனும் வேண்டு மெனும் நியமமில்லை என்றறிக.

ஶ்லோகம்

க³ச்ச²ம் ஸ்திஷ்ட²ன் சரன் வாsபி ஶயானோ வாsன்ய கர்மணி
பாதகேனாபி வா யுக்தோ த்⁴யானாதே³வ விமுச்யதே (15)

வியாக்யானம்: - **க³ச்ச²ம்** - நடக்கின்றவனாயினும், **திஷ்ட²ன்** - நிற்கின்றவனாயினும், **சரன்sவாபி** - திரிந்து கொண்டிருக்கின்றவனாயினும், **ஶயானோ வா** - படுத்துக்கொண்டிருக்கின்றவனாயினும், **அன்ய கர்மணி** - வேறு காரியத்தினில் செல்லுகின்றவனாயினும், **பாதகேன அபி** - பாதகமாகிய செயலோடு, **யுக்த: வா** - கூடியவனாயினும், **த்⁴யானாதே³வ** - தியானத்தினாலேயே, **முச்யதே** - முக்தனாகின்றனன்.

பொழிப்புரை: - நடக்கின்றவனாயினும், நிற்கின்றவனாயினும், திரிகின்றவனாயினும், படுத்துக்கொண் டிருக்கின்றவனாயினும், வேறு காரியத்தைச் செய்கின்றவனாயினும் தியானத்தாலேயே முக்தியடைகிறான்.

ஶ்லோகம்.

நேஹாபி⁴க்ரம நாஶோஸ்தி ப்ரத்யவாயோ ந வித்³யதே
ஸ்வல்ப மப்பஸ்ய த⁴ர்மஸ்ய த்ராயதே மஹதோ ப⁴யாத் (16)

வியாக்யானம்: - **இஹ** - இந்தத் தியானத்தினில், **அபிக்ரம நாஶ** - ஆரம்பநாசம், (இடையூறு) **நாஸ்தி** - இல்லை, **ப்ரத்யவாய:** - பிரத்தியவாய, (அநர்த்தம்) **நவித்யதே** - இல்லை, **அஸ்ய** - இந்த, **தர்மஸ்ய** - தர்மத்தினது, **ஸ்வல்ப்பம் அபி** - அற்பமும், **மஹத:** - பெரிய, **பயாத்** - பயத்தினின்றும், **த்ராயதே** - ரவிக்கின்றது.

பொழிப்புரை: - இத்தியானத்திற்கு இடையூறு யாதும் நிகழுதலில்லை (மாறுபட்டால்) பிரத்தியவாயமுமில்லை இது ஸ்வல்பமாய் அனுஷ்டிக்கப்படினும் அதனால் நிகழும் தர்மமானது பெரிய பயத்தினின்றும் ரக்ஷிக்கின்றது.

ஶ்லோகம்.

ஆஶ்சர்யே வா ப⁴யே ஶோகே க்ஷுதே வா மம நாம ய:
வ்யாஜேனாபி ஸ்மரேன் மர்த்ய: ஸ யாதி பரமாம் க³திம் (17)

வியாக்யானம்: - **ஆஶ்சர்யே** - அற்புதமாகிய செய்கை நிகழும்போதாவது, **பயேவா** - பயம் நிகழும்போதாவது, **ஶோகே** - சோகம் (துக்கம்) நிகழும்போதாவது, **க்ஷுதேவா** - தும்மல் நிகழும்போதாவது, **நாம** - பெயரை, **ய:** - எவன், **வ்யாஜேன அபி** - வியாஜத்தினாலாவது, **ஸ்மரேத்** - ஸ்மரிப்பானோ (எண்ணுவானோ), **ம:மர்த்ய:** - அம் மனிதன், **பரமாம்** - உத்தமமாகிய, **கதிம்** - பதத்தை, **யாதி** - அடைகின்றான்,

பொழிப்புரை: - ஆஶ்சர்யம், பயம், சோகம், இவை நிகழும் போதாவது தும்மல் நிகழும் போதாவது வியாஜத்தினாலாவது எவன் எனது நாமத்தை ஸ்மரிக்கின்றானோ அவன் பரமகதியை யடைகின்றான்.

ஶ்லோகம்.

மஹா பாபைரபி ஸ்ப்ருஷ்டோ தே[3]ஹாந்தே யஸ்து மாம் ஸ்மரேத்
பஞ்சாக்ஷரீம் வோச்சரதி ஸ முக்தோ நாத்ர ஸம்ஶய: (18)

வியாக்யானம்: - **மஹா பாபை:** - மஹாபாபங்களினால், **ஸ்ப்ருஷ்ட: அபி** - பற்றப்பட்டவனாயினும், **ய:** - எவன், **தேஹாந்தே** - சரீராந்த (மரணகாலத்தில், **மாம்** - என்னை, **ஸ்மரேத்** - ஸ்மரிப்பானோ, **பஞ்சாக்ஷரீம் வா** - பஞ்சாக்ஷரத்தையாவது, **உச்சாதி** - உச்சரிக்கின்றானோ, **ஸ:** - அவன், **முக்த:** - முக்தனாகின்றான், **அத்ர** - இதனில், **ஸம்ஶய:** - சம்சயம், **ந** - இல்லை,

பொழிப்புரை: - மஹாபாவங்களினால் பற்றப்பட்டவனாயினும் எவன் மரண காலத்தில் என்னை ஸ்மரிப்பானோ அல்லது பஞ்சாக்ஷரத்தை யுச்சரிப்பானோ அவன் முக்தனாகின்றான் இதில் ஸந்தேகமில்லை.

ஶ்லோகம்.

விஶ்வம் ஶிவமயம் யஸ்து பஶ்யன் னாத்மான மாத்மனா
தஸ்ய க்ஷேத்ரேஷு தீர்த்தே[2]ஷு கிம் கார்யம் வாsன்ய கர்மஸு (19)

வியாக்யானம்: - **ய:** - எவன், **ஆத்மாநம்** - தன்னையும், **விஶ்வம்** - ஸகலத்தையும், **ஶிவமயம்** - சிவஸ்வரூபமாக, **ஆத்மனா** - புத்தியினால், **பஶ்யன்** - காண்கின்றானோ, **தஸ்ய** - அவனுக்கு, க்ஷேத்ரேஷு - புண்ணிய க்ஷேத்திரங்களிலாவது, **தீர்த்தே[2]ஷு** - தீர்த்தங்களிலாவது, **அன்ய கர்மஸு** - வேறு கர்மங்களிலாவது, **கார்யம்** - செய்யவேண்டியது, **கிம்** - யாதுளது?

பொழிப்புரை: - எவன் தன்னையும் ஸகலத்தையும் சிவஸ்வரூபமாக அறிவினால் காண்கின்றானோ அவனுக்கு க்ஷேத்திரங்களிலாவது தீர்த்தங்களிலாவது வேறு கர்மங்களிலாவது செய்யவேண்டியது யாதுளது?

ஶ்லோகம்.

ஸர்வேண ஸர்வதா[3] கார்யம் பூ[4]தி ருத்[3]ராக்ஷ தா[4]ரணம்
யுக்தேனாsப்பயுக்தேன ஶிவ ப[4]க்தி மபீ[4]ப்ஸதா (20)

வியாக்யானம்: - **யுக்தேன** - கர்மாநுஷ்டான முடையோனாயினும், **அயுக்தேன** - கர்மாநுஷ்டான மிராதிருக்கின்றவனாயினும், **ஶிவ ப⁴க்திம்** - சிவபக்தியை, **அபீ⁴ப்ஸதா -** விரும்புகின்றவனாகிய, **ஸர்வேண** - எவனாகிலும், **ஸர்வதா** - எப்போதும், **பூதிருத்ராஷதாரணம்** - விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்தல், **கார்யம்** - செய்யவேண்டியது.

பொழிப்புரை: - ஶிவபக்தியை விரும்புவோனாயின் கர்மானுஷ்டானத் தோடிருக்கின்றவனாயினும் அங்ஙன மிராதவஞயிலும் அவனால் விபூதிருத்திராக்ஷ ங்களை அவசியம் தரிக்கவேண்டியது.

ஶ்லோகம்.

நர்ய ப⁴ஸ்ம ஸமாயுக்தோ ருத்³ராக்ஷான் யஸ்து தா⁴ரயேத்
மஹா பாபைரபி ஸ்ப்ருஷ்டோ முச்யதே நாத்ர ஸம்ஶய: (21)

வியாக்யானம்: - **ய:** - **எவன், நர்ய பஸ்ம ஸமாயுக்த:** - அக்னி ஹோத்திர பஸ்மாவை (விபூதியை) அணிந்துகொண்டவனாய், **ருத்ராக்ஷான்** - ருத்திராஷங் களை, **தா⁴ரயேத்** - தரிப்பானோ, **மஹாபாபை:** - மஹாபாபங்களினால், **ஸ்ப்ருஷ்ட:** - ஸ்பரிசிக்கப்பட்டவனாயிருக்கினும் அவன், **முச்யதே** - அவைகளினின்றும், விடு படுகின்றான், **அத்ர** - இதனில், **ஸம்ஶய** - சம்சயம், **ந** - இல்லை.

பொழிப்புரை: - எவன் அக்நிஹோத்திர விபூதியை அணிகின்றவனாய் ருத்திராஷங்களைத் தரித்துக்கொள்ளுகின்றானோ அவன் பாபங்களைச் செய்திருந்த வனாயினும் அவைகளினின்று விடுபடுகின்றான். இதனில் ஸம்சயமில்லை.

ஸ்லோகம்.

அன்யானி ஶைவகர்மாணி கரோது ந கரோது வா
ஶிவ நாம ஜபேத்³யஸ்து ஸர்வதா³ முச்யதே து ஸ: (22)

வியாக்யானம்: - **அன்யானி** - ஏனையவைகளான, **ஶைவகர்மாணி** - சைவாசாரங்களை, **கரோது** - செய்யட்டும். (அல்லது) **ந கரோது** - செய்யாமலிருக்கட்டும், **ய:** - எவன், **ஶிவ நாமது** - சிவ நாமாவையே, **ஸர்வதா** - எப்போதும், **ஜபேத்** - ஜபிப்பானோ, **யஸ்து** - அவனே, **முச்யதே** - முத்தனாகின்றான்.

பொழிப்புரை: - ஏனைய சைவாசாரங்களைச் செய்தாலும் செய்யாவிடினும் சிவநாமாவையே எவன் எப்போதும் ஜபிப்பானோ அவன் முக்தனாகின்றான்.

ஶ்லோகம்.

அந்தகாலே து ருத்^{3}ராக்ஷான் விபூ^{4}திம் தா^{4}ரயேத்து ய:
மஹா பாபோப பாபௌகை^{4} ரபி ஸ்ப்ருஷ்டோ நராsத^{4}ம:
தம் ஜனம் நோ பஸர்ப்பந்தி ஸர்வதா யமகிங்கரா: (23)

வியாக்யானம்: - **அந்தகாலேத்** - கடைசி காலத்திலே, **ய:** - எவன், நராதம நராதமன், **ருத்ராக்ஷான்** - ருத்திராக்ஷங்களையும், **விபூ^{4}திம்** - விபூதியையும், **தாரயேத்** - தரிப்பானோ, **மஹா பாபோப பாபௌகை^{4}: அபி** - மஹாபாபங்கள் உபபாபங்கள் இவைகளின் ராசிகளாலும், **ஸ்ருஷ்ட: அபி** - பரிசிக்கப்பட்டவனா யினும், **தம் ஜனம்** - அந்த மனிதனை, **யமகிங்கரா:** - யமகிங்கரர், **ஸர்வதா** - எவ்வாற்றாலும், **ந உபஸர்ப்பந்தி** - அணுகுகின்றதில்லை.

பொழிப்புரை: - எந்த நராதமன் அந்த காலத்தில் விபூதிருத்ராக்ஷங்களைத் தரிக்கின்றானோ மஹாபாப உபபாபராசிகளால் ஸ்பரிசிக்கப்பட்டவனாயினும் அம்மனிதனை எவ்வாற்றாலும் யமகிங்கரர்கள் அணுகுகின்றதில்லை.

ஶ்லோகம்.

பில்வமூலம்ருதாயஸ்து சரீரமுபலிம்பதி
அந்தகாலேந்தகஜனை : ஸதூரிக்ரியதே நர: (24)

வியாக்யானம்: - **ய:** - எவன், **சரீரம்** - சரீரத்தை, **அந்தகாலேத்** - கடைசி காலத்தில், **பில்வமூலம்ருதா** - பில்வவிருட்சத்தின் அடியிலுள்ள மண்ணால், **உபலிம்பதி** - பூசிக்கின்றானோ, **ஸ:நர:** - அந்த மனிதன், **அந்தகஜனை:** - யமதூதர் களால், **தூரிக்யதே** - தூரத்தில் ஒதுக்கப்படுகிறான்.

பொழிப்புரை: - எவன் அந்தக்காலத்தில் பில்வமூல மண்ணை சரீரத்தில் பூசிக்கொள்ளுகின்றானோ அம்மனிதன் யமதூதர்களால் தூரத்திலேயே தவிர்க்கப்படு கின்றான்.

ஸ்ரீராம உவாச - ஸ்ரீராமர் சொன்னார்.

ஶ்லோகம்

ப^{4}க^{3}வன் பூஜித: குத்ர குத்ர வா த்வம் ப்ரஸீத^{3}ஸி
தத்^{3} ப்^{3}ரூஹி மம ஜிஞாஸா வர்ததே மஹதீ விபோ^{4} (25)

வியாக்யானம்: - **ப^{4}க^{3}வன்** - ஓ பகவனே, **த்வம் -** நீர், **குத்ர** - எங்கு, **பூஜித:** - பூஜிக்கப்படுகின்றீர், **குத்ர வா** - எதனிடம், **ப்ரஸீத^{3}ஸி** - ப்ரஸன்னராகின்றீரோ, **தது**

- அதனை, **ப்ரூஹி** - சொல்லும், **விபோ** - ஓ இறைவனே, **மம** - எனக்கு, ஜிஞாஸா - அறிவதில் விருப்பம, **மஹதி** - மிகவும், **வர்ததே** - இருக்கின்றது.

பொழிப்புரை: - ஓ பகவனே, தேவரீர் எதனிடம் பூஜிக்கப்படுகின்றீரோ எதனிடம் அனுக்கிரஹிக்கின்றீரோ அதனைத் தெரிந்து கொள்வதில் எனக்கு மிகவும் விருப்பமுள்ளது. ஆதலின் சொல்லுங்கள்.

ஸ்ரீபகவான் உவாச - ஸ்ரீபகவான் சொன்னார்.

ஶ்லோகம்.

ம்ருதா³ வா கோ³மயேனாபி ப⁴ஸ்மனா சந்த³னேன வா
ஸிகதாபி⁴ர் தா³ருணா வா பாஷாணேனாபி நிர்மிதா (26)

லோஹேன வாsத² ரங்கே³ண காம்ஸ்ய பித்தல கர்பரை:
தாம்ர ரௌப்ய ஸுவர்ணைர் வா ரத்னைர் நானாவிதை⁴ ரபி (27)

அத²வா பாரதே³னைவ கர்பூரேணாsத²வா க்ருதா
ப்ரதிமா ஶிவலிங்க³ம் வா த்³ரவ்யை ரேதை: க்ருதம் து யத்
தத்ர மாம் பூஜயேத் தேஷு ப²லம் கோடி கு³ணோத்தரம் (28)

வியாக்யானம்: - **ம்ருதா³ வா** - மண்ணாலாவது, **கோ³மயேனாபி** - பசுவின் சாணத்தினாலாவது, **ப⁴ஸ்மனா** - விபூதியினாலாவது,, **சந்த³னேன வா** - சந்தனத்தினாலாவது, **ஸிகதாபி⁴:** - மணலினாலாவது, **தா³ருணா வா** - சடையினா லாவது, **பாஷாணேன** - சிலையினாலாவது, **நிர்மிதா** - செய்யப்பட்டதாயினும, (அல்லது) **லோஹேன வா** - இரும்பினாலாவது, **ரங்கே³ண** - ஈயத்தினாலாவது, **காம்ஸ்ய க்கர்பா பித்தளை:** - வெங்கலம், துத்திநாகம், பித்தளை, இவைகளினா லாவது, **தாம்ர ரௌப்ய ஸுவர்ணைர்வே** - செம்பு, வெள்ளி, பொன் இவைகளி னாலாவது, **நாநாவிதை:** - பற்பல வாறாயுள்ள, **ரத்னை: -** ரத்தங்களினாலாவது, **அதவா** - அல்லது **பாரதே³னைவ** - பாதரஸத்தினாலாவது, **கர்பூரேண** - கர்ப்பூரத்தினாலாவது, **க்ருத** - செய்யப்பட்ட, **ப்ரதிமா** - பரதியை பரதிமையாவது, **ஏதை: தாவைக்ருதம்** - இப்பொருள்களினால் செய்யப்பட்ட, **லிங்கம்வா** - லிங்கமா னது **எத்** - யாதொன்று உளதோ, **தத்ர** - அதனில், **த்வாம்** - என்னை, **பூஜயேத்** - பூஜிக்கவேண்டும், **தேஷ** - அவைகளின் மூலமாய், **பலம்** - நிகழும் பயனானது, **கோடிகுண உத்தரம்** - கோடி பங்கு அதிகமாம்.

பொழிப்புரை: - மண், பசுவின் சாணம், விபூதி, சந்தனம், மணல், சடை, சிலை இவைகளினாலாவது இரும்பு, ஈயம், வெங்கலம், துத்திநாகம், பித்தளை, செம்பு, வெள்ளி, பொன் பலவிதமாயுள்ள ரத்னங்கள், பாதரஸம், கர்ப்பூரம் இவைகளினாலாவது செய்யப்பட்ட ப்ரதிமையாகிய லிங்கம் யாதொன்று உளதோ

அதனில் என்னை பூஜிக்கவேண்டும், அதனால் உண்டாகும் பயன் உத்தரோத்தரம் கோடிபங்கு அதிகம்.

ஶ்லோகம்.

ம்ருத்^{3} தா^{3}ரு காம்ஸ்ய லோஹைஶ்ச பாஷாணேனாபி நிர்மிதா
க்^{3}ருஹிணா ப்ரதிமா கார்யா ஶிவம் ஶஶ்வ த^{3}பீ^{4}ப்ஸதா (29)

ஆயு: ஶ்ரீயம் குலம் த^{4}ர்மம் புத்ரா னாப்னோதி தை: க்ரமாத்

வியாக்யானம்: - **ஶிவம்** - க்ஷேமத்தை, **ஶஶ்வது** - அடிக்கடி, **அபீப்ஸதா** - மிகவும் விரும்புவோனாகிய, **க்ருஹிணா** - கிருஹஸ்தனால் (இல்லறத்தோனால்), **ம்ருத்^{3} தா^{3}ரு காம்ஸ்லோஹைச்ச** - மண், சடை, வெங்கலம், இரும்பு இவை களாலும், **பாஷாணேன** - சிலையினால், **நிர்மிதா** - செய்யப்பட்டதாகிய, **ப்ரதிமா** - ப்ரதிமையானது, **கார்யா** - பூஜிக்கத்தக்கது, **தை:** - அவைகளினால், **க்ரமாத்** - முறையே, **ஆயு:** - ஆயுளையும், **ஶ்ரீயம்** - செல்வத்தையும், **குலம்** - குலத்தையும், **தர்மம்** - தர்மததையும், **புத்ரான்** - புத்திரர்களையும், **ஆப்னோதி** - அடைகின்றான்.

பொழிப்புரை: - அடிக்கடி சுபத்தை விரும்பும் இல்லறத்தோன், மண்ணினா லாவது, சடையினாலாவது, வெண்கலத்தாலாவது, இரும்பினாலாவது, சிலையினா லாவது, நிர்மிக்கப்பட்டப்ரதிமையை பூஜிக்கவேண்டும். அங்ஙனம் பூஜிப்பானாயின் முறையே ஆயுள், செலவம், குலம், தர்மம், புதல்வர் இவைகளை அடைகின்றான்.

ஶ்லோகம்.

பி^{3}ல்வ வ்ருக்ஷே தத்ப^{2}லே வா யோ மாம் பூஜயதே நர:
பராம் ஶ்ரீய மபி^{4}ப்ராப்ய மம லோகே மஹீயதே (30)

வியாக்யானம்: - **பி^{3}ல்வ வ்ருக்ஷே** - பில்வ விருக்ஷத்திலாவது, **தத்ப^{2}லே வா** - அதன் கனியிலாவது, **மாம்** - என்னை, **ய:** - எந்த, **நர:** - மனிதன், **பூஜயதே** - பூஜிக்கின்றானோ, (அவன்) **இஹ** - இங்கு, **பராம் ஶ்ரீயம்** - அபாரமான செல்வத்தை, **ப்ராப்ய** - பெற்று, **மம லோகே** - (இறுதியில்) எனது உலகில், **மஹீயதே** - விளங்குகின்றான்.

பொழிப்புரை: - எந்த மனிதன் பில்வ விருக்ஷத்திலாவது, அதன் கனியிலா வது என்னை பூஜிக்கின்றானோ அவன் இம்மையில் மிக்கச் செல்வமுடையோனா யிருந்து, மறுமையில் என்னுலகி லேயே விளங்குவான்.

ஶ்லோகம்.

பி^{3}ல்வ விருக்ஷம் ஸமாஶ்ரித்ய யோ மந்த்ரான் விதி^{4}னா ஜபேத்
ஏகேன தி^{3}வஸேனைவ தத் புரஶ்சரணம் ப^{4}வேத் **(31)**

வியாக்யானம்: - **ய:** - எவன், **பில்வவிருஷம்** - பில்வமரத்தடியை, **ஸமாஶ்ருத்ய** - அடைந்து, **மந்த்ரான்** - மந்திரங்களை, **விதி^{4}னா** - விதிப்படி, **ஜபேத்** - ஜபிப்பானோ, **ஏகேன** - ஒரு, **திவஸேன ஏவ** - தினத்தினாலேயே, **தத் புரஶ்சரணம் -** அந்த மந்திரத்தின் புரஶ்சரணம் (ஸித்திஸமயத்தில் செய்யுங்கிரியை) **பவேத்** - செய்யப்பட்டதாகும்.

பொழிப்புரை: - எவன் பில்வவிருக்ஷத்தின் அடியில் உட்கார்ந்து மந்திரங்களை விதிப்படி செபிப்பானோ அவன் ஒரே தினத்தில் அம்மந்திரத்திற்கு புரஸ்சரணஞ் செய்யத்தகும்.

ஶ்லோகம்.

யஸ்து பி^{3}ல்வ வனே நித்யம் குடீம் க்ருத்வா வஸேன் நர:
ஸர்வே மந்தரா: ப்ரஸித்^{4}யந்தி ஜப மாத்ரேண கேவலம் **(32)**

பர்வதாக்^{3}ரே நதீ^{3} தீரே பி^{3}ல்வ மூலே ஶிவாலயே
அக்^{3}னிஹோத்ரே கேஶவஸ்ய ஸன்னிதௌ^{4} து ஜபேத்து ய: **(33)**

நைவாஸ்ய விக்^{4}னம் குர்வந்தி தா^{3}னவா யக்ஷராக்ஷஸா:
தம் ந ஸ்ப்ரஶந்தி பாபானி ஶிவ ஸாயுஜ்ய ம்ருச்ச^{2}தி **(34)**

வியாக்யானம்: - **ய:** - எந்த, **நர:** - மனிதன், **பில்வ வனேது** - பில்வவனத்திலேயே, **குடீம்** - ஆச்ரமத்தை, **க்ருத்வா** - அமைத்துக் கொண்டு, **நித்யம்** - எப்போதும், **வஸேத்** - வலிப்பானோ, (அவனுக்கு) **ஸர்வே மந்த்ரா:** - ஸகலமந்திரங்களும், **கேவலம் ஜப மாத்ரேண** - கேவலம் ஜபத்தினாலேயே, **ப்ரஸித்யந்தி -** ஸித்தி ஆகின்றன, **பர்வதாக்^{3}ரே** - மலையின் சிகரத்திலாவது, **நதீதீரே** - நதிக்கரையிலாவது, **பில்வ மூலே** - பில்வவிருக்ஷத்தி னடியிலாவது, **ஶிவாலயே** -ஶிவாலயத்திலாவது, **அக்^{3}னிஹோத்ரே** - அக்னிஹோத்ர சாலையிலாவது, **கேஶவஸ்ய** - கேஶவனது (விஷ்ணுவினது) ஸந்நிதௌ - ஸந்நிதியிலாவது, **ய:** - எவன், **ஜபேத்** - ஜபஞ்செய்வானோ, **அஸ்ய** - அம்மனிதனுக்கு, **தா^{3}னவா:** - அசுரர்களும், யக்ஷராக்ஷஸா: - யக்ஷராக்ஷஸர்களும், **விக்^{4}னம்** - இடையூறு, **நவகுர்வந்தி** - செய்யவே மாட்டார்கள், **தம்** - அவனை, **பாபானி** - பாபங்கள், **ந ஸ்ப்ரஶந்தி** - ஸ்பரிசிக்கின்றனவல்ல, ஶிவ ஸாயுஜ்யம் - ஶிவஸாயுஜ்யத்தை, (அவன்) **ருச்சதி** - அடைகின்றான்.

பொழிப்புரை: - எந்த மனிதன் பில்வவனத்திலேயே ஆச்ரமத்தை அமைத்துக் கொண்டு எப்போதும் வஸிப்பானோ அவனுக்கு ஸகல மந்த்ரங்களும் கேவலம் ஜபத்தினாலேயே ஸித்தி ஆகின்றன. மலையின் சிகரத்திலாவது, நதிக்கரை யிலாவது, பில்வ விருஷத்தினடியிலாவது, ஶிவாலயத்திலாவது, அக்னிஹோத்ர சாலையிலாவது, விஷ்ணுவினது ஸந்நிதியிலாவது எவன் ஜபம் செய்வானோ அம்மனிதனுக்கு அசுரர்களும் யக்ஷராக்ஷஸர்களும் இடையூறை செய்யவே மாட்டார்கள். அவனை பாபங்கள் ஸ்பரிசிக்கின்றன வல்ல அவன் சிவஸாயுஜ்யத்தை அடைகிறான்.

ஶ்லோகம்.

ஸ்த²ண்டி³லே வா ஜலே வஹ்னௌ வாயா வாகாஶ ஏவ வா
கி³ரௌ ஸ்வாத்மனி வா யோ மாம் பூஜயேத் ப்ரயதோ நர: (35)

ஸ க்ருத்ஸ்னம் ப²ல மாப்னோதி லவ மாத்ரேண ராக⁴வ!
ஆத்ம பூஜா ஸமா நாஸ்தி பூஜா ரகு⁴ குலோத்³ப⁴வ! (36)

வியாக்யானம்: - ஸ்த²ண்டி³லே வா - பூமியிலாவது, **ஜலே** - ஜலத்திலாவது, **வஹ்னௌவா** - அக்னியிலாவது, **வாயௌ** - வாயுவிலாவது, **ஆகாசேவா** - ஆகாசத்திலாவது, **கி³ரௌ** - மலையிலாவது, **ஸ்வாத்மனிவ** - தனது இருதய கமலத்திலாவது, **ய:** - எந்த, **நர:** - மனிதன், **ப்ரயத:** - நியமததை யுடையவனாய்க்கொண்டு, **மாம்** - என்னை, **பூஜயேத்** - பூஜிப்பானோ, **ராகவா** - ஓ ராகவனே, **ஸ:** - அவன், **லவ மாத்ரேண** - ஸ்வல்ப பூஜையினாலும், **க்ருத்ஸ்னம் பலம்** - ஸகல பலத்தையும், **ஆப்னோதி -** அடைகின்றான், **ரகுகுலோத்வஹா** - ஓ ரகுகுலச்ரேஷ்டா, **ஆத்ம பூஜா ஸமா** - தன்னிருதய கமலத்தில் இறைவனைக் குறித்துச்செய்யும் பூஜைக்கு, **ஸமா** - நிகராகிய, **பூஜா** - பூஜையானது, **நாஸ்தி** - இல்லை.

பொழிப்புரை: - பூமியிலாவது, ஜலத்திலாவது, அக்னியிலாவது, வாயுவிலா வது, ஆகாசத்திலாவது, மலையிலாவது, தனது இருதய கமலத்திலாவது எந்த மனிதன் நியமத்தை யுடையவனாய்க் கொண்டு என்னைப் பூஜிப்பானோ ஓ ராகவா அவன் ஸ்வல்ப பூஜையினாலும் ஸகல பலத்தையும் அடைகின்றான். ஓ ரகுகுல ஶ்ரேஷ்டா தன்னிருதய கமலத்தில் இறைவனைக் குறித்துச்செய்யும் பூஜைக்கு நிகராகிய பூஜையில்லை.

ஶ்லோகம்.

மத்ஸாயுஜ்ய மவாப்னோதி சண்டா³ளோঽப்யாத்ம பூஜயா
ஸர்வ காமாபவாப்னோதி மனுஷ்ய: கம்ப³ளாஸனே (37)

வியாக்யானம்: - **சண்டாள: அபி** - புலையனாயினும், **ஆத்ம பூஜயா** - இருதய கமலத்தில் என்னைப் பூஜித்தலால், **மத்ஸாயுஜ்யம்** - எனது ஸாயுஜ்யத்தை, **அவாப்னோதி** - அடைகின்றான், **கம்ப³ளாஸனே** - கம்பளாஸனத்தி லிருந்து கொண்டு மந்திரத்தை செபிக்கும், **மனுஷ்ய:** - மனிதன், **ஸர்வான்** - ஸகல, **காமான்** - கோரிக்கைகளையும், **அவாப்னோதி** - நிறைவேறப் பெறுகின்றான்.

பொழிப்புரை: - புலையனாயினும் இருதய கமலத்தில் என்னை பூஜித்தலால் என் ஸாயுஜ்யத்தை அடைகின்றான். கம்பளாஸனத்தில் உட்கார்ந்து கொண்டு ஜெபிப்பவன் விரும்பிப ஸகலமும் கிடைக்கப் பெறுகின்றான்.

ஶ்லோகம்.

க்ருஷ்ணாஜினே ப⁴வேன் முக்தி: மோக்ஷஸ்ரீ: வ்யாக்⁴ர சர்மணி
குஶாஸனே ப⁴வேஜ் ஞானம் ஆரோக்³யம் பத்ர நிர்மிதே (38)

பாஷாணே து³:க² மாப்னோதி காஷ்டே² நானாவிதா⁴ன் க³தா³ன்
வஸ்த்ரே ஸ்ரீய மவாப்னோதி பூ⁴மௌ மந்த்ரோ ந ஸித்⁴யதி (39)

வியாக்யானம்: - **க்ருஷ்ணாஜினே** - மான்தோலில் ஜபித்தால், **முக்தி:** - முக்தி, **பவேத்** - நிகழும், **வ்யாக்ரசர்மணீ** - புலித்தோலில், **மோக்ஷஸ்ரீ:** - மோக்ஷச் செல்வமாம், **குஶாஸனே** - தர்ப்பையால் செய்யப்பட்ட ஆஸனத்தில், **ஞானம்** - ஞானமானது, **பவேத்** - நிகழும், **பத்ர நிர்மிதே** - இலையால் நிர்மிக்கப்பட்ட ஆஸனத்தில், **ஆரோக்³யம்** - வாதபித்த கபங்கள் வைஷம்யமுறாதிருத்தலாம், **பாஷாணே** - கருங்கல்லில், **துக்கமாப்னோதி** - க்லேசம் நிகழும், **காஷ்டே** - கட்டையினில் செபிப்பவன், **நானாவிதா⁴ன்** - பலவகைப்பட்ட, **கதான்** - வியாதிகளை அடைவான், **வஸ்த்ரே** - வஸ்திரத்தில் செபிப்பவன், **ஸ்ரீயம்** - செல்வத்தை அல்லது காந்தியை, **அவாப்னோதி -** அடைகிறான், **பூமௌ** - பூமியில் ஜெயித்தால், **மந்த்ர:** - மந்திரமானது, **ந ஸித்⁴யதி** - வித்திக்கின்றதில்லை.

பொழிப்புரை: - மான்தோலில் ஜபித்தால் முக்தி நிகழும், புலித்தோலிலிருந்து ஜெபித்தால் மோக்ஷச் செல்வமாம் தர்ப்பையால் செய்யப்பட்ட ஆஸனத்தில் ஞானம் நிகழும் இலையால் செய்த ஆஸனத்திலிருந்து ஜெபித்தால் ஆரோக்கியமாம் கருங் கல்லில் க்லேசம் நிகழும் கட்டையினிலிருந்து ஜெபிப்பவன் பலவகைப்பட்ட வியாதிகளை அடைவான் வஸ்திரத்தில் ஜெபிப்பவன் செல்வத்தை அல்லது காந்தியை அடைகின்றான். பூமியிலிருந்து ஜெபித்தால் மந்திரமானது சித்திக்கின்ற தில்லை.

ஶ்லோகம்.

உத3ங்முக2: ப்ராங்முகோ2 வா ஜபம் பூஜாம் ஸமாசரேத்
அக்ஷமாலா வித4ம் வக்ஷ்யே ஶ்ருணுஷ்வாsவஹிதோ ந்ருப! (40)

வியாக்யானம்: - **உத3ன்முக2:** - வடக்கு முகமாகவாவது, **ப்ராங்முக:வா** - கிழக்கு முகமாகவாவ (திருந்து) **ஜபம்** - ஜபத்தையும், **பூஜாம்** - பூஜையையும், **ஸமாசரேத்** - செய்யவேண்டும், **ந்ருப** - ஓ அரசனே, **அக்ஷமாலாவிதிம்** - அக்ஷமாலையைப்பற்றியவிதியை, **வக்ஷ்யே** - சொல்லுகின்றேன், **அவஹித:** - சாவதானனாக, **ஶ்ருணுஷ்வா** - கேள்.

பொழிப்புரை: - வடக்குமுகமாகவாவது, கீழக்கு முகமாகவாது ஜபத்தையும், பூஜையையும் செய்யவேண்டும். ஓ அரசனே அக்ஷமாலையைப் பற்றிய விதியைச் சொல்லுகின்றேன். சாவதானனாகக் கேள்.

ஶ்லோகம்.

ஸாம்ராஜ்யம் ஸ்பா2டிகே த்3த்3யாத் புத்ரஜீவே பராம் ஸ்ரீயம்
ஆத்மஞானம் குஶ க்3ரந்தெ2ள ருத்3ராக்ஷ: ஸர்வ காமத3: (41)

ப்ரவாலைஶ்ச க்ருதா மாலா ஸர்வலோக வர ப்ரதா3
மோக்ஷ ப்ரதா3 ச மாலா ஸ்யா தா3மலக்யா: ப2லை: க்ருதா (42)

முக்தா ப2லை: க்ருதா மாலா ஸர்வ வித்3யா ப்ரதா3யினீ
மாணிக்ய ரசிதா மாலா த்ரைலோக்ய ஸ்ரீ வஶங்கரீ (43)

நீலைர் மரகதைர் வாsபி க்ருதா ஶத்ரு வஶ ப்ரதா3
ஸுவர்ண ரசிதா மாலா த்3த்3யாத்3வை மஹதீம் ஸ்ரீயம் (44)

ததா2 ரூப்ய மயீ மாலா கன்யாம் யச்சதி வாஞ்சி2தாம்
உக்தானாம் ஸர்வகாமானாம் தா3யீனீ பாரதை3: க்ருதா (45)

வியாக்யானம்: - **ஸ்படிக:** - ஸ்படிக மணியானது ஸம்ராஜ்யத்தை, **த்3த்3யாத்** - தரும், **புத்ரஜீவ:** - தாம்பிரமணி, **பாரம் ஸ்ரீயம்** - மிக்கச்செல்வத்தை அளிக்கும், **குஶ க்ரந்தி:** - குரம் குரம் எனும் ஓர் வகை நாணல் முடியானது, **ஆத்மஞானம்** - ஆத்ம ஞானத்தைத் (தரும்), **ருத்3ராக்ஷ:** - ருத்திராக்ஷங்கள், **ஸர்வ காமதா:** - சகல காமனைகளையுந் தரும், **ப்ரவாலை:** - பவளங்களால், **க்ருதா** - செய்யப்பட்ட, **மாலா** - மாலையானது, **ஸர்வலோக வரப்ரதா** - ஸர்வ லோகத்தையும் வஶ்யமாகச்

செய்யும், **ஆமலக்யா:** - நெலலியின், **பலை:** - கனியால், **க்ருதா** - செய்யப்பட்ட, **மாலா** - மாலையானது, **மோக்ஷப்ரதா, ஸ்யாத்** - மோக்ஷந்தருவதாகும், **முக்தாப நிலை:** - நல்ல முத்துகளால், **க்ருதா** - செய்யப்பட்ட, **மாலா** - மாலையானது, **ஸர்வ வித்யா ப்ரதாயினி** - ஸகல வித்தையையும் தருவதாம், **மாணிக்ய ரஜிதா** - மாணிக்கத்தினால் செய்யப்பட்ட, **மாலா** - மாலையானது, **த்ரைலோகஸ்ய** - திரிலோகத்தையும், **வரங்கரீ** - வரப்படுத்தும், **நீலை:** - நீலங்களினாலாவது, **மரகதை: வா அபி** - மரகதங்களினாலாவது, **க்ருதா** - செய்யப்பட்ட மாலை, **ஶத்ருபய ப்ரதா** - பகைவருக்குப்பயன் தருவதாம், **ஸுவர்ணரஜிதா** - பொன்னால் செய்யப்பட்ட, **மாலா** - மாலையானது, **மஹதீம் ஸ்ரீயம்** - பெருஞ்செல்வத்தை, **தத்யாத்** - தரும், **ரௌப்யமயீ** - வெள்ளி யினாலாகிய, **மாலா** - மாலையானது, **காமிதாம்** - விரும்பப்பட்ட, **கன்யாம்** - கன்னிகையை, **யச்சதி** - கல்யாணஞ் செய்விக்கும், **பாரதை: க்ருதா** - பாதரஸங்களால் செய்யப்பட்ட மாலை, **முக்தானாம்** - (இதுவரையிலுஞ்) சொல்லப்பட்ட, **ஸர்வகாமானாம்** - ஸகல காம னைகளையும், **தாயினி** - நிறைவேற்றுவிப்பதாம்.

பொழிப்புரை: - ஸ்படிக மணியானது ஸாம்ராஜ்யத்தைத் தரும், தாம்பிரமணி மிக்க செல்வத்தை அளிக்கும். குரம் எனும் ஓர் வகை நாணல் முடியானது ஆத்ம ஞானத்தை தந்து ருத்ராக்ஷமாலை ஸகல காமனைகளையும் தருவதாம். பவளமாலை ஸர்வ லோகத்தையும் வசப்படுத்துவதாம். நெல்லிக்கனிமாலை மோக்ஷம் அளிப்பதாம். முத்துமாலை ஸர்வ வித்தைகளையும் தருவதாம். மாணிக் கமாலை மூவுலகையும் வசப்படுத்துவதாம். நீலமாலையும் மரகத மாலையும் பகைவருக்குப் பயத்தை விளைவிப்பன. ஸுவர்ண மணிமாலைப் பெருஞ் செல்வத்தைத் தரும் வெள்ளிமணிமாலை விரும்பிய கன்னிகையைக் கிடைக்கச் செய்வதாம். பாதரஸங்களாகிய மாலை இதுவரையிலுங்கூறிய ஸகல காமனை களையும் நிறைவேறச்செய்யும்.

ஶ்லோகம்.

அஷ்டோத்தர ஶதம் மாலா தத்ர ஸ்யா து³த்தமோத்தமா
ஶத ஸங்க்²யோத்தமா மாலா பஞ்சாஶன் மத்⁴யமா மதா (46)

சது: பஞ்சாஶதா யத்³வா அத⁴மா ஸப்த விம்ஶதி:
அத⁴மா பஞ்சவிம்ஶத்யா யதி³ ஸ்யான் மணி நிர்மிதா (47)

பஞ்சா ஶத³க்ஷராண்யத்ரா஽னுலோம ப்ரதிலோமத:
இத்யேவம் ஸ்தா²பயேத் ஸ்பஷ்டாம் ந கஸ்மைசித் ப்ரத³ர்ஶயேத் (48)

வியாக்யானம்: - **தத்ர** - அங்கு, **அஷ்டோத்தரசதம்** - நூற்றெட்டு மணிகள் அடங்கிய, **மாலா** - மாலையானது, **உத்தமோத் தமஸ்பாத்** - மிகவும் உத்தமமாம்,

சதசங்கியா - நூறு மணிகளடங்கிய, **மாலா** - மாலையும், **உத்தமா** - உத்தமமாம், **பஞ்சாஶத்** - ஐம்பது மணிகளடங்கிய, **மாலா** - மாலையானது. **மத்யம் மதா** - மத்யமமாம், **யத்வா** - அல்லது, **சது: பஞ்சாஶது** - ஐம்பத்து நாலு மணிகளால் செய்யப்பட்டதிய (மத்தியமமாம்), **ஸப்தவிம் ஸதி**: - இருபத்தேழுமணிகளாலாகிய மாலையானது, **அதமா** - அதமமாம், **பஞ்சவிம்சத்யா** - இருபத்தைந்தினால் ஆகியதும், **அதமா** - அதமாம், **யதிஶதநிர்மிதா ஸ்வாத்** - நூறு மணிகளால் நிர்மிக்கப்பட்ட மாலையாயிருப்பின், **அத்ர** - அம்மணிகளில், **பஞ்சாஶத் அக்ஷராணி** - ஐம்பது அக்ஷரங்களும், **அனுலோம ப்ரதிலோமத**: - ஏற்ற முறையாலும் இறக்க முறையாலும் அடங்கியவை, **இதிஏவம்** - என்று இங்ஙனம், **ஸ்தாபயேத்** - ஸ்தாபித்துக்கொள்ள வேண்டும், **கஸ்மைசித்** - ஒருவனுக்கும், **ஸ்பஷ்டம்** - விளக்கமாய், **நப்ரதர்லயேத்** - காண்பிக்கக் கூடாது.

பொழிப்புரை: - அங்கு நூற்றெட்டு மணிகளடங்கிய மாலையானது மிகவும் உத்தமமாம், நூறு மணிகளடங்கிய மாலையும் உத்தமமாம், ஐம்பது மணிகள் அடங்கிய மாலையானது மத்தியமமாம், அல்லது ஐம்பத்து நாலு மணிகளாலாகி யதும் மத்யமமாம், இருபத்தேழு மணிகளாலாகிய மாலையானது அதமாம், இருபத் தைந்து நாலாகியதும் அதமாம், நூறு மணிகளால் நிர்மிக்கப்பட்ட மாலையாயிருப் பின் அம்மணிகளில் ஐம்பது அக்ஷரங்கள் ஏற்ற முறையாலும் இறக்க முறையாலும் அடங்கியவை என்று ஸ்தாபித்துக்கொள்ள வேண்டும், ஒருவனுக்கும் விளக்கமாய்க் காண்பிக்கமுடியாது.

ஶ்லோகம்.

வர்ணைர் வின்யஸ்தயா யஸ்து க்ரியதே மாலயா ஜப:
ஏக வாரேண தஸ்யைவ புரஸ்சர்யா க்ருதா ப⁴வேத் (49)

வியாக்யானம்: - **வர்ணை:** - அக்ஷரங்களினால், **வின்யஸ்யா** - வின்யாஸஞ் செய்யப்பட்ட (அஷரோச்சாரணத்தோடு கூட), **மாலய** - மாலையால், **ய: து** - யாதொரு, **ஜப:** - ஜபமானது, **க்ரியதே** - செய்யப்படுகிறதோ, **தஸ்யைவ** - அந்த ஜபத்திற்கே, **ஏக வாரேண** - ஒருதடவை ஜபமாத்திரத்தால், **புரஸ்சர்யா** - புரச்சரண மானது, **க்ருதா ப⁴வேத்** - செய்யப்பட்டதாகும்.

பொழிப்புரை: - அக்ஷரங்களோடு வின்யஸிக்கப்பட்ட மாலையால் செய்யப் படும் ஜபமானது ஓர் முறைமாத்திரத்தினாலும் புரச்சரணஞ் செய்யப்பட்டதாகும்.

ஶ்லோகம்.

ஸவ்ய பார்ஷ்ணிம் கு³தே³ ஸ்தா²ப்ய த³க்ஷிணஞ்ச ஶிவோபரி
யோனிமுத்³ரா ப³ந்த⁴ ஏவம் ப⁴வே தா³ஸன முத்தமம் (50)

யோனிமுத்3ராஸனே ஸ்தி2த்வா ப்ரஜபேத்3யஸ் ஸமாஹித:
யம் கஞ்சித3பி வா மந்த்ரம் தஸ்ய ஸ்யஸ் ஸர்வ ஸித்3த4ய: (51)

சி2ன்னா ருத்3தா4 ஸ்தம்பி4தாஶ்ச மிலிதா மூர்ச்சி2தாஸ் ததா2
ஸுப்தா மத்தா ஹீன வீர்யா த3க்தா4: ஸ்ரஸ்தாரி பக்ஷகா3: (52)

பா3ல யௌவன மத்தாஶ்ச வ்ருத்3தா4 மந்த்ராஶ்ச யே மதா:
யோனிமுத்3ராஸனே ஸ்தி2த்வா மந்தரானேவம் விதா4ன் ஜபேத் (53)

தஸ்ய ஸித்3த்4யந்தி தே மந்த்ரா: நான்யஸ்ய து கத2ஞ்சன (54)

வியாக்யானம்: - **ஸவ்யபாணிம்** - இடதுகையை, **குதே** - ஆஸனத்திலும், **தக்ஷிணம் ச** - வலதுகையை, **த்வஜோபரி** - லிங்கத்திற்கு மேலும், **ஸ்தாப்ய** - வைத்து, **ஏவம்** - இப்படிப்பட்ட, **ஆஸனம்** - ஆஸனமானது, **யோனிமுத்ராபந்த:** - யோநிமுத்ராபந்தனம், எனும் **உத்தமம்** - உத்தமமான (ஆஸனம்), **பவேத்** - ஆகும், **ய:** - எவன், **யோனிமுத்ராஸனே** - யோனிமுத்ராஸனத்தில், **ஸ்தித்வா** - இருந்து, **ஸமாஹித்** - ஏகாக்ரப்பட்ட சித்தமுடையவனாய்க் கொண்டு, **யம்கம்சித்** - யாதேனும் ஓர், **மந்த்ரம்** - மந்திரத்தை, **ப்ரஜபேத்** - ஜபிப்பானோ, **தஸ்ய** - அவனுக்கு, **ஸர்வசித்தய:** - ஸகலஸித்திகளும், **ஸ்யு:** - ஏற்படும், **யெ** - எந்த, **மந்த்ரா:** - மந்திரங்கள், **சின்னர:** - சின்னங்களாக (கண்டிதங்களாக) வாவது, **ருத்தா** - ருத்தங்களாகவாவது (தகையப்பட்டவைகளாகவாவது), **ஸ்தமபிதா:** - ஸ்தம்பிதங் களாகவாவது (நிறுத்தப்பட்டவைகளாகவாவது), **மிலிதா:** - மிலிதம் (சேர்ந்துள்ளவை) களாகவாவது, **மூர்ச்சிதா:** - மூர்சசித்த (மோஹத்தையடைந்த) வைகளாகவாவது, **ஸுப்த:** - ஸுப்தங்க (ஸ்ஷுபதியடைந்தவை) களாகவாவது, **மத்தா:** - மத்தங்களாகவாவது (மதித்தவைகளாகவாவது) **ஹீநவீர்யா:** - ஹீநவீரயங்க (வீரயமற்றவை)களாகவாவது, தக்தத்ரஸ்தாரிபக்ஷகா: - தவிக்கப்பட்டவைகளாக வாவது (பயந்தவைகளாகவாவது சத்துருபக்ஷத்தைச் சேர்ந்தவைகளாகவாவது), **பாலா:** - பாலங்களாகவாவது, **யௌவநமத்தா:** - யௌவநத்தால் மதித்தவைகளாக வாவது, **வ்ருத்தா:** - கீழத்தன்மையுடையவைக ளாகவாவது, **மதார்:** கொள்ளப்பட் டவைகளா யிருக்கின்றனவோ, **ஏவம்விதான்** - இம்மாதிரியான, **மந்த்ரான்** - மந்திரங்களை, **யோனிமுத்ராஸனே** - யோனிமுத்ராலாத்தில், **ஸ்தித்வா** - இருந்து, **ஜபேத்** - ஜபிப்பானோ, **தஸ்ய** - அவனுக்கு, **தேமந்த்ரா** - அம்மந்திரங்கள் வித்திக் கின்றன. **அன்யஸ்யது** - மற்றவனுக்கோ எனின், **கதம்சன** - எவ்வாற்றமல்ல

பொழிப்புரை: - இடதுகையை ஆஸனத்திலும் வலது கையை லிங்கத்தின் மேலும் வைத்திருத்தலாகிய இப்படிப்பட்ட ஆஸனமானது யோனிகிமுத்ரா பந்தனமெனும் உத்தமமான ஆஸனமாம் எவன் யோனிமுத்ராலனத்திலிருந்து கொண்டு ஏகாக்கிரசித்தமுடையோனாய் யாதேனும் ஒருமந்திரத்தை ஜபிப்பானாயின் அவனுக்கு ஸகலவித்திகளும் கைகூடும். எந்த மந்திரங்கள் சின்னங்களாகவாவது, ருத்தங்களாகவாவது, ஸ்தம்பிதங்களாகவாவது, மிஸிதங்க

ளாகவாவது,, மூர்ச்சிதங்களாகவாவது, ஸுப்தங்களாகவாவது, மத்தங்களாகவாவது, ஹீநவீர்யங்களாகவாவது, தஹிக்கப்பட்டவகைளாகவாவது, த்ரஸ்தங்களாகவாவது, சத்துருபக்ஷங்க பால்யத்தன்மையையுடையவைகளாகவாவது, வ்ருத்தங்களாக வாவது உள்ளனவோ இத்தகைய மந்திரங்களை யோனிமுத்ராஸ நத்திலிருந்து எவன் ஜபிக்கின்றானோ அவனுக்கே அம்மந்திர ஸித்தியன்றி மற்றவர்களுக்கு எவ்வாற்றாலுமல்ல.

ஶ்லோகம்.

ப்^{3}ராஹ்மம் முஹூர்த்த மார்ப்^{4}யாssமத்^{4}யாஹ்னம் ப்ரஜபேன் மனும்
அத ஊர்த்^{4}வம் க்ருதே ஜப்யே விநாஶோ ப^{4}வதி த்^{4}ருவம் (55)

புரஶ்சர்யா விதா^{4}வேவம் ஸர்வகாம ப^{2}லேஷ்வபி
நித்யே நைமித்திகே வாபி தபஶ்சர்யாஸு வா புன: (56)

ஸர்வதை^{3}வ ஜப: கார்யோ ந தோ^{3}ஷஸ் தத்ர கஶ்சன (57)

வியாக்யானம்: - **ப்ராஹ்மம் முஹூர்த்தம்** - ப்ரஹ்ம முகூர்த்தம் (விடிய ஐந்து நாழிகைக்கு முன்னராகிய காலம்), **ஆரப்ய** - முதற்கொண்டு, **ஆமத்யாஹ்னம்** - மத்தியாந்தம் வரையிலும், **மனும்** - மந்திரத்தை, **ப்ரஜபேத்** - ஜபித்தல்வேண்டும், **அத: ஊர்த்^{4}வம்** - அதற்குமேல், **ஜாப்யே** - ஜபம், **க்ருதே** - செய்யப்படின், **விநாஶ:** - நாசம், **பவதி** - ஏற்படும், **த்ருவம்** - நிச்சயம், **ஏவம்** - இவ்வாறே, **புரஶ்சர்யா விதௌ** - புரம்சாணம் செய்தலிலும், **ஸர்வ காம்யபலேஷஅபி** - ஸகலகாம்ய ஸபலத்தைக் குறித்த ஜபங்களிலும் என்றறிக, **நித்யே** - நித்திய விதியிலும், **நைமித்திகேவா அபி** - நைமித்திக விதியிலும், **தபஶ்சர்யாஸுவா** - தபஸ் செய்தல்களிலும், **ஜப:** - ஜபமானது, **ஸர்வதா ஏவ** - எப்போதுமே, **கார்ய:** - செய்யத்தக்கது, **தத்ர** - அதனில், **தோஷ:** - தோஷம் (குற்றம்), **கஶ்சன** - யாதுமில்லை.

பொழிப்புரை: - ப்ரஹ்ம முகூர்த்தம் முதற்கொண்டு மத்யான காலம் வரையிலுள்ள காலத்தில் மந்திரத்தை ஜபிக்கலாம். அதற்கு மேற்பட்ட காலத்தில் ஜபித்தால் கேடே ஏற்படும் நிச்சயம் இவ்விதமே புரஸ்சரணக்கிரியையிலும் ஸகல காம்ய விதியிலும் என்க. நித்திய விதியிலோ நைமித்திகவிதியிலோ தபஸ்செய்த லிலோ எப்போதுமே ஜபம் செய்யலாம். அதனில் குற்றம் யாதுமில்லை.

ஶ்லோகம்.

யஸ்து ருத்^{3}ரம் ஜபேன் நித்யம் த்^{4}யாயமானோ மமாக்ருதிம்
ஷட^{3}க்ஷரம் வா ப்ரணவம் நிஷ்காமோ விஜிதேந்த்^{3}ரிய: (58)

அதா²த²ர்வஶிரோ மந்த்ரம் கைவல்யம் வா ரகூ⁴த்தம!
ஸ தேனைவ ஹி தே³ஹேன ஶிவஸ் ஸஞ்ஜாயதே ஸ்வயம் (59)

வியாக்யானம்: - **ய:து** - எவன், **நிஷ்காம:** - விருப்பமில்லாதவனும், **நிர்ஜிதேந்த்ரிய:** - இந்திரியங்களை நன்கு வென்றவனும், **மம** - எனது, **ஆக்ருதிம்** - வடிவத்தை, **த்யாயமான:** - தியானம் செய்கின்றவனுமா யிருந்து கொண்டு, நித்யம் - தினந்தோறும், **ருத்ரம்** - ருத்திராத்தியாயத்தை யாவது, **ஷடாக்ஷரம்** - ஷடாக்ஷ ரத்தையாவது, **ப்ரணவம்** - பிரணவத்தையாவது, **அதர்வ சிரோ மந்த்ரம்** - அதருவ சிர உபநிஷத்தையாவது, **கைவல்யம்வா** - கைவல்ய உபநிஷத்தையாவது, **ஜபேத்** - ஜபிப்பானோ, **ரகூத்தம** - ஒ ரகு குல ஸ்ரேஷ்டனே, **ஸ:** - அவன், **தேனதேஹேன ஏவ -** அத்தேஹத்தோடு கூடவே, **ஸ்வயம்** - தானே, **சிவ: ஸஞ்ஜாயதே** - சிவனா கின்றான்.

பொழிப்புரை: - எவன் காமமற்றவனும் இந்திரியங்களை வென்றவனும் என்வடிவத்தை த்யானம் செய்கின்றவனுமா யிருந்துகொண்டு தினந்தோறும் ருத்திரத்தையாவது ஷடாக்ஷரத்தையாவது பிரணவத்தையாவது. அதர்வ சிரோமந்தி ரத்தையாவது கைவல்ய உபநிஷத்தையாவது ஜபிப்பானோ ஓ ரகு குலஸ்ரேஷ்டனே அவன் அத்தேஹத்தோடு கூடவே தானே சிவனாகின்றான்.

ஶ்லோகம்

அதீதே ஶிவ கீதாம் யோ நித்ய மேதாம் ஜிதேந்த்³ரிய:
ஶ்ருணுயாத்³வா ஸ முக்த: ஸ்யாத் ஸம்ஸாரான் நாத்ர ஸம்ஶய:
(60)

வியாக்யானம்: - **ய:** - எவன், **ஏதாம்** - இந்த, **சிவகீதாம்** - சிவகீதையை, **நித்யம்** - தினந்தோறும், **அதீதே** - அத்தியயனம் செய்கின்றானோ, **ய:** - எவன், **ஜபேத்** - ஜபிப்பானோ, **ஶ்ருணு யாத்வா** - சிரவணமாவது செய்வானோ, **ஸ:** - அவன், **ஸம்ஸாராத்** - ஸம்ஸாரத்தினின்றும், **முக்த: ஸ்யாத்** - முக்தனாவான், **அத்ர** - இதனில், **ஸம்ஶய: ந** - ஸம்யைமில்லை.

பொழிப்புரை: - இச்சிவகீதையை தினந்தோறும் அர்த்த விசாரம் செய்கின்றா னோ அல்லது ஜபிக்கின்றானோ அல்லது சிரவணமாவது செய்கின்றானோ அவன் ஸம்ஸாரத்தினின்றும் விடுபடுகின்றான். இதனில் ஸம்பயமில்லை.

ஸுத உவாச - ஸூதர் கூறுகின்றார்.

ஶ்லோகம்.

ஏவமுக்த்வா மஹாதே³வ: தத்ரைவாऽந்த ரதீ⁴யத
ராம: க்ருதார்த்த²மாத்மான மமன்யத ததை²வ ஸ: (61)

வியாக்யானம்: - **ஏவம்** - இவ்வாறு, **உக்த்வா** - சொல்லி, **மஹாதேவ:** - மஹாதேவன், **தத்ர ஏவ** - அவ்விடத்திலேயே, **அந்தாதீயத** - அந்தர்த்தானமாகினர், **ஸ: ராம:** - அந்தராமன், **ஆத்மானம்** - தன்னை, **க்ருதார்த்தம்** - க்ருதார்த்தனென்று **அமன்யத** - எண்ணினார்.

பொழிப்புரை: - இவ்வாறு சொல்லி மஹாதேவன் அவ்விடத்திலேயே அந்தர்த்தானமாயினர். ராமனும் தன்னை க்ருதார்த்த னென்றெண்ணினார்.

ஸ்லோகம்.

ஏவம் மயா ஸமாஸேன ஶிவகீ^{3}தா ஸமீரதா
ஏதாம் ய: ப்ரஜபேன் நித்யம் ஶ்ருணுயாத்^{3} வா ஸமாஹித: (62)

ஏகாக்^{3}ர சித்தோ யோ மர்த்ய: தஸ்ய முக்தி: கரே ஸ்தி^{2}தா
அத: ஶ்ருணுத்^{4}வம் முனயோ நித்ய மேதாம் ஸமாஹிதா: (63)

அனாயாஸேன வோ முக்திர் ப^{4}விதா நாஸ்தி ஸம்ஶய:
காயக்லேஶோ மன:க்ஷோபோ^{4} த^{4}னஹானிர் ந சாத்மன: (64)

பீடா^{3}ஸ்தி ஶ்ரவணாதே^{3}வ யஸ்மாத் கைவல்ய மாப்னுயாத்
ஶிவ கீ^{3}தாமதோ நித்யம் ச்ருணுத்^{4}வம் ருஷிஸத்தமா: (65)

வியாக்யானம்: - **ஏவம்** - இவ்வாறு, **ஶிவகீ^{3}தா** - சிவகீதையானது, **மயா** - என்னால், **ஸமாஸேன** - முழுதும், **ஸமீரிதா** - சொல்லப்பட்டது, **ஏதாம்** - இதனை, **ய:** - எவன், **ஸமாஹித:** - ஏகாக்ரசித்தமுடையோனாயிருந்து, **நித்ய** - தினந்தோறும், **பிரஜபேத்** - ஜபிப்பானே, **ஏதாச்சகித்த:** - ஏகாக்ரசித்தமுடையோனாகிய, **ய:** - எந்த, **மர்த்ய:** - மனிதன், **ஶ்ருணுயாத்^{3} வா** - சிரவணமாவது, செய்வானோ, **தஸ்ய** - அவனுக்கு, **முக்தி:** - முக்தியானது, **கரே ஸ்தி^{2}தா** - கையிலுள்ளது, **முனய:** - ஓ முனிவர்களே, **அத:** - ஆதலால், **ஏதாம்** - இதனை, **ஸமாஹிதா:** - ஒருவழிப்பட்ட மனமுடையோர்களாய்க் கொண்டு, **நித்யம்** - தினந்தோறும், **ஶ்ருணுத்^{4}வம் -** சிரவணஞ்செய்யுங்கள். **அனாயாஸேன ஏவ** - ஆயாஸமுனியே, **முக்தி:** - முக்தியானது, **ப^{4}விதா** - நிகழும், **அத்ர -** இதனில், **ந ஸம்ஶய** - சம்சயமில்லை, **காயக்லேச:** - காயக்லேசமாவது, **மனக்ஷோப:** - சித்தத்திற்குச் சிரமமாவது, **தனஹாநீ: -** பணச்சிலவாவது, **ந** - இல்லை, **ஆத்மன:** - தனக்கு, **பீடா** - தொந்தரவு, **ந** - இல்லை, **யஸ்மாத்** - யாதொரு காரணத்தால், **ஶ்ரவணாதே^{3}வ** - சிரவணத்தினாலேயே, கைவல்யம் முக்தியை, **ஆப்னுயாத்** - அடைவானோ, ரிஷிஸத்தமாம் - ரிஷிவரர்களே, **அத:** - ஆதலால், **சிவகீதாம்** - சிவகீதையை, **நித்யம்** - தினந்தோறும், **ச்ருணுத்வம்** - சிரவணஞ் செய்யுங்கள்.

பொழிப்புரை: - இங்ஙனம், சிவகீதை முழுதும் என்னால் சொல்லப்பட்டது. இதனை எவன் ஒரு மனமுடையோனாய் தினந்தோறும் ஜபிப்பானோ? அல்லது சிரவணஞ் செய்வானோ? அவனுக்கு முக்திகையிலுள்ளது. முனிவர்களே! ஆதலால் இதனைத் தினந்தோறுஞ் சிரவணஞ் செய்யுங்கள். இதனால் எளிதில் முக்தி கிடைக்கும் இதனில் ஸம்சயமில்லை. காயக்கிலேசமாவது மனக்கிலேசமாவது தனஹா நியாவதில்லை. தனக்கு எந்தத் தொந்தரவுமில்லை. யாதொரு காரணத்தால், சிரவணத்தினாலேயே கைவல்ய மடையலாமோ ஓ சிவவரர்களே ஆதலால் இச்சிவ கீதையைத் தினந்தோறும் சிரவணஞ் செய்யுங்கள்.

ரிஷய: உவாச - ரிஷிகள் சொல்லுகின்றார்கள்.

ஶ்லோகம்.

அத்^{3}ய ப்ரப்^{4}ருதி ந: ஸூத! த்வ மாசார்ய: பிதா கு^{3}ரு:
அவித்^{3}யாயா: பரம் பாரம் யஸ்மாத் தாரயிதாஸி ந: (66)

உத்பாத^{3}க ப்^{3}ரஹ்ம தா^{3}த்ரோ: க^{3}ரீயான் ப்^{3}ரஹ்மத^3: பிதா
தஸ்மாத் ஸூதாத்மஜ! த்வத்த: ஸத்யம் நான்யோऽஸ்தி நோ கு^{3}ரு: (67)

வியாக்யானம்: - **ஸூதா** - ஓ ஸூதமுனிவரே, **அத்யப்ரப்ருதி -** இது முதல், **த்வம்** - நீர, **ந:** - எங்களுக்கு, **ஆசார்ய:** - ஆசாரியர், **பிதா** - தந்தை, **குரு:** - குரு, **யஸ்மாத்** - யாதொருகாரணத்தால், **ந:** - எங்களை, **அவித்யாயா:** - அவித்யையின், **பரம்பாரம்** - முடிவாகிய கரையை, **தாரயஸி** - தாண்டச்செய்கின்றீரோ, **உத்பாதக ப்ரஹ்மதாத்ரோ** - பிறப்பித்தவர், பிரஹ்மஞானம் அருளினவர், இவ்விருவர்களுள், **பிரஹ்மஹத:** - பிரஹ்மஞானமருளிய, **பிதா** - பிதாவே, **கரீயான்** - சிறந்தவர், **தஸ்மாத்** - ஆதலால், **ஸூதாத்மஜ** - ஓ ஸூதபுத்திரரே, **ந:** - எங்களுக்கு, **த்வத்த:** - உம்மிலும், **அன்ய:** - இதரராகிய, **குரு:** - குரு, **நாஸ்தி** - இல்லை, **ஸத்யம்** - உண்மை.

பொழிப்புரை: - ஓ ஸூதமுனிவரே! இன்று முதல் நீரே எங்களுக்கு ஆசாரியர், பிதா, குரு யாதொரு காரணத்தால் எங்களை அவித்யையின் முடிவாகிய கரையைத் தாண்டச் செய்தவரோ, பிறப்பித்தவர் பிரஹ்மஞான மருளியவரெனும் இவ்விருவர் களில் பிரஹ்மஞானமருளியவரே சிறந்த பிதா ஓ ஸூதபுத்திரரே, ஆதலால் உம்மிலும் அன்னியராகிய குரு ஒருவருமில்லை இது ஸத்யம்.

வியாசு: உவாச- வியாசர் கூறுகின்றார்.

ஶ்லோகம்.

இத்யுக்த்வா ப்ரயயு: ஸர்வே ஸாயம் ஸந்த்[4]யா முபாஸிதும்
ஸ்துவந்த: ஸூத புத்ரம் தே ஸந்துஷ்டா: கோ[3]மதீ தடம் (68)

வியாக்யானம்: - **இதி** - இவ்வாறு, **உக்த்வா** - சொல்லி, **தே ஸர்வே** - அவர்கள் எல்லோரும், **ஸூதபுத்ரம்** - சூதபுத்திரரை, **ஸ்துவந்த:** - ஸ்துதி செய்து கொண்டு, **ஸந்துஷ்டா:** - ஸந்தோஷங்கொண்டவர்களாய், **ஸாயம்ஸந்தியாம்** - ஸாயங்காலஸந்தியை, **உபாஸிதும்** - உபாஸிப்பதின் பொருட்டு, **கோமதிதடம்** - கோமதிநதிக்கரையை, (நோக்கி) **ப்ரயயு:** - அவசரமாகச் சென்றார்கள்.

பொழிப்புரை: - இவ்வாறு கூறி அந்த ரிஷிகளெல்லோரும் ஸூதேபுத்திரரை, ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு, சந்தோஷ முடையோர்களாய் ஸாயங்கால ஸந்தியா வந்தனஞ் செய்வதற்காகக் கோமதி நதிக்கரையை நோக்கி விரைவினிற் சென்றார்கள்.

பதினாறாவது அத்தியாயம் முற்றிற்று.

சிவகீதை ஸம்பூர்ணம்.